1 ‘ஶரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தினின்றும் உண்டாகிறாய்’ என்றிவை முதலியவைகளை யோசித்துப்பார்ப்பவனுக்கு ப்ராக்ருதியாகிய பாகத்தில் இருப்பதாகவே தோன்றும் என்று சொல்லப்படுகிறது ‘ததவயவவிஸ்தாரம்’ என்பதினால். இதையே விவரிக்கிறார்—அந்த ப்ரக்ருதியினாலேயே’ என்றாரம்பித்து, ப்ராக்ருதியாகிய வஸ்து முதலில் தேவன் முதலிய விசித்ரங்களான மாறுதல்களை யடைவதிலும், அதின் மூலமாக ஸந்ததி என்றும் பேரையுடைய மாறுதல்களை யடைவதிலும், போக்தாவாகிய ஜீவாத்மா ஸுக துக்கங்களை யனுபவிப்பதற்காக அந்த ப்ரக்ருதியோடு சேர்ந்திருப்பது மாத்திரம் வேண்டியதேயல்லாமல் ஶரீரம் முதலியவைகளில் இருக்கிற விகாரங்களுக்கிருப்பிடமாக இருத்தல்வேண்டியதில்லை என்று ‘அந்த ப்ரக்ருதியினாலேயே’ என்பதின் அபிப்ராயம். ‘ப்³ரஹ்மஸம்பத்³யதே’ என்கிற விடத்தில பரமாத்மாவாகுகை விருத்தமாகையினாலும், ஜீவாத்மாவாயிருக்கை எப்பொழுது மிருப்பதினாலும், 2 ‘பரமம் ஸாம்யமுபைதி’, 3 ‘மம ஸாத⁴ர்ம்யமாக³தா:’ என்றிவை முதலியவைகளோடு ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறதானாயினும், பரப்ரம்மத்தோடு ஸாம்யத்தை யடைவதே சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘எங்கும் நிறைந்ததாகவும்’ என்றாரம்பித்து. அன்றிக்கே தேஹம் ஆத்மா இவைகளின் வ்யபத்யாஸத்தை அறிந்த மாத்திரத்தினால் நேரில் பரமாத்மாவை அடைவது ஸம்பவிக்காது என்று தாத்பர்யம். ‘ப்³ரஹ்ம ஸம்பத்³யதே’ என்பதற்கு ப்ரம்மமாகிறான் என்றர்த்தம். அதில் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லியிருக்கிறது—‘ஜீவாத்மாவை அடைகிறான்’ என்று. அன்றிக்கே ‘ப்³ரஹ்ம’ என்னும் பதம் இரண்டாம் வேற்றுமையுடையது. ‘ஸம்பத்³யதே’ என்பதற்கு அடைகிறான் என்றர்த்தமாகவுமாம். 30

1 மந்த்ரப்ரஶ்நம். 2-12-3. 2 முண்டகோபநிஷத் - 3-1-3.
3 பகவத்கீதை - 14-2.

போதிலும், அநாதித்வாத் - ஆதியில்லாதவனுகையினுல், அவ்யய: - நாசமில்லாதவன், நிர்குணத்வாத் - ஸத்வம் முதலிய குணங்களில்லாமையினுல், நகரோதி - கார்யங்களைச் செய்கிறதுமில்லை, நலிப்யதே - (தேஹத்தின் ஸ்வபாவங்களால்) சேரப்படுகிறதுமில்லை. 31

பா] தேஹத்தைவிட வேறுபட்ட ஸ்வபாவங்களைக்கொண்டு நிரூபிக்கப்பட்டவனுகிய இந்த ஜீவாத்மா ஶரீரத்திலிருந்தபோதிலும் ஒன்றினுலுமுண்டாக்கப்பட்டவனல்லவாகையினுல் நாசமுமில்லாதவன். ஸத்வம் முதலிய குணங்களில்லாமையினுல் ஒன்றையும் செய்கிறதுமில்லை.

தா] ஆத்மாவிற்கு நித்யமாகவிருக்கை, மாறுதல்களை யடையாதவனுயிருக்கை முதலியவைகளினுல் கீழ்ச்சொல்லிய தேஹத்தைவிட வ்யத்யாஸத்தை அதின் காரணங்களுடன் உறுதிப்படுத்துகிருர்—இந்தஶ்லோகத்தில். சில விஷயங்களைப்பற்றிப் பரமாத்மா என்பதைச்சொல்லுகிற இந்தப்பரமாத்மா என்னும் பதத்தினுல் அபிப்ராயத்தில்கொள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிருர்—'தேஹத்தைவிட வேறுபட்ட' என்றாரம்பித்து. ஜ்ஞானத்தின் சுருக்கமாகிய நாசமும், தேஹத்தை ஏவுதல் முதலிய கர்த்ருத்வமும் உண்டென்று ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களிலேற்பட்டிருப்பதினுல் நாசம் இல்லை என்பது முதலியது எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிருர்—'ஸ்வபாவங்களைக் கொண்டு நிரூபிக்கப்பட்டவனுகிய' என்று. 'அநாதித்வாத்' என்பதினுல் நாசமில்லாமைக்குக் காரணமாகிய உத்பத்தியில்லாமை சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிருர்—'ஒன்றினுலும் உண்டாக்கப்பட்டவனல்ல ஆகையினுல்' என்று. ஒன்றினுல் உண்டாக்கப்பட்ட வஸ்துவல்லவோ நாசமடையத்தக்கது என்று பார்க்கப்பட்டது என்று தாத்பர்யம். 'நிர்குணத்வாத்' என்று பொதுவாக ஜ்ஞானம் முதலிய குணங்களில்லையென்று சொல்லியிருக்கிறது என்பதைப் பரிகரிப்பதற்காகச் சொல்லுகிருர்—'ஸத்வம் முதலிய' என்றாரம்பித்து. இப்படிக்காரணங்கள் இரண்டாகச் சொல்லியிருப்பதையும்அவைகளின் ஸாமர்த்யத்தையும் அனுஸரித்து அதற்குத்தகுந்தபடி கார்யங்களோடு அந்வயம் சொல்லப்பட்டது. லேபம் உண்டென்று ஸந்தேஹமுண்டாவதும், அதில்லை யென்று மறுப்பதும் ஸம்பவிக்கக்கூடிய விஷயங்களைப்பற்றியதே என்பதுஉசிதமாகையினுல்[1] 'தத்ஸப்தധாது...

[1] தத்-அந்த ஶரீரம்- ஶரீரமானது, ஸப்ததாது - ஏழுவிதமான தாதுக்களையுடையது, த்ரிமலம்-மூன்றுவிதமான மலங்களையுடையது, த்வியோநி-இரண்டுவித யோநிகளையுடையது, சதுர்விதாஹாரமயம் - நான்குவிதமான ஆகாரங்களினுல் உண்டானது.

தேஹத்தின் ஸ்வபாவங்களால் பூசப்படுகிறதுமில்லை. 31

பா - அ] ஸத்வம் முதலிய குணங்களில்லாதவனுகையினுல் ஒரு கார்யமும் செய்கிறதில்லை என்பதிருந்தபோதிலும் தேஹத்துடன் எப்பொழுதும் சேர்ந்து கொண்டிருக்கிற ஜீவன் தேஹத்தின் ஸ்வபாவத்தினுல் பூசப்படுகிறதில்லை யென்பது எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிருர்—

யதா² ஸர்வக³தம் ஸௌக்ஷ்ம்யாதா³காஶம் நோபலிப்யதே |
ஸர்வத்ராவஸ்தி²தோ தே³ஹே ததா²த்மா நோபலிப்யதே ‖ 32

அபெயாநிவதந்ஹவிஷ்பாஹாரோபமஶரீரம்' என்று சொல்லப்பட்ட ஶரீரம், துணி, முதலியவைகளில் சேறு முதலியவைகளைப்போல தன்னுடைய ஸம்பந்தத்தினுலேயே லேபத்தையுண்டாக்கக்கூடிய ஸ்வபாவத்தையுடையதாகையினுல் 'ஶரீரஸ்தோ²பி' என்பதனுல் ஏற்பட்ட அர்த்தத்தைச்சொல்லுகிருர்—'தேஹத்தின்ஸ்வபாவங்களால்' என்று. 31

தா] 'ந கரோதி' என்று சொல்லப்பட்ட கர்த்தாவாகாமலிருக்கை முன்பும் மேலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஶரீரத்திலிருந்தபோதிலும் அதின் ஸ்வபாவங்களால் பூசப்படுகிறதில்லை என்கிறவிஷயத்தில் உப்புக்கும்பலில் போடப்பட்ட கட்டை முதலியவைகளைப்போலவே ஆகவேண்டியதென்கிற ஸந்தேஹம் அடுத்த ஶ்லோகத்தினுல் பரிகரிக்கப்படுகிறது என்று சொல்லுகிருர்—'ஸத்வம் முதலிய' என்றாரம்பித்து. 1'ஸம்ஸர்கஜா தோ³ஷகு³ணா ப⁴வந்தி', 2 'ஶுஷ்கேணார்த்³ரம் த³ஹ்யதே மித்ரபா⁴வாத்' என்றல்லவோ ப்ரஸித்தமாக விருக்கிறது என்று தாத்பர்யம். 3 'யம் ப்ராப்யாதிபவித்ராணி வஸ்த்ராண்யாப⁴ரணாநி ச | அஶுசித்வம் க்ஷணாத்³யாந்தி கிமந்யத³ஶுசிஸ்தத꞉ ‖' என்று சொல்லியிருக்கிற ந்யாயத்தினுல் தேஹத்துடன் க்ஷணப்பொழுது ஸம்பந்தப்பட்டபோதிலும் துணி முதலியவைகள் அபரிசுத்தங்களாகின்றன. அநாதியாக அத்து

---

1 தோஷகுணு: - தோஷங்களும் குணங்களும், ஸம்ஸர்கஜா: - சேர்க்கையினுலுண்டானவைகளாக, பவந்தி - ஆகின்றன.

2 சுஷ்கேண - உலர்ந்த விறகினுல், ஆர்த்ரம் - ஈரவிறகும், மித்ரபாவாத் - சேர்ந்திருப்பதினுல், தஹ்யதே - கொளுத்தப்படுகிறது.

3 யம் - எந்த ஶரீரத்தை, ப்ராப்ய அடைந்து, அதிபவித்ராணி, மிகவும் பரிசுத்தங்களான, வஸ்த்ராணி - துணிகளும், ஆபரணுநிச - ஆபரணங்களும், க்ஷணுத் - க்ஷணகாலத்தில், அசுசித்வம் - அபரிசுத்தங்களா யிருக்கையை, யாந்தி - அடைகின்றனவோ, தத: - அந்த ஶரீரத்தைவிட, அசுசி: - அபரிசுத்தமானது, அந்யத் - வேறு, கிம் - எந்த வஸ்து.

ப-ரை] யதா - எப்படி, ஸர்வகதம் - எல்லா வஸ்துக்களுடன் சேர்ந்திருக்கிற, ஆகாஶம் - ஆகாசம், ஸௌக்ஷ்ம்யாத் - ஸூக்ஷ்மமாக விருக்கிறபடியினால், நோபலிப்யதே - (அந்த வஸ்துக்களின் ஸ்வபாவங்களினால்) பூசப்படுகிறதில்லையோ, ததா - அப்படியே, ஆத்மா - ஜீவாத்மா, ஸர்வத்ர - எல்லா, தேஹே - தேஹத்தில், அவஸ்தித꞉ - இருந்தபோதிலும், நோபலிப்யதே - (அவைகளின் ஸ்வபாவங்களால்) பூசப்படுகிறதில்லை. 32

பா] எப்படி ஆகாசம் எல்லா வஸ்துக்களோடும் சேர்ந்திருந்தபோதிலும் ஸூக்ஷ்மமாகையினால் எல்லா வஸ்துக்களின் ஸ்வபாவங்களால் பூசப்படுவதில்லையோ அப்படியே ஜீவாத்மாவும் மிகவும் ஸூக்ஷ்மமாகையினால் தேவன், மனுஷ்யன், முதலிய தேஹங்களிலிருந்த போதிலும்

டன் சேர்ந்திருக்கிற ஜீவாத்மாவைப்பற்றிக் கேழ்கவேண்டியதில்லை என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எப்பொழுதும் சேர்ந்துகொண்டிருக்கிற' என்று. சேர்ந்திருக்கை சேர்ந்திருக்கிற ஒருவஸ்துவினிடத்தில் மற்றொரு வஸ்துவின் ஸ்வபாவத்தை யுண்டுபண்ணுவதென்பது எல்லா இடத்திலும் ஸம்பவிக்கக்கூடியதல்ல என்று மேதாவுத்தை நிரூபிப்பதற்காக 'யதாஸர்வகதம்' என்று அநுவாதம் செய்திருக்கிறது என்று தெரிவிப்பதற்காக 'இருந்தபோதிலும்' என்று சொல்லியிருக்கிறது. எல்லா வஸ்துக்களோடும் சேர்ந்திருப்பதை அனுவாதம் செய்திருப்பது எல்லாத் தேஹத்திலும் இருப்பதினாலுண்டான ஆக்ஷேபத்தைக் கிளப்புகிறது என்று தாத்பர்யம். 'எல்லா வஸ்துக்களோடும் சேர்ந்திருந்தபோதிலும்' என்பதற்கு 'ஸர்வகதம்' என்னும் பதத்தினால் ஒன்றுக்கொன்று விருத்தங்களான எண்ணிறந்த ஸ்வபாவங்களால் பூசப்படவேண்டிவரும் என்கிற ஆக்ஷேபமும் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது என்று தாத்பர்யம். எப்படி ஆகாசம் மற்ற பூதங்களைவிட ஸூக்ஷ்மமானதோ அப்படியே ஆகாசத்தைவிட அதிக ஸூக்ஷ்மமானது இந்த ஆத்மா, என்று தெரிவிப்பதற்காக 'மிகவும் ஸூக்ஷ்மமாகையினால்' என்று சொல்லப்பட்டது. 'அப்படியே' என்பதினால் பூசப்படாமலிருப்பதற்குக் காரணமும் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். சில வஸ்துக்கள் சில வஸ்துக்களோடு சேர்ந்தபொழுது அவைகளின் ஸ்வபாவங்களால் பூசப்படாமலிருந்தபோதிலும் அதைவிட மற்ற வஸ்துக்களோடு சேர்ந்தபொழுது அவைகளின் ஸ்வபாவங்களால் பூசப்பட்டிருப்பதாகக் காணப்படுகின்றன. எப்படியெனில் பஞ்சு முதலியவைகளில் மை முதலியவைகள் சேர்ந்திருந்த

அந்தந்த தேஹங்களின் ஸ்வபாவங்களினால் பூசப்படுகிறதில்லை. 32

யதா ப்ரகாஶயத்யேக: க்ருத்ஸ்நம் லோகமிமம் ரவி: |

க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாஶயதி பாரத || 33

ப - ரை] யதா - எப்படி, ஏக: - ஒரு, ரவி - ஸூர்யன், இமம் - இந்த, க்ருத்ஸ்நம் - எல்லா, லோகம் - லோகத்தையும், ப்ரகாஶயதி - ப்ரகாசம் செய்கிறானோ. ததா - அப்படியே, பாரத - பரதவம்சத்தில் பிறந்த அர்ஜுந, க்ஷேத்ரீ - ஜீவாத்மா, க்ருத்ஸ்நம் - எல்லா, க்ஷேத்ரம் — ஶரீரத்தையும், ப்ரகாஶயதி - ப்ரகாசம் செய்கிறான். 33

பா] எப்படி ஒரு ஸூர்யன் தன்னுடைய காந்தியினால் இந்த எல்லா லோகத்தையும் ப்ரகாசம் செய்கிறானோ அப்படியே ஶரீரத்தையும் ஜீவாத்மா

போதிலும் கருப்பு வர்ணம் முதலியவைகள் உண்டாவதில்லை. செம்பஞ்சுக்குழம்பில் நனைந்த மாத்திரத்தில் சிவப்பு நிறம் காணப்படுகிறது. அப்படியே இவ்விடத்திலும் ஸம்பவிக்கலாமே என்கிற ஆக்ஷேபத்தை விலக்குவதற்காக உபமானம் உபமேயம் இரண்டிலும் 'எல்லா' என்னும் பதம் சொல்லியிருக்கிறது. 32

தா] பிறகு இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் [1] 'ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞம்' என்று அறியத்தகுந்ததாயிருக்கை, அறிகிறவனாகயிருக்கை, இவைகளால் நிரூபிக்கப்பட்டதாயும் அவயவங்களின் சேர்க்கையாயிருக்கை, அவைகளின் சேர்க்கையல்லாதிருக்கை, இவைகளால் ஏற்பட்ட அநேகமாயிருக்கை, ஒன்றாயிருக்கை, இவைகளால் தானே ஏற்பட்டதுமாகிய ஶரீரம் ஆத்மா இவைகளின் பேதத்தை உதாஹரணத்துடன் உறுதிப்படுத்துகிறார்—இந்த ஶ்லோகத்தினால். ஜீவாத்மாவின் ஸ்வரூபமும் தர்மபூதஜ்ஞானமும் ஒரே ஜாதியான வஸ்துக்களாயிருந்த போதிலும் இவைகளின் வ்யத்யாஸத்தைக் காட்டுவதற்காக காந்தியை உதாஹரணமாகச் சொல்லியிருக்கிறது. 'க்ருத்ஸ்நம் க்ஷேத்ரம்' என்பதில் எல்லாச் ஶரீரங்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது என்று தோன்றுகிறது. அப்படியே மற்றவர்களும் வ்யாக்யானஞ் செய்தார்கள். ஸூர்யனை த்ருஷ்டாந்தமாகச் சொல்லியிருப்பதும் ஸூர்யனைப்போல ஆத்மா ஒருவன், அவன் ஒன்றோடும் ஸம்பந்தப்படாதவன் என்று தெரிவிப்பதற்காகவும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது யுக்தமல்ல, ஒவ்வொரு ஶரீரங்கள்தோறும் ஆத்மாக்கள் தனித்தனியாகையினால் ஒவ்வொரு ஆத்மாவும் எல்லாச் ஶரீரங்களையும் ப்ரகாசம் செய்கிறானென்பதில்லாமையினாலும். ஆத்மாக்களின்

---

1 பகவத்கீதை-13-1.

இது என்னுடைய ஶரீரம், இப்படிப்பட்டது, என்று வெளியிலும், உள்ளிலும், உள்ளங்கால் முதல் தலைவரையிலும் தன்னுடைய ஜ்ஞானத்தினால் ப்ரகாசம் செய்கிறான். ஆகையினால் தன்னால் ப்ரகாசிக்கப்படுகிற லோகத்தைவிட ப்ரகாசம்செய்கிற ஸூர்யனைப்போல அறிகிறவனாகையினாலே தன்னால், அறியப்படுகிற இந்தச் ஶரீரத்தைப் பார்க்கிலும் மிகவும் வேறுபட்டவன் இந்த கீழ்ச்சொல்லிய குணங்களோடு கூடிய ஜீவாத்மா என்றர்த்தம். 33

𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌰𑍇𑌵𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 ।
𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌚 𑌯𑍇 𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌪𑌰𑌂 ॥ 34

ஶ்ரீகண்ணபிரான் அருளிச்செய்த ஶ்ரீமத் பகவத்கீதையில்
பதிமூன்றாவது அத்யாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ப - ரை] 𑌏𑌵𑌂 - இப்படி, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 - ஶரீரம் ஜீவாத்மா இவைகளின், 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂—வ்யத்யாஸத்தையும், 𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑍋

ஜாதியைச்சொல்லுவதாயிருந்தால் ஸூர்யனை த்ருஷ்டாந்தமாகச் சொல்லியிருப்பது பொருந்தாது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—' வெளியிலும், உள்ளிலும்' என்றாரம்பித்து. வெளியில் தோல் முதலியவைகளையும் உள்ளில் மாம்ஸம் முதலியவைகளையும் என்றர்த்தம். ஒவ்வொரு ஶரீரத்திற்கும் அவயவங்கள் வெவ்வேறாகையினால் அவைகளும் அநேகவிதங்களாகையினாலே ஜீவாத்மாவைவிட அவைகளுக்கு வ்யத்யாஸத்தைக் காட்டுவதற்காகவும் அவயவங்களில் ஏதாவது ஒன்று அறிகிறவன் என்னும் ஸந்தேஹத்தை விலக்குவதற்காகவும் '𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 (எல்லா)' என்னும் பதத்தின் தாத்பர்யம். அநேகங்களான அவயவங்களின் சேர்க்கையாகிய ஶரீரத்தைவிட அவைகளெல்லாவற்றையும் அறிகிறவனாகத் தோன்றுகிற ஒருவனாகிய ஆத்மா வேறுபட்டவன் என்று நாம் தெரிந்து கொள்வதினாலேயே ஏற்பட்டது, என்று சொல்லப்பட்டதாகிறது. ப்ரகாசம் செய்கிறவனாயிருக்கையை மாத்திரம் சொல்லவந்ததல்ல இந்த உதாஹரணம். பின்னை எப்படியெனில் அதினால் உண்டான வ்யத்யாஸத்தையும் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'ஆகையினால் தன்னால் ப்ரகாசிக்கப்படுகிற' என்றாரம்பித்து. கர்மமாகவும் கர்த்தாவாகவும் (எழுவாயாகவும் செயப்படு பொருளாகவும் இருப்பது முதலியவைகளால் இவ்விடத்தில் பேதம் வ்யக்தமாக இருக்கிறது என்று தாத்பர்யம். 33

க்ஷம்ச - பஞ்சபூதங்களாக மாறியிருக்கிற, ப்ரக்ருதி - ப்ரக்ருதியிலிருந்து விடுபடுவதற்குக் காரணமாகிய அமாநித்வம் முதலிய குணங்களையும், ஜ்ஞாநசக்ஷுஷா - ஜ்ஞானமாகிற கண்ணினால், யே – எவர்கள், விது: - அறிந்தார்களோ, தே - அவர்கள், பரம் - பரிசுத்தமான ஆத்மாவை, யாந்தி - அடைகிறார்கள். 34

பா] கீழ்ச்சொல்லிய விதமாக ஶரீரம் ஜீவாத்மா இவைகளின் வ்யத்யாஸத்தை விவேக ஜ்ஞானம் என்று பேருடைய கண்ணினால் எவர்கள் தெரிந்துகொள்ளுகிறார்களோ; பஞ்சபூதங்களாகிய ப்ரக்ருதி விடுவதற்குக் காரணமாகிய அமாநித்வம் முதலிய குணங்களை எவர்கள் தெரிந்துகொள்

தா] பிறகு இந்த அத்யாயத்திற்கு முக்யமான அர்த்தமாகிய விடத்த குந்ததினுடையவும், அங்கீகரிக்கத் தகுந்ததினுடையவும், அவைகளின் உபாயங்களினுடையவும் ஜ்ஞானத்திற்குப் பலம் சொல்லப்படுகிறது— இந்தஶ்லோகத்தினால். 'ஏவம்' என்னும்பதத்தினால் அநுவதிக்கப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'கீழ்ச்சொல்லியவிதமாக' என்று. அறிவில்லாமலிருக்கை, அறிகிறவனாயிருக்கை, தரிக்கத்தகுந்தாயிருக்கை, தரிக்கிறவனாயிருக்கை, ஶேஷமாயிருக்கை, சேஷியாகவிருக்கை, முதலிய விதங்களால் என்றர்த்தம். 1 'அந்தரமவகாஶாவதிபரிதாநாந்தர்த்தி பேதார்த்தவிநா' என்று சொல்லியபடி அநேக அர்த்தங்களைச் சொல்லுகிற 'அந்தர' என்னும் பதத்திற்கு இவ்விடத்தில் சொல்லப்படுகிற அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'வ்யத்யாஸத்தை' என்று. 'ஜ்ஞாநசக்ஷுஷா' என்கிறவிடத்தில் திவ்யஜ்ஞானம் முதலியவற்றின் ப்ரஸ்தாவத்தை விலக்குவதற்காக 'விவேக ஜ்ஞானம்' என்று சொல்லியிருக்கிறது. கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட உபதேசத்தினால் அடையப்பட்ட ஜ்ஞானம் இங்கே சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். ஜ்ஞானத்தைக் கண்ணாக நிரூபித்திருப்பது ஸாக்ஷாத்காரமாகவிருக்கிற ஜ்ஞானத்திற்குக் காரணமானதினால் 'விவிச்யதே அநேந' (இத்தால் பிரித்துக் காட்டப்படுகிறது)' என்று 'விவேக' என்பது இவ்விடத்தில் வ்யத்யாஸத்தைத் தெரிவிக்கக்கூடிய ஸ்வபாவம். பஞ்சபூதங்களாகிய ப்ரக்ருதியிலிருந்து விடுபடுதல் பூதப்ரக்ருதி மோக்ஷம். அன்றிக்கே பூதங்களாகிய ஜீவாத்மாக்களுக்கு ப்ரக்ருதியிலிருந்து மோக்ஷம் என்றாகவுமாம். பூதங்களுக்கு (ப்ராணிகளுக்கு) ப்ரக்ருதியாவது அவித்யை. அவ்யக்தம் என்று பேருடையது. அதற்கு மோக்ஷமாவது நாசத்தை அடைவிக்கிறது என்று சங்கராசார்யரால் சொல்லப்பட்ட அர்த்தம் 2 'ஆதியுமில்

---

1 அமரம்-3 வது காண்டம்.
2 மந்திரிகோபநிஷத்.

ளுகிறார்களோ; அவர்கள் ஸம்ஸாரபந்தத்திலிருந்து நீங்கின ஆத்மாவை யடைகிறார்கள். 'மோக்ஷ்யதே ஹ்யேநஸ (இதினால் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுகிறான்)' என்று மோக்ஷம் என்பதற்கு அமாநித்வம் முதலிய கீழ்ச் சொல்லிய மோக்ஷத்திற்கு ஸாதனமான குணம் என்றர்த்தம். அதாவது ஶரீரம் ஆத்மா இவைகளின் வ்யத்யாஸத்தைப்பற்றிய கீழ்ச்சொல்லிய ஜ்ஞானத்தினால் அவைகளின் வ்யத்யாஸத்தைத் தெரிந்துகொண்டு பஞ்ச பூதங்களாக மாறியிருக்கிற ப்ரக்ருதியிலிருந்து விடுபடுவதற்கு உபாயமாகிய அமாநித்வம் முதலியவைகளையும் அறிந்துகொண்டு எவர்கள் அனுஷ்

லாமல், நாசமுமில்லாமலிருக்கிறது ப்ரக்ருதி' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளுக்கு விரோதமாயிருப்பதினால் நிராகரிக்கத் தக்கது. ஜீவாத்மாவைப்பற்றிய ஜ்ஞானத்தின் பலத்தைச் சொல்லுகிறபடியினால் 'பரம்' என்னும் பதம் இவ்விடத்தில் பரிசுத்தனான ஜீவனைச் சொல்லுகிறது. அதற்கு மேன்மையாவது ஸம்ஸாரியாகவிருந்த தன்னுடையதாகிய முன்தசையைப் பார்க்கிலும் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஸம்ஸாரபந்தத்திலிருந்து நீங்கின' என்று. இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் ஶரீரம் ஜீவாத்மா இவர்கள் முதலில் நிரூபிக்கப்பட்டார்கள். பரம்பரையாக பரிசுத்தமான ஆத்மாவை அடைவதற்குபாயமாக அமாநித்வம் முதலிய குணங்களின் கூட்டமும் நிரூபிக்கப்பட்டது. ஆகையினால் இவ்விடத்தில் முடிவிலும் ஶரீரம் ஜீவாத்மா இவர்களோடு சேர்த்துச் சொல்லப்படுகிற பூத ப்ரக்ருதி மோக்ஷம் என்பதும் அந்தக் குணங்களின் கூட்டங்களாகவே இருக்க வேண்டியதவஶ்யம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— 'மோக்ஷ்யதே ஹ்யேநஸ' என்றாரம்பித்து. இரட்டித்தல் லோபித்திருக்கிற 'ஸந்' என்னும் விகுதியை முடிவிலுடையபதத்திலாவது 'மோக்ஷ' என்னும் பதத்தை பகுதியாக வைத்துக்கொண்டு 'ணிச்' என்னும் விகுதியை முடிவிலுடைய 'மோக்ஷயதி' என்னும் பதத்தின் மேலாவது, 'மோக்ஷணே' என்கிற மற்றொரு தாதுவிலாவது, 'மோக்ஷ்யதே' என்று 'யக்' என்னும் விகுதியை ப்ரயோகித்திருக்கிறது. அந்தப் பக்ஷத்தில் 'மோக்ஷ' என்னும் பதம் 1 'அகர்தரி ச காரகே ஸம்ஜ்ஞாயாம்' என்கிற ஸூத்ரத்தில் சொல்லிபடி கரணம் என்கிற அர்த்தத்தைச்* சொல்லுகிற 'கஞ்' என்னும் விகுதியை முடிவிலுடையது. அறியவேண்டியதாக கீழ்ச்சொல்லியவைகளில் ஏற்பட்ட அறியவேண்டியபாகத்தை விவரித்துக்கொண்டும். வாக்யத்தினர்த்தத்தைத் தெரிந்துகொள்ளுவது மாத்

---

1 அஷ்டாத்யாயீ-3-3-19.

டிக்கிருர்களோ அவர்கள் ஸம்ஸார பந்தத்தை விட்டவர்களாய் தன்னுடைய ரூபத்துடனிருக்கிற எங்கும் நிறைந்த ஜ்ஞாநத்தை ஸ்வபாவமாக உடைய ஜீவாத்மாவை அடைகிருர்கள் என்றர்த்தம். 34

ஸ்ரீ பகவத் ராமாநுஜன் என்னும் உடையவர் அருளிச் செய்த

ஸ்ரீமத் கீதா பாஷ்யத்தில்

பதிமூன்ருவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம:

எம்பெருமானர் திருவடிகளே சரணம்.

திரம் நேராக மோக்ஷத்திற்குக் காரணமாகாதாகையினுல் அது அநுஷ்டானத்திற்கங்கம் என்று தெரிவித்துக்கொண்டும், பூதப்ரக்ருதி மோக்ஷம் என்னும் பதத்தினுல் அநிஷ்ட நிவ்ருத்தியைச் சொல்லியிருக்கிறது 'யாந்தி பரம்' என்பதினுல் இஷ்டப் ப்ராப்தியைச் சொல்லியிருக்கிறது என்பதைக் காட்டிக்கொண்டும், சேர்ந்த மொத்தமான வாக்யத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிருர்—'அதாவது ஶரீரம்' என்ருரம்பித்து. 34

ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரரான

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனருளிச் செய்த தாத்பர்ய சந்த்ரிகையில்

பதிமூன்ருவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச் செய்த கீதார்த்த ஸங்க்ரஹம்.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

தேஹஸ்வரூபமாத்மாப்திஹேதுராத்மவிஶோதநம் ।
பந்தஹேதுர்விவேகஶ்ச த்ரயோதஶ உதீர்யதே ॥ 17

ப-ரை] தேஹஸ்வரூபம்-தேஹத்தின் ஸ்வரூபமும், ஆத்மாப்திஹேது:- ஆத்மாவை அடைவதற்குக் காரணங்களும், ஆத்மவிஶோதநம் - ஆத்மாவை நிரூபிப்பதும், பந்தஹேது: - ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமும், விவேகஶ்ச - வ்யத்யாஸத்தைப் பற்றிய ஜ்ஞாநமும், த்ரயோதஶே- பதின்மூன்றாவது அத்யாயத்தில், உதீர்யதே – சொல்லப்படுகிறது 17

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை.

இவ்விடத்தில் பாஷ்யத்தில் அதில் இப்பொழுது பதின்மூன்றாவது அத்யாயத்தில் தேஹம் ஆத்மா இவைகளின் ஸ்வரூபமும், தேஹத்தின் உண்மையை நிரூபிப்பதும், தேஹத்தைவிட்டு நீங்கிய ஜீவாத்மாவை அடைவதற்கு உபாயமும், தேஹத்தைவிட வேறுபட்ட ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை நிரூபிப்பதும், அப்படிப்பட்ட ஆத்மாவிற்கு அசேதனமாகிய ப்ரக்ருதியுடன் ஸம்பந்தமுண்டானதற்குக் காரணமும், அதைவிட வ்யத்யாஸத்தைத் தெரிந்துகொள்ளவேண்டிய விதமும் சொல்லப்படுகிறது என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் தேஹத்தின் ஸ்வரூபம் என்பதினாலேயே தேஹம் ஆத்மா இவைகளின் ஸ்வரூபமும் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. தேஹத்தின் உண்மையை நிரூபிப்பதும் என்கிற விடத்திலும் அப்படியே என்று நிரூபிக்கப்பட்டது. ஆத்மாவை யடைவதற்குக் காரணம் 1 'அமாநித்வம்' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டது. ஆத்மாவை நிரூபிப்பது 2 'ஜ்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி' என்றாரம்பித்துச் செய்யப்பட்டது. ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமும் 3 'காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு' என்று சொல்லப்பட்டது. 4 'த்யாநேநாத்மநி பஶ்யந்தி' என்றாரம்பித்து வ்யத்யாஸத்தைத் தெரிந்துகொள்ளவேண்டிய விதமும் அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி காட்டப்பட்டது.

1 பகவத்கீதை - 13-7. 2 பகவத்கீதை-13-12.
3 பகவத்கீதை-13-21. 4 பகவத்கீதை-13-24.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனருளிச்செய்த

ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹப்பாட்டு.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஊனின்படியு முயிரின் பிரிவுமுயிர் பெறுவார்
ஞானம் பெறுவகையுஞ் ஞானமீன்ற வுயிர்ப்பயனும்
ஊனின்ற தற்கடியுமுயிர் வேறிடு முள்விரகும்
தேனின்ற பாதன் தெளிவித்தனன் சிலைப்பார்த்தனுக்கே. 14

பா-ரை] தேன் நின்ற - தேன் எப்பொழுதும் ஸ்த்திரமாகஇருக்கிற, பாதன் - திருவடிகளையுடைய ஸ்ரீ கிருஷ்ணன், சிலைப்பார்த்தனுக்கு - சிலையையுடைய பார்த்தனுக்கு, அதாவது வில்லைத்தரித்தவனாகிய அர்ஜுநனுக்கு, ஊனின் - ஶரீரத்தின், படியும் - ப்ரகாரத்தையும், உயிரின் - ஜீவாத்மாவின், பிரிவும் - வ்யத்யாஸத்தையும், உயிர் பெறுவார் - ஜீவாத்மாவை யடைகிறவர்கள், ஞானம் பெறுவகையும் - ஜ்ஞானத்தை யடையும் வகையும், அதாவது எந்த அமாநித்வம் முதலிய குணங்களினால் ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞானத்தை யடைகிறார்களோ அப்படிப்பட்ட குணங்களையும் என்றர்த்தம், ஞானம் - ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞானம், ஈன்ற - உண்டாக்கின, உயிர்ப்பயனும் - ஜீவாத்மாவாகிற ப்ரயோஜனமும், அதாவது அந்த ஜ்ஞானங்களால் அடையக்கூடிய பலமாகிய பரிசுத்தமான ஆத்ம ஸ்வரூபமும் என்றர்த்தம், ஊன் - ஶரீரம், நின்றதற்கு - இவனோடு சேர்ந்திருப்பதற்கு, அன்றிக்கே ஶரீரத்தில் இவன் உள்ளே ப்ரவேசித்திருப்பதற்கு என்றாகவுமாம், அடியும் - காரணத்தையும், உயிர் - ஜீவாத்மாவை, வேறிடும் - வேறாகத்தெரிந்து கொள்ளும், உள்விரகும் - அந்தரங்கங்களான உபாயங்களும், தெளிவித்தனன் - தெளியும்படி சொன்னான்.

'தேனின்ற' என்பதினால் அல்லாத புஷ்பங்களைக் காட்டிலும் திருவடிகளாகிற தாமரஸ புஷ்பங்களுக்கு மேன்மை சொல்லப்பட்டது. அல்லாத புஷ்பங்கள் ஒரே காலத்தில் சில தேன் துளிகளை உண்டாக்கு மதுபோக்கி அதிலேயே தேன் நிற்பதுமில்லை. பகவானினுடைய திருவடிகளிலேயென்றால் தேன் எப்பொழுதும் நிலைத்திருப்பதென்பது விசேஷம். இங்கு திருவடிகளின் போக்யதையையே தேனாக நிரூபித்ததாகவுமாம். இத்தால் 1 'தவாம்ருதஸ்யந்தி நி பாதபங்கஜே நிவேஶிதாத்மா கதமந்யதிச்சதி| ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே

1 ஸ்தோத்ர ரத்நம்-27.

நேத்ரோத்ஸவம் ஹ்ருஷீகேசதே॥' என்கிறபடியே திருவடிகளின் போக்யதை நெஞ்சில் பட்டவாறே 1 'மாற்பால் மனஞ் சுழிப்ப மங்கையர் தோள் கை விட்டு' என்கிறபடியே மற்ற விஷயங்கள் தானே தூரத்தில் விலகிப்போம் என்று தாத்பர்யம். அன்றிக்கே 2 'ஸாத்வஸமேதை: விஷயமருதாமா விவ்ருதைர்வ்யாலோலை: ஸம்ஸாரவநே நியோகநாய: நிதாந்த தப்தஸ்வகர்மஜநிதை: பதமேஹி பாதச்சாயாம்॥' என்று ப்ரார்த்தித்தபடியே சப்தாதி விஷயங்களாகிற பெருங்காற்றி லடிபட்டு தன்னுடைய கர்மங்களாகிற வெய்யிலினால் தாபங்களை யடைந்தவனுக்கு அந்த ஸகல தாபங்களும் நீங்கும்படி யிருக்கிறது திருவடிகளின் போக்யதை என்றுமாகவுமாம். 3 அன்றிக்கே 'ப்ரணதஸுரகிரீடப்ராந்த மந்தாரமாலா விகலித மகரந்த ஸ்நிக்த பாதாரவிந்த:' என்கிறபடியே 4 'வாழ்த்தியவாயராய் வானோர் மணிமகுடம் தாழ்த்த' அதில் சூட்டப்பட்ட புஷ்பங்களிலிருந்து பெருகிய தேன் ப்ரவாஹத்தினால் நனைக்கப்பட்ட திருவடிகளை யுடையவன் என்றுமாகவுமாம். இதை ப்ரபந்ந ஜன ஸந்தான கூடஸ்தரும் 5 'உன் தேனே மலரும் திருப்பாதம்' என்றருளினர். 'பகவானுடைய உத்தமமான திருவடிகளில் தேனின் பெருக்கு உண்டாகிறது' என்று அர்த்தமுள்ள ச்ருதிவாக்யமுமிருக்கிறது. 'சிலைப்பார்த்தனுக்கு' என்பதினால் முன்பு வில்லாளிகளுக்குள் மேன்மைபெற்றவனாயிருந்து 6 'விஸ்ருஜ்ய ஸசரம் சாபம்' என்கிறபடியே வில்லைப்பொகட்டு நிற்கிறானாகையினாலே பரிஹாஸமாகச் சொல்லுகிறதாகவுமாம். அன்றிக்கே 7 'பாண்டவாநாம் தநஞ்ஜய:' என்கிற ஏற்றத்தைச் சொல்லுகிறதாகவுமாம். 'ஊனின்படியும் உயிரின் பிரிவும்' என்பதினால் ஸங்க்ரஹ ச்லோகத்தில் தேஹ ஸ்வரூபம் என்பது ஜீவாத்ம ஸ்வரூபத்தையும் குறிக்கிறது என்று தாமருளிச்செய்தபடியே ஸங்க்ரஹிக்கப்பட்டது. மேலும் 'படியும்பிரிவும்' என்பதினால் அறியத்தக்கதாயிருக்கை, அறிகிறவனாயிருக்கையாகிய வ்யத்யாஸங்களைச் சொல்லி 8 'க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர்ஜ்ஞாநம்' என்று சொல்லியிருப்பதினால் ஒரு விதமான வ்யத்யாஸம் கீழே சொல்லப்பட்டதுஎன்றேற்பட்டது. 'ஞானம் பெறுவகையும்' என்பதினால் 9 'அத்யாத்மஜ்ஞா

1 மூன்றாந்திருவந்தாதி-14.
2 தேவநாயக பஞ்சாசத்-49.
3 தேவநாயக பஞ்சாசத்-1.
4 மூன்றாந்திருவந்தாதி-96.
5 திருவாய்மொழி-1-5-5.
6 பகவத்கீதை-1-47.
7 பகவத்கீதை-11-37.
8 பகவத்கீதை-13-2.
9 பகவத்கீதை-13-11.

நதிதிவேஹாக்ஷம்' என்கிற விடத்தில் அமாநித்வம் முதலிய குணங்களை, ஜ்ஞானம் என்று சொல்லியிருப்பது அவைகள் ஆத்ம ஜ்ஞானத்திற்குக் காரணமாகையினால் என்று வ்யக்தமாக அருளிச் செய்யப்பட்டது. 'ஞானமீன்ற வுயிர்ப்பயனும்' என்பதினால் மூலத்தில் 'ஜ்ஞேயம்' என்று சொல்லியிருப்பது முதல் ஶ்லோகத்தில் சொல்லியபடி இந்த ஆத்மாவினால் அறியப்படுகிற ஶரீரமல்ல, அமாநித்வம் முதலிய குணங்களால் அடையக்கூடிய பரிசுத்தமான ஆத்ம ஸ்வரூபம் என்பதும், 'ஜ்ஞேயம்' என்றாரம்பித்து பரப்ரம்மம் நிரூபிக்கப்படுகிறது என்று சொல்லுகிறவர்களை நிராகரிப்பதற்காக உபாயத்தை நிரூபித்தபிறகு அதனால் அடையக்கூடிய ப்ரயோஜனத்தை நிரூபிக்கிறது என்கிற ஸங்கதியும் காட்டப்பட்டது. அப்படிச்சொல்லுகிற பக்ஷத்தில் இவ்விதமாக ஸங்கதியில்லை என்று தாத்பர்யம். 'ஊனின்றதற்கடியும்' என்பதினால் அநாதியாக இந்த ஶரீர ஸம்பந்தம் தொடர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணமும் என்று அர்த்தமாகையினால் 1 'காரணம் குணஸங்கோஸ்ய' என்னும் ஶ்லோகத்தின் பாஷ்யத்தில் அருளிச்செய்தபடி அமாநித்வம் முதலிய குணங்கள் உண்டாகும் வரையில் இந்த ஶரீர ஸம்பந்தம் தொடர்ந்து வருகிறது என்று தாத்பர்யம். 'உயிர் வேறிடுமுள்விரகும்' என்பதினால் முன்பு சுருக்கமாக ஆத்மாவின் வ்யத்யாஸம் சொல்லப்பட்டிருந்தபோதிலும் மற்றும் சில வ்யத்யாஸங்கள் விபரமாக மேலே சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம்.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

---

1 பகவத்கீதை-13-21.

ஸ்ரீமத் பகவத்கீதை.

பதிநான்காவது அத்யாயம்.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பா - அ] பதிமூன்றாவது அத்யாயத்தில் ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டிருக்கிற ப்ரக்ருதி, ஜீவாத்மா, இவைகளினுடைய ஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டு பகவானிடத்தில் பக்தியினால் ஒத்தாசை செய்யப்பட்ட அமாநித்வம் முதலிய குணங்களினால் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபடுகிறான் என்று சொல்லப்பட்டது. அதில் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணம் முன்பு முன்பிருந்த ஸத்வம் முதலிய குணங்களாலுண்டாகிய ஸுகம் முதலியவைகளில் பற்றுதல் என்றும் * 'காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு' என்பதினால் சொல்லப்பட்டது. பிறகு இப்பொழுது அந்தக் குணங்கள் ஸம்ஸார பந்தத்திற்குக்காரணமாகும் விதமும், அந்தக் குணங்களை நிவ்ருத்திக்கும் விதமும் சொல்லப்படுகிறது—

ஸ்ரீ பகவாநுவாச ||

ப - ரை] ஸ்ரீபகவாந் - ஸ்ரீபகவானாகிய க்ருஷ்ணன், உவாச - சொன்னார்.

பரம் பூய: ப்ரவக்ஷ்யாமி ஜ்ஞாநாநாம் ஜ்ஞாநமுத்தமம் |
யஜ்ஜ்ஞாத்வா முநய: ஸர்வே பராம் ஸித்திமிதோ கதா: || 1

ப - ரை] பரம் - (முன்பு சொல்லியதைவிட) வேறாகிய, ஜ்ஞாநாநாம் - ஜ்ஞானங்களுக்குள், உத்தமம் - உயர்ந்ததாகிய, ஜ்ஞாநம் - ஜ்ஞானத்தை, பூய: - மறுபடியும், ப்ரவக்ஷ்யாமி - சொல்லப்போகிறேன், யத் - எந்த ஜ்ஞானத்தை, ஜ்ஞாத்வா - தெரிந்துகொண்டு, ஸர்வே - எல்லா, முநய: - ரிஷிகளும், இத: - இவ்விடத்திலிருந்து, பராம் - மேலான, ஸித்திம் - ஸித்தியை, கதா: - அடைந்தார்களோ. 1

* பகவத்கீதை-13-21.

பா] முன்பு சொல்லியதைவிட வேறானதும், ப்ரக்ருதி, ஜீவாத்மா, இவைகளுக்குள்ளடங்கியதுமாகிய ஸத்வம் முதலிய குணங்களைப்பற்றிய ஜ்ஞா

தா] முன் அத்யாயத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட அர்த்தத்தை நிரூபிக்கிறதாகிய இந்த அத்யாயத்திற்கு முன் அத்யாயத்தோடு ஸங்கதியைக் காட்டிக்கொண்டும், 1 ‘குணபந்தவிதா தேஷாம் கர்த்ருத்வம் தந்நிவர்த்தநம்| கதித்ரயஸ்வமூலத்வம் சதுர்த்தஶ உதீர்யதே’ என்கிற ஸங்க்ரஹ ஶ்லோகத்தையும் வ்யாக்யானஞ் செய்கிறார்—‘பதிமூன்றாவது அத்யாயத்தில்’ என்றாரம்பித்து. 2 ‘இதம் ஶரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே’ என்றாரம்பித்து 3 ‘இதி க்ஷேத்ரம் ததா ஜ்ஞாநம் ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத:| மத்பக்த ஏதத் விஜ்ஞாய மத்பாவாயோபபத்யதே’ என்கிற வரையிலுள்ள ஶ்லோகங்களின் அபிப்ராயத்தை மனதில் வைத்துக்கொண்டு ‘ஒன்றோடொன்று சேர்ந்து கொண்டிருக்கிற’ என்றாரம்பித்து ‘ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுகிறான் என்று சொல்லப்பட்டது’ என்கிற வரையிலும் சொல்லப்பட்டது. ‘அந்தக்குணங்கள் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகும் விதமும்’ என்பதினால் ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் ‘குணபந்தவிதா’ என்பது வ்யாக்யானஞ் செய்யப்பட்டது. ‘அந்தக்குணங்களை நிவ்ருத்திக்கும் விதமும்’ என்பதினால் ‘தந்நிவர்த்தநம்’ என்பது வ்யாக்யானஞ்செய்யப்பட்டது. ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட குணங்களே கர்த்தா என்பதையும், மூன்றுகதிகளும் தன்னாலேயே கொடுக்கப்படுகிறது என்பதையும், பாஷ்யத்தில் சொல்லாமலொழிந்தது அவைகள் வேறு கார்யத்திற்காக அநுவாதம் செய்யப்பட்டதாகையினாலும், ப்ரஸ்தாவத்தின் மேல் ப்ரஸ்தாவமாய் வந்ததாகையினாலும் என்றறியவேண்டியது. ‘பரம்’ என்னும் பதம் உயர்ந்தது என்னும் அர்த்தத்தைச் சொல்லில் ‘உத்தமம்’ என்னும் பதத்தோடு புனருக்திவரும். ஆகையினால் அதற்கு வேறுவிதமான வ்யாக்யானஞ் செய்கிறார்—‘முன்பு சொல்லியதை விட வேறானதும்’ என்று. இப்படியாகில் முன்பு சொன்னதையே மறுபடி சொல்லுகிறேன் என்று சொல்லுகிற ‘பூய: ப்ரவக்ஷ்யாமி’ என்பது விரோதிக்குமே என்கிற ஆக்ஷேபத்தை விலக்குவதற்காக அதின் அபிப்ராயத்திலிருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—‘ப்ரக்ருதி, ஜீவாத்மா, இவைகளுக்குள்ளடங்கியதுமாகிய’ என்று. ஸங்க்ரஹமாக முன்

1 கீதார்த்த ஸங்க்ரஹம்-18.
2 பகவத்கீதை-13-1.
3 பகவத்கீதை-13-18.

னத்தை மறுபடியும் சொல்லப்போகிறேன். அந்த ஜ்ஞானம் ப்ரக்ருதி, ஜீவாத்மா, இவைகளைப்பற்றிய ஜ்ஞானங்களெல்லாவற்றிலு முயர்ந்தது. எந்த ஜ்ஞானத்தை யறிந்துகொண்டு எல்லா ரிஷிகளும்அதையே த்யானம் செய்துகொண்டவர்களாய் ஸம்ஸார மண்டலத்தைவிட மேலாகிய ஸித்தியை யடைந்தார்களோ அதாவது பரிசுத்தமான ஸ்வரூபத்தை அடைவதாகிய ஸித்தியை அடைந்தார்களோ. 1

அத்யாயத்தில் சொல்லப்பட்ட குணங்கள் ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமாக இருப்பதையே விஸ்தாரமாக இந்த அத்யாயத்தில் மறுபடியும் சொல்லப்போகிறேன் என்றர்த்தமாகையினால் விரோதமில்லை என்று தாத்பர்யம். 'ஜ்ஞாநாநாமுத்தமம் ஜ்ஞாநம் பூய: ப்ரவக்ஷ்யாமி (ஜ்ஞானங்களுக்குள் உத்தமமாகிய ஜ்ஞானத்தை மறுபடியும் சொல்லப்போகிறேன்)' என்று அந்வயம் ஸம்பவித்தபோதிலும் அந்த ஜ்ஞானம் அவஶ்யமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது என்பதேற்படவேண்டியதற்காக ஜ்ஞானங்களுக்குள் உயர்ந்ததென்பதை வாக்யத்தை வேறாகப் பிரித்து இது விதிக்கப்படுகிறது என்றந்வயம் சொல்லுகிறார்—'அந்த ஜ்ஞானம்' என்றாரம்பித்து. 'ஜ்ஞாநாநாம்' என்று பொதுவாகச் சொல்லியிருப்பதினால் எல்லா ஜ்ஞானங்களைவிட மேலானது என்றேற்பட்ட போதிலும் பகவானைப் பற்றிய ஜ்ஞானத்தைவிட மேலானதென்பது ஸம்பவிக்காதாகையினால் அதை விலக்குவதற்காக 'ப்ரக்ருதி, ஜீவாத்மா, இவைகளைப் பற்றிய' என்று சொல்லப்பட்டது. இந்த ஜ்ஞானத்தைப் பற்றிய ஜ்ஞானம் மாத்திரம் உயர்ந்த ஸித்திக்குக் காரணமென்பது ஸம்பவிக்காதாகையினாலும், அதை அப்யாஸம் செய்வதாகிய அனுஷ்டானம் இவ்விடத்தில் கிடைக்காமையினாலும் 'எல்லா ரிஷிகளும் அதையே த்யானம் செய்துகொண்டவர்களாய்' என்று சொல்லப்பட்டது. 'இத:' என்பது கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஜ்ஞானம் ஸித்திக்குக் காரணம் என்னுமர்த்தத்தைச் சொல்லில் அந்தப் பதமில்லாமல் போனபோதிலும் இதைத் தெரிந்துகொண்டு ஸித்தியையடைகிறார்கள் என்று சொல்லியிருப்பதினாலேயே அந்த ஜ்ஞானம் காரணமென்றேற்படுகிறபடியினாலும் பகவானிடத்தில் பக்தி ஒன்றினாலேயே யடையக்கூடியதாகிய பகவானை யடைவதாகிய ஸித்தி இந்த ஜ்ஞானத்தினால் உண்டாகாதாகையினாலே 'பராம் (மேலானது)', என்று சொல்லியிருப்பதற்கு எதைவிட என்று சொல்லவேண்டியது அவஶ்யமாகையினாலும் இந்தப் பதம் அந்த அர்த்தத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்— 'ஸம்ஸார மண்டலத்தைவிட மேலாகிய' என்று. இந்த மேலான ஸித்தி எப்படிப்பட்டது என்னில் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார்— 'அதாவது' என்றாரம்பித்து. 1

பா — அ] மறுபடியும் அந்த ஜ்ஞானத்தை ப்ரயோஜனத்தினால் விசேஷித்துச் சொல்லுகிறார்—

𑌇𑌦𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌮𑌮 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 ।
𑌸𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑌿 𑌨𑍋𑌪𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇 𑌨 𑌵𑍍𑌯𑌥𑌨𑍍𑌤𑌿 𑌚 ॥　2

ப - ரை] 𑌇𑌦𑌂 - இந்த, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 - ஜ்ஞானத்தை, 𑌉𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 - அடைந்து, 𑌮𑌮 - எனக்கு, 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 - ஸமமாக விருக்கையை, 𑌆𑌗𑌤𑌾𑌃 அடைந்தவர்கள், 𑌸𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑌿 - ஸ்ருஷ்டி காலத்திலும், 𑌨𑍋𑌪𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 - பிறக்கிறதில்லை, 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇 - ப்ரளயகாலத்தில், 𑌨𑌵𑍍𑌯𑌥𑌨𑍍𑌤𑌿 - துக்கப்படுவேதுமில்லை.　2

பா] மேல் சொல்லப்போகிற இந்த ஜ்ஞானத்தை யடைந்து எனக்கு ஸமமாக விருக்கையை யடைந்தவர்கள் ஸ்ருஷ்டிக்கப்படும் தன்மையையடைவதில்லை. ஸம்ஹாரம் செய்யப்படும் தன்மையையும் அடைவதில்லை.　2

பா - அ] பிறகு ப்ரக்ருதியைச்சேர்ந்த குணங்கள் ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமாகும் விதத்தைச்சொல்லுவதற்காக எல்லா ப்ராணிகளின் கூட்டமும் ப்ரக்ருதி, ஜீவன், இவைகளின் சேர்க்கையினால் உண்டானது

தா] புனருக்தி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு மேல் ஶ்லோகத்திற்கு அவதாரிகை சொல்லுகிறார்—'மறுபடியும்' என்றாரம்பித்து. இஷ்டத்தை யடைவது முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டது அநிஷ்டம் நிவ்ருத்திப்பது இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படுகிறது. ஆகையினால் புனருக்தியில்லை என்று தாத்பர்யம். '𑌇𑌦𑌂' என்னும் பதம் கீழ்ச்சொல்லிய என்னும் அர்த்தத்தைச் சொல்லுவதாயிருந்தால் இந்த ஸந்தர்ப்பத்திற்குப் பொருந்தாதாகையினால் வேறுவிதமாக அதற்கு வ்யாக்யானஞ்செய்கிறார்—'மேல் சொல்லப்போகிற' என்று. '𑌆𑌗𑌤𑌾𑌃' என்பதற்கு வந்தவர்கள் என்னும் அர்த்தத்தைச் சொல்லுவதாகவிருந்தால் இந்த ஸந்தர்ப்பத்திற்குச் சேராதாகையினால் அடைவது என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'அடைந்தவர்களாய்' என்று. '𑌵𑍍𑌯𑌥𑌨𑍍𑌤𑌿' என்பது துக்கம் என்னும்அர்த்தத்தைச் சொல்லுவதாயிருந்தபோதிலும் உத்பத்தியோடு சேர்த்துச் சொல்லியிருப்பதினால் ஸம்ஹாரத்தைக் குறிக்கிறது என்பது உசிதம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஸம்ஹாரம் செய்யப்படும் தன்மையை' என்று.　2

என்று * 'யாவத் ஸம்ஜாயதே' என்கிற ச்லோகத்தினால் சொல்லப்பட்டது. அது பகவானாகிய தன்னாலேயே செய்யப்பட்டது என்று சொல்லுகிறார்—

மம யோநிர் மஹத் ப்ரஹ்ம தஸ்மிந் கர்ப்பம் ததாம்யஹம் |
ஸம்பவ: ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத || 3

ப - ரை] யோநி: - லோகங்களுக்குக் காரணமாகிய, மம — எனக்குச் சேஷமாகிய, மஹத் - பெரிய, ப்ரஹ்ம - ப்ரக்ருதி எதுவோ, தஸ்மிந் - அதில், கர்ப்பம் - கர்ப்பத்தை, அஹம் - நான், ததாமி - வைக்கிறேன். தத: - அதினாலே, பாரத - பரதவம்சத்தில் பிறந்த அர்ஜுந, ஸர்வபூதாநாம் - எல்லா ப்ராணிகளினுடைய, ஸம்பவ: - உத்பத்தி, பவதி — உண்டாகிறது. 3

பா] எல்லா லோகங்களுக்கும் காரணமாயும், எனக்குச் சேஷமாயுமிருக்

தா] குணங்கள் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகும் விதத்தையாவது அதை நிவ்ருத்திக்கிற விதத்தையாவது சொல்லாமையினால் 'மமயோநிர் மஹத் ப்ரஹ்ம' என்கிற ச்லோகம் இவ்விடத்தில் பொருந்தவில்லை என்கிற ஆக்ஷேபத்தைப் பரிகரிப்பதற்காக அந்த ச்லோகத்திற்கு அவதாரிகை சொல்லுகிறார்—'பிறகு ப்ரக்ருதியைச் சேர்ந்த' என்றாரம்பித்து. மேலே சொல்லப்போகிற குணங்கள் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகவிருப்பதும் தன்னாலே செய்யப்பட்டதென்று தெரிவிப்பதற்காக எல்லா ப்ராணிகளுடைய கூட்டமும் ப்ராக்ருதி, ஜீவன், இவர்களின் சேர்க்கையினாலுண்டானதாக விருக்கையும் என்னாலேயே செய்யப்பட்டதென்று இந்தச்லோகத்தினால் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். 'எல்லா லோகங்களுக்கும் காரணமாயும்' என்பதற்கு எனக்குக் காரணமாகிய என்று அந்வயம் சொல்லில் 1 'அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா | மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய||' என்றிவை முதலியவைகளோடு விரோதம் வரும். தனக்குக் காரணமாகிய வஸ்துவினிடத்தில் தான் கர்ப்பத்தை வைக்கிறேன் என்பதும் பொருந்தாது. 2 'தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநி: அஹம் பீஜப்ரத: பிதா' என்று மேல் ச்லோகத்தில் சொல்லியிருப்பதற்கும்

---

* பகவத்கீதை-13-26.

1 பகவத்கீதை-7-6.

2 பகவத்கீதை-14-4.

கிற பெரிதாகிய ப்ரக்ருதி எதுவோ அதில் நான் கர்ப்பத்தை வைக்கிறேன். † 'பூமிராபோऽநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச | அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ||' என்று சொல்லப்பட்ட அசேதனமாகிய ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம் முதலிய விகாரங்களுக்குக் காரணமாகையினால் 'மஹத்ப்ரஹ்ம' என்று சொல்லப்படுகிறது. ஶ்ருதியிலும் சில இடங்களில் 'எவன் எல்லாவற்றையுந் தெரிந்தவனோ, எவன் எல்லாவற்றையும் விஶேஷமாகப் பார்க்கிறனோ, எவனுடைய

விரோதம் வரும். ஆகையினால் 'தஸ்மிந் கர்பம் ததாம்யஹம்' என்பது பொருந்துவதற்காக லோகங்களுக்குப் பிதாவாகவிருக்கிற தான் லோகங்களாகிற கர்ப்பத்தை வைப்பதற்குத்தகுந்த நேரில்விகாரத்தையடையக் கூடிய வஸ்து இவ்விடத்தில் 'யோநி' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். 'மமயோநி:' என்கிற இது 'ஸம்பவ:' என்றாரம்பித்துச் சொல்லப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறதாகையினால், அநுவாதம் என்று தெரிவிப்பதற்காக—'ப்ரக்ருதி எதுவோ அதில்' என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் லோகங்களுக்குக் காரணமாக இருக்கிற பெரிதாகிய ப்ரம்மமென்னப்படுகிறது பரமாத்மாதான் என்று 'வாஸுதேவனே லோகத்திற்குக் காரணமாகிய வஸ்து' என்றும், 1 'ப்ராணிகளுக்குக் காரணமாகிய எந்த வஸ்துவை' என்றும், 2 'கர்த்தாவாயும், ஈஶ்வரனாயும், ப்ரம்மமாயும், லோகங்களுக்குக்காரணமாயுமிருக்கிற புருஷனை' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்ய முதலியவைகளில் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பரமாத்மா என்னுடைய என்று தனியாக எப்படிச் சொல்லப்படுகிறான். 'மம' என்னும் பதம் ப்ரக்ருதியைச்சொல்லுகிற தென்கிறதுமில்லை. 'மஹத்ப்ரஹ்ம' என்று 'மஹத்' என்கிற விஶேஷணம் அப்படிச்சொல்லுவதற்கு விரோதியாயிருக்கிறது. ஆகையினால் பரமாத்மாவின் ஸ்வரூபமே 3 'ப்ரம்மமே ஆதாரமாகிய தன்பின்பாகம்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்திலே போலத் தனியாக உபசாரமாகச்சொல்லப்படுகிறதுஎன்று அந்வயித்துக்கொள்ளவேண்டியது என்கிறஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ்சொல்லுகிறார்—'ஸம்பவ:' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது—இரண்டு ஷட்கங்களிலும் சொல்லப்பட்ட அர்த்தத்தை விசதப்படுத்துவதற்காக வல்லவோ மூன்றாவது ஷட்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகையி

---

† பகவத்கீதை-7-4.
1 முண்டகோபநிஷத்-1-1-6.
2 முண்டகோபநிஷத்-3-1-3.
3 தைத்திரீயம், ஆனந்தவல்லி.

தபஸ்ஸோ ஜ்ஞானரூபமோ, அவனிடத்திலிருந்து பேர், ரூபம், இவைகளை யுடையதாயும் ஜீவர்களால் அனுபவிக்கக்கூடியதாயுமிருக்கிற இந்த ப்ரக்ருதி உண்டாகிறது' என்றர்த்தமுள்ள வாக்யத்தில் ப்ரக்ருதியும் ப்ரம்மம் என்று சொல்லப்படுகிறது. ¶ 'ஐதஸ்ஹ ந்₂ராம் ப்ரக்ருதிம் விஸிஜெ ஸாரம்।

ஞல் 'ஸ்ஷிரிராவஃ' என்றிவைமுதலியவிடங்களில் தனக்குச்சேஷமாக முன் சொல்லப்பட்ட ப்ரக்ருதியே தன்னுடைய என்னும் அர்த்தத்தைச்சொல்லுகிற வேற்றுமையிருக்கிறபடியினுலும், ப்ரக்ருதி என்னும் பதத்தின் அர்த்தத்தைச்சொல்லுகிற 'யோநி' என்னும் பதம்முதலியவைகளாலும், 'மஹத்' என்னும் பதத்தினுல் சொல்லப்பட்ட சேதனமாகிய ப்ரக்ருதியை வைப்பதற்கு இடமாகையினுலும், ஸுகதுக்கங்களை யனுபவிக்க இடமாக விருக்கிறதென்றேற்படுகிறபடியினுலும், இவ்விடத்திலும் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. 'ஏதத்யோநீநி' என்று 'யோநி' என்னும் பதமும் முன்பே அந்த ப்ரக்ருதியினிடத்தில் ப்ரயோகிக்கப் பட்டது. அதுவும் மஹாபூதங்களுக்கும். அதற்குக்காரணமாகிய அஹங்காரத்திற்கும், அதற்கும் காரணமாகிய மஹத் என்னும் வஸ்துவிற்கும் காரணமாகையினுல் அந்தந்தக் கார்யங்களைவிடப் பெரிதாகையினுல் 'ஜஹுஸ்ப்ரஹ்ம' என்பதும் உசிதந்தான். 'ப்ரஹ்ம' என்னும் பதமும் காரணமாகஇருக்கை, பெரிதாக இருக்கை,முதலியவைகளால் பரமாத்மாவிற்குச் சமானமாகையினுல் பரமாத்மாவல்லாத ப்ரக்ருதியினிடத்திலும் ப்ரயோகித்திருப்பது உசிதந்தான். அப்படியே ஸ்ருதியில் ப்ரயோகமிருக்கிறது. ப்ரக்ருதி லோகங்களுக்குக் காரணம் என்று சொல்லியிருப்பதும் பரமாத்மா லோகங்களுக்குக் காரணமென்பதற்கு விருத்தமல்ல. மேலும் அநுகூலமே. ஏனெனில் விகாரங்களொன்றுமில்லாத அந்தப் பரமாத்மா ப்ரக்ருதியோடு சேர்ந்திருந்து கொண்டே லோகங்களுக்குக் காரணமாகையினுல். ஆகையினுலல்லவோ முன்பும் 1'ஏதத்யோநீநி பூதாநி ஸர்வாணீத்யுபதாரய' என்று சொல்லி உடனே 2 'அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா' என்று சொல்லப்பட்டது என்பது. ப்ரஸித்தமாகிய கர்ப்பம் என்பது இவ்விடத்தில் பொருந்தாதாகையினுல் கர்ப்பம் என்னும் பதத்தினுல் சொல்லத் தகுந்ததா யிருக்கை ஜீவாத்மாவிற்கு எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறுர்—'ஐதஸ்ஹ ந்₂ராம்'

¶ பகவத்கீதை-7-5.

1 பகவத்கீதை-7-6.

2 பகவத்கீதை-13-26,

ஜீவஸமூதாம்' என்று சேதனங்களின் கும்பலாகிய எந்த மேலான ப்ரக்ருதி சொல்லப்பட்டதோ அது இவ்விடத்தில் எல்லா ப்ராணிகளுக்கும் காரணமாகையினால் 'மஹத்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட அசேதனமாயும் லோகங்களுக்குக் காரணமாயுமிருக்கிற பெரிய ப்ரக்ருதியில் சேதனங்களின் கும்பலாகிய கர்ப்பத்தை வைக்

என்றாரம்பித்து. 'ஶ்ரீயோநி:' என்பதினால் ஞாபகப்படுத்தப்பட்ட தனக்குச் சேஷமாகிய இரண்டுவித ப்ரக்ருதிகளைச் சொல்லுகிற முன்பு சொல்லிய வார்த்தையை யோசித்தும், மேல் சொல்லப்போகிற க்ரந்தத்தோடு பொருத்தமுண்டாவதற்காகவும் 'மஹத்' என்னும் பதம் இவ்விடத்தில் மேலான ப்ரக்ருதி என்று சொல்லப்பட்ட ஜீவாத்மாக்களின் கும்பலைச்சொல்லுகிறது என்று தாத்பர்யம். 'மஹத்' என்று ஏகவசனமாக (ஒருமையாக)ச்சொல்லி யிருப்பது, கும்பல் ஒன்றென்பதைச்சொல்லுகிறது என்று தெரிவிப்பதற்காக 'கும்பலாகிய' என்னும் பதம். சேர்ந்த அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அப்படிப்பட்ட' என்றாரம்பித்து. முன்பு 'யயேதம் தார்யதே ஜகத்' என்று சேதனமாகிய ப்ரக்ருதி ஆதாரமென்பதும் அசேதனம் இந்த ஜீவாத்மாவினால் தரிக்கப்படுகிறது என்பதும் சொல்லப்பட்டது இவ்விடத்திலோ வெனில் 'தஸ்மிந் கர்ப்பம் ததாம்யஹம்' என்று அதற்கு விரோதமாக எப்படிச்சொல்லப்படுகிறது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ்சொல்லுகிறார்—'அசேதனமாயும்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் அதற்கு வசப்பட்டிருக்கையில் முடிவுபெறுகிற ஆதாரமாக விருக்கையும் அத்தால் தரிக்கப்படுகிறதாயிருக்கையும் சொல்லப்படவில்லை. பின்னை எப்படியெனில் ஒன்றொன்று சொல்லுவதற்கு மாத்திரம் தகுந்த ஸம்பந்தம் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஸம்பந்தத்தை உண்டாக்குவதற்கு ப்ரயோஜனம் கர்மங்களுக்கு வசப்பட்ட புருஷர்களுக்கு அவரவர் கர்மங்களுக்குத் தகுந்த ஸுகதுக்கங்களைக் கொடுப்பது, என்று சொல்லப்பட்டதாகிறது. இவ்விடத்தில் 'தத:' என்பது அப்புறம் என்பதைச்சொல்லுகிறதல்ல, ப்ரயோஜனமற்றதாகையினால் அப்புறம் உண்டாகிறதென்பதினால் காரணமாக இருக்கை ஏற்பட்டபோதிலும் அதை நேரில் சொல்லுவது யுக்தமாகையினால். ஆகையினால் [1] 'க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத்' என்று முன் அத்யாயத்தில் சொல்லப்பட்ட காரணமே, இவ்விடத்தில் ஸாங்க்யர்களினுடைய மதத்தை நிராகரிப்பதற்காகத் தனக்கு வசப்பட்டது என்று விசேஷித்துச் சொல்லப்படுகிறது

---

1 பகவத்கீதை-13-26

கிறேன், அதாவது ஸுகதுக்கங்களை யனுபவிப்பதற்கிடமாகிய அசேதன மாகிய ப்ரக்ருதியுடன் ஸுகதுக்கங்களையனுபவிக்கிறவர்களின் கூட்டமா கிய சேதனமாகிய ப்ரக்ருதிகளின் சேர்க்கையினுல் ப்ரம்மா முதல் புழு வரையிலுள்ள எல்லா ப்ராணிகளுடையவும் உற்பத்தி உண்டாகிறது. 3

பா - அ] கார்ய தசையையுடைய சேதனமும் அசேதனமுமாகிய ப்ரக்ருதி களின் சேர்க்கையும் என்னுலேயே செய்யப்பட்டது என்று சொல்லு கிறுர்—

ஸர்வயோநிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்பவந்தி யா: |
தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநிரஹம் பீஜப்ரத: பிதா || 4

என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'அப்படிப்பட்ட என்னு டைய ஸங்கல்பத்தினுல் செய்யப்பட்ட' என்றுரம்பித்து. ஆகையினு லேயே அது கார்யத்தைச் செய்கிறது என்பதும் உசிதம் என்று தாத் பர்யம். இவ்விடத்தில் 'ஸர்வயோநிஷு' என்பது மஹான் முதலிய தத்வங்களைச் சொல்லுகிறதல்ல, 'மூர்த்தி' என்னும் பதம் அவைகளி லேயே ப்ரயோகிக்கப்படுகிறது என்பதில்லாமையினுல். பஞ்ச மஹா பூதங்களைச் சொல்லுகிறதென்பதுமில்லை, ஜீவாத்மாக்களுக்கு ஸம்ஸார பந்தம் உண்டாவதற்குக்காரணமாகும் விதத்தைச்சொல்லுகிறதாகையி னுல். அதுவும் மேலேசொல்லப்படுகிற ஸ்ருஷ்டிக்கப்பட்டதாக இருக்கை எல்லாவற்றிற்கும் பொதுவாகையினுலும், 1 'ப்ரஹ்ம ஸ்தம்ப ஸமேதைஸ்து ஜங்கமஸ்தாவரைஸ்ததா | ப்ராணிந: கர்மஜநிதஸம்ஸாரவசவர்த்திந:||', 2 'ப்ரஹ்மாத்யா: ஸகலா தேவா மநுஷ்யா: பசவஸ்ததா | விஷ்ணுமாயா மஹாவர்த்தமோஹாந்தமஸாவ்ருதா:||', 3 'ஹிரண்யகர்ப்பாதிஷு ச' என் றிவைமுதலிய ப்ரமாணங்களினுலும் ப்ரம்மா, ருத்ரன், முதலியவர்களு க்கும் ஸமானம் என்கிற அபிப்ராயத்தினுல் 'ஸர்வ' என்னும் பதம் என்று காட்டுவதற்காக—'ப்ரம்மா முதல் புழுவரையிலுள்ள' என்று சொல்லப்பட்டது. 4 'சேதநாசேதநவ்யஷ்டிஸமஷ்டி ப்ராக்ருதஸ்ருஷ்டித: ஸ்ருஷ்டய:' என்றிவை முதலிய விடங்களில் ப்ரம்மாவின் ஸங்கல்பமில்லா மலே ஸ்தாவரம் முதலியவைகள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன என்று சொல் லியிருப்பதினுல் ப்ரம்மாவைப்போல அவனுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட புழு வரையிலுள்ள எல்லா ப்ராணிகளும் பரமாத்மாவினுல் ஸ்ருஷ்டிக்கப் பட்டதுகள் என்பது ஸ்பஷ்டமாக யிருக்கிறது. 3

---

1 விஷ்ணுதர்மம்-164-23-
2 விஷ்ணுபுராணம்-5-30-17.
3 விஷ்ணுபுராணம்-6-,-56.
4 விஷ்ணுபுராணம்-6-7-56

ப - ரை] கௌந்தேய - அர்ஜுந, ஸர்வயோநிஷு - எல்லா ஜாதிகளி லும், யா: - எந்த, மூர்த்தய: - வஸ்துக்கள், ஸம்பவந்தி - உண்டாகின் றனவோ, தாஸாம் - அவைகளுக்கு. மஹத் — பெரிதாகிய, ப்ரஹ்ம - ப்ர க்ருதி, யோநி: - காரணம், அஹம் — நான், பீஜப்ரத: - வீரையைச் சேர்க்கிற, பிதா - தகப்பன். 4

பா] தேவன், கந்தர்வன், யக்ஷன், ராக்ஷஸன், மனுஷ்யன், பசு, ம்ரு கம், பக்ஷி, பாம்பு, முதலிய ஜாதிகளில் எல்லாவற்றிலும் எங்கேந்த வஸ் துக்கள் உண்டாகின்றனவோ அவைகளுக்குப் பெரிதாகிய ப்ரக்ருதி கார ணம். அதாவது என்னால் சேர்க்கப்பட்ட சேதனங்களின் கூட்டத்தை

தா] இப்படி கீழ் ஶ்லோகத்திலை ப்ராக்ருதமாயும், நைமித்திகமாயுமிரு க்கிற ஸ்ருஷ்டிகள் தனக்கு வசப்பட்டதென்று சொல்லப்பட்டது. பிறகு நித்யமான ஸ்ருஷ்டியும் தன்னாலேயே செய்யப்பட்டதென்று சொல் லப்படுகிறது—இந்த ஶ்லோகத்திலை, என்று இந்த இரண்டு ஶ்லோ கங்களுக்கும் புனருக்தியென்னும் தோஷத்திற்குப் பரிகாரத்தை அபிப் ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'கார்யதசையையுடைய' என்றாரம்பித்து. அதாவது நித்யமான ஸ்ருஷ்டியையுடைய என்றர்த் தம். ப்ரம்மாவினால் உண்டாக்கப்படுகிற நான்குவிதமான ஸ்ருஷ்டிக் குப் பிறகும் ப்ரளயம் வரையில் அல்பமாகிய ஜந்துக்களிலும் எங் கெந்த ஸந்ததி உண்டாகிறதோ அதிலும் ஈஶ்வரன் தான் உதாஸீனனா யிருந்துகொண்டு மற்றவர்களைக்கொண்டு செய்விக்கிறதில்லை என்றபிப் ராயத்திலை 'ஸர்வயோநிஷு' என்னும் பதம் என்கிற அபிப்ராயத் திலை சொல்லுகிறார்—'தேவன் கந்தர்வன்' என்றாரம்பித்து. ப்ரமாணத் திலேற்பட்ட தனியான காரணமான வஸ்துக்கள் வேறுபட்டிருப்பதா கிற விசித்ரமாக விருக்கையும், ஸ்ருஷ்டிப்பவனுகிய தன்னுடைய விசித் ரமான சக்தியிருப்பதைத் தெரிவிப்பதற்காக 'யா:' என்று ப்ரஸித்த மாக அநுவதிக்கப்படுகிறது என்கிற அபிப்ராயத்திலை சொல்லுகி றார்—'எங்கேந்த வஸ்துக்கள்' என்று. 'ஸம்பவந்தி' என்கிறது ஸம்ப விக்கக்கூடியவைகளைச் சொல்லுகிறது என்பதை விலக்குவதற்காக வும், உபாதான காரணமும் கார்யமு மென்பதைத் தெரிவிப்பதற் காகவும் சொல்லுகிறார்—'உண்டாகின்றனவோ' என்று. நேரில் உபா தான காரண மில்லாமையினால் 'காரணம்' என்று சொல்லப்பட்டது. சேதனத்தின் சேர்க்கை இல்லாமற்போனாலும், பகவான் அதிஷ்டானா னஞ் செய்யாமற்போனாலும் கேவலம் அசேதனம் மாத்திரம் காரண மென்பது பொருந்தாது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'அதாவது என்னால் சேர்க்கப்பட்ட' என்றாரம்பித்து

யுடைய மஹான் முதல் பஞ்சபூதங்கள் வரையிலுள்ள அவஸ்த்தையை யுடைய ப்ரக்ருதி காரணம் என்றர்த்தம். நான் அந்தந்த வஸ்துக்களில் அவரவர்கள் கர்மங்களுக்குத் தக்கபடி ஆத்மாக்களின் கூட்டத்தைச் சேர்க்கிறவன் என்றர்த்தம். 4

பா-அ] இப்படி ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் அதற்கு முன் பழைய கர்மத்தின் வசத்தினாலுண்டான அசேதனத்தின் ஸம்பந்தத்தினால் தேவன் முதலிய ஜாதிகளில் பிறந்தவர்களுக்கு மறுபடி தேவன் முதலியவைகளாகப் பிறப்புண்டாவதற்குக் காரணத்தைச்சொல்லுகிறார்—

𑌸𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮 𑌇𑌤𑌿 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿 𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 ।
𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌦𑍇𑌹𑍇 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

ப - ரை] 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋-பாஹுபலமுள்ள அர்ஜுந, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 - ப்ரக்ருதியிலுண்டாகிய, 𑌸𑌤𑍍𑌵𑌂 - ஸத்வகுணம், 𑌰𑌜𑌃 - ரஜோகுணம், 𑌤𑌮𑌃 - தமோகுணம், 𑌇𑌤𑌿 - என்கிற, 𑌗𑍁𑌣𑌾𑌃 - குணங்கள், 𑌦𑍇𑌹𑍇 - ஶரீரத்திலிருக்கிற, 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 - அழிவில்லாதவனாகிய, 𑌦𑍇𑌹𑌿𑌨𑌂 - ஜீவாத்மாவை, 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 - கட்டுப்படுத்துகின்றன. 5

'𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌷𑍁' என்று சொல்லப்பட்டதாயும் அநேக வஸ்துக்களைக்காரணமாகவுடையதென்றும் தோன்றுகிற கடைசி வ்யஷ்டி ஸ்ருஷ்டியில் ஒரு மூல ப்ரக்ருதி காரணமென்பதெப்படிப்பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'மஹான்முதல் பஞ்சபூதங்கள் வரையிலுள்ள' *என்று இவ்விடத்தில் '𑌬𑍀𑌜' என்னும் பதத்திற்கு அர்த்தம் என்ன? தன்னைப்பிதாவென்று சொல்லிக்கொள்ளுவதற்குக்காரணமாகிய அவைகளை வைப்பதாவதென்ன? '𑌤𑌾𑌸𑌾𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌰𑌹𑌂𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌦𑌃𑌪𑌿𑌤𑌾' என்பதினால் ஸேஶ்வரஸாங்க்யன் சொல்லுவதைப்போல ப்ரக்ருதியே உபாதானகாரணமென்றும், ஈஶ்வரன் கேவலம் நிமித்தகாரணமென்றும் தோன்றுகிறது. அது ஶ்ருதிகளுக்கு விருத்தம். மேலும் ஒரே ஜாதியில் பொதுவாகிய ஒருதகப்பனிடத்தில் பிறக்கிற ப்ராணிகள் விசித்திரமாக இருப்பது எந்தக்காரணத்தினாலுண்டானது என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்*—'அந்தந்த வஸ்துக்களில்' *என்று முன் ஶ்லோகத்தில் '𑌮𑌮 𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌮𑌹𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' என்று சொல்லப்பட்ட ப்ரக்ருதியே இந்தஶ்லோகத்திலும் '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌃' என்று சொல்லப்படுகிறது. முன் ஶ்லோகத்தில் '𑌮𑌹𑌤𑍍' என்னும் பதத்தின் ஸ்தானத்தில் சொல்லப்பட்டிருக்கிற '𑌬𑍀𑌜' என்னும் பதமும் முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டதாயும், ப்ராணிகளை ஸ்ருஷ்டிப்பதற்குத் தகுந்ததாயுமிருக்கிற சேதனங்களின் கூட்டத்தைச் சொல்லுகிறதென்று தாத்பர்யம்.* 4

பா] ப்ரக்ருதியின் ஸ்வரூபத்தோடு சேர்ந்த ஸ்வபாவ விசேஷங்களாயும், ப்ரகாசம் முதலிய கார்யங்களைக் கொண்டே நிரூபிக்கக்கூடியவைகளா

தா] நைமித்திகமான ஸ்ருஷ்டி ஆரம்பிக்கும்பொழுது பழைய கர்மங்களுக்குத்தக்கபடி பகவானுடைய ஸங்கல்பத்தினால் உண்டாக்கப்பட்ட அசேதனத்தின் ஸம்பந்தத்தினால் ஜன்மம் உண்டாவது உசிதம். பழைய கர்மமும் அந்த ஜன்மத்தினாலேயே பலத்தைக்கொடுத்து விட்டது. அந்தக் கர்மத்தின்முடிவில் அதினாலுண்டான அந்தச் சரீரமும் நாசத்தையடைந்துவிடும். ஆத்மாவோ ஸ்வபாவத்தில் பரிசுத்தன். ஆகையினால் இந்த ஜீவன் நித்யமாகிய ஸ்ருஷ்டியில் எந்தக் காரணத்தினால் உட்படுத்தப்படுகிறான் என்றாக்ஷேபம் வரில் அதற்கு ஸமாதானமாக குணங்கள் கட்டுகிறவிதத்தைச் சொல்லுகிற இந்த ஸந்தர்ப்பத்திற் கவதாரிகை சொல்லுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. இப்படி என்பதற்கு ஸமஷ்டி ஸ்ருஷ்டியையும், வ்யஷ்டி ஸ்ருஷ்டியையும் சொல்லுகிற இரண்டு ஶ்லோகங்களில் சொல்லியபடி என்றர்த்தம். ஸ்வரூபநிரூபக தர்மங்கள் வஸ்துவை ஒருநாளும் விட்டுப்பிரிவதில்லை. ஆகையினால் இவ்விடத்தில் 'ப்ரக்ருதியி லுண்டாகிய' என்று சொல்லியிருப்பது கார்யதசையில் வ்யத்யாஸத்தையுடையவைகளாக ப்ரகாசிக்கிற மாத்திரத்தைக்கொண்டு என்கிற அபிப்ராயத்தினால்சொல்லுகிறார்—'ப்ரக்ருதியின் ஸ்வரூபத்தோடுசேர்ந்த' என்று. வேறொருகாரணத்தினால் உண்டானவைகளல்ல என்றர்த்தம். கார்யதசையையுடைய ப்ராக்ருதியிலிருக்கிற சப்தம் முதலிய குணங்களைக் காட்டிலும் ஸ்வரூப நிரூபக தர்மமாகவிருக்கை எப்பொழுதும் சேர்ந்துகொண்டிருக்கை, முதலிய வ்யத்யாஸத்தைத் தெரிவிப்பதற்காக 'இதி' என்னும் பதம். ஸத்வம் முதலியவைகளே ப்ரக்ருதியென்று சொல்லப்படுகிற வஸ்து, என்று சொல்லுகிற ஸாங்க்யர்களை நிராகரிக்கிறார்—'ஸ்வபாவ விசேஷங்களாயும்' என்று. அஸாதாரணமான தர்மங்கள் என்றர்த்தம். ஜீவாத்மாவிற்கே அஸாதாரணமாகவிருந்தபோதிலும் ஸுகதுக்கங்கள்காரணங்களாலுண்டானவைகள். ஸ்வபாவத்தி லுண்டானவைகளா யிருந்தபோதிலும் த்ரவ்யமாயிருக்கை முதலியவைகள் எல்லா வஸ்துக்களுக்கும் பொது. இவை இரண்டையும் விலக்குவதற்காக—'ஸ்வரூபத்தோடு சேர்ந்த ஸ்வபாவவிசேஷங்களாயும்' என்கிற இரண்டு பதங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தால் 'குணா:' என்றது பரிபாஷையாகச் சொல்லப்பட்ட பதம். ரூபம் முதலியவைகளைப்போல ஒரு த்ரவ்யத்தையாதாரமாகவுடையவைகள் என்றர்த்தமல்ல, என்பது முதலிய சங்கராசார்யரால் சொல்லப்பட்ட அர்த்தம் நிராகரிக்கப்பட்டது. அவர்மதத்தில் 'குண' என்னும் பத

யும், ப்ரக்ருதியாக இருக்கும் தசையில் ப்ரகாசமில்லாமல் அதின் விகாரங்களாகிய மஹான் முதலிய வஸ்துக்களில் ப்ரகாசத்தை யடைந்தவைகளாயுமிருக்கிற, ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு, என்கிற மூன்று குணங்களும் மஹான் முதல் பஞ்சபூதங்கள் வரையிலுள்ள வஸ்துக்களால்

த்திற்கு வேறொரு குணங்களிடத்தில் ப்ரஸித்திஉண்டென்பதே விருத்தம் என்பது தாத்பர்யம். ஶப்தம் முதலியவைகளைப்போல ஸத்வம் முதலிய பேருடைய குணங்கள் ப்ரத்யக்ஷத்தினால் காணப்படவில்லை. எப்பொழுது மிந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயத்தில் அநுமானமும் ப்ரயோஜனமற்றது என்று பாஷ்யத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ப்ரமாணங்களினாலும் அறியப்படாத ப்ரக்ருதியின் குணங்களைப்பற்றி ஶாஸ்த்ரம் உபதேசஞ் செய்வதிலும் காக்கையின் பல் முதலியவைகளைச் சொல்லுவதைப்போல ப்ரயோஜனமொன்றும் தெரியவில்லை. ஆகையினால் தார்க்கிகர் முதலியவர்களைப்போல வேறு வஸ்துவைச் சொல்லுகிற தென்பதிவ்விடத்தில் உசிதம் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'ப்ரகாசம் முதலிய' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது—ப்ரகாசம் ப்ரவ்ருத்தி, அஜ்ஞானங்களாகிய கார்யங்கள் ப்ரத்யக்ஷமாகத் தெரிகின்றன. அதற்குக் காரண விஶேஷங்களும் கார்யங்களாகிய அவைகளைக்கொண்டே மொத்தமாக ஊஹிக்கப்படுகின்றன. ஏனெனில் விஶேஷமாகிய காரணமில்லாமல் ஒருகார்யமுமுண்டாகாதாகையினால் அந்தக் காரணவிஶேஷமும் ஸத்வம் முதலியவைகள் என்பது ஶாஸ்த்ரத்திலேற்பட்டது. இது விஷயத்தில் ஶாஸ்த்ரம் ப்ரயோஜனமற்றதென்பதுமில்லை. இந்த்ரியங்களுக்குத் தெரியாத விஷங்களின் சக்தி, மருந்துகளின் சக்தி, இவைகளை யுபதேசஞ் செய்திருப்பதைப்போலவே விடுவதற்காகவும் அங்கீகரிப்பதற்காகவும் ஏற்படுகிறபடியினால்—என்பது. கார்யங்களைக்கொண்டே நிரூபிக்கவேண்டியவைகளாக இருந்தால் ப்ரளயதசையில் ஸுகம் துக்கம் முதலிய கார்யங்களில்லாமையினால் ஸத்வம் முதலிய குணங்களில்லையென்றேற்படுமே. ஆகையினால் ப்ரக்ருதியின் ஸ்வரூபத்தோடு சேர்ந்ததென்று சொல்லியிருப்பதெப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'ப்ரக்ருதியாக இருக்கும் தசையில் ப்ரகாசமில்லாமல்' என்று. கார்யமுண்டாவதற்குக் காரணமாகிய ப்ரகாசம் அப்பொழுதில்லை என்று தாத்பர்யம். 'அதின் விகாரங்களாகிய' என்பது முதலிய வாக்யத்திற்கு மாறுதல்களினால் புஷ்பம் பழம் முதலியவைகளில் வாஸனை முதலியவைகள் ப்ரகாசிப்பதைப்போல என்று தாத்பர்யம். ப்ரக்ருதியினிடத்திலும் அதின் விகாரங்களிடத்திலு மிருக்கிற

Accn. No.
ACADEMY OF SANSKRIT
MELKOTE
KARNATAKA

உண்டாக்கப்பட்ட, தேவன் மனுஷ்யன் முதலிய தேஹங்களோடு சேர்ந்தவனையும், ஸ்வபாவத்தில் அந்தக் குணங்களோடு சேருவதற்குத்தகாதவனையும், இந்தத் தேஹத்திலிருந்து கொண்டேயிருக்கிற ஜீவாத்மாவைக் கட்டுப்படுத்துகின்றன அதாவது தேஹத்திலிருப்பதாகிய காரணத்தினால் கட்டுப்படுத்துகின்றன என்றர்த்தம். 5

பா - அ] ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு, என்கிற குணங்களின் ஆகாரத்தையும் அவைகள் கட்டுப்படுத்தும் விதத்தையும் சொல்லுகிறார்—

குணங்கள் ஸ்வபாவத்தில் விகாரங்களில்லாதவனாகையினால் குணங்களோடு சேருவதற்குத் தகாதவனாகிய ஜீவாத்மாவை எப்படிக் கட்டுப்படுத்துகின்றன? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'தேஹிநம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்— 'மஹான் முதல்' என்றாரம்பித்து 'அவ்யய' என்னும் பதம் இவ்விடத்தில் குணங்களின் சேர்க்கையினாலுண்டாக்கப்பட்ட ஜ்ஞானத்தின் சுருக்கமாகிய மாறுதலில்லையென்று சொல்லுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஸ்வபாவத்தில் அந்தக் குணங்களோடு' என்றாரம்பித்து. அப்படியிருந்தபோதிலும் 1 'ஶரீரஸ்தோऽபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே' என்று சொல்லப்பட்ட ஜீவாத்மாவிற்கு ஸம்ஸார பந்தமாகிய லேபம் எப்படி உண்டாகிறது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக மோக்ஷமுண்டாகிற வரையில் இடைவிடாமலிருக்கிற தேஹத்தோடு சேர்ந்திருப்பதே காரணம் என்பது, 'தேஹே' என்பதினால் அபிப்ராயத்தில்கொள்ளப்பட்டது, என்றுசொல்லுகிறார்— 'அதாவது தேஹத்திலிருப்பதாகிய' என்றாரம்பித்து. இத்தால் ஜீவாத்மாவைக்கட்டுப்படுத்துவதைப்போல இருக்கின்றன. அதாவது அந்த ஜீவாத்மாவை ஆதாரமாக வைத்துக்கொண்டு தங்கள் ஸ்வரூபத்தையடைகின்றன, என்று சங்கராசாரியர் அர்த்தம் சொல்லியது நிராகரிக்கப்பட்டது. இந்தக் குணங்களினாலுண்டான பந்தம் கைகளின் பலத்தினால் நிவ்ருத்திசெய்ய முடியா'தென்கிற அபிப்ராயத்தினால் 'மஹாபாஹோ' என்று சொல்லியிருக்கிறது. 2 'தீர்கௌ புத்திமதோ பாஹூ யாப்யாம் ஹிம்ஸதி ஹிம்ஸித:' என்று தாத்பர்யம். எப்படி உன்னுடைய கைகளின் பலத்தினால் சத்ருக்களுக்குக் கட்டுண்டாகிறதோ அதைப்போல என்று தாத்பர்யமாகவுமாம். 5

1 பகவத்கீதை - 13-31.

2 புத்திமத:-புத்தி யுடையவனுக்கு, பாஹூ - கைகள், தீர்கௌ - அதிக நீளமுள்ளவைகள், ஹிம்ஸித:- பீடிக்கப்பட்டவனைக்கொண்டு, யாப்யாம் - எந்தக் கைகளினால், ஹிம்ஸதி - பீடிக்கிறானே.

𑌤𑌤𑍍𑌰 𑌸𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌮𑌨𑌾𑌮𑌯𑌂 |
𑌸𑍁𑌖𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌚𑌾𑌨𑌘 ‖ 6

ப—ரை] 𑌅𑌨𑌘 - தோஷமில்லாத அர்ஜுந, 𑌤𑌤𑍍𑌰 - அவைகளுக்குள், 𑌸𑌤𑍍𑌵𑌂 - ஸத்வகுணமானது, 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 - நிர்மலமானதாயினால், 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌂 - ப்ரகாசத்தை யுண்டாக்குகிறது, 𑌅𑌨𑌾𑌮𑌯𑌂 - ரோகமில்லாமைக்குக் காரணம், 𑌸𑍁𑌖𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 - ஸுகத்தில் ஆசையினாலும், 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌚 - ஜ்ஞானத்திலாசையினாலும், 𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 - கட்டுப்படுத்துகிறது. 6

பா] அந்த ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸாகிய மூன்று குணங்களுக்குள் ஸத்வகுணத்தின் ஸ்வரூபம் இப்படிப்பட்டது—நிர்மலமானதினால் ப்ரகாசத்திற்குக் காரணமானது ப்ரகாசம்,ஸுகம்,இவைகளை,மறைக்கக்கூடிய ஸ்வபாவங்களில்லாமையே நிர்மலமாயிருக்கை. ப்ரகாசம், ஸுகம், இவைகளை உண்டுபண்ணுவதையே ஸ்வபாவமாகவுடையதாகையினால்

தா] ‘𑌤𑌤𑍍𑌰’ என்பது முதல் மூன்று ஶ்லோகங்களுக்கு இந்த ஸந்தர்ப்பத்தில் ஸங்கதி சொல்லுகிறார்—‘ஸத்வம்’ என்றாரம்பித்து. ‘ஆகாரத்தையும்’ என்பதற்கு அவைகளை நிரூபிக்கக்கூடிய ஸ்வபாவத்தையும் என்றர்த்தம் ‘𑌤𑌤𑍍𑌰’ என்பது ஒன்றைத் தனித்துச் சொல்லுவதற்காக அவைகளின் கும்பலைக் குறித்திருக்கிறது என்று சொல்லுகிறார்—‘அந்த ஸத்வம்’ என்றாரம்பித்து. நிர்மலங்களாகிய ஸ்படிகம் முதலியவைகள் மற்ற வஸ்துக்களை ப்ரகாசம் செய்கின்றன என்பது காணப்படவில்லையே என்கிற ஆக்ஷேபத்துற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—‘ப்ரகாசம்’ என்றாரம்பித்து. ‘𑌇𑌹’ என்னும் பதம் இவ்விடத்தில் தமோகுணத்தின் ஸ்வபாவமாகிய ப்ரகாசத்திற்கு விரோதமாகிய ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது என்றர்த்தம். மேலே சொல்லப்போகிறதை யோசித்து இவ்விடத்தில் ஸுகத்தை எடுத்தது. மறைக்கக்கூடிய ஸ்வபாவங்கள் இல்லாத ஆகாசம், வாயு, முதலியவைகளுக்கும் மற்றொன்றை ப்ரகாசம் செய்யக்கூடிய தன்மை இல்லை என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—‘ப்ரகாசம், ஸுகம், இவைகளை உண்டுபண்ணுவதையே’ என்றாரம்பித்து. ஸத்வகுணத்தோடு கலந்த ரஜோகுணம் தமோகுணம் இவைகளும் ப்ரமமாகிய புத்திக்குக் காரணம் என்பதை மேலே சொல்லப்போகிறபடியினால் ஸத்வகுணமே ப்ரகாசத்தை யுண்டுபண்ணுகிறதென்று இவ்விடத்தில் சொல்லியிருப்பது எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ்

ப்ரகாசத்திற்கும் ஸுகத்திற்கும் காரணம் என்றர்த்தம். ப்ரகாசமாவது வஸ்துவின் உண்மையைப்பற்றிய ஜ்ஞானம். ரோகமாகிய கார்யத்தை யுடைத்தாகாத தாகையினுல் அநாமயம் என்னப்படுகிறது. அதாவது ரோகமில்லாமைக்குக் காரணமென்றர்த்தம். இந்த ஸத்வமென்கிற பேரை யுடைய குணம் இந்த ஜீவாத்மாவை ஸுகத்தில் ஆசையினுலும் ஜ்ஞானத்தில் ஆசையினுலும் கட்டுப்படுத்துகிறது. அதாவது ஜீவாத்மாவிற்கு ஸுகத்தில் ஆசையையும் ஜ்ஞானத்தில் ஆசையையும் உண்டாக்கு

சொல்லுகிறர்—'ப்ரகாசமாவது' என்றாரம்பித்து. ரஜோகுணத்திறு லும் தமோகுணத்தினுலுமுண்டாகிற புத்திகளிலும் அந்தந்த ப்ரமங் களுக்கு ஆதாரமாகிய வஸ்துவின் ஸ்வரூபம் ப்ரகாசிப்பது ஸத்வகுண த்தின்பாகம் என்று தாத்பர்யம். ஸத்வகுணத்திற்கு ரோகமுண்டென் கிறப்ரஸ்தாவமேஇல்லாமையினுல் அதில்லையென்றுமறுப்பதுயுக்தமல்ல என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ்சொல்லுகிறர்—'ரோகமாகியகார்ய த்தைஉடைத்தாகாததாகையினுல்' என்று. இவ்விடத்தில் இத்துடன்சேர் த்துச்சொல்லப்பட்டிருக்கிற மற்றக்குணங்களில் அவைகளாலுண்டாக் கப்பட்ட கார்யமாகையினுல் ரோகத்தின் ஸம்பந்தம் இருக்கிறது. அது இவ்விடத்தில் ப்ரஸ்தாவத்திற்கு வர அது இல்லையென்று மறுக்கப்படு கிறதென்று தாத்பர்யம். ரோகமென்று பேருடைய கார்யமில்லை என்று சொல்லியிருப்பது, இவ்விடத்தில் அதின் ப்ரயோஜனத்தை யோசித்தால் அதற்கு விரோதமான கார்யம் உண்டென்று விதிப்பதில் தாத்பர்யத்தினுல் என்று சொல்லுகிறர்—'அதாவது ரோகமில்லாமைக் குக்காரணம்' என்று. 'தந்நிவ்ருத்தி' என்று மேல் ஶ்லோகங்களில் சொல்லியிருப்பதுபோல இந்த ஶ்லோகத்திலும் ஸ்வரூபத்தைச் சொல்லுவதினுலும் ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமாகவிருக்கையைச் சொல்லுவதினுலும் வாக்யம் வெவ்வேறு என்று சொல்லுகிறர்—'இந்த ஸத்வமென்று பேரையுடைய குணம்' *என்றாரம்பித்து. வேறொரு கார ணத்தினுலேற்பட்ட ஸுகம்முதலியவைகளில் ஆசை காரணம் என்பது மாத்திரம் மூன்றும் வேற்றுமையினுல் சொல்லப்பட்டது. அது யுக்த மல்ல, அதற்கு வேறொரு காரணமும் சொல்லப்படாமையினுல் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ்சொல்லுகிறர்—*'அதாவது ஜீவாத்மாவிற்கு' *என்றாரம்பித்து. ஸம்ஸாரபந்தமுண்டாவதற்கு நடுவில் நேரிடக்கூடிய வ்யாபாரம் இது என்பது மாத்திரம் சொல்லப்படுகிறது என்று தாத் பர்யம். பந்தமாவது கர்மங்களின் பலங்களை யனுபவிப்பதற்காக வற் பட்ட தேஹத்தோடு சேர்க்கை. அது கர்மத்தினுலுண்டாகிறது. அது ஸுகம்முதலியவைகளில் ஆசையினுலுண்டாகிறது என்பது எப்படிப்*

கிறது என்றர்த்தம். ஜ்ஞானத்திலும் ஸுகத்திலும் ஆசையுண்டானால் அவைகளுக் குபாயங்களாகிய லோகத்தில் ஏற்பட்ட கார்யங்களிலும், வேதத்தில் சொல்லப்பட்ட கார்யங்களிலும் ப்ரவ்ருத்திக்கிறான். அதினால் அவைகளின் பலத்தை யனுபவிப்பதற்குக் காரணங்களாகிய ஜாதிகளில் பிறக்கிறான். ஆகையினால் ஸத்வ குணம் ஸுகத்திலும் ஜ்ஞானத்திலும் ஆசையை முன்னிட்டு ஜீவாத்மாவைக் கட்டுப்படுத்துகிறது. ஜ்ஞானம்,

---

பொருந்தும்என்கிற ஆக்ஷேபத்திற்குஸமாதானஞ்சொல்லுகிறார்—'ஜ்ஞானத்திலும் ஸுகத்திலும் ஆசையுண்டானால்' என்றாரம்பித்து வேதத்தில் சொல்லியஉபாயங்களை அனுஷ்டானம்செய்வது ஜன்மாந்தரத்தையடைவதற்குக் காரணமாகிறது என்பது உசிதம். லோகத்திலேற்பட்ட உபாயத்தைச்செய்வதோவெனில் இந்தஜன்மத்திலேயே அனுபவிக்கக்கூடிய பலத்திற்குக்காரணமானாலும் ஆகலாம், அல்லாமல் போனாலும்போகலாம், வேறு ஜன்மங்களுக்குக் காரணமாகாது, ப்ரவ்ருத்திப்பதற்கு உதாஹரணமாக லோகத்திலேற்பட்டிருக்கிற கார்யத்தைச் சொல்லியிருப்பதென்பதும் ப்ரயோஜனமற்றது என்னில் இதற்கு ஸமாதானஞ் சொல்லுகிறோம். இவ்விடத்தில் 'லௌகிக' என்னும் பதத்தினால் ஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட கர்மங்கள் சொல்லப்படுகின்றன, அன்றிக்கே ஶாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்ட கார்யங்கள் சொல்லப்படுகிறதாகவுமாம். ஹிம்ஸைமுதலிய கார்யங்கள் ஸுகத்திற்குக்காரணமென்று லோகத்திலேற்பட்டது. லோகத்தினாலேற்படாத அந்தக் கார்யத்தின் சக்தியினால் மிகவும் பாபிஷ்டமாகிய ஜன்மம் முதலியவைகளை உண்டாக்குகிறது—என்று ரஜோகுணத்தைப்பற்றிச் சொல்லுமிடத்திலும் [1]'அந்த க்ரியைகளும் புண்ய பாபரூபங்கள் என்று மேலே சொல்லப்போகிறார். ஸத்வகுணமே ப்ரகாசத்தையும் ஸுகத்தையும் தானே உண்டுபண்ணுவதாயிருந்தால் கிடைத்தவைகளான அவைகளில் ப்ரவ்ருத்திப்பதற்கு ஆசை உண்டாகாதே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'ஜ்ஞானம் 'ஸுகம்' இவைகளை உண்டாக்குகிறதும்' என்றாரம்பித்து. முளையும் விரையும் போலிருக்கிற ந்யாயத்தினால் மேலேமேலே அவைகளில் ஆசையையும் அப்படி ஆசைப்படப்பட்ட அந்த வஸ்துக்களையும் ஸத்வகுணம் உண்டாக்குகிறது என்றர்த்தம். 2 'நகாங்க்ஷே விஜயம்'

---

1 பகவத்கீதை-14-7 ஶ்லோகத்தின் பாஷ்யம்.

2 பகவத்கீதை-1-32.

ஸாக இவைகளை யுண்டாக்குகிறதும் மறுபடி அவைகளில் ஆசையை யுண்டாக்குகிறதும் ஸத்வ குணம் என்று சொல்லப்பட்டதாகிறது. 6

ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்க ஸமுத்பவம் |
தந்நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம் || 7

ப - ரை] கௌந்தேய - அர்ஜுந, ரஜ: - ரஜோகுணத்தை, ராகாத்மகம் ராகத்திற்குக் காரணமாகவும், த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம் - த்ருஷ்ணை, ஸங்கம், இவைகளுக்குத்பத்திஸ்தானமாகவும் வித்தி - அறி, தத் - அந்த ரஜோகுணம், தேஹிநம் - ஜீவாத்மாவை, கர்மஸங்கேந - காமங்களில் பற்றுதலினால், நிபத்நாதி - கட்டுப்படுத்துகிறது. 7

பா] ரஜோகுணம் ராகத்திற்குக் காரணம். ராகமாவது ஸ்த்ரீ புருஷர்களுக்கு ஒருவர்க்கொருவரிடத்தில் உண்டாகும் ஆசை. த்ருஷ்ணை, ஸங்கம்,

---

தா] என்பது முதலியவைகளைச் சொல்லுகிற உனக்கு ஒன்றிலும் ஸங்கமில்லை என்கிற அபிப்ராயத்தினால் 'அநக' என்னும் பதம். 6

"ரஜஸோலோபஏவச' என்று மேலே சொல்லப்படப்போகிறது. ஆகையினாலும், 'ப்ரகாசகம்' என்றும், 'மோஹநம்' என்றும், கீழும்மேலும் சொல்லி யிருப்பதைப்போலவே 'ராகாத்மகம்' என்னுமிடத்திலும் ராகத்திற்குக்காரண மென்பதே சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'ராகத்திற்குக் காரணம்' என்று காரணத்தையே கார்யமாக உபசாரமாகச் சொல்லியிருக்கிறது. 'ரஜ்யதே அநேந (இதினால் ஆசைப்படுகிறான்),' என்கிற வ்யுத்பத்தியினால் ராகத்திற்குக் காரணமென்பதே 'ராக' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறதாகவுமாம் என்று தாத்பர்யம். கூடச்சொல்லப்பட்டிருக்கிற 'த்ருஷ்ணா' முதலிய பதங்களுக்குப் புனருக்தியென்னும் தோஷத்தைப் பரிகரிப்பதற்காக 'ராக' என்னும் பதத்தை அதிகமான ப்ரயோகமிருப்பதை யனுஸரித்து சில விஷயங்களைப்பற்றியது என்று குறைத்துச் சொல்லுகிறார்—'ஸ்த்ரீ புருஷர்களுக்கு' என்றாரம்பித்து. த்ருஷ்ணை 'ஸங்கம்' இவைகளிலிருந்து ரஜோகுண முண்டாகிறதென்று சொல்லுவது உசிதமல்ல. ரஜோகுணத்திலிருந்து அவைகள் உண்டாகிறதென்று சொல்லுவதோவெனில் ஸம்ஸாரபந்த முண்டாவதற்கு நடுவில் உண்டாகக்கூடிய வ்யாபாரத்தைத் தெரிவிப்பதனால் ப்ரயோஜனத்தோடு கூடியதாகும் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— 'த்ருஷ்ணை, ஸங்கம், இவைகளுக்கு' என்றாரம்பித்து. ஆத்மாவிற்கு ஸ்வபாவமாகிய இவைகளுக்கு ஆத்மாவல்லவோ உத்பத்தி ஸ்தானம்

இவைகளுக்குத்பத்திஸ்தானம். அதாவது இவைகளுக்குக் காரணமாகியது என்றர்த்தம். த்ருஷ்ணையாவது ஶப்தம் முதலிய விஷயங்களில்உண்டாகும் ஆசை. ஸங்கமாவது புத்ரன், மித்ரர்கள், பந்துக்கள் இவர்களோடு கூடுவதில் ஆசை. அப்படியே ஜீவாத்மாவை க்ரியைகளில் ஆசையை யுண்டாக்கி அதின் வழியாகக்கட்டுப்படுத்துகிறது. க்ரியைகளில்

என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிருர்—'அதாவது இவைகளுக்குக் காரணமாகியது என்றர்த்தம்' என்று 1 'க்ஷுத்த்ருஷ்ணாவஶம்' என்றிவை முதலிய ப்ரயோகங்களிருக்கிறபடியினால் தாகம் மாத்திரம் அர்த்தம் என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிருர்—'த்ருஷ்ணையாவது' என்ருரம்பித்து. இதுதொட்டு அறியக்கூடியதாகிய ஐந்து குணங்களையும் சொல்லியிருக்கிறது. 'புத்ரன், என்பது முதலிய ப அபிமானத்தினுலுண்டாகியவஸ்துக்களைச்சொல்லுகிறது. 'விஷயத்ருஷ்ணா', 'விஷயவைத்ருஷ்ண்யம்' என்றிவை முதலிய ப்ரயோகங்களிருப்பதனுல் 'த்ருஷ்ணா' என்பது இந்த்ரியங்கள் தொட்டறியக்கூடிய எல்லாவற்றையும் சொல்லுகிறது. ஸங்கமென்பதோ மிகுதியாயிருக்கிறபடியினுலும், ப்ரயோகங்களை யனுஸரித்தும், அபிமானமுண்டாகக்கூடிய விஷயங்களைப்பற்றியது என்று தாத்பர்யம். ராகம் முதலியவைகளாலுண்டாகிய அந்தந்த விஷயங்களின் உபாயங்களில் பற்றுதல் இவ்விடத்தில் கர்மஸங்கம் என்னப்படுகிறது என்று சொல்லுகிருர்—'அப்படியே' என்ருரம்பித்து. ராகம் த்ருஷ்ணை, ஸங்கம், இவைகளும் மற்றோரிடத்தில் ஸுக விஶேஷங்களில் பற்றுதலென்றே சொல்லப்பட்டதுகள். ஜ்ஞானத்திலும் ஸுகத்திலும் ஆசையுண்டானுல் அவைகளுக் குபாயங்களாகிய கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கிருன் என்று சொல்லி யிருப்பதினுலேயே ஸத்வகுணத்தினுலும் கர்மங்களில் பற்றுதலுண்டாக்கப்படுகிறது என்றேற்படுகிறது. அப்படியிருக்க எப்படி வ்யத்யாஸம் சொல்லப்படுகிறது? என்னில் இதற்கு ஸமாதானம்—ஸத்வ குணம் ஸுகத்தை முக்கியமாகச் செய்து அதற்காக மற்ற விஷயங்களில் பற்றுதலை யுண்டாக்குகிறது. 2 'ப்ரயோஜநேஷு ஸஜ்ஜந்தே ந விஶேஷேஷு பண்டிதா:' என்று சொல்லியிருப்பதைப்போல். ரஜோகுணமோ வெனில் அந்தந்த வஸ்துக்களில் கார்யங்களின் ஸ்வரூபத்தையே முக்யமாக வைத்துக்கொ

---

1 *பசி, தாகம், முதலியவைகளின் சாந்தி.*

2 *பண்டிதா: - பண்டிதர்கள், ப்ரயோஜநேஷு - ப்ரயோஜநங்களில், ஸஜ்ஜந்தே - ஆசைப்படுகிருர்கள், விஶேஷேஷு-அதில் காரணங்களுடைய விஶேஷங்களில், ந - (ஆசைப்படுவது) இல்லை,*

ஆசையினால் ஜீவாத்மா எந்தெந்த க்ரியைகளை ஆரம்பிக்கிறானோ அந்தந்த க்ரியைகள் புண்யபாபரூபமாகையினால் அதனதின்பலத்தையனுபவிப்பதற்குக் காரணமாகிய ஜாதிகளில் உத்பத்திக்குக் காரணங்கள் ஆகின்றன. ஆகையினால் கர்மங்களில் ஆசையை யுண்டாக்கி அதின் வழியாக ரஜோ குணம் ஜீவாத்மாவைக்கட்டுப்படுத்துகிறது. ஆக இத்தால் ரஜோகுணம் ராகம், த்ருஷ்ணை, ஸங்கம், இவைகளுக்குக் காரணம். கர்மங்களில் பற்றுதலுண்டாவதற்குக் காரணம் என்றும் சொல்லப்பட்டதாகிறது. 7

𑌤𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍋𑌹𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥ 8

ப - ரை] 𑌭𑌾𑌰𑌤 - அர்ஜுந, 𑌤𑌮𑌸𑍍𑌤𑍁 - தமோகுணத்தையோவெனில், 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 - அஜ்ஞானத்தினால் உண்டானதாகவும், 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌮𑍍 - எல்லாப்ராணிகளுக்கும், 𑌮𑍋𑌹𑌨𑌂 - மோஹத்தையுண்டு பண்ணுவதாகவும், 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 - அறி, 𑌤𑌤𑍍 - அந்தத் தமோ குணமானது, 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦 - அஜாக்கிறதை, 𑌆𑌲𑌸𑍍𑌯 - சோம்பல், 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 - தூக்கம், இவைகளினால், 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 - கட்டுப்படுத்துகிறது. 8

பா] ஜ்ஞானத்தைவிட வேறுபட்டது இவ்விடத்தில் அஜ்ஞானமென்று

தா] ண்டு அதினாலுண்டாகிய ஸுகம் அல்பமோ அதிகமோ என்கிற விஷயத்தை யோசிக்காமல் உதாஸீனமாக இருந்துவிடுகிறது. இதுவும் ராஜாவினுடைய அந்தப்புர ஸ்த்ரீகளினிடத்தில் ஆசை, கெட்ட குணமுடைய பிள்ளை முதலியவர்களை ஸம்ரக்ஷணம் செய்தல், வ்யர்த்தமான கார்யங்கள், முதலியவைகளில் வ்யக்தமாக விருக்கிறது—என்று. கர்மங்களில் ஸங்கம் ஸம்ஸாரபந்தத்திற்கு வழி என்பது எப்படி என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் செல்லுகிறார்—'க்ரியைகளில் ஆசையினால்' என்றாரம்பித்து. கர்மங்களில் ஆசையைப்போலவே ராகம் முதலியவைகளும் ஸம்ஸாரபந்த முண்டாவதற்குவழி என்று தெரிவிப்பதற்காக மொத்த அர்த்தத்தைச்சொல்லுகிறார்—'ஆக இத்தால்' என்றாரம்பித்து. 'ஆக'என்பதற்கு ராகம் முதலியவைகள் ஸம்ஸாரபந்தமுண்டாக்குவதில் முடிவு பெறுகிறபடியினாலே ப்ரயோஜனத்தோடுகூடியவைகளாகையினால் என்றர்த்தம். 'இத்தால்' என்பதற்கு ஸத்வகுணம் தமோகுணம் இவைகளைவிட வேறுபட்டதாகிய ஸ்வபாவத்தையுடையதென்று கீழ் நிரூபித்திருப்பதினால் என்றர்த்தம். 7

மிகவும் பரிகரிக்கவேண்டியது என்கிற வ்யத்யாஸத்தைக் காட்டுவதற்காக '𑌤𑌮𑌸𑍍𑌤𑍁' என்கிற விடத்தில் '𑌤𑍁'என்னும்பதம். '𑌅𑌜𑍍𑌞𑌾𑌨'

சொல்லப்படுகிறது. ஜ்ஞானமாவது வஸ்துவின் உண்மையைத்தெரிந்து கொள்ளுதல். அதைவிடவேறு பட்டதாவது அதற்கு விரோதமாகிய ஜ்ஞானம். தமோகுணம் வஸ்துவின் உண்மைக்கு விரோதமாகிய ஸ்வபாவத்தைப்பற்றிய ஜ்ஞானத்தினலுண்டானது. மோஹமாவது விரோதமாகத் தெரிந்து கொள்ளுதல், விரோதமாக அறிவதற்குக் காரணம் என்றர்த்தம். அந்தத்தமோகுணம் அஜாக்கிரதை, சோம்பல், தூக்கம், இவைகளுக்குக் காரணமாகையினல் அவைகளின் வழியாக ஜீவாத்மாவைக் கட்டுப்படுத்துகிறது. அஜாக்கிரதையாவது செய்யவேண்டிய கார்யங்களைத் தவிர வேறு கார்யங்களில் ப்ரவ்ருத்தி செய்வதற்குக்காரணமாகிய ஸாவதானமில்லாமை. சோம்பலாவது கர்மங்களை ஆரம்பிக்காமல் இருக்கிற

என்னும் பதம் புண்யபாபங்களாகிற கர்மங்களிலும், ஜ்ஞானமில்லாமை முதலியவைகளிலும் ப்ரயோகிக்கப்படுகிறபடியினல் இங்கே அவைகளை விலக்குவதற்காக மோஹத்தை உண்டுபண்ணுவதற்குத் தகுந்த காரண விசேஷத்தைச் சொல்லுகிறர்—‘ஜ்ஞானத்தை விட வேறுபட்டது’ என்று. எல்லா ஜ்ஞானங்களைவிட வேறுபட்டதென்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறர்—‘ஜ்ஞானமாவது’ என்றாரம்பித்து. விரோதமாகிய ஜ்ஞானம் தமோகுணத்தை யுண்டாக்குவது பாபங்களின் அனுஷ்டானம் முதலியவைகளை முன்னிட்டு தமோகுணத்தினல் உண்டாக்கப்படுவதாக மேலே சொல்லப்போகிற உண்மையாகிய ஸ்வபாவத்திற்கு விரோதமான ஸ்வபாவத்தைப் பற்றிய ஜ்ஞானம் இவ்விடத்தில் ‘மோஹ’ என்னும் பதத்தினல் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறர்—‘மோஹமாவது விரோதமாகத் தெரிந்து கொள்ளுதல்’ என்று ‘மோஹ’ என்னும் பதத்தின் மேலிருக்கிற விகுதி காரணம் என்பதை மாத்திரம் சொல்லுகிறது என்று சொல்லுகிறர்—‘விரோதமாக அறிவதற்குக் காரணம் என்றர்த்தம்’ என்று. ‘ஸாவதானமில்லாமை’ என்பது மாத்திரம் ‘ப்ரமாத’ என்னும் பதத்தின் அர்த்தம். ‘செய்யவேண்டிய கார்யங்களை’ என்பது முதல் அந்த அஜாக்கிரதை ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகும் விதத்தைச் சொல்லியிருக்கிறது. செய்யத்தகாத கார்யங்களில் ப்ரவ்ருத்தி செய்வது பாபிஷ்டமான ஜன்மம் முதலியவைகளுக்குக் காரணமாகிறது. இப்படியே அவஶ்யம் செய்யவேண்டிய கார்யங்களை ஆரம்பிக்காமலிருப்பதும் 1‘அகுர்வந் விஹிதம் கர்ம நிந்திதம் ச ஸமாசரந்। ப்ரஸஜ்ஜம்ஶ்சேந்த்ரியா

1 விஹிதம் - ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட, கர்ம-கர்மத்தை, அகுர்வன்-செய்யாதவனும், நிந்திதம்-கெட்ட கார்யத்தை, ஸமாசரன் - செய்கிற மனிதனும், இந்த்ரியார்த்தேஷு-இந்த்ரியங்களின் விஷயங்களில், ப்ரஸஜ்ஜம்ச-அதிக ஆசை வைத்துக்கொண்டிருக்கிற, நர:-மனிதனும், ப்ராயஶ்சித்தீயதே - ப்ராயஶ்சித்தம் செய்யக்கூடியவனுகிறன்.

தாகிய ஸ்வபாவம், அதாவது அசங்காமலிருக்கை என்றர்த்தம். ஜீவாத்மா இந்த்ரியங்களைத் தன்தன் கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்ததினால் உண்டான ஶ்ரமத்தினால் எல்லா இந்த்ரியங்களையும் வ்யாபாரங்களைச் செய்விக்காமல் ஓய்ந்துவிடுவது தூக்கம் அதில் வெளி இந்த்ரியங்களை அதின் வ்யாபாரங்களைச் செய்விக்காமல் ஓய்ந்துவிடுவது ஸ்வப்னம். மனஸ்ஸையும் வ்யாபாரங்களைச் செய்விக்காமல் ஓய்ந்துவிடுவது ஸுஷுப்தி. 8

பா - அ] ஸத்வம் முதலிய குணங்கள் ஸம்ஸாரபந்தத்தை யுண்டாக்குவதற்கு வழியாக இருப்பவைகளில் முக்யமானவைகளைச்சொல்லுகிறார்.—

ஸத்த்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பாரத ।
ஜ்ஞாநமாவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸஞ்ஜயத்யுத ॥ 9

ப - ரை] பாரத - அர்ஜுந, ஸத்த்வம் - ஸத்வகுணம், ஸுகே - ஸுகத்தில், ஸஞ்ஜயதி - ஆசையையுண்டாக்குகிறது, ரஜ: - ரஜோகுணம், கர்மணி - கர்மத்தில் (ஆசையையுண்டாக்குகிறது), தம: - தமோகுணம், ஜ்ஞாநம் - ஜ்ஞானத்தை, ஆவ்ருத்ய - மறைத்துவிட்டு, ப்ரமாதே - அஜ்ஞாக்கிரதையில், ஸஞ்ஜயத்யுத - ஆசையையுண்டாக்குகிறது. 9

ஸெளக்ஷ்ம்யாத் ப்ரபஸ்வபிதீயதே நர:॥' என்று ஸ்ம்ருதியில் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா. 'ஆலஸ்ய' என்னும் பதம் இவ்விடத்தில் ப்ரயோஜனத்தையுடைய கார்யங்களிலும் ப்ரவ்ருத்தி செய்வதற்கு விரோதமான ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'அதாவது அசங்காமலிருக்கை' என்று. எப்பொழுதும் தமோகுணம் இருந்தபோதிலும் சில ஸமயங்களில் தூக்கத்தினாலுண்டாகிறது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'இந்த்ரியங்களை' என்றாரம்பித்து. ஸ்வப்னத்தை இந்த சொல்லவில்லையே என்கிற ஆக்ஷேபத்தைப் பரிகரிப்பதற்காக ஸ்வப்னம் ஸுஷுப்தி இவை இரண்டும் தூக்கத்தின் உட்பிரிவுகள் என்று காட்டுகிறார்—'அதில்' என்றாரம்பித்து. தூக்கம் ஸம்ஸாரபந்தத்தை யுண்டாக்குவது ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களை யனுஷ்டிப்பதற்கு விரோதியாகிய தூங்கத்தகாத காலத்தில் தூங்குவதினாலும், தூங்கக்கூடிய காலத்தில் தூங்காததினாலும் பாபிஷ்டங்களாகிய கனவுமுதலியவைகளினாலும் என்றறியவும் 1 'யுக்தஸ்வப்நாவபோதஸ்ய' என்று சொல்லப்பட்டது. 8

---

1 பகவத்கீதை-6-17.

பா] ஸத்வகுணம் ஸுகத்தில் ஆசையை முக்யமாகவுடையது. ரஜோ குணம் கர்மங்களில் ஆசையை முக்யமாகவுடையது. தமோகுணம் வஸ்துக்களின் உண்மையைப்பற்றிய ஜ்ஞானத்தை மறைத்து விபரீத மான ஜ்ஞானத்திற்குக் காரணமாகையினால் செய்யவேண்டிய கார்யங் களுக்கு விரோதமான கார்யங்களில் ப்ரவ்ருத்தி செய்வதில் ஆசையை முக்யமாகவுடையது. 9

பா - அ] தேஹமாக மாறியிருக்கிற ப்ரக்ருதிக்கு ஸ்வரூபத்தைச்சேர்ந்த வைகள் ஸத்வம் முதலிய குணங்கள். அவைகள் ஸ்வரூபத்தைச் சேர்ந்த வைகளாகையினாலேயே எப்பொழுதுமிருக்கின்றனவாகையினால் ஒன் றுக்கொன்று விருத்தமான கார்யத்தை ஏன் உண்டாக்குவதில்லை என் கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—

ரஜஸ்தமஶ்சாபிபூய ஸத்த்வம் பவதி பாரத |
ரஜஸ்ஸத்த்வம் தமஶ்சைவ தமஸ்ஸத்த்வம் ரஜஸ்ததா || 10

ப — ரை] *பாரத* - அர்ஜுந, *ரஜ:* - ரஜோகுணத்தையும், *தமஶ்ச* - தமோ குணத்தையும், *அபிபூய* - அடக்கிவிட்டு, *ஸத்த்வம்*—ஸத்வகுணம், *பவதி* - அதிகமாகிறது, *ரஜ:* - ரஜோகுணம், *ஸத்த்வம்* - ஸத்வகுணத்தையும், *தம ஶ்சைவ* - தமோகுணத்தையும் (அடக்கிவிட்டு அதிகமாகிறது), *ததா* - அப்படியே, *தம:* - தமோகுணம், *ஸத்த்வம்* — ஸத்வகுணத்தையும், *ரஜ:* - ரஜோகுணத்தையும் (அடக்கிவிட்டு அதிகமாகிறது). 10

தா] '*ஸத்த்வம்ஸுகே*' *என்கிற ஶ்லோகங்களைவிட அர்த்தத்தைப் பிரி த்துக்காட்டுவதினால் புனருக்தி தோஷத்தைப் பரிகரிக்கிறார்*—'ஸத்வம் முதலிய குணங்கள்' *என்றாரம்பித்து*. 'ஸத்வகுணம் ஸுகத்தில் ஆசை யை முக்யமாகவுடையது' *என்பதற்கு ஜ்ஞானத்தில் ஆசையும் ஸுகத் திற்காக என்று தாத்பர்யம்*. 'ரஜோகுணம் கர்மங்களில் ஆசையை முக் யமாகவுடையது' *என்பது ராகம், த்ருஷ்ணை, முதலியவைகளும் கர்மத் திலேயே முடிவுபெறுகின்றன என்று தாத்பர்யம். முழுமையும் ஜ்ஞா னத்தை மறைத்துவிட்டால் ஸுஷுப்தியாய் விடுமாதலால் அஜ்ஞாக்கிர தை என்கிற பேருடைய தசை உண்டாகாது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்*—'வஸ்துவின் உண்மையைப் பற்றிய ஜ்ஞானத்தை மறைத்து' *என்றாரம்பித்து*. 9

பா] ஸத்வம் முதலிய மூன்று குணங்களும் ப்ரக்ருதியோடு சேர்ந்த ஆத்மாவின் ஸ்வரூபத்தைப் பொறுத்தவைகள். அப்படியிருந்த போதிலும் அநாதி கர்ம வசத்தினாலும், தேஹத்திற்குப் புஷ்டியை யுண்டாக்குகிற ஆஹாரங்களில் வ்யத்யாஸத்தினாலும் ஸத்வம் முதலிய குணங்கள் ஒன்றுக்கொன்று அதிகரித்தும் அடங்கியும் இருக்கின்றன. சில ஸமயத்தில் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் அடக்கி ஸத்வகுணம் அதிகமாக இருக்கிறது. அப்படியே தமோகுணத்தையும் ஸத்வகுணத்தையுமடக்கி ரஜோகுணம் சில ஸமயத்திலும், சிலஸமயத்தில் ரஜோகுணத்தை

தா] அடுத்த க்ரந்தம் பொருந்தவில்லை என்கிற ஆக்ஷேபத்தைப் பரிகரிக்கிறார்—'தேஹமாக மாறியிருக்கிற' என்றாரம்பித்து. 'ஒன்றுக்கொன்று விருத்தமான' என்பதற்கு உண்மையைப் பற்றிய ஜ்ஞானம், அதற்கு விரோதமாகிய அஜ்ஞானம், ஸுகத்திலாசை, துக்கத்திலாசை, முதலியவைகளை என்றர்த்தம். குணங்களுக்கு அதிகரிப்பதும் அடங்குவதும் ஒருவித ஏற்பாடு மில்லாமல் வரவேண்டியதாகுமே என்கிற ஆக்ஷேபத்தைப் பரிகரிப்பதற்காகப் பகவானுடைய அநுக்ரஹத்திற்கும் நிக்ரஹத்திற்கும் காரணமாகிய கர்மங்களுக்குப்பரிபாகம் வரவேண்டிய ஸமயங்கள் தனித்தனி ஆகையினால் அதற்குத்தக்கபடி குணங்களுக்கு அடக்கமும் அதிகரிப்பதும்பரம்பரையாகவருகிறதென்பது முசிதந்தானென்று சொல்லுகிறார்—'அநாதி கர்ம வசத்தினாலும்' என்றாரம்பித்து. எப்படி வாதபித்த கபங்களுக்கு அந்தந்த ஸ்வபாவமுடைய வஸ்துக்களினால் வ்ருத்தியுண்டாகிறதென்று 1 'வ்ருத்திஸ் ஸமாநைஸ் ஸர்வேஷாம் விபரீதைர் விபர்யய:' என்று ஆயுர்வேதம் தெரிந்தவர்களே சொல்லுகிறார்களோ அப்படியே இவ்விடத்திலும் மேலே சொல்லப்போகிற ஸத்வகுணம்நிறைந்த ஆஹாரம் முதலியவைகளின் வ்யத்யாஸத்தினால் அந்தந்தக் குணங்கள் வ்ருத்தியடைகின்றன வென்று சொல்லுகிறார்—'தேஹத்திற்குப் புஷ்டியை யுண்டாக்குகிற ஆஹாரங்களில் வ்யத்யாஸத்தினாலும்' என்று. 2 'பிறகு தேவதைகள் அதிகரித்தார்கள், அஸுரர்கள் தோல்வி யடைந்தார்கள்' என்றர்த்த முள்ள ஶ்ருதிவாக்யத்திலே போல 'ஸவதி' என்பது இவ்விடத்தில் அதிகமாகிறது என்னுமர்த்தத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்— 'அதிகமாக இருக்கிறது'

---

1 அஷ்டாங்க ஹ்ருதயம்-1-14. ஸர்வேஷாம்-எல்லா தாதுக்களுக்கும், ஸமாநை:-ஸமமான குணமுள்ள வஸ்துக்களினால், வ்ருத்தி:-வ்ருத்தி (உண்டாகிறது), விபரீதை:-விரோதமான குணமுள்ள வஸ்துக்களினால், விபர்யய:-நாசமுண்டாகிறது.

2 யஜுர்வேதம், 2-வது காண்டம்-3-3-1.

யும் ஸத்வகுணத்தையுமடக்கித் தமோகுணமும் அதிகரித்திருக்கிறது. 10

பா-அ] அதையும் கார்யங்களைப் பார்த்தே அறியவேண்டுமென்று சொல்லுகிறார்—

ஸர்வத்வாரேஷு தேஹே(அ)ஸ்மிந் ப்ரகாஶ உபஜாயதே |
ஜ்ஞாநம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்த்வமித்யுத || 11

ப-ரை] அஸ்மிந் - இந்த, தேஹே - ஶரீரத்தில், ஸர்வத்வாரேஷு - எல்லா இந்த்ரியங்களிலும், ப்ரகாஶே-ப்ரகாஶம் உண்டாவதில், யதா-எப்பொழுது, ஜ்ஞாநம் - ஜ்ஞானம், உபஜாயதே - உண்டாகிறதோ, ததா - அப்பொழுது, ஸத்த்வம் - ஸத்வகுணம், விவ்ருத்தம் - வ்ருத்தியடைந்தது, இதி - என்று, வித்யாத் - அறியவேண்டும். 11

பா] கண் முதலிய எல்லா இந்த்ரியங்களிலும் எப்பொழுது வஸ்துவின்

என்று. இந்த அதிகமாகவிருக்கையையும், அடங்கியிருப்பதையும் பற்றி உபதேசஞ்செய்திருப்பது ரஜோகுணம் தமோகுணம் அதிகமாகவிருக்கும்பொழுது அவைகளைப் பரிகரிக்க வேண்டுமென்பதற்காக. 10

அவைகள் எவ்விதமாக அறியப்பட்டுப் பரிகாரம் செய்யக்கூடியவைகள் என்று க்ஷேபம் வரில் அதற்கு ஸமாதானமென்று 'ஸர்வத்வாரேஷு' என்கிற மூன்று ஶ்லோகங்களுக்கு அவதாரிகை சொல்லுகிறார்—'அதையும்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் 'த்வார' என்னும் பதம் ஶரீரத்திலிருக்கும் ஒன்பது த்வாரங்களைச் சொல்லுகிறதல்ல, பதினொரு இந்த்ரியங்களையும் சொல்லுகிறதல்ல, அவைகளெல்லாம் ஜ்ஞானத்துடன் ஸம்பந்தப் பட்டவைகளல்லவாகையினால். ஆகையினால் ஜ்ஞானம் பரவுவதற்கு வழியாகிய மனதுடன்சேர்ந்து ஆறாகிய ஜ்ஞானேந்த்ரியங்களின் கூட்டத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'கண் முதலிய' என்றாரம்பித்து. 'ப்ரகாஶ' என்னும் பதம் இவ்விடத்தில் முதல் வேற்றுமையை யுடையதல்ல, 'ஜ்ஞாந' என்னும்பதத்துடன் புனருக்தி வருமாதலால். 'ப்ரகாஶ꞉' என்னும் பதத்திற்கு வ்யாக்யானம் ஜ்ஞானமென்னும் பதம் என்று சிலர் சொன்னதும் ஸ்வாரஸ்யமில்லை. ஏழாவது வேற்றுமையையுடையதாகவிருந்தால் ஜ்ஞானத்திற்கு ப்ரயோஜனமாகிய வ்யவஹார யோக்யதையைச் சொல்லுகிறது என்றாவது, ப்ரகாசிப்பிக்கப்படுகிற ஸ்வரூபம் முதலியவைகளைச் சொல்லுகிறதென்றாவது, 'ஜ்ஞாந' என்னும் பதத்தினால் மனதின் வ்யாபாரத்தைச் சொல்லுகிறது என்றாவது, அந்வயம் சொல்வது உசிதம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'வஸ்துவின் உண்மை ப்ரகாசிப்பதில்'

உண்மை ப்ரகாசிப்பதில் ஜ்ஞான முண்டாகிறதோ அப்பொழுது அந்தத் தேஹத்தில் ஸத்வம் வ்ருத்தி யடைந்ததென்று அறியவேண்டும். 11

𑌲𑍋𑌭𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌶𑌮𑌃 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 ।
𑌰𑌜𑌸𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ॥ 12

ப - ரை] 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭—பரதவம்சத்தில் சிறந்தவனான அர்ஜுந, 𑌲𑍋𑌭𑌃—ஆசை, 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 - ப்ரவ்ருத்தி செய்வது, 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 - கர்மங்களை, 𑌆𑌰𑌮𑍍𑌭𑌃 - ஆரம்பிப்பது, 𑌅𑌶𑌮𑌃 - இந்த்ரியங்கள் ஓயாமலிருத்தல், 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 - விஷயங்களில் ஆசை, 𑌏𑌤𑌾𑌨𑌿 - இவைகள், 𑌰𑌜𑌸𑌿 - ரஜோகுணம், 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 - வ்ருத்தியடைந்திருக்கும் பொழுது, 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 - உண்டாகின்றன. 12

பா] 𑌲𑍋𑌭𑌃 - தன்னுடைய பொருளைக் கொடாமை, 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 - ப்ரயோஜனங்களை உத்தேசிக்காமலே வ்யாபாரஞ் செய்யும் ஸ்வபாவம், 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌃-பலங்களுக் குபாயங்களாகிய கர்மங்களை யாரம்பித்தல், 𑌅𑌶𑌮𑌃 - இந்த்ரியங்களுக்கோய் வில்லாமை, 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾-விஷயங்களில் ஆசை,

---

என்று. இத்தால் ப்ரகாசம் என்பது வெளிச்சம்போல ஜ்ஞானம் என்பது கண்போல என்று சொல்லுகிறவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள். யோகியாகிய ஸௌபரி முதலிய ஒருவன் ஒரே ஸமயத்தில் அநேக தேஹங்களை யடைந்திருக்கும்பொழுது ஒவ்வொரு தேஹங்களிலும் குணங்கள் தனித்தனியாக வ்ருத்தியடைவது ஸம்பவிக்கலாம் என்று தெரிவிப்பதற்காகவும் ஒரே ஸமயத்தில் மஹாப்ரளயம்முதலிய ஸமயங்களிலேபோல எல்லாருக்கும் இவைகள் ஸமமாக இருக்கின்றன என்பதைப் பரிகரிப்பதற்காகவும் '𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍇𑌹𑍇' என்று விசேஷித்துச் சொல்லப்பட்டது என்று சொல்லுகிறார்—'அப்பொழுது அந்தத் தேஹத்தில்' என்றாரம்பித்து. 11

'𑌲𑍋𑌭𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃' என்றாரம்பிக்கும் ஸ்லோகத்தில், '𑌸𑍍𑌪𑍃𑌹𑌾' என்னும் பதத்திற்குப் புனருக்தியைப் பரிகரிப்பதற்காக ரூடி சக்தியினாலேற்பட்ட '𑌲𑍋𑌭' என்னும் பதத்தினர்த்தத்தைச்சொல்லுகிறார்—'தன்னுடைய பொருளைக்கொடாமை' என்று. '𑌆𑌰𑌮𑍍𑌭𑌃' என்னும் பதம் ஒரு ப்ரயோஜனத்தில் உத்தேசத்தோடு ப்ரவ்ருத்தி செய்வதில் ப்ரயோகிக்கப்பட் டிருக்கிறது. இவ்விடத்திலும் '𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍' என்னும் பதத்தோடு சேர்ந்திருப்பதின் ஸ்வாரஸ்யத்தினாலுமிது ஏற்பட்டது. ஆகையினால் இவ்விடத்தில் '𑌆𑌰𑌮𑍍𑌭𑌃' என்னும் பதம் த்ருஷ்டத்திலும்

இவைகள் ரஜோகுணம் வ்ருத்தியடைந்திருக்கும் பொழுது உண்டாகின்றன. எப்பொழுது லோபம் முதலியவைகளிருக்கின்றனவோ அப்பொழுது ரஜோகுணம் வ்ருத்தியடைந்ததென்று அறியவேண்டுமென்றர்த்தம். 12

𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋𑌽𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍋 𑌮𑍋𑌹 𑌏𑌵 𑌚 ।
𑌤𑌮𑌸𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 𑌕𑍁𑌰𑍁𑌨𑌨𑍍𑌦𑌨 ॥ 13

ப-ரை] 𑌕𑍁𑌰𑍁𑌨𑌨𑍍𑌦𑌨 - குருவம்சத்தில் பிறந்தவனாகிய அர்ஜுந, 𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 – ப்ரகாசமில்லாமை, 𑌅𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 - ப்ரவ்ருத்திசெய்யாமை, 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌃 - அஜாக்கிரதை, 𑌮𑍋𑌹 𑌏𑌵 𑌚 - மோஹம், 𑌏𑌤𑌾𑌨𑌿 – இவைகள், 𑌤𑌮𑌸𑌿 - தமோகுணம், 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 - வ்ருத்தி யடைந்திருக்கும்பொழுது, 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 - உண்டாகின்றன. 13

பா] ஜ்ஞானம் உண்டாகாமை, ஒரு கார்யத்திலும் ப்ரவ்ருத்தி செய்யாமை, செய்யத்தகாத கார்யங்களில் ப்ரவ்ருத்தி செய்வதற்குக் காரணமாகிய அஜாக்கிரதை, விபரீதமாகிய ஜ்ஞானம், இவைகள் தமோகுணம் வ்ருத்

அத்ருஷ்டத்திலும் உண்டாகிய பலங்களுக்கு ஸாதனங்களாகிய பயிரிடுதல், யஜ்ஞம், முதலியவைகளைச்சொல்லுகிறது. ஆகையினால் ‘𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃’ என்னும் பதம் இவ்விடத்தில் அதைவிட வேறுபட்ட புல்லைக்கிள்ளுவது அங்க சேஷ்டைகளைச் செய்வது முதலிய வீணான வ்யாபாரங்களைச் சொல்லுகிறது, என்று சொல்லுகிறார்—‘ப்ரயோஜனங்களை உத்தேசிக்காமல்’ என்றாரம்பித்து. இந்தக் கீழ் இரண்டு பதங்களோடு புனருக்தியைப்பரிகரிப்பதற்காக ‘𑌸𑌃’ என்பதிவ்விடத்தில்ப்ரவ்ருத்தி செய்வதற்குக்காரணமாகிய இந்த்ரியங்களின் கொழுப்பு என்று சொல்லுகிறார்—‘இந்த்ரியங்களுக் கோய்வில்லாமை’ என்று. முன் ஶ்லோகத்தைப் போலவே இவ்விடத்திலும் குணங்கள் வ்ருத்தி யடைந்ததற்கு அடையாளத்தை உபதேசம் செய்திருக்கிறது என்று சொல்லுகிறார்—‘எப்பொழுது’ என்றாரம்பித்து. 12

‘𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃’ என்கிற ஶ்லோகத்தில் ‘𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌃’ ஆவது தெரிந்து கொள்ளவேண்டிய ஸமயத்திலும் தெரிந்துகொள்ளாமை. ஆகையினால் ‘𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂’, ‘𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌂’, இவை யிரண்டும்பொதுவாகவும் விசேஷமாகவுமிருக்கிறபடியினால் கோபலீவர்த்தந்யாயத்தையனுஸரித்துப்புனருக்தியில்லை என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘ஜ்ஞானமுண்டாகாமை’ என்று. முன்பு சொல்லப்பட்ட தூக்கம் முதலியவைகள் இவ்விடத்தில் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. ‘𑌅𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃’

தியடைந்திருக்கும்பொழுது உண்டாகின்றன. இவைகளைக் கொண்டு தமோகுணம் வ்ருத்தி யடைந்திருக்கிறதென்றறியவேண்டும். 13

யதா ஸத்த்வே ப்ரவ்ருத்தே து ப்ரளயம் யாதி தேஹப்ருத் |
ததோத்தமவிதாம் லோகாநமலாந் ப்ரதிபத்யதே || 14

ப - ரை] தேஹப்ருத் - ப்ராணி, ஸத்த்வே - ஸத்வகுணம், ப்ரவ்ருத்தே - வ்ருத்தியடைந்திருக்கும்பொழுது, ப்ரளயம் - மரணத்தை - யாதி - அடைகிறனே யானல், ததா - அப்பொழுது, அமலாந் - நிர்மலங்களான, உத்தமவிதாம் - மேலான தத்வத்தை யறிந்தவர்களுடைய, லோகாந் - ஸமூஹங்களை, ப்ரதிபத்யதே - அடைகிறன். 14

பா] எப்பொழுது ஸத்வம் வ்ருத்தியடைந்திருக்கிறதோ அப்பொழுது ப்ராணியானவன் மரணத்தை யடைவானே யானல் மேலான தத்வத்தை யறிந்தவர்களுடைய அதாவது ஜீவாத்மாவின் உண்மையை யறிந்தவர்களுடைய அஜ்ஞானமில்லாத ஸமூஹங்களையடைகிறன் அதாவது ஸத்வ குணம் வ்ருத்தி யடைந்திருக்கும்பொழுது மரணமடைந்தவன் ஆத்மாவை யறிந்தவர்களுடைய வம்சத்தில் பிறந்து ஆத்மாவின் உண்மையை யறிவதற்கு உபாயங்களாகிய புண்ய கர்மங்களைச் செய்ய ஆரம்பிக்கிறன் என்று சொல்லப்பட்டதாகிறது. 14

ஆவது முன்பு சொன்ன சோம்பேறித் தனம் என்று சொல்லுகிறர்— 'ஒரு கார்யத்திலும் ப்ரவ்ருத்தி செய்யாமை' *என்று மோஹம், ப்ரமாதம் என்பதும் முன் சொல்லியவைகளே.* 13

மரண காலத்தில் ரஜோகுணம் தமோகுணம் வ்ருத்தி யடைவதற்குக் காரணமாகியவைகளை முதலிலேயே பரிகரிக்க வேண்டும் என்பதற்காக மரண காலத்தில் வ்ருத்தி யடைந்த ஸத்வம் முதலிய குணங்களுக்குத் தனித்தனியாகப் பலம் சொல்லப்படுகிறது—இந்த இரண்டு ஶ்லோகங்களால். தேஹத்தின் ப்ரளயத்தைஅபிப்ராயத்தில் வைத்துக் கொண்டு 'தேஹப்ருத்' என்னும் விஶேஷணம் சொல்லப்பட்டிருக்கிறது என்கிற அபிப்ராயத்திலுல் சொல்லுகிறர்—'மரணத்தை யடைவானே யானல்' *என்று.* *

[இதற்கு மேல் ஐந்து ஶ்லோகங்களுக்குத் தாத்பர்ய சந்த்ரிகை கிடைக்கவில்லை.]

ரஜஸி ப்ரளயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே |

ப-ரை] ரஜஸி - ரஜோகுணம் (வ்ருத்தியடைந்திருக்கும் பொழுது), ப்ரளயம் - மரணத்தை, கத்வா - அடைந்து, கர்மஸங்கிஷு - கர்மங்களில் ஆசையுடையவர்களிடத்தில், ஜாயதே - பிறக்கிறான்.

பா] ரஜோகுணம் வ்ருத்தியடைந்திருக்கும் பொழுது மரணத்தை யடைந்து பலங்களுக்காகக் கர்மங்களைச் செய்கிறவர்களின் குலங்களில் பிறக்கிறான். அவைகளில் பிறந்து ஸ்வர்கம் முதலிய பலங்களுக்கு ஸாதனமாகிய கர்மங்களைச் செய்ய ஆரம்பிக்கிறான் என்றர்த்தம்.

ததா ப்ரலீநஸ்தமஸி மூடயோநிஷு ஜாயதே || 15

ப-ரை] ததா - அப்படியே, தமஸி - தமோகுணம் (வ்ருத்தியடைந்திருக்கும் பொழுது), ப்ரலீந: - மரணமடைந்தவன், மூடயோநிஷு - ஜ்ஞானமில்லாத ஜாதிகளில், ஜாயதே- பிறக்கிறான். 15

பா] அப்படியே தமோகுணம் வ்ருத்தியடைந்திருக்கும் பொழுது மரணமடைந்தவன் ஜ்ஞானமில்லாத ஜாதிகளில் அதாவது நாய்,பன்றி,முதலிய ஜாதிகளில் பிறக்கிறான். எவ்வித ப்ரயோஜனங்களையும் அடைய யோக்யதையில்லாதவனாக ஆகிறான் என்றர்த்தம். 15

கர்மண: ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்விகம் நிர்மலம் பலம் |
ரஜஸஸ்து பலம் து:கமஜ்ஞானம் தமஸ: பலம் || 16

ப-ரை] ஸுக்ருதஸ்ய - ஸுக்ருதமாகிய, கர்மண: - கர்மத்திற்கு, நிர்மலம் - தோஷமில்லாத, ஸாத்விகம் - ஸத்வகுணம் மேலிட்ட, பலம் - ப்ரயோஜனம் (உண்டாகிறதென்று), ஆஹு: - சொன்னார்கள், ரஜஸஸ்து - ரஜோகுணத்திற்கோவெனில், து:கம் - துக்கமே, பலம் - ப்ரயோஜனம், தமஸ: - தமோகுணத்திற்கு, அஜ்ஞானம்-அஜ்ஞானம், பலம் ப்ரயோஜனம். 16

பா] இப்படி ஸத்வகுணம் வ்ருத்தியடைந்திருக்கும்பொழுது மரணத்தை யடைந்து ஆத்மாவையறிந்தவர்களின் குலத்தில் பிறந்தவனால் அனுஷ்டிக்கப்பட்டதாயும், ப்ரயோஜனங்களில் ஆசையில்லாததாயும என்னுடைய ஆராதனரூபமாயுமிருக்கிற கர்மத்தின் பலம் மறுபடியும் அதற்குமேலான ஸத்வகுணத்தினால் உண்டாக்கப்பட்டதாயும் துக்கத்தின் ஸம்பந்தமே இல்லாததாயு மிருக்கிறதென்று ஸத்வகுணத்தின் பரிபாகத்தை யறிந்தவர்கள் சொன்னார்கள். மரணகாலத்தில் வ்ருத்தியடைந்த ரஜோகுணத்திற்கு ப்ரயோஜனம் பலங்களுகக ஸாதநமாகிய கர்மங்களில்ஆசையுடை

யவர்களுடைய குலத்தில் பிறப்பது, பலத்திலாசையை முன்னிட்டுக் கர்மங்களை யாரம்பிப்பது, அவைகளின் பலத்தை யனுபவிப்பதற்காக மறுபடியும் பிறப்பது, மறுபடியும் ரஜோகுணம் வ்ருத்தியடைவது, திரும்பவும் பலத்திலாசையை முன்னிட்டுக் கர்மங்களை யாரம்பிப்பது, இப்படிப்பட்ட வரிசையாகிய ஸம்ஸாரத்திலுண்டாகிய துக்கங்கள் நிறைந்திருக்கிறது என்று அந்த ரஜோகுணத்தின் உண்மையை யறிந்தவர்கள் சொன்னார்கள். இப்படியே மரணகாலத்தில் வ்ருத்தியடைந்திருக்கிற தமோகுணத்திற்கு ப்ரயோஜனம் அஜ்ஞானங்களின் பரம்பரையே. 16

பா - அ] அப்படிப்பட்ட அதிகமான ஸத்வகுணம் முதலியவைகளாலுண்டாக்கப்பட்ட நிர்மலமாக விருக்கிறது முதலிய பலம் எது என்னில் சொல்லுகிறார்—

𑌸𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌰𑌜𑌸𑍋 𑌲𑍋𑌭 𑌏𑌵 𑌚 |
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌮𑍋𑌹𑍌 𑌤𑌮𑌸𑍋 𑌭𑌵𑌤𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌚 ‖　　17

ப - ரை] 𑌸𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 - ஸத்வகுணத்தினால், 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 - ஜ்ஞானம், 𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 - உண்டாகிறது, 𑌰𑌜𑌸𑌃 — ரஜோகுணத்தினால், 𑌲𑍋𑌭𑌃 — ஆசை (உண்டாகிறது), 𑌤𑌮𑌸𑌃 - தமோகுணத்தினால், 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌮𑍋𑌹𑍌-அஜாக்கிரதை, மோஹம், இவைகள், 𑌭𑌵𑌤𑌃 - உண்டாகின்றன, 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌚 - அஜ்ஞானமும் உண்டாகிறது　　17

பா] இப்படிப் பரம்பரையாய் உண்டாகிய அதிகமான ஸத்வகுணத்தினால் ஆத்மாவின் உண்மையை நேரில் பார்ப்பதாகிய ஜ்ஞானம் உண்டாகிறது. அப்படியே வ்ருத்தியடைந்திருக்கிற ரஜோகுணத்தினால் ஸ்வர்கம் முதலிய பலங்களிலாசை உண்டாகிறது. அப்படியே வ்ருத்தியடைந்திருக்கிற தமோகுணத்தினால் அஜாக்கிரதையினாலுண்டாகிய கெட்ட கார்யங்களில் ப்ரவ்ருத்தி உண்டாகிறது அதினால் விபரீத ஜ்ஞானம் உண்டாகிறது. அதினால் தமோகுணம் மிகவு மதிகமாகிறது. அதினால் ஜ்ஞானமில்லாமல் போய் விடுகிறது.　　17

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌜𑌸𑌾𑌃 |
𑌜𑌘𑌨𑍍𑌯𑌗𑍁𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑌾𑌃 𑌅𑌧𑍋 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌤𑌾𑌮𑌸𑌾𑌃 ‖　　18

ப - ரை] 𑌸𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌃 - ஸத்வகுணத்தில் நிஷ்டையுடையவர்கள், 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂-மேலே, 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿-போகிறார்கள், 𑌰𑌾𑌜𑌸𑌾𑌃-ரஜோகுணம்மேலிட்டவர்கள், 𑌮𑌧𑍍𑌯𑍇-நடுவில், 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿-நிற்கிறார்கள், 𑌜𑌘𑌨𑍍𑌯𑌗𑍁𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑌾𑌃 - தாழ்ந்த குணத்தினுடைய வ்யாபாரங்களில் நிஷ்டையுடைய, 𑌤𑌾𑌮𑌸𑌾𑌃 - தமோகுணம் மேலிட்டவர்கள், 𑌅𑌧𑌃 - கீழே, 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿- போகிறார்கள்.　　18

பா] இப்படிக்கீழ்ச்சொல்லிய விதமாக ஸத்வகுணத்தில் நிஷ்டையுடையவர்கள் மேலே போகிறார்கள். அதாவது க்ரமமாக ஸம்ஸாரபந்தத்திலிருந்து மோக்ஷமடைகிறார்கள். ரஜோகுணம் ஸ்வர்கம் முதலிய பலங்களில் ஆசையையுண்டாக்குகிறபடியினால் ரஜோகுணம் மேலிட்டவர்கள் பலங்களுக்கு ஸாதனமாகிய கர்மங்களைச் செய்து அவைகளின் பலங்களை யனுபவித்து மறுபடியும் பிறந்து அந்தக் கர்மங்களையே அனுஷ்டிக்கிறார்கள், ஆகையினால் நடுவிலேயே நிற்கிறார்கள். மறுபடியும் திரும்பி வருகிறதாகையினால் அது துக்கம் நிறைந்ததே. தமோகுணம் மேலிட்டவர்களோ வெனில் மேல்மேலே தாழ்ந்ததமோகுணத்தின் வ்யாபாரங்களில் நிஷ்டையுடையவர்களாய் கீழே போகிறார்கள். அதாவது சண்டாளர்களாகுகை, அதிலிருந்து பசுக்களாகவிருக்கை, அதிலிருந்து பூச்சி புழுவாகப்பிறக்கை, அதிலிருந்து ஸ்தாவரமாகுகை, அதிலிருந்து புல், பூண்டு, முதலியதாகுகை, அதிலுமிருந்து கல், உலர்ந்த கட்டை, ஓடுகள், முதலியவைகளாகுகை இவைகளை யடைகிறார்கள் என்றர்த்தம். 18

பா-அ] ஆஹார விஶேஷங்களினாலும், ப்ரயோஜனங்களில் ஆசையில்லாமல் செய்கிற ஸுக்ருத கர்மங்களினாலும் பரம்பரையாக வ்ருத்திசெய்யப்பட்ட ஸத்வகுணத்தையுடையவர்கள் குணங்களைத் தாண்டிமேலே போகும் விதத்தைச் சொல்லுகிறார்—

𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌗𑍁𑌣𑍇𑌭𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌦𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌗𑍁𑌣𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌰𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌸𑍋𑌽𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ 19

ப-ரை] 𑌯𑌦𑌾 - எப்பொழுது, 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 - அறியுந்தன்மையுடைய ஜீவாத்மா, 𑌗𑍁𑌣𑍇𑌭𑍍𑌯𑌃 - குணங்களைவிட, 𑌅𑌨𑍍𑌯𑌂 - வேறாகிய, 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 - கர்த்தாவை, 𑌨𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 - பார்க்கிறதில்லையோ, 𑌗𑍁𑌣𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 - குணங்களைவிட, 𑌪𑌰𑌂 - வேறாகிய ஜீவாத்மாவையும், 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 - அறிகிறானோ, 𑌸𑌃 - அவன், 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 - என்னுடைய ஸ்வபாவத்தை, 𑌅𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 - அடைகிறான். 19

தா] 'ஊர்த்⁴வம் க³ச்ச²ந்தி ஸத்த்வஸ்தா²:' என்று ஸத்வகுணத்தில் நிஷ்டையுடையவனுக்கு மோக்ஷமுண்டென்று சொல்லப்படுகிறதேயானால் அடுத்த மேலே மூன்று குணங்களையுந் தாண்டினவனுக்கு மோக்ஷம் உண்டென்பதோடு விரோதிக்குமே என்று சேக்ஷபம் வரில் அதற்குஸமாதானமாக மேல் க்ரந்தத்திற்கு அவதாரிகை சொல்லுகிறார்—'ஆஹார விஶேஷங்களினாலும்' என்றாரம்பித்து. ஆஹார விஶேஷம் முதலியவைகள் ஸத்வகுணம் வ்ருத்தியடைவதற்குக்காரணமென்பது முன்பின்

பா] இப்படி ஸத்வகுணம் மேலிட்ட ஆஹாரத்தை உட்கொள்ளுவதினாலும், பலங்களில் ஆசையில்லாமல் பகவானுடைய ஆராதனமாகிய கர்மங்களைச் செய்வதினாலும் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் எல்லாவிதமாகவும் அடக்கி வ்ருத்தியடைந்திருக்கிற ஸத்வகுணத்தையுடைய அறியுந்தன்மையுடைய இந்த ஜீவாத்மா எப்பொழுது குணங்களைவிட வேறாகிய கர்த்தாவைப் பார்க்கிறானோ அதாவது குணங்களே தங்களுக்குத் தகுந்த கார்யங்களில் கர்த்தாவாகின்றன என்று பார்க்கிறானோ அப்படிக் கர்த்தாவாகிய குணங்களைவிட வேறுபட்ட ஜீவாத்மாவைக் கர்த்த

ஸந்தர்ப்பங்களினால் மேலேற்பட்டது. ஸம்ஸாரத்திலுண்டாகிய மூன்று குணங்களைத் தாண்டுவதும் அதிகமாக வ்ருத்தியடைந்திருக்கிற ஸத்வ குணத்தினால் மேலே போவதும் பொருத்தமுடையது என்று தாத்பாயம் 1 'யஜ்ஞஶிஷ்டாஶிநஸ்ஸந்த:', 2 'போக்தாரம் யஜ்ஞதபஸாம்', 3 'ரஜஸ்தமஶ்சாபிபூய ஸத்த்வம் பவதி பாரத' என்று முன் சொல்லியிருப்பவைகளையனுஸரித்து இந்த ஸந்தர்ப்பத்திற்கு உசிதமான அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'இப்படி ஸத்வகுணம் மேலிட்ட' என்றாரம்பித்து. 'எல்லாவிதமாகவும்' என்பதற்கு மறுபடியும் உண்டாகாமல் என்றர்த்தம். 'நாந்யம் குணேப்ய: கர்தாரம்' என்றது குணங்களைத் தவிர வேறொன்றுக்குக் கர்த்ருத்வமில்லையென்று சொல்லுகிறது. அதில் கர்த்தாவாகிய ஆத்மா குணங்களைவிட வேறு அல்ல என்று அர்த்தம் என்கிற புத்தி உண்டாகவேண்டாம் என்று சொல்லுகிறார்—'அதாவது குணங்களே' என்றாரம்பித்து. ஜீவாத்மாவின் ஸ்வபாவமாகிய ப்ரயத்னத்திற்கிருப்பிடமாயிருக்கையாகிய கர்த்ருத்வத்தை விலக்குவதற்காகச்சொல்லுகிறார்—'தங்களுக்குத்தகுந்த காாயங்களில்' என்று. ஏதாவது ஒரு விஷயத்தில் குணங்களை கர்த்தாவென்று தெரிந்துகொள்ளுவது ஆத்மாவையறியாதவர்களுக்கும் ஸம்பவிக்குமாதலால் அவர்களைவிட விசேஷம் சொல்லப்படுகிறது 'குணேப்யஶ்ச' என்றாரம்பித்து. 'பரம்' என்பது கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஆகாரத்தினால் என்று சுருக்கிச்சொல்லுவதற்காகச் சொல்லுகிறார்—கர்த்தாவாகிய குணங்களைவிட' என்று. 'பரம்' என்று சொல்லியிருப்பதினால் கர்த்தாவாகிய குணங்களைவிட மேலானது என்றர்த்தம் என்கிற புத்தியை விலக்குகிறது 'வேறுபட்ட' என்பது. குணங்கள் ஒன்றுக்கொன்று வெவ்வேறாகவிருப்பதைப்போலவே ஜீவாத்மாவும் குணங்களைவிட வேறுபட்டவ

---

1 பகவத்கீதை-3-13.
2 பகவத்கீதை-5-29.
3 பகவத்கீதை-14-10.

வல்லாதவனைகப்பார்க்கிறானோ அவன் என்னுடைய ஸ்வபாவம் எதுவோ அதை அடைகிறான். இத்தால் சொல்லப்பட்டதாவது ஸ்வபாவத்தில் பரிசுத்தமான ஸ்வபாவத்தையுடைய ஜீவாத்மாவிற்கு அநேக விதமான கர்மங்களில் கர்த்தாவாக இருக்கை முன்பு செய்த கர்மங்களாலுண்டாகிய குணங்களின் சேர்க்கையினாலுண்டானது. ஆத்மாவோ ஸ்வபாவத்

னாக விருந்தபோதிலும் கர்த்தாவாக விருக்கை விருத்தமல்லவே என்றாக்ஷேபம் வரில் அதற்கு ஸமாதானமாகக் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஸ்வபாவமில்லாமையே 'வேறுபட்ட' என்னும் பதத்தினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது என்று சொல்லுகிறார்—'கர்த்தாவல்லாதவனைக்' என்று. குணங்களை யாதாரமாகவுடைய ப்ரவ்ருத்திகளுக்கு ஆதாரமல்லாதவனாகவும் ஸ்வபாவத்தில் அந்தக் குணங்களினால் ப்ரவ்ருத்திக்கத்தகாதவனாகவும் என்றர்த்தம். ஸ்வரூபம் ஒன்றென்கிற ப்ரமத்தை விலக்குவதற்காக மேலே சொல்லப்போகிற க்ரந்தம் என்கிற அபிப்ராயத்தினால் 'ஜ்ஞாவ' என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'என்னுடைய ஸ்வபாவம் எதுவோ' என்று. குணங்களே கர்த்தா என்கிற ஜ்ஞானம் இவ்விடத்தில் உபயோகமில்லாதது. ஆத்மா கர்த்தாவல்லாதவனென்பதோவெனில், 1 'கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்வாத்' என்றிவை முதலிய ப்ரமாணங்களுக்கு விருத்தம் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'இத்தால் சொல்லப்பட்டதாவது' என்றாரம்பித்து. புண்ய பாபங்களாகிய கர்மங்களிலும் லோகத்திலேற்பட்டகர்மங்களிலும் கர்த்தாவாகவிருக்கை ஜீவாத்மாவிற்கு ஸ்வபாவத்திலேற்பட்டதல்லவே யொழிய ப்ரயத்னத்திற்கிருப்பிடமாயிருக்கை ஸ்வபாவத்திலேற்பட்டதில்லை யென்பதில்லை என்கிற அப்பிராயத்தினால் சொல்லுகிறார்—'ஸ்வபாவத்தில்' என்றாரம்பித்து. இத்தால் ஶ்லோகத்தில் 'பரம்' என்னும் பதம் பரமாத்மாவைச் சொல்லுகிறது என்பது அபிப்ராயமல்ல என்று காட்டப்பட்டது. 'அநேகவிதமான கர்மங்களில்' என்பதற்கு ஸம்ஸாரத்திலுண்டாகிய ஸாத்விகமாயும் ராஜஸமாயும் தாமஸமாயுமிருக்கிற கர்மங்களில் என்றர்த்தம். ஆத்மாவோ ஸ்வபாவத்தில் கர்த்தாவல்ல என்பது குணங்களினால் செய்யப்பட்ட மேல்சொன்ன கர்மங்களிலேயே, அப்படிச் சொல்லாவிடில் 2 'ஸாப்பிட்டுக்கொண்டும் விளையாடிக்கொண்டிருக்கிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளுக்கு விரோதம் வருகிறபடியினால். இவ்விடத்தில் 'ஜ்ஞாவம்' என்பதற்கு ஐக்

---

1 ஶாரீரகஸூத்ரம்-2-3-33.

2 சாந்தோக்யம்-8-12-3.

தில் கர்த்தாவல்ல. அளவில்லாத ஜ்ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாக வுடையவன் என்றிப்படி ஜீவாத்மாவை எப்பொழுது பார்க்கிறனோ அப்பொழுது என்னுடைய ஸ்வபாவத்தை யடைகிறன். 19

பா - அ] கர்த்தாவாகிய குணங்களைவிட வேறுபட்டவனுய் கர்த்தாவல் லாதவனுகிய ஜீவாத்மாவைப் பார்க்கிறவன் பகவானுடைய ஸ்வபாவத்

யம் அர்த்தமென்று தோன்றும். அது 1 'ஸாதர்ம்யமாகதா:' என்று முன் சொல்லியிருப்பதற்கு விருத்தமாகும். ஶ்ருதியும் 2 'மேலான ஸாம்யத்தை யடைகிறன்' என்றல்லவோ சொல்லுகிறது. மற்றொரு ஶ்ருதியிலும் 3 'கௌதம, எப்படி சுத்தமான ஜலத்தில் மற்றொருசுத்த மானஜலம் விடப்பட்டதாய் அப்படியேயாய்விடுகிறதோ அவ்வித மாகவே ஆத்மஜ்ஞானமுடைய யோகியினுடைய ஆத்மா ஆகிறது' என்றர்த்தமுள்ள வாக்யமும் சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் இர ண்டுவிதமான ஜலங்கள் சேர்ந்தபோதிலும் இரண்டினுடைய ஸ்வரூபம் ஒன்றென்பது ஸம்பவிக்காதாகையினுலும், 'அப்படியே' என்கிற பதத் தின் ஸ்வாரஸ்யத்தினுலும் ஸமம் என்கிறதையே சொல்லுகிறது என் பது வ்யக்தமாக இருக்கிறது. வஸிஷ்ட ரிஷியும் ஜனகருக்கு 4 'பரேண பரதர்மா ச பவத்யேஷ ஸமேத்ய வை। விசுத்ததர்மா சுத்தேந புத்தேந ச ஸ புத்திமாந் ॥ விமுக்ததர்மா முக்தேந ஸமேத்ய ஹி ததா பவேத் । வியோகதர்மிணா சைவ வியோகாத்மா பவத்யபி। விமோக்ஷிணா விமோக்ஷீ ச ஸமேத்யேஹ ததா பவேத் । சுசிநா ச சுசிரேவ ச பவத்யமிததீப்திமாந் । விமலாத்மா பவத்யேஷ ஸமேத்ய விமலாத்மநா । கேவலாத்மா ததா சைவ கேவலேந ஸமேத்ய வை। ஸ்வதந்த்ரஶ்ச ஸ்வதந்த்ரேண ஸ்வதந்த்ரத்வமவாப்நுதே ॥' என்று சொன்னர். 19

ஆக இப்படி அநேகம் ஶ்ருதி ஸ்ம்ருதி முதலியவைகளுக்கு விருத் தமாகிய முக்தன் பகவானுகிறன் என்பது எப்படிச் சொல்லப்படுகி றது என்றுக்ஷேபம் வரில் அதற்கு ஸமாதானமாக கீழ்ச்சொல்லப்பட்ட அர்த்தத்தை 'கர்த்தாவாகிய' என்றாரம்பித்து அநுவாதஞ் செய்துகொ

---

1 பகவத்கீதை-14-2.

2 முண்டகோபநிஷத்-3-1-3.

3 கடோபநிஷத்-2-4-15.

4 பாரதம்—சாந்திபர்வம்-313-26-30. ஏஷ:-இந்த ஜீவாத்மா, பரேண-பரமாத் மாவுடன், ஸமேத்ய-சேர்ந்து, பரதர்மா-பரமாத்மாவின் ஸ்வபாவங்களை யுடையவ னுக, பவதி-ஆகிறன், சுத்தேந-அவித்யையில்லாத (பரமாத்வுடன் சேர்ந்து), விசுத்த தர்மா - அவித்யையில்லாமையை ஸ்வபாவமாகவுடையவனுகவும், புத்தேந-எல்

தை யடைகிறனென்று சோல்லப்பட்டது. அந்தப் பகவானுடைய ஸ்வ பாவமேப்படிப்பட்டது என்றுக்ஷேபம் வருகிறபடியினால் அதற்கு ஸமா தானஞ் சொல்லுகிறார்—

𑌗𑍁𑌣𑌾𑌨𑍇𑌤𑌾𑌨𑌤𑍀𑌤𑍍𑌯 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌦𑍇𑌹𑍀 𑌦𑍇𑌹𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍍 ।
𑌜𑌨𑍍𑌮𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌜𑌰𑌾𑌦𑍁𑌃𑌖𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌽𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥ 20

ப - ரை] 𑌦𑍇𑌹𑍀 - தேஹத்தையுடைய ஜீவாத்மா, 𑌦𑍇𑌹𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍍- தேஹத்திலுண்டாகிய, 𑌏𑌤𑌾𑌨𑍍 - இந்த, 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 - மூன்று, 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍- குணங்களை. 𑌅𑌤𑍀𑌤𑍍𑌯 - தாண்டி, 𑌜𑌨𑍍𑌮𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌜𑌰𑌾𑌦𑍁𑌃𑌖𑍈𑌃—𑌜𑌨𑍍𑌮- பிறப்பு, 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁 - மரணம், 𑌜𑌰𑌾 - கிழத்தனம் இவைகளாலுண்டாகிய, 𑌦𑍁𑌃𑌖𑍈𑌃 — துக்கங்களினால், 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 - விடப்பட்டவனாய், 𑌅𑌮𑍃𑌤𑌂 - மரணமில்லாத ஆத்மாவை, 𑌅𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 - அனுபவிக்கிறான். 20

ண்டு மேல் ஶ்லோகத்திற்கு அவதாரிகை சொல்லுகிறார்—'அந்தப் பகவானுடைய ஸ்வபாவம்' என்றாரம்பித்து. '𑌦𑍇𑌹𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍍' என்கிறவிடத்தில் தேஹம் உண்டாவதற்குக் காரணங்களாகிய என்று மற்றவர் வ்யாக்யானஞ் செய்தது யுக்தமல்ல. 1 '𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌃' என்கிறவிடத்திலே போல இவ்விடத்திலும் ப்ராக்ருதியின் மாறுதலாகிய தேஹத்தை இருப்பிடமாக உடையவைகள் என்று சொல்லுவ

லாம் தெரிந்தவனாகிய(பகவானுடன்சேர்ந்து),ஸ:-அந்தஜீவாத்மா,புத்திமாந்-எல்லா விஷயங்களைப்பற்றிய அறிவையுடையவனாகவும், முக்தேந-ஸம்ஸாரபந்தமில்லாத பரமாத்மாவுடன், ஸமேத்ய-சேர்ந்து, ததா - அப்பொழுது, விமுக்ததர்மா-ஸம்ஸார பந்தமில்லாமையை ஸ்வபாவமாக உடையவனாகவும், பவேத்-ஆவான். வியோக தர்மணா-துக்கமில்லாமையை ஸ்வபாவமாகவுடைய பகவானுடன்(சேர்ந்து),வியோ காத்மா-துக்கமில்லாமையை ஸ்வபாவமாகவுடையவனாகவும், பவதி-ஆகிறான், விமோக்ஷிணா-பேரானந்தத்தையுடைய பகவானுடன், ஸமேத்ய-சேர்ந்து, ததா-அப் பொழுதே, விமோக்ஷீ-பேரானந்தத்தை யுடையவனாக,பவேத்-ஆவான். சுசிநா-கர்ம ஸம்பந்தங்களில்லாத பகவானுடன் சேர்ந்து, சுசி:-கர்ம ஸம்பந்தங்க ளில்லாதவனாக வும், அமிததீப்திமாந்-அளவில்லாத ப்ரகாசத்தையுடையவனாகவும், பவதி-ஆகிறான், விமலாத்மநா-ஸத்வம் முதலிய மூன்று குணங்களில்லாத ஸ்வரூபத்தையுடைய பகவானுடன், ஸமேத்ய - சேர்ந்து, ஏஷ:-இந்த ஜீவன், விமலாத்மா-ஸத்வம் முதலிய குணங்களில்லாத ஸ்வபாவத்தை யுடையவனாக, பவதி-ஆகிறான், கேவ லேந - ப்ராக்ருத ஶரீரமில்லாத பகவானுடன், ஸமேத்ய-சேர்ந்து, கேவலாத்மா- ப்ராக்ருத ஶரீரங்களில்லாதவனாக (ஆகிறான்), ஸ்வதந்த்ரேண.- கர்மங்களுக்கு வசப்படாத பகவானுடன் சேர்ந்து, ஸ்வதந்த்ரத்வம்-ஸ்வதந்த்ரனான பகவானுடைய ஸாம்யத்தை, அவாப்நுயாத் - அடைவான்.

1 பகவத்கீதை-14-5.

பா] இந்த ஜீவாத்மா தேஹமாக மாறியிருக்கிற ப்ரக்ருதியிலுண்டாகிய இந்த ஸத்வம் முதலிய மூன்று குணங்களையும் தாண்டி அவைகளைவிட வேறுபட்டவனாய்ஜ்ஞானம்ஒன்றையே ஆகாரமாகவுடைய ஆத்மாவைப் பார்த்தவனாய் பிறப்பு, மரணம், கிழத்தனம் இவைகளாலுண்டான துக்கங்களால் விடப்பட்டவனாய் அழிவில்லாத ஆத்மாவையனுபவிக்கிறான். இதுதான் என்னுடைய ஸ்வபாவம் என்றர்த்தம். 20

பா - அ] பிறகு மூன்று குணங்களையுந் தாண்டியிருப்பவனுடைய ஸ்வரூபத்தைத் தெரிவிக்கக்கூடிய அனுஷ்டானங்களின் விதத்தையும் குணங்களைத் தாண்டுவதற்குக் காரணத்தையும் கேட்டுக்கொண்டு அர்ஜுநன் சொன்னான்—

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌃—அர்ஜுநன், 𑌉𑌵𑌾𑌚—சொன்னான்.

𑌕𑍈𑌰𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌗𑍁𑌣𑌾𑌨𑍇𑌤𑌾𑌨𑌤𑍀𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌕𑌿𑌮𑌾𑌚𑌾𑌰𑌃 𑌕𑌥𑌂 𑌚𑍈𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌗𑍁𑌣𑌾𑌨𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ 21

ப - ரை] 𑌪𑍍𑌰𑌭𑍋 - ப்ரபுவாகிய ஸ்ரீக்ருஷ்ண, 𑌏𑌤𑌾𑌨𑍍 - இந்த, 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 - மூன்று குணங்களையும், 𑌅𑌤𑍀𑌤𑌃–தாண்டியிருப்பவன், 𑌕𑍈𑌃- எந்த, 𑌲𑌿𑌙𑍍𑌗𑍈𑌃 - அடையாளங்களோடு (கூடியவனாக), 𑌭𑌵𑌤𑌿 - ஆகிறான், 𑌕𑌿𑌮𑌾𑌚𑌾𑌰𑌃 - எவ்வித அனுஷ்டானத்தையுடையவன், 𑌕𑌥𑌂-எப்படி, 𑌏𑌤𑌾𑌨𑍍 - இந்த, 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 - மூன்று, 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 - குணங்களை, 𑌅𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 – தாண்டுகிறான். 21

தே யுக்தமாகையினால் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தேஹமாக மாறியிருக்கிற' என்றாரம்பித்து. மேலே சொல்லப்போகிற விதமாகக் குணங்களைத்தாண்டுவது பத்தனாகவிருக்கும் தசையிலேயே என்று சொல்லுகிறார்—'மூன்று குணங்களையும்தாண்டி அவைகளைவிட வேறுபட்டவனாய்' என்றாரம்பித்து. '𑌜𑌨𑍍𑌮𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌜𑌰𑌾𑌦𑍁𑌃𑌖𑍈𑌃' என்பதற்கு அவைகளாலுண்டாகிய துக்கங்களினால் என்றர்த்தம். ஜன்மம் முதலியவைகளினாலும் அவைகளினாலுண்டாகிய துக்கங்களினாலும் என்றாகவுமாம். '[illegible]' என்றுகீழ்ச்சொல்லப்பட்டது தானே '𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌽𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇' என்பதனால் விவரிக்கப்பட்டது என்று சொல்லுகிறார்—'ஆத்மாவையனுபவிக்கிறான்' என்று. 'இதுதான் என்னுடைய ஸ்வபாவம்' என்கிறவிடத்தில் 'இதுதான்' என்பதற்கு ஶ்ருதிமுதலியவைகளுக்கு விருத்தமானதல்ல என்றர்த்தம். 20

பா] ஸத்வம் முதலிய இந்த மூன்று குணங்களையும் தாண்டியிருப்பவன் எந்த அடையாளங்களோடு கூடியவனுகை விருக்கிறுன். இவன் எவ்வித மான அனுஷ்டானத்தோடு கூடியவன். இவனுடைய ஸ்வரூபத்தை யறிவதற்கு அடையாளமாகிய அனுஷ்டானம்எப்படிப்பட்டது என்றார்த்

தா] இவ்விடத்தில் தன்னுடைய தசையைநிரூபித்துக்கொள்ளுவதற்கா கக்கேழ்க்கிற அர்ஜுநனுடையகேள்விக்குஅவதாரிகைசொல்லுகிறுர்— ‘பிறகு’ என்றாரம்பித்து. ‘லிங்கை:’, ‘கிமாசார:’ என்கிற இரண்டு பதங்களும் உள்ளே இருக்கிற ஸ்வபாவங்களையும், வெளியிலிருக்கும் ஸ்வபாவங்களையும் சொல்லுகிறதாகையினுல் ஒருவகுப்பைச்சேர்ந் ததென்பதையும், ‘கதம்ச’ என்பது உபாயத்தைப்பற்றியதனியானகேள்வி என்பதையும் அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறுர்— ‘ஸ்வரூபத்தைத் தெரிவிக்கக்கூடிய அனுஷ்டானங்களின்விதத்தையும் குணங்களைத் தாண்டுவதற்குக் காரணத்தையும்’ என்று. ‘கிம்’ என்னும் பதம் ஶேஷம் முதலியவைகளிலும் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற படியினுல் அது ‘கிம்ஸம்ஶயீகரணம்’ என்று சொல்லியிருப்பதினுலே குணங்களைத் தாண்டியிருப்பவனுக்கு அடையாளமென்பது பொருந்தாதாகையினுலும் மனதிலிருக்கிற சாந்தி முதலிய அஸாதாரணமான ஸ்வபாவங்களைச் சொல்லுகிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறுர்—‘எந்த அடையாளங்களோடு’ என்று. ‘கிமாசார:’ என்னும் பதத்திற்குஇவனுடைய ஆசாரம்எதுஎன்று பஹுவ்ரீஹி சொல்லவேண்டும் என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறுர்— ‘எவ்விதமான அனுஷ்டானத்தோடு கூடியவன்’என்று. இவ்விடத்தில் ‘ஆசார’ என்னும்பதம் அஸாதாரணமான வெளியிலுண்டாகிய அடையாளங்களைச் சொல்லுகிறதுஎன்றுசொல்லுகிறுர்—‘இவனுடைய ஸ்வரூபத்தை’ என்றாரம்பித்து. தன்னுல் அறியக்கூடியவைகளாகிய மனதில் இருக்கும் ஸ்வபாவங்களால் தன்னிடத்தில் குணங்களைத் தாண்டியிருப்பது தனக்கே தோன்றும், அப்படியிருந்த போதிலும் அயலாரிடங்களில் வெளியிலுண்டான அனுஷ்டானங்களைக்கொண்டு அதைஊஹிக்கவேண்டுமாகையினுல் அதற்காகத் தனித்துக்கேட்டிருக்கிறது, என்று தாத்பர்யம். ‘கதம்’ என்னும் பதம் இவ்விடத்தில உபாயங்களின் விதத்தைச் சொல்லுகிறது என்பது பதில் சொல்லுகிற வார்த்தையை யனுஸரித்து ஏற்படுகிறபடியினுல், அது ஸம்பவிக்காது என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பதையும், பலதசையைப்பற்றிச் சொல்லு

தம். எந்த உபாயத்தினுல் ஸத்வம் முதலிய மூன்று குணங்களையும் தாண்டுகிறுன். 21

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ||

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 - ஸ்ரீபகவானுகிய க்ருஷ்ணன், 𑌉𑌵𑌾𑌚 - சொன்னுர்.

𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌮𑍋𑌹𑌮𑍇𑌵 𑌚 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 |
𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 || 22

ப - ரை] 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 - அர்ஜுந, 𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 - உண்டாயிருக்கிற, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌚 - ப்ரகாசத்தையும், 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 - ப்ரவ்ருத்தியையும், 𑌮𑍋𑌹𑌮𑍇𑌵 𑌚 - அஜ்ஞானத்தையும் (ஆகிய இவைகளைக்குறித்து), 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 - த்வேஷம் செய்கிறதில்லை, 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 - இல்லாமலிருக்கிற மேற்கூறியவைகளை, 𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 - ஆசைப்படுகிறதில்லை. 22

பா] ஆத்மாவைத் தவிர வேருகிய அநிஷ்டமாகிய வஸ்துக்கள் விஷயத்திலுண்டாகிய ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு, இவைகளின் காார்யங்களாகிய ப்ரகாசம், ப்ரவ்ருத்தி, மோஹம், என்று பேருடையவைகளை எவன் த்வேஷிக்கிறதில்லையோ, அப்படியே ஆத்மாவைத் தவிர வேருகிய இஷ்ட

கிறது என்பதையும் விலக்குகிறுர்—'எந்த உபாயத்தினுல்' என்றுரம்பித்து. 21

'ஆத்மாவைத் தவிர வேருகிய' என்பது முதலியவைகளுக்குக் கருத்தாவது ஆத்மாவைத் தவிர வேருகிய வஸ்துக்கள் இஷ்டங்கள் என்றும் அநிஷ்டங்கள் என்றும் இரண்டு விதம். அவைகளில் அநிஷ்ட வஸ்துக்களும் அவைகளின் காரணங்களும் உண்டாகும் பொழுது அவைகளில் த்வேஷமும், இஷ்டவஸ்துக்களும் அவைகளின் காரணங்களுமில்லாமலிருக்கும்பொழுது அவைகளில் ஆசையும், லோகத்திலேற்பட்டது. அவைகளில் அநிஷ்டமான ப்ரயோஜனங்களுக்கு ஸாதனங்களாக ஏற்பட்ட குணங்களின் கார்யங்களை எவன் த்வேஷிக்கிறதில்லையோ, இஷ்டமான ப்ரயோஜனங்களுக்கு ஸாதனமாக இருந்து கிடைக்காமற்போன அவைகளை மறுபடி ஆசைப்படுகிறதில்லையோ. ப்ரகாசம் அநிஷ்டத்திற்கு ஸாதனம் என்பது பயம் முதலியவைகளுக்குக் காரணமாகிய வஸ்துக்கள் விஷயத்தில் வ்யக்தமாயிருக்கிறது. இஷ்டத்திற்கு ஸாதனமென்பதும் ப்ரியமான விஷயங்களிலேற்பட்டிருக்கிறது. ப்ரவ்ருத்தியும் அபத்யம், மருந்து, முதலியவைகளைப்பற்றிய விஷயங்களில் அநிஷ்டம் இஷ்டங்களுக்கு ஸாதனமென்பது மேற்பட்டிருக்கிறது. மோஹமும் அனுகூல வஸ்துக்களில் ப்ரதிகூலமென்று புத்தி யுண்டாகும்

மான வஸ்துக்கள் விஷயத்தில் இல்லாத மேற் கூறியவைகளைப் பற்றி ஆசைப்படுவதுமில்லையோ. 22

உதா³ஸீநவதா³ஸீநோ கு³ணைர்யோ ந விசால்யதே |
கு³ணா வர்த்தந்த இத்யேவ யோऽவதிஷ்ட²தி நேங்க³தே || 23

ப - ரை] யஃ - எவன், உதா³ஸீநவத் - உதாஸீநனைப்போல, ஆஸீநஃ - இருந்துகொண்டு, கு³ணைஃ - ஸத்வம் முதலிய குணங்களினால், ந விசால்யதே - அசைக்கப்படுகிறதில்லையோ, கு³ணாஃ - குணங்கள், வர்த்தந்தே - (தன்னுடைய கார்யங்களில்) இருக்கின்றன, இத்யேவ - என்று நினைத்துக்கொண்டு, யஃ - எவன், அவதிஷ்ட²தி - பேசாமலிருக்கிறானோ, நேங்க³தே - தான் ஒன்றும் செய்கிறதில்லையோ. 23

பா] குணங்களைத்தவிர வேறாகிய ஆத்மாவைப் பார்ப்பதினாலுண்டாகிய த்ருப்தியினால் மற்ற விஷயங்களில் உதாஸீநனைப்போ லிருந்துகொண்டு ஸத்வம் முதலிய குணங்களினால் த்வேஷம் ஆசை இவைகளை முன்னிட்டு எவன் அசைக்கப்படுகிறதில்லையோ, குணங்கள் தங்கள் கார்யங்க

பொழுதும், ப்ரதிகூல வஸ்துக்களில் அனுகூலமென்று புத்தி யுண்டாகும் பொழுதும், அநிஷ்டம் இஷ்டம் இவைகளுக்கு ஸாதனமாகிறது என்பது த்வேஷம் ஆசை இவைகளை மறுப்பதற்கு அவைகளில் ப்ரஸ்தாவம் வேண்டுமே அதற்காக இஷ்டமென்றும் அநிஷ்டமென்றும் சொல்லியிருக்கிறது. 22

ஶரீரத்தோடுகூட இருப்பவன் இஷ்டம் அநிஷ்டம் இவைகளின் காரணம் நேர்ந்தபொழுது எப்படி விகாரங்களை யடையாமலிருப்பான் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம்—இந்த ஶ்லோகம். ஆத்மாவைத் தவிர வேறு விஷயங்களில் உதாஸீநனாயிருக்கை குணங்களின் கார்யங்களில் த்வேஷமும் ஆசையும் இல்லாமலிருப்பதற்குக் காரணம். 'அசைக்கப்படுகிறதில்லையோ' என்பதற்கு வெளி விஷயங்களில் கார்யங்களின் வழியாக ப்ரவ்ருத்திப்பிக்கப்படுகிறதில்லையோ என்றர்த்தம். அசைக்கப்படாம லிருக்கையை விவரிப்பதற்காக 'த்வேஷம் ஆசை இவைகளை முன்னிட்டு' என்று அசங்குதலின் விதத்தைச் சொல்லியிருக்கிறது. 1 'கு³ணா கு³ணேஷு வர்த்தந்தே' என்று கீழ்ச்சொல்லியிருப்பதும் 'கு³ணா வர்த்தந்தே' என்பதும் ஒரே அர்த்தத்தைச்சொல்லுகிறது என்பதைக் காட்டிக்கொண்டு அசைக்கப்படாம லிருப்பதின் காரணத்தைச் சொல்லுகிறார்—'குணங்கள் தங்கள கார்யங்களில்' என்றாரம்பித்து. 'இதி' என்று சொல்லியிருப்பது அநுஸந்தானஞ் செய்

---

1 *பகவத்கீதை-3-28.*

ளாகிய ப்ரகாசம் முதலியவைகளில் இருக்கின்றன என்று நினைத்துக் கொண்டு எவன் பேசாமலிருக்கிறானோ, அந்தக் குணங்களின் கார்யங்களுக்குத் தக்கபடி தான் ஒன்றும் செய்கிறதில்லையோ. 23

ஸமது:³க²ஸுக²ஸ்ஸ்வஸ்த²ஸ் ஸமலோஷ்டாஸ்²மகாஞ்சந: |
துல்யப்ரியாப்ரியோ தீ⁴ர: துல்யநிந்தா³த்மஸம்ஸ்துதி: || 24

மாநாவமாநயோஸ்துல்யஸ்துல்யோ மித்ராரிபக்ஷயோ: |
ஸர்வாரம்ப⁴பரித்யாகீ³ கு³ணாதீதஸ்ஸ உச்யதே || 25

ப-ரை] ஸமது:³க²ஸுக²:-துக்கம், ஸுகம், இவைகளில் ஸமமான மனதையுடையவன், ஸ்வஸ்த²:- ஆத்மாவினிடத்திலேயே இருப்பவன், ஸமலோஷ்டாஸ்²மகாஞ்சந:-ஓட்டாஞ்சல்லி, கல், தங்கம், இவைகளை ஸமமாக நினைப்பவன், துல்யப்ரியாப்ரிய: - இஷ்டம், அநிஷ்டம், இவைகளில் ஸமமான மனதையுடையவன், தீ⁴ர: - தேஹாத்ம விவேகமுள்ளவன், துல்யநிந்தா³த்மஸம்ஸ்துதி: - தன்னை நிந்திப்பதையும் ஸ்தோத்திரம் செய்வதையும் ஸமமாக நினைப்பவன், மாநாவமாநயோ:-பஹுமானம், அவமானம், இவைகளில், துல்ய: - ஸமமாக விருப்பவன், மித்ராரிபக்ஷயோ: - ஸ்நேகிதன், சத்ரு, இவர்கள் பக்ஷங்களில், துல்ய: - ஸமமாக விருப்பவன், ஸர்வாரம்ப⁴பரித்யாகீ³ - எல்லாக் கர்மங்களின் ஆரம்பத்தை விட்டவன் (எவன் இப்படிப்பட்டவனோ), ஸ: - அவன், கு³ணாதீத: - குணங்களைத் தாண்டினவனாக, உச்யதே - சொல்லப்படுகிறான். 24–25

யும் விதத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'நினைத்துக் கொண்டு' என்று. 'அவ' என்பதின் அபிப்ராயத்திலிருக்கு மர்த்தத்தைச் சொல்லுகிறார்—'பேசாமல்' என்று. 'அவதிஷ்டதி' என்கிற விடத்தில் 'அவதிஷ்டதே' என்று ஆத்மநே பதமாகச் சொல்லில் இந்த வ்ருத்தத்திற்குக்கெடுதல் வரும் என்று பயந்து ருஷியினால் பரஸ்மைபதமாய் ப்ரயோகிக்கப்பட்டது என்று தாத்பர்யம். தங்கள் கார்யங்களில் ப்ரவ்ருத்தித்திருக்கிற இந்தக் குணங்களினால் எனக்கு என்ன ஆக வேண்டியதென்று தாத்பர்யம். உதாஸீநனாயிருப்பதை விவரணம் செய்திருக்கிறது. 'நவிசால்யதே' என்பதினால் 'நேங்கதே' என்பது விவரிக்கப்பட்டது. அதையே சொல்லுகிறார்—'அந்தக் குணங்களின் கார்யங்களுக்குத் தக்கபடி' என்றாரம்பித்து. த்வேஷம் ஆசை இவைகளுக்குத் தக்கபடி ப்ரவ்ருத்திக்கிறதில்லை யென்றர்த்தம். 23

பா] ஸுகம், துக்கம், இவைகளில் ஸமமான மனதையுடையவனும், தன்னிடத்திலேயே இருப்பவனும், அதாவது தன்னுடைய ஆத்மா ஒன்றையே ப்ரியமாக உடையவனாகையினால் அதைத் தவிர வேறாகிய பிள்ளை முதலியவைகளின் பிறப்பு மரணம் முதலிய ஸுகதுக்கங்களில் ஸமமான மனதையுடையவன் என்றர்த்தம். ஆகையினாலேயே ஓட்டாஞ்சல்லி, கல், தங்கம், இவைகளை ஸமமாக நினைத்துக்கொண்டவனும், ஆகையினாலேயே இஷ்டமாயும் அநிஷ்டமாயுமிருக்கிற விஷயங்களை ஸமமாக நினைத்துக்கொண்டவனும், ப்ரக்ருதி, ஜீவாத்மா, இவைகளின் பகுத்தறிவில் ஸாமர்த்யமுள்ளவனும், ஆகையினாலேயேஆத்மா

தா] ஸுக துக்கங்கள் இரண்டிலும் ஸமமாகவிருக்கை முதலியது முன்பே நன்றாக நிரூபிக்கப்பட்டது. 'ஸ்வஸ்த:' என்னும் பதத்தினால் விகாரங்களில்லாமை, குணங்களை யனுஸரித்திராமை, முதலியவைகளை மாத்திரம் நிரூபிப்பதாய் இருந்தால் புனருக்தி வருகிறது. ஆத்மாவினிடத்தில் நிஷ்டையை யுடையவனாயிருக்கையைச் சொல்லுவதோவெனில் அநேக விதங்களாகிய ஸமமான மனதையுடையவனாயிருக்கையைச் சொல்லுவதற்குக் காரணமாக விருக்கையினால் உபயோகமுடையது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தன்னிடத்திலேயே இருப்பவனும்' என்று. அதின் அபிப்ராயத்திலேற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அதாவது தன்னுடைய' என்றாரம்பித்து. ஸுகம், துக்கம், இஷ்டம், அநிஷ்டம், முதலிய பதங்கள் அநேகமாக ஒரே அர்த்தத்தைச் சொல்லுவதாக விருந்த போதிலும் லோகவ்யவஹாரத்தை யனுஸரித்துப் புனருக்தி பரிஹரிக்கப்பட்டது. 'ஆகையினாலேயே' என்பதற்கு தன்னிடத்திலேயே இருந்துகொண்டிருப்பதினாலேயே என்றர்த்தம். இஷ்டங்கள் அநிஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் கலக்கத்தகாமலிருக்கை 'துல்யப்ரியாப்ரிய:' என்னும் பதத்தினாலேற்பட்டிருப்பதினால் இவ்விடத்தில் சொல்லப்படுகிற விசேஷமான புத்தியை உடையவனாக விருக்கையாகிற 'தீர:' என்பதை நிந்தையிலும் ஸ்தோத்ரத்திலும் ஸமமாயிருப்பது முதலியவைகளுக்கு எப்படியானால் காரணமாகுமோ அப்படி நிரூபிக்கிறார்— 'ப்ரக்ருதி, ஜீவாத்மா' என்றாரம்பித்து. 'தீர:' என்கிறவரையில் உள்ளே இருக்கும் அடையாளங்கள் சொல்லப்பட்டதுகள். பிறகு வெளியிலுண்டான நடவடிக்கைகளாகிற அடையாளங்களைப்பற்றிய கேழ்விக்குப்பதில் சொல்லுகிறார், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—' ஆகையினாலேயே ஆத்மாவினிடத்தில்' என்றாரம்பித்து. 'மாநா பமாநயோ:' என்பது முதலியது வெளிப்படையாளங்களைச் சொல்லுகிறதென்று சிலர் சொல்லுகிறார்

விஷயத்தில் மனுஷ்யனாயிருப்பது முதலியதை அபிமானிப்பதினால் செய்யப்பட்ட நல்ல குணம் கெட்ட குணம் இவைகளைக் காரணமாக வுடைய ஸ்தோத்திரம் நிந்தித்தல் இவைகள் தன்னிடத்தில் ஸம்பந்தப் பட்டவைகளல்ல என்று நினைத்துக்கொள்வதினால் அவைகளில் ஸம மான மனதையுடையவனாயும், அதினால் உண்டாகிய பஹுமானம் அவ மானங்களிலும் அதினாலேற்படுத்தப்பட்ட ஸ்நேகிதன் சத்துரு இவர்கள் பக்ஷ ங்களிலும் அவைகள் தன்னோடு ஸம்பந்தப்பட்டவைகளல்லவாகையி னாலேயே ஸமமான மனதை யுடையவனாயும், அப்படியே தேஹத்தோடு

கள். ஸ்தோத்திரம், நிந்தை, இவைகளாவது குணங்களையும் தோ ஷங்களையும் ப்ரகாசப்படுத்துவது. அதில் தேஹத்தைவிட வேறுபட்ட ஆத்மாவை அறிந்தவனுக்கு தேஹத்திலிருக்கிற அழகு குரூபியாயிரு க்கை, முதலிய குணங்களாலும் தோஷங்களாலும் ஸ்தோத்திரமும் நிந் தையும் ஏற்பட்டால் அயலாரைப்பற்றி ஸ்தோத்திரம் செய்வதையும் நிந் திப்பதையும் போல ப்ரீதி முதலியவைகள் உண்டாகிறதில்லை என்று சொல்லுகிறார்—'ஆத்மாவினிடத்தில்' என்றாரம்பித்து. 1 'மூடா: பூஜிதபூஜகா:' என்று சொல்லியிருக்கிற ந்யாயத்தினால் லோகத் திலிருக்கிற மனுஷ்யர்கள் மற்றவர்களால் ஸ்தோத்திரம் செய்யப் பட்டவனைக் கொண்டாடுகிறார்கள். நிந்திக்கப்பட்டவனை அவமானஞ் செய்கிறார்கள். பஹுமானம்: அவமானம் இவைகளின் விதங்களும் லோக நடவடிக்கைகளாலும் ஶாஸ்த்ரங்களாலுமேற்பட்டிருக்கின் றன. அதில் பஹுமானஞ் செய்கிறவர்கள் ஸ்நேகிதர்களாகிறார் கள். அவமானம் செய்கிறவர்கள் சத்ருக்களாகிறார்கள் என்று லோகத்தில் கண்டறிந்த க்ரமம் இவ்விடத்தில் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'அதினாலுண்டாகிய' என்றாரம்பித்து. வாயி னால் சொல்லப்படுகிற ஸ்தோத்திரத்தையும் நிந்தையையும் தனித் துச் சொல்லியிருப்பதினால் இவ்விடத்தில் 'மாந', 'அவமாந' என்னும் பதங்கள் மனதினாலும் ஶரீரத்தினாலும் செய்யப்பட்டவைகளைப்பற்றி யவை. ஸமமான புத்தியையுடைய குணங்களைத் தாண்டினவனுக் கும் அயலாருடைய புத்தியினால் கல்பனை செய்யப்பட்ட ஸ்நேகிதன் சத்துரு இவர்களுடைய பக்ஷங்களிருக்கின்றன. 'ஆரப்யதே' என் கிற வ்யுத்பத்தியினால் 'ஆரம்பா:' என்பது கர்மம், அதாவது செய்த தற்குப் பதில் செய்வது முதலியவை. மோக்ஷத்திற்குக் காரணமாகிய கர்மங்களை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'தேஹத்தோடு சேர்ந்

1 *மஹாபாரதம், உத்யோக பர்வம்-33 - 62. மூர்க்கா:—மூடர்கள், பூஜிதபூஜகா:-அயலாரால் பூஜிக்கப்பட்டவர்களைப் பூஜிப்பவர்கள்.*

சேர்ந்திருப்பதினால் உண்டாகிய எல்லா ஆரம்பங்களையும் விட்டவனும், எவன் இருக்கிறானோ அவன் குணங்களைத் தாண்டினவனென்று சொல்லப்படுகிறான். 24-25

பா-அ] பிறகு இப்படிப்பட்ட குணங்களைத் தாண்டுவதற்கு முக்யமான காரணத்தைச் சொல்லுகிறார்—

மாம் ச யோऽவ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே ।
ஸ குணாந் ஸமதீத்யைதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே ॥ 26

ப-ரை] யঃ - எவன், மாம் - என்னை, அவ்யபிசாரேண - வேறொருவரிடத்திலும் செலுத்தாத, பக்தியோகேந - பக்தியோகத்தினாலும், ஸேவதே - அடைகிறானோ, ஸঃ - அவன், ஏதாந் - இந்த, குணாந் - குணங்களை, ஸமதீத்ய - தாண்டி, ப்ரஹ்மபூயாய - ப்ரமத்திற்கு ஸமமான ஸ்வபாவத்தை யடைவதற்கு, கல்பதே - தகுந்தவனாகிறான். 26

பா] * 'நாந்யம் குணேப்ய: கர்தாரம்' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டதாகிய ப்ரக்ருதி, ஜீவாத்மா, இவைகளின் வ்யத்யாஸத்தை அநுஸந்தானம்

திருப்பதினால் உண்டாகிய' என்று. ஸம்ஸாரத்திலுண்டான எல்லாக் கர்மங்களையும் விட்டவன் என்றர்த்தம். இதுதான் வெளியிலுண்டாகிய நடவடிக்கையாகிய அடையாளம். மனதில் இருக்கிற த்வேஷமில்லாமை முதலியவைகளாலும் வெளியிலிருக்கிற ஆரம்பங்களை விட்டிருப்பது முதலியவைகளாலும் குணங்களைத் தாண்டினவன் நிரூபிக்கப்படுகிறான். அவைகளே குணங்களைத் தாண்டுவதற்குபாயங்கள் என்று மூன்றுவிதக் கேள்விகளும் பதில் சொல்லப்பட்டதாகிறது. 24—25

இவ்விடத்தில் 'மாம்ச' என்கிற ஶ்லோகத்தினால் தனியாக வேறு உபாயத்தை விதித்திருக்கிறதோ என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'பிறகு' என்றாரம்பித்து. குணங்களைத் தாண்டுவதற்குக்காரணமாகியவைகளில் ப்ரதானங்களல்லாதவைகளைச் சொன்ன பிறகு என்றர்த்தம். ஆகையினாலல்லவோ 'முக்யமான காரணத்தைச்சொல்லுகிறார்' என்று சொல்லப்பட்டது. 'நாந்யம்' என்பது முதலிய வாக்யத்திற்கு த்ருஷ்டமாக உபகாரம் செய்கிறவைகளுக்குத் தடங்கல்கள் அதிகமாகையினால் கேவலங்களாகிய அவைகள் கார்யங்களைச் செய்யாது என்று தாத்பர்யம். 'மாம்' என்பதினால் வாஸனைவரையிலுள்ள அநாதியான தடங்கல்களை நீக்குவதற்குபயோகமாகிய

* பகவத்கீதை - 14-11.

செய்வது மாத்திரத்தினுல் குணங்களைத் தாண்டுவது ஸித்திக்காது, அது அநாதிகாலமாய் உண்டாகிய அதற்கு விரோதமான வாஸனையினுல் தடுக்கப்படக்கூடுமாகையினுல். ஸத்ய ஸங்கல்பனுயும் மிகுந்த கருணையையுடையவனுயும், ஆஶ்ரிதர்களிடத்தில் வாத்ஸல்யத்திற்கு ஸமுத்ரமாயுமிருக்கிற என்னை ஒரே நிஶ்சயத்துடன் கூடிய பக்தியோகத்தினுலும் எவன் ஆஶ்ரயிக்கிருனே அவன் ஒருவராலும் தாண்டமுடியாத இந்த

குணங்களையுடையவன் என்று சொல்லியிருக்கிறது என்று சொல்லுகிறார்—'ஸத்யஸங்கல்பனுயும்' என்றாரம்பித்து. 1 'பராபித்யாநாத்து திரோஹிதம் | ததோ ஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ' என்கிற ஸூத்ரத்தில் சொல்லியிருக்கிறபடியே பரமாத்மாவினுடைய, ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகிய ஸங்கல்பத்தைப் போலவே அதை நிவ்ருத்திக்கிற ஸங்கல்பமும் ஒன்றினுலும் தடுக்கப்படாதது என்று தாத்பர்யம். ஸத்ய ஸங்கல்பனுகவிருந்தபோதிலும் ஸமமாகையினுல் உதாஸீநனாயிருப்பனே என்கிற ஸந்தேஹத்தைப் பரிகரிப்பதற்காக 'மிகுந்த கருணையுடையவனுயும்' என்று சொல்லியிருக்கிறது. தோஷங்களையுடைய ஸம்ஸாரிகளிடத்தில் கருணைக்கிடமேது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'ஆஶ்ரிதர்களிடத்தில்' என்றாரம்பித்து. இப்படி நிக்ரஹம் செய்வதற்கும் அனுக்ரஹம் செய்வதற்கும் பொதுவாகிய ஸத்ய ஸங்கல்பனுகவிருக்கை அனுக்ரஹம் ஒன்றுக்கே காரணமாகுமென்பதைத் தெரிவிப்பதற்காக கருணை வாத்ஸல்யம், ஆகிய இரண்டு குணங்களும் சொல்லப்பட்டன. வ்யபிசாரமில்லாமையாவது இதர தேவதைகள் முதலியவைகளை விட்டுவிடுவது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறார்—'ஒரே நிஶ்சயத்துடன் கூடிய' என்று. பக்தியோகத்துடன் அதற்கங்கமாகிய முன்பு சொல்லப்பட்டவைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பதற்காக 'ச' என்னும் பதம். அவைகளாலும் பரமாத்மாவே ஆராதிக்கப்படுகிருனல்லவா. 'ஏதாந் (இந்த)' என்பதினுல் முன்பு சொல்லிய குணங்கள் பந்தத்தையுண்டாக்குகின்றன என்பது சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறார்—'ஒருவராலும் தாண்டமுடியாத' என்று. இத்தால் 2 'தைவீஹ்யே

---

1 ஶாரீரகஸூத்ரம் - 3 - 1 - 4. பராபித்யாநாத் - பகவானுடைய ஸங்கல்பத்தினுல், திரோஹிதம் - (இவனுடைய ஜ்ஞானம்) மறைக்கப்பட்டிருக்கிறது ததः-பகவானுடைய ஸங்கல்பத்தினுலேயே, அஸ்ய-இந்த ஜீவனுக்கு, பந்த விபர்யயௌ - ஸம்ஸாரபந்தமும், மோக்ஷமும் (உண்டாகின்றன.)

2 பகவத்கீதை - 7 - 14.

ஸத்வம் முதலிய குணங்களைத் தாண்டி ப்ரம்மமாவதற்குத் தகுந்தவனாகிறான். அதாவது ப்ரம்மத்தின் ஸ்வபாவத்தை யடையத் தகுந்தவனாகிறான். உள்ளபடியிருக்கிற விகாரங்களில்லாத மரணமில்லாத ஜீவாத்மாவை யடைகிறான் என்றர்த்தம். 26

ஷாமாணஸீ' என்பது முதலிய ஶ்லோகங்களில் சொல்லப்பட்டதும் ஜ்ஞாபகப்படுத்தப்பட்டது. 'கல்பதே' என்பதினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ப்ரம்மத்தின் ஸ்வபாவத்தை யடையத் தகுந்தவனாகிறான்' என்று. ஜீவாத்மாவிற்கு இங்கு சொல்லப்படுகிற ஸ்வபாவமாவது எது? அதையடையத்தகுந்தவனாகை எப்படிப்பட்டது? என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'உள்ளபடியிருக்கிற'என்றாரம்பித்து. 1 'ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா' என்றிவை முதலிய விடங்களிலே போல மரணமில்லாமலும் விகாரங்களில்லாமலுமிருக்கை முதலிய ஸ்வபாவங்களினால் ப்ரம்மத்திற்கு ஸமமாகவிருப்பதே ஶ்ருதி முதலியவைகளிலேற்பட்டது. அதுவே இவ்விடத்தில ப்ரம்மத்தின் ஸ்வபாவம் என்னப்படுகிறது. அந்தப் ப்ரம்மத்திற்கு ஸமமாகியஸ்வபாவமும் 2 'ஜந்மம்ருத்யுஜராது:கைர் விமுக்தோ(அ)ம்ருதமஶ்நுதே' 3 'தேஹே தேஹிநமவ்யயம்' என்றிவை முதலியவைகளால் இந்த அத்யாயத்திலேயே சொல்லப்பட்டது. அடுத்த ஶ்லோகத்திலும் 'அம்ருதஸ்யாவ்யயஸ்ய ச' என்று விஶேஷித்துச் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். அங்கங்களோடு கூடிய ஒரே நிர்ச்சயத்தோடு கூடிய பக்தியோகத்தினால் ஆஶ்ரயிக்கப்பட்ட நானே மோக்ஷத்தில் ஆசையையுடையவனுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கிறேன் என்று சொல்லப்பட்டதாகிறது. 26

இப்படி மோக்ஷத்தைக் கொடுக்கிறேனென்று ப்ரஸ்தாவம் வந்த பொழுது ஶாரீரகஸூத்ரத்தில் எப்படி 4 'பலமத உபபத்தே:' என்று பொதுவாக எல்லாப் பலங்களையும் அவனே கொடுக்கிறானென்பது எல்லாப் பலங்களும் அவனுக்கு வசப்பட்டதென்று தெரிவிப்பதற்காக நிரூபிக்கப்பட்டதோ அப்படியே இவ்விடத்திலும் நடு ஷட்கத்தில்

---

1 *பகவத்கீதை* - 18 - 54.

2 *பகவத்கீதை* - 14 - 20.

3 *பகவத்கீதை* - 14 - 5.

4 *ஶாரீரகஸூத்ரம்*-3-2-37. *பலம்-எல்லாப்பலமும், அத: இந்தப் பகவானிடத்திலிருந்து உண்டாகிறது, உபபத்தே: அப்படி யிருப்பதே பொருத்தமுடையதாகையினால்.*

ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹமம்ருதஸ்யாவ்யயஸ்ய ச ।
ஶாஶ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச ॥ 27

ஸ்ரீ கண்ணபிரானருளிச்செய்த ஸ்ரீ பகவத்கீதையில்
பதிநான்காவது அத்யாயம் முற்றிற்று.
ஶ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ப - ரை] அஹம் — நான். ஹி - எந்தக்காரணத்தினால், அம்ருதஸ்ய - மரணமில்லாத, அவ்யயஸ்ய ச - விகாரங்களில்லாத, ப்ரஹ்மண: — பரிசுத்தமான ஜீவாத்மாவிற்கும், ஶாஶ்வதஸ்ய - அழிவில்லாத, தர்மஸ்ய ச - தர்மங்களா லுண்டாகக்கூடிய ஐஶ்வர்யத்திற்கும், ஐகாந்திகஸ்ய ச - ஏகாந்திகளால் அடையக்கூடிய, ஸுகஸ்ய ச - மோக்ஷ ஸுகத்திற்கும், ப்ரதிஷ்டா - இருப்பிடமோ. 27

பா] 'ஹி' என்னும் பதம் காரணத்தைச் சொல்லுகிறது. எந்தக் காரணத்தினால் நான் ஒரே நிஶ்சயத்தையுடைய பக்தியோகத்தினால் ஆராதிக்கப்பட்டவனாய் மரணமில்லாமலும் விகாரங்களில்லாமலுமிருக்கிற

விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்ட மூன்றுவித பலங்களையும் நானே கொடுக்கிறேனென்பது கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட பலத்திற்குத் தானே காரணம் என்பதை ஸ்தாபிப்பதற்காக இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஹி என்னும் பதம் காரணத்தைச் சொல்லுகிறது' என்று. இவ்விடத்தில் 'ப்ரஹ்மண:' என்னும்பதம் நேரில் பரமாத்மாவைச்சொல்லுகிறதல்ல, நான் ப்ரம்மத்திற் காதாரம் என்று தனித்துச் சொல்லியிருப்பதற்கு விரோதம் வருமாகையினால். ஜீவாத்மாவாகவும், போக்யமாகவும், இவைகளை நியமிப்பவனாகவும், மூன்றுவித பாகங்களாகிய ப்ரம்மத்திற்கு ஈஶ்வரனாகிய பாகம் தனியாகையினால் ஆதாரம் என்பதும் ஸரியல்ல, ஈஶ்வரனே ப்ரம்மமென்று ஸ்தாபித்திருப்பதினால். நிர்குணமாகிய ப்ரம்மத்தின் ஸ்வரூபம் பேதங்களோடு கூடிய ப்ரம்மத்திற்கு ஆதாரம் என்றாவது, ஜீவாத்மா பரமாத்மாவுக்காதாரம் என்றாவது,சொல்லுவதும் ஸரியல்ல, ஶ்ருதி முதலியவைகளுக்கு விரோதம் வருகிறபடியினாலும், அந்த மதங்களை முன்னமேயே நிராகரித்திருப்பதினாலும். ப்ராக்ருதி முதலியவைகளையும் சொல்லுகிறதல்ல, அப்படியாகில் கீழ் ப்ரஸ்தாவித்திருப்பதற்குக் காரணமென்பது பொருந்தாதாகையினால். ஆகையினால் 'ப்ரஹ்ம பூயாய கல்பதே' என்று ஜீவாத்மாவிற்கு பலதசை

பரிசுத்தமான ஆத்மாவிற்கு ஆதாரமோ, அப்படியே மேலான நித்யமாகிய ஐஶ்வர்யத்திற்கு * 'வாஸுதேவஸ்ஸர்வம்' என்றாரம்பித்துச் சொல்லப்பட்ட ஜ்ஞானிக்கு அடையக்கூடியதாகிய ஸுகத்திற்கும் (ஆதார

யில் வரப்போகிறதாகச் சொல்லப்பட்ட ரூபம் இவ்விடத்தில் 'ப்ரஹ்ம' என்னும் பதத்தினால் உபசாரமாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ரூபத்திற்கு நான் ஆதாரம் என்றர்த்தம். இத் தாலேற்பட்டது என்னவெனில் மோக்ஷத்தில் ஆசையுடையவனுக்குப் பரமாத்மாவிற்கு ஸமானமாகிய பரிசுத்தமான ஸ்வரூபத்தை அடைவதற்குக் காரணமாயும் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டதாயும், நித்யமாக இருப்பதாயும், தன்னால் செய்யக்கூடியதாயுமிருக்கிற வஸ்துக்களுக்குள் எது முக்யமான காரணம் என்று விசாரிக்கும்பொழுது அந்த விசாரம் முடியும் இடம் நானே என்று. அன்றிக்கே 'ப்ரதிஷ்டா' என்னும் பதம் ஆதாரத்தைச்சொல்லுகிறது. அப்படி ஆதாரமாக இருக்கையும் 1'கார்கியே, இந்தப் பரமாத்மாவின் நியமனத்தில் ஸூர்யன், சந்திரன், இவர்கள் தரிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தை யனுஸரித்து நியமிப்பதையும் சேர்த்துக்கொண்டிருக்கிறது என்று 2 'ஸாவஹ்ராஶாவஸாநாஜ' என்கிற ஸூத்ரத்தினால் சொல்லப்பட்டது. ஆகையினால் பரிசுத்தமான ஜீவாத்மாவின் ஸ்வரூபமும் என்னொருவனாலேயே நியமிக்கக்கூடியதாகையினால் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ப்ரம்மமாகவிருக்கை என்னிடத்தில் பக்தி செய்வதொன்றினாலேயே யடையத்தக்கது என்றர்த்தம். 'ஶாஶ்வதஸ்ய தர்மஸ்ய' என்பதினால் அந்தத் தர்மத்தின் பலங்கள் லக்ஷணையாகச்சொல்லப்படுகின்றன என்று சொல்லுகிறார்—'அப்படியே மேலான நித்யமான ஐஶ்வர்யத்திற்கும்' என்று. மேலானதாவது இந்த்ரன், ப்ரம்மா, முதலியவர்களுடைய ஸுகங்களைவிட மேல்பட்டிருப்பது என்றும், நித்யமாக விருப்பதாவது மற்றவர்களுடைய ஸுகங்களைவிட வெகுகால மிருக்கிறதுமாத்திரம்என்றுமறியவேண்டியது. 'வாஸுதேவ:' என்றாரம்பித்த வாக்யத்தின் கருத்தாவது—ஏகாந்திகளால் அடையக்கூடிய ஸுகம் ஏகாந்திகளுடைய தாகையினால் ஐகாந்திகம் என்று சொல்லப்படுகிறது—என்பது. 'சொல்லப்பட்ட' என்பது ஜ்ஞானிக்கு விஶேஷணம். இப்படி மோக்ஷத்திலும் ஸுகமுண்டென்று சொல்லி

* பகவத்கீதை - 7 - 19.

1 ப்ரஹதாரண்யகம்-5-8-2.

2 ஶாரீரக ஸூத்ரம்-2-3-10. ஸாச-அந்த த்தரிப்பதும், ப்ரஶாஸ நாத்-நியமிப்பதினாலே.

மோ) என்றர்த்தம் இவ்விடத்தில் 'ஶாஶ்வத யஶ:' என்னும் பதம் ஐஶ்வர்யத்திற்குபாயங்களாகிய தர்மத்தைச் சொல்லுகிறது. அப்படி யிருந்த போதிலும்முன்னும்பின்னுமிருக்கிறபதங்கள்ப்ரயோஜனங்களைச்சொல்லு

யிருப்பதினால் மோக்ஷம் கல்லைப்போல ஸுகதுக்கமொன்றுமில்லாமலி ருக்கிறதுஎன்பது முதலியபக்ஷங்கள்நிராகரிக்கப்பட்டன. 1 'இச்சா த்வேஷ: ஸுகம் து:கம்' என்று கணக்கிட்டிருப்பதினால் ஸுகமெல்லாம் ஶரீரத்தின் கார்யம் என்று ப்ரமிக்க வேண்டியதில்லை, 2 'ஆனந்த ரூபியாகிய பகவானை அடைந்து இந்த ஜீவாத்மா ஆனந்தத்தையுடைய வனாக ஆகிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் ப்ராக்ருதியிலிரு க்கிற ஸுகத்தைவிட வேறு ஸுகமுண்டென்று சொல்லியிருப் பதினால். ஆகையினாலேயே 3 'ஶரீரமில்லாமலிருப்பவனை ப்ரியம், அப்ரியம், இவை இரண்டும் தொடுவதில்லை' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யமும் துக்கத்தோடு கலந்த ஸுகமில்லையென்று சொல்லுகிறது என்று நினைக்கவேண்டியது. இவ்விடத்தில் 'ஶாஶ்வதஸ்ய யஶஸ:' என்னும் பதங்களினால் மேலான ஐஶ்வர்யத்தை லக்ஷணையாகச் சொல் லுவது யுக்தமல்ல, ஏனெனில் முக்யமான அர்த்தத்தைச் சொல்லுவ தற்கு ஒருவிரோதமு மில்லாமையினால். 4 'நாராயணஶ்ஶாஶ்வதயஶோ ஹரா:' என்கிற இவை முதலிய விடங்களிலும் இது ப்ரஸித்தமாயிரு க்கிறது. 'ஶாஶ்வத' என்னும் விஶேஷணத்தினால் நிவ்ருத்தி தர்மம் சொல்லப்படுகிறதென்று தோன்றுகிறது. அதற்கு ப்ரளயம் முதலிய காலங்களிலும் பாஷண்டர்கள் முதலியவர்களால் ஹிம்ஸையுண்டாகும் பொழுதும் 5 'யதாயதா' என்று கீழேசொல்லியிருக்கிற க்ரமத்தினால் தானே காப்பாற்றுகிறபடியினால் அதற்குத் தான் ஆதாரமென்பதும் எல்லாவிடங்களிலும் ப்ரஸித்தமாயிருக்கிறது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'இவ்விடத்தில் ஶாஶ்வத யஶ:' என்னும் பதம்' என்றாரம்பித்து. 'ப்ரஹ்மணோ ஹி' என்பது பலத்தைச்சொல்லு கிறதென்பது கீழே நிரூபிக்கப்பட்டது. அப்படியே 'ஸுகஸ்யைகா ந்திகஸ்ய' என்பதும் நேரில் பகவானை யனுபவிப்பதாகிய ஸுகத்தைச்

1 பகவத்கீதை-13-6.

2 தைத்திரீயம்.

3 சாந்தோக்யம்-8-12-1.

4 பாரதம், மோக்ஷதர்மம்-343-5. நாராயணன், அழிவில்லாத தர்மத்தைக் காப்பாற்றுகிறவன்.

5 பகவத்கீதை-4-7.

கின்றனவாகையினால் அத்தோடு சேர்ந்திருப்பதினால்இதுவும் ப்ரயோஜன த்தையே குறிக்கிறது. இத்தால் சொல்லப்பட்டதாவது முன்பு ‡ 'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா। மாமேவ யே ப்ரபத்யந்தே' என்றாரம்பித்துக் குணங்களைத் தாண்டுவதும்அதை முன்னிட்டு வருகிற ஜீவாத்மாவையும் ஐஶ்வர்யங்களையும் பகவானையும் அடைவது • பகவானுடைய ப்ரபத்தி ஒன்றையே உபாயமாக உடையவைகள் என்று நிரூபிக்கப்பட்டபடியினால் ஒரே நிஶ்சயத்தோடு கூடிய பகவானுடைய ப்ர

சொல்லுகிறதென்பதும் ஸ்பஷ்டமாக விருக்கிறது. அல்பமாக விருக்கைமுதலிய தோஷங்களையுடையவைகளாகிய ஜீவாத்மாவை அனுபவிப்பது ஐஶ்வர்யமிவைகளாலுண்டான ஸுகங்களை விலக்குவதற்காகவல்லவோ 'ஐகாந்திக' என்னும் பதம் சொல்லப்பட்டிருக்கிறது. இவை இரண்டிற்கும் நடுவில் சொல்லியிருப்பதினால் முதலில் சொல்லியிருப்பதுபோலவே பின்னுமிருக்கவேண்டு மென்கிற ந்யாயத்தினாலும் கீழே சொல்லப்பட்ட ஐஶ்வர்யம் இங்கே சொல்லப்படுகிறது. ஆகையினால் அவைகளின் உபாயத்தைச் சொல்லுகிற பதத்தினால் லக்ஷணையாக அவைகளைச் சொல்லுவது யுக்தந்தான். ஆகையினாலேயே இந்தப் பதத்தினால் நிவ்ருத்தி தர்மமும் சொல்லப்படுகிறதில்லை. மோக்ஷ ஸுகத்திற்குபாயமாக அது தனித்து அநுஸந்தானஞ்செய்யத்தக்கதுஎன்று. இவ்விடத்தில் கீழே ப்ரஸ்தாவிக்கப்படாத ஐஶ்வர்யம் முதலியவைகளை ப்ரஸ்தாவித்தது எதற்காக? வேறொன்றை யாரம்பித்து மற்றொன்றை முடிப்பது யுக்தமல்லவே. ஐஶ்வர்யத்திற்குத் தான் ஆதாரமாக விருப்பது கீழ் ப்ரஸ்தாவித்திருப்பதற் கெப்படிக் காரணமாகும்? கீழே ஏற்பட்ட அர்த்தமன்றோ காரணமாகச் சொல்லத்தக்கது. அப்படியெங்கே ஏற்பட்டது? குணங்களைத்தாண்டாமல் பகவானிடத்தில் ஒரேநிஶ்சயத்தோடு கூடிய பக்தி எப்படிச் செய்யமுடியும்? பகவானிடத்தில் பக்தியினாலேயே குணங்களைத்தாண்டமுடியுமென்னில் அந்யோந்யாஶ்ரயம்வருகிறதே என்பவைமுதலிய ஆக்ஷேபங்வரில் அதற்குஸமாதானம் சொல்லுகிறார்—'இத்தால்சொல்லப்பட்டதாவது'என்றாரம்பித்து. கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட எல்லாப் பலங்களும் தனக்குவசப்பட்டதென்பதை இவ்விடத்தில் ஜ்ஞாபகப்படுத்தினதற்கு ப்ரயோஜனம் இப்பொழுது ப்ரஸ்தாவிக்கப்பட்ட குணங்களைத் தாண்டுவதை முன்னிட்டு வருகிற ப்ரம்மமாக ஆகுகையும் தனக்கு வசப்பட்டதென்பதை ஸ்தாபிப்பது. ஒரே நிஶ்சயத்துடன் கூடியபக்தியோகம் என்னும்பதம் இவ்விடத்தில்

‡ பகவத்கீதை - 7 - 14.

பத்தி ஒன்றையே உபாயமாக உடையது. குணங்களைத் தாண்டுவேதும் அதைமுன்னிட்டு அடையக்கூடியப்ரம்மத்தின் ஸ்வபாவமும் என்பது. 27

ஸ்ரீபகவத் ராமாநுஜனர் என்கிற உடையவர் அருளிச்செய்த

ஸ்ரீ கீதாபாஷ்யத்தில்

பதினான்காவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம꞉.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

பக்தியோகத்திற் கங்கமாகிய ப்ரபத்தியையும் சொல்லுகிறது. ஆகையினுல் முன் பின் ஸந்தர்ப்பங்கள் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்று தாத்பர்யம். 27

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனருளிச்செய்த தாத்பர்ய சந்த்ரிகையில்

பதினான்காவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம꞉



ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹம்.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

குணபந்தவிதா தேஷாம் கர்த்ருத்வம் தந்நிவர்த்தநம் |
கதித்ரயஸ்வமூலத்வம் சதுர்தச உதீர்யதே || 18

ப - ரை] குணபந்தவிதா - குணங்கள் ஸம்ஸாரபந்தத்தை யுண்டாக்கும் விதமும், தேஷாம் - அந்தக் குணங்களுக்கே, கர்த்ருத்வம் - கர்த்ருத்வமுண்டென்பதும், தந்நிவர்த்தநம் - அந்தக்குணங்களை நிவ்ருத்தி செய்வதும், கதித்ரயஸ்வமூலத்வம் — மூன்று விதமான பலங்களும் தன்னையே காரணமாகவுடையது என்பதும், சதுர்தசே - பதிநான்காவது அத்யாயத்தில், உதீர்யதே - சொல்லப்படுகிறது. 18

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக னருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை.

இவ்விடத்தில் இந்த ஸங்க்ரஹ ஶ்லோகத்தின் அர்த்தத்தை நிரூபித்துக்கொண்டு ஸங்கதியையும் சொல்லுகிற பாஷ்யத்தில், பதிமூன்றாவது அத்யாயத்தில், ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டிருக்கிற ப்ரக்ருதி, ஜீவாத்மா, இவைகளினுடைய ஸ்வரூபத்தின் உண்மையையறிந்துகொண்டு பகவானிடத்தில் பக்தியினால் ஒத்தாசை செய்யப்பட்ட அமாநித்வம் முதலிய குணங்களினால் ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுகிறான் என்று சொல்லப்பட்டது. அதில் ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணம் முன் உண்டாகிய ஸத்வம் முதலிய குணங்களின் கார்யங்களாகிய ஸுகம் முதலியவைகளில் பற்றுதல் என்பதும் 1 'காரணம் குணஸங்கோ(அ)ஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு' என்பதினால் சொல்லப்பட்டது. பிறகு இப்பொழுது அந்தக் குணங்கள் ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமாகும் விதமும், அந்தக் குணங்களை நிவ்ருத்தி செய்யும் விதமும் சொல்லப்படுகிறது, என்று சொல்லப்பட்டது. குணங்களே கர்த்தா என்பது முதலியவைகளை பாஷ்யத்தில் சொல்லாமல் விட்டுவிட்டது முன் அத்யாயத்திலே போலவே அவைகள் முக்யமான அர்த்தமல்லவாகையினால் என்று நினைக்கவேண்டியது. ஸத்வகுணம் ஸுகத்திலும்

---

1 பகவத்கீதை-13-21.

ஜ்ஞானத்திலும் ஆசையை யுண்டாக்கிக் கட்டுப்படுத்துகிறது. ரஜோ குணம் கர்மங்களில் ஆசையையுண்டாக்கிக் கட்டுப்படுத்துகிறது. தமோ குணம் அஜாக்கிரதை, சோம்பல், தூக்கம், முதலியவைகளால் கட்டுப்படுத்துகிறது என்று ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமாகும் விதம் சொல்லப்பட்டது. அந்தக் குணங்களுக்கே கர்த்ருவத்வம் உண்டென்பதும் முன்பு சொல்லியபடி உசிதானுசிதங்களைப் பிரித்து நிரூபிப்பதினால் அந்தக் குணங்களுக்கே ஸ்தாபிக்கப்பட்டது. அதுவும் இந்த அத்யாயத்தில் 1 'நாந்யம் குணேப்ய: கர்தாரம்' என்று ஜ்ஞாபகப் படுத்தப்பட்டது. அந்தக் குணங்களை நிவ்ருத்தி செய்யும் விதமும் இவ்விடத்தில் 2 'மாம் ச யோऽவ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே । ஸ குணாந் ஸமதீத்யைதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே ॥' என்பதினால் சொல்லப்பட்டது. ஆகையினால் இவ்விடத்தில் 'பக்த்யா பரமயா யுக்தா:' என்பது 3 'ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹம்' என்றிந்த அத்யாயத்தின் கடைசி ஶ்லோகத்தில் சொன்ன அர்த்தத்தையே சொல்லுகிறது ஆகையினாலேயே அந்தஶ்லோகத்தின் பாஷ்யத்தில் முன்பு 4 'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா । மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥' என்றாரம்பித்துக் குணங்களைத்தாண்டுவதும், அதை முன்னிட்டுவரும் கைவல்யத்தை யடைவதும், ஐஶ்வர்யத்தை யடைவதும், பகவானையடைவதும், பகவானிடத்தில் ஶரணாகதியொன்றையே உபாயமாகவுடையது என்று நிரூபிக்கப்பட்டிருப்பதினால் ஶூர நிஶ்சயத்தோடுகூடிய பகவானை ஆஶ்ரயிப்பதொன்றையே உபாயமாகவுடையது குணத்தைத் தாண்டுவதும் அதை முன்னிட்டுவரும் பரிசுத்தமான ஜீவாத்மாவை அனுபவிப்பதும் என்றும் சொல்லப்பட்டது. 5 'ஊர்த்வம் கச்சந்தி' என்றாரம்பித்துச் சொல்லப்பட்ட மூன்றுவித கதிகளையும் சொல்லுவதாக விருந்தால் ஸங்க்ரஹத்தில் சொல்லியிருக்கிற வரிசை க்ரமத்திற்கு விரோதம் வரும்.

பதிநான்காவது அத்யாயம் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

---

1 பகவத்கீதை-14-12.
2 பகவத்கீதை-14-26.
3 பகவத்கீதை-14-27.
4 பகவத்கீதை-7-14.
5 பகவத்கீதை-14-18.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனருளிச்செய்த

கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

முக்குணமே யுயிர்முற்றவுங் கட்டிடமூண்டமையும்
முக்குணமே யனைத்தும் வினைகோள்ள முயன்றமையும்
முக்குணமாயை கடத்தலு முக்கதிதன்னளிப்பும்
முக்குண மற்றபிரான் மோழிந்தான் முடியோன்றனக்கே. 16

ப - ரை] முக்குணம் - மூன்று குணங்களும், அற்ற - இல்லாதவனாகிய, பிரான் - உபகாரகனாகிய ஸ்ரீ க்ருஷ்ணன், முடியோன்றனக்கு - அர்ஜுநனுக்கு, முக்குணமே - மூன்று குணங்களுமே, உயிர் - ஜீவாத்மாக்களை, முற்றவும்-முழுமையும், கட்டிட-ஸம்ஸாரத்தில் கட்டிட,மூண்டமையும்-ப்ரவ்ருத்தித் திருக்கிறபடியையும், முக்குணமே - மூன்று குணங்களுமே, வினை - புண்யபாபங்களாகிற கர்மங்களை, அனைத்தும் - எல்லாவற்றையும், கோள்ள - அடைய, அதாவது தாங்கள் அதற்குக் கர்த்தாவாகவிருக்க, முயன்றமையும் - முயற்சி செய்திருப்பதையும், அன்றிக்கே முக்குணமே - மூன்று குணங்களுமே, அனைத்தும் - கீழ்ச்சோல்லிய ஜீவாத்மா எல்லாவற்றையும், வினை - புண்யபாபரூப கர்மங்கள், கோள்ள - அடைய, அதாவது ஜீவாத்மாவிற்கு புண்ய பாப ரூப கர்மங்களும், அவைகளின் பலங்களும் உண்டாகும்படி, முயன்றமையும் - முயற்சிசெய்திருப்பதையும், முக்குணமாயை - இந்த மூன்று குணங்களையுமுடையப்ரக்ருதியை, கடத்தலும் - தாண்டுவேதும், முக்கதி - மூன்றுவிதமான கதிகளும், தன்னளிப்பும் - தன்னால் கோடுக்கப்படுகிறது என்பதையும், மோழிந்தான்-சோன்னான். 16

'மூண்டமையும்' என்பதினால் ஜ்ஞானம், ஸுகம், ப்ரவ்ருத்தி, அஜாக்கிரதை, சோம்பல், தூக்கம், முதலியவைகளில் ஆசையையுண்டாக்கி மேன்மேலென ஸம்ஸாரபந்தமுண்டாவதற்குக் காரணமாகவிருக்கின்றன என்பது கருத்து. 'முற்றவும்' என்பதினால் கீழ் 'ஸம்ஹவஹுவடுமூதாநாம' என்று சொல்லப்பட்ட எல்லா ப்ராணிகளுக்கும் இந்தக் குணங்களாலுண்டாகும் பந்தம் ஸமம் என்று சொல்லப்பட்

டது. 'முக்குணமே யனைத்தும்' என்பதினால் 'நாந்யம் குணேப்ய: கர்தாரம்' என்பதின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. இதனால் எல்லா ஜீவாத்மாக்களும் புண்ய பாப ரூப கர்மங்களும் அதின் பலங்களுமுண்டாவதற்கு இந்தக்குணங்களின் ஸம்பந்தமே முக்யமான காரணம் என்றேற்பட்டது. 'முக்குணமாயை கடத்தலும்' என்கிற விடத்தில் ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் 'தந்நிவர்தநம்' என்று குணங்களை மாத்திரம் சொல்லியிருந்தபோதிலும் கீழ் 1 'மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே' என்று 'மாயா' என்னும் பதம் ப்ரயோகிக்கப் பட்டிருப்பதினால் இவ்விடத்தில் குணங்களைத் தாண்டுவதென்று சொல்லியிருப்பதினால் அவைகளுக்காதாரமான மாயையைத் தாண்டுவது மேற்பட்டது என்றபிப்ராயம். ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் 'கதித்ரயஸ்வமூலத்வம்' என்றிருப்பதினால் 'முக்கதிதன்னளிப்பும்' என்கிறபாடமே அதை யனுஸரித்தது. அப்படிக்கில்லாமல் 'தந்தளிப்பும்' என்று பாடமாகில் தன்னுடைய என்னும் பதத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவ்விடத்தில் முக்யமான அர்த்தம்நானே எல்லாப் பலங்களுக்கும் காரணம் என்பது ஆகையினால் அது நேரில் பதத்தினாலேயே சொல்லப்படவேண்டும். ஆகையினால் 'தன்னளிப்பும்' என்பதே ஸ்வாரஸ்யமான பாடம் முக்கதியாவது இவ்விடத்தில் ஐஶ்வர்யம், கைவல்யம் பகவத்ப்ராப்தி. கீழே 2 'ஊர்த்வம் கச்சந்தி' என்று சொல்லப்பட்ட மூன்றுவிதமான கதியைச் சொல்லுவதாயிருந்தால் முக்குணமாயை கடத்தலுக்கு முந்திச் சொல்லியிருக்கவேண்டும். ஸங்க்ரஹ ஶ்லோகத்திலும் இதே க்ரமம் சொல்லப்பட்டிருக்கிறபடியினால் இந்த அத்யாயத்தின் கடைசி ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட மூன்று கதிகளையே சொல்லியிருக்கிறதென்று கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையில் தம்மாலேயே வ்யாக்யானஞ்செய்யப்பட்டது. 'முக்குணமற்ற' என்றிவ்விடத்தில்பகவானுக்கு சுத்தஸத்வத்தின் ஸம்பந்தமிருந்தபோதிலும் ரஜஸ்ஸு, தமஸ்ஸு, கலந்தஸத்வமில்லாமையினால் சொல்லப்பட்டது. அந்தசுத்தஸத்வமும் இந்த ப்ராக்ருதியைச் சேர்ந்த மூன்று குணங்களைவிட வேறுபட்டதென்று

1 பகவத்கீதை-7-14.

2 பகவத்கீதை-14-18

ஶாஸ்த்ரங்களிலேற்பட்டது. 'முடிபோன்தனக்கே' என்பதினால் தேவேந்திரன் தன்னுடைய கிரீடத்தை தலையில் வைத்து கிரீட என்று பட்டாபிஷேகஞ் செய்தது ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. அன்றிக்கே முடியையுடையவன் என்று தாத்பர்யம். அதாவது 1 'ஶிஷ்யஸ்தே ஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்' என்றும், 2 'நம: புரஸ்தாத்' என்றும் சொல்லியிருக்கிறபடியே அநேக இடங்களில் நமஸ்காரம் செய்ததினால் அவனுடைய முடி நிலைபெற்றது என்றும், முடியென்று சொல்லத்தக்கதென்றும் தாத்பர்யம். அப்படி பகவானை ஸேவிக்காமல் போனால் 3 'ஹார: ஶரங்கி கிரீட ஜுஷ்டே தேவ்யாத்தாம் நநஷே ந கஞ்சம்' என்று சொல்லியிருக்கிறபடியே கேவல சுமையாகவல்லவோ இருக்கும். அப்படியல்லாமல் 4 'ஶிரஸ்தி தவ்யாஹ பதிஜநேக' என்கிறபடியே ஶ்லாகிக்கப்பட்ட முடியையுடையவனான் என்று தாத்பர்யமாகவுமாம்.

சீரொன்று தூப்புல் திருவேங்கட முடையான் திருவடிகளே சரணம்.

1 பகவத்கீதை-2-11.
2 பகவத்கீதை-11-40.
3 பாகவதம்.
4 பாகவதம்-10-வது ஸ்கந்தம்.

ஸ்ரீ பகவத் கீதை

பதினைந்தாவது அத்யாயம்.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பா - அ] க்ஷேத்ராத்யாயம்என்று சொல்லப்படுகிறபதிமூன்றாவது அத்யாயத்தில், க்ஷேத்ரமாகவும் க்ஷேத்ரஜ்ஞனாகவுமிருக்கிற ப்ரக்ருதி ஜீவாத்மா, இவைகளின் ஸ்வரூபங்களை நிரூபித்து பரிசுத்தனாயும் அளவில்லாத ஜ்ஞானமொன்றையே ஆகாரமாகவுடையவனாயு மிருக்கிற ஜீவாத்மாவிற்கு ப்ரக்ருதியைச்சேர்ந்த குணங்களில் பற்றுதல்களினுடைய பரம்பரையினால் உண்டாகிய தேவன் முதலிய ஆகாரங்களாக மாறியிருக்கிற ப்ரக்ருதியின் ஸம்பந்தம் அநாதி என்று சொல்லப்பட்டது. அதற்குமேல் அத்யாயத்தில் ஜீவாத்மாவிற்குக் கார்யதசை காரணதசை இவைகளையுடைய ப்ரக்ருதியின் ஸம்பந்தம் குணங்களில் பற்றுதலினால் உண்டாகியது பகவானாலேயே செய்யப்பட்டது என்று சொல்லிக் குணங்களில் பற்றுதலுண்டாகும் விதத்தை விஸ்தாரமாக நிரூபித்துக் குணங்களில் பற்றுதல் நிவ்ருத்திப்பதை முன்னிட்டுஆத்மாவின் உண்மையையடைவதும் பகவானிடத்தில் பக்தியைக் காரணமாகயுடையது என்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது பக்திசெய்யப்படுகிற பகவான் க்ஷரமும்அக்ஷரமுமாகிய பத்த ஜீவன், முக்த ஜீவன், இவைகளை விபூதியாக உடைய

தா] இப்படிக் கீழ் இரண்டத்யாயங்களினால் முதல் ஷட்கத்தில் சொல்லப்பட்ட ப்ரக்ருதி,ஜீவாத்மா,இவைகளின் ஸ்வபாவ விசேஷங்கள் நிரூபிக்கப்பட்டன. அதில் இந்த ப்ரக்ருதி தன்னுடைய குணங்களுடன் எவனுக்கு வசப்பட்ட ஸ்வரூபம் முதலியவைகளையுடையதோ, ஜீவாத்மா எவனிடத்தில் அபராதம் செய்ததினால் கட்டப்பட்டிருக்கிறானோ, எவனுடைய அனுக்ரஹத்தினால் மோக்ஷத்தை யடையப்போகிறான் என்று சொல்லப்பட்டதோ, அப்படிப்பட்ட நடு ஷட்கத்தில் சொல்லப்பட்ட பரமாத்மா நிரூபிக்கப்படுகிறான் என்று ஸங்கதியைச் சொல்லு

வன் என்பதையும், விபூதியாகிய க்ஷரம் அக்ஷரம் என்று சொல்லப்படுகிற இரண்டுவித ஜீவர்களைக் காட்டிலும் எல்லாக்கெட்ட குணங்களுக்கும் விரோதமாயும் கல்யாணகுணங்களுக்கேஇருப்பிடமாகவும்இருக்கிறபடியினாலே மிகவும் மேலானவனாகையினால் வேறு பட்டவனாகிய பகவான் புருஷோத்தமன் என்பதையும் சொல்லுவதற்கு ஆரம்பிக்கிறார். அதில் முதலில் பற்றுதலில்லாமையாகிற கத்தியினால் அறுக்கப்பட்ட ஸம்ஸார பந்தத்தையுடைய அக்ஷரம் என்னும் விபூதியைச் சொல்லுவதற்காக

கிறார்—'க்ஷேத்ராத்யயம் என்று சொல்லப்படுகிற' என்றாரம்பித்து, 'ஆரம்பிக்கிறார்' என்கிறவரையில். இத்தால் 1 'அசிந்மிஶ்ராத்³விஶுத்³தா⁴ச்ச சேதநாத் புருஷோத்தம꞉ । வ்யாபநாத்³ப⁴ரணாத்ஸ்வாம்யாத³ந்ய꞉ பஞ்சத³ஶோதி³த꞉ ॥' என்கிற ஸங்க்ரஹஶ்லோகமும் நினைக்கப்பட்டது. பதிமூன்றாவது அத்யாயத்திற்கு அங்கமாகப் பதிநான்காவது அத்யாயத்தைச் சொன்ன பிறகு அதின் கடைசியில் 2 'மாம்ச' என்பது முதல் இரண்டு ஶ்லோகங்களினால் ஒரே நிஶ்சயத்தோடு கூடிய பக்தியினால் ஆஶ்ரயிக்கத்தகுந்தவனையும், பலங்களைக்கொடுக்கிறவனையுமிருக்கிற பரமாத்மா ப்ரஸ்தாவிக்கப்பட்டான். பதினைந்தாவது அத்யாயத்தில் அவனுடைய மேன்மை நிரூபிக்கப்படுகிறதாகையினால் பதினான்காவது அத்யாயத்தோடு ஸங்கதி உண்டென்பது 'பக்தி செய்யப்படுகிற பகவான்' என்றாரம்பித்துக் காண்பிக்கப்பட்டது. இவைகளை விபூதியாகவுடையவன் என்பதை இவ்விடத்தில் நிரூபித்திருப்பது அவைகளைவிட வேறுபட்டவனென்று நிரூபிப்பதற்காக என்கிற அபிப்ராயத்தினால் 'ஆரம்பிக்கிறார்' என்று சொல்லப்பட்டது. கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட பத்த ஜீவர்கள் முக்த ஜீவர்கள் இவர்களை விபூதியாகவுடையவன் என்பது இந்த அத்யாயத்தில் நிரூபிக்கப்படுகிறது. ஆகையினாலும் கீழ்ச் சொல்லப்பட்ட இரண்டு அத்யாயங்களுடன் ஸங்கதி உண்டென்று அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. அதில் 'ஊர்த்⁴வமூலம்' என்பது முதலிய இந்த அத்யாயத்தின் ஆரம்பத்திலிருக்கிற க்ரந்தம் அந்வயமில்லாதது. அப்படி அந்வயமிருந்தபோதிலும் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட அர்த்தத்துடனும் மேல் ப்ரஸ்தாவிக்கப்போகிற அர்த்தத்துடனும் பொருத்தமில்லாதது என்கிற ஆக்ஷேபத்தைப் பரிகரிப்பதற்காகச் சொல்லுகிறார்—'அதில் முதலில்' என்றாரம்பித்து. ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளுவதற்காக ஶ்ருதியையனுஸரித்து அரசமரத்தின்

---

1 கீதார்த்த ஸங்க்ரஹ ஶ்லோகம்-19.

2 பகவத்கீதை-14-26.

வெட்டத்தகுந்ததாகிய ஸம்ஸாரபந்தமாகப் பரவியிருக்கிற அசேதனவஸ்துவின் மாறுதலை அரசமரமாகக் கல்பனை செய்துகொண்டு பகவான் சொல்லுகிறார்—

ஶ்ரீபகவாநுவாச।

ஶ்ரீபகவாந் - ஸ்ரீ பகவானாகிய க்ருஷ்ணன், உவாச - சொன்னார்.

ஊர்த்வமூலமத:ஶாகமஶ்வத்தம் ப்ராஹுரவ்யயம் ।
சந்தாம்ஸி யஸ்ய பர்ணாநி யஸ்தம் வேத ஸ வேதவித் ॥ 1

ப - ரை] அஶ்வத்தம் - (எந்த) அரசமரத்தை, ஊர்த்வமூலம் - மேல்பாகத்தில் வேரையுடையதாயும், அத:ஶாகம் - கீழ்பாகத்தில் கிளைகளையுடையதாயும், அவ்யயம் - அழிவில்லாததாகவும், ப்ராஹு: - ஶ்ருதிகள் சொல்

ஆகாரத்தையுடையதாக இந்தக் கல்பனைசெய்திருக்கிறது. மேலான தத்வத்தை அறியவேண்டுமென்கிற ஆசைக்குக்காரணமாகிய வைராக்ய முண்டாவதற்காக வென்று சிலர் சொல்லுகிறார்கள். எப்படியெனில் இந்த ஸம்ஸாரத்தை விபூதியாகத்தெரிந்து கொண்டதினால் இதை விபூதியாகவுடையவனுடைய மேன்மையும் நிரூபிப்பதற்குக் காரணமாகிறபடியினால். மேலே பற்றுதலில்லாமையாகிற கத்தியினால் வெட்டத்தகுந்ததென்று சொல்லியிருக்கிறபடியினால் அப்படிப்பற்றுதலுண்டாவதற்கு விஷயமாகிய ஸம்ஸாரமே இவ்விடத்தில் அரசமரத்தின் ரூபமுடையதாகக் கல்பனை செய்யப்படுகிறது என்றேற்படுகிறது. அதில் லோகத்திலிருக்கிற அரசமரங்களைவிட விஜாதீயமானதென்றுதெரிவிப்பதற்காக 'ஊர்த்வமூலம்' முதலிய ஆஶ்சர்யங்களைக் காட்டியிருக்கிறது என்று தாத்பர்யம். இவ்விடத்தில் மூலப்ரக்ருதியே அரச மரமாகக் கல்பனை செய்யப்படுகிறதென்று ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது? 1 'குணப்ரவ்ருத்தா விஷயா ப்ரவாலா:' என்பவை முதலியவைகளும் அதைப்பற்றியிருந்தால் பொருத்தமுடையவைகளாக ஆகின்றனவே என்னில் அது உசிதமல்ல, நேரில் அதுபற்றுதலுண்டாகக் கூடிய விஷயமல்லவாகையினாலும், பற்றுதலில்லாமையாகிற கத்தியினால் வெட்டத்தகுந்ததென்பதும் அந்த மூல ப்ரக்ருதிநாசமில்லாததாகையினால் அதில் முக்யமாகப் பொருந்தாதாகையினாலும். இதையே அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'அசேதனவஸ்துவின் மாறுதலை' என்றும் 'எந்தஸம்ஸாரமாகிற' என்றும் சொல்லப்பட்டது. இந்த அர்

---

1 பகவத்கீதை-15-2.

லிற்றோ, யஸ்ய - எந்த அரசமரத்திற்கு, ச2ந்தா3ம்ஸி - வேதங்கள், பர்ணாநி - இலைகளோ, தம் - அப்படிப்பட்ட அரசமரத்தை, ய:-எவன், வேத3 - தெரிந்துகொள்ளுகிறானோ, ஸ: - அவன், வேத3வித் - வேதத்தைத் தெரிந்துகொண்டவன். 1

பா] எந்த ஸம்ஸாரமாகிற அரசமரத்தை மேல்பாகத்தில் வேருடையதாகவும் கீழ்பாகத்தில் கிளைகளையுடையதாகவும் * 'மேல்பாகத்தில் வேரு

த்தமே புராணத்திலும் சொல்லப்படுகிறது. 4 'அவ்யக்தமூலப்ரப4வஸ்தஸ்யைவாநுக்3ரஹோச்ச்2ரித:| பு3த்3தி4ஸ்கந்த4மயஸ்சைவ இந்த்3ரியாந்தரகோடர:|| மஹாபூ4தவிஸாகஸ்ச விஷயை: பத்ரவாம்ஸ்ததா2| த4ர்மாத4ர்மஸுபுஷ்பஸ்ச ஸுக2து3:க2ப2லோத3ய:|| ஆஜீவ்ய: ஸர்வபூ4தாநாம் ப்3ரஹ்மவ்ருக்ஷ: ஸநாதந:| ஏதத்3 ப்3ரஹ்ம வநஞ்சைவ ப்3ரஹ்மவ்ருக்ஷஸ்ய தஸ்ய தத்|| ஏதச்சி2த்வா ச பி4த்வா ச ஜ்ஞாநேந பரமாஸிநா| ததஸ்சாத்மரதிம் ப்ராப்ய யஸ்மாந்நாவர்த்ததே புந:||' என்றிவை முதலியவைகளில் சொல்லப்படுகின்றன. சிலர் புருஷர்களுடைய ஒவ்வொரு ஸரீரத்திலேயே தலைமேல் நோக்கியிருக்கிறபடியினாலும் கைமுதலியவைகள் கீழ்முகமாக விருக்கிறபடியினாலும் 'ஊர்த்4வமூலம்' முதலியவைகளாகக் கல்பித்திருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் சிலர்

---

* *கடஸ்ருதி*-6-1.

4 *நரஸிம்மபுராணம்*-16,4, 5,6, 7, 11. *அவ்யக்த மூலப்ரபவ: - அவ்யக்தமாகிற வேரிலிருந்து உண்டானதும், தஸ்யைவ-அந்த அவ்யக்தத்தினுடையவே, அநுக்ரஹோச்சரித:-ஒத்தாசையினால் ஓங்கிவளர்ந்ததும், புத்திஸ்கந்தமய:-புத்திகளாகிற கிளைகள் நிறைந்ததும், இந்த்ரியாந்தரகோடர:-இந்த்ரியங்களின் த்வாரங்களாகிற பொந்துகளையுடையதாகவும், மஹாபூதவிசாகஸ்ச-பஞ்சபூதங்களாகிற பக்கக் கிளைகளையுடையதாகவும், விஷயை:-சப்தம் முதலிய விஷயங்களினால், பத்ரசாகவாந்-இலைகளையும் கிளைகளையுமுடையதாகவும், தர்மாதர்மஸுபுஷ்பஸ்ச-தர்மம், அதர்மங்களாகிற புஷ்பங்களை உடையதாகவும், ஸுகதுக்க பலோதய:-ஸுகம், துக்கம், இவைகளாகிற பழங்கள் உண்டாகக்கூடியதும், ஸர்வபூதாநாம்-எல்லா ப்ராணிகளுக்கும், ஆஜீவ்ய:-அடையக்கூடியதுமாகிய, ஸநாதந:-அநாதியாகிய, ப்ரம்மவ்ருக்ஷ:-ப்ரக்ருதியாகிய வ்ருக்ஷம், தஸ்ய-அந்த, ப்ரம்மவ்ருக்ஷஸ்ய-ப்ரக்ருதியாகியமரத்திற்கு, ஏதத்-இந்த, ப்ரம்ம-ப்ரக்ருதியே, வநம்சைவ-காடும், ஏதத்-அப்படிப்பட்ட இந்தமரத்தை, ஜ்ஞாநேந-ஜ்ஞானமாகிற, பரமாஸிநா-உயர்ந்த கத்தியினால், சித்வாச-வெட்டியும், பித்வாச-பிளந்தும், ததஸ்ச-அதினாலேயே, ஆத்மரதிம்-ஆத்மாவினிடத்திலாசையை, ப்ராப்ய-அடைந்து, யஸ்மாத்-எதிலிருந்து, புந:-மறுபடியும், நாவர்த்ததே-திரும்புகிறதில்லையோ (அப்படிப்பட்ட ஆத்மாவை யடைகிறான்.)*

டையதாகவும் கீழ்பாகத்தில் கிளைகளையுடையதாகவு மிருக்கிற இந்தஅரச மரம் அநாதியானது' என்றும், † 'மேல் பாகத்தில் வேரையுடையதும் கீழ் பாகத்தில் கிளைகளையுடையதுமாகிய மரத்தை எவன் இப்பொழுது தெரிந்துகொள்ளுகிறனே' என்றுமர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்கள் சொல்லுகின்

வேறுவிதமாகவும் அதாவது இது வ்யஷ்டி க்ஷேத்ரம் சொல்லப்பட்டது. பிறகு ஸமஷ்டிக்ஷேத்ரம் சொல்லப்படுகிறது. இந்த ப்ரம்மாண்டம் முழுமையும் ப்ரம்மாவிற்குச் ஶரீரம். அதுவே விராட்என்று சொல்லப்படுகிறது. அதற்கு ஸ்வர்க்கம் தலை, சந்திர ஸூர்யர்கள் கண்கள், திக்குக்கள் காது, ஆகாசம் நடுஶரீரம், பூமி கால்கள், இதில் 'ஊர்த்வமூலமஶ்வத்தம்' என்பதைப் பொருத்தமாக்கிக்கொள்ளவும் என்று. ப்ராணிகளின் கூட்டம் அரசமரமாகச்சொல்லப்படுகிறது. அதற்குக் காரணமாகிய ப்ரம்மா மேலே இருக்கிறன் என்பது முதலியதும் சொல்லுகிறர்கள். 1 'அதஶ்சோர்த்வம்' என்கிற ஶ்லோகத்திலோ ப்ரக்ருதி முதல் பஞ்சபூதங்கள் வரையிலுள்ள எல்லாம் வ்ருக்ஷமாகக் கல்பனை செய்யப்படுகிறதென்றும் சொல்லுகிறர்கள். இப்படி எல்லா அர்த்தங்களிலும் ஸம்ஸாரம் விடத்தக்கது என்று நிரூபிப்பதில் தாத்பர்யம் என்று சொல்லவேண்டும். அதைவிட ஸம்ஸாரத்தையே நேரில் விருக்ஷமாகக் கல்பனை செய்ததென்பது மேலானது. 1 'அதஶ்சோர்த்வம்' என்கிற ஶ்லோகத்திலும் 'தஸ்ய' என்று சொல்லியிருப்பதினுல் முன் ஶ்லோகத்தினுல் கல்பனை செய்யப்பட்ட வ்ருக்ஷமே சொல்லப்படுகிறதென்பது ஏற்படுகிறபடியினுல் வேறு வ்ருக்ஷத்தைக்கல்பனை செய்கிறது என்பது யுக்தமல்ல. 2 'நரூபமஸ்ய' என்கிற ஶ்லோகத்திலும் அந்த வ்ருக்ஷமே சொல்லப்படுகிறது. ஆகையினுல் ஸம்ஸாரமாகிய ஒன்றையே வ்ருக்ஷமாகக் கல்பித்திருக்கிறது என்று பாஷ்யகாரரால் வ்யாக்யானஞ் செய்யப்பட்டது. இவ்விடத்தில் கர்த்தா இன்னுரென்று குறிக்காமல் 'ஆஹு: (சொன்னுர்கள்)' என்று சொல்லியிருப்பது வாதிகள் சொன்னுர்கள் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது என்கிற ஆக்ஷேபத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறர்—'ஶ்ருதிவாக்யங்கள்' என்று. மேல்பாகத்தில் வேரையுடையதாகவும் கீழ்பாகத்தில் கிளைகளையுடையதாகவுமிருக்கிற இந்த அரசமரம் அநாதியானது' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் ஸம்ஸாரத்தைச் சொல்லுகிறதாக இவ்விடத்

---

† ஆரண்யகம்-1-11-5.

1 பகவத்கீதை-15-2.

2 பகவத்கீதை-15-3.

றனவோ; ஏழுலோகங்களுக்கும் மேலே இருக்கிற ப்ரம்மாவைக் காரணமாகவுடையதாகையினுல் அது மேல்பாகத்தில் வேருடையது என்றது. பூமியில் வஸிக்கிற எல்லா மனுஷ்யன், பசு, ம்ருகங்கள், புழுக்கள், பக்ஷிகள், ஸ்த்தாவரங்கள், இவைகளைக் கடைசியாகவுடையதாகையினுல் கீழ் பாகங்களில் கிளைகளையுடைய தென்றது. பற்றுதலில்லாமைக்குக் காரணமாகிய நல்ல ஜ்ஞானமுண்டாகிறவரையில் பரம்பரையாக வெட்டத்த

தில் எப்படிச் சொல்லப்படுகிறது? இந்த என்று கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்டதும் மேலே சொல்லப்போகிறதுமாகிய ஜீவாத்மாவைச் சொல்லுவதல்லவோ உசிதம் என்னில் அது யுக்தமல்ல, ஜீவாத்மாவிற்கு ஸ்வரூபத்தில் மேல் பாகத்தில் வேரையுடைத்தாயிருக்கை முதலியவை ஸம்பவிக்காதாகையினுல். மோக்ஷத்தில் ஆசையுடையவர்களுக்கு அந்த ஆத்மாவினிடத்தில் ஆசையிருக்கிறபடியினுல் பற்றுதலில்லாமையாகிற கத்தியினுல் வெட்டத்தகுந்தது என்று சொல்லியிருப்பதும் பொருந்தாதாகையினுலும். தேஹத்தோடு சேர்ந்திருக்கிற ஆகாரத்தைக்கொண்டு அப்படிச் சொல்லில் பிரித்துப் பார்த்தால் தேஹமாகிற உபாதியினிடத்திலேயே இது அந்வயிக்கிறதாகையினுலும் என்று தாத்பர்யம். ‘ஶ்வோ ந ஸ்தாஸ்யதி (நாளைக்கிருக்கப்போகிறதில்லை)’ என்கிற வ்யுத்பத்தியினுல் ‘அஶ்வத்த:’ என்று சொல்லப்படுகிறது. வெட்டத்தகுந்ததாகையினுல் வ்ருக்ஷம் என்று சொல்லப்படுகிறது. இதுதான் உதாஹரிக்கப்பட்ட இரண்டு ஶ்ருதிவாக்யங்களிலும் விசேஷித்தும் பொதுவாகவும் கல்பனை செய்திருப்பதற்குக்காரணம் ‘ஊர்த்வமூலம்’ என்பதை ‘அத:ஶாகம்’ என்பதையும் வ்யஷ்டி ஸ்ருஷ்டிமாத்திரியைக்கொண்டு சொல்லுகிறுர்—‘ஏழுலோகங்களுக்கும் மேலே இருக்கிற’ என்றுரம்பித்து. ‘பூமியில்’ என்பது கீழே இருக்கிற எல்லாலோகங்களையும் குறிக்கிறது. ‘அவ்யயம் (அழிவில்லாதது)’ என்றும், வெட்டத்தகுந்ததென்றும் சொல்லியிருக்கிறது ஒன்றுக்கொன்று விருத்தமாக விருக்கிறதே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறுர்—‘பற்றுதலில்லாமைக்குக் காரணமாகிய’ என்றுரம்பித்து. தத்வஜ்ஞானம் உண்டாவதற்கு முன்பும் நாசம் காணப்படுகிறபடியினுல் அத்துடன் விரோதத்தைப் பரிகரிப்பதற்காகப் பரம்பரையாக என்று சொல்லியிருக்கிறது. எழுத்துக்களின் கணக்காகிய ‘சந்தஸ் (விருத்தம்)’ என்பதை விலக்குவதற்காகச்சொல்லுகிறுர்—‘சந்தாம்ஸி என்பது ஶ்ருதிகள்’ என்று. இலைகளைப்போல ஸம்ஸார வ்ருக்ஷத்தின் உள்ளபடியான ஆகாரத்தை மறைத்துக்கொண்டு காப்பாற்றுகின்றன என்று தெரிவிப்பதற்காக இவ்விடத்தில் ‘சந்தாம்ஸி’ என்னும் பதம் ஸம்ஸாரமாகிற வ்ருக்ஷத்

காதாகையினால் அழிவில்லாதது என்றது. எந்த அரச மரத்திற்கு ஸ்ருதிகளை இலைகளாகச்சொன்னார்களோ; 'ஊந்தாம்ஸி' என்பது ஸ்ருதிகள் அதாவது * 'ஐஸ்வர்யத்தில்ஆசையுடையவன்வாயுதேவதையைக்குறித்து வெள்ளை நிறமுள்ள பசுவைக்கொண்டு யாகம் செய்யவேண்டும்' என்றும், † 'பிள்ளைகளில் ஆசையுடையவன் இந்த்ரன், அக்னி, இவ்விரண்டு தேவதைகளையும் குறித்துப் பதினொருகபாலங்களில் செய்யப்பட்ட புரோடாசங்களைக்கொண்டு யாகம் செய்யவேண்டும்' என்று மர்த்தமுள்ள ஸ்ரு

திற்கு இலைகளாக நிரூபித்திருப்பதினால் 'ஊந்தாம்ஸி' என்னும் ப இவ்விடத்தில் 1 'வேதவாதரதா:' என்று இவை முதலிய இடர் லே போல தர்மம், அர்த்தம், காமமாகிய மூன்று புருஷார்த்தங்க சொல்லுகிற பாகங்களைப்பற்றியது, என்கிற அபிப்ராயத்தினால் செ லுகிறார்—'அதாவது ஐஸ்வர்யத்தில்' என்றாரம்பித்து. இத்துடன் சே மயிருக்கிற வேதங்கள் இலைகளென்பதெப்படிப் பொருந்தும் என்கி, ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஸ்ருதிவாக்யங்களில் சொல்லப்படுகிற' என்றாரம்பித்து. அப்படியிருந்தபோதிலும் வ்ருக்ஷங் களுக்கு அநேகம் அவயவங்களிருக்கும்பொழுது இலைகளாக நிரூபித் திருப்பதினால் என்ன விசேஷம்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதா னம் 'வ்ருத்தியடைகிறது' என்று சொல்லப்பட்டது. அதையே விவரிக் கிறார்—'இலைகளால்' என்றாரம்பித்து. 'தம்' என்பது கீழ்ச்சொல்லிய விதங்களோடு கூடிய வ்ருக்ஷத்தைச் சொல்லுகிறது என்கிற அபிப்ரா யத்தினால் சொல்லுகிறார்—'இப்படிப்பட்ட' என்றாரம்பித்து. இவ்விட த்தில் எவன் ஸம்ஸாரமாகிற அரசமரத்தை யறிகிறானோ அவன் வேதத் தைத்தெரிந்து கொண்டவன என்பது பொருந்தாது. ஏனெனில் ஸம் ஸாரமாகிற அரசமரமே வேதங்களல்லவாகையினால். அப்படியிருந்தால் லவோ இதைத் தெரிந்துகொண்டவன் வேதங்களைத் தெரிந்துகொண் டவன் என்று சொல்லலாம். ஆகையினாலிவ்விடத்தில் 2 'ஆத்யம் த்ர்யக்ஷரம்

* யஜுர்வேதம்-2-1-1. † யஜுர்வேதம்-2-1. 1 பகவத்கீதை 2-42.

2 மனுஸ்ம்ருதி-11-265. ஆத்யம்-எல்லா வேதங்களுக்கும் முதல்மையாகிய, த்ர்யக்ஷரம்-மூன்று அக்ஷரங்களையுடைய, ப்ரம்ம-வேதம் (எதுவோ), த்ரயீ-இந்த மூன்று வேதங்களும், யத்ர-எதனிடத்தில், ப்ரதிஷ்டிதா-இருக்கிறதோ, ஸ:-அந்த, குஹ்ய:-ரஹஸ்யமாகிய, த்ரிவ்ருத்வேத:-மூன்றக்ஷரங்களின் சேர்க்கையாகிய ப்ரணவமாகிற வேதம், அந்ய:-வேறுபட்டது, தம்-அதை, ய:-எவன் வேத-தெரிந்துகொள்ளுகிறானோ, ஸ:-அவன், வேதவித்-வேதத்தைத் தெரிந்துகொண்டவன்.

தி வாக்யங்களில்சொல்லப்படுகிற காம்ய கர்மங்களினால் இந்த ஸம்ஸாரமா கிற மரம் வ்ருத்தியடைகிறது. ஆகையினால் வேதங்களே இதற்கு இலை கள். இலைகளாலல்லவோ மரம் வ்ருத்தியடைகிறது. எவன் இப்படிப்பட்ட அரசமரத்தைத் தெரிந்து கொள்ளுகிறானோ அவன் வேதத்தையறிந்தவன். வேதம் ஸம்ஸாரமாகிற மரத்தை வெட்டுவதற்கு உபாயத்தைச் சொல்

க்ஷரம் ப்ரஹ்ம த்ரயீ யத்ர ப்ரதிஷ்டிதா । ஸ குஹ்யோऽந்யஸ்த்ரிவ்ருத் வேதோ யஸ்தம் வேத ஸ வேதவித் ॥' என்றிவை முதலிய இடங்களிலே

ால ப்ரணவத்தைச் சொல்லுகிறது என்பதாவது, க்ருதயுகத்தி

ாடாகிய ஏகாயன வேதத்தைச் சொல்லுகிறதென்பதாவது யுக்தம்.

ாவத்தில் கடைசியாகிய அரைமாத்திரை எல்லாவற்றிற்கும் காரண

கிய பரமபுருஷனைத் தேவதையாகவுடையதென்று ஶ்ருதியில்சொல்லி

ருக்கிறபடியினால் 'ஊர்த்வ-மூலம்' என்பது பொருத்தமுடையது.

ாகாயன வேதத்திற்கும் அது வேதாந்தமாகையினாலும் எல்லாவேதங் களுக்கும் மூலமாகையினாலும் அப்படிச் சொல்லியிருப்பது பொருந் தும். இப்படியே வேதங்களை இலைகளாக உடையது என்பது முதலி யதும் இவை இரண்டிற்கும் ஸாமாந்யமாய்ச் சொல்லமுடியும். நரம்புகளி னால் இலைகள்போல ப்ரணவத்தினால் எல்லா வார்த்தைகளும் உள்ளே கோர்க்கப்பட்டிருக்கிறது என்று ஶ்ருதியில் சொல்லியிருக்கிறபடியி னாலும், 1 'மஹதோ வேதவ்ருக்ஷஸ்ய மூலபூதோ மஹாநயம் । ஸ்கந்தபூதா ருகாத்யாஸ்தே ஶாகாபூதாஶ்ச ததாऽபரே ॥' என்று விஶேஷ மான தர்மத்தைச் சொல்லுகிற பாகம் மூலமென்று சொல்லியிருக்கிற படியினாலும். ஆகையினால் அப்படிப்பட்ட விஶேஷமான வேதங்களைத் தெரிந்து கொண்டவனை இவ்விடத்தில் வேதத்தைத் தெரிந்துகொண் டவனென்று ஸ்தோத்திரம் செய்திருக்கிறதே அல்லாமல் வேதமல் லாத ஏதாவதொன்றைத் தெரிந்துகொண்டவனையல்ல என்கிற ஆக்ஷே பத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'வேதம்' என்றாரம்பித்து இவ் விடத்தில் 'வேத' என்னும் பதம் மோக்ஷத்தைக் குறித்துச் சொல்லு கிற வேதபாகத்தைச்சொல்லுகிறது. இத்தால் என்ன ஏற்பட்டதெ னில் சொல்லுகிறார்—'வெட்டப்படுகிற' என்றாரம்பித்து. இதன் கருத்

---

1 மஹாந்-பெரியதாகிய, அயம்-இந்த ஏகாயன வேதமானது, மஹதஃ-பெரி தாகிய, வேதவ்ருக்ஷஸ்ய-வேதமாகிற மரத்திற்கு, மூலபூத:-வேராக இருக்கிறது, ருகாத்யா:-ருக்வேதம் முதலிய, தே-அந்த வேதங்கள், ஸ்கந்தபூதாஃ-பெருங்கிளைக ளாக விருக்கின்றன, அபரே-மற்ற பாகங்கள், ஶாகாபூதா:-பக்கக்கிளைகளாகவிருக் கின்றன.

லுகிறது. வெட்டப்படுகிற மரத்தின் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளுவது வெட்டுவதற்கு உபாயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்குபயோகமுள்ளது. ஆகையினால் வேதத்தை அறிந்தவனென்று சொல்லப்படுகிறது. 1

அதஶ்சோர்த்வம் ப்ரஸ்ருதாஸ்தஸ்ய ஶாகா
குணப்ரவ்ருத்தா விஷயப்ரவாளா: ।
அதஶ்ச மூலாந்யனுஸந்ததானி
கர்மானுபந்தீனி மனுஷ்யலோகே ॥ 2

ப-ரை] தஸ்ய - அந்த மரத்தினுடைய, குணப்ரவ்ருத்தா: - ஸத்வம் முதலிய குணங்களால் வ்ருத்தியடைந்த, விஷயப்ரவாளா: - ஶப்தம் முதலிய விஷயங்களைத் துளிர்களாகவுடைய, ஶாகா:- கிளைகள், அதஶ்ச - கீழும், ஊர்த்வம் - மேலும் ப்ரஸ்ருதா: - பரவியிருக்கின்றன, அதஶ்ச -

---

தாவது பற்றுதலில்லாமையாகிற கத்தியினால் வெட்டக்கருந்தது என்பது பொருந்தாதாகையினாலேயே ப்ரணவம் முதலியவைகளைச் சொல்லுகிறதென்பது அயுக்தம் 1 'தத: பதம் தத்பரிமார்கிதவ்யம்' என்பதும் அவ்விடத்தில் பொருந்தாது. 2 'ஶப்தப்ரஹ்மணி நிஷ்ணாத: பரம் ப்ரஹ்மாதிகச்சதி' என்று சொல்லியிருப்பதைப்போல இதுவும் இருக்கட்டுமே என்னில் அதுவும் உசிதமல்ல, இது அதற்கு விருத்தமாக இருக்கிறபடியினால். அவ்விடத்தில் வேதத்தில் தேர்ச்சியடைந்தவன் பரப்ரம்மத்தை யடைகிறான் என்று சொல்லப்படுகிறது. இவ்விடத்திலோவெனில் இந்த வ்ருக்ஷத்தை வெட்டிவிட்டு அதற்கப்புறம் பரப்ரம்மத்தைத் தேடவேண்டுமென்று சொல்லியிருக்கிறதாகையினால். ஆகையினால் இதற்கு வேறர்த்தம் செல்லுவது ஸம்பவிக்காதாகையினால் ஸம்ஸாரத்தைச் சொல்லுகிறதென்றேற்பட்டபிறகு இதைத் தெரிந்துகொண்டவனை வேதத்தைத்தெரிந்து கொண்டவனென்று ஸ்தோத்திரம் செய்திருப்பது இதைப்பற்றிய ஜ்ஞானம் வேதாந்தங்களில் சொல்லப்படுகிற அர்த்தங்களை அறிவதற்குபயோகமுள்ளதாகையினாலேயே என்பது, 'ஊர்த்வமூலம்' என்றிவை முதலியது நைமித்திக ஸ்ருஷ்டியை யனுஸரித்துச் சொல்லப்பட்டது. 1

---

1 பகவத்கீதை-15-4.

2 விஷ்ணு புராணம்-6-5-64. சப்தப்ரம்மணி-சப்தமாகிய ப்ரம்மத்தில் அதாவது வேதத்தில், நிஷ்ணாத:-சாமர்த்தியத்தையுடையவன், பரம் ப்ரம்ம-பரமாத்மாவை, அதிகச்சதி-அறிகிறான்.

கீழிலும், மநுஷ்யலோகே - மனுஷ்யலோகத்தில், கர்மாநுபந்தீநி - புண்யபாபகர்மங்களாகிற ஜீவாத்மாக்களைக் கட்டுப்படுத்துகிற, மூலாநி - வேர்கள், அநுஸந்ததாநி - பரவியிருக்கின்றன. 2

பா] மனுஷ்யன் முதலியவர்களைக கிளைகளாகவுடைய அந்த வ்ருக்ஷத்திற்கு அவரவர்கள் கர்மங்களாலுண்டாக்கப்பட்ட வேறு கீழிருக்கிற கிளைகளும் மறுபடியும் மனுஷ்யன், பசு, முதலியவைகளாகப் பரவுகின்றன. மேலும் கந்தர்வர், யக்ஷர், தேவர்கள், முதலியவைகளாகப் பரவுகின்றன அவைகள் ஸத்வம் முதலிய குணங்களால் வ்ருத்தியடைந்தவைகள். ஶப்தம்

தா] பிறகு நித்யஸ்ருஷ்டியையனுஸரித்துச் சொல்லப்படுகிறது.—இந்த ஶ்லோகத்தினால். 'வேறு' என்பது முன் சொல்லியிருப்பதோடு புனருக்தியைப் பரிகரிப்பதற்காகச் சொல்லியிருக்கிறது. 'மறுபடியும்' என்பது நித்ய ஸ்ருஷ்டியைக் காட்டியிருக்கிறது. கர்மலோகத்தைக் குறித்து மேலே உண்டாகிறதென்று சொல்லப்படுகிறபடியினால் கந்தர்வன் முதலியவர்களைச் சொல்லுகிறது. ஆகையினாலே ப்ரம்மாவினுடைய லோகத்திலிருந்து கீழேயே கிளைகளையுடையதாக இருக்கிறபடியினால் முன்பு சொல்லிய 'ஊர்த்வமூலம்' என்பதோடு விரோதமில்லை என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'கந்தர்வர், யக்ஷர' என்றாரம்பித்து. முன்பு சொல்லிய விதமாகக் குணங்கள் மேலே மேலே ஜன்மங்களுண்டாவதற்குக் காரணமாகையினால் தேவன் மனுஷ்யன் முதலிய கிளைகள் குணங்களால் வ்ருத்தியடைந்ததென்பது உசிதம். குணங்கள் இவ்விடத்தில் எல்லாவற்றிற்கும் பொதுவாகிய ஜலங்களின் ஸ்தானத்திலிருக்கிறது. அல்லது அடிக்கட்டை ஸ்தானத்திலிருக்கிறதாகவுமாம். இவ்விடத்தில் 'விஷய' என்னும் பதம் எல்லா வஸ்துக்களுக்கும் பொதுவாகிய ஜ்ஞானம் முதலியவைகளுக்கு விஷயங்களைச் சொல்லுகிறது என்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'ஶப்தம் முதலிய' என்று. 'ப்ரவாள' என்னும் பதம் இவ்விடத்தில் பவழத்தைச் சொல்லுகிறது என்பது ஸம்பவிக்காது என்று தெரிவிப்பதற்காக 'துளிர்களாகவுடையவைகள்' என்று சொல்லியிருக்கிறது. கிளைகளில் போக்யங்களாகத் துளிர்கள் உண்டாகின்றனவல்லவா. அதைப் போலவே கிளைகள் ஸ்தானத்திலிருக்கிற தேவன் முதலியவைகளில் போக்யங்களாக ஶப்தம் முதலியவைகள் உண்டாகிறபடியினால் அவைகள் துளிர்களின் ஸ்தானத்திலிருக்கின்றன. மேலே வேரையுடைய வ்ருக்ஷம் கீழே கிளைகளையுடையதென்பது வேரிருப்பதை யனுஸரித்து உசிதமானாலும் ஆகலாம், மறுபடியும் கீழும் மேலும் பரவியிருப்பதற்

முதலிய விஷயங்களைத் தளிர்களாகவுடையவைகள். அது எப்படி என்னில் சொல்லுகிறார். ப்ரம்மலோகத்தில் வேரையுடையதாயும் மனுஷ்யர்களை நுனியாகவுடையதாயு மிருக்கிற இந்த வ்ருக்ஷத்திற்குக் கீழ் மனுஷ்யலோகத்தில் வேர்கள் பரவியிருக்கின்றன. அவைகள் கர்மாநுபந்திகள். அதாவது கர்மங்களாகிற ஜீவாத்மாக்களைக்கட்டுகிற வேர்கள் கீழே மனுஷ்யலோகத்திலும் உண்டாகின்றன என்றர்த்தம். மனுஷ்யனாகவிருக்கும் தசையில் செய்யப்பட்ட கர்மங்களினால் கீழே மனுஷ்யன், பசு,முதலியவைகளும் மேலே தேவன் முதலியவைகளும் உண்டாகின்றனவல்லவா. 2

குக் காரணமென்ன?என்கிற ஆக்ஷேபத்தை அபிப்ராயத்தில்வைத்துக் கொண்டு சொல்லுகிறார்—'அது எப்படி என்னில் சொல்லுகிறார்' என்று. 'ஊர்த்வமூலோ' என்று நடுவில் முளைத்த வேர்களைச் சொல்லியிருக்கிறது. அது எப்படி என்னில் மெத்தையின் நுனியில் முளைத்துக் கீழ்முகமாகத் தொங்கிக்கொண்டிருக்கிற கொடிக்குப் பூமியில் ஸம்பந்தப்படுவதினால் வேருண்டாகி அதின் பக்கத்தில் மேல்நோக்கிக் கிளைகளுண்டாவதைப்போல என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ப்ரம்மலோகத்தில்' என்றாரம்பித்து. மனுஷ்யலோகத்தை யெடுத்தது அவ்விடத்தில் கர்மங்களைச் செய்யக்கூடிய அதிகாரம் பெரும்பாலுமிருக்கிறதென்று தெரிவிப்பதற்காக. ஸமானாதிகரண ஸமாஸம் சொல்லுவதே உசிதமாகையினாலும், கர்மங்களே எல்லாவிடத்திலும் வேராகவிருப்பது பொருத்தமுடையதாகையினாலும் அவைகளைச் சேர்ந்த குணங்களையாவது மற்றவைகளையாவது வேரென்று சொல்லியிருப்பது பொருந்தாது என்பதை யபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'அதாவது கர்மங்களாகிற' என்றாரம்பித்து. ஜீவாத்மாவைக் கட்டுகின்றனவாகையினால் 'அநுபந்தீநி' என்னப்படுகின்றன. அன்றிக்கே உறுதியாய் நடுவில் விட்டுப்போகாமலிருக்கின்றன என்றர்த்தம். ஆத்மாவைச்சேர்ந்த கர்மங்களை மனுஷ்யலோகத்திலிருக்கிற வேர்கள் என்று சொல்லியிருப்பதற்குக் காரணமென்ன என்றுக்ஷேபம்வரில் அதற்கு ஸமாதானமாக அது வேராக விருக்கும் விதத்தை நிருபிக்கிறார்—'மனுஷ்யனாக விருக்கும் தசையில்' என்றாரம்பித்து. எப்படி மேலே கிளைகளையுடைய ஆலமரம் முதலியவைகளுக்கு அந்தக் கிளைகளின் நுனியில் விரையாகவோ, விழுதாகவோ, மூலம் உண்டாகிறதோ அதைப்போலவே கீழ்பாகத்தில் கிளைகளையுடைய இந்த வ்ருக்ஷத்திற்கும் உண்டாகலாமென்று தாத்பர்யம். 2

ந ரூபமஸ்யேஹ ததோபலப்யதே
நாந்தோ ந சாதிர் ந ச ஸம்ப்ரதிஷ்டா । *

ப - ரை] அஸ்ய - இந்த வ்ருக்ஷத்தினுடைய, ரூபம் - ரூபமானது, ததா - அப்படி, இஹ - இந்த மனுஷ்யலோகத்தில், நோபலப்யதே - அறியப்படுகிறதில்லை, அந்தஃ - நாசமும், ந - அறியப்படுகிறதில்லை, ஆதிஃ - காரணமும், ந - அறியப்படுகிறதில்லை, ஸம்ப்ரதிஷ்டா ச - ஆதாரமும். ந - அறியப்படுகிறதில்லை. *

பா] இந்த வ்ருக்ஷம் ப்ரம்மாவையே காரணமாகவுடையதாகையினால் மேல்பாகத்தில் வேரையுடையது. அவரிடத்திலிருந்து உண்டான ஸந்ததிகளின் வரிசையாக மனுஷ்யர்களை நுனியில் கிளைகளாக வுடையதாகையினால் கீழ்பாகத்தில் கிளைகளையுடையது. மனுஷ்யனாயிருக்கும் தசையில் செய்யப்பட்ட கர்மங்கள் வேராகி நிற்க அவைகளினால் மறுபடியும் கீழும் மேலும் கிளைகள் பரவுகின்றன என்று எப்படி இந்த ரூபம் சொல்லப்பட்டதோ அப்படி ஸம்ஸாரிகளால் தெரிந்துகொள்ளப்படுகிறதில்லை.

தா] எல்லாருக்கும் ப்ரத்யக்ஷமாகத்தெரிந்து கொள்ளப்பட்டதென்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த ஸம்ஸாரத்தில் 'யஸ்தம் வேத' என்று சிலர் இதைத்தெரிந்து கொள்ளுகிறார்கள் என்று ஸ்தோத்திரம் செய்வது அனுசிதம் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லப்படுகிறது—இந்த ஶ்லோகத்தினால். இவ்விடத்தில் ரூபம் தெரிந்துகொள்ளப்படவில்லை என்று சொல்லியிருப்பதற்கு ரூபமேயில்லை என்று சொல்லுவதில் தாத்பர்யமில்லை, கீழ ரூபம் சொல்லியிருப்பதற்கு விரோதம் வருகிறபடியினால் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்- 'இந்த வ்ருக்ஷத்திற்கு' என்று. எல்லோருக்கும் ஸம்ஸாரத்தைப்பற்றிய ஜ்ஞானமிருந்தபோதிலும் கீழ்ச்சொல்லப்பட்ட ஆகாரத்தோடு கூடியதாக ஜ்ஞானமில்லை என்று 'ததா' என்னும் பதத்தினபிப்ராயம் என்பதை விவரிக்கிறார்—'ப்ரம்மாவையே காரணமாகவுடையதாகையினால்' என்றாரம்பித்து. 'ஸம்ஸாரிகளால்' என்பதற்கு மோக்ஷத்திற்குபயோகமான ஜ்ஞானமில்லாதவர்களினால் என்று தாத்பர்யம். ஸம்ஸாரிகளுக்குள்ளேயே எவன் இப்படித்தெரிந்து கொள்ளுகிறானோ அவன் முக்தனுக்குத்துல்யன் என்று தாத்பர்யமாகவுமாம். கூடஸ்தர்கள் தகப்பன் பிள்ளை முதலியவர்கள் ரூபமாக இந்த லோகத்திலும் வேர், கிளை, துளிர், முதலியவைகள் காணப்படுகிறதே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'நான்

நான் மனுஷ்யன், தேவதத்தன் பிள்ளை, யஜ்ஞ தத்தனுக்குத் தகப்பன், அதற்குத்தகுந்ததான வஸ்துக்களையுடையவன் என்றிவ்வளவு மாத்திரம் தெரிந்து கொள்ளப்படுகிறது. அப்படியே இதற்கு அந்தக் குணங்களாலுண்டான போகங்களில் ஆசையே காரணம் என்றும் தெரிந்துகொள்ளப்படுகிறதில்லை. அப்படியே இதற்கு ஆதாரம் ஆத்மாவல்லாத தேஹத்தில்

மனுஷ்யன்' என்றாரம்பித்து. அவர்களுக்கு விடத்தகுந்ததான ஸம்ஸாரத்தை க்ரஹிப்பதற்குப் போதுமான ஜ்ஞானமிருக்கிறதேயொழிய அதைவிடுவதற்குத் தகுந்த ஜ்ஞானமில்லை என்று தாத்பர்யம். 'நாஹ:' என்றிவை முதலிய இடங்களிலும் 'தயா' என்னும் பதத்தைச்சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லுகிறார்—'அப்படியே இதற்கு' என்றாரம்பித்து. இத்தோடு சேர்த்துச்சொல்லப்பட்ட ஆசையில்லாமையாகிற கத்தியினால் வெட்டத்தகுந்தது என்பதை யனுஸரித்து 'ஈஹே' என்னும் பதத்திற்கர்த்தம் சொல்லுகிறார்—'நாசமும்' என்று. திரும்பி உண்டாகாமல் இதை நாசம் செய்வது இவ்விடத்தில் ஆசையில்லாமையால் உண்டாக்கப்பட்ட 'ஈஹே' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. அது ஸ்வரூபத்தினாலும் காரணத்தினாலும் அறியப்படவில்லை நித்யமான நாசம் மாத்திரம் ஸம்ஸாரிகளால் காணப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஸத்வம் முதலிய குணங்களாலுண்டாகிற' என்றாரம்பித்து 'மோஹ' என்னும் பதம் இவ்விடத்தில் அநுபவிக்கக்கூடிய வஸ்துக்களைச்சொல்லுகிறது. ப்ரமாணங்களிலேற்பட்ட நாசம், ஆதி, ஆதாரம், இவைகளே இல்லை என்று மறுத்திருக்கிறது என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காக 'உபஹ்ருத' என்னும்பதம் சேர்த்துக்கொள்ளப்பட்டது. கர்ப்பம், முதலியவைகளாகிய நடுவிலுண்டாகிய காரணம் தெரிந்துகொள்ளப்படுகிற படியினால் ப்ரதானமாகிய காரணம் இங்கே சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்—'அந்தக்குணங்களாலுண்டான' என்றாரம்பித்து. இவ்விடத்தில் 'ஹ்ருதிஷ்டா' என்னும் பதத்தினால் மற்றவர்கள் வ்யாக்யானஞ் செய்தபடி பரமாத்மாவைச் சொல்லுகிறதென்பது யுக்தமல்ல, ஆசையில்லாதவர்களுக்கு ஆசையை வைக்கக்கூடிய விஷயமாகிய அந்தப் பரமாத்மாவை ஆசையில்லாமையாகிய கத்தியினால் வெட்டத்தகுந்த வ்ருக்ஷத்திற்கு ஆதாரமென்று சொல்லியிருப்பது உசிதமல்லவாகையினால். ஆகையினாலே ஆதியாகிய பற்றுதலுக்கும் காரணமாகிய கழனி முதலியவைகளின் ஸ்தானத்திலிருக்கிற அஜ்ஞானமே இவ்விடத்திலுசிதமாகவிருக்கிறபடியினால் 'ஹ்ருதிஷ்டா' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'ஆத்மாவல்லாத' என்றாரம்பித்து.

இது ஆத்மா என்கிற அபிமானமாகிய அஜ்ஞானம் என்றும்தெரிந்துகொள்ளப்படுகிறதில்லை. '𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 (இதில் நிற்கிறது)' என்கிற வ்யுத்பத்தியினால் அஜ்ஞானமே இதற்கு 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 (ஆதாரம்) என்று சொல்லப்படுகிறது. *

𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌮𑍇𑌨𑌂 𑌸𑍁𑌵𑌿𑌰𑍂𑌢𑌮𑍂𑌲𑌮𑍍
𑌅𑌸𑌙𑍍𑌗𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌦𑍃𑌢𑍇𑌨 𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 ॥ 3
𑌤𑌤𑌃 𑌪𑌦𑌂 𑌤𑌤𑍍 𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌿𑌤𑌵𑍍𑌯𑌂
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌗𑌤𑌾 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌯𑌃 ।

ப-ரை] 𑌏𑌨𑌂 - இப்படிப்பட்ட, 𑌸𑍁𑌵𑌿𑌰𑍂𑌢𑌮𑍂𑌲𑌂 - ஒன்றாகவும் அநேகவிதமாகவும் முளைத்திருக்கிற வேர்களையுடைய, 𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌂 - அரசமரத்தை, 𑌦𑍃𑌢𑍇𑌨 - உறுதியாகிய, 𑌅𑌸𑌙𑍍𑌗𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 - ஆசையில்லாமையாகிய கத்தியினால், 𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 - வெட்டிவிட்டு, 𑌤𑌤𑌃 - அதினாலேயே, 𑌤𑌤𑍍- அந்த, 𑌪𑌦𑌂 - இடமானது, 𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 - தேடத்தக்கது, 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍- எந்த இடத்தில், 𑌗𑌤𑌾𑌃 - போனவர்கள், 𑌭𑍂𑌯𑌃 - மறுபடியும், 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑌿 – திரும்புவதில்லையோ. *

பா] கீழ்ச்சொல்லிய விதமாகிய நன்றாகவும் அநேகவிதமாகவும் முளைத்

இத்தால் 'ஸம்ப்ரதிஷ்டா' நவிவு என்று வ்யாக்யானஞ்செய்ததும் நிராகரிக்கப்பட்டது. அஜ்ஞானத்தை 'ப்ரதிஷ்டா' என்னும் பதம் எப்படிச் சொல்லுகிறது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ப்ரதிதிஷ்டதி' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது வேர் ஊன்றியிருக்கும் பூமியானது வ்ருக்ஷத்திற்கு ஆதாரம் கர்மங்களே இந்த ஸம்ஸாரமாகிற வ்ருக்ஷத்திற்கு ஆதாரமென்று சொல்லப்பட்டது. அதுவும் 1 '𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑌂𑌚𑌿𑌤𑌕𑌰𑍍𑌮' என்று சொல்லப்படுகிறபடியினால் அஜ்ஞானத்திலேயே இருக்கிறது, அந்த அஜ்ஞானத்தினாலேயே அவைகளை யனுஷ்டிக்கிறபடியினால், கர்மங்களுக்குக் காரணமாகிய மமகாரத்திற்கும் இந்த அஹங்காரமே கிழங்கு ஆகையினால் அதுவே இவ்விடத்தில் ஸம்ஸாரமாகிற வ்ருக்ஷத்திற்கு ஆதாரம் என்பது *

,𑌏𑌨𑌂' என்று ஆசை வைக்கஇடமாகிய ப்ரக்ருதி விசித்ரம் என்பதைச் சொல்லியிருக்கிறதென்று சொல்லுகிறார்—'கீழ்ச்சொல்லிய விதமாகிய' என்று. நன்றாக விருக்கையாவது உறுதியான வாஸனையாகிய

---

1 *விஷ்ணுபுராணம் - 2 - 13 - 70. கர்ம - கர்மமானது, அவித்யா ஸஞ்சிதம் - அஜ்ஞானத்தினால் உண்டாக்கப்பட்டது.*

திருக்கிற வேர்களையுடைய இந்த அரச மரத்தை நல்ல ஜ்ஞானத்தினால் உண்டாகிய உறுதியாகிய ஸத்வம், முதலிய குணங்களாலுண்டான போகங்களில் ஆசையில்லாமை என்று பேருடைய கத்தியினால் வெட்டிவிட்டு அந்த விஷயங்களில் ஆசையில்லாமையாகிற காரணத்தினாலேயே அப்படிப்பட்ட இடத்தைத் தேடவேண்டும். எந்த இடத்தில் போனவர்கள் மறுபடியும் திரும்புவதில்லையோ.

பா - அ] அநாதிகாலமாயுண்டாகிய ஸத்வம் முதலிய குணங்களாலுண்டான போகங்களில் ஆசையும், அதினால் உண்டாகிய விபரீத ஜ்ஞானமும் எப்படி நிவ்ருத்தியடையும் என்னில் சொல்லுகிறார்—

தமேவ சாத்யம் புருஷம் * ப்ரபத்யே
யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ ॥ 4

வேரூன்றிப்போயிருப்பதினால் மற்றவைகளால் வெட்டமுடியாமலிருக்கை. அநேகவிதங்களாக இருக்கையாவது ப்ராயச்சித்தம், முதலியவைகளினால் கர்மமென்று பேரையுடைய ஒவ்வொரு வேரையும் வெட்டினாலும் அநாதி காலமாக மனது, வாக்கு, காயம், இவைகளினால் தெரிந்துகொண்டும் தெரியாமலும், சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டதாயும், மறுக்கப்பட்டதாயுமிருக்கிற கர்மங்கள் அநேகவிதமாகச் செய்யப்பட்டிருக்கை. ஆசையில்லாமையும் சில ஸமயத்தில் அந்தந்த ஸமயங்களிலுண்டாகிய வ்யாதி முதலிய கஷ்டங்களினாலுமுண்டாகிறது. அது உறுதியானதல்ல. ஆகையினால் 'நல்ல ஜ்ஞானத்தினாலுண்டாகிய' என்று சொல்லப்பட்டது. விஷயங்களை விடும் ஸமயத்திலே போல ஆத்மாவைத் தேடும் ஸமயத்திலும் இந்த ஆசையில்லாமை தொடர்ந்திருக்க வேண்டும் என்று தெரிவிப்பதற்காக 'தத:' என்னும் பதம். ஆகையினாலேயே 'தத:பதம்' என்று 'பதம்' என்னும் பதத்தைச் சேர்த்துக்கொண்டு வ்யாக்யானஞ் செய்திருப்பது யுக்தமல்ல என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அந்த விஷயங்களில் ஆசையில்லாமையாகிற காரணத்தினாலேயே' என்று. 1 'ஆத்மாவைத் தேடவேண்டும்' என்றர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யம் முதலியவைகளைக் குறிப்பதற்காகச் சொல்லுகிறார்—'தேடவேண்டும்' என்று. இவ்விடத்தில் 'நிவர்த்தந்தி' என்று பரஸ்மை பதமாகச் சொல்லியிருக்கிறது விருத்தத்தை அனுஸரித்து வேதத்தில் சொல்லியிருப்பதைப் போலச் சொல்லியிருக்கிறது என்றபிப்ராயம். *

---

* ப்ரபத்யேயத: என்று பாடாந்தரம்.

1 ஜாபாலோபநிஷத் - 6.

ப-ரை] ஆத்³யம் - எல்லாவற்றிற்கும் முதல் காரணமாகிய, தம் - அந்த, புருஷமேவ - பரம புருஷனையே, ப்ரபத்³யே - ஶரணமாக அடையவேண்டும், யத꞉ - எந்தப் பரம புருஷனிடத்திலிருந்து, ப்ரவ்ருத்தி꞉ - இந்தப் போகங்களில் ஆசையாகிற ப்ரவ்ருத்தி, புராணீ - அநாதியாக, ப்ரஸ்ருதா - உண்டானதோ. 4

பா] இந்த அஜ்ஞானம் முதலியவைகள் நிவ்ருத்திப்பதற்காக எல்லாவற்றிற்கும் ஆதியாகிய* 'மயாத்⁴யக்ஷேண ப்ரக்ருதிஸ் ஸூயதே ஸசராசரம்', † 'அஹம் ஸர்வஸ்ய ப்ரப⁴வோ மத்த꞉ ஸர்வம் ப்ரவர்த்ததே', ‡ 'மத்த꞉ பரதரம் நாந்யத் கிஞ்சித³ஸ்தி த⁴நஞ்ஜய' என்றிவை முதலியஇடங்களில் சொல்லப்பட்ட அந்தப் பரம புருஷனையே ஶரணமாக அடையவேண்டும். எல்லாவற்றையும் ஸ்ருஷ்டித்தவனாகிய எவனிடத்திலிருந்து இந்த ஸத்வம், முதலிய குணங்களாலுண்டாகிய போகங்களில் ஆசையாகிற ப்ரவ்ருத்தி அநாதியாக உண்டாயிற்றோ; இதுவும் என்னால் முன்னாலேயே ¶'தை³வீ ஹ்யேஷா கு³ணமயீ மம மாயா து³ரத்யயா। மாமேவ யே ப்ரபத்³யந்தே மாயாமேதாம் தரந்தி தே' என்று சொல்லப்பட்டது 'ப்ரபத்³யே யத꞉ ப்ரவ்ருத்தி꞉'என்றும் பாடமுண்டு. அப்பொழுது அந்த ஆதியான பரம

தா] உறுதியாகிய ஆசையில்லாமையாகிய கத்தி கிடைத்தாலல்லவோ அதினால்.இது வெட்டமுடியும். அதுவே ஸம்ஸாரிகளுக்குக் கிடைக்கக்கூடியதல்லவே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக மேல் க்ரந்தத்திற்கு அவதாரிகை சொல்லுகிறார்—'அநாதிகாலமா யுண்டாகிய' என்றாரம்பித்து. 1 'நிர்மாநமோஹா꞉' என்றிவை முதலியமேல் க்ரந்தங்களை நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'அஜ்ஞானம் முதலியவைகள் நிவ்ருத்திப்பதற்காக' என்று. 'ஆத்³யம்' என்பது முன்பு சொல்லப்பட்டது என்று 'தம்' என்னும் பதத்தினால் ஸ்தாபிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்—'மயா' என்றாரம்பித்து. எவனுடைய உத்திரவை மீறி நடந்ததினால் ஸம்ஸாரபந்தம் உண்டானதோ அவனே ப்ரீதியை யடைவிக்கப்பட்டவனாய்க்கொண்டு மோக்ஷத்தைக் கொடுக்கிறான் என்கிற அபிப்ராயத்தினால் 'ஏவ' என்பது. இத்தை விவரமாகச் சொல்லுகிற 'யத꞉ ப்ரவ்ருத்தி꞉' என்கிற வாக்யம் மஹான் முதலியவைகளின் ஸ்ருஷ்டியை மாத்திரம் சொல்லுகிறது என்பதை விலக்குவதற்காக ப்ரபத்தியைச் சொல்லும் வாக்யத்தில் முன்பு சொல்லியிருப்பதை ஜ்ஞாபகப்படுத்துகிறார்—'இதுவும் என்னால் முன்னாலேயே' என்றாரம்

* பகவத்கீதை-9-10. † பகவத்கீதை-10-8.
‡ பகவத்கீதை-7-7. ¶ பகவத்கீதை-7-14. 1 பகவத்கீதை-5-5.

புருஷனை, ப்ரபத்யே - சரணமாகவடைந்து, யத: - அஜ்ஞானம் நிவ்ருத்திப்பது முதலிய இந்த எல்லாவற்றிற்கும் காரணமாகிய, ப்ரவ்ருத்தி:- வ்யாபாரம், புராணீ - அநாதியாக, ப்ரஸ்ருதா - உண்டானது. முன்பிருந்த மோக்ஷத்தி லாசையுடையவர்களுடைய ப்ரவ்ருத்தி 'புராணீ' என்னப்படுகிறது. அதாவது முன்பிருந்தவர்களாகிய மோக்ஷத்திலாசையுடையவர்கள் என்னையே சரணமாகவடைந்து ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபட்டவர்களானார்கள் என்றர்த்தம். 4

பித்து. 1 'தேஷாமேவாநுகம்பார்த்தம்', 2 'மச்சித்தஸ்ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத்தரிஷ்யஸி', 3 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்றிவை முதலியதும் இங்கே நினைத்துக்கொள்ளத்தக்கது. இவ்விடத்தில் 'ப்ரஸ்ருதா' முதலிய பதங்களினால் இது ஸத்யமென்றே ஏற்படுகிறபடியினால் மற்றவர்கள் இந்த்ரஜாலம்போல் என்று உதாஹரணம் சொல்லியிருப்பது சப்தத்தின் ஸ்வாரஸ்யத்தினாலும், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களினாலும் மறுக்கப்பட்டது. வேதத்தைப்போலவே ருஷிகளும் ப்ரயோகிக்கலாமென்று அநுமதி செய்யப்பட்டிருப்பதினால் 'ப்ரபத்யேத்' என்று பரஸ்மைபதமாகச் சொல்லியிருக்கிறது. அவ்விடத்தில் தன்னாலங்கீகரிக்கப்பட்ட பாடாந்தரத்தையும் அதற்கு வேறு அர்த்தத்தையும்சொல்லுகிறார்—'ப்ரபத்யே யத:'என்றாரம்பித்து. 'ப்ரபத்யே' என்று உத்தம புருஷனாயிருந்தால் வாக்யம் அந்வயிக்கவில்லை. ஆகையினால் 'ப்ரபத்யே, யத:' என்று பதத்தைப் பிரித்தார். இப்படிச் சொல்லில் ஆக்ஷேபத்திற்கு நேராகப்பதிலாகும், என்று தாத்பர்யம். 'யத:' என்னும் பதம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்படுகிற எல்லாவற்றையும் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'அஜ்ஞானம் நிவ்ருத்திப்பது முதலிய எல்லாவற்றிற்கும்' என்று. ஜீவாத்மாவின் வ்யாபாரத்தைப்பற்றிச் சொல்லவேண்டியதற்காக 'காரணமாகிய' என்று சொல்லப்பட்டது. 'யத:' என்கிற விடத்தில் ஆறும் வேற்றுமையினால் சொல்லப்பட்ட மொத்தமாகிய ஸம்பந்தம் இவ்விடத்தில் கார்யமாயும் காரணமாயுமிருக்கையாகிற விசேஷத்தில் முடிவுபெறுகிறது என்று தாத்பர்யம். 'ப்ரஸ்ருதா புராணீ' என்பதினால் சிஷ்டர்களின் ஆசாரத்தைக்காட்டியிருக்கிறதென்பது அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது என்று சொல்லுகிறார்—'முன்பிருந்த' என்றாரம்பித்து. அத்தையே விவரிக்கிறார்—'முன்பிருந்தவர்களாகிய' என்றாரம்பித்து. 4

1 பகவத்கீதை–10-11. 2 பகவத்கீதை-18-58.
3 பகவத்கீதை-18-66.

𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑌮𑍋𑌹𑌾 𑌜𑌿𑌤𑌸𑌙𑍍𑌗𑌦𑍋𑌷𑌾
𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑌾𑌮𑌾𑌃।
𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌸𑌂𑌜𑍍𑌞𑍈𑌰𑍍
𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌮𑍂𑌢𑌾𑌃 𑌪𑌦𑌮𑌵𑍍𑌯𑌯𑌂 𑌤𑌤𑍍॥ 5

ப-ரை] 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑌮𑍋𑌹𑌾𑌃 - தேஹமே ஆத்மாவென்கிற அஜ்ஞானமில்லாத வர்களாய், 𑌜𑌿𑌤𑌸𑌙𑍍𑌗𑌦𑍋𑌷𑌾𑌃 - ஸுக துக்கங்களில் ஆசையாகிற தோஷத்தை ஜயித்தவர்களாய், 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃 - ஆத்மாவைப் பற்றிய ஜ்ஞானத்தில் எப்பொழுது மிருப்பவர்களாய், 𑌵𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑌾𑌮𑌾𑌃 - அதைத் தவிர வேறு வஸ்துக்களில் ஆசை நிவ்ருத்தித்தவர்களாய், 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖 𑌸𑌂𑌜𑍍𑌞𑍈𑌃- ஸுகமென்றும் துக்கமென்றும் பேருடைய, 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑍈𑌃- இரட்டைகளினால், 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 - விடப்பட்டவர்களாயும், 𑌅𑌮𑍂𑌢𑌾𑌃 - அஜ்ஞானமில்லாதவர்களாயும் (இருப்பவர்கள்), 𑌤𑌤𑍍 அந்த, 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 - அழிவில்லாத, 𑌪𑌦𑌂 - ஸ்தானத்தை, 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 - அடைகிறார்கள். 5

பா]இப்படி என்னைச் ஶரணமாகஅடைந்து ஆத்மா வல்லாத தேஹத்தில் இதுவே ஆத்மா என்கிற அபிமானமாகிற அஜ்ஞானமில்லாதவர்களாயும், குணங்களாலுண்டாகிற போகங்களில் ஆசையென்று பேருடைய தோஷங்களை ஜயித்தவர்களாயும், ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞானம் எதுவோ

தா] இதே அர்த்தத்தைப்பற்றி '𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑌮𑍋𑌹𑌾' என்றாரம்பித்துச் சொல்லப்படுகிற மேல் வாக்யமும் '𑌯𑌤𑌃' என்று கீழ்ச்சொல்லியதை விவரிக்கிறதாகையினால் மிகவும் பொருத்தமுடையது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. இவ்விடத்தில் வஸ்துவின் ஸாமர்த்தியத்தினால் ஆசையைநிவ்ருத்திப்பதற்குக்காரணம் '𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑌮𑍋𑌹𑌾𑌃' என்றது,என்று நினைத்து அதற்கனுகுணமாகவ்யாக்யானஞ்செய்கிறார்—'ஆத்மாவல்லாத'என்றாரம்பித்து.'𑌅𑌮𑍂𑌢𑌾𑌃'என்று தனித்துச்சொல்லியிருப்பதினால்,மாநம்,மோஹம்,இவைகளில்லாதவர்களாய்என்று வ்யாக்யானஞ்செய்தது யுக்தமல்லவென்று தாத்பர்யம். ஆத்மாவினிடத்தில் ஆசையைவிலக்குவதற்காக 'குணங்களாலுண்டாகிற' என்கிற விசேஷணம் சொல்லியிருக்கிறது. '𑌜𑌿𑌤𑌸𑌙𑍍𑌗𑌦𑍋𑌷𑌾𑌃' என்பதின் ப்ரயோஜனம் '𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃' என்பது. அதுவும் 1 '𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂' என்று முன்னமேயே சொல்லப்பட்டது. அதையே சொல்லுகிறார்—'ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞானம் எதுவோ' என்றாரம்பித்து.

1 பகவத்கீதை 13-11.

அது அத்யாத்மம் என்னப்படுகிறது, அதாவது ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞான த்தில் எப்பொழுது மிருப்பவர்களாயும், அதைத் தவிர மற்றவஸ்துக்களில் ஆசை நிவ்ருத்தித்தவர்களாயும், ஸுகம் துக்கமென்று பேருடைய இரட்டைகளால் விடப்பட்டவர்களாயும், ஆத்மா, ஆத்மாவல்லாத வஸ்துக்கள் இவைகளின் ஸ்வபாவங்களைத் தெரிந்துகொண்டவர்களாயு மிருப்பவர்

யோகம் செய்யும்போது இடைவிடாமலும் அதைவிட்டு எழுந்திருந்த பொழுது அதிகமாகவும் ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞானத்திலேயே நித்யமாக இருக்கை சொல்லப்படுகிறது. மிகவும் ஸுகமாகிய ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞானத்திலேயே எப்பொழுது மிருப்பதினால் அதைத் தவிர வேறு விஷயங்களில் ஆசை நிவ்ருத்தித்து விடுகிறது. ‘விநிவ்ருத்தகாமா:’ என்பது இவ்விடத்தில் விசேஷமாக நிவ்ருத்தியடைந்த காமங்களையுடையவர்களாயிருக்கை. அதாவது விஷயங்கள் ஸமீபத்திலிருந்தபோதிலும் அவைகளை உபேக்ஷை செய்துகொண்டிருக்கை. ஸங்கம், காமம், இவை இரண்டுகளும் ஒன்று காரணமாகவும், மற்றொன்று கார்யமாகவுமிருக்கின்றன என்று முன்னமேயே சொல்லப்பட்டிருப்பதினால் புனருக்தி யென்னும் தோஷமில்லை. ‘ஸுகது:கஸம்ஜ்ஞை:’ என்பதற்கு அனுகூலமாயும், ப்ரதிகூலமாயுமிருக்கிற ஸ்வபாவங்களையுடைய என்றர்த்தம். இது உபாயதசையைச் சொல்லுகிறதாக இருந்தால் இந்த இரட்டைகளைப்பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறது. பலதசையைச் சொல்லுகிறதாக இருந்தால் துக்கம் முழுவதும் நிவ்ருத்தித்து விடுகிறது என்று சொல்லுகிறது. 1 ‘த்ரிபிர்குணமயைர்பாவைரேபி: ஸர்வமிதம் ஜகத் । மோஹிதம்’ என்று சொல்லப்பட்ட மாயையைத்தாண்டிவிட்டதினால் இவ்விடத்தில் ‘அமூடா:’ என்று சொல்லப்படுகிறது. அதுவும், தேஹமே ஆத்மா என்கிற ப்ரமமில்லாமை ‘நிர்மாநமோஹா:’ என்பதினாலேயே சொல்லப்பட்டபடியினால் அதைத் தவிர வேறாகிய ஆத்மாவையும் ஆத்மாவல்லாத விஷயங்களையும் பற்றிய ப்ரமங்களொன்றுமில்லை என்று சொல்லுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘ஆத்மா, ஆத்மாவல்லாத வஸ்துக்கள்’ என்றாரம்பித்து. அன்றிக்கே அஜ்ஞானங்களிற்குக் காரணமில்லையென்பதைக் குறிக்கிறது இவ்விடத்தில் ‘அமூடா:’ என்னும் பதம். ஒன்றுக்கொன்று வ்யத்யாஸத்தைத் தெரிவிக்கக்கூடிய அஸாதாரணமான ஸ்வபாவங்களைத் தெரிந்துகொள்ளுவதினாலல்லவோ ஆத்மாவும் ஆத்மாவல்லாத வஸ்துக்களும் ஒன்றென்கிற ப்ரமம் நிவ்ருத்தி செய்

---

1 பகவத்கீதை-7-13.

கள் அழிவில்லாத அந்த ஸ்தானத்தை அடைகிறார்கள். அதாவது அளவில்லாத ஜ்ஞானத்தை ஸ்வபாவமாகவுடைய ஜீவாத்மாவை உள்ளபடியே அடைகிறார்கள். என்னைச் ஶரணமாக அடைந்தவர்களுக்கு என்னுடைய அனுக்ரஹத்தினாலேயே இந்த எல்லா வ்யாபாரங்களும் ஸுலபமாய்ச் செய்யக்கூடியவைகளாயும் ஸித்தி பர்யந்தங்களாகவுமாகின்றன என்றர்த்தம். 5

யத்தக்கது என்று தாத்பர்யம். ஆத்மாக்கள் ஸ்வரூபத்தில் விகாரங்களில்லாததாகையினால் இவ்விடத்தில் வ்யயமாவது ஜ்ஞானத்தின் சுருங்குதலும் பரவுதலும். அதில்லையென்று மறுத்ததினால் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அதாவது அளவில்லாத ஜ்ஞானத்தை' என்றாரம்பித்து. 'பத்யதே (அடையப்படுகிறது)' என்கிற வ்யுத்பத்தியினால் 'பதம்' என்னப்படுகிறது. 1 'ப்ராபணீய ஸ்ததைவாத்மா ப்ரக்ஷீணாஶேஷ பாவந:' என்று பரிசுத்தமான ஜீவாத்மாவும் பரமாத்மாவைப்போலவே அடையத்தகுந்தவனாகையினால் 'பதம்' என்னப்படுகிறான். இவ்விடத்தில் பரமாத்மாவே 'பதம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறானென்பதில்லை, அடுத்த ஸ்லோகத்தில் அதையே 'தத்' என்னும் பதத்தினாலெடுத்து 'தத்தாம' என்று வேறாகச் சொல்லியிருப்பதினால். 'பத' என்னும் பதமும், 'தாம' என்னும் பதமும் திவ்யமான ஸ்தானத்தைச் சொல்லுகிறதென்பது உசிதமல்ல, 'பரிமார்கிதவ்யம்' என்று அதைத் தேடவேண்டுமென்று விதித்திருப்பது பொருந்தாதாகையினால். அது ப்ரயோஜனமாகையினால் இருக்கிறதென்று அறிய வேண்டியது மாத்திரமேயொழிய ஆத்மாவைப்போல த்யானம் வரையில் தேடக்கூடியதென்பதில்லை. 'தத்தாம' என்று சொல்லப்பட்ட வஸ்துவிற்கே ஸம்ஸாரத்திலிருக்கும் தசை 'மமைவாம்ஶ:' என்றாரம்பித்துச் சொல்லப்படுகிறது. அப்படிக்கில்லாவிடில் பரமபதமாகிற ஸ்தானத்தை நிரூபித்த பிறகு 2 'மமைவாம்ஶ:' என்று பத்த தசையையுடைய ஜீவாத்மாவைச் சொல்லியிருப்பது பொருத்தமுடையதல்லவென்று தாத்பர்யம். கீழ்ச் சொல்லிய ஆக்ஷேபத்திற்குப் பரிகாரமாக 'ததைவ' என்றாரம்பித்து இதுவரையிலுள்ள க்ரந்தத்திற்கு மொத்த தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—'என்னைச் ஶரணமாக அடைந்தவர்களுக்கு' என்றாரம்பித்து. 5

1 விஷ்ணுபுராணம்-6-7-96. ததைவ- அப்படியே, ப்ரக்ஷீணாஶேஷபாவந:- மூன்றுவித பாவனைகளுமில்லாத, ஆத்மா-ஜீவாத்மாவானவன், ப்ராபணீய:-அடையத்தக்கவன். 2 பகவத்கீதை-15-7.

𑌨 𑌤𑌦𑍍𑌭𑌾𑌸𑌯𑌤𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌨 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑍋 𑌨 𑌪𑌾𑌵𑌕𑌃|
𑌯𑌦𑍍𑌗𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌤𑌦𑍍𑌧𑌾𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌮 || 6

ப-ரை] 𑌤𑌤𑍍 - அந்த ஜீவாத்மாவாகிற ஜ்யோதிஸ்ஸை, 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 - ஸூர்யன், 𑌨 𑌭𑌾𑌸𑌯𑌤𑍇 - ப்ரகாசம் செய்கிறதில்லை, 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌃 - சந்திரனும், 𑌨 - (ப்ரகாசம் செய்கிறது) இல்லை, 𑌪𑌾𑌵𑌕𑌃 - அக்னியும் 𑌨 - (ப்ரகாசம் செய்கிறது) இல்லை, 𑌯𑌤𑍍 - எந்த இடத்தை, 𑌗𑌤𑍍𑌵𑌾 - அடைந்து, 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 - திரும்புகிறதில்லையோ, 𑌤𑌤𑍍 - அப்படிப்பட்ட, 𑌪𑌰𑌮𑌮𑍍 - உயர்ந்ததாகிய, 𑌧𑌾𑌮 - ஜ்யோதிஸ்ஸானது, 𑌮𑌮 - என்னுடையது, அதாவது எனக்குச்சேஷ பூதம். 6

பா] அந்த ஆத்மாவாகிற ஜ்யோதிஸ்ஸை ஸூர்யனும் ப்ரகாசம் செய்கிறதில்லை, சந்திரனும் ப்ரகாசம் செய்கிறதில்லை, அக்னியும் ப்ரகாசம் செய்கிறதில்லை. ஜ்ஞானமல்லவோ எல்லாவற்றையும் ப்ரகாசம் செய்கிறது. வெளியிலிருக்கிற வெளிச்சங்கள் விஷயங்களோடு இந்த்ரியங்கள் ஸம்பந்

தா] ப்ரகாசம் செய்யக்கூடியவைகளாகிய மற்ற வஸ்துக்களை அபேக்ஷிக்கவேண்டியதில்லை என்பதைத் தெரிவிப்பதற்காக '𑌤𑌤𑍍' என்னும் பதத்தினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அந்த ஆத்மாவாகிற' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது '𑌤𑌤𑍍' என்னும் பதம் ப்ரஸ்தாவிக்கப்பட்டதைச் சொல்லுகிறதென்பது ஸ்வாரஸ்யமுடையதாகையினால் '𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍' என்று கீழ் பரிசுத்தமான ஜீவாத்மாவின் ஸ்வரூபம் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருப்பதினாலும், மேல்ஶ்லோகத்திலும் '𑌮𑌮𑍈𑌵𑌾𑌂𑌶𑍋 𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑍇 𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌃' என்று அதையே சொல்லப்போகிறபடியினாலும், ப்ருகியில் ஏற்பட்டிருக்கிற ஸ்வயம் ப்ரகாசம் என்பதைச் சொல்லுகிற '𑌧𑌾𑌮' என்னும் பதத்தை இவ்விடத்தில் ப்ரயோகித்திருப்பதினாலும், இந்த ஶ்லோகம் ஜீவாத்மாவைப்பற்றியதே என்பது. ஸூர்யன் முதலியவைகளால் ப்ரகாசம் செய்யக்கூடாமலிருக்கையை அப்படிப்பட்ட ஸ்வபாவமில்லாமையினால் என்று ஸ்தாபிக்கிறார்—'ஜ்ஞானமல்லவோ' என்றாரம்பித்து. 'எல்லாவற்றையும்' என்பதற்கு ப்ரகாசம் செய்யத்தகுந்த எல்லா வஸ்துக்களையும் அவைகளை ப்ரகாசம் செய்கிறவைகளாக நினைக்கப்படுகிற ஸூர்யன் முதலிய வெளிச்சங்களுக்கும் என்று தாத்பர்யம். ஜ்ஞானம் எல்லாவற்றையும் ப்ரகாசம் செய்வதாயிருந்தால் அப்பொழுது வெளி வஸ்துக்கள் விஷயத்திலும் ஸூர்யன் முதலியவைகளை ஏன் அபேக்ஷிக்க வேண்டும்? அப்படிக்கில்லாவிடில் ஸூர்யன் முதலியவைகளைப்பற்றி ப்ரகாசம் செய்கிறவைகள் என்கிற வ்யவஹாரம்எப்படி

தப்படுவதற்குத் தடையாகிய இருட்டைப்போக்கடித்துக்கொண்டு அதின் வழியாக உபகாரம் செய்கின்றன. இந்த ஆத்மாவை ப்ரகாசம் செய்யக்கூடியது யோகம். அதற்குத்தடையாகியது அநாதியாகிய கர்மம். அதை நிவ்ருத்திசெய்யக்கூடிய உபாயமும் கீழ்ச்சொல்லப்பட்ட பகவானிடத்தில் ஶரணாகதியைக் காரணமாகவுடையஆசையில்லாமை முதலியது என்று

உண்டாகிறது? என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'வெளியிலிருக்கிற' என்றாரம்பித்து. 'ஸம்பந்தப்படுவதற்குத்தடையாகிய' என்பது ப்ரத்யக்ஷமுண்டாவதற்குக் காரணங்களின் நடுவில் சேர்க்கப்பட்ட விசேஷமான ஸம்பந்தங்களைப்பற்றிச் சொல்லப்பட்டது. ஏனெனில் சுவர் முதலியவைகளைப்போல் இருட்டு தடங்கலில்லையல்லவா, நடுவில் இருட்டோடு கூடிய வெளிச்சத்திலிருக்கிற வஸ்துக்கள் ப்ரத்யக்ஷமாக அறியப்படுகிறபடியினால். இப்படி எல்லாவற்றையும் ப்ரகாசம் செய்கிற ஆத்மாவாகிற ஜ்யோதிஸ்ஸு தானே ஏன் ப்ரகாசிக்கிறதில்லை? வேறு எதினால் ப்ரகாசம் செய்யக்கூடியது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'இந்த ஆத்மாவை' என்றாரம்பித்து ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கிற வஸ்துவையும் உள்ளபடியிருக்கிற எல்லா ஆகாரங்களுடன் அறிவதில் ஸம்ஸாரிகளுக்கு யோகமே உபாயம் என்று தாத்பர்யம். ப்ரகாசம் செய்யக்கூடிய மற்ற வஸ்துக்கள் இதை ப்ரகாசம் செய்யாது என்று மறுப்பதினால் இது அறியக்கூடியதில்லை என்று சொல்லப்படுகிறது என்கிற ஆக்ஷேபமும்இதினால் பரிகரிக்கப்பட்டது. ஒரு விசேஷத்தைப்பற்றி அது இல்லை என்று சொல்லியிருப்பது மற்றவைகள் உண்டென்று காட்டுகிறது என்று தாத்பர்யம். அந்த யோகமும் எல்லாருக்கும் ஏன் ஸித்திப்பதில்லை? இதற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'அதற்குத்தடையாகிய' என்றாரம்பித்து. ஸம்ஸாரத்திலுண்டாகிய கர்மம் யோகமுண்டாவதற்குத்தடை என்றர்த்தம். அப்படியாகில்ஒருவருக்கும் அந்த யோகம் ஸித்திக்காதே என்றாக்ஷேபம்வரில் கீழ்ப்ரஸ்தாவித்த அர்த்தத்தைக்கொண்டு பரிகரிக்கிறார்—அதைநிவ்ருத்திசெய்யக்கூடிய உபாயமும்'என்றாரம்பித்து.'மகவா' என்பதற்குஅடைந்து என்றர்த்தம். 'யாதி' என்னும்பதம்இவ்விடத்தில் முன்போல நியமிக்குமிடம் என்னும் அர்த்தத்தைச்சொல்லுகிறதல்ல. பின்னை எப்படி என்னில் ஸூர்யன் முதலிய வெளிச்சங்களை அபேக்ஷிக்கிறதில்லை என்று சொல்லியிருப்பதினாலே ஸ்வரூபம் ப்ரகாசமாகியதென்றேற்பட்டிருக்கிறபடியினால் ஜ்யோதிஸ்ஸு என்னுமர்த்தத்தைச் சொல்லுகிறது. ஆகையினாலேயே என்னுடைய உயர்ந்த ஜ்யோதிஸ்ஸு என்று அந்வயம் சொல்வது உசிதமல்ல. என்னுடையது என்று

அடைந்து மறுபடியும் திரும்புகிறதில்லையோ அப்படிப்பட்ட உயர்ந்த ஜ்யோதிஸ்ஸு என்னுடையது. அதாவது எனக்கு விபூதியாகிய என்னுடைய அம்சம் என்றர்த்தம். ஸூர்யன் முதலியவைகளையும் ப்ரகாசம் செய்யக்

ஸம்பந்தத்தை விதிப்பதோவெனில் முக்ததசையில் மிகுந்த ஸாம்யத்தை யடைகிறானென்று சொல்லியிருக்கிறபடியினால் ஸ்வாதந்த்ர்யம் உண்டாகிவிடுகிறதோ என்கிற ஸந்தேஹத்தைப் பரிகரிப்பதினால் ப்ரயோஜனமுடையது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்-'உயர்ந்த ஜ்யோதிஸ்ஸு என்னுடையது' என்று 1'மமைவாம்ஶ:' என்று மேலே சொல்லப்போகிறதற்கும் காரணம் இவ்விடத்தில் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது என்று தெரிவித்துக்கொண்டு ஆறாம் வேற்றுமையினால் சொல்லப்பட்டப் பொதுவாகிய ஸம்பந்தத்தை ஒரு விஶேஷத்திலே சுருக்கிச் சொல்லுகிறார்—'என்னுடைய விபூதியாகிய' என்று. விபூதியாக இருக்கையாவது ஒரு க்ருஹஸ்தனுக்கு வீடு முதலியவைகளைப்போல அல்ல. பின்னை எப்படியெனில் விட்டுப் பிரியக்கூடாத விஶேஷணமாகிய அம்ஶமாக விருப்பதினால் என்று சொல்லுகிறார்—'என்னுடைய அம்ஶம்' என்று. இதின் கருத்தாவது அவயவங்களில்லாத ஒன்றாகிய ஸ்வரூபத்தில் அம்ஶம் என்று சொல்லியிருக்கிறதல்ல, ஏனெனில் அம்ஶமென்பது ஒரு வஸ்துவில் ஒரு பாகமாகையினால், 'அம்ஶம்' 'அம்ஶீ' என்பது பேதத்தைக் குறிக்கிறதாயினால். அப்படிக்கில்லாவிடில் ஒரே வஸ்துவினிடத்தில் அம்ஶமாவது எது? அம்ஶியாவது எது? அதுவே அதினுடைய அம்ஶம் என்று ப்ரமித்தவனும் சொல்லமாட்டான். பேதம் அபேதம் இரண்டும் ஒரு வஸ்துவிற்கு ஸம்பவிக்காது, ஒன்றுக்கொன்று விரோதம், எல்லா ஶ்ருதிகளுக்கும் விரோதம், முதலியவைகள் வருகிறபடியினால். 2 'இந்தப் பரமாத்மாவிற்கு எல்லா ப்ராணிகளும் கால்பாகம்' என்றும், 3 'அவனுக்கு அவயவங்களாகிய வஸ்துக்களினால் இந்த எல்லா லோகமும் நிறைந்திருக்கிறது' என்றும், 4 'எப்படி நெருப்பினிடத்திலிருந்து சின்னப்பொறிகள் எங்கும் பரவுகின்றனவோ அப்படியே இந்தப் பரமாத்மாவினிடத்திலிருந்து எல்லா ஜீவாத்மாக்களும் பரவுகின்றன' என்றும் அர்த்தமுள்ள அம்ஶமாகவிருக்கையாவது எல்லாம் சேர்ந்த வஸ்துவினிடத்தில் விஶேஷண

---

1 பகவத்கீதை-15-7.

2 புருஷஸூக்தம்-1-2-1.

3 ஶ்வேதாஶ்வதரம்-4-10.

4 ப்ரஹதாரண்யகம்-4-1-20.

கூடியதாகையினால் அதுமேலானதென்பது. ஸூர்யன், முதலிய வெளிச்சங்கள் ஜ்ஞானமாகிற வெளிச்சத்தை ப்ரகாசம் செய்யக்கூடியவைகளல்ல. ஜ்ஞானமேயல்லவோ எல்லாவற்றையும் ப்ரகாசம் செய்கிறது.

மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந: |
மந:ஷஷ்டாநீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி || 7

யாகிய ஒரு பாகமாகையினால் என்று 1 'அம்ஶோ நாநாவ்யபதேஶாத்' என்கிற அதிகரணத்திலும், 2 'ப்ரகாஶாதிவத்து நைவம் பர:' என்கிற ஸூத்ரத்திலும், ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாகையினால் அநேக வஸ்துக்கள் ஒரு காரணத்தினால் ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும்பொழுது அதில் பிரித்துச்சொல்லப்படுகிற ஒருபாகம் அம்ஶமென்று சொல்லப்படுகிறது. இப்படியே துணி, தான்யராசி, முதலியவைகளிலும். இதுவும் விஶேஷணங்களாகவும் விஶேஷ்யங்களாகவுமிருக்கிற வஸ்துக்களிலும் இரண்டும் சேர்ந்த வஸ்து ஒன்றாயிருந்தபோதிலும் விஶேஷணமாகிய அம்ஶம் என்பது முதலிய வ்யவஹாரங்களிலும் துல்யம். ஆகையினால் இவ்விடத்தில் மிகவும் வெவ்வேறாகிய ஜீவாத்மா பரமாத்மா இவர்களுக்குள் ஒன்று விபூதியாகவும் மற்றொன்று விபூதியையுடையவனாகவுமிருப்பதினால் சேர்ந்த ஒரு வஸ்துவாகையினால் அதில் விஶேஷணமாகிய ஜீவாத்மா பிரித்துச்சொல்லப்படும்பொழுது ப்ரதானமாகிய பரமாத்மாவைக்குறித்து அம்ஶமென்று சொல்லப்படுகிறான் என்பது. இவ்விடத்தில் தடங்கலில்லாத மேன்மையையுடைய பரமாத்மாவைத் தவிர வேறாகிய ஜீவாத்மாவைப்பற்றிய 'பர:' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற ஜ்யோதிஸ்ஸுக்கு விஶேஷணமாக விருக்கிற 'பரம்' என்பது ஸமீபத்தில் சொல்லப்படுகிற வெளிச்சங்களைக்குறித்து ஆகையினால் அதினாலேற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ஸூர்யன் முதலியவைகளையும்' என்றாரம்பித்து.

1 ஶாரீரகஸூத்ரம்-2-3-42-அம்ஶாதிகரணம்.

2 ஶாரீரகஸூத்ரம்-2-3-45-(ஜீவாத்மா பகவானுடைய அம்ஶமாயிருந்தபோதிலும்) பர:-பரமாத்மா, நைவம்-இந்த ஜீவாத்மாவின் ஸ்வபாவமுடையவனல்ல, (எப்படியென்னில்) ப்ரகாஶாதிவத்-ஸூர்யன் முதலிய வஸ்துக்களின் ப்ரகாஶம் முதலியவைகளைப்போல அம்சமாகையினால் அதாவது ப்ரகாசங்கள் எப்படி ஸூர்யனுடைய அம்ஶமோ அப்படி ஜீவாத்மா பரமாத்வினுடைய அம்ஶம். ஆகையினால் ஜீவர்களுக்குண்டான தோஷம் இவனுக்குண்டாகாது என்று தாத்பர்யம்.

ப - ரை] ஜீவலோகே - ஜீவர்களின் கூட்டங்களில், மமைவ - என்னுடைய, அம்ஶ: - பாகமானது, ஸநாதந: - அநாதியாக விருந்துகொண்டு ஜீவபூத: - பத்த ஜீவர்களாகி, ப்ரக்ருதிஸ்தாநி - ப்ரக்ருதியிலிருக்கிற, மந:ஷஷ்டாநி - மனஸ்ஸை ஆறுவதாக உடைய, அதாவது மனதுடன் சேர்ந்து ஆறகிய, இந்த்ரியாணி - இந்த்ரியங்களை, கர்ஷதி - இழுக்கிறது.

பா] இப்படிக் கீழ்ச்சொல்லிய ஸ்வரூபத்தையுடையதாயும், அநாதியாயும், எனக்கு அம்ஶமாயுமிருக்கிற சிலபாகம் அநாதியான கர்மமாகிய அவித்யையினுல் சுற்றப்பட்டதாய் பத்த ஜீவனுகி இந்த ஜீவலோகத்திலிருந்துகொண்டு தேவன் மனுஷ்யன், முதலிய ப்ரக்ருதியின் மாறுதல்களாகிய ஶரீரங்களிலிருக்கிற மனஸ்ஸுடன் சேர்ந்த ஆறு இந்த்ரியங்களை இழுக்கிறது. சிலது முன் சொல்லிய வழியினுல் அவித்யையிலிருந்து விடுபட்டதாய் தன்னுடைய ஸ்வரூபத்துடன் நிற்கிறது. பத்தஜீவனே வெளியில் மிகவும் சுருக்கத்தையடைந்த ஜ்ஞானம், ஐஶ்வர்யம், இவைகளை யுடையதாய்க்கொண்டு கர்மங்களா லடையப்பட்ட ப்ரக்ருதியின் மாறுதல்களாகிய ஶரீரங்களிலிருக்கிற மனஸ்ஸுடன் ஆறகிய இந்த்ரியங்களுக்கு ஈஶ்வரனுகி அவைகளைத்தங்கள் தங்கள் கர்மங்களுக்குத்தக்கபடி இங்குமங்குமிழுக்கிறது. 7

ஶரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர: |

க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாஶயாத் || 8

ப - ரை] ஈஶ்வர: - அந்த இந்த்ரியங்களுக்கு நியந்தாவாகிய ஜீவாத்மா, யத் - எந்த, ஶரீரம் - தேஹத்தை, அவாப்நோதி - அடைகிறுனே, யத் - எந்த ஶரீரத்திலிருந்து, உத்க்ராமதி - வெளியில் புறப்படுகிறுனே

தா] இப்படி எல்லா ஜீவர்களும் உமக்கு விபூதியாகையினுல் உம்முடைய ஒருபாகமாகவே இருந்தால் அப்பொழுது நித்யஸூரிகளின் கும்பல்களைப்போலப் பேதமில்லாமல் எல்லா ஆத்மாக்களுக்கும் பரிசுத்தமான ஸ்வரூபத்தை யடைவது ஏன் உண்டாகக்கூடாது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக பத்தர்களும் தன்னுடைய விபூதிதான் என்று அநுவாதம் செய்துகொண்டு பத்தர், முக்தர் முதலிய ஏற்பாட்டுக்குக் காரணம் 'மமைவாம்ஶ:' என்றுரம்பித்துச் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'இப்படிக் கீழ்ச்சொல்லிய ஸ்வரூபத்தையுடைய' என்றுரம்பித்தது. * * *

[7—வது ஶ்லோகத்திற்கு இதற்குமேலும், 8—வது, 9-வது ஶ்லோகங்களுக்கும் தாத்பர்ய சந்த்ரிகை கிடைக்கவில்லை.]

(அவைகளில்), வாயு: - காற்றானது, ஆஶயாத் — இருப்பிடங்களிலிருந்து, கந்தாநிவ—வாஸனைகளைப்போல, ஏதாநி - இந்த இந்த்ரியங்களை, க்ருஹீத்வா — பிடித்துக்கொண்டு, ஸம்யாதி - போகிறான். 8

பா] எந்தச் ஶரீரத்தையடைகிறானோ, எந்தச் ஶரீரத்திலிருந்து வெளியில் புறப்படுகிறானோ, அவைகளில் இந்த்ரியங்களுக்கு யஜமானனாகிய இந்த ஜீவாத்மா இந்த்ரியங்களை பஞ்சபூதங்களின் ஸூக்ஷ்மமான பாகங்களோடுகூட எடுத்துக்கொண்டுபோகிறான். எப்படிக் காற்று, புஷ்பம், சந்தனம், கஸ்தூரி முதலிய வாஸனைகளின் இருப்பிடங்களிலிருந்து அந்த வஸ்துக்களின் ஸூக்ஷ்மமான பாகங்களோடுகூட வாஸனைகளை யெடுத்துக்கொண்டு வேறிடத்திற்குப் போகிறதோ அதைப்போல என்றர்த்தம். 8

பா - அ] அந்த இந்த்ரியங்கள் எவை என்னில் சொல்லுகிறார்—

ஶ்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்ஶநம் ச ரஸநம் க்ராணமேவ ச |
அதிஷ்டாய மநஶ்சாயம் விஷயாநுபஸேவதே || 9

ப - ரை] அயம் — இந்த ஜீவாத்மா, ஶ்ரோத்ரம் - காதையும், சக்ஷு:— கண்ணையும், ஸ்பர்ஶநம் ச - தோலையும், ரஸநம் - நாக்கையும், க்ராணமேவ ச - மூக்கையும், மந: ச - மனஸ்ஸையும், அதிஷ்டாய - அதிஷ்டானம் செய்துகொண்டு, விஷயாந் - அவைகளின் விஷயங்களை, உபஸேவதே - அனுபவிக்கிறான். 9

பா] மனதுடன் சேர்ந்து ஆறாகிய இந்த இந்த்ரியங்களை அதிஷ்டானம் செய்துகொண்டு அதாவது தங்கள் தங்கள் விஷயங்களை க்ரஹிப்பதற்குத் தக்கவைகளாகச் செய்துகொண்டு அந்தந்த ஶப்தம் முதலிய விஷயங்களை யனுபவிக்கிறான். 9

உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்ஜாநம் வா குணாந்விதம் |
விமூடா நாநுபஶ்யந்தி பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ: || 10

ப - ரை] குணாந்விதம் - ஸத்வம் முதலிய குணங்களையுடைய ஶரீரங்களுடன் சேர்ந்திருக்கிற, உத்க்ராமந்தம் - ஶரீரங்களிலிருந்து வெளிப் புறப்படுகிற, ஸ்திதம் வாபி - அந்தச் ஶரீரங்களுக்குள்ளிருக்கிற, புஞ்ஜாநம் வா — (ஶப்தம் முதலிய விஷயங்களை) அனுபவிக்கிற (இந்த ஜீவாத்மாவை), விமூடா: - மூடர்கள், நாநுபஶ்யந்தி - அறிகிறதில்லை, ஜ்ஞாநசக்ஷுஷ: - ஜ்ஞானத்தைக் கண்ணாகவுடையவர்கள், பஶ்யந்தி - பார்க்கிறார்கள். 10

பா] இப்படி ஸத்வம் முதலிய குணங்கள் நிறைந்த ப்ரக்ருதியின் மாறுதலாகிய மனுஷ்யனாயிருக்கை முதலிய அமைப்புகளையுடைய ஶரீரத்தோடு சேர்ந்திருக்கிற அந்தச் ஶரீரத்திலிருந்து வெளிப்புறப்படுகிறவனையும் அந்தச் ஶரீரத்திற்குள் இருப்பவனையும், குணங்கள் நிறைந்த ஶப்தம் முதலிய விஷயங்களை யனுபவிக்கிறவனையு மிருக்கிற இந்த ஜீவாத்மாவை ஒரு ஸமயத்திலும் ப்ரக்ருதியின் மாறுதலாகிய மனுஷ்யன் முதலியஶரீரங்களைவிட வேறுபட்டவனாகவும், ஜ்ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாகவுடையவனாகவும் மூடர்கள் பார்க்கிறதில்லை. மூடர்களாவது மனுஷ்யன் முதலிய ஶரீரத்தையே ஆத்மாவென்று நினைத்துக்கொண்டிருப்பவர்கள். ஶரீரம், ஆத்மா, இவைகளின் வ்யத்யாஸங்களைப்பற்றிய ஜ்ஞானமுடையவர்கள்

தா] *கர்மங்களின் கூட்டங்களினால் கட்டப்பட்ட ஜீவாத்மா ஶரீரமாகிய ஜயிலிலேயே இருப்பதும் அதிலிருந்து வெளிக்கிளம்புவதும் உள் நுழைவதும் முதலிய கஷ்டங்களும் அதில் இருப்பன் விஷங்கலந்த தேன்போல மிகவு மல்பங்களாகிய விஷயங்களை யனுபவிப்பதும் சொல்லப்பட்டது. பிறகு அதற்குமேல் இவைகளுக்குக் காரணமாகிய ஆத்மாபஹாரமாகிற திருட்டுத்தனத்தை ப்ரஸ்தாவித்து இந்த ஆத்மா எல்லாராலும் தெரிந்து கொள்ளக்கூடியது. அப்படியிருக்க அறியப்படவில்லை என்பதையும் பரிகரிக்கிறார்—இந்த ஶ்லோகத்தினால் 'குணாந்விதம்' என்பது மற்றவைகளுக்குக் காரணம் என்கிற அபிப்ராயத்தினால் முதலில் அதற்கு வ்யாக்யானஞ்செய்கிறார். வெளிப்புறப்படுவது முதலியவைகளைச் சொல்லியிருப்பது எல்லா அவஸ்தைகளையும் குறிக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் 'ஒரு ஸமயத்திலும்' என்று சொல்லப்பட்டது. 'அஹம் (நான்)' என்று எல்லாருக்கும் தங்கள் தங்கள் ஆத்மா எப்பொழுதும் ப்ரகாசித்துக் கொண்டிருக்க விஷயங்களை அனுபவிப்பது முதலியதும் தங்கள் தங்களாத்மாவிற்குத்தெரிந்து கொண்டிருக்க சிலர் பார்க்கிறதில்லை என்று எப்படிச்சொல்லப்படுகிறது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல்லுகிறார்—'மனுஷ்யன் முதலிய ஶரீரங்களைவிட வேறுபட்டவனாகவும்' என்றாரம்பித்து. ப்ரக்ருதியின் மாறுதலாகிய மனுஷ்யனாகவிருக்கைமுதலிய அமைப்புகளையுடைய ஶரீரத்தைக்காட்டிலும் என்றர்த்தம். 'ஜ்ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாகவுடையவன்' என்று சொல்லியிருப்பது எல்லா வ்யத்யாஸங்களையும் குறிப்பதற்காக. 'விமூடா: நாநுபஶ்யந்தி' என்று பகவானுடைய மிகுந்த கருணையோடு கூடியவார்த்தை. உள்ளபடியிருக்கிற ஆத்மாவை அறியாமைக்குக் காரணமாகிய மூடர்களாக இருக்கையும் அந்த ஆத்மாவைப்பற்றியதே என்று சொல்லுகிறார்—'மனுஷ்யன் முதலிய ஶரீரத்தை' என்றாரம்பித்து. நித்யமாக இருக்கை, ஸ்வயம் ப்ரகாசமாக*

எல்லா அவஸ்த்தைகளையுமுடைய இந்த ஜீவாத்மாவை ஶரீரத்தைவிட வேறுபட்ட ஆகாரத்தையுடையவனாகவே பார்க்கிறார்கள். 10

யதந்தோ யோகிநஶ்சைநம் பஶ்யந்த்யாத்மந்யவஸ்திதம் |
யதந்தோऽப்யக்ருதாத்மாநோ நைநம் பஶ்யந்த்யசேதஸ꞉ ||

ப-ரை] யதந்த꞉ - ப்ரயத்தினம் செய்கிற, யோகிந꞉ — யோகிகள், ஆத்மநி - ஶரீரத்தில், அவஸ்திதம் - இருக்கிற, ஏநம் - இந்த ஜீவாத்மாவை, பஶ்யந்தி - பார்க்கிறார்கள், யதந்தோऽபி - ப்ரயத்தினம் செய்துகொண்டிருந்தபோதிலும், அக்ருதாத்மாந꞉ - பரிசுத்தமான மனதையுடையவர்களாயும், அசேதஸ꞉ - (ஆத்மாவைப் பார்ப்பதற்குத் தகுந்த) மனதில்லாதவர்களாயு மிருப்பவர்கள், ஏநம் - இந்த ஆத்மாவை, நபஶ்யந்தி - பார்க்கிறதில்லை. 11

பா] என்னிடத்தில் ஶரணாகதியை முன்னிட்டுக்கொண்டு கர்மயோகம் முதலியவைகளில் ப்ரயத்தினம் செய்பவர்களாய் அவைகளினால் பரிசுத்தமான மனதையுடைய யோகிகள் யோகமாகிற கண்ணினால் ஶரீரத்திலிருந்தபோதிலும் ஶரீரத்தைவிட வேறுபட்டவனாகவும், தன்னுடைய ஸ்வபாவமாகிய ரூபத்துடன் கூட இருப்பவனாயுமிருக்கிற இந்த ஆத்மாவைப் பார்க்கிறார்கள். அப்படி என்னிடத்தில் ஶரணாகதியைச் செய்யாதவர்களாய், ஆசையினாலேயே பரிசுத்தம் செய்யப்படாத மனதையுடையவர்க

இருக்கை, முதலியவைகளால் வ்யத்யாஸம் உண்டென்று தெரிவிப்பதற்காக 'ஶரீரத்தைவிட வேறுபட்ட ஆகாரத்தை யுடையவனாகவே' என்று சொல்லியிருக்கிறது. 10

தா] *கீழ்ச்சொல்லப்பட்ட அர்த்தமே காரணத்துடன் நிரூபிக்கப்படுகிறது—இந்த ஶ்லோகத்தினால். 'யதந்தோயோகிந꞉' என்பதினால் முன்பு விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட அர்த்தம் இவ்விடத்தில் ஞாபகப்படுத்தப்படுகிறது என்று சொல்லுகிறார்—'என்னிடத்தில் ஶரணாகதியை முன்னிட்டுக்கொண்டு' என்றாரம்பித்து. 'ஆத்மநி' என்னும்பதம் இவ்விடத்தில் வேறர்த்தத்தைச் சொல்லுவது பொருந்தாதாகையினால் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஶரீரத்தைச்சொல்லுகிறது. அப்படியிருந்தால் ஆத்மாவைப்பாராமலிருப்பதற்குக் காரணமும் அனுவதிக்கப்பட்டதாகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஶரீரத்திலிருந்தபோதிலும்' என்று. ப்ரயத்தினம் செய்பவர்களுக்கு மனது பரிசுத்தம் செய்யப்படவில்லை என்பது எப்படிப்பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'என்னிடத்தில் ஶரணாகதியைச் செய்யாதவர்களாய்' என்று. இவ்விடத்தில் மனஸ்ஸுக்கு பரிசுத்தம் செய்யப்படா*

ளாய், ஆகையினாலேயே ஆத்மாவைப் பார்ப்பதற்குத்தகுந்த ஶக்தியை யுடைய மனதில்லாமலு மிருப்பவர்கள் இந்த ஆத்மாவைப் பார்க்கிற தில்லை. 11

பா-அ] இப்படி ஸூர்யன், சந்திரன், அக்னி, இவைகளாகிய இந்த்ரியங்கள் விஷயங்களோடு ஸம்பந்தப்படுவதற்குத் தடங்கலான இருட்டைப் போக்கடித்துக்கொண்டு அதின் வழியாக இந்த்ரியங்களுக்கு ஒத்தாசை செய்கிறபடியினால் ப்ரகாசத்திற்குக் காரணமாகிய வெளிச்சத்தையுடைய வஸ்துக்களுக்கும் ப்ரகாசம் செய்யக்கூடிய ஜ்ஞானமாகிற வெளிச்சத்யுடைய ஜீவாத்மா முக்திதசையையுடையதும் பந்தஜீவனாகிய தசையையுடையதும்பகவானுடையவிபூதியென்று, * '𑌤𑌦𑍍𑌧𑌾𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌮', † '𑌮𑌮𑍈𑌵𑌾𑌂𑌶𑍋 𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑍇', ‡ '𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃' என்பவைகளினால் சொல்லப்பட்டது. இப்பொழுது அசேதனத்தின் மாறுதல்களாயும், ஸூர்யன் முதலிய வெளிச்சத்தையுடைய வஸ்துக்களினுடையதாயுமிருக்கிற ப்ரகாசமும் பகவானுடைய விபூதி என்று சொல்லுகிறார்—

𑌯𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌗𑌤𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌜𑌗𑌦𑍍𑌭𑌾𑌸𑌯𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌮𑍍 ।
𑌯𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌿 𑌯𑌚𑍍𑌚𑌾𑌗𑍍𑌨𑍌 𑌤𑌤𑍍𑌤𑍇𑌜𑍋 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑌾𑌮𑌕𑌮𑍍 ॥ 12

மையாவது பகவானைச் ஶரணமாக அடையாமை என்று தாத்பர்யம். மனது இருந்தபோதிலும் அது ப்ரக்ருத கார்யத்திற்கு உபயோகப் படாமையினால் அது இல்லாததற்கு ஸமமென்பது '𑌅𑌚𑍇𑌤𑌸𑌃' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'ஆத்மாவைப் பார்ப்பதற்குத்தகுந்த' என்றாரம்பித்து. 11

தா] '𑌯𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌗𑌤𑌂 𑌤𑍇𑌜𑌃' என்பவை முதலியவைகளுக்கு முன் பின் ஸந்தர்ப்பங்களோடு ஸங்கதியில்லை என்பதைப் பரிகரிப்பதற்காகவும், ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொள்ளுவதற்காகவும் கீழ்ச் சொல்லப்பட்ட அர்த்தத்தைச் சேர்த்துச் சுருக்கிச் சொல்லுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. ஆத்மாவாகிற ஜ்யோதிஸ்ஸுக்கு தன்னுடைய விபூதி என்று சொன்ன பிறகு அதை ப்ரகாசம் செய்யச் சக்தியில்லாதவைகளாகையினால் விலக்கக்கூடியவைகளாக ப்ரஸ்தாவிக்கப்பட்ட ப்ரக்ருதியைச்சேர்ந்த ப்ரகாசங்களும் தனக்கு விபூதிதான் என்று சொல்லியிருப்பது உசிதந்தான் என்று சொல்லப்பட்டதாகிறது. வேறு வஸ்துக்களின் ப்ரகாசம் மற்றொருவனுடையதாக எப்படியாகும். ஆகையினால் இவ்விடத்தில் ஸூர்யன் முதலியவர்களும் தானும் ஒன்

---

* பகவத்கீதை-5-6. † பகவத்கீதை-5-7.

‡ பகவத்கீதை-5-7.

ப - ரை] ஆதித்யகதம் - ஸூர்யனிடத்திலிருக்கிற, யத்—எந்த, தேஜ꞉- ப்ரகாசமானது, அகிலம் - எல்லா, ஜகத் - லோகத்தை, பாஸயதே - ப்ரகாசம் செய்கிறதோ, யத் - எந்த ப்ரகாசமானது, சந்த்ரமஸி - சந்திரனிடத்திலிருக்கிறதோ, யச் – எந்த ப்ரகாசமானது, அக்நௌ - அக்னியிடத்திலிருக்கிறதோ, தத் - அந்த, தேஜ꞉ - ப்ரகாசத்தை, மாமகம் - என்னுடையதாக, வித்தி - அறி. 12

பா] எல்லா லோகங்களையும் ப்ரகாசம் செய்கிற இந்த ஸூர்யன் முதலியவர்களுடைய ப்ரகாசம் எதுவோ அது என்னுடைய ப்ரகாசம். அவரவர்களால் ஆராதிக்கப்பட்ட என்னால் அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்டதென்று அறி. 12

றென் றேற்படுகிறது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்— அவரவர்களால்' என்றாரம்பித்து. 1 'எந்தப் பகவானால் தேஜஸ்ஸினால் வ்ருத்தி செய்யப்பட்டவனாய் ஸூர்யன் வெப்பத்தைத்தருகிறானோ' என்றும், 'ஸூர்யன் எந்தப் பகவானுடைய ப்ரகாசத்தை உபயோகப்படுத்திக்கொண்டு ப்ரகாசிக்கிறானோ' என்றும், 2 'அவ்விடத்தில் ஸூர்யன் ப்ரகாசிக்கிறதில்லை' என்றாரம்பித்து 'அவனுடைய ப்ரகாசத்தினால் இவையெல்லாம் ப்ரகாசிக்கின்றன' என்கிற வரையிலும் அர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யங்களிருக்கின்றனவல்லவா. ஆகையினால் எல்லாம் ஸ்வபாவத்தில் பகவானுக்குச்சேஷமாக இருந்துகொண்டு அவரவர்களின் கர்மங்களுக்குத்தக்கபடி அந்தப் பகவானுடைய ஸங்கல்பத்தினால் சிலகாலம் மற்றவர்களுக்குச் சேஷமாக இருக்கும் தன்மையையுமடைகிறது. என்று தாத்பர்யம். இவ்விடத்தில் 'தேஜ꞉' என்னும் பதத்தினால் ஜ்ஞானமாகிற ப்ரகாசம் சொல்லப்படுகிறது என்பது 'ஜகத் பாஸயதே(அ)கிலம்' என்பதோடு பொருந்தாது. ஸூர்யனிடத்தில் இருக்கிற ஜ்ஞானம் நமக்குக் குடம் முதலியவைகளை ப்ரகாசம் செய்கிறதில்லையல்லவா. எல்லா வஸ்துக்களிடத்திலும் ஜ்ஞானம் ஸமமாக இருந்தபோதிலும் ஸூர்யன் முதலிய வஸ்துக்களில் ஸத்வகுணம் அதிகமாக இருப்பதினால் கண்ணாடி முதலியவைகளிடத்தில் போல் அதிகமாக ப்ரகாசிக்கிறது என்பதும் ந்யாயமல்ல, அவர்கள் மதத்தில் ஜ்ஞானம் மற்றொன்றினால் ப்ரகாசம் செய்யக்கூடியதல்லவாகையினால். ஆகையினால் ப்ரகாசங்களுக்கு மற்றொன்றை ப்ரகாசம் செய்யக்கூடிய சக்தி தன்னுடையதென்றே சொல்லப்பட்டது. 12

---

1 காடகம்-3-9.

2 கடவல்லி-2-5-15.

பா - அ] எல்லா ப்ராணிகளையும் தரிக்கிற பூமியினுடைய அப்படித் தாங்குகிற ஶக்தியும் என்னுடையது என்று சொல்லுகிறார்—

𑌗𑌾𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍋𑌜𑌸𑌾 |
𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌮𑌿 𑌚𑍌𑌷𑌧𑍀𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌸𑍋𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌰𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 || 13

ப--, ரை] 𑌅𑌹𑌮𑍍 - நான், 𑌗𑌾𑌮𑍍 - பூமியை, 𑌆𑌵𑌿𑌶𑍍𑌯 - நுழைந்துகொண்டு, 𑌓𑌜𑌸𑌾 - ஸாமர்த்தியத்தினால், 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 - ப்ராணிகளை, 𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑌿 - தாங்குகிறேன், 𑌰𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 - அம்ருதமயமான ரஸம் நிறைந்த, 𑌸𑍋𑌮𑌃 - சந்திரனாக, 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 - ஆகி, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 - எல்லா, 𑌓𑌷𑌧𑍀𑌃 - செடிகளையும், 𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌮𑌿 – வ்ருத்திசெய்கிறேன். 13

பா] நான் பூமியில் நுழைந்து எல்லா ப்ராணிகளையும் ஒருவராலும் தடுக்கப்படாத என் ஸாமர்த்தியத்தினால் தாங்குகிறேன். அப்படியே நான் அம்

தா] இப்படி மற்றெல்லாவஸ்துக்களினுடையவும் அந்தந்த விஶேஷமான கார்யங்களை உண்டாக்கக்கூடிய ஶக்தி என்னுடையதென்று பூமி, சந்திரன், ஜாடராக்னி. இவைகளினுடைய தாங்குவது, வ்ருத்திசெய்து ஜீரணம் செய்வது முதலிய ஶக்திகளைக்கொண்டு குறித்துக்காட்டப்படுகிறது. அப்படிக்கில்லாவிடில் தன்னுடைய ஶக்தியை மாத்திரம் சொல்லுவதாக இருந்தால் கீழ் ப்ரஸ்தாவித்திருப்பதோடு பொருந்தாததாகையினால் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எல்லா ப்ராணிகளையும்' என்றாரம்பித்து. 'எல்லா' என்பதற்கு ஸ்தாவரங்களாயும் ஜங்கமங்களாயுமிருக்கிற என்றர்த்தம் மற்ற வஸ்துக்கள் கீழே விழாமல் தடுக்கக்கூடிய ஸம்பந்தத்தினால் வஸ்துக்களைத் தாங்குகின்றன. ஆகையினால் அதை விலக்குவதற்காக 'ஓஜஸா' என்று தனக்கு அஸாதாரணமான ஶக்தியைச்சொல்லியிருக்கிறது. அப்படிக்கில்லாவிடில் பூமிக்குத் தாங்கும் ஶக்தியும் தடுக்கப்படும் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஒருவராலும் தடுக்கப்படாத' என்றாரம்பித்து. ஶ்ருதியிலும் 1 'எந்தப்பகவானால் உக்ரமாகிய ஆகாஶமும் பூமியும் உறுதியாகவிருக்கின்றனவோ' என்றும், 2 'அவன் பூமியையும் இந்தஆகாசத்தையும் தாங்கிக்கொண்டிருக்கிறான்' என்றும், 3 'எவனால் இவை யிரண்டும் தாங்கப்பட்டிருக்கின்றனவோ, விஷ்ணுவினால் தாங்கப்பட்ட பூமியே' என்றும் 4 'ஓ! கார்கியே, இந்த அக்ஷரத்தின் நியமனத்தில்

---

1 யஜுர்வேதம், 4-வது காண்டம்-2-8-5.
2 யஜுர்வேதம், 4-வது காண்டம்-2-8-2.
3 ஆரணம்-2-8-2.
4 ப்ருஹதாரண்யகம்-5-8-9.

ம்ருத ரஸம் நிறைந்த சந்திரனாக ஆகி எல்லாச் செடிகளையும் வ்ருத்தி செய்கிறேன். 13

அஹம் வைஶ்வாநரோ பூ⁴த்வா ப்ராணிநாம் தே³ஹமாஶ்ரித꞉|
ப்ராணாபாநஸமாயுக்த꞉ பசாம்யந்நம் சதுர்விதம் || 14

ப - ரை] அஹம் - நான், வைஶ்வாநர꞉ - ஜாடராக்னியாக(வயிற்றிற்குள்ளிருக்கும் நெருப்பாக), பூ⁴த்வா - ஆகி, ப்ராணிநாம் - ப்ராணிகளினுடைய, தே³ஹம் - ஶரீரத்தை, ஆஶ்ரித꞉ - அடைந்தவனாய்க் கொண்டு, ப்ராணாபாந ஸமாயுக்த꞉ - ப்ராணவாயு, அபானவாயு இவைகளோடு கூடினவனாய்க் கொண்டும், சதுர்விதம் - நான்கு விதமான, அந்நம் - ஆஹாரத்தை, பசாமி - பக்குவம் செய்கிறேன். 14

பா] நான் ஜாடராக்னியாகி எல்லா ப்ராணிகளினுடைய தேஹத்தை யடைந்தவனாய் அவர்களால் போஜனம் செய்யப்பட்ட கடிக்கக்கூடிய

ஆகாசம், பூமி, இவைகள் தாங்கப்பட்டு நிற்கின்றன' என்று மந்த்ர முள்ள வாக்யங்கள் சொல்லப்படுகின்றன. சந்திரனாகவிருக்கை இவ்விடத்தில் 'ரஸாத்மக꞉' என்று விஶேஷித்துச் சொல்லப்படுகிறது. அதினால் செடிகளை வ்ருத்தி செய்வதற்கு வழி சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'அம்ருத ரஸம் நிறைந்த சந்திரனாக ஆகி' என்று. இவ்விடத்தில் விஶேஷணத்தின் ஶக்தியினால் அந்த அம்ருதமயமான ரஸங்களைக்கொண்டு வ்ருத்தி செய்கிறேன் என்று சொல்லப்படுகிறது. 13

'ஜாடராக்கினியாகி' என்பதற்கு 1 'கோஷ்டே²ऽக்³நிர்பு⁴க்தம் ருச்ச²தி' என்றல்லவோ சொல்லப்பட்டதென்று தாத்பர்யம். 'இந்த ஆஹாரம் கடிக்கக்கூடியதென்றும் விழுங்கக்கூடியதென்றும், மெல்லக்கூடியதென்றும் மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டது' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் மூன்றுவிதம் என்று சொல்லியிருக்கிற படியினால் நான்கு விதம் என்பது எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'கடிக்கக்கூடியவை' என்றாரம்பித்து. வேறுசிலஇடங்களில்வெவ்வேறுகாரங்களால் சுருக்கிமூன்றுவிதமாகச் சொல்லியிருக்கிறதுஎன்று தாத்பர்யம். 2 'அபாநப்ராணயோர்மத்⁴யே ப்ராணாபாந

---

1 கோஷ்டே - வயிற்றிற்குள்ளிருக்கிற, அக்னி:-அக்னியானது, புக்தம் - போஜனம் செய்யப்பட்டதை, ருச்சதி-அடைகிறான்.

2 அபானன் ப்ராணன் இவைகளின் நடுவிலிருந்துகொண்டு அந்த ப்ராணாபானவாயுக்களுடன் கூடியதாய் ஸமானவாயுவுடன் கூடியதாயும் ஜடராக்னி நன்றாகப் பக்குவம் செய்கிறது.

வை, உறியக்கூடியவை, நக்கக்கூடியவை குடிக்கக்கூடியவைகளாகிய நான்குவித ஆஹாரத்தையும் ப்ராணன் அபானன்என்கிற வாயுவின் வ்யாபாரங்களோடு கூடினவனுப் பக்குவம் செய்கிறேன். 14

பா-அ இவ்விடத்தில் பரமாத்மாவிற்கு விபூதிகளாகிய சந்திரன் ஜாடராக்னி இவர்கள் 'ஸோமோ பூத்வா' 'அஹம் வைஶ்வாநரோ பூத்வா' என்று பகவானுடன் சேர்த்துச்சொல்லப்பட்டார்கள். அவர்களையும் மற்றெல்லா ப்ராணிகளின் கூட்டத்தையும் பரமாத்மாவோடு ஒன்று சேர்த்துச் சொல்லுவதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்.—

ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநம் ச |
வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ
வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம் ‖ 15

ப - ரை] அஹம் - நான், ஸர்வஸ்ய -எல்லாப்ராணிகளினுடையவும், ஹ்ருதி - ஹ்ருதயத்தில், ஸந்நிவிஷ்ட: - இருக்கிறேன், மத்த: - என்னிடத்திலிருந்து, ஸ்ம்ருதி: - நினைப்பதும், ஜ்ஞாநம் - அறிவதும், அபோஹநம் - மறப்பதும் அல்லது ஊஹிப்பதும் (உண்டாகிறது), ஸர்வை: - எல்லா, வேதைஶ்ச - வேதங்களாலும், அஹமேவ - நானே, வேத்ய: - அறியத்தக்கவன், வேதாந்தக்ருத் - வேதங்களில் சொல்லிய கர்மங்களின் பலத்தைக் கொடுப்பவனும், வேதவித் - வேதத்தைத்தெரிந்து கொண்டவனும், அஹமேவ - நானே. 15

ஸமாஹித: | ஸந்தி தஸ்மாந்ந ஸர்வத்ர வாயவ: ॥' என்றிவை முதலிய இடங்களில் உள்ளே இருக்கிற காற்றுக்களின் வ்யாபாரங்களினால் வ்ருத்தி செய்யப்பட்ட அக்னி பக்குவம் செய்யச் சக்தியுள்ளதாகிறது என்று சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ப்ராணன், அபானன்' என்றாரம்பித்து. ஒருகாற்றே ஶரீரத்தில் அநேகவிதமான வ்யாபாரங்களையுடையது என்பது 1 'பஞ்சவ்ருத்திர் மநோவத் வ்யபதிஶ்யதே' என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் 2 'ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், ஸமானன், என்கிற இவையெல்லாம் ப்ராணவாயுதான்,' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தைக்கொண்டு நிரூபிக்கப்பட்டது. 14

---

1 *ஶாரீரகஸூத்ரம்* - 2-4-11. *மநோவத்-மனதைப் போலவே (ஒரு ப்ராணயுமே), பஞ்சவ்ருத்தி:-ஐந்துவிதமான வ்ருத்திகளை யுடையதாக, வ்யபதிஶ்யதே-சொல்லப்படுகிறது.* 2 *ப்ருஹதாரண்யகம்*-1-5-3.

பா] அந்தச் சந்திரன், அக்னி, இவர்களுக்கும், மற்றெல்லா ப்ராணிகளின் கூட்டத்திற்கும், எல்லா வ்யாபாரங்களைச் செய்வதற்கும், செய்யாமல் நிவ்ருத்திப்பதற்கும், காரணமாகிய ஜ்ஞானம் உண்டாகும் இடமாகிய ஹ்ருதயத்தில் அவை எல்லாவற்றையும் என்னுடைய ஸங்கல்பத்தினால் நியமனம் செய்துகொண்டு அவைகளுக்கு ஆத்மாவாக நான் இருக்கிறேன். அப்படியே ஶ்ருதிகளிலும் * 'உள்ளே நுழைந்துகொண்டு எல்லாவற்றையும் நியமிக்கிற எல்லா ப்ராணிகளுக்கும் ஆத்மாவாகிய' என்றும் † 'எவன் ப்ரதிவியில் இருந்துகொண்டு' என்றும், ‡ 'எவன் ஆத்மாவின் உள்ளே இருந்துகொண்டு நியமிக்கிறானோ' என்றும், ¶ 'தாமரை மொக்கைப்போலிருக்கிற ஹ்ருதயம் தலைகீழாகத்தொங்குகிறது' என்றும், § 'ப்ரம்மபுரமென்று சொல்லப்பட்ட இந்தச் ஶரீரத்தில் ஸூக்ஷ்மமாகிய தாமரைப் பூவைப்போல எந்த இடமிருக்கிறதோ' என்றும் அர்த்தமுள்ளவாக்யங்களில்

தா] 'ஸர்வஸ்ய சாஹம்' என்கிற ஶ்லோகத்திற்கு ஸங்கதி இல்லை என்பதைப் பரிஹரிப்பதற்காகக் கீழ் ஒன்று சேர்த்துச் சொல்லியிருப்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறதென்று ஸங்கதி சொல்லுகிறார்—'இவ்விடத்தில்' என்றாரம்பித்து. 'ச' என்பது கீழ்ச் சொல்லியதை சேர்த்துக்கொள்ளவேண்டும் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு கீழ்ச் சொல்லிய அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அந்தச் சந்திரன்' என்றாரம்பித்து. 'ஸர்வஸ்ய' என்பதற்கு 'ஹ்ருதி' என்னும் பதத்தோடு சேர்ந்திருப்பதினால் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'எல்லா ப்ராணிகளின் கூட்டத்திற்கும் என்று. 'ஹ்ருதி' என்று சொல்லியிருப்பதின் ப்ரயோஜனத்தைக் காட்டுவதற்காக அந்த ஹ்ருதயத்தின் ஸ்வபாவத்தைச் சொல்லுகிறார்— 'எல்லா வ்யாபாரங்களைச் செய்வதற்கும்' என்றாரம்பித்து. ஆகாசத்தைப் போல உள்ளே நுழைந்திருப்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்— 'ஆத்மாவாக' என்று. ஆத்மாவாகவிருப்பதை நிரூபிப்பதற்காக 'அவை எல்லாவற்றையும் என்னுடைய ஸங்கல்பத்தினால் நியமனம் செய்துகொண்டு' என்று சொல்லப்பட்டது. 'அப்படியே' என்பதற்கு நியமிப்பதற்காக உள்ளே நுழைந்திருப்பதினால் இவனை ஆத்மாவாகவே

* யஜுர்வேதம், ஆரண்யகம்-3-11-2.

† ப்ரஹதாரண்யம்-5-7-3.

‡ ப்ரஹதாரண்யகம்-5-7-22.

¶ தைத்திரியம், நாராயணம்-11.

§ சாந்தோக்யம்-8-1-1.

சோல்லப்படுகின்றன. ஸ்ம்ருதிகளும் * 'ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய ஜகதோ யோ ஜகந்மய:', † 'ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாமணீயாம் ஸமணீயஸாம்', ‡ 'யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித:' என்றிவை முதலியவைகள் சொல்லப்படுகின்றன. ஆகையினலே என்னிடத்திலிருந்தே எல்லா ப்ராணிகளுக்கும் நினைவுஉண்டாகிறது நினைவாவது முன்னல் அனுபவிக்கப்பட்ட விஷயத்தைப்பற்றியதாயும், அந்த அனுபவித்தினலுண்டாகிய ஸம்ஸ்காரம் மாத்திரத்தினல்உண்டாகியஜ்ஞானம். அறிவாவது இந்த்ரியங்கள், காரணங்கள், ஶாஸ்த்ரம், யோகம், இவைக

சொல்லுகின்றன என்றர்த்தம். முதல் பாதத்தில் சொல்லப்பட்ட அர்த்தம் இரண்டாவது பாதத்தில் சொல்லப்படுகிற அர்த்தத்திற்குக் காரணம் என்று சொல்லுகிருர்—'ஆகையினல்' என்ருரம்பித்து. 'என்னிடத்திலிருந்தே...உண்டாகிறது' என்பது தானகவே ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லியிருக்கிறது. வேதத்தின் அர்த்தங்களை விசதப்படுத்துகிற ஸ்ம்ருதி என்னும் க்ரந்தம் சொல்லப்படுகிறது என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிருர்—'நினைவு' என்று. வெளியிலிருக்கும் விஷயங்களைப்பற்றி நினைவு இல்லை என்கிற மதத்தை நிராகரிப்பதற்காக 'முன்னல் அனுபவிக்கப்பட்ட விஷயத்தைப் பற்றியதாயும்' என்று சொல்லப்பட்டது. நேற்றுப் பார்த்தவனிவன்தான் என்கிற ப்ரத்யக்ஷத்தை விலக்குவதற்காக 'ஸம்ஸ்காரம் மாத்திரத்தினல்' என்று சொல்லியிருக்கிறது. கோபலீவர்த ந்யாயத்தை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'ஜ்ஞாநம்' என்னும் பதத்திற்கு வ்யாக்யானஞ் சொல்லுகிருர்—'இந்த்ரியங்கள்' என்ருரம்பித்து. 'அபோஹதோஷ: (நிவ்ருத்தி செய்யப்பட்ட தோஷங்களையுடையவன்)' என்றிவை முதலிய ப்ரயோகங்களை யனுஸரித்து 'அபோஹநம்' என்னும் பதம நிவ்ருத்தியைச் சொல்லுகிறது என்பதையும், அந்த நிவ்ருத்தி எதினுடையது என்

* *விஷ்ணுபுராணம்-1-17-20. அசேஷஸ்ய-எல்லா, ஜகத:-லோகத்திற்கும் விஷ்ணு:-விஷ்ணு, ஶாஸ்தா-நியமிக்கிறவன். ய:—எவன், ஜகன்மய:-லோகத்தை ஶரீரமாக வுடையவனே.*

† *மனுஸ்ம்ருதி-12-122. ஸர்வேஷாம்-எல்லா ப்ராணிகளுக்கும், ப்ரசாஸிதாரம்-நியமிக்கிறவனுகஇருக்கிற, அணீயஸாம்-ஸூக்ஷ்மமாகிய வஸ்துக்களுக்குள் அணீயாம் ஸம் மிகவும் ஸூக்ஷ்மமாகிய.*

‡ *மனுஸ்ம்ருதி-7-92-யம் நியமிப்பவனுயும், வைவஸ்வத:-ஸூர்யமண்டலத்திலிருப்பவனுயும், ராஜா-ஜனங்களைத்திருப்தி செய்விக்கிறவனுயுமிருக்கிற, ய:-எந்த, ஏஷ:-இந்தப் பகவான், தவ-உன்னுடைய, ஹ்ருதி-ஹ்ருதயத்தில், ஸ்தித:-இருக்கிருனே.*

ளாலுண்டாகிய வஸ்துக்களைப்பற்றிய நிஶ்சயம். அதுவும் என்னாலேயே உண்டாகிறது. 'அபோஹநம்' (மறப்பது) ஆவது ஜ்ஞானம் நிவ்ருத்தியடைவது. அன்றிக்கே ஊஹிப்பதாகவுமாம். ஊஹமாவது இந்த ப்ரமாணம் இவ்விதமாக உண்டாகக்கூடியது என்று ப்ரமாணம் உண்டாகக்கூடிய யோக்யதையைப்பற்றியகாரணம் முதலியவைகளைநிரூபிப்பதினால் உண்டாகிய அந்தந்தப்ரமாணங்களுக்கு ஒத்தாசையாயிருக்கிற ஜ்ஞானம். அதுவும் என்னாலேயே உண்டாகிறது. ஆகையினால் அக்னி, ஸூர்யன், வாயு, சந்திரன், இந்திரன், முதலியவர்கள் என்னையே அந்தர்யாமியாகவுடையவைகளாகையினாலே என்னையே ஆத்மாவாக உடையவைகளாகையினால் அவைகளைச்சொல்லுகிற எல்லா வேதங்களினாலும் தேவன் மனுஷ்யன்முதலிய பதங்களினால் ஜீவாத்மாவைப்போல நானே

பதை அபேக்ஷிக்கிறபடியினால் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஜ்ஞானத்தினுடையது என்பதையும் அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'ஜ்ஞானம் நிவ்ருத்தியடைவது' என்று. முன்பு 1 'அபபரீ வர்ஜநே' என்பதை யனுஸரித்து 'அப' என்னும் உபஸர்க்கம் நிவ்ருத்தியைச் சொல்லுகிறதென்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு வ்யாக்யானஞ் செய்யப்பட்டது. இப்பொழுது அதைச் சொல்லாமல் 2 'அத்யாஹாரஸ்தர்க ஊஹ:' என்கிற அமரத்தை யனுஸரித்து ஜ்ஞானம் என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட ப்ரமாணமாகிய ஜ்ஞானங்களுக்கு ஒத்தாசையாகிய யுக்தியைச் சொல்லுகிறதென்பது உசிதம் என்கிற அபிப்ராயத்தினால் வ்யாக்யானஞ் செய்கிறார்—'அன்றிக்கே ஊஹிப்பதாகவுமாம்' என்று. 'ஊஹநம்' என்னும் பதம் 'ஊஹம்' என்னும் வஸ்துவைச் சொல்லுகிற 'ல்யுட்' என்னும் விக்ருதியையுடையது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஊஹமாவது' என்று. 'இவ்விதமாக உண்டாகக்கூடியது' என்பதற்கு கண்ணாலுண்டாகக்கூடிய ஜ்ஞானம், ரூபத்தையுடைய வஸ்து, ரூபம், அந்தரூபத்துடன் ஒரே இடத்தில் சேர்ந்திருக்கக்கூடிய வஸ்து இவைகளாகிற கண்ணோடு ஸம்பந்தமுடைய விஷயங்களைப்பற்றி உண்டாகக்கூடியது என்றிவை முதலாக ப்ரமாணங்கள் . உண்டாகத் தகுந்த விஷயங்களைப் பற்றியது என்றர்த்தம். 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:' என்று கீழே சொல்லப்பட்ட, எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக இருக்கை 'வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:' என்கிற விடத்திலும் காரணம் என்றுசொல்லுகிறார்—'ஆகையினால்' என்றாரம்பித்து. 'எல்லா வேதங்களினாலும் ...

1 அஷ்டாத்யாயீ-1-4-88.

2 நாமலிங்காநு சாஸனம், 1-வது காண்டம், புத்திவர்க்கம்.

அறியத்தக்கவன். இந்திரனைக்குறித்து யாகம் செய்யவேண்டும், வருண னைக்குறித்து யாகம்செய்யவேண்டும், என்றர்த்தமுள்ளவேதவாக்யங்களு க்கு முடிவாவது பலங்கள். அந்த எல்லா வேதங்களும் பதத்திலேயே

நானே அறியத்தக்கவன்' என்பதற்கு 1 'அறியத்தகுந்த வஸ்துக்களுக் குள் உயர்ந்ததாகிய நாராயணனை' என்றர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யத்தி லும் 2 'வசஸாம் வாச்யமுத்தமம்' என்கிற விடத்திலும் சொல்லப்பட்ட முக்யமான அறியத்தக்கவஸ்து நானே என்றர்த்தம். ஸரீரத்தைச் சொல்லுகிற பதங்களினால் ஆத்மாவே முக்யமாக அறியத்தக்கது என் பதற்கு உதாஹரணம் சொல்லுகிறார்— 'தேவன், மனுஷ்யன், முதலிய பதங்களினால்' என்றாரம்பித்து. 3'வாசிகை: பக்ஷிம்ருகதாம் மானஸைரந்த்யஜாதிதாம் । ஸரீரஜை: கர்மதோஷைர்யாதி ஸ்தாவரதாம் நர: ॥' என்றிவை முதலிய வேறுவிதமாக அர்த்தம் சொல்லக்கூடாத ப்ரயோகங்களிருப்பதினால் மனுஷ்யன் முதலிய பதங்கள் ஆத்மா வரை யிலும் சொல்லுகின்றன என்பது முசிதந்தான் என்று தாத்பர்யம். 'வேதாந்த' என்னும் பதம் உபநிஷத்தைச் சொல்லுகிறதா யிருந்தா லும் வேதங்களின் முடிவைச்சொல்லுவதாக விருந்தாலும் இந்த ஸந் தர்ப்பத்தில் பொருத்தமில்லாததினால் 'அந்த' என்னும் பதம் கடைசி யைச்சொல்லுகிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு வ்யாக்யா னஞ் செய்கிறார்—'இந்திரனைக்குறித்து' என்றாரம்பித்து. 'என்றர்த்த முள்ள வேதவாக்யங்களாவது' 4 'இந்திரனைக்குறித்து அமாவாஸ்யை யில் தயிரை ஹோமம் செய்யவேண்டும்' என்றும், 'இந்திரனைக்குறி த்து அமாவாஸ்யையில் பாலை ஹோமம் செய்யவேண்டும்' என்றும், 5 'வருணனைக்குறித்து அவ்வளவு நாலு கபாலங்களில் செய்யப்பட்ட புரோடாசங்களை ஹோமம் செய்யவேண்டும்' என்றுமர்த்தமுள்ள வாக்யங்கள் என்று தாத்பர்யம். 'அந்த' என்னும் பதம் பலங்களைச் சொல்லுகிறதென்பது எப்படிப்பொருந்தும்? என்று ஆக்ஷேபம் வருகிற படியினால் அதை நிரூபிக்கிறார்—'அந்த எல்லா வேதங்களும்' என்றாரம்

---

1 புருஷஸூக்தம். 2 ஜிதந்தே ஸ்தோத்திரம்-வசஸாம்-வார்த்தைகளுக்கு, உத்தமம்-உயர்ந்த, வாச்யம் அர்த்தமாகிய

3 மனுஸ்ம்ருதி-12-9. வாசிகை:-வாயினாலுண்டாகிய, கர்மதோஷை:-கர்மங் களின் தோஷங்களினால், நர:-மனுஷ்யன், பக்ஷிம்ருகதாம்-பக்ஷியாகவும் ம்ருகமாக வும் இருப்பதையும், மானஸை:-மனதினாலுண்டாகிய கர்மதோஷங்களினால், அந்த் யஜாதிதாம்-சண்டாள ஜாதியை யுடையவனாகவிருக்கையும், ஸரீரஜை:-ஸரீரத்தில் உண்டாகிய கர்மதோஷங்களினால், ஸ்தாவரதாம் - ஸ்தாவரமா யிருக்கையையும், யாதி-அடைகிறான். 4 யஜுர்வேதம். 2-வது காண்டம்-5-4-1.

5 யஜுர்வேதம். 2-வது காண்டம்-3-12-1.

அல்லவோ முடிவுபெறுகின்றன. ஆகையினால் 'வேதாந்தக்ருத்' என்பவன் பலத்தைச்செய்பவன். அதாவது வேதங்களில் சொல்லிய பலங்களைக் கொடுப்பவனும் நானே என்றர்த்தம். அதுவும் முன்னமேயே * 'யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்ச்சிதுமிச்சதி' என்றாரம்பித்து † 'லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்' என்கிறவரையிலும், ‡ 'அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச' என்றும்சொல்லப் பட்டது. வேதத்தைத் தெரிந்துகொண்டவனும் நானே. அதாவது இவ்விதமாக வேதம் என்னைச் சொல்லுகிறதென்று தெரிந்துகொண்டவன் நானே. இதற்கு வேறாக எவன் வேதத்திற்கர்த்தம் சொல்லுகிறானோ அவன் வேதத்தைத்தெரிந்துகொண்டவனல்ல என்றபிப்ராயம். 15

பித்து. 1 'அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச' என்கிறவிடத்திலேபோல 'வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:' என்பதினாலேற்பட்ட எல்லாக் கர்மங்களினாலும் தானே ஆராதிக்கப்படுகிறான் என்பதைச்சொன்ன பிறகு அவைகளின் பலத்தைக்கொடுக்கிறான் என்று சொல்லியிருப்பது முன் சொல்லியிருப்பவைகளோடுபொருத்த முடையது என்று தெரிவித்துக்கொண்டு ஏற்பட்ட அர்த்தத்தை இத்தையே சொல்லுகிற ப்ரமாணத்துடன் சேர்த்துச்சொல்லுகிறார்— 'அதாவது வேதங்களில் சொல்லிய பலங்களை' என்றாரம்பித்து. 'ஏவ' என்பது இப்பொழுதிருக்கிறவிடத்திலேயே அந்வயிப்பதாயிருந்தால் பகவான் வேதத்தைத்தெரிந்து கொள்ளாதவரல்ல என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறதாகும். அது உசிதமல்ல பகவான் வேதத்தைத் தெரிந்துகொள்ளாதவரென்றாக்ஷேபமே உசிதமல்லவாகையினால். ஆகையினால்அந்த'ஏவ'என்பது'அஹம்' என்பதோடு அந்வயிக்கிறது என்று. சொல்லுகிறார்—'வேதத்தைத்தெரிந்து கொண்டவனும் நானே' என்று 2 'யே வேதவிதோ விப்ரா:' என்பதினால் பகவானைத் தவிர மற்றவர்களும் வேதத்தைத் தெரிந்து கொண்டவர்களென்றேற்படுகிறபடியினால் 'நானே' என்பதினால் மற்றவர்களல்லவென்று மறுத்திருப்பது எப்படிப்பொருந்தும்? என்றாக்ஷேபம் வருகிறபடியினால் அதின் அபிப்ராயத்தைச்சொல்லுகிறார்—'அதாவது இவ்விதமாக'என்று ஆரம்பித்து.

---

* பகவத்கீதை-7-21. † பகவத்கீதை-7-22.

‡ பகவத்கீதை-9-24. 1 பகவத்கீதை-9-24.

2 பாரதம் - ஆரண்யபர்வம்-86-26. யே-எந்த, விப்ரா: - ப்ராம்மணர்கள் - வேதவிதா:-வேதத்தைத் தெரிந்தவர்களோ.

பா-அ] ஆகையினால் என்னிடத்திலிருந்தே எல்லா வேதங்களுக்கும் ஸாரமாகிய அர்த்தத்தைக் கேள்—

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरस्सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥ 16

ப - ரை] लोके - இந்த லோகத்தில், क्षरः - க்ஷரன் என்றும், अक्षर एव च - அக்ஷரன் என்றும், इमौ - இந்த, द्वौ - இரண்டுவிதமான, पुरुषौ - புருஷர்கள் (ஏற்பட்டிருக்கிறார்கள்), क्षरः - க்ஷரன் ஆவது, सर्वाणि - எல்லா, भूतानि - ப்ராணிகளும், कूटस्थः - பரிசுத்தமான ஜீவாத்மாவானவன், अक्षरः - அக்ஷரன் என்று, उच्यते - சொல்லப்படுகிறான். 16

பா] க்ஷரன் என்றும் அக்ஷரம் என்றும் இரண்டுவிதமாகிய இந்தப் புருஷர்கள் இந்தலோகத்தில் ப்ரஸித்தர்களாக இருக்கிறார்கள். அதில் க்ஷரன் என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட புருஷன் பத்த ஜீவனென்னும் பதத்தினால் சொல்லத்தகுந்தவர்களாயும், ப்ரம்மா முதல் புழு வரையிலுள்

தா] எல்லாவேதங்களுக்கும் ஸாரமாகிய புருஷோத்தமனுடைய உண்மையை நிரூபித்திருப்பதைக் கீழ்ச்சொல்லிய அர்த்தத்தோடு சேர்த்து அவதாரிகை சொல்லுகிறார்—'ஆகையினால்' என்றாரம்பித்து 'லோகே' என்னும் பதம் 'லோக்யதே அநேந (இதினால் மற்ற வஸ்து அறியப்படுகிறது)' என்னும் வ்யுத்பத்தியினால் ப்ரமாணங்களைச்சொல்லுகிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'ப்ரதிதः' என்று மேலேசொல்லப்போகிறதை இவ்விடத்தில் வசனத்தை மாத்திரம் மாற்றிச் சேர்த்துக் கொண்டு அர்த்தம் சொல்லுகிறார்—'லோகத்தில் ப்ரஸித்தமாக விருக்கிறார்கள்' என்று. ப்ரமாணமும் 1 'பிறப்பில்லாத ஒருவன் இந்த ப்ராக்ருதியினிடத்தில் ப்ரீதி செய்துகொண்டு இத்துடன் சேர்ந்திருக்கிறான். பிறப்பில்லாத மற்றொருவன் தன்னாலனுபவிக்கப்பட்ட போகங்களையுடைய இந்த ப்ராக்ருதியை விட்டுவிடுகிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளென்று இங்கு அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. புருஷன் என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட ஜீவாத்மா ஸ்வரூபத்தில் மாறுதலையுடையதென்பது பொருந்தாதாகையினால் ஶரீரத்தின் வழியாக அது சொல்லப்படுகிறது, என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு மூன்றாவது பாதத்திற்கு வ்யாக்யானஞ் செய்கிறார்—'அதில் க்ஷரன் என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட' என்

---

1 தைத்திரீயம் 2-வது ப்ரஶ்னம்.

ளவர்களாயும் மாறுவதையே ஸ்வபாவமாகவுடைய அசேதனங்களுடன் சேர்ந்தவர்களாயுமிருக்கிற எல்லா ப்ராணிகளும். இவ்விடத்தில் அசேதனத்துடன் சேர்ந்திருப்பதாகிய ஒரு காரணத்தினால் ‘புருஷ:’ என்று ஏகவசனமாக (ஒருமையாக)ச் சொல்லியிருக்கிறது. அக்ஷரமென்னும் ஶப்தத்தினால் சொல்லப்பட்டவன் அசேதனங்களின் ஸம்பந்தமில்லாதவனாகவும், தன்னுடைய ரூபத்தோடு கூடினவனாயுமிருக்கிற முக்தனாகிய ஆத்மா. அவன் அசேதனங்களின் ஸம்பந்தமில்லாதவனாகையினால் அசேதனங்களின் மாறுதல்களாகிய ப்ரம்மா முதலிய ஶரீரங்களுக்கு அஸாதாரணமானவனல்ல. ஆகையினால் கூடஸ்தன் என்று சொல்லப்படுகிறான். இவ்விடத்திலும் ஏகவசனமாகச் சொல்லியிருப்பது அசேதனங்களின் ஸம்பந்தமில்

றாரம்பித்து. ‘க்ஷர:’ என்பதினால் ஒன்றென்று சொல்லியிருப்பதினால் ‘ஸர்வாணி பூதாநி’ என்பதினால் அநேகமென்று சொல்லியிருப்பது உபாதியினாலேற்பட்டது என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—‘இவ்விடத்தில்’ என்றாரம்பித்து. பத்த ஜீவர்களுக்கு ஸ்வரூபத்தில் பேதமில்லாமல் போனால் எல்லாருடைய ஸுகம் துக்கம் முதலியவைகளை எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டியதாகும் என்று தாத்பர்யம். ‘கூடஸ்த:’ என்னும் பதம் அநேக ஸந்ததிகளுக்குமூல புருஷனை இருக்கிறவனிடத்தில் ப்ரஸித்தமாக இருக்கிறது. அப்படிப்பட்டவன் இவ்விடத்தில் பரமாத்மாவல்ல, ‘உத்தம: புருஷஸ்த்வந்ய:’ என்று அவனைப்பற்றித் தனியாகச் சொல்லப்போகிறபடியினால். ‘ப்ரம்மா முதலியவர்களுமல்ல, அவர்கள் தேஹத்துடன் ஸம்பந்தமுள்ளவர்களாகையினால் க்ஷர என்னும் பதத்தினால் சொல்லப்பட்டபடியினால். முக்தியடைந்த ஆத்மாவுமல்ல, இந்தப் பதத்திற்கவனைச் சொல்லக்கூடிய ஶக்தி இல்லாமையினால், என்கிற ஆக்ஷேபம் வருகிறபடியினால் அந்த முக்தாத்மாவினிடத்தில் இந்தப் பதத்திற்குக் காரணப் பெயராகச் சொல்லக்கூடிய ஶக்தி இருக்கிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு இது முக்தாத்மாவைச் சொல்லுகிறதென்று சொல்லுகிறார்—‘அசேதனங்களின் ஸம்பந்தமில்லாதவனாகவும்’ என்றாரம்பித்து. காரணப்பெயராகச் சொல்லக்கூடிய ஶக்தியை நிரூபிக்கிறார்—‘அவன்’ என்றாரம்பித்து ‘ப்ரம்மா முதலிய ஶரீரங்களுக்கு’ என்பதற்கு ப்ரம்மா முதலிய ஶரீரங்களின் ஸம்பந்தத்தினாலேற்பட்ட விசித்ரங்களாகிய ஸுகதுக்கங்களை யனுபவிக்க உரிமையான ஆகாரத்தை யுடையவனல்ல என்றர்த்தம். இத்தால் 1 ‘தன்னுடைய ரூபத்துடன் சேருகிறான்’ என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் சொல்லப்பட்ட சுருக்க

1 சாந்தோக்யம்-8-12-?.

லாமையாகிற ஒரு காரணத்தினால். இதற்கு முன்பு அநாதியாகிய காலத்தில் முக்தியடைந்தவனொருவன் தானல்லவாகையினால். அப்படியே * '𑌬𑌹𑌵𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌪𑌸𑌾 𑌪𑍂𑌤𑌾 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌮𑌾𑌗𑌤𑌾𑌃' என்றும், † '𑌸𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑌿 𑌨𑍋𑌪𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇 𑌨 𑌵𑍍𑌯𑌥𑌨𑍍𑌤𑌿 𑌚' என்றும் சொல்லப்பட்டது.

𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 ।
𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 ॥ 17

ப-ரை] 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 - பரமாத்மாவென்று, 𑌉𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 - சொல்லப்பட்ட, 𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 - உயர்ந்தவனாகிய, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 - புருஷனோ வெனில், 𑌅𑌨𑍍𑌯𑌃 - இவைகளைவிட வேறுபட்டவன், 𑌅𑌵𑍍𑌯𑌯𑌃 - மாறுதலில்லாத, 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 - எல்லாவற்றையும் நியமிப்பவனாயும் இருக்கிற, 𑌯𑌃 – எவன், 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌂 - மூன்றுவிதமான வஸ்துக்களையும், 𑌆𑌵𑌿𑌶𑍍𑌯 - உள்ளே நுழைந்து, 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 - தரிக்கிறானோ. 17

பா] உத்தமனாகிய புருஷனோவெனில் க்ஷரம் அக்ஷரம் என்னும் பதங்களினால் சொல்லப்பட்ட பத்த ஜீவர்கள், முக்த ஜீவர்கள், இவர்களைவிட வேறுபட்டவன். எல்லா ஶ்ருதிகளிலும் பரமாத்மாவென்று சொல்லப்பட்

மில்லாத ஜ்ஞானமொன்றையே ஸ்வபாவமாகவுடையவன் என்று சொல்லப்பட்டதாகிறது. இப்படியாகில் '𑌕𑍂𑌟𑌵𑌤𑍍 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 (சிகரம்போலிருக்கிறான்)' என்று '𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌃' என்னப்படுகிறான் என்று வ்யுத்பத்தியும் காட்டப்பட்டது. எல்லாவற்றிற்கும் பொதுவாகிய ஆகாரத்தையுடையவனாக இருக்கையே இவ்விடத்தில் சிகரம்போலிருக்கிறதென்று தாத்பர்யம். இவ்விடத்திலும் ஏக வசனமாகச் சொல்லியிருப்பது ஒரு காரணத்தினால் சேர்க்கப்பட்டிருப்பதைக் காரணமாகவுடையது என்று சொல்லுகிறார்—'இவ்விடத்திலும்' என்றாரம்பித்து. கீழ்ச்சொன்ன அர்த்தத்தில் காரணத்தைக்காட்ட வேண்டுமென்கிற அபிப்ராயத்தினால் முக்தியடைந்த ஆத்மாக்கள் அநேகர்கள் என்பதை ப்ரமாணத்துடன் நிரூபிக்கிறார்—'இதற்கு முன்பு' என்றாரம்பித்து. 16

தா] *இதுவரையில் சொல்லப்படாமையினால் '𑌅𑌨𑍍𑌯𑌃' என்பது விதிக்கப்படுகிறது என்று சொல்லிக்கொண்டு அதற்கு பாரைவிட என்று சொல்லவேண்டியிருப்பதினால் கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்ட க்ஷர, அக்ஷர, என்கிற புருஷர்களே அத்துடன் அந்வயிக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்—*'உத்தமனாகிய புருஷனோவெனில்' *என்றாரம்பித்து. '𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃' என்பது விதிக்கப்படுகிறது என்று சொல்லுவது ஸம்ப*

---

* பகவத்கீதை-4-10. † பகவத்கீதை-14-2.

டவன். பரமாத்மாவென்று சொன்னதினாலேயே இந்த உத்தமனாகிய புருஷன் பத்தனாயும் முக்தனாயுமிருக்கிற ஜீவர்களைக்காட்டிலும் வேறுபட்டவனென்றறியப்படுகிறது எப்படியெனில் சொல்லுகிறார்—'யோலோகத்ரயம்' என்று. 'லோக்யந்தே (பார்க்கப்படுகின்றன)' என்கிற வ்யுத்பத்தியினால் லோகா: அவைகள் மூன்றாவது அசேதனமும், அத்துடன் சேர்ந்த ஜீவாத்மாவும், முக்தனான ஜீவாத்மாவும், என்கிற ப்ரமாணங்களாலறியத்தகுந்த இந்த மூன்று வஸ்துக்களையும் எவன் ஆத்மாவாக உள்ளே நுழைந்து தரிக்கிறானோ அவன் தன்னால் வ்யாபரிக்கத் தகுந்ததாயும், தரி

க்காததாகையினால் அந்யன் என்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறது அது என்று சொல்லுகிறார்—'எல்லா ஸ்ருதிகளிலும்' என்றாரம்பித்து. 1 'அந்தச் சிகையின் நடுவில் பரமாத்மா இருக்கிறான்' என்றும், 1 'நாராயணன் பரனாகிய ஆத்மா' என்றர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யங்களில் என்றர்த்தம். பரமாத்மாவென்று சொல்லியிருக்கிறதற்குக் காரணத்தை நிரூபிக்கிறது என்று மேல் பாகிக்கு அவதாரிகை சொல்லுகிறார்—'எப்படியெனில்' என்று. 'லோக' என்னும் பதம் ப்ரஸித்தமான லோகத்தைச் சொல்லுவதாயிருந்தால் 'லோகத்ரயம்' என்பது பூ:, புவ:, ஸுவ:, என்கிற லோகங்களையாவது, ஸ்வர்க்கலோகம், மனுஷ்யலோகம், பாதாளலோகம், என்கிற லோகங்களையாவது சொல்லுகிறதாகும். அப்படியாகில் அவைகளுக்குள் வ்யாபரித்திருப்பதும், அவைகளைத் தரிப்பதும் எல்லாவஸ்துக்களுக்கும் அந்தராத்மா என்கிற தாத்பர்யத்தையுடைய பரமாத்மா என்பதை நிரூபிக்கக்காரணமாகாததாகையினாலே க்ஷர, அக்ஷர என்கிற எல்லா வஸ்துக்களைவிட வேறுபட்டவன் என்பதற்கு ஸாதகமாகாது. க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம் என்றுசொல்லப்படுகிற மூன்று லோகங்களைச் சொல்லுவதாயிருந்தாலும் அவைகளிலிருக்கிற ஜீவாத்மாக்களில் லக்ஷணை ஒப்புக்கொள்ளவேண்டும். அதைவிடக் காரணப்பெயர் என்று ஒப்புக்கொள்ளுவதே மேலானது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு வ்யாக்யானஞ் செய்கிறார்—'லோக்யந்தே' என்றாரம்பித்து. கண்ணுக்குத்தெரியாத பத்த முக்த ஜீவர்களைப்பற்றி 'லோக்யந்தே (பார்க்கப்படுகின்றன)' என்பது எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபம் வருகிறபடியினால் அதற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ப்ரமாணங்களாலறியத்தகுந்த' என்று. 'ய:' என்பது 2 'ஜனங்களை உள்ளே நுழைந்து நியமிக்கிறவன் எல்லாவற்றிற்கும் ஆத்மா' என்றும், 3 'எல்லாவற்றையும் தரிக்கக்கூடிய சக்தி

---

1 புருஷஸூக்தம். 2 யஜுர்வேதம்-ஆரண்யகம்-3-11
3 யஜுர்வேதம்-ஆரண்யகம்-3-14.

க்கத் தகுந்ததாயுமிருக்கிற வஸ்துக்களைவிட வேறுபட்டவன். இத்தாலும் கீழ்ச்சொல்லிய மூன்றுவித வஸ்துக்களைவிட வேறுபட்டவன். எந்தக் காரணத்தினால் அவன் மாறுதல்களில்லாதவனோ, எல்லாவற்றையும் நியமிக்கிறவனோ, மாறுதலடையாமலிருப்பதையேஸ்வபாவமாகவுடையவன் மாறுதல்களையடைவதையே ஸ்வபாவமாகவுடைய அசேதனங்களைவிடவும், அந்த அசேதனங்களுடன் சேர்ந்திருப்பதினால் அதையனுஸரித்திருக்

யுள்ளவனாயிருந்துகொண்டு தன்னாலேயேதான் தாங்கப்பட்டவனாயிருந்துகொண்டு அவைகளைத் தரிக்கிறான்’ என்று மர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகள் இவ்விடத்தில் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டன. ‘அவன்’ என்பதற்கு பரமாத்மாவென்று சொல்லப்பட்ட அவன் என்றர்த்தம் ‘ய:’ என்பது அந்தப் பரமாத்மாவைச் சொல்லுகிறபடியினாலும் இங்கே சொல்லியிருக்கும் விசேஷணங்கள் தனித்தனியாக அவன் வேறுபட்டவன் என்பதை ஸாதிக்கக்கூடிய சக்தியுள்ளவைகள். வஸ்துவின் ஸ்திதி மாத்திரத்தைச் சொல்லுகிறதென்னில் இவ்விடத்தில் அனாவஶ்யகத்தைச் சொல்லியிருக்கிறதாகும். ஒரு பதத்தினாலேயே வஸ்துவின் ஸ்திதிசொல்லப்பட்டிருக்கும் பொழுது மற்றப் பதங்கள் வ்யர்த்தமென்றேற்படும், என்றிவைகளை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—‘இத்தாலும்’ என்றாரம்பித்து. இவ்விடத்தில் வ்யாபரித்திருப்பது, தரிப்பது, நியமிப்பது, இவைகளைச் செய்கிறவனாயும் இவைகள் அந்தக் கார்யங்களுக்கு விஷயங்களாகவுமிருப்பதினால் வேறுபட்டவன் என்பதை ஸ்தாபிக்கக்கூடியவைகள். மாறுதலில்லாமலிருப்பதோவெனில் நேரிலேயே ஸ்வபாவம் ஒன்றுக்கொன்று விரோதமாக இருந்தபடியினால் வேறுபட்டவன் என்பதை ஸ்தாபிக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— ‘மாறுதலையடையாமலிருப்பதையே ஸ்வபாவமாகவுடையவன்’ என்றாரம்பித்து. இப்படி உள்பிரிவுகளின் வ்யத்யாஸத்தைமேலேயும் 1 ‘மாறுதலையடையாமலிருப்பதையே ஸ்வபாவமாகவுடையவனாகையினாலும் வ்யாபரிப்பது தரிப்பது, நியமிப்பது, முதலியவைகளையுடையவனாகையினாலும்’ என்று காட்டப்போகிறார். ‘அசேதனங்களுடன் சேர்ந்திருப்பதினால் அதையனுஸரித்திருக்கிற’ என்பதற்கு அதினாலுண்டாகிய பிறப்பு, மரணம் முதலிய கஷ்டங்களையுடைய என்றர்த்தம். அதைப் போலவே ஜ்ஞானத்தின் சுருக்கம், பரவுதல், முதலிய விகாரங்களை உடைய என்றாகவுமாம். ‘தகுந்தவன்’ ஆகையாவது மற்ற ஒத்தாசைக்

---

1 பகவத்கீதை-15-19-வது ஶ்லோகத்தின் பாஷ்யம்.

பா] அத்ருஷ்டம், ஈஶ்வரன், முதலிய ஒத்தாசைக் காரணங்களில்லாமல் தன்னுலேயே எல்லாம் செய்யமுடியும் என்று நினைத்துக்கொண்டு இப்படிச் செய்வோம், அப்படிச் செய்வோம் மற்றொன்றையும் செய்வோம் என்று அநேகவிதமான எண்ணங்களினுல் ப்ரமத்தையடைந்தவர்களாய், இப்படிப்பட்ட அஜ்ஞானங்களின் கூட்டத்திஞல் மறைக்கப்பட்டவர்களாய், காமபோகங்களில் அதிக ஆசை யுடையவர்களாய் இருக்கும்

தா] பகவானிடத்தில் வைக்கப்பட்ட பாரத்தையுடையவர்களல்லவோ அநேகமாக நிஶ்சயத்தை யடைந்திருக்கிறார்கள். இவர்களுக்கு அவர்களைவிட வ்யத்யாஸத்தைச் சொல்லுகிறார்—'தன்னுலேயே எல்லாம்' என்றாரம்பித்து. சிந்தை என்கிற வ்யாபாரத்தை யுடைய மனது சித்தம் என்னப்படுகிறது. அதின் ப்ரவ்ருத்திகள் அநேகமானதாயினுல் அதையே அநேகம் என்று சொல்லியிருக்கிறது. இதையே விவரிக்கிறார்—'இப்படிச் செய்வோம்' என்றாரம்பித்து. 'விப்ராந்தா:' என்பதற்கு அலைக்கழிக்கப்பட்டவர்களாய் என்றர்த்தம். அன்றிக்கே 'விப்ராந்தி' என்பது விபரீதஜ்ஞானம். 'மோஹம்' ஆவது அஜ்ஞானம். அதுவுமன்றிக்கே 1'அந்யதா சிந்திதம் கார்யம் தைவேந க்ருதமந்யதா' என்கிற ந்யாயத்தினுல் இவர்கள் எண்ணுவதே ப்ரமம் என்று சொல்லுகிறார்—'இப்படிப்பட்ட' என்று. 2 'ந ஜாது காம: காமாநாமுபபோகேந ஶாம்யதி। ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்த்ததே॥' என்று சொல்லப்படுகிற அர்த்தம் 'ப்ர' என்னும் உபஸர்க்கத்தினுல் காட்டப்படுகிறது என்று சொல்லுகிறார்—'அதிக ஆசையுள்ளவர்களாய்' என்று. 3 'இதம் க்ருதமிதம் கார்யமிதமந்யத் க்ருதாக்ருதம்। ஏவமீஹாஸமாயுக்தம் க்ருதாந்த: குருதே வஶே॥' என்று சொல்லப்பட்ட அர்த்

1. அந்யதா-வேறுவிதமாக, சிந்திதம் - யோசனை செய்யப்பட்ட, கார்யம்-கார்யமானது, தைவேந - தைவத்தினுல், அந்யதா - வேறாக, க்ருதம் - செய்யப்பட்டது.

2. விஷ்ணுபுராணம்-4-10-23. காம:-ஆசையானது, காமானும் - ஆசைப்படப்பட்ட வஸ்துக்களின், உபபோகேந - அநுபவிப்பதினுல், நஶாம்யதி-சாந்தியை அடைகிறதில்லை. ஹவிஷா-ஹவிஸ்ஸினுல், க்ருஷ்ணவர்த்மேவ-நெருப்பைப் போல, பூயஏவ-மறுபடியும், அபிவர்த்ததே-வ்ருத்தியடைகிறது.

3. இதம் - இது, க்ருதம் - செய்யப்பட்டது, இதம் - இது, கார்யம் - இனி செய்யத்தக்கது, அந்யத்-வேறாகிய, இதம் - இது, க்ருதாக்ருதம்-சிலபாகம் செய்யப்பட்டு சிலபாகம் செய்யப்படாமலிருக்கிறது, ஏவம்-இப்படி, ஈஹாஸமாயுக்தம்-எண்ணத்தோடு கூடியிருப்பவனை, க்ருதாந்த:—யமன், வஶே-தன் ஸ்வாதீனத்தில், குருதே-செய்கிறான்.

பொழுது நடுவில் மரணத்தை யடைந்தவர்களாய் அபரிசுத்தமான நரகத்தில் வீழுகிறார்கள். 16

ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா தநமாநமதாந்விதா: |
யஜந்தே நாமயஜ்ஞைஸ்தே தம்பேநாவிதிபூர்வகம் || 17

ப - ரை] ஆத்மஸம்பாவிதா: தன்னாலேயே புகழ்ந்துகொள்ளப் பட்டவர்களாயும், ஸ்தப்தா:—ஒரு கார்யத்தையும் செய்யாதவர்களாயும், தநமாநமதாந்விதா:-பணத்தினாலும் மற்றவைகளின் அபிமானத்தினாலுமுண்டாகிய மதத்தையுடையவர்களாயுமிருக்கிற, தே - அவர்கள், தம்பேந - டம்பத்தினால், அவிதிபூர்வகம் - ஶாஸ்த்ரத்தில் விதித்திருக்கிற விதமாக அல்லாமல், நாமயஜ்ஞை:—பெயரையே ப்ரயோஜனமாக உடைய யாகங்களினால், யஜந்தே - யாகம் செய்கிறார்கள். 17

பா] தன்னாலேயே ஸ்தோத்திரம் செய்யப்பட்டவர்களாய் அதாவது தாங்களே தங்களைக் கொண்டாடிக்கொள்ளுகிறார்கள் என்றர்த்தம், தன்னை எல்லாம் நிறைந்தவர்களாக நினைத்துக்கொண்டவர்களாய், ஒரு கார்யத்

தத்தைச் சொல்லுகிறார்—'நடுவில் மரணத்தையடைந்தவர்களாய்' என்று. அபரிசுத்தமாகிய காமபோகத்தில் அதிக ஆசையுடையவர்களுக்கு அப்படிப்பட்டதாகிய பலமே உண்டாகிறது என்கிற அபிப்ராயத்தினால் 'அஶுசௌ' என்கிற விசேஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. அபரிசுத்தமாயிருக்கையாவது மலம், மூத்ரம், ரக்தம், மாம்ஸம் முதலிய இவைகள் நிறைந்திருக்கை. 16

'ஆத்மஸம்பாவிதா:' என்கிற இடத்தில் வேறொருவர் இவர்களை ஸ்தோத்திரம் செய்வதற்கு ப்ரஸ்தாவமே இல்லாமையினால் '[illegible]' என்பதைப்போல தன்னாலே என்பது தொக்கியிருக்கிறதென்று சொல்லுகிறார்—'தன்னாலேயே ஸ்தோத்திரம் செய்யப்பட்டவர்களாய்' என்று. ஆத்மஶ்லாகை முதலிய தோஷத்தை ப்ரகாசம் செய்வதற்காகச் சொல்லுகிறார்—'அதாவது தாங்களே' என்றாரம்பித்து. அயலார்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டிருந்த போதிலும் பெரியோர்கள் வெட்கப்படுகிறார்கள் அல்லவோ. 'ஸ்தப்தா:' என்பதற்குக் காரணம் 'தன்னை எல்லாம் நிறைந்தவர்களாக நினைத்துக்கொண்டவர்களாய்' என்றது. 'ஒருகார்யம் செய்யாதவர்களாய்' என்றது பதத்தின் அர்த்தம் 'ஒரு கார்யததையும்' என்பதற்கு ஆசார்யனை ஸேவிப்பது முதலிய காரியங்களையும் என்றர்த்தம். பணம் முதலிய இந்த லோகத்திற்குரிய ஸம்பத்துக்கள் சேர்ந்திருப்பதினாலுண்டாகிய மதத்தினால் அதிருஷ்டத்தில் தனக்குண்டாகிய குறைவை மறந்து விடுகிறான் என்று

தையும் செய்யாதவர்களாயும், எப்படியெனில் பணத்தினுலும், வித்யை, ஜாதி இவைகளின் அபிமானத்தினுலும் உண்டாக்கப்பட்ட மதத்தோடு கூடினவர்களாய் பேரையே ப்ரயோஜனமாகவுடைய அதாவது யாகம் செய்கிறவன் என்கிற பேர் மாத்திரத்தை ப்ரயோஜனமாகவுடைய யஜ்ஞங்களால் யாகம் செய்கிறார்கள். அதுவும் டம்பமாகிற காரணத்தினுல். அதாவது தான் யாகம் செய்கிறவன் என்கிற ப்ரஸித்தியடைவதற்காக

சொல்லுவதற்காகப் பரலோகத்திற்கு வேண்டிய கார்யங்களில் ப்ரவ்ருத்திக்காமலிருப்பதற்குக் காரணமென்ன என்று ஆக்ஷேபிக்கிறார்—'எப்படி' என்று. 1 'வித்யாமதோ தனமதஸ்த்ருதீயோऽபிஜனமத:' என்று ஒன்று சேர்த்துச் சொல்லியிருப்பதினுலும், இவ்விடத்தில் தனத்தைச் சொல்லியிருப்பதினுலும் அத்துடன் சேர்த்துச் சொல்லப்படுகிற மதத்திற்குக் காரணமாகிய மானம், வித்யை, ஜாதி, முதலியவைகளைப் பற்றியதே என்று சொல்லுகிறார்—'வித்யை, ஜாதி, இவைகளின் அபிமானத்தினுலும்' என்று. நாமத்தோடு சேர்ந்திருக்கிற யஜ்ஞங்கள் நாமயஜ்ஞங்கள். சேர்ந்திருக்கையாவது இவ்விடத்தில் தர்மம் முதலிய ப்ரயோஜனங்களை விலக்குவதற்காக ப்ரயோஜனமாகவும் அதற்குக் காரணமாகவுமிருக்கையினுல் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறார்—'பேரையே ப்ரயோஜனமாகவுடைய' என்று. கீர்த்தி முதலியவைகளிலும் 'நாம' என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதினுல் அவைகளில் ஆசை 'ஸம்ஜ்ஞா' என்பதினுலேயே ஏற்பட்டிருப்பதினுலும், பேரில் அதிக ப்ரஸித்தி இருப்பதினுலும், பரிஹாஸம் செய்யவேண்டியதற்காகச் சொல்லவேண்டியது உசிதமாயிருக்கையினுலும் 'யாகம்செய்கிறவன் என்கிற பேர் மாத்திரத்தை' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டது. ஆகையினுலேயே யஜ்ஞம் என்கிற பேர் மாத்திரமே ஒழிய அவைகள் வாஸ்தவத்தில் யஜ்ஞங்களல்ல என்று வ்யாக்யானஞ்செய்திருப்பதும் அவ்வளவு ப்ரயோஜனமுள்ளதல்ல என்று காட்டப்பட்டது, '[illegible]' என்று சொல்லியிருப்பதினுலேயே இந்த அர்த்தம் ஏற்பட்டபடியினுலும். 'அதுவும் டம்பமாகிற காரணத்தினுல்' என்பதினுல் ஒருவித பலத்தில் ஆசைகாரணமென்று சொல்லியிருக்கிறது. 'அதாவது' என்றாரம்பித்து விஷயத்தினுலும் பலத்தினுலும் அதை விவரித்திருக்கிறது. விதியாவது இவ்விடத்தில் விதிக்கிற வாக்

---

1. *மஹாபாரதம், உத்யோக பர்வம்* 34-46 *வித்யாமத:-வித்யையினுல் உண்டான கர்வம், தனமத:-பணத்தினுல் உண்டான கர்வம், த்ருதீய:-மூன்றாவது, அபிஜன: மத:-ஜாதியினுலுண்டான கர்வம்.*

ஶாஸ்த்ரங்களில் விதித்திருக்கிறபடியல்லாமல் யாகம் செய்கிறார்கள். 17

பா-அ] அவர்கள் இப்படிப்பட்டவர்களாய் யாகம் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்—. 18

𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌂 𑌬𑌲𑌂 𑌦𑌰𑍍𑌪𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌕𑍍𑌰𑍋𑌧𑌂 𑌚 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌮𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌪𑌰𑌦𑍇𑌹𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌕𑌾𑌃 ॥ 18

ப-ரை] 𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 - அஹங்காரத்தையும், 𑌬𑌲𑌂 - பலத்தையும், 𑌦𑌰𑍍𑌪𑌂 - கர்வத்தையும், 𑌕𑌾𑌮𑌂 - காமத்தையும், 𑌕𑍍𑌰𑍋𑌧𑌂 𑌚 - கோபத்தையும், 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 - அடைந்தவர்களாய்க்கொண்டு, 𑌆𑌤𑍍𑌮𑌪𑌰𑌦𑍇𑌹𑍇𑌷𑍁 - தன்னுடையவும் அயலாருடையதுமாகிய தேஹங்களில்(இருக்கிற), 𑌮𑌾𑌂 - என்னை, 𑌪𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑌃-த்வேஷம் செய்துகொண்டும், 𑌅𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌕𑌾𑌃 - பொறாமையுள்ளவர்களாய்க் கொண்டும் (செய்கிறார்கள்). 18

பா] வேறொருவரையும் எதிர்பாராமல் நானே எல்லாவற்றையும் செய்கிறேன் என்கிற அஹங்காரத்தை யடைந்தவர்களாயும், அப்படியே எல்லாவற்றையும் செய்வதில் என்னுடைய பலமே போதுமானது என்று பலத்

யம். அதில சொல்லியவிதங்களை விட்டுவிடுவது இவ்விடத்தில், '𑌅𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂' என்பது என்று சொல்லுகிறார்—'ஶாஸ்த்ரங்களில் விதித்திருக்கிறபடியல்லாமல்' என்று. 17

புனருக்தி முதலிய தோஷங்களைப் பரிகரிப்பதற்காக அடுத்த ஶ்லோகம் ஸத்வகுணம் மேலிட்டவர்களால் செய்யப்படுகிற யாகங்களுக்கு அங்கங்களாகிய குணங்களுக்கு விரோதமான குணங்களைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'அவர்கள் இப்படிப்பட்டவர்களாய்' என்றாரம்பித்து. பகவானே எல்லாவற்றையும் செய்விக்கிறான் என்பதை விலக்குகிறது அஹங்காரம் என்பது. எதைப்பரிஹரிப்பதற்காக ஸ்ம்ருதிகளால் 1 '𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑌦𑌾𑌨𑌤𑌪𑌃𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 । 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌤𑍍𑌫𑌲𑌂 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌤𑌤𑌃॥' என்று சொல்லப்படுகிறதோ. பலத்தையுடையவனுடைய பிறக்கைமாத்திரம் தோஷமில்லாமலிருந்தபோதிலும் 2 '[illegible]' என்றிவை முதலிய

---

1. *அஹங்காரம்-அஹங்காரத்தை, ஆஶ்ரித்ய அடைந்து, யஜ்ஞதானதப க்ரியா:-யஜ்ஞம், தானம், தபஸ்ஸு, முதலிய க்ரியைகளை, குர்வந் - செய்துகொண்டு, தத்பலம் அவைகளின் பலத்தை, ஆப்நோதி-அடைகிறானேயானால் தத்-அது, புனராவர்த்தநம்-திரும்புதலையுடையது.*

2. *ஸாத்விகத்யாகத்திற்கு மந்திரம். இதற்குப் பலமந்த்ரம் என்று பெயர்.*

தையும், ஆகையினால் எனக்கு ஸமமானவன் வேறொருவருமில்லை என்கிற கர்வத்தையும், இப்படிப்பட்ட என்னுடைய ஆசை மாத்திரத்தினால் எல்லாம் உண்டாகப்போகிறது என்று காமத்தையும், எனக்கு எவர்கள் அநிஷ்டத்தைச் செய்கிறார்களோ அவர்களெல்லாரையும் கொல்லப்போகிறேன் என்கிற கோபத்தையும், இப்படி இவைகளை யடைந்தவர்களாய்க் கொண்டு தன்னுடைய தேஹத்திலும் அபராருடைய தேஹங்களிலுமிருக்கிறவனையும், எல்லாவற்றையும் நியமிக்கிறவனையும், புருஷோத்தமனையு

வைகளுக்கு விரோதமாகத் தன்னுடைய பலமே போதுமென்று அனுஸந்தானம் செய்வது இங்கே சொல்லப்படுகிறது. இவ்விரண்டையும் காரணமாகவுடைய அஹங்காரமாவது எல்லாரையும் அவமானம் செய்வதற்குக்காரணமாயும், பூஜிக்கத்தக்கவர்களைப் பூஜிப்பதற்கு விரோதியுமாகிய ஸ்வபாவம். பகவானுடைய அநுக்ரஹத்தினாலேயே இஷ்டங்களை யடைவதும் அநிஷ்டங்களைத் தடுப்பதும் என்பதற்கு விரோதமானவைகள் காமக்ரோதங்கள் என்கிற க்ரமத்தை யனுஸரித்து டாம்பிகர்கள் செய்யும் யாகங்களுக்கு அங்கங்களாகிய குணங்களின்வரிசையை விவரிக்கிறார்—‘வேறொருவரையும் எதிர்பாராமல்’ என்றாரம்பித்து. ‘ஸம்ஶ்ரிதா:’ என்பதற்கு நன்றாக அடைந்தவர்களாய், அதாவது வேறொன்றையும் எதிர்பாராத காரணங்கள் என்று அபிமானித்தவர்களாய் என்றர்த்தம். இவ்விடத்தில் ‘பரதேஹேஷு (அபரனுடைய தேஹங்களில்)’ என்று சொன்னது யஜ்ஞத்திற்கு அனுகூலராயும் விரோதிகளாயுமிருக்கிற ருத்விக்குக்கள் திருடர்கள் முதலியவர்களை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு. ஏழாம் வேற்றுமையினால் இருக்கிற என்பது ஏற்பட்டது. அதுவும் ப்ரவ்ருத்திக்கும்படி செய்வதற்காக என்பது ஸ்ருதி வாக்யம் முதலியவைகளைக்கொண்டு முன்பு விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டது. அவர்கள் எண்ணுவதற்கு விரோதமான ஆகாரத்தை ஜ்ஞாபகப்படுத்துகிறார்—‘எல்லாவற்றையும் நியமிக்கிறவனையும்’ என்று. நன்மையில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்வதே பொறாமைக்குக் காரணமாயிற்று என்று தாத்பர்யம். ‘புருஷோத்தமனையும்’ என்பதற்கு எவனுடைய மேன்மையை அறிந்த மாத்திரத்தினால் க்ருதக்ருத்யனாகிறானென்று கீழே சொல்லப்பட்டதோ, மிகவும் உபகாரியாகிய அவனே இவர்களுக்கு த்வேஷம் செய்வதற்கும் பொறாமை செய்வதற்கும் இடமானான் என்று தாத்பர்யம். எல்லாவற்றையும்ப்ரவ்ருத்திக்கும்படி செய்வது முதலிய குணங்களைச் சொல்லியிருப்பது குணங்களைத் தோஷமாக நிரூபிப்பதாகிய பொறாமையின் லக்ஷணத்தை வெளிப்படுத்துவதற்காக. புருஷோத்தமன் என்று சொல்லும் ஸந்தர்ப்பத்தில் நினைவு

மிருக்கிற என்னைக்குறித்துப் பொறாமையுடையவர்களாயும், கெட்டயுக்திகளால் நான் இருப்பதைப்பற்றித் தோஷத்தை வெளிப்படுத்திக்கொண்டு என்னைப் பொறுக்காதவர்களாயும், அஹங்காரம் முதலியவைகளை அடை

முதலியவைகளை உண்டாக்குவதற்காகவல்லவோ 1 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:' என்று சொல்லப்பட்டது. அதுவே இவ்விடத்தில் 'ஆத்மபரதேஹேஷு' என்பதினால் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது என்றும் தாத்பர்யம். 'ப்ரத்விஷந்த:, அப்யஸூயகா:' என்கிற பதங்கள் முன்பின்னாகமாறி ஒன்று காரணமாகவும் ஒன்று கார்யமாகவும் அந்வயிக்கிறது என்கிற க்ரமத்தையும், 'யஜ்ஞெ' என்கிற பதத்தைச் சேர்த்துக்கொண்டு வாக்யத்தை முடித்துக்கொள்ளவேண்டும் என்பதையும் சொல்லுகிறார்—'கெட்டயுக்திகளால்' என்றாரம்பித்து. பகவானுக்குக் கீழடங்கினவன் என்னில் கர்மங்களுக்கு வசப்பட்டவன் என்பது எப்படி? பலங்கள் கர்மத்தினாலுண்டாவதாயிருந்தால் ஈஶ்வரனால் என்ன ப்ரயோஜனம்? என்றிவை முதலியவைகள் 'கெட்டயுக்திகள். பொறாமையில்லாமைக்கு லக்ஷணம் சொல்லுகிற வ்யாஜத்தினால் பொறாமையின் லக்ஷணத்தையும் ப்ருஹஸ்பதி 2 'ந குணாந் குணிநோ ஹந்தி ஸ்தௌதி மந்தகுணாநபி । நாந்யதோஷேஷு ரமதே ஸாநஸூயா ப்ரகீர்த்திதா ॥' என்று சொன்னார். பொறுக்காமையாகிற லக்ஷணத்தினால் த்வேஷத்தையும் விவரிக்கிறார்—'என்னைப் பொறுக்காதவர்களாயும்' என்று. பொறுக்காதவர்களாயிருக்கையாவது அவனுடைய உத்தரவிற்கு மீறி நடக்கிறவரையிலும் என்று எண்ணிக்கொள்ளவும். இதுவும் தன்னுடைய வம்ஶத்தில் பிறந்தவர்களும் அபரிசுத்தமான நரகத்தில் விழுவதற்குக் காரணம். அப்படியே 3 'மஜ்ஜந்தி பிதரஸ்தஸ்ய நரகே ஶாஶ்வதீஸ்ஸமா:। யோ த்விஷ்யாத் விபுதஶ்ரேஷ்டம் தேவம் நாராயணம் ஹரிம் ॥' என்று சொல்லப்படு

---

1. பகவத்கீதை - 15 - 15.

2. அத்ரிஸ்ம்ருதி - 1 - 34. குணின:—குணத்தை யுடையவர்களின், குணாந் - குணங்களை, நஹந்தி - மறைக்கிறதில்லை, மந்தகுணாநபி - அல்பகுணங்களையுடையவர்களையும், ஸ்தௌதி—ஸ்தோத்திரம் செய்கிறான், அந்யதோஷேஷு- அயலாருடையதோஷங்களில், ந ரமதே - த்ருப்தியடைகிறதில்லை, ஸா-அது, அநஸூயா — பொறாமையில்லாமையென்று, ப்ரகீர்த்திதா - சொல்லப்பட்டது.

3. பாரதம் - சாந்திர்வம் - மோக்ஷதர்மம் - 355-6-ய: - எவன், விபுதஶ்ரேஷ்டம் - தேவதைகளுக்குள் உயர்ந்தவனாகிய, நாராயணம் ஹரிம் தேவம் -

ந் து யாகம் முதலிய எல்லா க்ரியைகளையும் செய்கிறார்கள் என்றர்த்தம். 18

தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் |
க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு || 19

ப-ரை] த்விஷத:-என்னை த்வேஷம் செய்கிற, க்ரூராந் - க்ரூரஸ்வபாவமுடைய, நராதமாந்-மனிதர்களுக்குள் அதமர்களாகிய, அஶுபாந் பாபிகளாகிய, தாந் - அவர்களை, அஹம் - நான், ஸம்ஸாரேஷு - ஸம்ஸாரங்களில், ஆஸுரீஷு - அஸுரர்களின் ஸ்வபாவமுடைய, யோநிஷ்வேவ - ஜாதிகளிலேயே, அஜஸ்ரம் - எப்போழுதும், க்ஷிபாமி - தள்ளுகிறேன். 19

பா] இப்படி என்னை எவர்கள் த்வேஷிக்கிறார்களோ அவர்களையும், க்ரூரமான ஸ்வபாவமுடையவர்களையும், நராதமர்களையும், அஶுபமானவர்களையும், நான் எப்பொழுதும் பிறப்பு, கிழத்தனம், மரணம், முதலியவைக

கிறது. இப்படியே 1 'யே த்விஷந்தி மஹாத்மாநம் ந ஸ்மரந்தி ச கேஶவம் | ந தேஷாம் புண்யதீர்த்தேஷு கதி: ஸம்ஸர்கிணாமபி ||' என்றிவை முதலியதும் இவ்விடத்தில் நினைக்கத்தக்கது. 'நாமயஜ்ஞை:' என்பது மற்ற க்ரியைகளையும் குறிக்கிறது என்பதைச் சொல்லுகிறார்—'யாகம் முதலிய' என்றாரம்பித்து. 18

தா] இப்படி த்வேஷம் முதலியவைகளை முன்னிட்டுச் செய்யும் யாகம் முதலியவைகளுக்கும் அவைகளுக்குத் தகுந்தபடி விரோதமான பலங்களைக் கொடுப்பவனும் நானே என்று சொல்லப்படுகிறது—'தாநஹம்' என்றாரம்பித்து இரண்டு ஶ்லோகங்களினால். பக்ஷபாதம், தயையில்லாமை, முதலியவைகளைப் பரிஹரிப்பதற்காகத் 'தாந(அந்த)' என்று அநுவாதம் செய்திருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இப்படி என்னை எவர்கள்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் நான்கு விஶேஷணங்களினாலும் 2 'ந மாம் து₃ஷ்க்ருதிந:' என்கிற

நாராயணனாகிய தேவதையை, த்விஷ்யாத்-த்வேஷம் செய்வானே, தஸ்ய-அவனுடைய, பிதர:—பித்ருக்கள், நரகே-நரகத்தில், ஶாஶ்வதீஸ்,ஸமா:-அநேகம் ஆயிரம் வருஷங்கள், மஜ்ஜந்தி - முழுகிறார்கள்.

1. பாரதம் - சாந்திபர்வம்-மோக்ஷதர்மம் - 336 - 366-யே-எவர்கள், மஹாத்மானம் - மஹாத்மாவாகிய பகவானைக் குறித்து, த்விஷந்தி - த்வேஷம் செய்கிறார்களோ, கேசவம்-ஸ்ரீ க்ருஷ்ணனை, நஸ்மரந்திச - நினைப்பதில்லையோ, தேஷாம் - அவர்களுக்கும், ஸம்ஸர்க்கிணாமபி - அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும், புண்ய தீர்த்தேஷு - புண்ய தீர்த்தங்களில், கதி:—நல்லகதியானது, ந-இல்லை.

2. பகவத்கீதை—7-15

ளாகச் சுழன்றுகொண்டிருக்கிற இவைகளின் பரம்பரைகளில் அதிலும் ஆஸுரஸ்வபாவமுடைய ஜாதிகளிலேயே தள்ளுகிறேன். அதாவது எனக்கனுகூலமாக நடப்பதற்கு விரோதமாகிய ஜாதிகளிலே தள்ளுகிறேன். அந்தந்த ஜன்மங்களையடைவதற்குத் தகுந்ததாகிய கார்யங்களில்

ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட நான்குவித பாபிகளும் சொல்லப்படுகிறார்கள் என்று நினைத்து அதற்கு வ்யாக்யானம் செய்திருக்கிறார். அதாவது 'நராதமாந்' என்னும் பதம் அந்த ஶ்லோகத்திலிருப்பதே இந்த ஶ்லோகத்திலுமிருக்கிறது. 'க்ரூராந்த்விஷத:' என்பது 'த்விஷத:' என்னும் பதத்தின் அர்த்தத்தையே சொல்லுகிறது என்பது முன்னமேயே வ்யாக்யானஞ்செய்யப்பட்டது. இப்படியே 'அஶுபாந்' என்னும் பதங்களும் அதற்குத்தகுந்தபடி 'ஆஸுரம்பாவமாஶ்ரிதா:' என்கிற பதங்களின் அர்த்தத்தைச் சொல்லுகிறதாக வைத்துக்கொள்ள வேண்டியது. இவ்விடத்தில் பிரிக்காமல் அந்வயம் சொன்னது அஸுரஸ்வபாவமுடைய கும்பல் ஒன்றாகையினால். பிறப்பு முதலியக்ரமங்களின் சுழல்களில் இடைவிடாமல் ஒரேவிதமாகச் சுழன்று வருகிறபடியினால் 'ஸம்ஸாரம்' என்று அந்தச் சக்கிரம் சொல்லப்படுகிறது. 'ஸம்ஸரதிபுருஷோஸ்மிந்' (புருஷன் இதில் ஒரேமாதிரியாகச்சுழன்று கொண்டு வருகிறான்)' என்கிற வ்யுத்பத்தியினால் ஆதாரம் என்னும் அர்த்தத்தைச்சொல்லுகிற வஞ் என்னும் விகுதியை முடிவில் உடையது 'ஸம்ஸார' என்னும் பதம். அதில் அதுபகுவசனமாக (பன்மையாக)ச் சொல்லியிருப்பது அப்படிச் சக்கிரங்களின் சுழல்கள் அநேகவிதமாகையினால் என்று சொல்லுகிறார்—'பிறப்பு' என்றாரம்பித்து. 'ஸம்ஸார' என்னும் பதம் நல்ல ஜன்மம் கெட்ட ஜன்மம் இவைகளுக்குப் பொதுவாகையினால் அது விஶேஷித்துச் சொல்லப்படுகிறதென்று சொல்லுகிறார்—'அதிலும்' என்றாரம்பித்து. 1 'ஶுசீநாம் ஶ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோபிஜாயதே' என்று இவை முதலியவைகளில் சொல்லப்பட்ட பகவானைப் பற்றிய போகம் செய்வதற்கு அநுகூலமாகிய ஸத்வகுணம் மேலிட்ட ஜன்மத்தை விலக்குவதற்காகத்தமோகுணம் மேலிட்டிருக்கை 'ஆஸுரீஷ்வ' என்பதினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'அதாவது எனக்கனுகூலமாக' என்றாரம்பித்து. இப்படிப்பட்ட விரோதமாகிய ஜன்மா தேவதை முதலாகிய நான்குவித வகுப்புகளிலும் கண்டறியத்தக்கது என்று தாத்பர்யம். 2 'எவனை இந்தப் பகவான் கீழே கொண்டு போகவே

1. பகவத்கீதை - 6 - 42. 2. கௌஷீதகி - 3 - 9.

ப்ரவ்ருத்தி செய்வதற்குக் காரணங்களாகிய க்ரூரங்களான புத்தியில் நானே சேர்க்கிறேன் என்றர்த்தம் 19

ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி ।
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம் ॥ 20

ப-ரை] கௌந்தேய - அர்ஜுந, ஆஸுரீம் - அஸுரர்களுடையதான, யோநிம் – ஜாதியை, ஆபந்நா:-அடைந்தவர்களாய், ஜந்மநி ஜந்மநி - ஒவ்வொரு ஜன்மங்கள்தோறும், மூடா:-விபரீதஜ்ஞானத்தை யுடையவர்களாய், மாம் - என்னை, அப்ராப்யைவ - அறியாமலே, தத:-அந்த ஜன்மத்தைக் காட்டிலும், அதமாம் – தாழ்ந்த, கதிம் - கதியை, யாந்தி- அடைகிறார்கள். 20

பா] எனக்கனுகூலமாக நடப்பதற்கு விரோதமான ஜன்மத்தை யடைந்தவர்களாய்,மறுபடியும் ஒவ்வொரு ஜன்மங்களிலும் என்னைப்பற்றி விபரீதமான ஜ்ஞானத்தை யுடையவர்களாய், எல்லாவற்றிற்கும் ஈஶ்வரனு

ண்டும் என்று ஆசைப்படுகிறானோ அவனை இநதப் பகவானே கெட்ட கர்மத்தைச் செய்விக்கிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளை யனுஸரித்து 'க்ஷிபாமி' என்று சொல்லியிருப்பதற்கு வழியைச்சொல்லுகிறார்—'அந்தந்தஜன் மங்களை'என்றாரம்பித்து. பாபங்களில் ப்ராவ்ருத்திப்பதற்குக் காரணமாகிய க்ரூரமான புத்தி முதலியவைகளைக்கொடுப்பதும் பழையதாகிய த்வேஷம் முதலியவைகளின் பலங்களாகையினால் பகவானுக்குப்பக்ஷபாதம், தயை யில்லாமை, முதலியவைகளுக்குக் காரணமாகாது. 19

தா] மேல்மேலே தாழ்ந்து போவதின் வரிசை சொல்லப்படுகிறது— இந்த ஶ்லோகத்தினால், 'மூடா:' என்னும் பதத்தினால் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'என்னைப்பற்றி' என்றாரம்பித்து. அன்றிக்கே விபரீத ஜ்ஞானமே இவ்விடத்தில் மோஹம். அதுவும் இவ்விடத்தில் சொல்லப்போகிற அர்த்தத்திற்கு அனுகுணமாயிருப்பதினால் தன்னைப்பற்றி யென்று விஶேஷித்துச் சொல்லப்பட்டது. ஸத்வகுணம் மேலிட்டவர்களுக்கும் பரமாத்மாவை அடைவது அநேக ஜன்மங்களில் உண்டான ஸுக்ருதங்களின் ஸித்தியினால் உண்டாக்கக்கூடியதாகையினால், தமோகுணம் மேலிட்டவர்களிடங்களில அதைப்பற்றி ப்ரஸ்தாவம் வருவதும் அது இல்லை யென்று மறுப்பதும் உசிதமில்லையாகையினால் அப்படிப் பகவானை யடைவதற்கு முதல்படியாகிய ஶாஸ்த்ரங்களாலுண்டாக்கப்படுகிற ஜ்ஞானத்தை யடைவதே ஶாஸ்த்ரங்

கிய பகவானுகிய வாஸுதேவன் இருக்கிறுன் என்கிற ஜ்ஞானத்தை யடையாமலே அந்தந்த ஜன்மங்களிருந்து தாழ்ந்த கதியை அடைகிறார்கள். 20

பா - அ] ஆத்மாவின் நாசமாகிய இந்த அஸுரர்களின் ஸ்வபாவத்திற்கு மூலகாரணத்தைச் சொல்லுகிறுர்—

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌨𑌰𑌕𑌸𑍍𑌯𑍇𑌦𑌂 𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌨𑌾𑌶𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌕𑌾𑌮𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑌥𑌾 𑌲𑍋𑌭𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ॥ 21

ப - ரை.] 𑌕𑌾𑌮𑌃-காமம், 𑌕𑍍𑌰𑍋𑌧𑌃-கோபம், 𑌤𑌥𑌾 - அப்படி, 𑌲𑍋𑌭𑌃- லோபம் என்கிற, 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 – மூன்று விதமான, 𑌏𑌤𑌤𑍍 - இது, 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃- ஆத்மாவிற்கு, 𑌨𑌾𑌶𑌨𑌂 - நாசத்தையுண்டுபண்ணுகிறதாகிய, 𑌨𑌰𑌕𑌸𑍍𑌯- நரகத்தினுடைய, 𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 - வழி, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 – ஆகையினுல், 𑌏𑌤𑌤𑍍 - இந்த, 𑌤𑍍𑌰𑌯𑌂 - மூன்றையும், 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 - விடவேண்டும். 21

பா] இந்த அஸுரஸ்வபாவமாகிற நரகத்திற்கு இந்த மூன்றும் வழி. அது ஆத்மாவிற்கு நாசத்தை உண்டாக்கக்கூடியது. காமம், க்ரோதம், லோபம்,

---

களுக்குக் கீழ்படியாத அஸுரஸ்வபாவமுடையவர்களிடத்தில் மறுக்கப்படுகிறது. அதில் ஶாஸ்த்ரங்களால் உண்டாகிய ஜ்ஞானம் என்பதை ப்ரகாசப்படுத்துவதற்காகச் சொல்லுகிறுர்—'எல்லாவற்றிற்குமீஶ்வரனுகிய' என்றாரம்பித்து. 'தாழ்ந்த' என்பது எதைவிட என்று உயர்ந்ததாகிய ஒன்றை எதிர் பார்க்கிறபடியினுல் அதைச் சொல்லக்கூடிய ஶக்தியை யுடையதாய் ஸமீபத்திலிருக்கிற 'ததஃ' என்னும் பதம் காரணத்தைச் சொல்லுகிறதென்பது உசிதமல்ல என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'அந்தந்த ஜன்மங்களிலிருந்து' என்று. 20

தா] அவஶ்யமாகப் பரிஹரிக்கவேண்டியது சுருக்கிச்சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் அடுத்த ஶ்லோகத்திற்கு ஸங்கதி சொல்லுகிறுர்—'ஆத்மாவின் நாசமாகிய' என்றாரம்பித்து. ஆத்மாவிற்கு நாசமாவது உள்ளபடி இருக்கிற ஆத்மாவை அறியாமையே. அதுவே அஸுரர்களின் ஸ்வபாவம் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'ஆத்மாவின் நாசமாகிய அஸுரர்களின் ஸ்வபாவத்திற்கு' என்று. வேரைவெட்டி விடுவதினுல் அஸுரர்களின் ஸ்வபாவமெல்லாம் வெட்டப்பட்டதாக ஆய்விடும் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'மூலகாரணத்தை' என்று. 'அஸுரஸ்வபாவமாகிற நரகத்திற்கு' என்பதற்கு இதைவிட மேல்பட்டதாகிய வேறு நரகம் எது என்று தாத்பர்யம். அஸுரர்களின் ஸ்வபாவத்தைப் பரிஹரிப்பதற்காகவல்லவோ இந்த

இவை மூன்றின் ஸ்வரூபம் முன்பே விவரமாகச் சொல்லப்பட்டது. வழியென்பதற்குக்காரணம் என்றர்த்தம். ஆகையினால் காமக்ரோத லோபங்கள் அதிக பயங்கரமாகிய நரகத்திற்குக் காரணமாகையினால் இவை மூன்றையும் தூரத்திலேயே விட்டுவிட வேண்டும். 21

ஏதைர் விமுக்த: கௌந்தேய தமோத்வாரைஸ் த்ரிபிர் நர: |
ஆசரத்யாத்மந: ச்ரேயஸ் ததோ யாதி பராம் கதிம் || 22

ப - ரை] கௌந்தேய - அர்ஜுந, ஏதை:-இந்த, தமோத்வாரை:-விபரீதஜ்ஞானத்திற்குக் காரணங்களாகிய, த்ரிபி: - மூன்றுகளினலும், விமுக்த:-விடப்பட்ட, நர:-மனுஷ்யன், ஆத்மந:-தனக்கு, ச்ரேய: - நன்மையை, ஆசரதி - செய்கிறான், தத:-அதினலே, பராம் - உயர்ந்த, கதிம் - கதியை, யாதி - அடைகிறான். 22

அதின் மூலகாரணத்தைப்பற்றிய உபதேசம் என்றுவது, 'தமோத்வாரை:' என்று மேலே சொல்லப்போகிறதோடு சேர்ந்து ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறதென்பதாவது தாத்பர்யம். 'ஆத்மாவிற்கு நாசத்தையுண்டாக்கக்கூடியது' என்பதற்கு [1] 'அவன் இல்லாதவனுகவே ஆகிறான் எவன் பரமாத்மாவை அறியவில்லையோ' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம்முதலியவைகளில் சொல்லியிருக்கும் க்ரமத்தினல்என்று தாத்பர்யம். நுழைவதற்குக்காரணமல்லவோ த்வாரம். அதினலும் அதையடைவதற்குக்காரணமென்று இங்கேசொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினல் அப்படி உபசாரமாகச் சொல்லியிருப்பதற்கு க்ரமத்தைச் சொல்லுகிறுர்—'காரணம் என்றர்த்தம்' என்று. 'ஆத்மநாசநம்' என்பதற்கு நுழையும் பொழுதே நாசத்தையடைகிறுன் என்று தாத்பர்யம். விடத்தகுந்த வஸ்துவின் தோஷத்தைச் சொல்லியிருப்பது விடவேண்டுமென்று விதித்திருப்பதற்கு உபகாரம் செய்கிறது என்கிற அபிப்ராயத்தினல் சொல்லுகிறுர்—'ஆகையினல்' என்றாரம்பித்து. ரௌரவம்முதலிய நரகம்,பாபம் நசிப்பதற்குக்காரணம். அஸுரர்களின் ஸ்வபாவமாகிய இந்த நரகமோவெனில் பாபங்களை ஸம்பாதிப்பதற்குக் காரணமாகையினல் மிகவும் பயங்கரம் என்கிற அபிப்ராயத்தினல் சொல்லுகிறுர்—'அதிக பயங்கரமாகிய' என்றுரம்பித்து. அஸுரர்களின் ஸ்வபாவங்கள் எல்லாம்விட வேண்டியதாயிருந்தபோதிலும் சில விசேஷங்களை எடுத்துத் தனித்துவிட வேண்டும் என்று சொல்லியிருப்பது இது மிகவும் பரிஹரிக்கத்தகுந்தது என்று தெரிவிப்பதற்காக, என்று சொல்லுகிறுர்—'தூரத்திலேயே விட்டுவிடவேண்டும்' என்று. 21

---

1. *தைத்திரீயம் - ஆனந்தவல்லி - 6 - 1.*

பா.] இந்தக் காமம், க்ரோதம், லோபங்களாகிய என்னைப்பற்றிய விபரீத ஜ்ஞானத்திற்குக் காரணங்களினால் விடப்பட்ட மனுஷ்யன் தனக்கு நன்மையைச் செய்துகொள்ளுகிறான், அதாவது என்னைப்பற்றிய ஜ்ஞானத்தை யடைந்தவனாய் எனக்கு அனுகூலமாக நடப்பதில் ப்ரவ்ருத்திக்கிறான். அதினால் உயர்ந்த கதியாகிய என்னையே அடைகிறான். 22

பா - அ] ஶாஸ்த்ரத்தை அநாதரவு செய்வது இப்படிப்பட்ட நரகத்திற்கு முக்யமான காரணம் என்று சொல்லுகிறார்—

தா] விடத்தகுந்த வஸ்துவினுடைய தோஷத்தைச் சொன்னதினாலேயே அதைவிடவேண்டுமென்று விதிக்கப்பட்டது. அப்படி விடுவதின் பலங்களின் வரிசை இப்பொழுது இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுகிறது. 'என்னைப்பற்றிய விபரீத ஜ்ஞானத்திற்குக் காரணங்களினால்' என்றது தமோகுணத்தின் பலத்தைச் சொல்லியிருக்கிறது அன்றிக்கே 'தமஃ' என்னும் பதமே இவ்விடத்தில் லக்ஷணையாக அவைகளைச் சொல்லுகிறதாகவுமாம். தமோகுணத்தின் வழிகளினால் விடப்பட்டிருப்பதினால் தமோகுணத்தினாலும் விடப்படுகிறான். நன்மையைச் செய்துகொள்ளுவதும் தத்வஜ்ஞானத்தை முன்னிட்டு என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'என்னைப்பற்றிய ஜ்ஞானத்தை யடைந்து' என்று. 'நன்மையைச் செய்துகொள்ளுகிறான்' என்பதினால் முன்பு சொல்லப்பட்ட பகவானிடத்தில் த்வேஷம் முதலியவைகள் நிவ்ருத்தித்தல் சொல்லப்படுகிறது. 'ஶ்ரேயஃ' என்பதற்கு நன்மை என்றர்த்தம். அதுவும் சுருக்கமாகப் பகவானுக்கனுகூலமாக நடப்பது அதற்குள்ளடங்கியதாகையினால் ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட எல்லாம் ஏற்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எனக்கனுகூலமாக நடப்பதில்' என்று. 'ததஃ' என்பதற்குத் தனக்கு நன்மையைச் செய்து கொள்ளுகிற காரணத்தினாலேயே என்றர்த்தம். 'ஶாஶ்வதம்ஶிவம்' என்றிவை முதலியவைகளை யோசித்து இவ்விடத்தில் 'பராம்கதிம்' என்று சொல்லப்படுகிறது அடையவேண்டிய ப்ரயோஜனங்களில் கடைசியாகிய பரமபுருஷனை என்று சொல்லுகிறார்—'உயர்ந்த கதியாகிய என்னையே' என்று. 22

அஸுரர்களின் ஸ்வபாவங்களில் மூலகாரணமாயிருப்பதினால் முக்யமாக இருக்கிற மூன்று சொல்லப்பட்டன. அவைகளைவிடவும் மிகவும் முக்யமாய் பரிஹரிக்கத்தகுந்த காரணம் அடுத்த ஶ்லோகத்தில் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'ஶாஸ்த்ரத்தை அநாதரவு செய்வது' என்றாரம்பித்து. எல்லா அவஸ்தைகளையுமுடைய எல்லாப் புருஷர்களுக்கும்நன்மையை உபதேசிப்பதினால் 'ஶாஸ்த்ர'என்னும் பத

யஶ்ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத꞉ ।
ந ஸ ஸித்திமவாப்னோதி ந ஸுகம் ந பராம் கதிம் ॥ 23

ப - ரை] ய꞉ - எவன், ஶாஸ்த்ரவிதிம் - வேதமாகிய என்னுடைய உத்திரவை, உத்ஸ்ருஜ்ய - விட்டுவிட்டு, காமகாரத꞉-தன்னுடைய இஷ்டப்படி, வர்ததே - இருக்கிறானோ, ஸ꞉-அவன், ஸித்திம் - பரலோகத்தின் ஸித்தியை, ந அவாப்னோதி - அடைவதில்லை, ஸுகம் - ஸுகத்தையும், ந - (அடைவது) இல்லை, பராம் - உயர்ந்த, கதிம் - கதியையும், 23
ந - (அடைவது) இல்லை.

பா.) ஶாஸ்த்ரமாவது வேதங்கள். விதியாவது உத்திரவு. வேதமென்று பேருடைய என்னுடைய உத்திரவை விட்டுவிட்டு எவன் தன்னுடைய இஷ்டத்திற்கு அனுகுணமான வழியிலிருக்கிறானோ அவன் பரலோகத்திலுண்டாகிய ஒருவித ஸித்தியையும் அடைகிறதில்லை. ஒருவித ஸுகத்

ம் வேதங்களிலேயே முதலில் ஏற்பட்டது. அத்துடன் சேர்ந்திருப்பதினால் மற்றவைகளில் ஏற்பட்டது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஶாஸ்த்ரமாவது வேதங்கள்' என்று. விதிக்கிற வாக்யங்கள் 'ஶாஸ்த்ர' என்னும் பதத்தினால் சொல்லப்பட்டபடியினால் அதினுடைய வ்யாபாரம் விதியென்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'விதியாவது உத்திரவு' என்று. ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'வேதமேமென்று பேருடைய என்னுடையஉத்திரவை' என்று ஶாஸ்த்ரமாகிய விதி என்று ஸமானாதிகரண ஸமாஸம் சொல்லப்படுகிறதாகவுமாம். 'என்னுடைய உத்திரவு' என்பதினால் 1'ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா' என்றிவை முதலியவைகளை ஜ்ஞாபகப்படுத்தியிருக்கிறது இத்தால் 'லிங்' முதலிய ப்ரத்யயங்களுக்கு வேறுவிதமாக அர்த்தத்தைச் சொல்லுகிறவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள். 'லிங்' முதலிய ப்ரத்யயங்கள் நியமிக்கிறவனுடைய அபிப்ராயத்தைத் தாத்பர்யத்தினாலாவது நேரில் ஶக்தியினாலாவது ப்ரகாசப்படுத்துகின்றன. ஶாஸ்த்ரங்களுக்கு விரோதமாகிய 'காமகார' என்பது ஶாஸ்த்ரங்களில் விகல்பங்களாகச் சொல்லப்பட்டவைகளைப் பற்றியதல்ல என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தன்னுடைய இஷ்டத்திற்கு அனுகுணமான வழியிலிருக்கிறானோ' என்று 2 'அத கேந ப்ரயுக்தோ(அ)யம்', 3 'காம ஏஷ

1. விஷ்ணு தர்மம் - 76 - 31. ஶ்ருதி, ஸ்ம்ருதி, இவைகள் என்னுடைய உத்திரவுகளே.
2. பகவத்கீதை - 3 - 36.   3. பகவத்கீதை - 3 - 37.

தையும் அடைகிறதில்லை. உயர்ந்த கதியை எவ்விதமாக அடைவான் என்றர்த்தம். 23

தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ|
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ர விதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி|| 24

ஸ்ரீ கண்ணபிரானருளிச்செய்த ஸ்ரீமத் பகவத்கீதையில்

பதினாறவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஷிக்ருஷ்யவஷ:' என்றிவை முதலியவைகளில் சொல்லப்பட்டகாமத்தினால் ஏவப்பட்டவனுப் என்று சொல்லப்பட்டதாகிறது. 1'யா வேதபாஹ்யா: ஸ்ம்ருதயோ யாஶ்ச காஶ்ச குத்ருஷ்டய:| ஸர்வாஸ்தா நிஷ்பலா: ப்ரேத்ய தமோநிஷ்டா ஹி தா: ஸ்ம்ருதா:' என்றிவை முதலியவைகளை நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'அவன் பரலோகத்திலுண்டாகிய' என்றாரம்பித்து. பரலோகத்தில் ஸுகத்திற்குக் காரணமாகிய உபாயத்தின் ஸித்தியை என்றர்த்தம். 'ஸுகத்தை' என்பதற்கு ஸ்வர்க்கம் முதலிய ஸுகத்தை என்றர்த்தம். அன்றிக்கே 'பரலோகத்தில் உண்டாகிய ஸித்தி' என்பது ஸ்வர்க்கம் முதலிய பலங்களைச் சொல்லுகிறது. ஸுகம் என்பது இந்த லோகத்தில் உண்டான ஸுகத்தைச் சொல்லுகிறது. ஆகையினாலேயே 'ஒருவித' என்னும் பதம் சொல்லப்பட்டது. இந்த லோகத்திலும் ஸுகம் ஶாஸ்த்ரத்தில் சொல்லிய கர்மங்களை அனுஷ்டிப்பதினால் உண்டாகிய பரமாத்மாவின் அனுக்ரஹத்தினாலேயே. ஆகையினால் 2 'அநாராதித கோவிந்தா யே நரா து:கபாகின:' என்று சொல்லப்படுகிறது. கைமுதிக ந்யாயத்தைக் காட்டுவதற்காக இவ்விடத்தில் மற்ற ஸுகங்களையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறதென்று சொல்லுகிறார்—'உயர்ந்த கதியைஎவ்விதமாய் அடைவான்' என்று

---

1. மனு ஸ்ம்ருதி - 12-95. யா:-எந்த, ஸ்ம்ருதய:- ஸ்ம்ருதிகள், வேதபாஹ்யா:—வேதத்தை யனுஸரித்தவைகளல்லவோ, யாஶ்ச காஶ்ச-எவைகள், குத்ருஷ்டய:—வேதங்களில் கெட்ட ஜ்ஞானத்தைக் காரணமாக உடையவைகளோ, ஸர்வா:—எல்லா, தா:-அவைகள், ப்ரேத்ய - லோகாந்தரத்தில் (பரலோகத்தில்), நிஷ்பலா:-ப்ரயோஜன மற்றவைகள், ஹி - எந்தக் காரணத்தினால், தா:-அவைகள், தமோநிஷ்டா:-தமோகுணத்தில் நிஷ்டையுடையவைகள என்று, ஸ்ம்ருதா:-எண்ணப்பட்டவைகளோ.

2. விஷ்ணு தர்மம் - 19-13. யே - எந்த, நரா:-மனிதர்கள், அநாராதித கோவிந்தா:-பகவானை ஆராதனம் செய்யாதவர்களாய், து:கபாகின:—துக்கத்தையே அடைந்திருக்கிறார்களோ

ப - ரை] தஸ்மாத் - ஆகையினால், தே - உனக்கு, கார்யாகார்யவ்யவஸ்திதௌ-செய்யத்தகுந்தது, செய்யத்தகாதது, இவைகளின் ஏற்பாட்டில், ஶாஸ்த்ரம் - ஶாஸ்த்ரமே, ப்ரமாணம் – ப்ரமாணம், ஶாஸ்த்ரவிதாநோக்தம் - ஶாஸ்த்ரவிதிகளில் சொல்லப்பட்ட, கர்ம - கர்மங்களை, ஜ்ஞாத்வா-தெரிந்துகொண்டு, இஹ - இந்த லோகத்தில், கர்த்தும் - செய்வதற்கு, அர்ஹஸி - தகுந்தவனாகிறாய். 24

பா] ஆகையினால் அங்கீகரிக்கத்தகுந்தது, விடத்தகுந்தது, என்றேற்படுத்துவதில் ஶாஸ்த்ரந்தான் உனக்கு ப்ரமாணம். தர்ம ஶாஸ்த்ரம், இதிஹாஸம், புராணம், இவை முதலியவைகளால் விவரிக்கப்பட்ட வேதங்கள் எவ்

தா] இந்த அத்யாயத்தில் சொல்லப்பட்ட எல்லாம் இதற்காக என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு உபதேசம் செய்யப்படுகிறது—இந்த ஸ்லோகத்தினால். இவ்விடத்தில் 'கார்ய, அகார்ய' என்னும் பதங்கள் உண்டாக்கத் தகுந்தது, உண்டாக்கத் தகாதது, முதலிய அர்த்தங்களைச் சொல்லுகிறதென்பது பொருந்தாது என்பதை மனதில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'அங்கீகரிக்கத் தகுந்தது, விடத்தகுந்தது' என்றாரம்பித்து. அநுஷ்டானத்தில் பாருட்டம், தத்துவத்தில் மாருட்டம், இவை யிரண்டும் அஸுரர்களின் ஸ்வபாவத்தைச் சொல்லுமிடத்தில் நிரூபிக்கப்பட்டிருப்பதினால் இவ்விடத்தில் அதில்லாமலிருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிற படியினால் 'கார்ய', 'அகார்ய', என்னும் பதங்கள் தத்துவம், தத்துவமல்லாதது, இவைகளையும் குறிப்பதற்காக என்கிற அபிப்ராயத்தினால் 'அங்கீகரிக்கத் தகுந்தது' என்றிவை முதலிய பொதுவான பதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அங்கீகரிப்பதாவது இவ்விடத்தில் ஶாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறபடி மனதினால் ஒப்புக்கொள்ளுதல் 'ஶாஸ்த்ரம்' என்பது யுக்தமல்ல, 1 'ஶ்ருதிஸ்ம்ருதிஸதாசாரா:' என்றிவை முதலியவைகளுக்கு விரோதம் வருகிற படியினால் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'தர்ம ஶாஸ்த்ரம்' என்றாரம்பித்து. 'முதலியவைகள்' என்னும் பதத்தினால் ஆசாரமும் சேர்த்துக்கொள்ளப் படுகிறது. 2 'யஜந்த்யவிதிபூர்வகம்', 3 'நதுமாமபிஜாநந்தி', என்றிவை முதலியவைகளை விலக்குவதற்காக 'ஜ்ஞாத்வா' என்றாரம்பித்துச் சொல்லப்படுகிறது,

---

1. யாஜ்ஞ வல்க்ய ஸ்ம்ருதி - 1 - 1. வேதங்கள் ஸ்ம்ருதிகள், பெரியோர்களின் அனுஷ்டானம் (இவைகள் ப்ரமாணங்கள்).

2. பகவத்கீதை-9-23. 3. பகவத்கீதை-9-24.

விதமான புருஷோத்தமனென்று பேருடைய மேலான தத்துவத்தையும், அவனுடைய ப்ரீதிக்குக்காரணமாயும், அவனையடைவதற்குபாயமுமாகிய கர்மத்தையும் தெரியப்படுத்துகின்றனவோ அவ்விதமான ஶாஸ்த்ரவிதிகளில் சொல்லப்பட்டதத்துவத்தையும் கர்மத்தையும்உள்ளபடியேகுறை

என்று சொல்லுகிறார்—'எவ்விதமான' என்றாரம்பித்து. எல்லா ஶாஸ்த்ரங்களும் நேராகவாவது பரம்பரையாகவாவது எல்லாக்கர்மங்களையும் பரமாத்மாவின் ஆராதனங்களாகவே விதிக்கின்றன. அதில் அந்தத்தத்துவம், நன்மை இவைகளுக்குள் 1 'வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:' என்று சொல்லப்பட்ட மேலான தத்துவத்தை முன்பு சொல்லப்பட்டபெயரைக்கொண்டு ஜ்ஞாபகப்படுத்துகிறார்—'புருஷோத்தமனென்று பேருடைய' என்று. 'அவனை அடைவதற்குபாயமுமாகிய' என்பதற்கு பலம், ஸங்கம், முதலியவைகளை விட்டு அநுஷ்டிக்கப்படுகிற எல்லாக் கர்மங்களும் பரமாத்மாவை அடைவதற்குபாயங்கள் என்பதே அவைகளுக்கு ஸ்வபாவம் என்று தாத்பர்யம். இவ்விடத்தில் 'தெரியப்படுத்துகின்றனவோ' என்பதினால் தெரிந்து கொள்ளப்படாத விஷயத்தைத் தெரியப்படுத்துவதாகிற 'விதாந' என்னும் பதத்தின் அர்த்தமும் விவரிக்கப்பட்டது. ஶாஸ்த்ரங்களில் சொல்லியபடிக் கல்லாமல் கர்மங்களைச் செய்யக் கூடாது என்கிற அபிப்ராயத்தினால் 'கர்துமிஹார்ஹஸி' என்று சொல்லப்பட்டது. அவ்விடத்திலும் அநுஷ்டானம் செய்வது, தத்துவத்தை அறிந்துகொள்ளுவது, இவைகளுக்குப் பொதுவான அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அங்கீகரிக்கத் தகுந்தவனாகிறாய்' என்று. 'அர்ஹஸி' என்பதை யநுஸரித்து 'நீ' என்று சொல்லியிருக்கிறது. அதுவும்தேவதைகளினுடையஸம்பத்தைக்குறித்துப்பிறந்த அர்ஜுநனுக்கு இப்படி அங்கீகரிப்பதற்கு அதிகமான யோக்யதை இருக்கிறதென்று தெரிவிப்பதற்காக. இத்தால் சொல்லப்பட்டதாவது—ஸத்வகுணம் மேலிட்ட உன்னால் வஞ்சனை செய்யும் புருஷர்களுடைய அதிக ஸாமர்த்தியத்தினால் ஒப்புக்கொள்ளும்படி செய்விக்கப் பட்ட புத்தியை மயக்கக் கூடிய ஆபாஸ ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கும் விதத்தை யநுஸரிப்பதினால் நித்யமாயும் பகவானுடைய உத்திரவுமாகிய வேதங்களென்று பேருடைய ஶாஸ்த்ரங்களுக்கு ஸாரார்த்தமாகிய அவரவர்கள் அதிகாரத்திற்குத் தகுந்தபடி கர்மயோகம், பக்தியோகமாகிற பகவானை ஆராதிக்கிற மேலான தர்மத்திலிருந்து சலிக்கக்கூடாது. எப்பொழுதும் அதுவே அங்கீகரிக்

---

1. பகவத்கீதை - 15 - 15.

வு மிருதிகளில்லாமல் தெரிந்துகொண்டு செய்ய நீ யோக்யனாகிறாய், அதை யே அங்கீகரிக்கத்தகுந்தவனாகிறாய். 24

பகவத் ராமாநுஜன் என்னும் உடையவர் அருளிச்செய்த

ஸ்ரீமத் கீதாபாஷ்யத்தில்

பதினாறுவது அத்யாயம் முற்றிற்று.

ஶ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம:

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

கத்தகுந்தது—என்பது. 'இஹ (இவ்விடத்தில்)' என்று சொல்லியிருப்பது கர்மங்களைச்செய்ய அதிகாரத்தைக் கொடுக்கக்கூடிய பூமியைக் காட்டுவதற்காக. அன்றிகமே கர்மங்களுக்குக்கீழ்படிந்திருக்கும் தசையையுடையவனென்று தெரிவிப்பதற்காகவுமாம். 24

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்ரீமந் நிகமாந்த

மஹாதேசிகனருளிச்செய்த தாத்பர்ய சந்த்ரிகையில்

பதினாறுவது அத்யாயம் முற்றிற்று.

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:.



ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்த ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை.

ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

தைவாஸுரவிபாகோக்திபூர்விகா ஶாஸ்த்ரவஶ்யதா ।
தத்த்வாநுஷ்டாநவிஜ்ஞாநஸ்தேம்நே ஷோடஶ உச்யதே ॥ 20

ப - ரை] தைவாஸுரவிபாகோக்திபூர்விகா - தேவதைகள், அஸுரர்கள், இவர்களின் பிரிவை நிரூபிப்பதை முன்னிட்டு, ஶாஸ்த்ரவஶ்யதா - ஶாஸ்த்ரங்களுக்கு வசப்பட்டிருக்கவேண்டுமென்பது, தத்த்வாநுஷ்டாநவிஜ்ஞாநஸ்தேம்நே - உண்மையான கர்மங்களைப்பற்றியும், உண்மையான வஸ்துக்களைப்பற்றியவும், அனுஷ்டானம் செய்வது, அறிவது, இவைகளின் உறுதிக்காக, ஷோடஶே-பதினாறுவது அத்யாயத்தில், உச்யதே - சொல்லப்படுகிறது. 20

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனருளிச் செய்த

ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை.

இந்த ஶ்லோகத்தில் முன்பு சொல்லப்பட்டவைகளும் இனி சொல்லப்போகிறவைகளுமான எல்லா அர்த்தங்களையும் ஸ்தாபிக்கிறதாகிய பதினாறுவது அத்யாயத்தின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்படுகிறது. இந்த அபிப்ராயத்தினால் 1 ‘பிறகு கீழ்ச்சொல்லப்பட்ட எல்லா அர்த்தங்களையும் உறுதிப்படுத்துவதற்காக ஶாஸ்த்ரங்களுக்குக் கீழ்படிந்திருக்கவேண்டுமென்பதைச் சொல்லுவதற்காக ஶாஸ்த்ரத்திற்கு வசப்பட்டவர்களும் அதற்கு விரோதிகளுமாகிய தேவர்கள் அஸுரர்கள் இவர்களின் ஸ்ருஷ்டிகளின் பிரிவை பகவான்சொல்லுகிறார்’ என்று சொல்லப்பட்டது. ஆகையினாலேயே பதினேழாவது அத்யாயத்திற்கு அவதாரிகை சொல்லும்பொழுதும் ‘தேவதைகள் அஸுரர்கள், இவர்களின் பிரிவைச்சொல்லிக்கொண்டு அதின் வழியாக அடையவேண்டியதாகிய தத்துவத்தைப்பற்றிய ஜ்ஞானமும் அதையடைவதற்குபாயத்தைப்பற்றிய ஜ்ஞானமும் வேதம் ஒன்றையே காரணமாகவுடைத்து என்று சொல்லப்பட்டது’ என்று பாஷ்யத்தில் சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ஶாஸ்த்ரங்களுக்கு வசப்பட்டிருக்கவேண்டுமென்பதும்

---

1 16-வது அத்யாயத்தின் பாஷ்ய அவதாரிகை.

1 'தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ। ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம கர்த்துமிஹார்ஹஸி॥' என்கிற இந்த அத்யாயத்தின் கடைசி ஶ்லோகத்தினால் சொல்லப்பட்டது.

பதினாறுவது அத்யாயம் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

1 பகவத்கீதை-16-24.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனருளிச் செய்த

ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

சீரார் தூப்புல் திருவேங்கட முடையான் திருவடிகளே சரணம்.

ஆணைமறுதவர் தேவரல்லா வழக்கோரசுரர்
கோணை மறுத குணச் செல்வ நீ குறிக்கோண் மறையை
பேணிய தத்துவமும் பிணியற்ற கிரிசைகளும்
காணிதனால் விசயாவென்று கண்ணனியம்பினனே. 17

ப - ரை] கண்ணன் - ஸ்ரீ க்ருஷ்ணன், ஆணை - ஆஜ்ஞையை, மறுத வர் - மீறி நடக்காதவர்கள், தேவர் - தேவதைகளின் ஸ்வபாவமுடைய வர்கள், அல்லா - அப்படிக்கல்லாத, வழக்கோர் — வழக்குப் பேசுகிறவர் கள், அதாவது விரோதமாகப் பேசுகிறவர்கள், அசுரர் - அஸுரர்களின் ஸ்வபாவமுடையவர்கள், கோணை — வக்கர ஸ்வபாவத்தினால், மறுத - பகவதாஜ்ஞையை மறுக்காத, குண - குணங்களாகிற, செல்வ - ஸம்ப த்தை யுடைய, நீ - நீ, மறையை - வேதத்தை, குறிக்கோள் - ஸாவதான மாக அங்கீகரி, அன்றிக்கே குறி - ப்ரமாணமாக, கோள் - அங்கீகரி, பே ணிய - பேணக் கூடியதான, அதாவது ஆதரவுடன் அங்கீகரிக்கக்கூடிய, அல்லது பேணிய - பெரியோர்களால் ஆதரவுடன் அங்கீகரிக்கப் பட்ட, தத்துவமும் - தத்துவத்தையும், பிணி-வ்யாதி அதாவது துக்கம், அற்ற - இல்லாதவையான, கிரிசைகளும் - க்ரியைகளையும், கர்மானுஷ்டானங் களையும் என்றபடி, விசயா அர்ஜுந, இதனால் — இந்த வேதத்தினால், காண் - விசதமாகத் தெரிந்து கொள், என்று - என்று, இயம்பினன் - சொன்னான். 17

பதினாறாவது அத்யாய ஸங்க்ரஹ ஶ்லோகத்தின் அர்த்தத்தை அருளிச் செய்கிறார்—இந்தப் பாட்டினால். 'அல்லா வழக்கோர்' என்ப தினால் அல்லாத வழக்குப் பேசுகிறவர்கள் என்று சொல்லப்படுகிறது. இத்தால் ஶாஸ்த்ரங்களில் ஏற்பட்டிருக்கிற தத்துவ ஸ்திதிகளுக்கு விரோதமாக 1 'அஸத்யம் அப்ரதிஷ்டம்தே' என்றாரம்பித்துச் சொல் லப்பட்டபடி இல்லாததைப் பேசுகிறவர்கள் என்றர்த்தம். 1 'ஆஹு:' என்று சொல்லி யிருக்கிறபடியினால் வழக்குப் பேசுகிறவர்கள் என்ற

---

1. *பகவத்கீதை* - 16 - 8,

ருளிச் செய்யப்பட்டது. வாசிகமான வ்யவஹாரத்தைச் சொன்னதி னால் மனதிலும் அவர்களுடைய எண்ணம் தத்துவஸ்திதிக்கு விரோத மான தென்பதேற்பட்டது. 'கோணமாறாத குணச் செல்வ' என்பதி னால் 1 'அபயம் ஸத்த்வஸம்ஶுத்தி:' என்றாரம்பித்துச் சொல்லப்பட்ட குணங்களாகிய தெய்வ ஸம்பத்தையுடைய நீ என்று சொல்லப்பட்டது. இத்தால் 2 'மா ஶுச: ஸம்பதம் தைவீமபிஜாதோ'ஸி பாண்டவ' என் பதின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. 'குறிக்கொள் மறையை' என்ப தினால் 3 'தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே' என்கிறபடியே ஶாஸ்த்ரத்தை யே கர்த்தவ்யாகர்த்தவ்யங்களைப் பற்றிய அறிவிற்கு ப்ரமாண மாக அங்கீகரி என்று தாத்பர்யம். 'மேலும் 'குறிக்கொள் மறையை' என்பதினால் ஸாவதானமாக அங்கீகரி என்று சொல்லப்படுகிறது. இதனால் ''ஸமாஶ்ரய'' என்கிற இடத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்திருக்கிறபடியே எல்லா வேதங்களும் பகவானுடைய ஆராதனத் தையும், அவனுடைய விபூதிகளையும், அவனுடைய ஸ்வரூப ரூபகுண ங்களையும் ப்ரதிபாதிக்கின்றன என்கிற எண்ணத்துடன் அப்யஸனம் செய்யவேண்டுமென்பதும் சொல்லப்பட்டது. 'பேணிய தத்துவமும்' என்பதினால் முன்னோர்களாகிய ஸாத்விகர்களினால் 'பாரமைகாந்த்யம்' என்று ப்ரீதியுடன் அங்கீகரிக்கப்பட்ட தத்துவமும் என்று சொல்லப் பட்டது. அன்றிக்கே பகவானாலேயே 4 'ஸ ஸர்வவித்பஜதி மாம்' என்றும் 5 'இதி குஹ்யதமம் ஶாஸ்த்ரம்' என்றும் கொண்டாடப்பட்ட புருஷோத் தம தத்துவத்தையும் என்றர்த்தமாகவுமாம். 'பிணிபற்ற கிரிசைக ளும்' என்பதினால் பகவானுடைய ஆராதனங்களாகையினாலே ஸ்நேகி தர்களின் உபசாரங்களைப்போல ஸ்வயம் ப்ரயோஜனமானதினால் அனு ஷ்டிக்கும்பொழுது ஸுகரூபமாயும், காம்ய கர்மங்களைப்போல துக்க மிஶ்ரங்களான பலங்களைக் கொடுக்கக்கூடிய தல்லாமல் பரம புருஷார்த்தத்திற்குக் காரணமாகையினாலும் துக்க ஸம்பந்தமில்லாத ஸாத்விகத்யாகத்தை முன்னிட்டுப் பகவதாராதன ரூபமாய் அனுஷ்ட் டிக்கப்படுகிற க்ரியைகளும் என்று சொல்லப்படுகிறது. இவை இரண்டி னாலும் கீதார்த்த ஸங்க்ரஹத்திலும் தாமருளிச்செய்திருக்கிறபடியே முன்னும்பின்னும் சொல்லப்பட்ட எல்லா அர்த்தங்களும் இந்த அத்யா

1. பகவத்கீதை-16-1
2. பகவத்கீதை - 16 - 5
3. பகவத்கீதை - 16 - 24
4. பகவத்கீதை - 15 - 19
5. பகவத்கீதை - 15 - 20

யத்தினால் ஸ்தாபிக்கப்படுகிறது என்று கருத்து. 'காணிதனால்' என்பதற்கு 1 'ஜ்ஞாநஶாஸ்த்ரவ்யபேக்ஷம்' என்கிறபடியே ஶாஸ்த்ரங்களைக்கொண்டே அறியவேண்டும் என்று தாத்பர்யம். இத்தால் 'கார்யாகார்யவ்யவஸ்திதௌ' என்கிற இடத்தில் கர்மங்களை மாத்திரம் சொல்லியிருந்தபோதிலும் தத்துவங்களையும் உபலக்ஷிக்கிறது என்பதும், 2 'தத்த்வாநுஷ்டாந விஜ்ஞாநஸித்தயே' என்கிற இடத்தில் 'அநுஷ்டாந' என்பதோடு கர்மானுஷ்ட்டானங்கள் என்று சேர்த்துக்கொண்டு கர்மங்களினுடைய அனுஷ்ட்டானம், தத்துவங்களினுடைய விஜ்ஞானம், என்று அர்த்தம் சொல்லிக்கொள்ள வேண்டியதென்பதும் காட்டப்பட்டது. இவ்விடத்தில் 'காண்' என்பதற்குத் தத்துவங்களை அறியென்றும், க்ரியைகளைக்காணுவது அப்படி அனுஷ்ட்டிப்பதற்காகையினால் கண்டறிந்து அனுஷ்ட்டி என்றும் தாத்பர்யம். 'விசயா' என்பதினால் இப்படித் தத்துவஜ்ஞானத்தை முன்னிட்டுக் கேவலம் பகவதாராதனரூபமாகிய வர்ணாஶ்ரம தர்மங்களில் ஒன்றாகிய யுத்தம் என்கிற தர்மத்தை யனுஷ்டிப்பாயேயானால் வெளி சத்துருக்களை ஜயிப்பதைப் போல 3 'ஒன்று சொல்லி ஒருத்தனில் நிற்கிலாத ஓரைவர் வன் கயவரை என்று யான் வெல்கிற்பன் உன் திருவருளில்லையேல்' என்கிறபடியே ஆந்தர சத்துருக்களாய் என்னுடைய ஸகாயமில்லாமல் ஜயிக்க முடியாத பஞ்சேந்த்ரியங்களையும் ஜயித்து விடுவாய் என்று தாத்பர்யம். 'கண்ணன்' என்பதினால் 4 'ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந்மதுஸூதந:' என்கிறபடியே ஸத்வகுணத்தைத் தரக்கூடிய திருக்கண்களையுடையவன் என்று தாத்பர்யம். அன்றிக்கே 5 'கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே' என்கிறபடியே எல்லாலோகத்திற்கும் ஸ்வாமியாயும், கதியுமாகிய ஸ்ரீக்ருஷ்ணன் என்று தாத்பர்யம் இத்தால் ஆராத்யனும், பலப்ரதனும், ப்ராப்யனுமாகிய பகவான் தானே இந்தவழியால் என்னை ஆராதனம் செய்து என்னுடைய அனுக்ரஹத்தினால் என்னை அடையலாம் என்று தன்னுடைய ஸ்வாமித்வமாகிற ஸம்பந்தத்தை முன்னிட்டுக் காருண்யத்தினால் அருளிச் செய்தான் என்று தாத்பர்யம்.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

1. பகவத்கீதை - 16 - 24
2. கீதார்த்த ஸங்க்ரஹ ஶ்லோகம் - 20
3. திருவாய்மொழி - 7 - 1 - 7
4. திருவாய்மொழி - 2 - 2 - 1
5. 259-ம் பக்கம்—3-ம் புட்நோட்டைப் பார்க்க.

ஸ்ரீ பகவத்கீதை.

பதினேழாவது அத்யாயம்.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பா - அ] தேவதைகள், அஸுரர்கள், இவர்களின் பிரிவைச் சொல்லிக் கொண்டு அதின் வழியாக அடையவேண்டியதாகிய தத்துவத்தைப்பற்றிய ஜ்ஞானமும் வேதமொன்றையே காரணமாக உடையது என்று சொல்லப்பட்டது. இப்பொழுது ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படாத கர்மம் அஸுரர்களின் ஸ்வபாவத்தைச்சேர்ந்ததாகையினால் ப்ரயோஜன மற்றது என்பதும், ஶாஸ்த்ரங்களினால் விதிக்கப்பட்ட கர்மமும் ஸத்வம் முதலிய குணங்களினால் மூன்றுவிதமென்பதும் ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட

தா] கீழ்ச்சொன்ன அர்த்தத்திற்கு ஒத்தாசை என்று பதினேழாவது அத்யாயத்திற்கு அவதாரிகை சொல்லுவதற்காக கீழ்ச் சொல்லப்பட்ட அர்த்தத்தைச் சுருக்கிச் சொல்லுகிறார்—'தேவதைகள்' என்றாரம்பித்து. கீழ் ப்ரஸ்தாவித்திருப்பதையே மற்றொரு வழியாக விவரமாகச் சொல்லுகிறதென்று ஸங்கதி சொல்லுகிறார்— 'இப்பொழுது' என்றாரம்பித்து. விடத்தகுந்தது, அங்கீகரிக்கத் தகுந்தது, இவைகளின் ஏற்பாடு ஶாஸ்த்ரம் ஒன்றையே காரணமாகவுடையது என்று சொன்னதின் பிறகு என்றர்த்தம். 1 'அஶாஸ்த்ரமாஸுரங்க்ருத்ஸ்நம் ஶாஸ்த்ரீயம் குணத:ப்ருதக் । லக்ஷணம் ஶாஸ்த்ரஸித்தஸ்ய த்ரிதா ஸப்ததஶோதிதம் ॥', என்கிற ஸங்க்ரஹ ஶ்லோகத்தை விவரிக்கிறார்— ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படாத கர்மம்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் பொதுவாகவும், விஶேஷித்தும் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற அர்த்தங்களைப் பிரித்துக் காட்டுவது இந்த அத்யாயத்திற்குப் பொதுவான அர்த்தம் 'ஸப்ததஶோதிதம்' என்று ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் சொல்லியிருப்பது கீழ் மூன்று வாக்யங்களிலும் தனித்தனியே அந்வயிக்கிறது. அன்றிக்கே

---

1. கீதார்த்த ஸங்க்ரஸ்லோகம் - 21

கர்மங்களுக்கு லக்ஷணமும் சொல்லப்படுகிறது. அதில் ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படாத கர்மம் ப்ரயோஜன மற்றதென்பதைத் தெரிந்து கொள்ளாதவனாகிய அர்ஜுநன் ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படாததாயும் ஶ்ரத்தையுடன் செய்யப்பட்டதாயு மிருக்கிற யாகம் முதலியவற்றில் ஸத்வ குணம் முதலிய காரணங்களினால் உண்டாகிய பலங்களின் வ்யத்யாஸத்தை அறியவேண்டுமென்கிற ஆசையினால் கேட்கிறான்—

அர்ஜுந உவாச ॥

அர்ஜுநஃ - அர்ஜுநன், உவாச - சொன்னான்.

யே ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய யஜந்தே ஶ்ரத்தயாந்விதாஃ ।
தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்த்வமாஹோ ரஜஸ்தமஃ ॥ 1

ப-ரை] க்ருஷ்ண - ஸ்ரீ க்ருஷ்ணா, யே - எவர்கள், ஶாஸ்த்ரவிதிம் - ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட விதியை, உத்ஸ்ருஜ்ய - விட்டு, ஶ்ரத்தயா - ஶ்ரத்தையுடன், அந்விதாஃ - கூடினவர்களாய், யஜந்தே - யாகம் செய்கிறார்களோ, தேஷாம் - அவர்களுக்கு, நிஷ்டா - நிஷ்டையானது, கா - எது, ஸத்த்வம் - ஸத்வகுணமா? ஆஹோ - அதில்லாமல், ரஜஃ - ரஜோகுணமா? தமஃ — தமோகுணமா? 1

'ஏதத் ஸர்வம் (இவை எல்லாம்)' என்று சேர்த்துக் கொண்டு 'ஸப்ததஶோதிதம் (பதினேழாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டது)' என்று எல்லாவற்றையும் சேர்த்து அந்வயம் சொல்லிக்கொள்ளவேணும். 1 'ஜ்ஞாத்வாஶாஸ்த்ரவிதாநோக்தம்' என்று சொன்ன பிறகு 'யேஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய' என்கிற கேள்வி எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'அதில்' என்றாரம்பித்து. 'ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படாத கர்மம் ப்ரயோஜன மற்றதென்பதைத் தெரிந்து கொள்ளாதவனாகிய' என்பதற்குக் கருத்தாவது—புத்திமான்களுக்கு ஸ்வபாவத்திலேயே ப்ரயோஜனத்திலாவது அதின் உபாயத்திலாவது அறிய வேண்டும் என்கிற ஆசை உண்டாகும். ஆகையினால் ஸத்வம் முதலிய நிஷ்டைகளின் வ்யத்யாஸத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆசை அதினால் உண்டாகிற பல விஶேஷங்களைத் தெரிந்து கொள்ளுவதற்காக; ப்ரயோஜனமற்றது என்று தெரிந்து கொண்டால் அதில் விஶேஷங்களைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்கிற ஆசை உண்டாகாது. ஆகையினால் லோகத்தில் ஏற்பட்ட பயிரிடுதல்,

1. பகவத்கீதை - 16 - 24

பா] ஶாஸ்த்ரவிதியை விட்டு ஶ்ரத்தையுடன் கூடியவர்களாய் எவர்கள் யாகம் செய்கிறார்களோ அவர்களுக்கு நிஷ்டை எது? ஸத்வகுணமா?

வைத்யம் செய்தல் முதலியவைகளும் புத்திமான்களால் ப்ரவ்ருத்தி செய்யப்பட்டவைகளாயும், ப்ரயோஜனத்தோடு கூடினவைகளாயும் காணப்படுகின்றன. அப்படிக்கில்லாவிடில் ஶாஸ்த்ரமும் ப்ரமாணமல்லாமல் போய்விட வேண்டி வரும். லோகத்தில் ஏற்படாத கர்மங்களிலும் ஆசாரங்களிலுமேற்பட்ட தர்மங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகள் ஒருவிதபலமும் இல்லாதவைகளாக இருக்கமாட்டா, அதில் புத்திமான்கள் ப்ரவ்ருத்திக்கமாட்டார்களாகையினால். ஶ்ரத்தையுடன் அனுஷ்டிக்கும்பொழுது அங்கம் குறைவு பட்டதினால் பலம் இல்லையென்பதும் ஸம்பவிக்காது, எண்ணிறந்த புத்திமான்களாகிய ஜனங்களால் அனேகப் பணச் செலவு, தேஹஶ்ரமம், இவைகளினால் அனுஷ்டிக்கப்படுகிறவைகளாயும் த்ருஷ்ட பலங்களில்லாதவைகளாயுமிருக்கிற கர்மங்களில் அத்ருஷ்ட பலத்தைத்தவிர வேறுகதியில்லை. ஆகையினால்ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைவிட இந்தக் கர்மங்களுக்குள்ள தாவதொருவ்யத்யாஸம்சொல்லப்படுகிறதேயானால் அப்பொழுது ஸத்வம்,முதலிய குணங்களின் வ்யத்யாஸத்தினாலேற்பட்டபலங்களின் தாரதம்யம் மாத்திரந்தானிருக்கவேண்டும். ஆகையினால் [1] 'யஶ் ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத: । ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ।' என்று முன்பு சொன்னதும் அநேகமாக அதிகமான ஸுகமில்லை என்கிற தாத்பர்யத்தினால். அன்றிக்கே 'காமகாரத:' என்கிற விஶேஷணம் ஶ்ரத்தையோடு கூடினவனைவிலக்குவதற்காக ஆகவுமாம், என்று கெட்ட உபதேசம். வேதத்திற்குப் புறம்பான ஆகமங்கள், தன்னுடைய ஊஹம், பெரியோர்களின் வ்யவஹாரம், இவைகளால் ஏற்படுத்தப்பட்ட இந்தக்கர்மங்களில் இதுதர்மம் என்கிற எண்ணத்தினுண்டாகிய ஶ்ரத்தை முதலியவைகளினால் இது ப்ரயோஜன மற்றதென்பதை நிவ்ருத்தி செய்யவேண்டியது உசிதம் என்பது அர்ஜுனனுடைய அபிப்ராயம்—என்பது. ஶ்ரத்தையோடு சேர்ந்த கார்யம் பலத்தோடு கூடியது என்று ஸந்தேஹம் வரவேண்டியதற்காகக் கர்த்தாவிற்கு விஶேஷணமாகச் சொல்லப்பட்டிருக்கிற 'ஶ்ரத்தயாந்விதா:' என்பது அந்தக் கார்யங்களுக்கு விஶேஷணமாக வ்யாக்யானம் செய்யப்பட்டது. 'யாகம்' என்பது இவ்விடத்தில் தானம் முதலியவைகளையும் குறிப்பதற்காக. தேவதையின் பூஜை என்பது

---

1. பகவத்கீதை - 16 - 23.

அல்லது ரஜோகுணமா? அல்லது தமோகுணமா? நிஷ்டை யென்பது ஸ்திதி, அதாவது 'ஸ்தீயதேசஸ்மிந் (இதில் நிற்கப்படுகிறது)' என்கிற வ்யுத்பத்தியினால் ஸத்வம் முதலியவைகளே நிஷ்டை என்று சொல்லப்படுகிறது. அதாவது அவர்களுக்கு ஸத்வகுணத்தில் இருப்பா அல்லது ரஜோ குணத்திலா, அல்லது தமோகுணத்திலா என்றர்த்தம். 1

பா — அ] இப்படிக் கேழ்க்கப்பட்டவராய் பகவான் ஶாஸ்த்ரத்தில் விதிக்

பொருவாகையினால் எல்லாம் சேர்த்துக்கொள்ளப்படுகிறதாகவுமாம். இவ்விடத்தில் 'க்ருஷ்ண' என்னும்பதத்தினால் 1 'க்ருஷிர்பூவாசகஶ்ஶப்தோணஶ்ச நிர்வ்ருதிவாசக:।' என்கிறபடியே எல்லாருடைய இஷ்டம் ஸித்திப்பதற்குபயோகமாகிய அர்த்தத்தை அபிப்ராயமாகக் கொண்டிருக்கிறது 'து' என்னும் பதத்தினால் ஶாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிற நிஷ்டையைவிடவும், தன்னிஷ்டப்படி அனுஷ்டிக்கிற கர்மத்தைவிடவும் வ்யத்யாஸம் சொல்லப்படுகிறது. 'கா' என்பதை 'கிம்' என்று மாற்றிக்கொண்டு மூன்றிடத்திலும் திருப்பிக்கொள்ள வேண்டியது. 'ஆஹோ' என்னும் பதத்தையாவது மூன்று இடங்களிலும் திருப்பி வைத்துக்கொள்ள வேண்டியது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'ஸத்வகுணமா?' என்றாரம்பித்து. நாசம் முதலிய அர்த்தங்களை விலக்குவதற்காகவும், ஸத்வம் முதலிய பதங்களோடுசேர்த்துச்சொல்லுவது பொருந்துவதற்காகவும், 'அதிகரணம் (இருப்பிடம்)' என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பதைத் தெரிவிப்பதற்காக இதின் அர்த்தத்தைச் சொல்லக்கூடிய மற்றொரு பதத்தினால் வ்யாக்யானம் செய்கிறார்—'நிஷ்டை என்பது ஸ்திதி' என்று. அவர்களுக்கு நிஷ்டை எது? என்று கேழ்க்கப்பட்ட அர்த்தமே ஸத்வம் என்றாரம்பித்து விஶேஷித்துச்சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அதாவது அவர்களுக்கு' என்றாரம்பித்து. 1

ஶ்ரத்தை எத்தனை விதங்களென்று கேழ்க்காமலிருந்தபோதிலும் அதைச் சொல்லுவது பொருந்தாது என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரித்துக்கொண்டு ஶ்ரத்தை மூன்று விதமென்று சொல்லியிருப்பதற்கு ப்ரயோஜனத்தையும் சொல்லுகிறார்—'இப்படிக் கேழ்க்கப்பட்டவராய்' என்றாரம்பித்து. முன்பு உபதேசம் செய்ததிற்கு விரோதமாய்

---

1. பாரதம் - உத்தியோகபர்வம்- 69 - 5. க்ருஷி:-க்ருஷி என்னும் பதம்,வாசக:-பூமியைச சொல்லுகிற, ஶப்த: - பதம், ண: என்பது, நிர்வ்ருதிவாசக:-ஸுகத்தைச் சொல்லுகிறது.

கப்படாத ஶ்ரத்தையும் அதை முன்னிட்டுச் செய்யும் யாகம், முதலியவைகளும் ப்ரயோஜனமற்றது என்பதை மனதில் வைத்துக்கொண்டு ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட யாகம் முதலியவைகளை ஸத்வம் முதலிய குணங்களினால் மூன்று விதம் என்று நிரூபிப்பதற்காக ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஶ்ரத்தை மூன்றுவிதமென்று முதலில் சொல்லுகிறார்—

|| 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ||

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 - பகவானாகிய ஸ்ரீ க்ருஷ்ணன், 𑌉𑌵𑌾𑌚 - சொன்னார்.

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 𑌸𑌾 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌾 |
𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍀 𑌰𑌾𑌜𑌸𑍀 𑌚𑍈𑌵 𑌤𑌾𑌮𑌸𑍀 𑌚𑍇𑌤𑌿 𑌤𑌾𑌂 𑌶𑍃𑌣𑍁 || 2

ப - ரை] 𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 - ப்ராணிகளினுடைய, 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 - ஶ்ரத்தையானது, 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍀 - ஸாத்விகீ என்றும், 𑌰𑌾𑌜𑌸𑍀 - ராஜஸீ என்றும், 𑌤𑌾𑌮𑌸𑍀𑌚𑍇𑌤𑌿 — தாமஸீ என்றும், 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 - மூன்று விதமாக, 𑌭𑌵𑌤𑌿- ஆகிறது, 𑌸𑌾 - அது, 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌾 - ஸ்வபாவத்தில் உண்டானது, 𑌤𑌾𑌂 - அந்த ஶ்ரத்தையை, 𑌶𑍃𑌣𑍁 - கேள். 2

கேழ்க்கப்பட்டவர் என்றர்த்தம். ‘மனதில் வைத்துக்கொண்டு’ என்பதற்கு க்ரமமாக நேரில் ஸமாதானத்தைச் சொல்லுவதற்காக என்றர்த்தம். இந்தக் கேழ்வை மிகவும் அநாதரிக்கக் கூடியது என்று தெரிவிப்பதற்காக உடனே நேரில் ஸமாதானம் சொல்லவில்லை என்று தாத்பர்யமாகவுமாம். ‘ஸத்வம் முதலிய குணங்களினால் மூன்றுவிதம்’ என்பதற்குக் குணங்களின் பேதங்களினால் ஏற்பட்ட பலங்களின் பேதங்களையுடையது என்பதை என்று தாத்பர்யம். இவ்விடத்தில் ஶ்ரத்தையோடு கூடியிருப்பதினால் ஸாத்விகம் என்பதும் ஶாஸ்த்ரத்தை மீறி இருப்பதினால் தாமஸம் என்பதும் ஸங்கேதஹுப்பட்டது. அதில் ஶ்ரத்தையோடு கூடியிருத்தல் பலத்திற்குக் காரணமாவதற்காக உபயோகமுள்ளது அது ஶாஸ்த்ரங்களில் சொல்லிய கர்மங்களிலே தான். அதிலும் ஶ்ரத்தை ஒரே ஸ்வபாவத்தையுடையதல்ல என்கிற அபிப்ராயத்தினால் ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட கர்மங்களில் ஶ்ரத்தையே மூன்றுவிதம் என்று சொல்லியிருக்கிறது. இத்தால் பரிஸங்க்யாந்யாயத்தினால் ஶாஸ்த்ரத்தில் சொல்லப்படாதவைகளில் பலங்களின் வ்யத்யாஸங்களினாலேற்பட்ட மூன்றுவிதமென்பது நிராகரிக்கப்பட்டது. இவ்விடத்தில் ஶ்ரத்தை வெவ்வேறாகையினால் ஸத்வம் முதலிய நிஷ்டைகள் வெவ்வேறு என்பதேற்படுகிறது என்று சொல்லப்பட்டது. ‘𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂’ என்பதினால் அந்தந்த தேஹங்களுக்குத்

பா] எல்லா ப்ராணிகளினுடைய ஶ்ரத்தை மூன்று விதமாகிறது. அது வும் ஸ்வபாவத்தினுல் உண்டானது. ஸ்வபாவமாவது தனக்கு அஸாதார ணமான ஸ்வபாவம். அதாவது பழைய வாஸனையினுல்உண்டாகிற அந்த ந்தக் கர்மங்களில் ஆசை. எந்தக் கர்மத்தில் ஆசை யுண்டாகிறதோ அதி லேயே ஶ்ரத்தையுண்டாகிறது. ஶ்ரத்தையாவது இந்தக் கர்மம் நம்மு

தருந்த அதிகாரிகள் வெவ்வேறென்பது சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறார்—‘எல்லா’என்று. ‘எல்லா’ என்பதற்கு ப்ரம்மா முதலிய என்றர்த்தம். ‘ப்ராணிகளினுடைய’ என்பதற்கு ஸத் வம்முதலிய குணங்கள் நிறைந்த அந்தந்த தேஹங்களுக்குத் தக்கபடி என்று தாத்பர்யம். ஶாஸ்த்ரங்களும், அதில் ஆசையையுண்டு பண் ணக்கூடிய அர்த்தவாதம் முதலியவைகளும் பொதுவாக இருக்கப் புரு ஷர்களின் வ்யத்யாஸம் எப்படி ஏற்படுகிறது என்று க்ஷேபம் வரில் அதற்கு ஸமாதானமாக ‘ஸாஸ்வஹாவஜா’ என்றடுத்த வாக்யம் சொல் லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறார்—‘அதுவும்’ என்றாரம்பித்து. கார்யங்கள் அஸாதாரணங்கள் என்று தெரிவிப்ப தற்காக அதின் காரணங்கள் அஸாதாரணங்கள் என்பது சொல்லப்படு கிறது என்று சொல்லுகிறார்—‘ஸ்வபாவமாவது’ என்றாரம்பித்து. இவ் விடத்தில் ஸ்வபாவமாவது எது? அது அஸாதாரணமாக இருப்பதற் குக் காரணம் என்ன? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ் சொல் லுகிறார்—‘பழைய வாஸனையினுல்’ என்றாரம்பித்து. ‘ஹாவ’ என்னும் பதம் இவ்விடத்தில் விஶேஷமான ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது. ‘ஸ்வஹாவ’ என்னும் பதம் அநேக அர்த்தங்களைச் சொல்லக்கூடியதா யிருக்க ஆசை என்று இவ்விடத்தில் எப்படிச் சொல்லப்படுகிறது என் கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—‘எந்தக் கர்மத்தில் ஆசையுண்டாகிறதோ’ என்றாரம்பித்து. ஆசையும், ஶ்ரத்தையும், கார ணமாயும், கார்யமாயுமிருக்கிற தென்பது ஆசையில்லாவிட்டால் ஶ்ர த்தையில்லை. ஆசையுண்டானுல் ஶ்ரத்தையுண்டாகிறதாகையினுல் ஸித்தித்தது என்றர்த்தம். ஆசையைவிட வேறு பட்டதாய் அதினுல் உண்டாக்கப்படுகிற ஶ்ரத்தையாவது எது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—ஶ்ரத்தையாவது’ என்றாரம்பித்து. 1 ‘ஶ்ரத்தாவிஶ்வாஸகாங்க்ஷயோ:’ என்று த்வரையில் முடிவு பெறு கிற விஶ்வாஸத்திலும் ‘ஶ்ரத்தா’ என்னும் பதம் நிகண்டுவில் சொல்லப் படுகிறது. 2 ‘காமம், ஸங்கல்பம், ஸந்தேஹம், ஶ்ரத்தை, அஶ்ரத்தை,

---

1. நிகண்டு. 2. ப்ருஹதாரண்யகம் - 3 - 5-3

டைய இஷ்டத்தை ஸாதிக்குமென்கிற நம்பிக்கையுடன் அந்தக் கர்மத்தில் த்வரை, வாஸனை, ருசி, ச்ரத்தை, இவையெல்லாம் ஸத்வம், முதலிய குணங்களுடன் சேர்க்கையினால் உண்டாகிய ஆத்மாவின் ஸ்வபாவங்கள். ஆத்மாவின் ஸ்வபாவங்களாகிய அந்த வாஸனை முதலியவைகளுக்குக் காரணங்கள் தேஹம், இந்த்ரியம், மனது, விஷயங்கள், இவைகளிலிருக்கிற ஸ்வபாவங்களாயும், கார்யங்களைக் கொண்டு ஊஹிக்கக் கூடியவைகளாயுமிருக்கிற ஸத்வம், முதலிய குணங்கள் ஸத்வம்,

---

தைர்யம், அதைர்யம், வெட்கம், புத்தி, பயம், இவை எல்லாம் மனதே' என்றர்த்தமுள்ள ச்ருதிவாக்யமிருக்கிறபடியினால் மனதின் ஸ்வபாவங்களாயும், ஆத்மாவுடன் ஸம்பந்தப்படாதவைகளுமான ச்ரத்தை முதலியவைகள் குணங்களினால் உண்டானவைகளானபடியினால் குணங்களின் ஸ்வபாவங்கள் என்பது ஸம்பவித்த போதிலும் இவ்விடத்தில் 'ஸ்வ' என்னும் பதத்தினாலும், 'தேஹிநாம்' என்னும் பதத்தினாலும் சொல்லப்படுகிற ஜீவாத்மாவினிடத்தில் அந்த ச்ரத்தைகள் உண்டாகின்றன என்று சொல்லியிருப்பது எப்படிப் பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'வாஸனை, ருசி' என்றாரம்பித்து. பரிசுத்தமான ஸ்வபாவத்தையுடைய ஆத்மாவிற்கே கர்மங்களினாலுண்டாகிற ஸத்வம் முதலிய குணங்கள் நிறைந்த சரீரத்தோடு சேர்ந்திருக்கையைக் காரணமாகவுடைய தர்மபூத ஜ்ஞானத்தின் மாறுதல்கள் இவைகள் என்று தாத்பர்யம். ச்ரத்தைகளில் ஸாத்விகம் முதலிய பெயர்களை ஏற்படுத்துவதற்காக ஸத்வம், முதலிய குணங்களில்லாத ஆத்மாவிற்கு ஸத்வம், முதலிய குணங்களைக் காரணமாகவுடைய வாஸனை, முதலியவைகளின் ஸம்பந்தம் எப்படி உண்டாகிறது? என்கிற ஆக்ஷேபத்தை விலக்குவதற்காகவும், 'தேஹிநாம்' என்கிற பதத்தினால் குறிக்கப்பட்ட விதமாக குணங்களின் ஸம்பந்தத்தினால் ஏற்பட்டதென்பதை விவரிக்கிறார்—'ஆத்மாவின் ஸ்வபாவங்களாகிய' என்றாரம்பித்து. ஔஷதம், முதலியவைகளோடு கூடிய நெருப்பின் சேர்க்கையினால் சில வஸ்துக்களில் பாகத்தினால் குணங்கள் எப்படி உண்டாக்கப்படுகின்றனவோ அப்படியே இவ்விடத்திலும் என்று தாத்பர்யம் அந்தந்தக் கார்யங்களுக்குக் காரணங்களாக சாஸ்த்ரங்களில் ஏற்பட்டிருக்கிற ஸத்வம் முதலிய குணங்களை நமக்குத் தெரியாமையினால் நிராகரிப்பது யுக்தமல்ல என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'கார்யங்களைக்கொண்டு' என்றாரம்பித்து. இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவைகளாயும், நம்மால் அனுபவிக்கப்படாதவைகளுமாகிய குணங்கள் வாஸனைக்குக் காரணங்கள் என்பது எப்படிப் பொருந்தும்? என்கிற

முதலிய குணங்களோடு கூடிய தேஹம், முதலியவைகளை அனுபவிப்பதினால் உண்டாகிய கர்மங்கள் என்றர்த்தம். ஆகையினால் இந்த ஶ்ரத்தை ஸாத்விகீ, ராஜஸீ, தாமஸீ, என்று மூன்று விதம். அப்படிப்பட்ட இந்த ஶ்ரத்தையைக் கேள். அதாவது அந்த ஶ்ரத்தை எவ்வித ஸ்வபாவங்களையுடையதோ அந்த ஸ்வபாவத்தைக் கேள் என்றர்த்தம். 2

ஸத்த்வாநுரூபா ஸர்வஸ்ய ஶ்ரத்தா பவதி பாரத ।
ஶ்ரத்தாமயோ(அ)யம் புருஷோ யோ யச்ச்ரத்த: ஸ ஏவ ஸ: ॥ 3

ப - ரை] பாரத-அர்ஜுந, ஸர்வஸ்ய-எல்லா ப்ராணிகளுக்கும், ஸத்த்வாநுரூபா - மனதிற்குத்தகுந்தபடி, ஶ்ரத்தா - ஶ்ரத்தை, பவதி-உண்டாகிறது, அயம் - இந்த, புருஷ: - ஜீவன், ஶ்ரத்தாமய: - ஶ்ரத்தையின் மாறுதலாக இருப்பவன், ய: — எந்தப் புருஷன், யச்ச்ரத்த:- எவ்வித ஶ்ரத்தையை யுடையவனோ, ஸ: - அவன், ஸ ஏவ - அப்படிப்பட்ட ஸ்வபாவத்தையுடையவனாகவே ஆகிறான். 3

பா] ஸத்வமாவது மனது. எல்லாப் புருஷனுக்கும் மனதிற்குத்தகுந்

ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார் — 'ஸத்வம் முதலிய குணங்களோடு கூடிய' என்றாரம்பித்து. முக்கியகாரணத்தை எதிர்பார்த்து ஶ்ரத்தைக்கு ஸாத்விகம் முதலிய வெவ்வேறு பேர்கள் உண்டாகின்றன என்று சொல்லுகிறார்—'ஆகையினால்' என்றாரம்பித்து. ஸாத்விகம், முதலாக மூன்றுவித மென்று சொல்லப்பட்டிருக்கும் பொழுது மறுபடியும் 'ஶ்ருணு' (கேள்) என்று ஏன் சொல்லப்படுகிறது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'அதாவது அந்த ஶ்ரத்தை' என்றாரம்பித்து. ஸ்வரூபமும் மொத்தமாக மூன்றுவித மென்பதும் தெரிந்துகொள்ளப்பட்ட படியினால் தெரிந்துகொள்ளப்படாத ஸ்வபாவ விசேஷங்களைப் பற்றி 'ஶ்ருணு (கேள்)' என்று சொல்லப்பட்டது.

'ஸத்த்வாநுரூபா' என்கிற இடத்தில் ஸத்வகுணம் சொல்லப்படுகிறதில்லை, எல்லாப் புருஷனுடையவும் ஶ்ரத்தை ஸத்வகுணத்தினால் உண்டாவதாயிருந்தால் ராஜஸம் தாமஸம் என்னும் ஶ்ரத்தைகளைப் பிரித்திருப்பது பொருந்தாதாகையினால். ஒத்தாசைக் காரணமாக எல்லா ஶ்ரத்தைகளிலும் ஸத்வகுணம் அபேக்ஷிக்கப்படுகிறதென்னில் அதுவும் உசிதமல்ல, ரஜோகுணமும், தமோகுணமும் அப்படியே யாகையினால் மூன்று குணங்களும் ஒன்றுக்கொன்று ஒத்தாசையாக இருந்துகொண்டேயல்லவோ வாத பித்த கபங்களைப்போல எல்லா

தபடி ச்ரத்தையுண்டாகிறது. அதாவது மனது எப்படிப்பட்ட குணத்தையுடையதோ அப்படிப்பட்ட விஷயத்தைப்பற்றிய ச்ரத்தையே உண்டாகிறது. ‘ஸக்த’ என்னும் பதம் முன்பு சொலப்பட்ட தேஹம் இந்த்ரியம், முதலியவைகளையும் குறிப்பதற்காக. இந்தப் புருஷன் ச்ரத்தையின் மாறுதலாக இருக்கிறான். எந்தப் புருஷன் எப்படிப்பட்ட ச்ரத்தையோடு கூடினவனோ அப்படிப்பட்ட ச்ரத்தையின் மாறுதலாக இருக்

கார்யங்களையும் உண்டாக்குகின்றன. ஆகையினால் இவ்விடத்தில் எல்லா ச்ரத்தைகளுக்கும் பொதுவான காரணமாகச் சொல்லப்பட்ட ஸத்வம் மூன்று குணங்களுடன் சேர்ந்திருக்கிற மனது தான் என்று சொல்லுகிறார்—‘ஸத்வமாவது மனது’ என்று. மனதிற்குத்தக்கபடி என்பதை விவரிக்கிறார்—‘அதாவது மனது’ என்றாரம்பித்து. எந்த விஷயத்தில் ஆசைக்குக்காரணமாகிய வாஸனையை வ்ருத்தி பண்ணக்கூடிய ஸத்வம் முதலிய குணங்களோடு கூடியிருக்கிறதோ என்றர்த்தம். முன்பு ‘தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா’ என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் மனதைக்காரணமாகவுடையதென்று சொல்லப்படுகிறது. இவை இரண்டும் விகல்பமாக ஏற்பட்டதல்ல, வஸ்துவில் விகல்பம் பொருந்தாதாகையினால். புருஷர்கள் வெவ்வேறாகையினால். விகல்பமாகச் சொல்லப்பட்டது என்பதும் பொருந்தாது, ‘ஸர்வஸ்ய’ என்று சொல்லியிருப்பதினால். இவை இரண்டும் சேர்ந்து காரணம் என்பதும் பொருந்தாது, தனித்தனி காரணமென்றேற்படுகிறபடியினால். என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—‘ஸக்த என்னும் பதம்’ என்றாரம்பித்து. ஸாமக்ரிகளில் சேர்ந்த வஸ்துக்களில் அந்தந்த இடங்களில் ஒவ்வொன்றைச் சொல்லியிருப்பது அனுசிதமல்ல என்று தாத்பர்யம். ‘ஸ ஏவ ஸ:’ என்கிற இடத்தில் இருக்கிற ‘ஸ:’ என்னும் விகுதி பகுதியின் அர்த்தத்தைச் சொல்லுவதாக இருந்தால் நிஷ்ப்ரயோஜனமாகையினாலும், நிறைந்தவன் என்கிற அர்த்தத்தைச் சொல்லுவதாக இருந்தபோதிலும் இந்த ஸந்தர்ப்பத்தில் ப்ரயோஜனமில்லையாகையினாலும், ச்ரத்தையின் பலத்தோடு கூடியவன் என்கிற தாத்பர்யத்தை வைத்துக்கொண்டு மாறுதல் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறதென்று சொல்லுகிறார்— ‘ச்ரத்தையின் மாறுதலாக இருக்கிறான்’ என்று. இப்படிப் பொதுவாக ச்ரத்தையினுலுண்டாகிற பலத்தை யடையக் கூடியவன் என்பது சொல்லப்பட்டது. அதில் ‘யோ யச்ச்ரத்த:’ என்றாரம்பித்த வாக்யத்தினால் விசேஷமான ச்ரத்தையுடையவனுக்கு விசேஷ பலம் சொல்லப்படுகிறது

கிறான். அதாவது புண்ய கர்மங்களைப்பற்றிய ஶ்ரத்தையோடு கூடினவ ஞயிருந்தால் புண்யகர்மங்களின் பலங்களோடு கூடினவனுகிறான். ஆகை யினுல் பலத்தையடைவது ஶ்ரத்தையையே ப்ரதான காரணமாகவுடை யது என்று சொல்லப்பட்டது. 3

பா-அ] இத்தையே விவரிக்கிறார்—

யஜந்தே ஸாத்த்விகா தேவாந் யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா: ।
ப்ரேதாந் பூதகணாம்ஶ்சாந்யே யஜந்தே தாமஸா ஜநா: ॥ 4

ப - ரை] ஸாத்த்விகா: - ஸத்வகுணம்மேலிட்டவர்கள், தேவாந் - தேவ தைகளை, யஜந்தே - ஆராதனம் செய்கிறார்கள், ராஜஸா: - ரஜோகுணம் மேலிட்டவர்கள், யக்ஷரக்ஷாம்ஸி - யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் (ஆராதனம் செய்கிறார்கள்), அந்யே - வேறு, தாமஸா: - தமோகுணம் மேலிட்ட, ஜநா: - ஜனங்கள், ப்ரேதாந் – பிணங்களையும், பூதகணாம்ஶ்ச - பூதங்களின் கூட்டங்களையும், யஜந்தே - ஆராதனம் செய் கிறார்கள். 4

என்று சொல்லுகிறார்—'அதாவது புண்ய கர்மங்களை' என்றாரம்பித்து. வேறான ஶ்ரத்தையின் ஸ்வபாவங்கள் இதற்கில்லை என்று தெரியப்படுத்துவதற்காக 'யத்' என்னும் பதத்திற்கு 'எப்படிப்பட்ட' என்று ஸ்வபாவத்தைச்சொல்லுகிறபதத்தினுல் வ்யாக்யானஞ்செய்யப்பட்டது. 'ஸர்வம் ப்ரஹ்மம்' என்றிவை முதலியவைகளைப்போல கார்யமாயும் காரணமாயுமிருக்கிறது என்கிற தாத்பர்யத்தினுல் 'ஸ ஏவ ஸ:' என்று ஆரோபித்திருக்கிறது என்று சொல்லுகிறார்—'அவன் அப்படிப்பட்ட ஶ்ரத்தையின்மாறுதலாகஇருக்கிறான்' என்று. இத்தால் 'ஸ ஏவ ஸ:'(அவனே அவன்)' என்கிற இடத்தில் உத்தேசிக்கப்படுகிறதற்கும் விதிக்கப்படுகிறதற்கும் பேதமில்லாமையினுல் புனருக்தி வருகிறது, என்னும் ஆக்ஷேபமும் பரிஹரிக்கப்பட்டது. ஜீவாத்மா நித்யமாகையினுலும், தர்மபூத ஜ்ஞானத்தின் பரவுதல் முதலியது இந்த்ரியங்களின் வழியாக ஏற்பட்டிருப்பதினுலும், தேஹம் முதலியவை அசேதனத்தின் மாறுதல்களாகையினுலும், ஶ்ரத்தையின் மாறுதல் என்று சொல்லியிருப்பது எந்த அம்ஶத்தைக் குறித்து? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானஞ்சொல்லுகிறார்—'புண்ய கர்மங்களைப் பற்றிய' என்று. பலங்களின் பேதத்தை அறியவேண்டும் என்கிற ஆசையினுலல்லவோ இவ்விடத்தில் கேழ்வை உண்டாயிருக்கிற தென்று தாத்பர்யம். 5

பா] ஸத்வகுணம் நிறைந்தவர்கள் ஸத்வகுணம் மேலிட்ட ஶ்ரத்தை யோடு கூடினவர்களாய்த் தேவதைகளை ஆராதனஞ் செய்கிறார்கள். துக்கத்தோடு ஸம்பந்தப்படாத உயர்ந்த ஸுகத்திற்குக் காரணமாகிய தேவதைகளைக்குறித்து ஆராதனத்தைப்பற்றிய ஶ்ரத்தையானது ஸாத்விகம் என்று சொல்லப்பட்டதாகிறது. ரஜோகுணம் மேலிட்டவர்கள் யக்ஷகளையும் ராக்ஷஸர்களையும் ஆராதனம் செய்கிறார்கள். மற்றவர்களாகிய தமோகுணம் மேலிட்ட ஜனங்கள் ப்ரேதங்களையும் பூத கணங்களையும் ஆராதனம் செய்கிறார்கள். துக்கத்தோடு கலந்த அல்பஸுகத்தையுண்டு பண்ணுகிறது ரஜோகுணம் மேலிட்ட ஶ்ரத்தை, துக்கம் நிறைந்த மிகவும் அல்பஸுகத்தை யுண்டுபண்ணுகிறது தமோகுணம்மேலிட்ட ஶ்ரத்தை என்றர்த்தம். 4

தா] ஆரம்பிக்கப்பட்ட ஶ்ரத்தையினுடைய ஸாத்விகம் முதலிய பிரிவுகள் ஸாத்விக, ராஜஸ, தாமஸ ஶ்ரத்தைகளைச் செய்யக் கூடிய விஷயங்களைக் கொண்டு அடுத்த ஶ்லோகத்தில் நிரூபிக்கப் படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இத்தையே விவரிக்கிறார்' என்று. 'இத்தையே' என்பதற்குப் பல விஶேஷங்கள் ஶ்ரத்தையின் விஶேஷங்களைக் காரணமாக வுடையது என்பதை என்றர்த்தம். புருஷனுக்கு ஸத்வம் முதலிய குணங்கள் வ்ருத்தி யடைந்தவைகளாய் தங்களுக்குத் தகுந்த விஷயங்களில் ஶ்ரத்தையை யுண்டுபண்ணுகின்றன என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஸத்வகுணம் நிறைந்தவர்கள்' என்றாரம்பித்து. எல்லா வஸ்துக்களும் மூன்று குணங்களையுமுடையவைகளா யிருக்க ஒரு குணத்தைக் கொண்டு விஶேஷமாகச் சொல்லி யிருப்பது அந்தக்குணம் நிறைந்திருப்பதினால். 'அதில் ஸத்வகுணம் மேலிட்ட ஶ்ரத்தையில்' என்பது புருஷர்கள் ஸத்வ குணம் மேலிட்டவர்கள் என்று சொல்லி யிருப்பதினால் ஏற்பட்ட காரணத்தைச் சொல்லி யிருக்கிறது. ஶ்ரத்தையே இங்கு குறிக்கப்பட்டிருப்பதினாலும் 'தாமஸா' என்று சொல்லப்பட்ட ஶ்ரத்தையின் ஸ்வபாவத்தை நிரூபிப்பதில் தாத்பர்யம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'துக்கத்தோடு ஸம்பந்தப்படாத' என்றாரம்பித்து. ஆராதிக்கப் படுகிற தேவதைகளுடன் ஸாயுஜ்யத்தை யடைவதல்லவோ ஆராதிக்கிறவர்களுக்குப் பலம் என்கிற அபிப்ராயத்தினால் 'துக்கத்தோடு ஸம்பந்தப்படாத' என்றிவை முதலியது சொல்லியிருக்கிறது. இப்படியே மேலும் கண்டுகொள்ளுவது. தமோகுணம் மேலிட்டவர்களுக்கு மற்றவர்களை விட மிகவும் வ்யத்யாஸத்தைத் தெரிவிப்பதற்காக 'ஜநாஃ' என்னும் பதம். பூதங்களின் கூட்டமாவது ருத்ரனின் பார்ஷத கணங்கள்.

பா - அ] இப்படி ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டவைகளாயும் ஶ்ரத்தையோடு கூடியவைகளாயுமிருக்கிற யாகம் முதலியவைகளில் ஸத்வம் முதலிய குணங்களினால் பல விஶேஷமுண்டாகிறது. ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படாத தபஸ்ஸு, யாகம், முதலியவைகளில் என்னுடைய உத்திரவிற்கு விரோதமாக இருப்பதினால் ஒருவிதமான அல்பஸுகமும் இல்லை, அநிஷ்டமே உண்டாகிறது என்று மனதில் நினைக்கப்பட்ட அர்த்தத்தை ப்ரகாசம் செய்து கொண்டு சொல்லுகிறார்—

அஶாஸ்த்ரவிஹிதம் கோரம் தப்யந்தே யே தபோ ஜநா: |
தம்பாஹங்காரஸம்யுக்தா: காமராகபலாந்விதா: || 5

கர்ஶயந்த: ஶரீரஸ்தம் பூதக்ராமமசேதஸ: |
மாம் சைவாந்த:ஶரீரஸ்தம் தாந்வித்த்யாஸுரநிஶ்சயாந் || 6

ப - ரை] யே-எந்த, ஜநா: - ஜனங்கள், அஶாஸ்த்ரவிஹிதம்- ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படாத, கோரம் - அதிக்க்ரூரமான, தப: - தபஸ்ஸை, தம்பாஹங்காரஸம்யுக்தா: — டம்பம், அஹங்காரம். இவைகளோடு கூடினவர்களாயும், காமராகபலாந்விதா: - காமம், ராகம், பலம், இவைகளோடு கூடினவர்களாயும், அசேதஸ: - புத்தியில்லாதவர்களாயும், ஶரீரஸ்தம் - தேஹத்திலிருக்கிற, பூதக்ராமம் - பஞ்சபூதங்களின் கூட்டத்தை, கர்ஶயந்த: - கஷ்டப்படுத்திக்கொண்டு, அந்த:ஶரீரஸ்தம் - ஶரீரத்திற்குளேயிருக்கிற, மாம் ச ஏவ - என்னுடைய அம்ஶமாகிய ஜீவாத்மாவையும், கர்ஶயந்த: - கஷ்டப்படுத்திக்கொண்டு, தப்யந்தே - செய்கிறார்களோ, தாந் — அவர்களை, ஆஸுரநிஶ்சயாந் - அஸுரர்களின் நிஶ்சயத்தை யுடையவர்களாக, வித்தி — அறி. 5-6

தா] இப்படித்தாத்பர்யத்தினால் கேழ்வைக்குப்பதில் சொல்லப்பட்டது. பிறகு நேரிலேயே சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 1 'நவிந்தம்' என்றாரம்பித்து முன் சொல்லியிருப்பதை ஜ்ஞாபகப்படுத்துவதற்காக 'ஒருவிதமான அல்பஸுகமுமில்லை' என்று சொல்லப்பட்டது. 'அநிஷ்டம் உண்டாகிறது' என்பதினால் முன்பு நரகத்தில் விழுகிறார்கள் என்று சொல்லியிருப்பது ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. கேழ்வையிலிருக்கிற ஶ்ரத்தையோடு கூடியவர்களாய் என்பதை அனுவாதம் செய்வதில் தாத்பர்யத்தினால் ஶ்ரத்தையினாலுண்டாக்கப்படுகிற அதிக ஶ்ரமத்தைச் சொல்லுகிறது 'கோர' என்னும் பதம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லு

1. பகவத்கீதை - 16 - 23

பா] ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படாத மிகவும் க்ரூரமாகிய தபஸ்ஸையும் எவர்கள் செய்கிறார்களோ. இது மற்றவைகளையும் குறிப்பதற்காக. ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படாத மிகவும் ஶ்ரமத்துடன் செய்யக்கூடிய யாகம், முதலியவைகளையும் எவர்கள் செய்கிறார்களோ, டம்பம், அஹங்காரம் காமம் ராகம் பலம், இவைகளோடு கூடினவர்களாயும் ஶரீரத்திலிருக்கிற ப்ருதிவீ முதலிய கூட்டத்தைக் கஷ்டப்படுத்திக்கொண்டும், ஶரீரத்திற்குள்ளேயிருக்கிற என்னுடைய அம்ஶமாகிய ஜீவாத்மாவையும் கஷ்டப்படுத்திக்கொண்டும்

கிறார்—'மிகவும் க்ரூரமாகிய' என்று. '[illegible]' என்று யாகத்தைப் பற்றிக்கேட்டிருக்கும்பொழுது தபஸ்ஸை செய்கிறார்கள் என்று தபஸ்ஸைப்பற்றிப் பதில் சொன்னது எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இது மற்றவைகளையுங்குறிப்பதற்காக' என்று. அப்படிச் சேர்த்துச் சொல்லக்கூடிய ஆகாரத்தைக் காட்டிக்கொண்டு சொல்லுகிறார்—'ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படாத' என்றாரம்பித்து. வேதபாஹ்யர்களுடைய ஆகமங்களில் சொல்லப்பட்டதும், வேதத்தில் சொல்லப்பட்டதாயிருந்தபோதிலும் அதிகாரமில்லாதவர்களால் இடம், காலம், த்ரவ்யம் க்ரியைகள், முதலிய நியமங்களை அலக்ஷியம் செய்து ஶாஸ்த்ரத்தில் சொல்லியபடி யல்லாமல் அனுஷ்டிக்கப்பட்டதும், இங்கு ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படாதவை. பயங்கரம் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிற 'கோர' என்னும் பதத்தின் தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்— 'மிகவும் ஶ்ரமத்துடன்' என்றாரம்பித்து. 'யாகம், முதலியவைகளை' என்பதினால் கேள்வியில் யாகத்தைச் சொல்லியிருப்பதும் மற்றவைகளைக் குறிப்பதற்காக என்று தெரிவிக்கப்பட்டது. ஆகையினாலல்லவோ கேள்வியும் பதிலும் ஒரே விஷயத்தைப் பற்றியதாகும் ஶாஸ்த்ரங்களினால் உத்திரவு செய்யப்படாதவைகளைப் பற்றி உத்திரவு செய்கிற வேறு வஸ்து சொல்லப்படுகிறது—'டம்பம், அஹங்காரம்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் பலம், காமம் ராகம் இவைகளோடு கூடியிருக்கிறபடியினால் ஸத்வகுணம் மேலிட்டதல்ல, 1 'பலம் பலவதாம் சாஹம் காமராகவிவர்ஜிதம்' என்றல்லவோ முன்பு சொல்லப்பட்டது. பரலோகத்தில் நரகம் மாத்திரமில்லை, பின்னை எதுவென்னில் இந்தலோகத்திலும் ஶரீரத்திற்குக்கஷ்டமும் உண்டாகிறது என்கிற அபிப்ராயத்தினால் 'ஶரீரத்திலிருக்கிற' என்றாரம்பித்துச் சொல்லியிருக்கிறது 2 'அந்தர்யாமியாக அழிவில்

---

1. பகவத்கீதை - 13 - 11
2. ப்ருஹதாரண்யகம் - 5 - 1 - 3

கள் தபஸ்ஸை செய்கிறார்களோ, யாகம், முதலியவைகளையும் செய்கிறார்களோ, அவர்களை அஸுரர்களின் நிஶ்சயத்தையுடையவர்களாக அறி- அஸுரர்கள் என்னுடைய உத்தரவிற்கு விரோதமாகச் செய்கிறபடியி ளுல் அவர்களுக்கு அஸ்ப்ருஶ்யகத்தின்ஸம்பந்தமும் இல்லை பின்னை எத்தே

லாமலுமிருக்கிற' என்றும், 1 'வேறொருவனாகிய பாமாத்மா கர்ம பலங்களையனுபவிக்காமல் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறான்' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களிருக்கிறபடியினாலும், 2 'ந ஸ்தாநதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி' என்றிவை முதலிய ப்ரமாணங்களிருப்பதினாலும் பரமாத்மாவிற்கு ஸ்வரூபத்திலாவது ஸ்வபாவத்திலாவது கஷ்டம் ஸம்பவிக்காததாகையினாலும், அப்படி ஸம்பவிப்பதாயிருந்தால் ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படுகிற உபவாஸம் முதலியவைகளாலும் கஷ்டம் ஸம்பவிக்கக் கூடுமாகையினாலும், ஶரீரத்தைக் கஷ்டப்படுத்துவதினால் அந்தச் ஶரீரத்தையுடைய ஜீவாத்மாவிற்கு ஜ்ஞானம், ஸுகம், முதலியவைகள் சுருக்கத்தையடைவதாகிய கஷ்டம், ஶ்ருதி, ஸ்ம்ருதி, லோகானுபவம், இவைகளிலேற்பட்டிருப்பதினாலும், 'ஶரீரஸ்தம்' என்பதினால் ஶரீரத்திற்குள்ளடங்கிய ஜீவாத்மா என்பது தெரிவிக்கப்படுகிற படியினாலும், 3 'க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி', 4 'மமைவாம்ஶ:' என்று முன் சொல்லிய விதமாக எல்லாவற்றையும் ஶரீரமாக உடைய பரமாத்மாவிற்கு விஶேஷணமான அம்ஶமாகிய ஜீவாத்மாவைச் சொல்லுகிறது இவ்விடத்தில் 'மாம்' என்னும் பதம் என்று சொல்லுகிறார்— 'என்னுடைய அம்ஶமாகிய ஜீவாத்மாவையும்' என்று. எனக்குச் ஶரீரமாகிய ஜீவனைக் கஷ்டப்படுத்துவது என்னைக் கஷ்டப்படுத்துவதற்கு ஸமானம் என்று அதிக தோஷத்தைத் தெரிவிப்பதற்காக இப்படி உபசாரமாகச் சொல்லியிருக்கிறது. ஶாஸ்த்ரத்தை மீறி நடப்பதினால் ஆத்மாவைப் பீடித்துக் கொள்ளுகிறதாகிய பாபமும் இவர்களுக்குண்டாகிறது என்றபிப்ராயம். யஜ்ஞமாவது தேவதையைப் பற்றிய ஆராதனமாகையினால் ஶாஸ்த்ரத்தில் சொல்லிய விதமாக இல்லாமற் போன போதிலும் அதிகக் குறைவில்லை தபஸ்ஸோவெனில் ஸ்வபாவத்திலே

---

1. முண்டகோபநிஷத் - 3 - 1 - 1

2. ஶாரீரகஸூத்ரம் - 3 - 2 - 11 - பரஸ்ய - பாமாத்மாவிற்கு, ஸ்தாநதோபி- இடத்தினாலும், ந-(தோஷங்கள் உண்டாகிறது), இல்லை, ஹி - எந்தக் காரணத்தினால் அந்தப் பரமாத்மா, ஸர்வத்ர – எல்லா இடங்களிலும், உபய லிங்கம் - இரண்டுவித ஸ்வபாவமுடையதோ.

3. பகவத்கீதை - 13 - 2

4. பகவத்கீதை - 15 - 7

ன்னில் அநிஷ்டங்களின் கும்பல்களில் விழுகிறார்கள் என்று 'பதந்தி நரகேஶுசௌ' என்பதினால் முன்னமேயே சொல்லப்பட்டது. 5-6

பா - அ] பிறகு கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்டதாகிய ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட யஜ்ஞம், முதலியவைகளில் ஸத்வம் முதலிய குணங்களினால்

பேத எல்லாவற்றையும் கஷ்டப்படுத்துவதாகையினால் சொல்லிய விதமாக இல்லாவிடில் ஒரு தேவதைக்கு ப்ரீதியைக் கொடுக்கக்கூடியதாக ஆகாது என்று சில குயுக்திகளைச் சொல்லுகிறவர்கள் நினைத்திருப்பதை நிராகரிப்பதற்காகச் சொல்லுகிறார்—'யாகம், முதலியவைகளையும்' என்று. எவர்களுக்கு அஸுரர்களினுடையதாகிய நிஶ்சயம் இருக்கிறதோ அவர்கள் 'ஆஸுர நிஶ்சயா:'. அதில் அஸுரர்களினுடைய என்பது அவர்களுடைய ஸம்பந்தத்தை மாத்திரம் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'அஸுரர்களின்' என்றாரம்பித்து. அதினால்கொள்ளப்பட்ட நிஶ்சயத்தின் விசேஷத்தை ப்ரகாசப்படுத்துவதற்காகச் சொல்லுகிறார்—'அஸுரர்கள்' என்றாரம்பித்து அஸுரர்களின் நிஶ்சயத்தையுடையவர்கள் என்று சொன்னது முன்பு சொல்லப்பட்ட அநிஷ்டத்தில் முடிவு பெறுகிறதென்று தெரிவிப்பதற்காக என்று சொல்லுகிறார்—'என்னுடைய உத்தரவிற்கு' என்றாரம்பித்து. அஸுரர்களினுடைய நிஶ்சயத்தையுடையவர்கள் என்றிவ்வளவு சொன்னதினால் இந்த அர்த்தம் எப்படி ஏற்படும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'முன்னமேயே' என்றாரம்பித்து. 5-6

இப்படி அஶாஸ்த்ரீயமான கர்மங்களிற்குப் பலமில்லை என்கிற பதில் தாத்பர்யத்தினாலும் நேரிலும் சொல்லப்பட்ட பிறகு ஆஹாரம், முதலியவைகள் மூன்றுவிதம் என்று சொல்லியிருப்பது கேழ்க்கப்படாத அர்த்தத்தைப் பற்றி உபந்யாஸம் செய்ததாக ஆகுமே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'பிறகு' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது—ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படாத கார்யங்களில் ஸத்வம் முதலிய நிஷ்டைகளைக் காரணமாகவுடைய பலங்களின் பேதம் கேழ்க்கப்பட்டிருக்கும்பொழுது ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட கார்யங்களிலேயே இது என்று பதில் சொல்லப்பட்டது. அவ்விடத்தில் ஶ்ரத்தைக்கும், அதைச் செய்கிறவர்களுக்கும், ஶ்ரத்தை வைக்கக்கூடிய கார்யங்களுக்கும் ஸத்வம் முதலிய குணங்களினால் பிரிவு சொல்லப்பட்டது. அதைக்கேட்டதினாலேயே இதற்கு ஸமானங்களாகிய எல்லா வஸ்துக்களையும்பற்றி அறியவேண்டுமென்கிற ஆசை அர்ஜுநனுக்கு உண்டாகிறது, ஆகை

வ்யத்யாஸத்தை விஸ்தாரமாக நிரூபிக்கிறார். அதில் ஸத்வம் முதலிய குணங்கள் வ்ருத்தியடைவது ஆஹாரத்தைக் காரணமாகவுடையதாகை யினால் ஆஹாரம் மூன்றுவிதமென்பது முதலில் சொல்லப்படுகிறது. * 'ஸௌம்யனே! மனது ஆஹாரத்தின் பரிபாகமானதல்லவா' என்றும், † 'ஆஹாரம் சுத்தமாயிருந்தால் ஸத்வகுணத்திற்கு சுத்தி யுண்டாகிறது' என்று மர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்கள் சொல்லப்படுகின்றன அல்லவா—

ஆஹாரஸ்த்வபி ஸர்வஸ்ய த்ரிவிதோ பவதி ப்ரிய: ।
யஜ்ஞஸ்தபஸ்ததா தானம் தேஷாம் பேதமிமம் ஶ்ருணு ॥ 7

ப - ரை] ஸர்வஸ்ய - எல்லா ப்ராணிகளுக்கும், த்ரிவித: - மூன்று விதமான, ஆஹார: - ஆஹாரம், ப்ரிய: - இஷ்டமாக, பவதி - ஆகிறது, ததா - அப்படியே, யஜ்ஞ: - யாகமும், தப: - தபஸ்ஸும், தானம் - தானமும், (மூன்றுவிதமானது), தேஷாம் - அவைகளினுடைய, இமம் - இந்த, பேதம் - வ்யத்யாஸத்தை, ஶ்ருணு - கேள். 7

யினால் அவைகளின் பேதத்தை உபந்யாஸம் செய்திருக்கிறது—என்பது. 'விஸ்தாரமாக நிரூபிக்கிறார்' என்பதினால் புனருக்தி வருகிறதே என்கிற ஆக்ஷேபமும் பரிஹரிக்கப்பட்டது. யஜ்ஞம், தபஸ்ஸு, முதலிய ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படுகிற கார்யங்கள் இருக்கத் தன்னைசயினால் செய்யக்கூடியதாகிய ஆஹாரத்தைப்பற்றி முதலில் உபதேசம் செய்திருப்பது எந்த அபிப்ராயத்தினால் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'அதில்' என்றாரம்பித்து. 1 'வ்ருத்திஸ்ஸமானை: ஸர்வேஷாம் விபரீதைர்விபர்யய:' என்று ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கிற ந்யாயத்தை அனுஸரித்து வ்ருத்தி செய்யக்கூடிய வஸ்துக்களின் குணங்களுக்குத் தக்கபடி மனது முதலியவைகளுக்கு ஸத்வம் முதலியவைகள் வ்ருத்தியடைகின்றன என்பது ஶ்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் 'ஸௌம்யனே' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆஹாரத்திற்கும் ஸத்வகுணத்திற்கும் சுத்ியாவது இவ்விடத்தில் ரஜோகுணம் தமோகுணம் இல்லாமை. 'அபி' என்னும் பதம் முன் சொல்லப்பட்ட ஶ்ரத்தை வைக்கக்கூடிய தேவதை முதலியவைகளின் பேதங்களைப்போல

* சாந்தோக்யம் - 3 - 5 - 4. † சாந்தோக்யம் - 7 - 26 - 2

1 அஷ்டாங்க ஹ்ருதயம் - ஸர்வேஷாம் - எல்லா தாதுக்களுக்கும், ஸமானை: - ஸமமான குணமுள்ள வஸ்துக்களினால், வ்ருத்தி: வ்ருத்தியும், விபரீதை: - விபரீதமான குணமுடைய வஸ்துக்களினால், விபர்யய: - குறைவும் உண்டாகிறது.

பா] எல்லா ப்ராணிகளுக்கும் ஸத்வம் முதலிய மூன்று குணங்களுடன் சேர்ந்திருப்பதினால் மூன்றுவிதமாகிய ஆஹாரம் இஷ்டமாக இருக்கிறது. அப்படியே யஜ்ஞமும் மூன்றுவிதம். அப்படியே தபஸ்ஸும், தானமும். அந்த ஆஹாரம், யஜ்ஞம், தபஸ்ஸு, தானம், இவைகளுக்கு ஸத்வம், முதலிய குணங்களின் பிரிவினால் மேலே சொல்லப்படுகிற பேதத்தைக் கேள். 7

ஆயுஸ்ஸத்த்வபலாரோக்யஸுகப்ரீதிவிவர்த்தநா: ।
ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா ஹ்ருத்யா ஆஹாரா: ஸாத்த்விகப்ரியா: ॥

ப-ரை] ஆயுஸ்ஸத்த்வபலாரோக்யஸுகப்ரீதிவிவர்த்தநா:—ஆயு:-ஆயுஸ்ஸு, ஸத்த்வம்—ஜ்ஞானம், பலம்-பலம், ஆரோக்யம்-ரோகமில்லாமை, ஸுகம்—ஸுகம், ப்ரீதி-ஸந்தோஷம், இவைகளை, விவர்த்தநா:-வ்ருத்திசெய்யக் கூடியவைகளாயும், ரஸ்யா:-ருசியுள்ளவைகளாயும், ஸ்நிக்தா:-மழமழப்புள்ளவைகளாயும், ஸ்திரா:-உறுதியானவைகளாயும் ஹ்ருத்யா:-ரமணீயங்களுமாயிருக்கிற, ஆஹாரா:-ஆஹாரங்கள், ஸாத்த்விகப்ரியா:-ஸத்வகுணம் மேலிட்ட புருஷர்களுக்கு ப்ரியமானவைகள். 8

வே ஸாத்விகம், முதலிய பேதங்கள் இதிலும் உண்டு என்று தெரிவிப்பதற்காக. [1] ‘வைச்வாநரம் சதுர்விதம்’ என்று முன்பு சொல்லப்பட்ட நான்குவிதமாய் இருப்பதோடு விரோதம் வாராமைக்காக நான்குவிதமாகிய அந்த ஆஹாரத்திலும் ஸத்வம் முதலிய குணங்களாலுண்டாகிய மூன்றுவிதமான பிரிவு இவ்விடத்தில் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘ஸத்வம், முதலிய குணங்களுடன் சேர்ந்திருப்பதினால்’ என்று. மூன்றுவிதம் என்று பொதுவாகப் பிரித்திருந்தபோதிலும் விசேஷமாக மேலே சொல்லப்போகிறதை எதிர்பார்த்து இங்கே இப்படி அர்த்தம் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—‘ஸத்வம் முதலிய குணங்களின் பிரிவினால் மேலே சொல்லப்படுகிற’ என்று. மேலே சொல்லப்போகிறது மிகவும் ஸமீபத்திலிருப்பதினால் நிகழ்காலமாகச் சொல்லியிருக்கிறது என்று சொல்லுகிறார்—‘சொல்லப்படுகிற’ என்று. ஸத்வம், முதலிய குணங்கள், தன்னோடு சேர்ந்திருக்கும் வஸ்துக்களை அனுபவிப்பதினால் உண்டாக்கப்பட்ட வாஸனைகளின் வழியாகத் தங்களுக்குத் தகுந்த விஷயங்களில் ஆசையையுண்டாக்குகிறபடியினால் அந்தந்த ஆஹாரங்கள் அந்தந்தக் குணங்களையுடையவர்களுக்கு ப்ரியங்களாகின்றன. 7

---

1. பகவத்கீதை - 15 - 14.

பா] ஸத்வ குணத்தோடு கூடினவனுக்கு ஸத்வ குணம் நிறைந்த ஆஹாரங்கள் ப்ரியங்களாகின்றன. ஸத்வகுணம் நிறைந்த ஆஹாரங்கள் ஆயுஸ்ஸை வ்ருத்தி செய்யக்கூடியவைகள். மறுபடியும் ஸத்வத்தை வ்ருத்தி செய்யக்கூடியவைகள். ஸத்வமாவது மனது. மனதினால் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானம் இவ்விடத்தில் 'ஸுக' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. ‡ 'ஸத்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்' என்கிறபடியே ஸத்வகுணம்

தா] ஆயுஸ்ஸை வ்ருத்தி செய்யக்கூடியதாயிருக்கை முதலிய ஆஹாரத்தின் சில குணங்கள் ஆயுர்வேதத்தினால் அறியத்தக்கவைகள். சில குணங்கள் ஶாஸ்த்ரம் வேண்டியதில்லாமல் ப்ரத்யக்ஷத்திலே ஏற்பட்டவைகள். முன்பே ஸத்வகுணம் வ்ருத்தியடைந்திருப்பதினாலல்லவோ ஸத்வகுணம் மேலிட்ட ஆஹாரத்தில் ஆசையுண்டாகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'மறுபடியும்' என்று. ஆயுஸ் ஸு எல்லா ப்ரயோஜனங்களையும் ஸம்பாதிப்பதற்கு உபயோகமுள்ளதாகையினால் அதை முதலில் சொல்லியிருக்கிறது. ஸத்வகுணமோவெனில் விஶேஷமாக மோக்ஷத்தை ஆசைப்படுகிறவனுக்கு வேண்டியதாகையினால் அதற்கப்புறம் சொல்லியிருக்கிறது. 1 'ஆஹாரம் சுத்தமாயிருந்தால் ஸத்வத்திற்கு சுத்தியுண்டாகிறது. ஸத்வம் சுத்தமாக இருந்தால் இடைவிடாத த்யானம் உண்டாகிறது' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தின் அர்த்தத்தை விசதப்படுத்துவதற்காகச் சொல்லியிருப்பதினால் இங்கு ஆஹாரத்தினாலுண்டாகிய ஸத்வகுணத்தின் வ்ருத்தியாவது ஜ்ஞானம்வரையில் முடிவுபெறுகிறது என்கிற அபிப்ராயத்தினால் 'ஸுக' என்னும் பதம் ஜ்ஞானத்தை உபசாரமாகச் சொல்லுகிறது என்று தெரிவிப்பதற்காக அதின் காரணத்தைச் சொல்லுகிறதென்று சொல்லுகிறார்—'ஸத்வமாவது மனது' என்று. 2 'ஊர்த்வ்யா ஸு வ்யவஸாயேஷு ஸுகேஷு ஶ்ரீ த்ஜஞேஷு'என்று ஒருவித ஜ்ஞானத்திலும் ஸத்வம் என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'மனதினால் உண்டாக்கப்படுகிற' என்றாரம்பித்து. 'இவ்விடத்தில்' என்பதற்கு மேல் சொல்லிய ஶ்ருதியினர்த்தத்தை விசதப்படுத்தும் ஸமயத்தில் என்றர்த்தம். அந்தந்த வஸ்துக்களிலிருக்கிற ரஸம் முதலியவைகள் ஶரீரத்திலிருக்கும் தாதுக்களை வ்ருத்தி செய்கிறபடியினால் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற அந்தந்த வஸ்துக்களையும் எப்படி அவ்விதமாகவே சொல்லபடுகிறதோ அப்படியே இவ்விடத்திலும் ஸத்வகுணம் ஜ்ஞான வ்ருத்தியடைவதற்

‡ பகவத்கீதை - 14 - 17

1 சாந்தோக்யம் - 7 - 26 - 2 2 ஶாபலிங்காநுஶாஸநம்.

ஜ்ஞானம் வ்ருத்தியடைவதற்குக் காரணமாகையினால் ஸத்வகுணம் நிறைந்த ஆஹாரமும் ஜ்ஞானம் வ்ருத்தியடைவதற்குக் காரணம். அப்படியே பலம், ஆரோக்யம், இவைகளையும் வ்ருத்தி செய்யக்கூடியவைகள். அப்படியே ஜீர்ணமாகும் காலத்தில் தானாகவே ஸுகத்தை வ்ருத்தி செய்யக்கூடியவைகள். அப்படியே ப்ரீதிக்குக் காரணங்களாகிய கர்மங்களை

குக் காரணமாகையினால் அதற்கு ஆதாரமாகிய ஆஹாரமாயிருக்கும் வஸ்துவையும் அப்படியே சொல்லியிருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஸத்வா ஸூம்ஜாபகே ஆஹாரம்' என்றாரம்பித்து. பலம், ஆரோக்யம், இவைகளையும், ஸுகம், ப்ரீதி, இவைகளையும், சேர்த்துச் சொல்லியிருப்பது இவைகள் இரண்டும் சேர்ந்து உண்டாகிற படியினால் ஒன்றுக்கொன்று பிரிவதில்லை என்கிற தாத்பர்யத்தினாலே, என்கிற அபிப்ராயத்தினால் 'அப்படியே பலம், ஆரோக்யம்' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டது. பலமாவது இவ்விடத்தில் ப்ராணவாயு, ஜாடராக்னி, இவைகளின் வ்ருத்தி. ஆரோக்யமாவது தாதுக்கள் ஸமமாக இருப்பது. கர்மங்களின் தோஷத்தினாலும் அக்னி, தாதுக்கள், இவைகளின் வ்யத்யாஸத்தினாலுமல்லவோ ரோகங்கள் உண்டாகின்றன. அந்த ஆஹாரம் ருசியாயிருக்கையாலும் அழகான ரூபத்தை யுடைத்தாயிருக்கையாலும், தத்காலத்தில் ஸுகத்தை உண்டுபண்ணுகிறது என்பது ஏற்பட்டபடியினால் அக்கோர புனருக்தியைப் பரிஹரிப்பதற்காக 'ஸுகத்தை வ்ருத்திசெய்யக்கூடியவைகள்' என்பதற்கு 'ஜீர்ணமாகும் ஸமயத்தில்' என்னும் விசேஷணம் சொல்லப்பட்டது. 'ப்ரீதியை வ்ருத்திசெய்விக்கக்கூடியவைகள்' என்பதை விட வ்யத்யாஸத்தைக்காட்டுவதற்காக 'தானாகவே' என்பதினால் வேறொன்றின் வழியாக அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி மபக்கம் முதலியவைகளுக்குக்காரணங்களாகிய வஸ்துக்கள் ஸாப்பிடப் பட்டதுகளாய்க் கொண்டு லோகத்திற்குப் பயம், முதலியவைகளை உண்டாக்கக்கூடிய கர்மங்களில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்து அதின் வழியாகப் புருஷனுக்கு அப்ரீதியை வ்ருத்திசெய்கின்றனவோ அப்படியே ஸத்வகுணத்திற்குக் காரணமாகிய ஆஹாரங்களும் மங்களகரங்களாயும், லோகங்களுக் குபகாரங்களாயும், பரலோகம் முதலியவைக்ளுக்குக் காரணங்களாயுமிருக்கிற கர்மங்களில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்து அதின் வழியாக ப்ரீதியை உண்டு பண்ணுகின்றன என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ப்ரீதிக்குக் காரணங்களாகிய கர்மங்களை' என்றாரம்பித்து. 'கட்வம்ல' என்றிவை முதலியவைகளினால் மற்ற ரஸங்கள் ஸாத்விகங்களல்ல என்று சொல்லப்போகிறபடியி

ஆரம்பிப்பதை முன்னிட்டு அதின் வழியாக ப்ரீதியை வ்ருத்தி செய்விக்கக்கூடியவைகள். ரஸ்யா:—மதுர ரஸத்தை யுடையவைகள். ஸ்நிக்தா: - மழமழப்பை உடையவைகள். ஸ்திரா: - உறுதியான மாறுதலை யுடைய

ஞாலும், 'ரஸ' என்னும் பதம் அதிகமாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதை அனுஸரித்துப் இவ்விடத்தில் ரஸ' என்னும் பதம் விஶேஷமான ரஸத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'மதுர ரஸத்தை யுடையவைகள்' என்று. இதால் 'ரஸ' என்னும் பதத்தின் பேரிலிருக்கும் விகுதி ஸம்பந்தம் மாத்திரத்தைச் சொல்லுகிறது என்பதும் தெரிவிக்கப்பட்டது. 'ரஸ்யந்தே (இச்சிக்கப் படுகின்றன)' என்கிற வ்யுத்பத்தியினாலாவது 'ரஸ்யா:' என்னப்படுகின்றன. அதில் மதுர ரஸத்தை யுடையவைகள் என்று காரணத்தைச் சொல்லி யிருக்கிறது. மதுர ரஸமல்லவோ மற்ற ரஸங்களை விடச் ஶரீரம் நிலைத்திருப்பதற்கு விஶேஷமான காரணமாகிறது. அப்படியே பாஹடனால் 1 'ரஸாஸ்ஸ்வாத்வம்ல லவண திக்தோஷண கஷாயகா:| ஷட்த்ரவ்யமாஶ்ரிதாஸ்தே ச யதாபூர்வம் பலாவஹா: ||' என்று சொல்லப்பட்டது. வ்யாதியில்லாமல் இருப்பவனுக்கு மதுர ரஸம் நிறைந்ததாகிய ஆஹாரம் வேண்டும் என்றும் 2 'ஷட்ரஸாந் ஸேவேத ஸ்வாத்வாத்யாந் நாதித்ருத விலம்பிதம்' என்று சொல்லப்படுகிறது. ரஸாயனம் முதலிய கல்பங்களிலும் மதுர ரஸம் ஒன்றே விதிக்கப்படுகிறது. இப்படியே மழமழப்பை உடைய ஆஹாரமும், க்ரூரமாயிருக்கைக்கு விரோதமானது. ஆகையினால் க்ரூரமான காற்றினால் ஶரீரம் சிதறிப் போகாமல் தடுக்கிறது என்று ஆயுர் வேதத்தைக் கொண்டறியப்பட்டது. ஸாப்பிடப்படுகிற ஆஹாரத்தில் ஸ்வரூபம் ஸ்திரமாக இருப்பதென்பது ஸம்பவிக்காதாகையினாலும், அது குணமல்லவாகையினாலும், ஶரீரமென்று பேருடைய சேர்க்கை ஸ்திரமாயிருப்பதற்குக் காரணமாகிய ரஸங்கள், ரக்தம், மாம்ஸம், உயிர்த் தண்ணி, எலும்பு, சீழ், சுக்கிலம், என்று பேருடைய ஏழு தாதுக்களாகிற இந்த ஆஹாரத்தின் மாறுதலும் பலம் முதலிய இதனால் உண்டாக்கப்படுகிற ப்ரயோஜனமும் வெகு காலம் இருக்கிறதாகிய ஸ்திரமாயிருக்கை சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்— 'உறுதியான மாறுதல்களை

1 அஷ்டாங்க ஹ்ருதயம் - ரஸங்களாவன - மதுர ரஸம், புளிப்பு, உப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு, ஆக ஆறு இவைகள் வஸ்துக்களை அடைந்திருக்கின்றன இவைகள் முன்பு சொல்லி யிருக்கிறவைகள் பின்பு சொல்லி யிருக்கிறவைகளை விட பலத்தைக் கொடுக்கக் கூடியவைகள்.

2 மேல் சொல்லிய ஆறு ரஸங்களையும் மதுரரஸம்மேலிட்டவைகளா அதிக வேகமில்லாமலும் அதிகஸாவகாச மில்லாமலும் ஸாப்பிட வேண்டும்.

வைகள். ஹ்ருத்யா: - அழகான ரூபத்தை யுடையவைகள். இப்படிப் பட்ட ஸத்வகுணம் நிறைந்த ஆஹாரங்கள் ஸத்வகுணம் மேலிட்டிருக்கிற புருஷனுக்கு ப்ரியங்கள். 8

கட்வம்லலவணாத்யுஷ்ணதீக்ஷ்ணரூக்ஷவிதாஹிந: |
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா து:கசோகாமயப்ரதா: || 9

ப - ரை] கட்வ - காரமாயும், அம்ல - புளிப்பாயும், லவண - உப்பதிகரித்ததாயும், அத்யுஷ்ண - அதிக உஷ்ணத்தை யுடையதாயும், தீக்ஷ்ண - க்ரூரமாயும், ரூக்ஷ - உலர்ந்தக்கூடியதாயும், விதாஹிந: - தாபத்தையுண்டாக்கக்கூடியதாயு மிருக்கிற, து:கசோகாமயப்ரதா: - துக்கம், சோகம், ரோகம், இவைகளைக் கொடுக்கிற, ஆஹாரா: - ஆஹாரங்கள், ராஜஸஸ்ய – ரஜோகுணம் மேலிட்டவனுக்கு, இஷ்டா: - இஷ்டமானவைகள். 9

பா] கடுவாயும், அம்லமாயும், லவணமாயும், அத்யுஷ்ணமாயும், அதி தீக்ஷ்ணமாயும், ரூக்ஷங்களாயும், விதாஹிகளாயு மிருக்கிற என்று சேர்த்துக்கொள்ளவேண்டியது. கட்வ - காரமான ரஸமுடையவைகள்,

---

யுடையவைகள்' என்று. உபயோகப் படுத்துவதற்கு முந்தியே அநுவருக்கக் கூடியதான அமைப்புகளையுடைய வஸ்துக்கள் விலக்கப்பட்டபடியினால் பார்த்த மாத்திரத்தினால் ப்ரீதியை உண்டாக்கக் கூடியதாயிருக்கை இவ்விடத்தில் 'ஹ்ருத்யா:' என்னப்படுகிறது, என்று சொல்லுகிறார்— 'அழகான ரூபத்தை யுடையவைகள்' என்று. எந்த ஆஹாரங்கள் விஷயத்தில் தர்ம சாஸ்த்ரங்களும், ஆயுர் வேதமும், இவை இரண்டும் ஒரே அபிப்ராயத்தோடு பொருந்துகின்றனவோ அவை எல்லாவற்றையும் இது குறிக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இப்படிப்பட்ட' என்று. இத்தால் 'யுக்தாஹாரவிஹாரஸ்ய' என்று முன்னே சொன்னது விவரிக்கப்பட்டது 8

'கட்வ' என்னும் பதம் 'த்ரிகடுகம்' முதலியவைகளிலும், 'அம்ல' என்னும் பதம் புளி முதலியவைகளிலும் அதிகமாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதினால் இவ்விடத்தில் அவைகளை மாத்திரம் சொல்லுகிறதென்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'காரமான ரஸமுடையவைகள், புளிப்பு ரஸமுடையவைகள்' என்று. ஸத்வகுணம் மேலிட்டவனுக்கும் வ்ரதம் முதலிய காலங்களைத் தவிர மற்றக் காலங்களில் ருசி மாத்திரத்திற்காக உப்பு சேர்த்துக்கொள்ள அநுமதி கொடுக்கப்பட்டிருப்பதினாலும், உப்பு ஸ்வரூபத்தினால் ஆஹாரமல்லவாகையினாலும்,

அம்ல - புளிப்பு ரஸமுடையவைகள், லவண - உப்புமேலிட்டவைகள், அதி தீக்ஷ்ண - அதிகக் குளிர்ச்சி, அதிக க்ரூரமாயிருக்கை, முதலியவைகளி னால் உபயோகப்படுத்தக் கூடாதவைகள், தேஹத்தை உலர்த்தக்கூடிய வைகள் ரூக்ஷங்கள், தேஹத்திற்குத் தாபத்தை உண்டாக்குகிறவைகள் விதாஹிகள், இப்படிப்பட்ட ஆஹாரங்கள் ரஜோகுணம் மேலிட்டவ

நேரில் ப்ரத்யக்ஷமாய் உப்பைச் சேர்த்துக்கொள்ளுவது பசுவின் மாம் ஸத்திற்கு ஸமமாகையினாலே ஸ்பஷ்டமாக ஶாஸ்த்ரத்தில் தடுக்கப்பட் டிருப்பதினாலும், இவைகளைத்தவிர மற்றதைப்பற்றி 'லவண' என்னும் பதம் சொல்லப்பட்டிருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகி றார்—'உப்புமேலிட்டவைகள்' என்று 1'ஸ்நிக்தோஷ்ணம் போஜநம்' என்று ஸோஷ்ணமாகிய போஜனம் விதிக்கப்பட்டிருப்பதினால் 'அத்யுஷ்ண' என்று விசேஷித்துச் சொல்லப்பட்டது. 'கடு' முதலியவைகளை எரிக்கக் கூடிய என்றர்த்தம் என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காக இவ் விடத்தில் விக்ரஹத்தைக் காட்டியிருக்கிறது. க்ரூரமாக இருக்கிற மிளகு முதலியவைகளைப்பற்றியும் அந்தந்தவஸ்துக்களில்ருசி உண்டா தற்காக ஸ்வல்பமாக அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதினால் அவ்விடத் திலும் 'அதி' என்னும் உபஸர்க்கத்திற்கு அந்வயம் உண்டென்று காட்டப்பட்டது. உஷ்ணமாயிருப்பது தனித்துச் சொல்லப்பட்டபடியி னால் இவ்விடத்தில் 'தீக்ஷ்ண' என்னும் பதம் அதைச் சொல்லுகிறதல்ல. சீக்கிரம் வேலை செய்யக் கூடிய மிளகு முதலியவைகளைப் பற்றி ஆயுர் வேதத்தில் தீக்ஷ்ணம் என்று சொல்லப்படுகிறது. ஆகையினால் இவ்வி டத்தில் உபயோகப்படுத்தின க்ஷணம் முதல் விரோதமாகிய வஸ்துக் கள் தீக்ஷ்ணங்கள் என்கிற அபிப்ராயத்தினால் உதாஹரணம் காட்டுகி றார்—'அதிகக் குளிர்ச்சி' என்றாரம்பித்து. மழமழப்புக்கு எதிர் நடை யான குணமாகிய 'ரூக்ஷம்' என்பது சொல்லப்படுகிறது என்று சொ ல்லுகிறார்—'தேஹத்தை உலர்த்தக் கூடியவைகள்' என்று. இத்தால் வாதத்திற்குக் கோபத்தை உண்டு பண்ணக் கூடியவைகள் என்றேற் பட்டது. இவ்விடத்தில் 'விதாஹி' என்னும் பதத்தில் ப்ரக்ருதி விக்ருதிக ளின் தாத்பர்யத்தை ப்ரகாசப்படுத்துகிறார்—'தாபத்தை உண்டாக்குகி றவைகள்' என்று. பித்தத்தை வருத்திசெய்யக் கூடியவைகள் என்றர் த்தம். 'இப்படிப்பட்ட' என்பதற்குத்தாத்பர்யம் முன்போலவே. 2 'த்ரு ஷ்ணா ஸங்க ஸமுத்பவம்' என்பது முதலாக முன் சொல்லப்பட்டதை

1 அஷ்டாங்க ஹ்ருதயம். ஸ்நிக்தம்-மழமழப்புள்ளதாயும், உஷ்ணம்-சுட்டுக் கொண்டிருக்கும், போஜனம் - ஆஹாரம். 2 பகவத்கீதை - 14 - 7

னுக்கு இஷ்டமானவைகள். அவைகள் ரஜோகுணம் மேலிட்டவைக ளாகையினால் துக்கம், சோகம், ரோகம், இவைகளை வ்ருத்தி செய்யக் கூடியவைகள். ரஜோகுணத்தையும் வ்ருத்தி செய்யக்கூடியவைகள். 9

𑌯𑌾𑌤𑌯𑌾𑌮𑌂 𑌗𑌤𑌰𑌸𑌂 𑌪𑍂𑌤𑌿 𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌂 𑌚 𑌯𑌤𑍍 |
𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌮𑌪𑌿 𑌚𑌾𑌮𑍇𑌧𑍍𑌯𑌂 𑌭𑍋𑌜𑌨𑌂 𑌤𑌾𑌮𑌸𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 || 10

ப - ரை] 𑌯𑌾𑌤𑌯𑌾𑌮𑌂 - அதிக நாழி கழித்தது, 𑌗𑌤𑌰𑌸𑌂-ஸ்வபாவமாகிய ரஸம் மாறினது, 𑌪𑍂𑌤𑌿 - துர்க்கந்தமுடையது, 𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌂 - அதிக காலம் கழித்ததினால் ரஸம் மாறினது, 𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌂 — எச்சிலாகியது, 𑌅𑌮𑍇𑌧𑍍𑌯𑌂 - யஜ்ஞத்தில் உபயோகப்படுத்தாதது, 𑌯𑌤𑍍 - எதுவோ (அப்படிப் பட்ட), 𑌭𑍋𑌜𑌨𑌂 - ஆஹாரமானது, 𑌤𑌾𑌮𑌸𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 - தமோகுணம் மே லிட்டவர்களுக்கு ப்ரியமானது. 10

பா] 𑌯𑌾𑌤𑌯𑌾𑌮𑌂 - வேதநாழிகையாக இருந்தது, 𑌗𑌤𑌰𑌸𑌂 - ஸ்வபாவத்

ஜ்ஞாபகப்படுத்துகிறார்— 'ரஜோகுணம் மேலிட்டவைகளாகையினால்' என்றாரம்பித்து. காரமுள்ளவைகள் முதலிய ஆஹாரங்கள் துக்கம், முதலியவைகளுக்குக் காரணமென்பது அநேகமாய் இந்த லோகத்தில் அவைகளால் கஷ்டமுண்டாகிறது, அவைகளில்லாவிட்டால் கஷ்ட முண்டாகிறதில்லை என்பதைக் கொண்டறியத் தக்கது. ஆயுர்வேதத் திலும் நிரூபிக்கப்பட்டது. துக்கத்தைக் கொடுப்பதென்பதோ தாதுக் களுக்கு வ்யத்யாஸத்தை உண்டு பண்ணி அதின் வழியாக. சோகத் தைக் கொடுப்பதென்பதோ வெனில் அதைப் பராமர்சிப்பதினால் உண் டாகிய பஸ்சாத்தாபம் முதலியவைகளினால். ரோகமும் காலக்ரமத்தி னால் உண்டாகிறது. இந்த லோகத்திலே மாத்திரம் துக்கம் முதலிய வைகளுக்குக் காரணம் என்பது மாத்திரமில்லை. பின்னை எப்படி என் னில் பரம்பரையாகப் பரலோகத்திலும், இதர தேஹங்களிலும் என் கிற அபிப்ராயத்தினால் ஸத்வத்தை வ்ருத்தி செய்கிற ஸத்வகுணம் மேலிட்ட ஆஹாரத்தில் சொல்லியிருக்கிற ந்யாயத்தினாலேற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ரஜோகுணத்தையும் வ்ருத்தி செய்யக் கூடியவைகள்' என்று. 9

ஸாத்விகாஹாரம், ராஜஸாஹாரம், இவைகளைப்பற்றிக் குணம், அவைகளின் கார்யங்கள், இவைகளைச் சொல்லியிருந்தபோதிலும் தாமஸமான ஆஹாரத்தில் குணம் மாத்திரத்தைச் சொல்லியிருப்பது அதிக வ்யத்யாஸமில்லாமல் ராஜஸமான ஆஹாரத்தின் கார்யத்தையே இதுவும் உடையதாகையினால். எல்லா ஆஹாரங்களிலும் ஒரு யாமம்

தில் ஏற்பட்ட ரஸத்தைவிட்டது. பூதி—துர்க்கந்தமுடையது, பர்யு ஷிதம் - காலம் தாண்டினதினால் வேறு ரஸத்தைபடைந்தது, உச்சிஷ்டம்.

கழிப்பது மாத்திரத்தினால் தோஷமில்லையாகையினால் அந்தந்த வஸ்துக்களில் எவ்வளவு காலம் கழிவதினால் தோஷமுண்டாகுமோ அவ்வளவு காலம் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'வெகு நாழிகையாக இருந்தது' என்று. யாமமாவது உயர்ந்த பாகம், அதாவது நெய்யைவிட மிகவும் ஸூக்ஷ்மமாகிய மண்டம் (ஏடு) என்பதைப் போல என்று சிலர் சொல்லுகிறார்கள். இத்தால் ஸாரம்ஶமில்லாதது என்று சொல்லப்பட்டதாகிறது. இதுவும் வெகுகாலம் இருந்தது என்பதினால் ஏற்பட்டது. ஜலமயங்களாயும் ப்ரதிவிபின் மாறுதலாயுமிருக்கிற ஆஹாரங்களில் அந்தந்தப் பாகங்களின் வ்யத்யாஸங்களினால் ஒரு ரஸமும் இல்லாமலிருப்பது எப்பொழுதும் ஸம்பவிக்காதாகையினால் அந்தந்த வஸ்துக்களுக்கு ஸ்வபாவத்திலேற்பட்டதாகச் சொல்லப்படுகிற ரஸத்தைவிட்டு வேறு ரஸத்தை யடைந்திருப்பது இவ்விடத்தில் 'கதரஸம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'ஸ்வபாவத்தில் ஏற்பட்ட ரஸத்தைவிட்டது' என்று. இத்தால் 'கதரஸம்' என்பதினாலேயே ஸாரம்ஶம் நீங்கியது என்று சொல்லப்பட்டபடியினால் 'யாதயாமம்' என்பது அல்ப பக்குவமானது என்று வ்யாக்யானஞ் செய்ததும் நிராகரிக்கப்பட்டது. 'பூதி' என்னும் பதம் ஸாத்விகமல்லாதவைகள் என்று பாஞ்சராத்ரம், முதலிய ஶாஸ்த்ரங்களிலேற்பட்டதாகிய கஞ்சா முதலிய வஸ்துக்களில் ப்ரயோகிக்கப்படுகிறது. அப்படியிருந்தபோதிலும் இவ்விடத்தில் வஸ்துக்களை விஶேஷித்துச் சொல்லுகிற ஸந்தர்ப்பமில்லாமையினாலும், குணங்களைக்கொண்டு எல்லா ஆஹாரங்களையும் குறிக்கும் ஸந்தர்ப்பமாகையினாலும் இவ்விடத்தில் 'பூதி' என்னும் பதத்தினால் விடத்தகுந்தது என்று லோகத்திலும் ஶாஸ்த்ரத்திலும் ஏற்பட்ட குணம் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'துர்க்கந்த முடையது' என்று. காலம் தாண்டியிருப்பது மாத்திரம் 'யாதயாமம்' என்னும் பதத்தினால் சொல்லப்பட்டபடியினாலும், ரஸத்தை விட்டிருப்பது 'கதரஸம்' என்னும் பதத்தினால் சொல்லப்பட்டபடியினாலும், எந்த வஸ்துக்களில் காலம் தாண்டுவது மாத்திரத்தினால் தோஷமுண்டாகிறதில்லையோ, பால் முதலியவைகளில் புரைகுத்துவது முதலியவைகளினால் வேறு ரஸம் உண்டாகிறதோ, அப்படிப்பட்ட வஸ்துக்களில் காலம் கழித்தது மாத்திரத்தினால் வேறு ரஸம் உண்டாயிருப்பது இவ்விடத்தில் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'காலம் தாண்டினதினால் வேறு ரஸத்

குரு முதலியவர்களைத் தவிர மற்றவர்கள் ஸாப்பிட்ட மிகுதி, ஸ்வயம்-யஜ்ஞத்திற்குத் தகாதது, அதாவது யஜ்ஞம் செய்து அதில் மீதியாகாதது

தை யடைந்தது' என்று. இது விடத்தகுந்த மற்றெல்லா விகாரங்களையும் குறிக்கிறது. ஆகையினாலேயே பாகம் செய்யப்பட்டவைகளாயும், ஒருவித மாறுதல்களுமில்லாமலிருந்தபோதிலும் ஒரு ராத்திரி கழித்த ஜலம் முதலியவைகளை விட்டுவிடுகிறார்கள். இத்தால் இவ்விடத்தில் 'யாதயாமம்' என்னும் பதம் வேறு ரஸத்தை யடையாமல் காலம்கழித்தது மாத்திரத்தினால் தோஷத்தை யடைந்த வஸ்துவைப் பற்றியது என்று காட்டப்பட்டது. சில எச்சில்களைப்பற்றி ஶாஸ்த்ரத்தில் அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதினாலும், ஆசார்யனுடைய எச்சில் பாபவிஶேஷத்திற்கு ப்ராயஶ்சித்தமாகையினாலும், பரிசுத்தமென்றெடுத்திருப்பதினாலும் அதைத் தவிர மற்றவைகளைப் பற்றியது 'உச்சிஷ்ட' என்னும் பதம் என்று சொல்லுகிறார் — 'குரு, முதலியவர்களைத் தவிர' என்றாரம்பித்து முதலிய, என்னும் பதத்தினால், பிதா, முதல் தமையன், பத்னிக்குப் பர்த்தா, இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 'அதிதி பிள்ளையைப் பெறவேண்டுமென்று ஆசையுடையவளாய்த் தேவதைகளின் பொருட்டு ப்ரம்மோதனத்தைப் பாகம் செய்தாள். அவளுக்கு மீதியைக் கொடுத்தார்கள். அதை அவள் ஸாப்பிட்டாள். அவள் கர்ப்பத்தைத் தரித்தாள்' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம், முதலியவைகளில் எச்சிலை ஸாப்பிட்டது சொல்லப்படுகிறது. அது ப்ரம்மோதனத்தை விதிக்கவந்த தாகையாயினால் எச்சிலை ஸாப்பிட வேண்டும் என்று விதிப்பதில் தாத்பர்யமல்ல. ஸாப்பிட்டு மீதியாயும், பாகம் செய்த பாத்திரத்திலிருக்கிற அன்னத்தைச் சொல்லுவதாக இருந்தால் ஒருவித விரோதமுமில்லை. இதற்கு முன் ஓரிடத்திலும் சொல்லப்படாத தாகையினால் இங்கு விதிக்கப்படுகிறது என்று ஒப்புக்கொண்ட போதிலும் அதிதியும் ஸாத்யர்கள் என்கிற தேவதைகள் என்று சொல்லப்படுகிறவர்களையும்பற்றி மாத்திரமேயொழிய அதினால் இப்பொழுதிருக்கும் நமக்கு அப்படிப் பட்ட அனுஷ்டானம் வருவதற்கு ந்யாயமில்லை. அப்படி வருவதாயிருந்த போதிலும் அந்த ப்ரம்மோதனம் என்கிற கர்மத்தில் மாத்திரம் அது ஏற்பட்டது. ஆகையினால் இவ்விடத்தில் விதியுமில்லை, அதைக் கல்பிக்க இடமுமில்லை. ஆகையினால் நமக்கு அந்த ந்யாயம் வராது. முன் ஜன்மத்தில் நடந்த கதையை நினைத்துக்கொள்ளக்கூடிய ஸாமர்த்தியமுடைய பகவானாகிய நாரதரால் முன்பு தான் ஶூத்ர ஜன்மத்தை அடைந்திருந்த பொழுது

என்றர்த்தம். இப்படிப்பட்ட தமோகுணம் நிறைந்த ஆஹாரம் தமோ

அநுஷ்டித்ததைப்பற்றி 1 'உச்சிஷ்டலேபாநநுமோதிதோ த்விஜை: ஸக்ருத்ஸ்ம புஞ்ஜே ததபாஸ்தகில்பிஷ:' என்றிவை முதலியது சொல்லப்பட்டதே என்னில் அதுவும் அந்த ஜன்மத்தில் நாரதர் அந்த ருஷிகளுக்குச் சிஷ்யனாகிய சூத்திரன் ஆகையினால் அப்படிப்பட்டவர்களிடங்களில் அந்த அநுஷ்டானம் வரலாமே ஒழியமற்வர்களிடத்தில் இல்லை. இப்படியாகையினால் மற்ற வாக்யங்களும் விரோதிக்கிறதில்லை. வசனங்களுக்கு விரோதம் வரும்பொழுது லிங்கத்தைப் பார்த்தது மாத்திரத்தினால் அநுஷ்டானத்தைக் கல்பிக்கக் கூடாது. ஆசார்யனுடைய பிள்ளை முதலியவர்களினுடையவும் எச்சிலை ஸாப்பிடக் கூடாது என்று 2 'உச்சிஷ்டாசநவர்ஜம் ஆசார்யவதாசார்யபுத்ரே வ்ருத்தி:' என்றாரம்பித்து மறுக்கப்படுகிறது. மற்றவர்களைப் பற்றிக்கேழ்க வேண்டியதில்லை. பாகவதனுக்கோவெனில் ஆசார்யனைத் தவிர மற்றெல்லாருடைய எச்சிலைஸாப்பிட்டபோதிலும் உக்ரமான ப்ராயஶ்சித்தங்கள் விதிக்கப்படுகின்றன. அப்படியே ஸநத்குமாரீய ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறதென்று ஆகமப்ராமாண்யத்தில் பகவானாகிய யாமுனாசார்யரால் 3 'நிர்மால்யம் பக்ஷயித்வைவ உச்சிஷ்டம் அகுரோரபி| மாஸம் பயோவ்ரதோ பூத்வா ஜபந்நஷ்டாக்ஷரம் ஸதா || ப்ரஹ்மகூர்ச்சம் தத: பீத்வா' என்றிவை முதலியது எடுக்கப்பட்டிருக்கிறது, இவ்விடத்தில் பாஷ்யத்திலும் குரு என்னும் பதம் ஆசார்யனைப் பற்றியது. பிதாவைப் பற்றியதாகவுமாம். ஏனெனில் குரு என்னும் பதத்திற்கு

---

1 பாகவதம் - 1 - 5 - 25. த்விஜை:-ப்ராம்மணர்களினால், அநுமோதித:—அனுமதி செய்யப்பட்டவனாய், உச்சிஷ்டலேபாந் - எச்சிலில் ஒட்டிக்கொண்டிருந்தவைகளை, ஸக்ருத் - ஒருதரம், புஞ்ஜேஸ்ம - ஸாப்பிட்டேன், ததபாஸ்தகில்பிஷ:—அதினால் போக்கடிக்கப்பட்ட பாபங்களை யுடையவனாய் (இவ்விதமாய் பகவானிடத்தில் பக்தி யுடையவனாக ஆனேன்).

2 ஆபஸ்தம்ப தர்மம்-1 - 2 - 7 - 30. உச்சிஷ்டாசநவர்ஜம்—எச்சிலை ஸாப்பிடுவதை நீக்கி, ஆசார்யவத்-ஆசார்யனிடத்திலே போல, ஆசார்ய புத்ரே-ஆசார்யனுடைய பிள்ளையினிடத்திலும், வ்ருத்தி:—இருக்கவேண்டும்.

3. ஸநத்குமாரீய ஸம்ஹிதை - நிர்மால்யம் - பகவானைத் தவிர இதர தேவதைகளுக்கு நிவேதனம் செய்ததையும், அகுரோ:—ஆசார்யனைத் தவிர வேறொருவனுடைய, உச்சிஷ்டமபி - எச்சிலையும், பக்ஷயித்வா - ஸாப்பிட்டு, மாஸம் - ஒரு மாதம், பயோவ்ரத:—பால் ஸாப்பிடுவதையே வ்ரதமாக உடையவனாக, பூத்வா - ஆகி, ஸதா - எப்பொழுதும், அஷ்டாக்ஷரம்-திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தை, ஜபந்-ஜபம் செய்து கொண்டும் இருந்து, தத:—பிற்பாடு, ப்ரம்ம கூர்ச்சம்-ப்ரம்ம கூர்ச்ச பஞ்சகவ்யத்தை, பீத்வா - ஸாப்பிட்டு (சுத்தமாகிறான்).

குணம் மேலிட்டவர்களுக்கு ப்ரியமாக இருக்கிறது. 'ஸாஜ்ஞ்யே (ஸாப் அர்த்தமாகிய உபாத்யாயர் முதலியவர்களினுடைய எச்சிலை க்ரஹித்துக் கொள்ளவேண்டுமென்று ஶாஸ்த்ர மில்லாமையினால். ஏதாவதொன்றை உபதேசித்த மாத்திரத்தினாலும் அவன் ஆசார்யன் என்பதுமில்லை, 1 'உபநீய து ய: ஶிஷ்யம் வேதமத்யாபயேத் த்விஜ:। ஸகல்பம் ஸரஹஸ்யம் ச தமாசார்யம் ப்ரசக்ஷதே' என்றிவை முதலிய வசனங்களினால் ஆசார்யனுக்கு லக்ஷணம் சொல்லியிருக்கிற படியினால் மற்றவர்களிடத்தில் உபசாரமாக ப்ரயோகிப்பது ஸம்பவிக்குமாகையினாலும், 'எவன் உபநயனம் செய்து ப்ரணவம், முதலியவைகளை மாத்திரம் உபதேசித்து நின்றுவிட்டானோ, எவன் ரஹஸ்யம் என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற மோக்ஷத்திற்கு ஸாதனங்களாகிய வித்யைகளை அந்தந்த ஶ்ருதிகளைக் கொண்டு கற்றுக்கொடுக்கிறானோ, இவ்விருவர்களும் ஆசார்யர்கள்' என்று வசனமிருப்பதினால் அங்கீகரிக்கப்படுகிறது. பகவானாகிய யாஜ்ஞவல்க்யரினால் குரு முதலியவர்களின் லக்ஷணமும், 2'ஸ குருர்ய: க்ரியா: க்ருத்வா வேதமஸ்மை ப்ரயச்சதி। உபநீய ததேவம் ச ஆசார்ய: ஸ உதாஹ்ருத:। ஏகதேஶமுபாத்யாய:' என்று சொல்லப்பட்டது. 3 'ஏகாக்ஷரப்ரதாதாரமாசார்யம் யோவமந்யதே' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறதே என்னில் அது அவமானம் செய்வதைத் தடுப்பதற்காக ஆசார்யன் என்று வைத்துக் கொண்டு சொல்லப்படுகிறது. அதினால் ஆசார்யனாயிருப்பதினாலேற்பட்ட எல்லா அனுஷ்டானமும் ஸம்பவிக்காது. ஆசார்யன என்னும் பதம்

1. மனு ஸ்ம்ருதி - 2 - 1 - 40. ய:—எந்த, த்விஜ:-ப்ராம்மணன், ஶிஷ்யம் - ஶிஷ்யனை, உபநீய - உபநயநம் செய்வித்து, ஸகல்பம் - கல்பங்களோடு கூடியதாயும் ஸரஹஸ்யம், ரஹஸ்யங்களோடு கூடியதாயுமிருக்கிற, வேதம் - வேதத்தை, அத்யாபயேத் - அத்யயனம் செய்து வைப்பானோ, தம் - அவனை, ஆசார்யம்- ஆசார்யனை, ப்ரசக்ஷதே - சொல்லுகிறார்கள்.

2. யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி - 1 - 2 - 34 - ய:—எவன், க்ரியா:—க்ரியைகளை, க்ருத்வா-செய்து, அஸ்மை - இவனுக்கு, வேதம் - வேதத்தைப், ப்ரயச்சதி- உபதேசம் செய்கிறானோ, ஸ: - அவன், குரு:—குரு, (எவன்) உபநீய து - உபநயனம் செய்து வைத்து, தத்வேதம்-அந்த வேதத்தை உபதேசிக்கிறானோ, ஸ:-அவன், ஆசார்ய:—ஆசார்யன் என்று, உதாஹ்ருத:—சொல்லப்பட்டான், ஏகதேசம்- ஒரு பாகத்தை (உபதேசம் செய்தவன்), உபாத்யாய:—உபாத்தியாயன் (என்று சொல்லப்படுகிறான்).

3 அத்ரிஸ்ம்ருதி - 1 - 10 ய:— எவன், ஏகாக்ஷர ப்ரதாதாரம் - ஒரு அக்ஷரத்தையாவது உபதேசம் செய்தவனாகிய, ஆசார்யம் - ஆசார்யனை, அவமந்யதே - அவமானம் செய்கிறானோ (அவன் ஶ்வாந ஜன்மங்களில் பிறக்கிறான்).

பிடப்படுகிறது)' என்கிற வ்யுத்பத்தியினுல் ஆஹாரமே 'போஜநம்' என்

நிர்வசனம் முதலியவைகளை அனுஸரித்து ஆயுதம், பாணம், இவைக ளைக் கற்றுக்கொடுத்தவர்களாகிய த்ரோணர், க்ருபர், முதலியவர்களி டங்களிலும் அதிகமாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதினுலும் ப்ரயோகத் தையனுஸரித்து எல்லா இடத்திலும் முக்யந்தான் என்று சிலரால் ஒப் புக்கொள்ளப்பட்டிருக்கலாம். அப்படி யிருந்தபோதிலும் எச்சிலை ஸா ப்பிட அனுமதி கொடுப்பதற்குக் காரணமாகிய ஆசார்யனுக இரு க்கை ப்ரணவம் முதலாக ரஹஸ்ய த்ரயங்களை உபதேசித்து அதின் வழியாக பரவித்யையை உபதேசிக்கிறவனிடத்திலேயே இருக்கிறது. அப்படியே ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதினுலும், ஶிஷ்டர்களின் அனுஷ்டானம் இருப்பதினுலும், ப்ரத்யக்ஷமாக வேதம் முதலிய வைகளுக்கு விரோதமாயிருக்கிற ப்ரமித்தவர்களினுடையவும் வேறு அபிப்ராயத்தினுல் ஶாஸ்த்ரத்தைமீறி நடப்பவர்களினுடையவும் ஆசா ரம் ஶிஷ்டாசாரமல்ல. சிலர் 1 'நாராயணைக நிஷ்டஸ்ய யா யா வ்ருத்திஸ் தத³ர்சநம்। யோ யோ ஜல்பஸ் ஸ ஸ ஜபஸ் தத்³த்⁴யாநம் யந்நிரீக்ஷணம்। தத்பாதா³ம்பு³ அதுலம் தீர்த²ம் தது³ச்சி²ஷ்டம் ஸுபாவநம்। தது³க்திமாத்ரம் மந்த்ராக்³ர்யம் தத்ஸ்ப்ருஷ்டம் அகி²லம் ஶுசி' என்கிற வசனங்களைச் சொல்லுகி ருர்களே. அதுவும் பகவானொருவனிடத்திலேயே நிஷ்டையுடைய வர்களை ஸ்தோத்திரம் செய்கிறதேயொழிய ஸ்வயமாக ஒன்றையும் விதி க்கிறதல்ல. வேறொரு காரணங்களினுல் ஏற்பட்டிருப்பதைக் கொண்டு இங்கு ஸ்தோத்திரம் செய்திருக்கிறது. அதில் முதல் ஶ்லோகம் ஸ்வ பாவத்தினுலேற்பட்டதாயும் ஒரு ப்ரயோஜனத்தினுலேற்பட்டதாயு மிருக்கிற கார்யத்தையும் அனுவாதம் செய்கிறது. இரண்டாவது ஶ்லோகம் ஶாஸ்த்ரங்களினுல் ஏற்பட்ட கார்யத்தை அனுவாதம் செய் கிறதே ஒழிய வேறு ஶாஸ்த்ரங்களினுல் மறுக்கப்பட்டிருப்பதைச் சொல்லுகிறதல்ல. ப்ரமாணங்களினுலேற்பட்டிருக்கிற விஷயங்களைச் சொல்லுவதினுலல்லவோ 'அதுலம் ஸுபாவநம் அக்³ர்யம் அகி²லம்' என்று விஶேஷணங்களோடு சேர்த்துச் சொல்லியிருக்கிறது. அதா வது 2 'ப்³ராஹ்மணா: பாத³தோ மேத்⁴யா:॥' என்றிவை முதலிய வச னங்களினுல் ப்ராம்மணர்களின் பாதஜலம் பொதுவாகப் பரிசுத்தம் என்றேற்பட்டிருக்கும் விஷயத்தில் அவர்களே பாகவதர்களாக இருந் தால் தனக்கொப்பில்லாத பரிசுத்தமான வஸ்து என்று விஶேஷித்துச்

---

1 இதின் அர்த்தம் தாத்பர்ய சந்த்ரிகையிலே சொல்லப்படுகிறது.

2 ப்ராம்மணா:-ப்ராம்மணர்கள், பாதத:-காலில், மேத்யா:-பரிசுத்தமுடை யவர்கள்.

ளப்படுகிறது. மறுபடியும் தமோகுணத்தை வ்ருத்தி செய்விக்கக்கூடியது.

சொல்லப்படுகிறது. இப்படியே பாவைகாந்தபாக இல்லாமலிருந்தபோதிலும் உபநயனம் செய்விக்கிறவன் முதலியவர்களினுடைய எச்சில் பரிசுத்தமாக ஏற்பட்டிருக்கும்பொழுது அவனை பகவான் ஒருவனிடத்திலேயே நிஷ்டையை யுடையவனாயிருந்தால் அது மிகவும் பரிசுத்தம் என்று விதிக்கப்படுகிறது. அப்படியே மஹா புருஷர்களால் செய்யப்பப்பட்ட ஸ்தோத்திரம், முதலியவைகள் மிகவும் மங்களத்தைக் கொடுக்கக்கூடியதாக ஏற்பட்டிருக்கும் பொழுது 'க்ஷுத்ரா தேவதா...' என்பதினால் பகவானைத் தவிர வேறொரு தைவத்தைத் தொழாதவர்களினால் செய்யப்பட்ட தமிழ்ப்பாட்டுக்கள், முதலியவைகளும் உத்தமமான மந்த்ரங்களைப்போலவே பலம் முதலியவைகளுக்குக் காரணம் என்பது சொல்லப்படுகிறது. இப்படியே ஸ்வபாவத்திலே சுத்தியான வஸ்துக்களுக்கு வேறொரு சுத்தி செய்யவேண்டுமென்று அபேக்ஷை உண்டானால் அலம்புதல், முதலியவைகளைப் போல மஹாத்மாக்கள் தொடுவதும் அவர்கள் மாஹாத்ம்ய விசேஷத்தினால் சில வஸ்துக்கள் விஷயத்தில் சுத்தியைக் கொடுக்கிறதென்றேற்பட்டிருக்கிறது. 'தத்ஸ்வ ஷுசி ஸமூஹ...' என்பதினால்வேறு சுத்தியைக் கொடுக்கக் கூடிய வஸ்துக்களையுடையதாக ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கிற எல்லாவஸ்துக்களுக்கும் பாகவதன் தொடுவது ஒன்றே சுத்தியைக் கொடுக்கத் தகுந்தது என்று சொல்லப்படுகிறது. அப்படிக்கில்லாவிடில் பாகவதனால் தன்னுடைய புத்தி பூர்வக மில்லாமல் தொடப்பட்ட சண்டாளர்கள், உள்ளிப் பூண்டு, வெங்காயம், முதலிய ஸ்வபாவத்தினாலேயே அசுத்தமான வஸ்துக்களை அங்கீகரித்தால் அலேபகர்கள் சொல்லுவதைப் போல தொடத்தகுந்தது, தொடத்தகாதது, ஸாப்பிடத் தகுந்தது, ஸாப்பிடத்தகாதது. இவைகளெல்லாம் ஒன்றாக வேண்டிவரும். இத்தால் மிகவும் ஆப்தராகிய தொண்டரடிப் பொடியாழ்வாரருளிச்செய்த 1 'வானுளா ரறியலாகா வானவா!வென்பராகில் தேனுலாந் துளபமாலைச் சென்னியா!வென்பராகில் ஊனமாயினகள் செய்யு மூனகாரகர்களேலும் போனகம் செய்த சேடம்தருவரேல் புனிதமன்றே' என்கிற பாட்டிற்கும் தாத்பர்யம் சொல்லப்பட்டது. அது ஸம்ஸ்க்ருத ஶ்லோகமாக இவ்விதமாக மாற்றப்படுகிறது— 2 'ஷிவோ

1 திருமாலை-41.

2 இது தாத்பர்யசந்த்ரிகை வ்யாக்யான கர்த்தாவாகிய ஶ்ரீமந் நிகமாந்த தேசிகனாலருளிச்செய்யப்பட்டது. திவ்யை:-ஸ்வர்க்கலோகத்திலிருக்கிற தேவதைகளினால், அவேத்யவிபவ - அறியக்கூடாத மஹிமையுடையவனே, இதி- என்று,

ஆகையினால் நன்மையை விரும்புகிறவர்களினால் ஸத்வகுணம் வ்ருத்தி

ப்ருவந்தி விஜ்ஞேதி யதி ஸ்வாத்வீ மநோஜ்ஞ துளஸீகயதீதிவா ஆஹு:யதி ஊநக்ரியா அபி பராநபி காரயந்தோ புக்தாதிகம் ததபி சேத் தத் பவித்ரம் நநு ||? இதுவும் பகவந் நாமத்தைக் கீர்த்தனம் செய்வதை ஸ்தோத்திரம் பண்ணுகிறது என்பது அந்த ஸந்தர்ப்பத்தினாலும் இந்தப்பாட்டிலிருக்கும் பதத்தின் ஸ்வாரஸ்யத்தினாலும் வ்யக்தமாகவற்பட்டிருக்கிறது. 'புக்தாதிகம்' (போனகம்செய்த சேடம்)' என்பதும் பாகம் செய்த பாத்திரத்தி லிருக்கிற மிகுதியும் பரிஹரிக்க வேண்டியது தான், அதை விலக்குவதற்காக அபவாதமாகச் சொல்லப்படுகிறது. அப்படிக் கில்லாமற் போனாலும் வேறு ப்ரமாணங்களுக்கு விரோதம் வாராமலிருப்பதற்காக ஆசார்யன் முதலியர்வர்களினுடைய எச்சிலைப்பற்றியதாகவே இருக்கவேண்டும். அதாவது 1 'ஊநோ ஹீந: பரிஸ்ரஸ்தோ நஷ்ட:' என்று பாபத்தினுடைய வ்யத்யாஸத்தினால் நிஷ்டை குறைந்த பாகவதர்கள் நான்குவிதம் என்று ரஹஸ்யாம்நாயம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள் அதில் ஊனன் முதலிய அவஸ்தைகள் உண்டானால் ஆசார்யனுடைய எச்சிலும் அபரிசுத்தம் என்கிற ப்ரஸ்தாவம் வருகிறது. அவ்விடத்தில் அவர்கள் வேறொரு தைவத்தினிடத்தில் பக்தியைச் செலுத்தாதவர்கள் என்பது ஸ்திரமாக இருக்கிறது, என்பதைத் தெரிவிக்கக்கூடிய பகவானுடைய திருநாமங்களைச் சொல்லுவது முதலியது இருந்தபோதிலும் அப்பொழுது அந்த ஆசார்யனுடைய எச்சில் அபரிசுத்தமல்ல என்று சொல்லப்படுகிறது வேறொரு தைவத்தினிடத்தில் பக்தியுடைத்தானவனல்ல என்பதற்குக் குறைவுவந்தால் எவ்விதத்திலும் ஆசார்யனைவிட்டு

ப்ருவந்தி யதி - சொல்லுகிறார்களேயானால், இதனால் பாட்டின் முதல்பாதத்தின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. மாத்வீமனோஜ்ஞ துளஸீக-தேன்களினால் அழகாகிய துளஸீமாலைகளோடு கூடிய ஶிரஸ்ஸையுடையவனே, இதிசா என்றும் ஆஹு: யதி - சொல்லுகிறார்களேயானால், இத்தால் இரண்டாம்பாதத்தின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்படுகிறது. ஊநக்ரியா அபி - ஊனமான கார்யங்களைச் செய்த போதிலு , பராநபி-மற்றவர்களையும் (ஊனமான கார்யங்களையும்), காரயந்த:-செய்விப்பவர்களாயிருந்தபோதிலும், இத்தால் மூன்றாவது பாதத்தின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. புக்தாதிகம் - (அவர்கள்) ஸாப்பிட்ட மிகுதியை, தததிசேத் - கொடுக்கிறார்களேயானால், தத் - அது பவித்ரம்நநு - பரிசுத்தமல்லவா, இத்தால் நான்காவது பாதத்தின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டது.

1 ஊந:—தாப ஸம்ஸ்காரம் இல்லாதவன் அதாவது சங்க சக்ராங்கமில்லாதவன், ஹீந:-ஊர்த்வபுண்ட்ர மில்லாதவன், பரிஸ்ரஸ்த:-தாஸ்ய நாமம் வஹிக்காதவன், நஷ்ட: - மந்த்ரோபதேசங்களில்லாதவன்.

யடைவதற்காக ஸத்வகுணம் நிறைந்த ஆஹாரமே ஸாப்பிடத்தக்கது. 10

விடவேண்டியதென்பது அந்த ரஹஸ்யாம்நாயத்திலே சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் இனி விஸ்தாரமாகச் சொல்லவேண்டியது இல்லை. புத்திக்கு விரோதியாகிய வஸ்துவினிடத்திலும் 'அமேத்ய' என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதினால் அப்படிச் சொல்லில் த்ருஷ்டத்தில் தோஷம் மாத்திரம் உண்டாகிறதென்று முடிவாகிறபடியினால் அதைவிட அதிக தோஷத்தைத் தெரிவிப்பதற்காக இவ்விடத்தில் 'மேத்யம்' ஆவது யஜ்ஞம், அதற்குபயோகிக்கத் தக்கது 'மேத்யம்', அதற்கு விரோதமானது 'அமேத்யம்' என்று சொல்லுகிறார்—'யஜ்ஞத்திற்குதவாதது' என்று. யஜ்ஞத்திற்குதவாததாகிய வஸ்துவையும் ஸாப்பிடக் கூடாதென்பது மனு முதலியவர்களால் 1 'வ்ருதா க்ருஸரஸம்யாவம் பாயஸாபூபமேவ ச। அனுபாக்ருதமாம்ஸானி தேவான்னானி ஹவீம்ஷி ச' என்று சொல்லப்படுகிறது. அதற்காகச்சொல்லுகிறார்—'அதாவது யஜ்ஞம் செய்து அதில் மீதியாகாதது' என்று. இத்தால் பாஞ்சராத்ர ஶாஸ்த்ரங்களில் 2 'நாநிவேத்ய ஹரே: கிஞ்சிதஶ்நீயாத் பாவனம்!' என்றிவை முதலிய இடங்களில் சொல்லப்பட்டதும் இந்த அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. 'ஆஹ்ரியந்தே (ஸாப்பிடப்படுகின்றன)' என்கிற வ்யுத்பத்தியினால் 'ஆஹாரா:' என்கிற பதத்தினால் அந்தந்த வஸ்துக்கள் சொல்லப்படுகின்றன. ஸாப்பிடுகிற வ்யாபாரம் மாத்திரத்தில் 'யாதயாமம்' என்றாரம்பித்துச் சொல்லியிருப்பது அந்வயிக்காது. முக்யமான அர்த்தம் சொல்லுவது ஸம்பவிக்கும்பொழுது லக்ஷணை சொல்லுவது ந்யாயமல்ல. ஆகையினால் 3 'க்ருத்யல்யுடோ பஹுலம்' என்கிறபடியே கர்ம என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற 'ல்யுட்' என்னும் விபக்தியை முடிவிலுடையது என்று சொல்லுகிறார்—'புஜ்யதே' என்றாரம்பித்து. 'மறுபடியும் தமோகுணத்தை வ்ருத்தி செய்விக்கக் கூடியது' என்பதற்கு அர்த்தம் முன்போலவே. ஆஹார

1 மனு ஸ்ம்ருதி - 5 - 7. வ்ருதா - வீணாக, அதாவது பகவதாராதனம், ஒரு விசேஷகாலங்கள், இவைகள் இல்லாமல், க்ருஸரஸம்யாவம் - க்ருஸரத்தையும், பாயஸம் - பாயஸத்தையும், அபூபம் - பக்ஷ்யத்தையும், அனுபாக்ருதமாம்ஸானி - யஜ்ஞத்தில் உபயோகப்படாத மாம்ஸத்தையும், தேவான்னானி - தேவதைகளுக்குபயோகப்படக்கூடிய அன்னங்களையும், ஹவீம்ஷி - ஹவிஸ்ஸையும் (ஸாப்பிடுகிறவன் பாபியாவான்).

2 ஹரே:- பகவானுக்கு, அநிவேத்ய - நிவேதநம் செய்யாமல், பாவனம்-பரிசுத்தமாயிருக்கிற, கிம்சித் - ஒன்றையும், நாஶ்நீயாத்-ஸாப்பிடக்கூடாது.

3 அஷ்டாத்யாயீ - 3 - 3 - 113.

𑌅𑌫𑌲𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑍋 𑌵𑌿𑌧𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌯 𑌇𑌜𑍍𑌯𑌤𑍇।
𑌯𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌮𑌨𑌃 𑌸𑌮𑌾𑌧𑌾𑌯 𑌸 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌃 ॥ 11

ப-ரை] 𑌯𑌃 – எந்த, 𑌵𑌿𑌧𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 – ஶாஸ்த்ரங்களைக் கொண்டறியப்பட்ட, 𑌯𑌜𑍍𑌞𑌃 - யாகம், 𑌅𑌫𑌲𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 - பலத்தில் ஆசையை வைக்காதவர்களால், 𑌯𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑍇𑌵 - யாகம் செய்யவேண்டியது தான், 𑌇𑌤𑌿 - என்று, 𑌮𑌨𑌃 - மனதை, 𑌸𑌮𑌾𑌧𑌾𑌯 - ஸாவதானமாகச் செய்துகொண்டு, 𑌇𑌜𑍍𑌯𑌤𑍇 - செய்யப்படுகிறதோ, 𑌸𑌃 - அந்த யாகம், 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌃 - ஸாத்விகம். 11

பா] பலங்களில் ஆசையில்லாத புருஷர்களினால் ஶாஸ்த்ரங்களினா லறியப்பட்ட அதாவது மந்த்ரம், த்ரவ்யம், க்ரியைகள், இவைகளோடு கூடிய

ரம் மூன்று விதம் என்று சொல்லியிருப்பதற்கு அபிப்ராயத்தி லிருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ஆகையினால்' என்றாரம்பித்து. இதுபத்தியம், இது அபத்தியம், என்று பிரித்துச் சொன்னால் பத்யத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று தாத்பர்யமாவதைப் போல என்று தாத்பர்யம். இப்படியே யஜ்ஞம் முதலியவைகளையும் மூன்று விதமாகச் சொல்லியிருப்பதற்குக் கடைசியில் தாத்பர்யம் அறிந்துகொள்ள வேண்டியது. 10

பலமில்லாத ஒரு வஸ்துவை ஆசைப்பட வேண்டுமென்றர்த்தம் என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'பலங்களில் ஆசையில்லாத' என்று. பரமாத்மாவினுடைய ப்ரீதியைத் தவிர வேறொன்றையும் அபேக்ஷிக்காத என்றர்த்தம். 'விதித்ருஷ்ட:' என்று சொல்லியிருக்கும் இடத்தில் ப்ரம்மாவினால் பார்க்கப்பட்ட என்கிற அர்த்தம் தோன்றும். ஏனெனில் அந்த ப்ரம்மாவல்லவோ எல்லா யஜ்ஞங்களையும் பார்த்தவரென்று ஶ்ருதியில் சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் ப்ரம்மாவினால் பார்க்கப்பட்ட என்று சொல்லுவதினால் அனுஷ்டானம் செய்யும்பொழுது ஒருவித உபகாரமும் இல்லை. ஆகையினால் விதிக்கிற ஶாஸ்த்ரமே 'விதி' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'ஶாஸ்த்ரங்களினா லறியப்பட்ட' என்று. ஶாஸ்த்ரம் ஒன்றையே ப்ரமாணமாக உடையதென்று ப்ரஸித்தமாக இருக்க 'ஶாஸ்த்ரங்களினா லறியப்பட்ட' என்று சொல்லியிருப்பது அனுவம்பகம் என்றாக்ஷேபம் வருகிறபடியினால் ஶாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறபடி அனுஷ்டிப்பதினால் குறைவொன்றுமில்லாதது என்பது அந்தப் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—

தாயும், பகவானுக்கு ஆராதனமாகையினாலே அதுதானே ப்ரயோஜனமாக யாகம் செய்யவேண்டியதென்று மனதைச் செலுத்திக்கொண்டு எந்த யாகம் செய்யப்படுகிறதோ அது ஸாத்விகம். 11

அபி⁴ஸந்தா⁴ய து ப²லம் த³ம்பா⁴ர்த²மபி சைவ ய꞉ |
இஜ்யதே ப⁴ரதஶ்ரேஷ்ட² தம் யஜ்ஞம் வித்³தி⁴ ராஜஸம் ‖ 12

ப - ரை] ப⁴ரதஶ்ரேஷ்ட² - பரதவம்ஶத்தில் சிறந்தவனாகிய அர்ஜுந, ய꞉ - எந்தயாகம், ப²லம் - ப்ரயோஜனத்தை, அபி⁴ஸந்தா⁴ய - ஆசைப்பட்டுக் கொண்டு, த³ம்பா⁴ர்த²மபி - டம்பத்திற்காகவும், இஜ்யதே - செய்யப்படுகிறதோ, தம் - அந்த யாகத்தை, ராஜஸம் - ராஜஸமாக, வித்³தி⁴ - அறி. 12

பா] பலத்தில் ஆசையோடு கூடினவர்களால் டம்பத்தை உள்ளே உடை

‘அதாவது மந்த்ரம்’ என்றாரம்பித்து. 1 ‘யஜ தே³வ பூஜாயாம்’ என்று சொல்லப்படுகிற தாதுவின் அர்த்தத்தை யனுஸரித்துச் சொல்லுகிறார்— ‘பகவானுக்கு ஆராதனமாகையினாலே’ என்றாரம்பித்து. ‘ஏவ’ என்பதின் தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—‘அதுதானே ப்ரயோஜனமாக’ என்று. இதின் கருத்தாவது—ஒரு ப்ரயோஜனத்தை உத்தேசிக்காமல் ப்ரவ்ருத்திப்பது ஸம்பவிக்காது. அப்படியிருந்தபோதிலும் முன் சொல்லப் பட்டபடி ஸ்நேகிதனுடைய ஆராதனத்தைப் போலிருக்கிறது இது என்கிற ந்யாயத்தினால் யஜ்ஞம் முதலியவைகளில் ப்ரவேசிப்பதே ப்ரயோஜனம் என்கிற எண்ணம் உண்டாகிறது—என்பது. ‘மனதைச்செலுத்திக்கொண்டு’ என்பதற்கு வேறுவிதமான ப்ரவ்ருத்திகளிலிருந்து மனதைத்தடுத்து ஆரம்பிக்கப்பட்டிருக்கிற கார்யத்திலேயே ஊற்றமுடையதாய்ச் செய்துகொண்டு என்றர்த்தம். ‘யஜ்ஞ꞉ இஜ்யதே’ என்பதற்கு யஜ்ஞம் செய்யப்படுகிறது என்றர்த்தம். 11

டம்பத்தைக் காரணமாக உடையது என்பது இவ்விடத்தில் ‘த³ம்பா⁴ர்த²ம்’ என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—‘டம்பத்தை உள்ளே உடையதாயும்’ என்று. டாம்பிகன் என்பதை ப்ரஸித்தப்படுத்துவதில் ஆசையில்லாத என்றர்த்தம். கேவலம் டம்பத்தோடுகூடியது தாமஸம். ஆசையினால் இந்தலோகத்திலுண்டானதும் பரலோகத்திலுண்டானதுமாகிய பலங்களைச் சேர்த்து ஆசைப் படுவதுதான் இவ்விடத்தில் ராஜஸம் என்று சொல்லப்படுகிறது என்

---

1 *தாதுபாடம். ‘யஜ’ என்னும் தாது தேவதையின் பூஜையைச் சொல்லுகிறது.*

யதாயும் கீர்த்தியாகிற ப்ரயோஜனத்திற்காகவும் எந்தயாகம் செய்யப்படுகிறதோ அந்த யாகத்தை ராஜஸம் என்றறி. 12

விதிஹீநமஸ்ருஷ்டாந்நம் மந்த்ரஹீநமதக்ஷிணம் |
ஶ்ரத்தாவிரஹிதம் யஜ்ஞம் தாமஸம் பரிசக்ஷதே || 13

'ஶாஸ்த்ரோவிதாநோக்தம் க்ருத்ஸ்நம்' என்று பொதுவாக அருளிச்செய்யப்பட்டது என்று திருவுள்ளம். 'பொருந்தாதவை' என்று பன்மையினால் ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் 'க்ருத்ஸ்நம்' என்னும் பதம் விவரிக்கப்பட்டது. அதாவது ஶ்ரத்தையோடு கூடியதாயிருந்தபோதிலும் ஶ்ரத்தையில்லாமலிருந்தபோதிலும் அவைகளெல்லாம் அஸுரஸ்வபாவமுடையவர்களினுடைய நிஷ்டை என்பது தாத்பர்யம். மேலும் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படாத யாகம், தானம், தபஸ்ஸு, முதலிய எல்லாக் கர்மங்களும் என்றதாகவுமாம். 'வல்லசுரர்க்கு' என்பதற்கு 1 'யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய' என்று கீழ் அத்யாயத்தில் சொல்லியிருக்கிறபடி தங்களுடைய பலத்தையே ப்ரதான காரணமாகக்கொண்ட என்றர்த்தம். அன்றிக்கே 'வல்' என்பதினால் ஶாஸ்த்ரங்களுக்குக் கீழ்படியாமையாகிற வன்மையைச் சொல்லுகிறதாகவுமாம். 'வன்குணப்படி' என்பதினால் ஸத்வம் முதலிய குணங்கள் வெவ்வேறான ஸ்வபாவங்களையுடையவைகளானதையினால் அப்படிப்பட்ட குணங்களின் ஸம்பந்தத்தோடுகூடிய ஶ்ரத்தைகளினால் செய்யப்படுகிற யாகம், தானம், முதலிய கர்மங்களும் மூன்றுவிதங்கள் என்று கருத்து. இத்தால் ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் 'ஶாஸ்த்ரீயம் குணத: த்ரயம்' என்பதின் அர்த்தம் விவரிக்கப்பட்டது. 'மறை நிலைதன்னை வகுத்தோர்' என்பதினால் இவ்விடத்தில் வைதிகக் கர்மங்களுக்கு லக்ஷணத்தைச் சொல்லியிருப்பது அவைதிகமான கர்மங்களை விட இவைகளைத் தனித்துக் கண்டறிவதற்காக என்பதேற்பட்டது. 'குறிமூன்றின் மேன்மையும்' என்பதினால் ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் 'லக்ஷணம் ஶாஸ்த்ரஸித்தஸ்ய த்ரிதா' என்றருளிச் செய்யப்பட்டிருந்தபோதிலும் கீதையில் 2 'ப்ரஹ்மவாதிநாம்', 3 'மோக்ஷகாங்க்ஷிபி:', 4 'ஸத்பாவே ஸாதுபாவே', இத்யாதிகளினால் இவைகளுக்கு மேன்மை ஏற்படுகிறபடியினாலும் 5 'அஶ்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதம் ச யத் । அஸதித்யுச்யதே பார்த ந ச தத்ப்ரேத்ய நோ இஹ ॥' என்கிற ஶ்லோகத்தில் இப்படிச் செய்யாதது ஒருவித பலத்திற்கு ஸாதனமல்லவாகையினால் அஸத்தென்று சொல்லப்படுகிறது என்று மற்றதை நிந்தித்திருப்பதினாலும் வைதிகக் கர்மங்களும் அத்துடன் சேர்ந்தவைகளான அடையாளங்களின் மேன்மையும், சொல்லப்பட்டதாகிறது என்று திருவுள்ளம். 'மறையுமிழ்ந்தான்' என்பதினால் 6 'ப்ராஹ்மணாஸ்தேந வேதாஶ்ச யஜ்ஞாஶ்ச விஹிதா:'

---

1 பகவத்கீதை - 16-15.
2 பகவத்கீதை-17-24.
3 பகவதகீதை - 17-25.
4 பகவத்கீதை - 17 - 26.
5 பகவத்கீதை - 17 - 28.
6 பகவத்கீதை - 17 - 23.

'ஸ்ரஷ்டா' என்கிற இடத்தில் வேதங்களையும் வைதிககர்மங்களையும் அதைச்செய்ய அதிகாரிகளான ப்ராம்மணர்களையும் ஸ்ருஷ்டித்தவனாகிய என்னால் என்று பாஷ்யத்தில் அருளிச்செய்யப்பட்டபடியே முதலில் 1 'சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்' 2 'க்ஷராத்ரவிஸ்ருஜாம்யஹம்', இத்யாதிகளிலும் ப்ராம்மணர் முதலியவர்களை ஸ்ருஷ்டித்தவனையும், 3 'ஆதியிலேஎவன் ப்ரம்மாவை ஸ்ருஷ்டிக்கிறானோ, எவன் வேதங்களை அவனுக்குபதேசிக்கிறானோ' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்திலும், 4 'ஶ்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா' என்றும், 5 பன்னுகலை நால்வேதப்பொருளையெல்லாம் பரிமுகமாயருளிய எம்பாமன்' என்றும், 6 'அன்னமதாயிருந் தங்கறநூலுரைத்த' என்றும், சொல்லுகிறபடியே வேதவைதிகங்களை ஸ்ருஷ்டித்தவனாகிய ஸ்ரீ க்ருஷ்ணன் என்று திருவுள்ளம். 'உமிழ்ந்தான்' என்பதினால் ப்ரளயகாலத்தில் மறைந்துகொண்டிருந்த வேதங்களை மறுபடியும் ப்ரகாசம் செய்தான் என்பதும் அதில் ப்ரயாஸமில்லாமல் செய்தான் என்பதும் ஏற்பட்டது. 'வாசவன்றன் சிறுவனுக்கே' என்பதினால் 7 'மா ஶுச: ஸம்பதம் தைவீமபிஜாதோஸி பாண்டவ' என்கிற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அதிகாரியின் வைலக்ஷண்யம் சொல்லப்படுகிறது. 18

சீரார்தூப்புல் திருவேங்கட முடையான் திருவடிகளே சரணம்.

---

1 பகவத்கீதை - 4 - 13.

2 பகவத்கீதை - 8.

3 ஶ்வேதாஶ்வதரம் - 6 - 17.

4 விஷ்ணுதர்மம் - 76 - 31. ஶ்ருதி, ஸ்ம்ருதி, முதலியவைகள் என்னுடைய உத்திரவுகள்.

5 பெரிய திருமொழி - 7.

6 பெரிய திருமொழி - 11 - 4 - 8.

7 பகவத்கீதை - 16 - 5.

ஸ்ரீ பகவத்கீதை.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

பா - அ] கீழ் இரண்டத்யாயங்களினால் மோக்ஷம், இதர புருஷார்த்தங்கள், இவைகளுக்குக்காரணமாகிய நு,வேதத்தில்சொல்லப்படுகிறயஜ்ஞம்' தபஸ்ஸு, தானம் முதலிய கர்மங்களே ஒழிய வேறல்ல. வேதத்தில் சொல்லப்படுகிற கர்மத்திற்கும் பொதுவாகிய லக்ஷணம் ப்ரணவத்தோடு சேர்ந்திருப்பது. அதில் மோக்ஷம், இதர புருஷார்த்தங்கள், இவைகளுக்கு ஸாதனமான கர்மங்களுக்கு ஒன்றுக்கொன்று வ்யத்யாஸம் 'தத்', 'ஸத்', என்னும் பதங்களினால் சொல்லப்படுகிறபடியினால்.மோக்ஷத்திற்கு ஸாதனமான கர்மம், பலத்தில் ஆசையில்லாத யஜ்ஞம் முதலியவை. அவைகளை ஆரம்பிப்பதும ஸத்வகுணம் வ்ருத்தியடைவதினால் உண்டாகிறது. ஸத்வம் வ்ருத்தியடைவதும் ஸத்வகுணமுடைய ஆஹா

தா] செய்ய வேண்டிய கர்மங்களை நிரூபிப்பதில் தாத்பர்யத்தையுடைய கடைசி மூன்று அத்யாயங்களுக்குள் இந்த அத்யாயம் கடைசி என்பதைத் தெரிவிப்பதற்காக பதினாறாவது, பதினேழாவது அத்யாயங்கள் தேவஸ்வபாவமுடையவர்கள், அஸுர ஸ்வபாவமுடையவர்கள், இவர்களின் பிரிவை நிரூபித்துக்கொண்டு அதன் வழியாக விடத்தகுந்தது, அங்கீகரிக்கத் தகுந்தது இவைகளைப் பிரித்துக் காட்டுகிறபடியினால் தொடர்ச்சி ஒன்றாயிருக்கிறது என்பதை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'கீழ் இரண்டத்யாயங்களினால்' என்று. 'வேதத்தில் சொல்லப்படுகிற கர்மத்திற்கும்' என்றாரம்பித்துப் பிரித்திருப்பதற்குக் கருத்தாவது— இந்தப் பிரிவு விசேஷணங்களின் ஸாமர்த்தியத்தினால் ஏற்பட்டது. ப்ரம்மம் நமக்குப் புலப்படாதாகையினால் அதை 'தத்' என்று சொல்லி யிருக்கிறது. அதைப் பற்றிய ஜ்ஞானம் மங்களகரமாகையினால் 'ஸத்' என்னும் பதம் அதைச் சொல்லுகிறது. இவை மூன்றும் முறையே ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னப்படுகிறது என்று பிரித்திருப்பதோ வெனில் தன்னுடைய ஊஹத்தினால் கல்பனை செய்யப்பட்டது—என்பது. இப்படிக் கீழ்ச் சொல்லப்பட்ட

ரங்களைப் புசிப்பதினால் என்று சொல்லப்பட்டது. பிறகு மோக்ஷத்திற்குக் காரணமாகச் சொல்லப்படுகிற த்யாகம், ஸந்நியாஸம் இவையிரண்டும் ஒன்றென்பதும், த்யாகத்தின் ஸ்வரூபமும், எல்லாவற்றிற்கும் ஈஶ்வரனாகிய பகவானிடத்தில் எல்லாக்கர்மங்களுக்கும் கர்த்தாவாயிருக்கிறான் என்பதை அனுஸந்திப்பதும், ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் இவைகளின் கார்யங்களை நிரூபிப்பதினால் ஸத்வகுணமே அவஶ்யம் அங்கீகரிக்கத்தகுந்தது என்பதும், தன்னுடைய வர்ணாஶ்ரம தர்மங்களுக்குத்தகுந்த கர்மங்கள் பரமாத்மாவிற்கு ஆராதனங்களாக இருந்து பரமாத்மாவை அடைவதை உண்டாக்குகிற விதமும், கீதாஶாஸ்த்ரம் முழுவதற்கும் ஸாரமான அர்த்தமாகிய பக்தியோகமும் என்கிற இவைகள் சொல்லப்படுகின்றன. அவ்விடத்தில் முதலில் த்யாகம், ஸந்நியாஸம் இவை

அர்த்தங்களுக்குள் மோக்ஷத்திற்கு ஸாதனமாகியபாகத்தைநிரூபிப்பது மேல் அத்யாயத்தில் செய்யப்படுகிறது என்று ஸங்கதியை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—‘பிறகு’ என்றாரம்பித்து. 1 ‘ஈஶ்வரே கர்த்ருதா புத்தி: ஸத்வோபாதேயதாந்திமே । ஸ்வகர்ம பரிணாமஶ்ச ஶாஸ்த்ரஸாரார்த்த உச்யதே ॥’ என்கிற ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் த்யாகம், ஸந்நியாஸம் இவைகள் ஒன்றென்பதையும் அவைகளின் ஸ்வரூபங்களையும் சொல்லாமலிருந்தது பகவானே கர்த்தா என்கிற புத்திக்கு அங்கமாக இதை உபந்யாஸம் செய்திருப்பதினால் என்று நினைக்க வேண்டியது. ஸத்வ குணத்தை அங்கீகரிக்க வேண்டுமென்பது இவ்விடத்தில் தாத்பர்யத்தினால் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் இவைகளின் கார்யங்களை நிரூபிப்பதினால்’ என்று. 2 ‘ஸ்வதர்மஜ்ஞானவைராக்யஸாத்யபக்த்யேககோசர:’ என்று ஸங்க்ரஹத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட முக்யமாகச் செய்ய வேண்டியதைச் சொல்லுகிறது இவ்விடத்தில் ‘ஶாஸ்த்ரஸாரார்த்த:’ என்னும் பதம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— ‘ஸாரமான அர்த்தமாகிய பக்தியோகமும்’ என்று. ஸ்வர்க்கம் முதலியவைகளுக்கு ஸாதனங்களாகிய யஜ்ஞம், தானம் முதலியவைகளினுடைய ஸ்வரூபம் ஒன்றாயிருந்த போதிலும் எதின் ஸம்பந்தத்தினால் அவைகள் மோக்ஷத்திற்கு ஸாதனங்களாகின்றனவோ அப்படிப்பட்டதை இப்போது விஶேஷணங்களுடன் நிரூபிப்பதற்காக அர்ஜுநன் கேட்கிறான் என்கிற அபிப்ராயத்தினால் இவ்விடத்தில் கேள்விக்கு ஸங்கதி சொல்லுகிறார்—‘அவ்விடத்தில் முதலில்’

---

1 கீதார்த்த ஸங்க்ரஹ ஶ்லோகம் - 22. 2 கீதார்த்த ஸங்க்ரஹ ஶ்லோகம் - 1

Accn. No.

கள் வெவ்வேறா? ஒன்றா? என்று நிஶ்சயம் செய்துகொள்ளுவதற்காகவும், அதின் ஸ்வரூபத்தை நிஶ்சயம் செய்து கொள்ளுவதற்காகவும் அர்ஜுநன் கேட்கிறான்—

|| அர்ஜுந உவாச ||

அர்ஜுநஃ — அர்ஜுநன், உவாச — சொன்னான்.

ஸந்ந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்த்வமிச்சாமி வேதிதும் |
த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேஶ ப்ருதக்கேஶிநிஷூதந || 1

ப - ரை] கேஶிநிஷூதந - கேசி என்னும் அஸுரனைக் கொன்றவனாகிய, மஹாபாஹோ - பாஹுபலமுடையவராகிய, ஹ்ருஷீகேஶ - ஸ்ரீ க்ருஷ்ண, ஸந்ந்யாஸஸ்ய - ஸந்நியாஸத்தினுடையவும், த்யாகஸ்ய ச - த்யாகத்தினுடையவும், தத்த்வம் - உண்மையை, ப்ருதக் — தனியாக, வேதிதும் - அறிய, இச்சாமி - விரும்புகிறேன். 1

பா] த்யாகம், ஸந்நியாஸம் இவைகள் மோக்ஷத்திற்கு ஸாதனங்களாக * 'கர்மத்தினாலும் அடையவில்லை, ப்ரஜைகளையுண்டு பண்ணுவதினா

என்று. ஸத்வ குணம் வ்ருத்தி யடைவதையும் அதற்குபாயத்தையும் சொல்லியிருப்பது ஸாத்விகத்யாகத்தோடு கூடிய மோக்ஷத்திற்கு ஸாதனங்களாகியகர்மங்களைச்செய்வதற்காக வாதலாலும், 'ஸந்ந்யாஸ' என்னும் பதம் ஒருவித ஆஶ்ரமத்தைச் சொல்லுகிறதாகையினாலும், விடுவது என்பதை மாத்திரம் சொல்லுமாகையினாலும், இவைகள் ஒன்றா? வெவ்வேறா? என்கிற ஸந்தேஹம் உண்டாகிறது. வாதிகள் வெவ்வேறாக அர்த்தங்களைச் சொல்லுகிறபடியினால் இவைகளின் ஸ்வரூபத்தைப் பற்றிய நிஶ்சயமில்லை. 'த்யாகம்', 'ஸந்ந்யாஸம்' இவைகளைப்பற்றி விஶேஷித்து உண்மையை அறிய வேண்டுமென்கிற ஆசைக்குக் காரணத்தைச்சொல்லுகிறார்—'த்யாகம், ஸந்நியாஸம், இவைகள்' என்றாரம்பித்து. கர்மங்களின் ஸ்வரூபம் ஸ்வர்க்கம், மோக்ஷம் இவைகளுக்குப் பொதுவாக இருக்க த்யாகம் முதலிய பேர்களை உடைய விஶேஷத்தோடு சேர்ந்திருப்பதினாலேயே அல்லவோ மோக்ஷத்திற்கு ஸாதனங்களாகின்றன. ஆகையினால் இதில் உசிதானுசிதங்களை யோசித்துப் பகுத்தறியுமிடத்து விஶேஷணத்தையே மோக்ஷத்திற்கு ஸாதனம் என்று சொல்லியிருக்கிறது. ஸந்தேஹம், விபரீதமான ஜ்ஞானம் இவைகளைத் தடுக்கக் கூடிய விஶேஷம் இவ்விடத்தில் 'தத்த்வம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'உண்மையை'

* தைத்திரீயம் - நாராயணம் - 10 - 21-22.

லும் அடையவில்லை, பணத்தினாலும் அடையவில்லை, சிலர் த்யாகத்தினால் அடைந்தார்கள்' என்றும், 'வேதாந்தங்களில் சொல்லப்படுகிற ஜ்ஞானத்தினால் நன்றாய் நிஶ்சயம் செய்யப்பட்ட அர்த்தங்களையுடைய யதிகள் பரிசுத்த ஸத்வகுணம் உடையவர்களாய் ஸந்நியாஸயோகத்தினால் (அடைகிறார்களோ), அவர்கள் ஶரீரம் மரணமடையும் ஸமயத்தில் பகவானுடைய லோகத்தில் எல்லா வஸ்துக்களையும் விட மேலான பகவானையடைந்து முக்தியை அடைகிறார்கள்' என்று மர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யங்களில் சொல்லப்பட்டன. இந்த ஸந்நியாஸம், த்யாகம் இவைகளின் உண்மையைத் தனியாகத்தெரிந்து கொள்ளவிரும்புகிறேன். இதின் கருத்தாவது இந்த ஸந்நியாஸம், த்யாகம் என்னும் பதங்கள் வெவ்வேறர்த்தத்தைச் சொல்லுகிறதா?அல்லது ஒரே அர்த்தத்தைச்சொல்லுகிறதா? வெவ்வேறர்த்தங்களைச் சொல்லுவதாக இருந்தால் அப்பொழுது இவைகளின் ஸ்வரூபங்களை வெவ்வேறாக அறியவிரும்புகிறேன். ஒன்றாகயிருந்தபோதிலும் அதின் ஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்லவேண்டியது—என்பது.

பா-அ] பிறகு அவைகளின் ஸ்வரூபம் ஒன்று தான், அதுவும் இப்படிப்

என்று, 'வெூயக தகூம் வெஷிதாஜிூாஜி (தனித்தனியாக இவைகளின் உண்மையை அறிய விரும்புகிறேன்)' என்று சொல்லியிருக்கும்பொழுது இவைகள் வெவ்வேறென்று தெரிந்துகொண்டிருக்கிற அர்ஜுனனுக்கு அவைகளின் உண்மையான ஸ்வரூபத்தை அறியவேண்டுமென்கிற ஆசை உண்டாயிருக்கிறதென்று தோன்றுகிறது. அது யுக்தமல்ல, இவைகள் வெவ்வேறென்று நிஶ்சயம் செய்வதற்குக்காரணம் முன்பில்லாமையினாலும்,மேலே இவைஇரண்டும் ஒன்றென்றுசொல்லப்போகிறபடியினாலும். ஆகையினால் இப்படிக்கேட்டிருப்பது உசிதமல்ல, மேலே பதில் சொல்லியிருப்பது பொருந்தாதாகையினால் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார் — 'இதின் கருத்தாவது' என்றாரம்பித்து. உண்மையை அறிய விரும்புகிறேன் என்கிற இவ்வளவு மாத்திரம் தான் இங்கே சொல்லப்படுகிறது. வெவ்வேறாக என்று சொல்லியிருப்பதோவெனில் ஸந்தேஹத்தின் ஒரு பாகத்தை எடுத்துக் காட்டியிருக்கிறது. வெவ்வேறாக இருந்தால் அதையும் அறியவிரும்புகிறேன் என்று வாக்யத்தைத் திருப்பிவைத்துக்கொள்ள வேண்டியதாகவுமாம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— 'இந்த' என்றாரம்பித்து. 1

தா] இவைகள் வெவ்வேறா? ஒன்றா? என்று ஸ்வரூபத்தை அறியவேண்டுமென்கிற ஆசையினாலே கேட்டிருந்தால் அதில் 'காஜ்ூாநாம் க உூணாம்' என்றாரம்பித்து வெவ்வேறு மதங்களை உபந்நியாஸம் செய்தி

பட்டது என்று நிஶ்சயம் செய்வதற்காக வாதிகள் வெவ்வேறாகச் சொல்லியிருப்பதை நிரூபித்துக்கொண்டு ஸ்ரீ பகவான் சொல்லுகிறார்—

|| ஸ்ரீபகவாநுவாச ||

ஸ்ரீபகவாந் - பகவானாகிய ஸ்ரீ க்ருஷ்ணன் உவாச - சொன்னார்.

காம்யாநாம் கர்மணாம் ந்யாஸம் ஸந்ந்யாஸம் கவயோ விது: |
ஸர்வகர்மபலத்யாகம் ப்ராஹுஸ்த்யாகம் விசக்ஷணா: || 2

ப-ரை[1] கவய: (சில) புத்திமான்கள், காம்யாநாம்-காம்யங்களாகிய, கர்மணாம் - கர்மங்களினுடைய, ந்யாஸம் - விட்டுவிடுவதை, ஸந்ந்யாஸம் - ஸந்நியாஸமாக, விது: - அறிகிறார்கள், விசக்ஷணா: - (சில) பண்டிதர்கள், ஸர்வகர்மபலத்யாகம் — எல்லாக் கர்மங்களினுடையவும் பலங்களை விட்டுவிடுவதை, த்யாகம் - த்யாகமாக, ப்ராஹு: - சொன்னார்கள். 2

பா] சில வித்வான்கள் காம்யகர்மங்களின் ஸ்வரூபத்தை விட்டுவிடுவதே

ருப்பது எந்தப் பாகத்தில் சேருகிறது என்ற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம்சொல்லுகிறார்—'பிறகு' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது— ந்யாயங்களைக் கொண்டல்லவோ இவ்விடத்தில் நிஶ்சயம் நிரூபிக்கப் படுகிறது. ஸந்தேஹமுள்ள இடத்திலேயே ந்யாயத்தை நிரூபிக்கிறதற்கு இடம் உண்டாகிறது. ஸந்தேஹமும் இவ்விடத்தில் வாதிகள் வெவ்வேறாகச் சொல்லி யிருப்பதினால் உண்டாகிறது என்று ந்யாயத்தை நிரூபிப்பதற்கு இடமுண்டு என்று சொல்லுவதற்காக வாதிகள் வெவ்வேறாகச் சொல்லி யிருப்பதை உபந்யாஸம் செய்திருக்கிறது—என்பது. இத்தால் ஸந்நியாஸம், த்யாகம் இவைகளின் அர்த்தம் முன்பு சொல்லப்பட்டிருந்தபோதிலும் ஸந்தேஹத்தை நீக்குவதற்காக இந்த அத்யாயத்தில் மறுபடியும் கேழ்க்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஒன்றென்று ஒப்புக்கொண்டு பதில் சொல்லுகிற படியினால் வெவ்வேறென்பதை நிராகரித்ததும் ஏற்பட்டது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இவைகளின் ஸ்வரூபம் ஒன்று தான்' என்று. தன்னுடைய மதம் 1'நிஶ்சயம் ஶ்ருணு' என்று மேலே சொல்லப்போகிறபடியினால் 'கவய:', 'விசக்ஷணா:' என்கிற இரண்டு பதங்களும் அவர்களால் சொல்லப்படுகிற அர்த்தம் விசேஷமானது என்பதற்காக அர்த்தத்தைச் சொல்லுகிறவர்களின் கௌரவத்தைச் சொல்லுகிறதல்ல. பின்னை எப்படி என்னில் வெவ்வேறாகச் சொல்லு

1 பகவத்கீதை - 18 - 4

ஸந்ந்யாஸமாகத்தெரிந்து கொள்ளுகிறார்கள். சில பண்டிதர்கள் நித்யம், நைமித்திகம், காம்யம் இந்த எல்லாக் கர்மங்களினுடையவும் பலங்களைவிட்டுவிடுவதே மோக்ஷ ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற ‘த்யாக’

வதற்குபயோகமான ஜ்ஞானம் மாத்திரத்தைச் சொல்லுகின்றன என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘சில வித்வான்கள்’ என்று. அடுத்த ஶ்லோகத்தில் வாதிகள் வெவ்வேறென்பது ‘ஏகே’, ‘அபரே’ என்று வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியினால் இந்த ஶ்லோகத்திலும் அப்படியே சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் ‘சில’ என்று சொல்லப்பட்டது. ‘காம்யாநாம் கர்மணாம் ந்யாஸம்’ என்று விஶேஷித்துச் சொல்லியிருப்பதினால் மற்றவைகளை விடக்கூடாதென்பது ஏற்படுகிறது. மேலே ‘ஸர்வகர்மபலத்யாகம்’ என்று விஶேஷித்துச் சொல்லியிருப்பதினால் காம்யகர்மங்களின் ஸ்வரூபத்தை விட்டுவிட வேண்டுமென்பதும் ஏற்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘ஸ்வரூபத்தை விட்டுவிடுவதே’ என்று. காம்ய கர்மங்களின் ஸ்வரூபத்தை விட்டுவிட வேண்டுமென்பவர்களின் கருத்தாவது நித்யம், நைமித்திகம், இவைகளைப்போலக் காம்ய கர்மங்களைச் செய்யாவிடில் தோஷமுண்டாகிற படியினாலாவது வேறு கர்மங்களைச்செய்ய யோக்யதை இல்லாமற்போய்விடுமே என்கிற பயத்தினாலாவது காம்யகர்மம் அநுஷ்டிக்கப்படுகிறதில்லை, த்ரிவர்க்கபலங்களை அடைவதற்காகவுமில்லை, அவைகள் மோக்ஷத்திற்கு விருத்தங்களாகையினால். மேலும் அந்த காம்யகர்மங்கள் தாங்களே மோக்ஷத்திற்கு ஸாதனமென்பதுமில்லை, உபாஸனம் முதலியவைகள் வ்யர்த்தமாய்ப்போக வேண்டிவருமாகையினால் உபயோகம் வெவ்வேறாக ஏற்பட்டிருப்பதினாலே வித்யைகளுக்கு அங்கமாக இவைகளை அங்கீகரிக்க வேண்டியதென்பதுமில்லை, யஜ்ஞம் முதலியவைகளைச்செய்யவேண்டுமென்று சொல்லுகிற ஶ்ருதிவாக்யம் நித்யங்களையும், நைமித்திகங்களையும் மாத்திரம் பற்றிச் சொல்லுகிறதாயிருந்தாலும் விரோதமில்லையாகையினால். ஆகையினாலல்லவோ 1 ‘ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதி ஶ்ருதேரஶ்வவத்’ என்கிற அதிகரணம் ஆஶ்ரம தர்மங்களை அவஶ்யம் செய்யவேண்டியது என்பதைச் சொல்லுகிறது என்று பாஷ்

---

1 *ஶாரீரக ஸூத்ரம் - 3 - 4 - 26-யஜ்ஞம் முதலியவைகளினால் அறிய விரும்புகிறார்கள் என்று ஶ்ருதிசொல்லியிருக்கிறபடியினால்-அஶ்வவத்-குதிரையைப்போல, அதாவது குதிரையினால் போக விரும்புகிறான் என்கிற வார்த்தையினால் குதிரையைப்போல, ஸர்வாபேக்ஷா ச - யஜ்ஞம் முதலிய எல்லாக் கர்மங்களையும் அபேக்ஷிப்பதும் (உண்டு).*

என்னும் பதத்திற்கு அர்த்தம் என்று சொன்னார்கள். இவ்விடத்தில் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற 'த்யாகம்' ஆவது காம்யகர்மங்களின் ஸ்வரூபத்தைப்பற்றியது என்றும், எல்லாக் கர்மங்களினுடைய பலங்களைப்பற்றியது என்றும் விவாதப்படுகிறார்கள் என்று நிரூபிக்கும் பொழுது ஓரிடத்தில் 'ஸந்ந்யாஸ' என்னும் பதத்தையும் மற்றோரிடத்தில் 'த்யாக' என்னும் பதத்தையும் ப்ரயோகித்தார். ஆகையினால் 'த்யாக', 'ஸந்ந்யாஸ', என்னும் பதங்கள் ஒரே அர்த்தத்தைச்

யத்தில் சொல்லப்படுகிறது. ஆகையினால் ஸ்வர்க்கம் முதலிய பேர்களையுடைய நரகங்களுக்குக் காரணங்களாகிய காம்ய கர்மங்கள் மோக்ஷத்திலாசையுடையவர்களால் அநுஷ்டிக்கத் தக்கவைகளல்ல— என்பது. எல்லாக் கர்மங்களினுடையவும் பலங்களை விட்டுவிட வேண்டுமென்று சொல்லுகிறவர்களின் கருத்தோவெனில்—பலம் விரோதமாயிருக்கிறபடியினாலல்லவோ காம்ய கர்மங்களை விட்டுவிட வேண்டுமென்று ஆக்ஷேபிக்கப் படுகிறது. ஆகையினால் பலத்தை விட்டுவிடலாமே. ப்ரயோஜன மற்ற கார்யத்தை அநுஷ்டிக்க வேண்டி வருமே என்பது மில்லை, நித்யங்களையும், நைமித்திகங்களையும் போலவே பகவானுடைய ப்ரீதிமாத்திரத்திற்காகக் காம்யகர்மங்களையும் அநுஷ்டானம்செய்வது பொருந்துமாகையினால். இப்படி விதியில்லையே என்பது மில்லை, 1 'ஓ! கார்கியே! எவன் இந்த அக்ஷரத்தைத் தெரிந்து கொள்ளாமல் அநேகம் ஆயிரம் வருஷங்கள் ஹோமங்களைச் செய்கிறானோ, யாகங்களைச் செய்கிறானோ, தபஸ்ஸைச் செய்கிறானோ, அவைகள் இவனுக்கு அழியக் கூடியவைகளாகவே ஆகின்றன' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளில் அக்ஷரம் என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற பரமாத்மாவைத் தெரிந்து கொள்ளுவதினாலும், தெரிந்து கொள்ளாமையினாலும், அதே கர்மம் நித்யமாயும் அநித்யமாயு மிருக்கிற பலங்களுக்கு ஸாதனங்களாகின்றன என்று ஶ்ருதியில் சொல்லி யிருக்கிறபடியினால். ஆகையினால் நித்யங்களையும், நைமித்திகங்களையும் போலவே காம்ய கர்மங்களின் ஸ்வரூபத்தைவிட வேண்டியதில்லை—என்பது. விவாதம் வெவ்வேறு விஷயத்தைப் பற்றியிருக்கிறதென்பது பொருந்தாதாகையினால் இவ்விடத்தில் 'த்யாக', 'ஸந்ந்யாஸ' என்னும் பதங்கள் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்பது அவஶ்யமாக ஒப்புக்கொள்ள வேண்டியிருப்பதினால் வெவ்வேறர்த்தங்களைச் சொல்லுகின்றன என்கிற ஆக்ஷேபத்திற்குப் பரிஹாரமும் ஏற்பட்டது, என்று சொல்லுகிறார்— 'இவ்விடத்தில்'

1 ப்ருஹதாரண்யகம் - 5 - 8 - 10

சொல்லுகின்றன வென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட தென்று அறியப்படுகிறது. அப்படியே * 'நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம' என்று 'த்யாக' என்னும் பதத்தைக் கொண்டே நிஶ்சயத்தைச் சொல்லி யிருக்கிறபடியினாலும், † 'நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே | மோஹாத்தஸ்ய பரித்யாக: தாமஸ: பரிகீர்த்தித:॥', ‡ 'அநிஷ்டமிஷ்டம் மிஶ்ரம் ச த்ரிவிதம் கர்மண:

என்றாரம்பித்து. இத்தால் 'ஸந்ந்யாஸ, த்யாக' என்னும் பதங்கள் தனித்தனி அர்த்தங்களைச் சொல்லுகின்றன என்று ஒப்புக்கொண்டு ஒன்று காம்யகர்மங்களின் ஸ்வரூபத்தை விட்டு விடுவதைச் சொல்லுகிறது, மற்றொன்று நித்யநைமித்திக கர்மங்களின் பலங்களை விட்டுவிடுவதைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள். இவ்விடத்தில் காம்யகர்மங்களைத் தவிர மற்றகர்மங்களின் பலங்களைவிட்டு விடுவதுஎன்று சொல்லப்படவில்லையல்லவா ஆகையினால் சுருக்கிச் சொல்லுவதற்குக் காரணமில்லாமையினால் மூன்றுவிதமான கர்மங்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. அதுதான் 'நித்யம், நைமித்திகம்' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டது. நித்ய கர்மங்களுக்கு 4 'ப்ராஜாபத்யம் க்ருஹஸ்தாநாம்' என்றிவை முதலிய வசனங்களினால் பலம் உண்டென்று அறியப்படுகிறது. இந்த ஶ்லோகத்தில் 'த்யாக', 'ஸந்ந்யாஸ', இந்தப் பதங்களுக்கு அர்த்தம் வெவ்வேறு என்று சொல்லப்படுகிறது என்றுசொல்லுவதை நிராகரிப்பதற்காக ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிற தென்பதில் ஸ்பஷ்டமான இரண்டு காரணங்களைச் சொல்லுகிறார்—'அப்படியே' என்றாரம்பித்து. இரண்டு அர்த்தங்களைப்பற்றி இவ்விடத்தில் விசாரம்செய்வதாக இருந்தால் அவைகளில் ஒன்றைப்பற்றி நிஶ்சயம்செய்திருப்பது பொருந்ாதல்லவா என்கிற அபிப்ராயத்தினால் 'த்யாகம் என்னும் பதத்தைக்கொண்டே' என்று சொல்லப்பட்டது. 'ஒரே இடத்தில் ப்ரயோகித்திருப்பதைப் பார்க்கிறபடியினால்' என்பதின் கருத்தாவது—'நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே' என்று தடுக்கப்பட்டிருக்கிற ஸந்ந்யாஸமே அல்லவோ 'மோஹாத்தஸ்ய பரித்யாக:' என்று 'த்யாக' என்னும் பதத்தினால் அநுவாதம் செய்துகொண்டு தாமஸம் என்று நிந்திக்கப்படுகிறது அப்படிக்கில்லாவிடில்

* பகவத்கீதை - 18 - 4 † பகவத்கீதை - 18-7 ‡ பகவத்கீதை 18 - 12.

4 விஷ்ணு புராணம் - 1 - 6 37-க்ரஹஸ்தாநாம் - க்ரஹஸ்தர்களுக்கு, ப்ராஜாபத்யம் - ப்ராஜாபதியின் லோகத்தை யடைவது பலம்.

பலம் | பவத்யத்யாகிநாம் ப்ரேத்ய ந து ஸம்ந்யாஸிநாம் க்வசித் ||' என்றிவைகளில் ஒன்றுக் கொன்று ஒரே இடத்தில் ப்ரயோகித்திருப்பதைப் பார்க்கிறபடியினால் இவைகள் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்பது ஏற்படுகிறது என்று நிஸ்சயிக்கப்படுகிறது. 2

த்யாஜ்யம் தோஷவதித்யேகே கர்ம ப்ராஹுர்மநீஷிண: |
யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யமிதி சாபரே || 3

ப - ரை] ஏகே - சிலர், மநீஷிண:-புத்திமான்கள், தோஷவத்-தோஷங்களைப்போலவே, அல்லது தோஷவத் - ராகம், முதலிய தோஷங்களையுடைய, கர்ம - கர்மமானது, த்யாஜ்யம் - விடத்தக்கது, இதி - என்று, ப்ராஹு:-சொன்னார்கள், அபரே - மற்றவர்கள், யஜ்ஞதாநதப:கர்ம-யஜ்ஞம், தானம், தபஸ்ஸு, முதலிய கர்மம், ந த்யாஜ்யம் -- விடத்தக்கதல்ல, இதி - என்று (சொன்னார்கள்). 3

'ஜரத்கவ' முதலிய வாக்யங்களைப்போல ஒன்றோடொன்று பொருத்தமில்லாமல் போக வேண்டிவரும். இப்படியே 'பவத்யத்யாகிநாம் ப்ரேத்ய' என்று சொல்லப்பட்ட அர்த்தமே 'ந து ஸந்ந்யாஸிநாம் க்வசித்' என்று அதற்குமாறான அர்த்தத்தைக்கொண்டு உறுதிப்படுத்தப்படுகிறது. வேறொன்றை விதித்திருப்பது மற்றொன்றில்லாமைக்கு விரோதமில்லை யல்லவா. ஆகையினால் இந்த இரண்டு பதங்களும் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றனவென்று இவ்விடத்திலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது — என்பது. இவ்விடத்தில் நிஸ்சயிக்கப்படுகிறதென்பதற்கு முன், பதில் சொல்லுகிற பகவானால் என்று சேர்த்துக் கொள்ளவேண்டியது. 2

இப்படி 'காம்யாநாம்' என்கிற ஸ்லோகத்தினால் பலங்கள் விரோதமாக இருக்கின்றன என்றும் அப்படி இல்லை என்றும் சொல்லுகிறபடியினால் வாதிகளின் அபிப்ராயத்தில் விரோதம் காண்பிக்கப்பட்டது. பிறகு 'த்யாஜ்யம் தோஷவத்' என்கிற ஸ்லோகத்தினால் ஸ்வரூபத்திலேயே தோஷத்தோடு கூடியதாகையினாலும் அப்படிக்கில்லாமையினாலும் பாபம் என்றும், அப்படி இல்லை என்றும், வாதிகளின் விவாதம் காண்பிக்கப்படுகிறது. ஸாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கிற ஹிம்ஸையும் பொதுவாக ஸாஸ்த்ரத்தில் மறுக்கப்பட்டிருப்பதினால் தோஷம் தான் என்று ஸாங்க்யர்களினால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்

பா] சில ஸாங்க்யர்களும் அவர்கள் மதத்தை அநுஸரித்த வைதிகர்களும் ராகம் முதலிய தோஷங்களைப் போலவே ஸம்ஸார பந்தத்திற்குக் காரணங்களாகையினால், அல்லது ராகம் முதலிய தோஷங்களையுடைய தாகையினாலே ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணங்களாகையினால் யஜ்ஞம்

படியே ஈஶ்வர க்ருஷ்ணனால் 1 'த்ருஷ்டவதாநுஶ்ரவிக: ஸஹ்யவிஶுத்திக்ஷயாதிஶயயுக்த:' என்று சொல்லப்பட்டது. பஞ்சசிகாசார்யராலும் 2 'ஸ்வல்ப: ஸங்கர: ஸபரிஹார: ஸப்ரத்யவமர்ஷ:' என்று சொல்லப்பட்டது. ஆகையினால் ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட ஹிம்ஸையும் ஜீவாத்மாவிற்குத் தோஷத்தையுண்டுபண்ணப் போகிறது, யாகத்திற்கும் உபகாரம் செய்யப்போகிறது, என்று அவர்களுடைய மதம். ஆகையினால் 'ஏகே' என்னும் பதத்தினால் பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிற வாதிகள் 'தோஷவத்' என்கிற காரணத்தோடு சேர்ந்திருக்கிறதினாலும், தோஷங்களை உதாஹரணமாகச் சொல்லியிருப்பதினாலும் விசேஷித்து இன்னாரென்று தெரிவிக்கப்படுகிறார்கள் என்று சொல்லுகிறார்—'ஸாங்க்யர்களும்' என்றாரம்பித்து. இத்தால் எல்லாக் கர்மங்களினுடையவும் ஸ்வரூபங்களை விட்டுவிட வேண்டுமென்று சொல்லுகிறவர்களின் மதமும் வேதங்களுக்குப் புறம்பானது என்று காட்டப்பட்டது. ராகம் முதலிய தோஷங்கள் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணங்கள் என்பது எல்லா ஸித்தாந்திகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட படியினால் அதை உதாஹரணமாகச் சொல்லியிருக்கிறதாகவுமாம், அன்றிக்கே கர்மமே ராகம் முதலிய தோஷத்தை யுடையது. ஆகையினால் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணம் என்றபிப்ராயமாகவுமாம். இந்த அர்த்தத்தில் 'முதலிய' என்னும் பதம் ஹிம்ஸை முதலிய தோஷத்தையும் சேர்த்துக் கொள்ளுகிறது. 'யஜ்ஞம் முதலிய எல்லாக் கர்மமும்' என்றதற்கு இவ்விடத்தில் 'கர்ம' என்னும் பதம் பொதுவாக இருந்தபோதிலும் 'யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம்' என்று மற்றொரு பக்ஷத்தில் விசேஷித்துச் சொல்லப்பட்டிருப்பதினால் ஶாஸ்த்ரங்களில் விதிக்கப் பட்ட கர்மங்களைச் சொல்

---

1 த்ருஷ்டவத் - கண்ணால் பார்க்கப்பட்ட கார்யத்தைப்போலவே, ஆநுஶ்ரவிக:-வேதத்தில் சொல்லப்பட்ட, க்ஷயாதிசயயுக்த:-அதிக ப்ராணி ஹிம்ஸையோடு சேர்ந்த, ஸ:-அந்தக் கர்மமும், அவிசுத்த:-அபரிசுத்தமல்லவா.

2 ஸ்வல்ப:—அல்பமாகிய, ஸங்கர:-தோஷத்தின் ஸம்பந்தம், ஸப்ரத்யவமர்ச:—பின்னால் யோசிக்கப்பட்டதாய்க் கொண்டு ஸபரிஹார:—ஸமாதானமாய்ப் பரிஹரிக்கத்தக்கது.

முதலிய எல்லாக் கர்மமும் மோக்ஷத்தில் ஆசையுடையவனால் விடத் தக்கது என்று சொன்னார்கள். மற்றும் சில பண்டிதர்கள் யஜ்ஞம், முதலிய கர்மம் விடத்தக்கதல்ல என்று சொன்னார்கள். 3

நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம |
த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவித: ஸம்ப்ரகீர்த்தித: || 4

ப - ரை] *பரதஸத்தம* - பரதவம்ஶத்தில் உத்தமனாகிய அர்ஜுந, *தத்ர* - அப்படிப்பட்ட, *த்யாகே* - த்யாகத்தைப் பற்றிய விஷயத்தில், *மே* – என்னுடைய, *நிஶ்சயம்* - நிஶ்சயத்தை, *ஶ்ருணு* - கேள், *புருஷவ்யாக்ர* -புருஷர்களுக்குள் ஶ்ரேஷ்டனாகிய அர்ஜுந, *த்யாக:*- த்யாகமானது, *த்ரிவித:* - மூன்றுவிதமாக, *ஸம்ப்ரகீர்த்தித: ஹி* - முன்னமேயே சொல்லப்பட்டதல்லவா. 4

பா] இப்படி வாதிகள் விவாதப்பட்டுக் கொண்டிருக்கிற த்யாகத்தைப்

னுகிறது. அதிலும் சிலவற்றைத் தனித்துச் சொல்லுவதற்குக் காரணமில்லாமையினால் காம்ய கர்மங்களை மாத்திரம் சொல்லுவதாயிருந்தால் புனருக்தி வருகிறபடியினாலும் எல்லாக் கர்மங்களையும் பற்றிச் சொல்லுகிறதென்று தாத்பர்யம். எல்லோராலும் விடத் தக்கதாகஇருந்தால் அதனை விதிக்கிற ஶாஸ்த்ரம் ப்ரமாணமல்லாமல் போகவேண்டி வருமாகையினால் 'மோக்ஷத்தில் ஆசையுடையவனால்' என்று விஶேஷித்துச் சொல்லப்பட்டது. 'அபரே' என்னும் பதம் இவ்விடத்தில் தன்னுடைய மதத்தை அநுஸரித்தவர்களைச் சொல்லுகிறது. 'யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்' என்றல்லவோ தன்னுடைய மதம் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'பண்டிதர்கள்' என்று. விடத்தக்கது அங்கீகரிக்கத் தகுந்தது இவைகளின் வ்யத்யாஸங்களின் உண்மையைத் தெரிந்தவர்கள் என்றர்த்தம். 3

'தத்ர' என்னும் பதம் ப்ரஸ்தாவிக்கப்படுகிற விஷயத்தில் வாதிகளின் வாதம் இருக்கிறதென்பதை அநுவதித்துக் கொண்டு அதின் வழியாக ந்யாய நிரூபணம் செய்வதற்குத் தகுந்ததாகிய ஸந்தேஹிக்கப்பட்டதாயிருக்கை இருக்கிறது என்று தெரிவிக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இப்படி வாதிகள் விவாதப்பட்டுக்கொண்டிருக்கிற' என்று. 'மே நிஶ்சயம் (என்னுடைய நிஶ்சயத்தை)' என்பதினால் வேறொரு மதம் உண்டாகப் போகிறது என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'த்யாகத்தைப் பற்றிய நிஶ்சயத்தை

பற்றிய நிஶ்சயத்தை என்னிடத்திலிருந்து கேள். த்யாகமாவது வேதத்தில் சொல்லப்படுகிற கர்மங்களைச் செய்துகொண்டே அவைகளின் பலத்தைப் பற்றியதாயும், அந்தக் கர்மங்களைப் பற்றியதாயும், கர்த்தர்வாக இருக்கையைப் பற்றியதாயும் முன்னமேயே என்னால் மூன்று விதமாகச் * * 'மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்யாத்யாத்ம சேதஸா| நிராஶீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர: ||' என்று சொல்லப்பட்டதல்லவா. கர்மங்களினால் உண்டாக்கப்படுகிற ஸ்வர்க்கம் முதலிய பலம் எனக்கு வேண்டியதில்லை என்றது பல த்யாகம். எனக்குப் பலமுண்டாவதற்கு ஸாதனமாகையினால் இந்தக் கர்மம் என்னுடையது என்று கர்மத்தில் தன்னுடைய தென்கிற அபிமானத்தை விடுதல் கர்மங்களைப் பற்றிய த்யாகம். எல்லாவற்றிற்கும் ஈஶ்வரனுகிய பகவா

என்று. 'என்னிடத்திலிருந்து' என்பதற்கு ப்ரமம் முதலிய தோஷங்களில்லாதவென்னிடத்திலிருந்து என்றர்த்தம். 'த்ரிவிதஹி' என்பது முதலிய வாக்யம் மேலேசொல்லப்போகிற ஸாத்விகத்யாகம் முதலியமூன்று விதத்தைப்பற்றியதல்ல. பின்னை எப்படி என்னில் ஸாத்விக த்யாகத்தின் உட்பிரிவைச் சொல்லுகிறது. 'ஸம்ப்ரகீர்தித:' என்பதற்கு முன்னமே சொல்லப்பட்டது என்கிற அர்த்தத்தைச் சொல்லுவது ஸவாரஸ்யமாகையினாலும், 'ஹி' என்னும் பதத்தினால் கேட்கிறவனுக்கும் அது தெரிந்துகொள்ளப்பட்டது என்று ஏற்படுகிறபடியனாலும், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'த்யாகமாவது வேதத்தில் சொல்லப்படுகிற' என்றாரம்பித்து. 'மயி ஸர்வாணி' என்கிற ஒரு ஶ்லோகம் மூன்றுவித த்யாகத்தையும் சொல்லுகிறது என்பது நீர்ந்த பொருள். இவ்விடத்தில் கர்மங்களின் ஸ்வரூபத்தையே விட்டு விடுவது என்பதையும் ஸாங்க்ய மதத்தை அனுஸரித்த ஆக்ஷேபத்தையும் நிராகரிப்பதற்காக மூன்றினுடையவும் ஸ்வரூபத்தைப் பிரித்துக்காட்டுகிறார்—'கர்மங்களினால் உண்டாக்கப்படுகிற' என்றாரம்பித்து. 'எனக்குப் பலமுண்டாவதற்கு ஸாதனமாகையினால்' என்றாரம்பிக்கும் வாக்யத்திற்குத் தன்னுடைய ப்ரீதிக்கு ஸாதனமாகையினால் தன்னுடைய ப்ரயோஜனத்திற்காகவே பகவான் நம்மைக் கர்மத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்கிறான் என்றல்லவோ மோக்ஷத்தில் ஆசையுடையவன் அனுஸந்தானம் செய்யவேண்டுமென்று தாத்பர்யம். தனக்குக் கர்த்ருத்வம் உண்டாயிருப்பது அவனுக்கு வசப்பட்டது. அவனுடைய அனுமதியினால் உண்டானது. ஆகையினால் பகவானிடத்திலேயே

* பகவத்கீதை - 3 - 30

னிடத்தில் கர்த்தாவா யிருக்கையை அனுஸந்தானம் செய்வதினால் தன க்குக் கர்த்ருத்வம் இல்லை என்று விடுதல் கர்த்தாவாக இருக்கையைப்பற் றிய த்யாகம். 4

யஜ்ஞதாநதப꞉ கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் । *

ப - ரை] யஜ்ஞதாநதப꞉ கர்ம - யஜ்ஞம், தானம், தபஸ்ஸு, முதலிய கர்மம், ந த்யாஜ்யம் - விடத்தக்கதல்ல, தத் - அது, கார்யமேவ - செய்யத்தகுந்ததே. *

பா] யஜ்ஞம், தானம், தபஸ்ஸு, முதலிய வேதங்களில்சொல்லப்பட்ட கர்மம் மோக்ஷத்திலாசையுடையவனால் ஒருபோழுதும் விடத்தக்கதல்ல. பின்னை எப்படி என்னல் மரணம் அடைகிற வரையில் தினந்தோறும் அனுஷ்டிக்கத் தக்கதே. *

கர்த்தாவாயிருக்கையை அனுஸந்தானம் செய்யவேண்டும். தான் கர்த்தாவாக இருக்கையை விடுவதாவனில் அநேகம் பேர்களினால் செய்யப்படுகிற கார்யத்தில் அயலாரால் ஏவப்பட்டவனாய்த் தானும் கர்த்தாவாக இருக்கிறேன் என்பதை அனுஸந்தானம் செய்வது என்று மேலே நிரூபிக்கப்படுகிறது. 4

இப்படி மூன்றுவிதமாக த்யாகங்களை அனுவாதம் செய்திருப்பது ஸ்வரூப த்யாகத்தை விலக்குவதற்காக என்று சொல்லப்படுகிறது— இந்தப் பாதி ஶ்லோகத்தினால், ப்ரம்மத்தை அறியவேணுமென்கிற ஆசை உண்டாகிறதற்கு முன் யஜ்ஞம் முதலிய கர்மங்களை அனுஷ்ட் டிக்க வேண்டும், பிறகு விட்டுவிட வேண்டுமென்று சொல்லுகிறார், என்று சிலர் வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள். அவர்கள் மதத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'ஒருபோழுதும்' என்று. 1 'அவன் ஆயுஸ்ஸுவரையிலும் இவ்விதமாக இருந்துகொண்டு,' என்கிற ஶ்ருதி வாக்யத்தை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'பின் னை எப்படி என்னில்' என்றாரம்பித்து. அப்படியே ஸூத்ரக்காரரும் 2 'ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்' என்று சொல்லியிருக் கிறார். 'தினந்தோறும்' என்பது ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட காலங் களைக் குறிக்கிறது. *

---

1 *சாந்தோக்யம்* - 8 - 15 - 10.

2 *ஶாரீரகஸூத்ரம்* - 4 - 1 - 12. *ஆப்ரயாணாத் - ப்ரயாணம் புறப்படுகிற வரையிலும் (கர்மங்களைச் செய்யவேண்டும்), தத்ராபி – இந்த விஷயத்திலும், ஹி - எந்தக்காரணத்தினால், த்ருஷ்டம் - ஶ்ருதி இருக்கிறதோ.*

பா - அ] ஏனெனில்—

யஜ்ஞோ தானம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம் ॥ 5

ப - ரை] *யஜ்ஞ:* - யாகம், *தானம்* - தானம் செய்வது, *தபஶ்சைவ* - தபஸ்ஸும், *மநீஷிணாம்* - உபாஸநம் செய்கிறவர்களுக்கு, *பாவநாநி* - பரிசுத்தம் செய்யக்கூடியவைகள். 5

பா] யஜ்ஞம், தானம், தபஸ்ஸு, முதலிய வர்ணாச்ரமங்களைச் சேர்ந்த கர்மங்கள் மனனம் செய்பவர்களுக்குப் பரிசுத்தியைக் கொடுக்கக் கூடிய

தா] *ப்ரம்ம வித்யையில் நிஷ்டையுடையவனுக்குக் கர்மம் எதற்காகச் செய்யவேண்டும்? அதற்கு ஒத்தாசையாயிருந்து உபகாரம் செய்வதற்காக என்பது இல்லை, இரண்டும் சேர்ந்து மோக்ஷத்தைக் கொடுக்கின்றன என்பது முதலிய பக்ஷங்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லையாகையினால் தத்வஜ்ஞானம் உண்டாவதற்காக என்பது மில்லை, ஒத்தாசையோடு கூடிய ப்ரமாணத்தினாலேயே அது ஏற்படுகிறபடியினால். அதை த்யானம் செய்வதாகிற உபாஸநத்திற்காக என்பதும் இல்லை, அதுவும் உறுதியான ஸம்ஸ்காரத்தினால் உண்டாக்கப்படுகிறதாகையினால். மோக்ஷத்திலாசையுடையவனுக்கு வேண்டியதாயும், கர்மங்களால் உண்டாக்கக்கூடியதாயு மிருக்கிற வேறொரு ப்ரயோஜனத்தையும் நாம் அறியவில்லை. ப்ரயோஜனத்தை உத்தேசிக்காமல் மூடனுக்கும் ப்ரவ்ருத்தி உண்டாகாது என்கிற அபிப்ராயத்தினால் 'ஏனெனில்' என்கிற ஆக்ஷேபத்தைக் காட்டியிருக்கிறார். 'ச' என்பது சொல்லாதவைகளையும் சேர்த்துக் கொள்ளுவதற்காக என்கிற அபிப்ராயத்தினால் 'முதலிய' என்னும் பதம். 'வர்ணாஶ்ரமங்களைச் சேர்ந்த' என்பதற்கு, நித்யங்களினுடையவும் நைமித்திகங்களினுடையவும் ஸ்வரூபத்தை விட்டுவிட வேண்டும் என்கிற பக்ஷம் நிராகரிக்கப்படுகிறது என்று தாத்பர்யம். யஜ்ஞம் முதலியவைகள் காரணத்தை வ்ருத்தி செய்து அதின் வழியாக உபகாரம் செய்கின்றன என்று தெரிவிப்பதற்காக, அப்படி இதனால் உபகாரம் செய்யக் கூடிய ஜ்ஞானத்தைச் சொல்லுகிறது, இவ்விடத்தில் 'மநீஷி' என்னும் பதம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'மனனம் செய்பவர்களுக்கு' என்று. 'மநஸ: ஈஷிண: (மனதை இச்சைப் படுகிறவர்கள்)' 'மநீஷிண:' என்கிற வ்யுத்பத்தியைச் சொல்லில் அதினால் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லி யிருக்கிறது. ஆசார்யனிடத்தில் கேட்ட பிறகு உண்டாக்கக்கூடிய யுக்திகளை அனுஸரித்து மனனம் செய்வதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'மனனமாவது உபாஸநம்' என்று. 'பாவநாநி*

வைகள். மனனமாவது உபாஸநம். மோக்ஷத்திலாசை யுடையவர்களாய் உயிரோடிருக்கும் வரையில் உபாஸநம் செய்துகொண்டிருப்பவர்களுக்கு அந்த உபாஸநம் பூர்த்தியாவதற்குத் தடங்கலாகிய பழைய கர்மங்களை நாசம் செய்யக் கூடியவைகள் என்றர்த்தம் 5

ஏதாந்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலாநி ச |
கர்தவ்யாநீதி மே பார்த நிஶ்சிதம் மதமுத்தமம் || 6

ப - ரை] பார்த - அர்ஜுந, ஏதாந்யபி - இந்த, கர்மாணி - கர்மங்கள், ஸங்கம் - தன்னுடையதென்கிற ஸம்பந்தத்தையும், பலாநி ச - பலங்களையும். த்யக்த்வா - விட்டுவிட்டு, கர்தவ்யாநி - செய்யத்தக்கவைகள், இதி - என்று, மே - என்னுடைய, நிஶ்சிதம் - நிஶ்சயிக்கப்பட்ட, உத்தமம் - உயர்ந்ததாகிய, மதம் - மதம். 6

பா] எந்தக் காரணத்தினால் உபாஸநம் செய்பவர்களுக்கு யஜ்ஞம், தா

நீஷிணாம்' என்று சேர்த்துச் சொல்லி யிருப்பதினால் மேற்பட்ட உபகாரம் செய்யும் விதத்தை ப்ரகாசம் செய்கிறார்—'மோக்ஷத்திலாசை யுடையவர்களாய்' என்றாரம்பித்து. 1 'ப்ரயாணம் புறப்படுகிற வரையில் இந்த ப்ரணவத்தை த்யானம் செய்யவேண்டும்,' என்றாரம்பித்து 1'எவன் இந்தப் பரமபுருஷனை மூன்றுமாத்திரையுடையதாகிய இந்தப்ரணவமாகிற அக்ஷரத்தினால் த்யானம்செய்வானோ' என்கிற வரையிலும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தினால் உபாஸநம் உயிரோடிருக்கும் வரையில் அநுஷ்டிக்க வேண்டுமென்பதேற்பட்டது. ஆகையினால் அதின் அங்கமும் உயிரோடிருக்கும் வரையில் அநுஷ்டிக்கத் தக்கதுதான். அதுவும் 2 'அவன் ஆயுஸ்ஸுவரையில் இவ்விதமாக இருந்துகொண்டு' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளினால் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். உபாஸனத்தைப்போல இனிச் செய்யப்போகிற பாபத்தை நிவ்ருத்தி செய்யும் தன்மை இல்லாமையினால் 'பழைய கர்மங்களை' என்னும் பதம்.

இப்படிப் பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியதென்று சொன்னதினால் 3 'த்யாஜ்யம் தோஷவத்' என்று சொல்லப்பட்ட பக்ஷம் நிராகரிக்கப்பட்டது. 'நிஶ்சயம் ஶ்ருணு' என்றாரம்பித்துச் சொல்லப்பட்ட அர்த்தமே 'ஏதாந்யபி' என்கிற ஶ்லோகத்தினால் இவைகள் தோஷமில்லாதவைகள் என்று நிஶ்சயத்தை உண்டாக்குவதற்

1 ப்ரஶ்னோபநிஷத் - 5 - 5. 2 சாந்தோக்யம் - 8 - 15 - 10.
3 பகவத்கீதை - 18 - 3

னம், தபஸ்ஸு, முதலியவைகள் பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியவை களோ, ஆகையினால் உபாஸநத்தைப்போலவே இந்த யஜ்ஞம், முதலிய கர்மங்களும் எனக்கு ஆராதநங்களாக அந்தக் கர்மங்களில் தன்னுடைய ~~தென்கிற~~ எண்ணத்தையும், பலத்தையும் விட்டு விட்டு ப்ரயாணம் புறப் படுகிற வரையில் தினந்தோறும் உபாஸநம் பூர்த்தியடைவதற்காக மோ க்ஷத்தில் ஆசையுடையவனால் செய்யத்தக்கவைகள் என்று என்னு டைய நிஶ்சயம் செய்யப்பட்ட உயர்ந்த மதம். 6

நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே ।
மோஹாத்தஸ்ய பரித்யாகஸ்தாமஸ: பரிகீர்த்தித: ॥ 7

ப - ரை | நியதஸ்ய - விடத்தகாததாகிய, கர்மண: — கர்மத்தினு டைய, ஸந்ந்யாஸ: — விட்டு விடுதல், நோபபத்யதே - ஸம்பவிக் காது, மோஹாத் — அஜ்ஞானத்தினால், தஸ்ய - அந்தக் கர்மத்தை, பரித்யாக: — விட்டு விடுவது, தாமஸ: - தாமஸமாக, பரிகீர்த்தி த: - சொல்லப்பட்டது. 7

காக நிகமனம் செய்து உறுதிப்படுத்தப் படுகிறதாகையினால் புன ருக்தி இல்லை காரணத்தையும் அதினால் ஸாதிக்கப்படுகிறதையும் சொல்லுகின்றன என்று கீழ் ஶ்லோகத்தையும் இந்த ஶ்லோகத்தை யும் சேர்க்கிறார்—'எந்தக் காரணத்தினால்' என்றாரம்பித்து. 'மநீஷி ணாம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற உபாஸநத்தைப் போல வே இவைகளும் என்று தெரியப்படுத்துவதற்காக 'அபி' என்னும் பதம் என்று சொல்லுகிறார்—உபாஸநத்தைப் போலவே இந்த யஜ்ஞ ம், முதலிய கர்மங்களும்' என்று. பரமாத்மாவினுடைய ப்ரீதியை யுண் டாக்கி அதின் வழியாகக் கர்மங்கள் பரிசுத்தியைக் கொடுக்கின்றன என்பதைத் தெரிவிப்பதற்காகச் சொல்லுகிறார்—'எனக்கு ஆராதநங்க ளாக' என்று. 'ஸங்கம்' என்கிற பதத்திற்கு 'மமதா' என்னும் பத த்தோடு புனருக்தியைப் பரிஹரிக்கிறார்—'தன்னுடையதென்கிற எண் ணத்தையும்' என்று. 'நிஶ்சயம் செய்யப்பட்ட' என்பதற்கு இந்தவிஷய த்தில் உன்னால் மறுபடியும் ஸந்தேஹிக்கத் தக்கதல்ல என்று தாத் பர்யம். 'உயர்ந்த' என்பதற்கு எல்லாவற்றையும் அறிந்தவர்களல்லாத மற்றவர்களினுடைய இதற்கு விருத்தமாகிய ஸ்வரூபத்தையே விட்டு விடவேண்டும் என்கிற மதங்களெல்லாம் தாழ்ந்தவைகளாகையினால் அநாதரிக்கத்தக்கது என்று தாத்பர்யம். 6

பா] விடத்தகாததாகிய நித்யங்களும் நைமித்திகங்களுமாகியபஞ்சமஹா ய ஜ்ஞம் முதலிய கர்மங்களை விட்டு விடுவதுஸம்பவிக்காது, * 'ஶரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்யேத³கர்மண:' என்று தேஹயாத்திரை யே நடக்காதாகையினால். தேஹ யாத்திரை யஜ்ஞங்களில் மிகுதியான ஆஹாரங்களைக்கோண்டு செய்யப்படுகிறதே யானால் நல்ல ஜ்ஞான முண்டாவதற்குக்காரணமாகிறது.அப்படிக்கில்லாவிடில் †'பு⁴ஞ்ஜதே தே த்வக⁴ம் பாபா:' என்று யஜ்ஞத்தில் மிகுதியல்லாத தாகையினால் பாபங்

தா] பிறகு 'நியதஸ்ய து' என்கிற ஶ்லோகத்தினால் இதர மதங்கள் தாழ்ந்த தென்பதும் தன்னுடைய மதம் உயர்ந்ததென்பதும் விஸ்தார மாக நிரூபிக்கப்படுகிறது. வர்ணாஶ்ரமங்களைச் சேர்ந்ததாகையினா லே விடத்தகாதவைகள் என்பது 'நியத' என்னும் பதத்தினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது என்று சொல்லுகிறார்—'நித்யங்க ளும் நைமித்திகங்களுமாகிய' என்று. 'து' என்னும் பதத்தோடு சேர்ந்த 'ஸந்ந்யாஸ' என்னும் பதம் இவ்விடத்தில் 1 'த்யாஜ்யம் தோ³ஷவத்' என்கிற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸ்வரூபத்தை விட்டு விடுவதை அனுவாதம் செய்கிறது. அதுவேயல்லவோ 'மோஹாத்தஸ்ய பரித்யாக³:' என்கிற மேல் பாதி ஶ்லோகத்தினால் நிந் திக்கப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் 'விட்டு விடுவது' என்று சொல்லப்பட்டது. பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியதாகையி னால் அவஶ்யமாகச் செய்யவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கும் பொழுது மறுபடியும் விடுவது ஸம்பவிக்காது என்று சொல்லியிருப் பது முன்பு விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட த்ருஷ்டத்திலும் அத்ருஷ் டத்திலுமுண்டாகிய தோஷங்களை ஜ்ஞாபகப்படுத்துவதற்காக என்கிற அபிப்ராயத்தினால் ஸம்பவிக்காதென்பதை விவரிக்கிறார்—'ஶரீரயா த்ராபி' என்றாரம்பித்து. கேவலமாகிய ஆஹாரம் முதலியவைகளி னாலும் லோகத்தில் தேஹயாத்திரை செய்யலாமே என்கிற ஆக்ஷேபத் திற்கு ஸமாதனம் சொல்லுகிறார்—'தேஹயாத்திரை யஜ்ஞங்களில் மிகு தியான' என்றாரம்பித்து. 2 'பஞ்சபூ⁴தாத்மகைர்போ⁴கை³: பஞ்ச பூ⁴தாத்மகம் வபு:| ஆப்யாயதே' என்று ஸ்ம்ருதியில் சொல்

* பகவத்கீதை - 3-8. † பகவத்கீதை-3-13.

1 பகவத்கீதை - 18 - 3.

2 பஞ்ச பூதாத்மகை: - பஞ்ச பூதங்களினால் உண்டாக்கப்பட்ட, போகை:- போகங்களினால், பஞ்ச பூதாத்மகம் - பஞ்ச பூதங்களினா லுண்டாக்கப்படுகிற, வபு: - ஶரீரம், ஆப்யாயதே - வ்ருத்தி செய்யப்படுகிறது.

களாகிய ஆஹாரத்தினுல் மனதை வ்ருத்தி செய்வதுவிபரீதமான ஜ்ஞான த்திற்குக் காரணமாகிறது. ‡ 'ஓ ! ஸௌம்யனே! மனது அன்ன மயமல்ல வோ' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தின்படி ஆஹாரத்தினுலல்லவோ மனது வ்ருத்தி செய்யப்படுகிறது. § 'ஆஹாரம் சுத்தமா யிருந்தால் மனது சுத்தமா யிருக்கிறது. மனதுசுத்தமாயிருந்தால் இடைவிடாத்த்யானம்உண் டாகிறது. அப்படி த்யானம் உண்டானுல் ஸம்ஸார பந்தங்களெல்லாம் விட்டு விடுகிறது'என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் பரமாத்மாவை ஸா க்ஷாத்கரிப்பதாகிய ஜ்ஞானம் ஆஹாரத்தின் சுத்தியைப்பொறுத்ததுஎன்று சொல்லப்படுகிறது. ஆகையினுல் மஹா யஜ்ஞங்கள் முதலியநித்ய நைமித் திகக்கர்மங்கள்ப்ரயாணம் புறப்படுகிற வரையில் ப்ரம்மஜ்ஞானத்திற்காக வே அங்கீகரிக்கத்தக்கது. ஆகையினுல் அதை விட்டுவிடுவது பொருந்தாது. இப்படி ஜ்ஞானத்தை உண்டாக்குகிற கர்மத்தை இது ஸம்ஸார பந்தத்

ல்லியிருக்கிறபடியினுல் ஆஹாரத்தினுல் மனது வ்ருத்தி செய்யப்படு கிறது என்பது எப்படிப் பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமா தானம் சொல்லுகிருர்—'ஓ! ஸௌம்யனே!' என்ருரம்பித்து. ஸாத்வி காஹங்காரத்தினுல் உண்டாக்கப்படுகிற மனது அன்னத்தினுல் உண் டாக்கப்படுகிறது என்பது ஸம்பவிக்காதாகையினுல் 'வ்ருத்திசெய்யப்படு கிறது' என்று சொல்லப்படுகிறது. 'அப்படி த்யானம் உண்டானுல்' என் றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் 1 'மனதின் பந்தம் விட்டுவிடுகிறது' என் றர்த்தமுள்ளதாயும் இதின் அர்த்தத்தையே சொல்லுகிறதாயுமிருக் கிற ஶ்ருதிவாக்யத்தினுல் 'பார்க்கிறது' என்னும் பதத்தினுல் விஶேஷி த்துச் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் 'பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதாகிய ஜ்ஞானம்' என்று சொல்லப்பட்டது. மிகவும் விசதமாக இருக்கிறபடியினுல் ஸாக்ஷாத்காரம் என்று இவ்விடத்தில் சொல்லியிருக்கிறது என்றறியவேண்டும். ஒருதரம் அனுஷ்டிக்கப் பட்ட கர்மம் வித்யைக்கு உபகாரம் செய்கிறது என்கிற ஆக்ஷேபத் தைப் பரிஹரித்துக்கொண்டு முடிக்கிருர்—'ஆகையினுல்' என்ருரம் பித்து. 'பொருந்தாது' என்பதற்குக் காரணமில்லாவிடில் கார்யம் எப் படி உண்டாகும் என்று தாத்பர்யம். இப்படிக்கீழ்ச் சொல்லியவித மாக எப்பொழுதும் விடக்கூடாததாக இருக்கை 'த்ஸு' என்ப தினுல் அனுவதிக்கப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லு கிருர்—'இப்படி ஜ்ஞானத்தை உண்டாக்குகிற'என்ருரம்பித்து. 2 'த்யா ஜ்யம்தோஷவத்' என்று கீழே அனுவதிக்கப்பட்ட மதத்திற்கு இது

---

‡ சாந்தோக்யம் - 6 - 5 - 4
§ சாந்தோக்யம் - 7 - 26 - 2
1 முண்டகம் - 2 - 2 - 8.
2 பகவத்கீதை - 18 - 3

திற்குக் காரணம் என்கிற அஜ்ஞானத்தினால் விட்டுவிடுவது தாமஸமே ன்று சொல்லப்பட்டது. தமோகுணத்தினாலுண்டான த்யாகம் தாமஸம். அதாவது தமோகுணத்தினாலுண்டாகிற அஜ்ஞானத்தைக் காரணமாக வுடைய த்யாகம் தமோகுணத்தினாலுண்டானது. தமோகுணமானது அஜ்ஞானத்திற்குக் காரணம் என்று ¶ 'ப்ரமாத மோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞாநமேவ ச' என்கிற இடத்தில் சொல்லப்பட்டது. அஜ்ஞானமாவது ஜ்ஞானத்திற்கு விரோதமாகிய விபரீத ஜ்ஞானம். அப்படியே ‖ 'அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா | ஸர்வார்த்தாந்

தூஷணம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இது ஸம்ஸாரபந் தத்திற்குக் காரணம்' என்றாரம்பித்து. அதில் உண்டாகியது என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிற 'அண்' என்னும் விருத்தியை யுடையது என்று 'தாமஸ' என்னும் பதத்திற்கு வ்யுத்பத்தி சொல்லுகிறார்— 'தமோகுணத்தினாலுண்டான' என்று. தமோகுணத்தைச் சேர்ந்தது என்று பொதுவாக ஸம்பந்தத்தை மாத்திரம் சொல்லுகிற 'தத்தித' என்னும் விருத்தியைக்கொள்ளில் ஏற்பட்ட விசேஷத்தைச்சொல்லியிரு க்கிறதாகவுமாம். தமோகுணத்தினாலுண்டாகிற புத்தியைக்காரணமாக வுடையதாகையினால் பரம்பரையாகத் தமோகுணத்தினாலுண்டானது என்பதைவிவரிக்கிறார்—'அதாவது தமோகுணத்தினாலுண்டாகிற' என்றா ரம்பித்து. இவ்விடத்தில்ஸமீபத்தில்சொல்லியிருக்கிற அஜ்ஞானத்தைக் காரணமாக வுடையதாகையினாலே தமஸ்ஸைக் காரணமாக வுடையது (அதாவது தமஸ்ஸென்பதே அஜ்ஞானம்) என்று சொல்லக் கூடிய தாக இருக்கத் தமோகுணத்தினாலுண்டாகிறஅஜ்ஞானத்தினாலுண்டா கிறது என்று சொல்லியிருக்கிறது எதற்காக என்னில் 'மோஹாத்' என்றுச் சொன்னதையே 'தாமஸ:' என்று வேறொரு பதத்தினால் மறுபடியும்சொல்லுவதில் ப்ரயோஜனமொன்றுமில்லை. அதை விடவேற திக அர்த்தத்தைச் சொல்லுவதோ வெனில் உசிதமாகவும் விரோத மில்லாமலும் இருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால். 'ப்ரமாத மோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞாநமேவ ச|' என்கிற ஶ்லோகத்தில் 'மோஹ' என்னும் பதத்தினால் விபரீதஜ்ஞானம் தனித்துச் சொல்லப் பட்டபடியினாலே 'அஜ்ஞாந' என்னும் பதத்தினால் ஜ்ஞானமில்லாமை சொல்லப்படுகிறது என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. இவ்விடத் திலோ வெனில் அஜ்ஞானமாவது ஜ்ஞானத்திற்கு விரோதியாகிய விப ரீதஜ்ஞானம் என்று எப்படிச் சொல்லப்படுகிறது? எனில், இவ்விதமாக

¶ பகவத்கீதை - 14 - 17　　‖ பகவத்கீதை - 18 - 32.

விபரீதாம்ஸ்வபுத்திஶ்வரமபீ தாமஸீ||' என்று மேலேசொல்லப் படுகிறது ஆகையினால் நித்யம், நைமித்திகம்,முதலிய கர்மங்களை விடுவது விபரீத ஜ்ஞானத்தைக் காரணமாகவுடையது என்றர்த்தம். 7

துஃகமித்யேவ யத் கர்ம காயக்லேஶபயாத்த்யஜேத் |
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத் || 8

ப - ரை.] யத் - எந்த, கர்ம - கர்மத்தை, துஃகம் - கஷ்டம், இதி ஏவ - என்றே, காயக்லேஶபயாத் - ஶரீரத்திற்கு ஶ்ரம முண்டாகு மென்கிற பயத்தினால், த்யஜேத் - விட்டு விடுவானே, ஸஃ - அவன், ராஜஸம் - ரஜோகுணத்தினு லுண்டாகிய, த்யாகம் - விடுதலை, க்ருத்வா - செய்து விட்டு, த்யாகபலம் - த்யாகத்தின் ப்ரயோஜனத்தை, நைவலபேத் - அடையவே மாட்டான். 8

ஸமாதானம் சொல்ல வேண்டியது—ஜ்ஞான மில்லாமை வஸ்துவை மறைப்பதற்குக் காரணமாவதும் விபரீதஜ்ஞானத்தை முன்னிட்டு என்று காட்டுவதற்காகவுமாம். ஶ்லோகத்திலிருக்கிற 'மோஹ' என்னும் பதத்திற்கு வேறொரு ப்ரயோஜனத்தை அபிப்ராயத்தில் வைத்துகொண்டு ஶ்லோகத்திலிருக்கும் 'அஜ்ஞாந' என்னும் பதமே மோஹத்தை சொல்லுகிறது என்று தெரிவிப்பதற்காகவுமாம். தமோ குணத்தினுலுண்டாகியபுத்தி கர்மங்களை விட்டுவிடுவதற்குக் காரணமாகிறது என்பதை மேலே சொல்லப்போகிறதைக்கொண்டு விவரிக்கிறார்—'அப்படியே' என்றாரம்பித்து. தத்துவத்தைத் தெரிந்தவர்கள் விடுகிறதில்லை என்கிற அபிப்ராயத்தினால் 'தாமஸம்' என்று சொல்லியிருப்பதினு மேலேபட்ட தாத்பர்யத்தைச்சொல்லிமுடிக்கிறார்—'ஆகையினால்' என்றாரம்பித்து. 'நித்யம், நைமித்திகம், முதலிய' என்கிற இடத்தில் 'முதலிய' என்னும் பதத்தினால் மேலே சொல்லப்படுகிற பலங்களில் ஆசையில்லாமல் செய்யப்படுகிற காம்யகர்மங்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. 'விபரீதஜ்ஞானத்தை' என்பதினால் ஸரியாகத்தெரிந்துகொள்ளாததினால் உண்டான ராஜஸத்யாகத்தைப் பார்க்கிலும் வ்யத்யாஸத்தைக்காட்டியிருக்கிறது. 1 'அயதாவத்' என்றல்லவோ ரஜோகுணத்தினால் உண்டான புத்தியைப்பற்றி மேலே சொல்லப்படுகிறது. 7

ஆக இப்படி மிகவும் அந்தரங்கமாக இருப்பதினாலே இதுவே ஸ்வரூபம் என்று சொல்லக் கூடியதாகிய ஸ்வரூப நிரூபகங்களான ஸ்வபாவங்களி னுடையவும் வஸ்துவின் ப்ராணனுக்கே காரணமாகிய ஸ்வபாவங்களி னுடையவும் வ்யத்யாஸங்களில்லாமலி

---

1 பகவத்கீதை 18 - 31.

பா] கர்மம் பரம்பரையாக மோக்ஷத்திற்கு ஸாதகந்தான் அப்படியிருந்த போதிலும் கஷ்டமாகிய பணம் ஸம்பாதிப்பதினுல் செய்யக் கூடியதாகை யினுலே அதிக ஶ்ரமமாக இருப்பதினுலும், ஶரீரத்திற்குக் கஷ்டத்தை உண்டுபண்ணுகிறபடியினுலும் மனதிற்கு ஶ்ரமத்தை உண்டுபண்ணு கிறது என்று நினைத்து அதிலிருந்து பயத்தினுல் யோகம் நிறைவேறுவதற் காக ஜ்ஞானத்தின் அப்யாஸம் செய்வதிலேயே யத்னம் செய்யத் தக்கது என்று நினைத்து எவன் பஞ்சமஹாயஜ்ஞம் முதலிய ஆஶ்ரமத்தைச் சேர்ந்த கர்மங்களை விட்டு விடுவானே அவன் ரஜோகுணத்தினு லுண்டான த்யாகத்தைச் செய்து, அதாவது அப்படி விடுவது உள்ளபடியல்லாதஶாஸ்

ருந்தபோதிலும் நிரூபித ஸ்வரூப விஶேஷணங்களாகிய ஸ்வபாவங் களின் மாருட்டம் இருப்பதினுல் மேலே சொல்லப்படுகிற ரஜோ குணத்தினுல் உண்டாகிய புத்தியை நினைத்துக்கொண்டு ரஜோகுணத் தினுலுண்டான த்யாகத்தை விவரிக்கிருர்—'கர்மம்' என்ருரம்பித்து. 'து:கமித்யேவ' என்று சொல்லியிருப்பதினுலும், 'காயக்லேஶப யாத்' என்று சொல்லியிருப்பதினுலும் இது அதர்மம் என்கிற அஜ் ஞானம் இவ்விடத்தில் இல்லையென்றேற்பட்டது. 1 'அர்த்தாநாமர்ஜநே து:கம்' என்றிவை முதலியவைகளை அனுஸரித்துச் சொல்லு கிருர்—'கஷ்டமாகிய' என்ருரம்பித்து. 'மனதிற்கு ஶ்ரமத்தை உண்டு பண்ணுகிறது' என்பதற்கு ஶ்ரமமில்லாமை அல்லவோ விவேகம் முத லிய ஏழுவிதங்களாகிய ஸாமக்ரிகளின் நடுவே எண்ணப்பட்டது என் று தாத்பர்யம். அந்தரங்கத்திற்கும்பஹிரங்கத்திற்கும் விரோதம்வரும் பொழுது பஹிரங்கத்தை விட்டுவிடுவது உசிதம்என்கிற அபிப்ராயத்தி னுல் சொல்லுகிருர்—'ஜ்ஞானத்தின் அப்யாஸம் செய்வதிலேயே' என்று. 2 'யதோக்தாந்யபி கர்மாணி பரிஹாய த்விஜோத்தம:। ஆத்ம ஜ்ஞாநே ஶமே ச ஸ்யாத்வேதாப்யாஸே ச யத்நவாந்॥' என்கிற அனுவாதம் செய்கிற வசனங்கள் இந்த எண்ணத்திற்குக் காரணம். 'ஸர்வாசாரான் ஸந்த்யஜ' என்று அனுவாதம்செய்திருப்பதினுல் சொல்லப்படுகிற அர்த்தத்தைச் சொல்லுகிருர்—'உள்ளபடியல்லாத'

1 *பாரதம் - ஆரண்யபர்வம் - 2 - 44. அர்த்தாநாம்-பணங்களை, ஆர்ஜநே-ஸம் பாதிப்பதில், துக்கம் - கஷ்டம்.*

2 *த்விஜோத்தம - ப்ராம்மணஶ்ரேஷ்டனே, யதோக்தாந்யபி - கீழ்ச்சொல் லப்பட்டிருக்கிற, கர்மாணி - கர்மங்களையும், பரிஹாஸ்ய - விட்டுவிட்டு, ஆத்ம ஜ்ஞானே - ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞானத்திலும், ஶமே ச - சாந்தியிலும், வேதாப் யேஶ்ச-வேதத்தை அப்யாஸம் செய்வதிலும், ப்ரயத்நவாந்-ப்ரயத்னமுடையவ னுக, ஸ்யாத்-ஆகவேண்டும்.*

த்ரத்தின் அர்த்தம் ஆகையினால் ஜ்ஞானம் உண்டாவதாகிய த்யாகத்தின் பலத்தை அடையமாட்டான். * ‘*கார்யமாவஸ்ய ஜ்ஞாநாதி ஸ்வாஸ்ய ஸாத்விகா(ஸ்)ஜாஸ்ய*’ என்றல்லவோ மேலே சொல்லப்படுகிறது. கர்மங்கள் த்ருஷ்டத்தில் ப்ரயோஜனத்தை உண்டு பண்ணி அதின் வழியாக மனதின் தெளிவுக்குக் காரணங்களல்லவே. பின்னை எப்படி என்னில் பகவானுடைய அனுக்ரஹத்தை உண்டுபண்ணி அதின் வழியாக வல்லவோ காரணம். 8

கார்யமித்யேவ யத் கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுந ।
ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக: ஸாத்த்விகோ மத: ॥ 9

ப - ரை] *அர்ஜுந* - அர்ஜுன, *யத்* - எந்த, *நியதம்* - அவஶ்யம் செய்யக் கூடியதாகிய, *கர்ம* — கர்மமானது, *கார்யமித்யேவ* - செய்யவேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டு, *ஸங்கம்* - இது என்னுடையது என்கிற அபிமானத்தையும், *பலம் சைவ* - பலத்தையும், *த்யக்த்வா* - விட்டுவிட்டு, *க்ரியதே* - செய்யப்படுகிறதோ, *ஸ:* — அது, *ஸாத்த்விக:* — ஸத்வகுணத்தினால் உண்டாகிய, *த்யாக:* - த்யாகமாக, *மத:* - எண்ணப்பட்டது. 9

பா] நித்யங்களும் நைமித்திகங்களுமாகிய மஹா யஜ்ஞம், முதலிய வர்ணங்களுக்கும் ஆஶ்ரமங்களுக்கும் விதிக்கப்பட்ட கர்மம் எனக்கு ஆரா

என்றாரம்பித்து. மேலே சொல்லப்போகிற ஸாத்விக த்யாகத்தின் ப்ரயோஜனம் ‘த்யாகபலம் (த்யாகத்தின் ப்ரயோஜனத்தை)’ என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. ஏனெனில் முமுக்ஷுவைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வரும் ஸந்தர்ப்பமாகையினாலும், கர்மங்களை விட்டுவிட்டால் அவைகளாலுண்டாக்கப்படுகிற ஸ்வர்க்கம், முதலிய பலங்களைப் பற்றி ப்ரஸ்தாவமே இல்லை ஆகையினாலும் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘ஜ்ஞானம் உண்டாவதாகிய’ என்று. கஷ்டமாக இருப்பது முதலிய காரணங்களினால் ஏற்பட்ட மனதின் ஶ்ரமத்தைப்பற்றிய ஆக்ஷேபத்தைப் பரிஹரிக்கிறார்—‘கர்மங்கள்’ என்றாரம்பித்து. 1 ‘ஸமு ஸம்ஸித்தயாஹி’ என்றாரம்பித்துச் சொல்லிய க்ரமத்தினால் கர்மங்களினால் அனுக்ரஹம் உண்டாகும்படி செய்விக்கப்பட்ட பகவான் மனதிற்குத் தைர்யத்தையே உண்டு பண்ணுகிறார் என்றர்த்தம். 8

பிறகு ‘த்யாகே மஹா’ என்றாரம்பித்துக் கீழ் ஜ்ஞாபகப் படுத்தப் பட்டதையே எடுத்து ஸத்வ குணத்தினாலுண்டாகிய உள்ளபடி யிரு

* *பகவத்கீதை*-18-31. 1 *த்ரமிடபாஷ்யக்காரரின் வாக்யம்.*

தனமாகையினுல் இதுவே ப்ரயோஜனம் என்று நினைத்துக்கொண்டு அந்தக் கர்மத்தில் என்னுடையது என்கிற அபிமானத்தையும் பலத்தையும் விட்டு விட்டு எது செய்யப்படுகிறதோ அந்த த்யாகம் ஸாத்விகமாக எண்ணப்பட்டது. அது ஸத்வகுணத்தைக் காரணமாக வுண்டாகிறது; அதாவது உள்ளபடி இருக்கிற சாஸ்த்ரங்களின் அர்த்தத்தைப் பற்றிய ஜ்ஞானத்தைக் காரணமாக வுடையது என்றர்த்தம். ஸத்வகுணம் உள்ளபடி இருக்கிற வஸ்துவைப் பற்றிய ஜ்ஞானத்தை உண்டாக்குகிறது என்பது * 'ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்' என்று கீழே சொல்லப்பட்டது. மேலேயும் † 'ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யாகார்யே பயாபயே | பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்தி: ஸா பார்த்த ஸாத்த்விகீ||' என்று சொல்லப்படுகிறது. 9

ந த்வேஷ்ட்யகுசலம் கர்ம குசலே நாநுஷஜ்ஜதே|
த்யாகீ ஸத்த்வஸமாவிஷ்டோ மேதாவீ சி்ந்நஸம்சய:|| 10

ப - ரை] ஸத்த்வஸமாவிஷ்ட: - ஸத்வகுணத்தினுல் வ்யாபரிக்கப்பட்டவனும், மேதாவீ- தத்துவஜ்ஞானமுடையவனும், சி்ந்நஸம்சய:- ஸந்தேஹங்களில்லாதவனும், த்யாகீ - ஸாத்விகத்யாகம் செய்பவனு

க்கிற ஜ்ஞானத்தைக் காரணமாகவுடைய தாகையினுலே இதுவே சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டது என்பதை உறுதிப் படுத்துகிறார்— இந்த ச்லோகத்தினுல். 1 'நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே|' என்றாரம்பித்திருப்பதினுல்இவ்விடத்திலும் 'நியதம்' என்னும் பதம்கர்மங்களுக்கேவிசேஷணம், என்று நினைத்து அதின் அர்த்தத்தைச்சொல்லுகிறார்—'நித்யங்களும்' என்றாரம்பித்து. முக்கியமாக அவச்யம்செய்யக்கூடியதாயிருக்கைப்ரயோஜனத்திற்கே உண்டு. அதற்குக்காரணமாகையினுல் அதின்ஸாதனத்திற்கும் செய்யக்கூடியதாயிருக்கை உண்டாகிறது. ஆகையினுல் ப்ரயோஜனம் அல்லாதக் கர்மம் செய்யத்தக்கதென்பது எப்படிப்பொருந்தும்என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'எனக்கு ஆராதனமாகையினுல்' என்று. இதின் அபிப்ராயத்தில் இருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'இதுவே ப்ரயோஜனம்' என்று. கர்த்தாவாக இருக்கையை விட்டுவிடுவதும் இவ்விடத்தில் சேர்த்தறியத்தக்கது. ஆகையினுலல்லவோ மேல் ச்லோகத்திலிருக்கும் 'த்யாகீ' என்னும் பதம் 'ஸங்கம், பலம், கர்த்ருத்வம்' இவைகளைவிட்டவன் என்று வ்யாக்யானஞ் செய்யப்படுகிறது. 9

* பகவத்கீதை - 14 - 17. † பகவத்கீதை - 18 - 30.
1 பகவத்கீதை - 18 - 7.

யும் இருப்பவன்; அகுஶலம் - அநிஷ்டபலத்தைக் கொடுக்கக்கூடிய, கர்ம - கர்மத்தைப்பற்றி, ந த்வேஷ்டி - த்வேஷம் செய்கிறதில்லை, குஶலே - இஷ்டபலத்தைக் கொடுக்கக்கூடியய கர்மத்தில், ந அநுஷஜ்ஜதே - ஆசைப்படுவதுமில்லை. 10

பா] இவ்விதமாக ஸத்வகுணம் நிறைந்தவனையும், உள்ளபடி இருக்கிற தத்த்வஜ்ஞானத்தையுடையவனையும், அதினாலேயே ஸந்தேஹமில்லாதவனையும் கர்மங்களில் என்னுடையது என்கிற அபிமானத்தையும், பலத்தையும் கர்த்ருத்வத்தையு மவிட்டவனையுமிருப்பவன், அகுசலமான கர்மத்தில் ஆசைப்படுவதுமில்லை. அகுசலமான கர்மமாவது அநிஷ்டபலத்தைக்

தா] ஸத்வகுணத்தினு லுண்டாகிற ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டத்யாகத்தைச் செய்துகொண் டிருப்பவனுக்கு 1 'ஸாத்த்விகோ ஹி பாவ: வர்த்ததே தத்ததோபேக்ஷேத', 2 'உதாஸீநவதாஸீந:' என்றிவை முதலிய இடங்களில் ப்ரஸித்தமா யிருக்கிற விகார மில்லாமை சொல்லப்படுகிறது இந்த ஶ்லோகத்தினல். அத்தால் கீழ்ச்சொல்லிய லக்ஷணமுடைய த்யாகம் ஸத்வ குணத்தைக் காரணமாக வுடையதென்பதும் நிரூபிக்கப்பட்டதாகிறது. அதில் காரணங்களாயும் கார்யங்களாயு மிருக்கிற க்ரமத்திற்குசிதமாக ஶ்லோகத்தில் சொல்லியிருக்கிற வரிசையை மாற்றி வ்யாக்யானஞ் செய்கிறர்— 'இவ்விதமாக ஸத்வகுணம் நிறைந்தவனையும்' என்றாரம்பித்து. 3 'மேதா ப்ரஜ்ஞாவதீ தீ:' என்று நிகண்டுவில் சொல்லப்பட் டிருக்கிறது 'ஶ்ருதியிலும் 4 'நல்லதாகிய மேதையும் மனீஷையும் முன்னிருந்த வஸ்துக்களையும் மேல் வரப்போகிற வஸ்துக்களையும் தெரிந்து கொள்ளுவதற்காக என்னை அடைய வேண்டும்'என்றர்த்தமுள்ளவாக்யம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினுல்ஆசார்யனல் உபதேசம்செய்யப்பட்ட அர்த்தங்களில் ஒன்றும்மறவாமையினுலும்,வேறொரு அர்த்தம்கலக்காமையினுலும்ஏற்பட்டதைச் சொல்லுகிறர்—'உள்ளபடியே இருக்கிற' என்றாரம்பித்து. இவ்விடத்தில் சுபம், அசுபம் என்னுமர்த்தத்தைச்சொல்லுகிற 'குஶலம்' 'அகுஶலம்' என்கிற பதங்களினுல் மேலேதடுக்கப்போகிற த்வே

---

1 ஸாத்விக: பாவ: - ஸத்வகுணம் மேலிட்ட ஸ்வபாவம், வர்த்ததே - தன் கார்யத்தைச் செய்கிறது, இதி - என்று, தத் - அதை, ததா - அப்பொழுது, உபேக்ஷேத - உபேக்ஷை செய்யவேண்டும்.

2 பகவத்கீதை - 14 - 23.

3 நாமலிங்காநு ஶாஸநம் - 1 வது காண்டம்.

4 ஆரண்யகம் - 5 - 42

கொடுக்கக்கூடியது. குசலமான கர்மமாவது இஷ்டமாகிய ஸ்வர்க்கம், பிள்ளை, பசு, அன்னம் முதலிய பலங்களைக்கொடுக்கக்கூடியது எல்லாக் கர்மங்களினிடத்திலும் என்னுடையது என்கிற அபிமானம் இல்லாமையினாலும், ப்ரம்மத்தைத் தவிர மற்றெல்லாப் பலங்களையும் விட்டவனானபடியினாலும், கர்த்ருத்வத்தை விட்டவனானபடியினாலும் அந்தக் கர்மங்களைச் செய்துகொண்டிருக்கும்பொழுதே அவைகளிடத்தில் ப்ரீதியையும் த்வேஷத்தையும் செய்கிறதில்லை. அநிஷ்ட பலத்தைக் கொடுக்கக்கூடிய பாப கர்மமாவது இவ்விடத்தில் அஜ்ஞாக்கிரதையினால் செய்யப்பட்

ஷத்திற்கும் ஆசைக்கும் காரணங்களை அனுவாதம் செய்திருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் அநிஷ்ட பலத்தைக் கொடுக்கக்கூடியது என்பது முதலியது சொல்லப்பட்டிருக்கிறது. ‘த்யாகீ’ என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட த்யாகம் காரணம் என்பதை விவரிக்கிறார் —‘எல்லாக் கர்மங்களிடத்திலும்’ என்றாரம்பித்து. எப்படி அபலானுடையதாயும் அபலானால் செய்யப்படுகிறதாயுமிருக்கிற கர்மத்தில் தனக்கு ஸம்பந்தமில்லாமையினாலே அது நமக்குப்பாதகமுமல்ல ஸாதகமுமல்ல என்கிற நிஶ்சயத்தினால் த்வேஷம் முதலியவைகள் உண்டாவதில்லையோ அதைப்போலவே இவ்விடத்திலும்என்றபிப்ராயம். அவைகளை அனுஷ்டானம் செய்யாமலிருக்கும்பொழுது அவைகளிடத்தில் த்வேஷமும் ப்ரீதியும் உண்டாவதற்கு ப்ரஸ்தாவமே இல்லையாகையினால் ‘செய்துகொண்டிருக்கும் பொழுதே’ என்று சொல்லப்பட்டது. ‘குசலே நாநுஷஜ்ஜதே’ என்பது உசிதந்தான், ஏனெனில் ஸ்வர்க்கம் முதலியவைகளில் ஆசையில்லாமல் காம்ய கர்மங்களை அனுஷ்டித்தாலும் அந்தப்பலங்களுண்டாகாதென்று ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறபடியினால். ‘ந த்வேஷ்டி அகுசலம் கர்ம’ என்பதோவெனில் விருத்தமாயிருக்கிறது, பலத்தில் ஆசையில்லாமலிருக்கும் பொழுதே ஶாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்ட கர்மங்களுக்குப் பலம் உண்டாகிறபடியினால். அப்படிக்கில்லாவிடில் ஒரு இடத்திலும் அந்தக் கர்மங்கள் தோஷமில்லாமல் போகவேண்டிவரும். நரகம், முதலியது ஒருவனுக்கும் இஷ்டமாக இருக்காதல்லவா? இப்படியே த்ருஷ்டத்தில் தோஷத்திற்குக் காரணங்களான கர்மங்களில் த்வேஷமில்லாமலிருப்பது யுக்தமல்ல என்கிற ஆக்ஷேபத்திற்கு இது ‘அஜ்ஞாக்கிரதையினால் செய்யப்பட்டது’ என்று பரிஹாரம் சொல்லப்பட்டது. சில அதிகாரிக்குப் புத்தி பூர்வமாகச் செய்யப்படுகிற பாபகர்மங்களினாலும் பலம் உண்டாகிறதில்லையென்று எனிருக்கக்கூடாது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமா

டது சொல்லப்படுகிறது. * 'கெட்ட நடத்தையிலிருந்து ஓயாதவனல்லாமலும் ஶாந்தியை யடையாதவனல்லாமலும் ஸாவதான மில்லாதவனாக வல்லாமலும் ஶாந்தியையடையாத மனதையுடையவனல்லாமலும் இருந்து கொண்டே ஜ்ஞானத்தினால் இந்தப் பரமாத்மாவை அடைவான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் கெட்ட நடத்தையிலிருந்து ஓயாமலிருப்பது ஜ்ஞானம் உண்டாவதற்கு விரோதி என்று சொல்லியிருக்கிறபடியினால் ஆகையினால் கர்மத்தில் கர்த்ருத்வம், என்னுடைய தென்கிற அபிமானம், பலம் இவைகளை விடுவது தான் ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படுகிற த்யாகம். ஸ்வரூபத்தை விட்டுவிடுவதல்ல. 10

பா - அ] இதையே சொல்லுகிறார்—

ந ஹி தேஹப்ருதா ஶக்யம் த்யக்தும் கர்மாண்யஶேஷத: ।
யஸ்து கர்மபலத்யாகீ ஸ த்யாகீத்யபிதீயதே ॥ 11

ப - ரை] தேஹப்ருதா – தேஹத்தோடிருப்பவனால், கர்மாணி - கர்மங்களை, அஶேஷத: - முழுமையும், த்யக்தும் – விட, ந ஶக்யம் ஹி - முடியாதல்லவா, யஸ்து - எவன், கர்மபலத்யாகீ - கர்மங்களின் பலங்களை விட்டவனோ, ஸ: - அவன், த்யாகீ இதி - த்யாகி என்று, அபிதீயதே - சொல்லப்படுகிறான். 11

பா] ஶரீரத்தைத் தரித்துக்கொண்டிருப்பவனால் கர்மங்களை முழுமை

தானம் சொல்லுகிறார்—'கெட்ட நடத்தையிலிருந்து' என்றாரம்பித்து. இந்த ஶ்லோகத்தின் அர்த்தத்தைக்கீழ்ப்ரஸ்தாவித்த அர்த்தத்திற்குக் காரணமாகச் சேர்த்துக்கொண்டு முக்யமாக ப்ரஸ்தாவிக்கப்பட்ட அர்த்தத்தை நிகமனம் செய்கிறார்—'ஆகையினால்' என்றாரம்பித்து. 10

தா] 1 'நியதஸ்ய' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டிருக்கிற யுக்தியை விவரித்துக்கொண்டு பலத்தை விட்டு விடுவதை உபலக்ஷணமாகச் சொல்லிக்கொண்டு அதினால் முன்பு சொல்லப்பட்ட மூன்று விதமான ஸாத்விகத்யாகம் இந்த ஶ்லோகத்தினால் நிகமனம் செய்யப்படுகிறது என்று சொல்லுகிறார்—'இதையே சொல்லுகிறார்' என்று. இவ்விடத்தில 'தேஹப்ருதா' என்று எல்லா ப்ராணிகளையும் சொல்லியிருக்கிறதல்ல, உபயோக மில்லை யாகையினால். ஆகையினால் கர்மங்களின் ஸ்வரூபங்களை விட்டுவிட முடியாமைக்குக் காரணமாகிய, ஸாமர்த்யத்தினாலேற்படுகிற அர்த்தம் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஶரீரத்தைத் தரித்துக்கொண்டிருப்பவனால்' என்று 'ஶக்யம்'

---

* கடோபநிஷத் - 2 - 28. 1 பகவத்கீதை - 18 - 7.

யும் விட்டுவிட முடியாது. தேஹத்தைத் தரிப்பதற்காக வேண்டியவைக ளாகிய ஸாப்பிடுவது, தண்ணீர் குடிப்பது முதலியவைகளும், அதைச் சேர்ந்தவைகளாகிய கர்மங்களும் விடமுடியாதாகையினால். அதற்காகப் பஞ்சமஹா யஜ்ஞம், முதலியவைகளை அனுஷ்டிப்பது விட முடியாது. எவன் பஞ்சமஹா யஜ்ஞம், முதலிய அந்தக் கர்மங்களில் அவைகளின் பலத்தை விட்டவனோ அவனே * 'சிலர் த்யாகத்தினால் மோக்ஷத்தை யடைந்தார்கள்,' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலிய ஶாஸ்த்ரங்க ளில் த்யாகீ என்று சொல்லப்படுகிறான். 'ஸது த்யாகீ (பலத்தைவிட்ட வன்)' என்பது பலம், கர்த்ருத்வம், இந்தக் கர்மம் என்னுடையதென்கிற அபிமானம், இவைகளை விட்டவன் என்று குறிப்பதற்காக, † 'த்ரிவிதஃ ஸம்ப்ரகீர்திதஃ' என்று முன்னமேயே சொல்லி யிருப்பதினால். 11

பா - அ] அக்னி ஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், ஜ்யோதிஷ்டோமம் முத லிய கர்மங்களும், பஞ்சமஹாயஜ்ஞம் முதலிய கர்மங்களும் ஸ்வர்க்கம்

என்பது த்யாகத்தைச் சொல்லுகிறபடியினால் நபும்ஸகலிங்கமாயும் ஒருமையாயும் இருக்கிறது. மொத்தமாகச் சொல்லப்படுகிறதினா லாகவுமாம். தேஹத்தைத் தரிப்பதைக் காரணமாகவுடைய முடி யாமையை விவரிக்கிறார்—'தேஹத்தைத் தரிப்பதற்காக' என்றாரம் பித்து. அதைச் சேர்ந்தவைகளாகிய லௌகிகங்களான பணம் ஸம் பாதிப்பது முதலியது இருக்கட்டும். ஶாஸ்த்ரங்களினால் விதிக்கப் படுகிற கர்மங்களினால் என்ன ப்ரயோஜனம்? என்கிற ஆக்ஷேபத் திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'அதற்காகப் பஞ்சமஹாயஜ்ஞம், முதலியவைகளை' என்றாரம்பித்து. ஶ்ருதிவாக்யத்தின் ஸ்வாரஸ்யத் தைக் காரணமாகவுடைய ஸ்வரூபத்தை விட்டுவிடவேண்டுமென்கிற ஸந்தேஹத்தைப் பரிஹரிப்பதற்காக 'யஸ்து' என்றாரம்பித்துச் சொ ல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எவன்' என்றாரம்பித்து. 'அபிதீயதே (சொல்லப்படுகிறான்)' என்பதற்கு எவர்களால் என்று சொல்லவேண்டியதவஶ்யமாகையினால் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டியதற்காக 'சிலர்' என்றாரம்பித்து ஶ்ருதிவாக்யத்தை எடுத்திருக்கிறது. கீழே ஆரம்பித்திருப்பதை நிகமனம் செய்கிறதாகையினால் மற்றவைகளையும் குறிக்கிறதென்பதை உறுதிப்படுத்துகிறார்—'த்ரிவிதஃ' என்றாரம்பித்து. 11

---

* *தைத்திரீயம், நாராயணம்* - 10 - 21.

† *பகவத்கீதை* - 18 - 4.

முதலிய பலங்களோடு சேர்ந்தவைகளாகவே ஶாஸ்த்ரங்களினால் விதிக்கப்படுகின்றன. நித்யங்களுக்கும் நைமித்திகங்களுக்கும் * 'ப்ராஜாபத்யம் க்ருஹஸ்தாநாம்' என்பவை முதலிய பலங்களோடு சேர்ந்தே ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் அந்தந்தப் பலங்களுக்கு ஸாதனங்களாயிருக்கையை ஸ்வபாவமாகவுடையவைகளாக ஏற்பட்ட கர்மங்களை அனுஷ்டானம் செய்தால் விதை விதைப்பதைப் போலவே பலத்தில் ஆசையில்லாதவனுக்கும் இஷ்டம், அநிஷ்டங்களாகிய பலங்களோடு ஸம்பந்தம் விடத்தக்கதல்ல. ஆகையினால் மோக்ஷத்திற்கு விரோதியான பலங்களையுடையதாகையினால் மோக்ஷத்தில் ஆசையுடையவனால் கர்மம் அனுஷ்டிக்கத்தக்கதல்ல என்று ஆக்ஷேபம் வருகிறபடியினால் அதற்குப்பதில் சொல்லுகிறார்—

அநிஷ்டமிஷ்டம் மிஶ்ரம் ச த்ரிவிதம் கர்மண: பலம் |
பவத்யத்யாகிநாம் ப்ரேத்ய ந து ஸந்ந்யாஸிநாம் க்வசித் ||

தா] லோகத்திலேற்பட்ட பலங்களுக்கு ஸாதனங்களாகிய கர்மங்களைப் போலவே யல்லவோ வேதங்களில் சொல்லப்பட்ட கர்மங்களும் பலங்களுக்கு ஸாதனங்களாகின்றன என்பதேற்படுத்தப் படுகிறது. லோகத்திலேற்பட்ட கர்மங்களோவெனில் அதின் பலங்களில் ஆசை இல்லாமல் போனபோதிலும் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி பலித்து விடுகின்றன. இப்படியே வேதங்களிலேற்பட்ட கர்மங்களிலுமிருக்க வேண்டும் என்கிற அபிப்ராயத்தினால் ஆக்ஷேபிக்கிறார்— 'அக்னிஹோத்ரம்' என்றாரம்பித்து. அக்னிஹோத்ரம், மஹாயஜ்ஞம் முதலியவைகள் வெவ்வேறு அதிகாரங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதினால் ஆஶ்ரமங்களுக்கு அங்கமாகவும், ஸ்வர்க்கம் முதலியவைகளுக்கு ஸாதனங்களாகவும் இருப்பதில் விரோதமில்லையாகையினால் ஸ்வர்க்கம் முதலிய பலங்களுக்காக அனுஷ்டானம் செய்ய வேண்டியதில்லை. ஆஶ்ரமங்களுக்கு அங்கமாக அனுஷ்டானம் செய்தால் என்ன விரோதம் வரும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'நித்யங்களுக்கும் நைமித்திகங்களுக்கும்' என்றாரம்பித்து. விதை விதைப்பதை உதாஹரணமாகச் சொல்லியிருப்பதினால் அசுபம் என்று சொல்லப்பட்ட கர்மம் புத்தி பூர்வகமல்லாமல் செய்யப்பட்டிருந்த போதிலும் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகிறது என்பது காட்டப்பட்டது. பூமியில் அஜாக்கிரதையால் விழுந்த விதை பலிக்கிறதில்லை என்பதில்லையல்லவா. ஆகையினால் அம்ருதத்தின் ரஸத்தை ஆசைப்படு

* மனுஸ்ம்ருதி - க்ருஹஸ்தாநாம் - க்ருஹஸ்தாஶ்ரமத்திலிருப்பவர்களுக்கு ப்ராஜாபத்யம் - ப்ராஜாபதியினுடைய லோகம் (கிடைக்கிறது).

ப - ரை] அநிஷ்டம் - அநிஷ்டமானதும், இஷ்டம் - இஷ்டமானதும், மிஶ்ரம்ச - கலந்ததுமாகிய, த்ரிவிதம் - மூன்றுவிதமாகிய, கர்மண: கர்மத்தினுடைய, பலம் - ப்ரயோஜனம், ப்ரேத்ய - கர்மங்களை அனுஷ்டித்தபிறகு, அத்யாகிநாம் - த்யாகம் செய்யாதவர்களுக்கு, பவதி - உண்டாகிறது, ஸந்யாஸிநாம் - த்யாகம் செய்தவர்களுக்கு, க்வசித் - ஒருபொழுதும், ந - (உண்டாகிறது) இல்லை. 12

பா] அநிஷ்டம் - நரகம் முதலிய பலம், இஷ்டம் - ஸ்வர்க்கம் முதலியது, மிஶ்ரம் - அநிஷ்டத்தோடுசேர்ந்த பிள்ளை, பசு, அன்னம் முதலியது, இவை மூன்றுவிதமாகிய கர்மத்தினுடைய பலம் கர்த்ருத்வத்தையும், என்னுடையதென்கிற எண்ணத்தையும், பலத்தையும், விடாதவர்களுக்குக் கர்மங்களை அனுஷ்டித்த பிறகு உண்டாகிறது. கர்த்ருத்வம் முதலியவைகளை விட்டவர்களுக்கோவெனில் ஒரு ஸமயத்திலும் மோ

கிறவன் விஷமரத்தின் விதையை விதைப்பதற்கு ஸமமாயிருக்கிறது கர்ம கலாபங்களை அனுஷ்டித்தல் என்கிற அபிப்ராயத்தினுல் ஏற்பட்டதாகிய ஸ்வரூபத்தையே விட்டுவிட வேண்டும் என்கிற முடிவைச் சொல்லுகிறுர்—'ஆகையினுல்' என்றாரம்பித்து. அநிஷ்டம், முதலாக மூன்றுவிதமாகச் சொல்லியிருப்பது மோக்ஷத்தில் ஆசையில்லாதவனைப் பற்றியது, மோக்ஷத்தில் ஆசையுடையவனுக்கு ஸ்வர்க்கம் முதலியதும் அநிஷ்டமாகையினுல் என்கிற அபிபராயத்தினுல் 'நரகம் ஸ்வர்க்கம்' முதலியவைகளைச் சொல்லியிருக்கிறது. காரீரீ முதலிய யாகங்களினுல் உண்டாக்கப்படுகிற மழை முதலிய பலங்கள் உயிரோடிருக்கும் பொழுதே உண்டாகிறதென்று ஏற்பட்டிருக்கிற படியினுல் 'ப்ரேத்ய (மரணமடைந்த பிறகு)' என்பது மற்றக்காலத்தையும் குறிப்பதற்காக. அப்படிச் சொல்லாவிடில் த்யாகம் செய்தவர்களுக்கும் அந்தச் ஶரீரத்தில் இந்த மூன்றுவிதமான பலங்களும் உண்டாகிறதென்று ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். மேலும் 'நது ஸந்யாஸிநாம்க்வசித்' என்று இதற்கு எதிர் நடையாகச் சொல்லியிருக்கும் இடத்தில் இந்தச் ஶரீரத்திலும் பலமுண்டாகாதென்று தடுத்திருப்பதினுலும் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்— 'கர்மங்களை அனுஷ்டித்த பிறகு' என்று. இவ்விடத்திலும் அநிஷ்ட பலங்கள் உண்டாவதில்லை என்பது முன்பு சொல்லிய விதமாகப் புத்தி பூர்வகமில்லாமல் செய்யப்பட்ட கர்மங்களைப் பற்றியதென்று நினைக்க வேண்டியது. கீழ்ச் சொன்ன ஆக்ஷேபத்திற்கு ப்ரதிஜ்ஞையாக மாத்திரம் ஸமாதானம் சொல்லப்படுகிறதே ஒழிய ஒருவித யுக்தியைக் கொ

க்ஷத்திற்கு விரோதியாகிய பலம் உண்டாகிறதில்லை இத்தால் சொல்லப்பட்டதாவது அக்னிஹோத்ரம், மஹாயஜ்ஞம், முதலியவைகள் நித்ய கர்மங்கள் தான். அப்படியிருந்தபோதிலும் உயிரோடிருப்பதாகிய அதிகாரத்திலும் பலங்களில் ஆசையாகிற அதிகாரத்திலும் உபயோகப்படுத்தப் படுகிறபடியினால் எப்படி விரோதமில்லையோ அப்படியே மோக்ஷத்தில் ஆசையுடையவன் என்கிற அதிகாரத்திலும் உபயோகப்படுத்துகிறபடியினால் பரிஹரிக்கப்படுகிறது மோக்ஷத்தில் உபயோகமும் *'அப்படிப்பட்ட இந்தப் பரமாத்மாவை ப்ராம்மணர்கள் வேதங்களை ப்ரவசனம் செய்வதினாலும், யாகத்தினாலும், தானத்தினாலும், தபஸ்ஸினாலும், உபவாஸம்

ண்டும் அது ஸ்தாபிக்கப்படவில்லையே என்றாக்ஷேபம் வரில் அதற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இத்தால் சொல்லப்பட்டதாவது' *என்றாரம்பித்து. வெவ்வேறாக உபயோகிக்கப்பட்டிருப்பதாவது இந்தக் கர்மங்களை அந்தந்தப்பலங்களுக்காகஉபயோகப்படுத்துகிற ஶ்ருதிவாக்யம் வெவ்வேறாக இருப்பதினால் என்றறிய வேண்டும். இப்படி வெவ்வேறாக உபயோகப் படுத்தப்பட்டிருப்பதினாலே ஜ்யோதிஷ்டோமம் முதலியவைகள் பாபத்தைப் போக்கடிப்பது முதலிய அநேக பலங்களுக்கு ஸாதனங்கள் என்பது ஏற்பட்டது.* 'பரிஹரிக்கபபடுகிறது' *என்பதற்கு முன் 'ஒன்றுக்கொன்று விருத்தங்களான பலங்களையுடையது என்கிற ஆக்ஷேபம்' என்று சேர்த்துக்கொள்ள வேண்டியது. 1 'அப்படிப்பட்ட பகவானை இவ்விதமாகத் தெரிந்துகொண்டவன் இந்த ஜன்மத்திலேயே மோக்ஷமடைந்தவனாகிறான், வேறு வழியில்லை' என்று நியமித்துச் சொல்லியிருப்பதினால் ஜ்ஞானமே மோக்ஷத்திற்கு ஸாதனமாக விதிக்கப்படுகிறது. கர்மமோவெனில் விலக்கப்படுகிறது. ஆகையினால் மோக்ஷத்தில் ஆசையுடையவன் என்கிற அதிகாரத்தில் உபயோகப்படுத்தப் படுகிறது என்று சொல்லியிருப்பது எப்படிப் பொருந்தும்? என்று இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்*—'மோக்ஷத்தில் உபயோகமும்' *என்றாரம்பித்து. கத்தியினால் வெட்ட விரும்புகிறான், குதிரையினால் போக விரும்புகிறான், என்றிவைமுதலிய ப்ரயோகங்களிலே போல வஸ்துவின் ஸ்வபாவத்தினால் இவ்விடத்திலும் விரும்பப் படுகிற தாதுவின் அர்த்தத்திற்குக் காரணமாக அந்வயிக்கிறது. ஆகையினால் ஜ்ஞானத்தை உண்டாக்கி அதின் வழியாகப் பாரம்பரையாக ஸாதனமாகையினால் மோக்ஷத்தில் உபயோகப் படுத்தப் படுகிறது நேரில் ஸாதனமல்ல என்கிற தாத்பர்யத்தினால்* 'வேறு

* *ப்ராஹதாரண்யகம்* - 6 - 4 - 22.

1 *புருஷஸூக்தம்.*

முதலியதினாலும் அறியவேண்டுமென்று விரும்புகிறார்கள்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளினாலேற்பட்டது—என்பது. 12

பா - அ] ஆக இப்படிக் கர்மங்களைச் செய்துகொண்டிருக்கும்பொழுதே அவைகளில் கர்த்ருத்வம், முதலியவைகளை விட்டுவிடவேண்டுமென்பது தான் ஶாஸ்த்ரங்களில் ஏற்பட்ட ஸந்ந்யாஸம். அதுவேதான் த்யாகம் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது அந்தர்யாமியாயும், பகவானுயுமிருக்கிற புருஷோத்தமனிடத்தில் கர்த்ருத்வத்தை அனுஸந்தானம் செய்வதினால் தன்னிடத்தில் கர்த்தாவல்ல என்பதை அனுஸந்தானம் செய்யும் விதத்தைச் சொல்லுகிறார். இதினாலேயே பலம், கர்மம், இவை

வழியில்லை,' என்றர்த்தமுள்ள வாக்யத்தினால் மறுக்கப்பட்டிருக்கிறது என்று தாத்பர்யம். 12

இப்படிக் கேள்வையின் அபிப்ராயத்திலேற்பட்ட அர்த்தத்திற்கு வேறொரு விதமாகப் பதில் சொல்ல ஆரம்பிக்கிறார் என்கிற அபிப்ராயத்தினால் அதற்கு ஸங்கதி சொல்லுவதற்காகக் கீழ்ச்சொல்லப்பட்ட பாகத்தை நிகமனம் செய்வதைப்போல அனுவாதம் செய்கிறார்— 'ஆக இப்படி' என்றாரம்பித்து. 'ஆக' என்பதற்கு ஸ்வரூபத்தையே விட்டுவிடுவது தாமஸமாகையினால் என்றர்த்தம். 'இப்படி' என்பதற்கு வர்ணாஶ்ரமங்களுக்கு ஏற்பட்ட கர்மம் விடமுடியாதாகையினால் என்றர்த்தம். அந்த ஶ்லோகத்திலேயே 'பவத்யத்யாகிநாம் ப்ரேத்ய ந து ஸந்ந்யாஸிநாம் க்வசித்' என்று 'அத்யாகி' என்னும் பதத்திற்கு எதிர்நடையான அர்த்தத்தைச் சொல்லும்பொழுது 'ஸந்ந்யாஸி' என்னும் பதத்தினால் சொல்லியிருப்பதினாலே 'த்யாகம்', 'ஸந்ந்யாஸம்' இவை வெவ்வேறென்கிற ஆக்ஷேபமும் பரிஹரிக்கப்பட்டது என்று சொல்லுகிறார்—'அதுவே தான் த்யாகம் என்று சொல்லப்பட்டது' என்று. 'அநிஷ்டமிஷ்டம்' என்கிற ஶ்லோகத்திற்குப் பிறகு ஐந்து காரணங்களைச் சொல்லியிருப்பதற்கு ஸங்கதி என்ன என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்— 'இப்பொழுது' என்றாரம்பித்து. கேள்வையின் விஷயத்தைப் பற்றி நேராகப்பதில் சொன்ன பிறகு என்றர்த்தம். 'பகவானுயுமிருக்கிறபுருஷோத்தமனிடத்தில்' என்கிற இரண்டு பதங்களினாலும் முன்பு சொல்லப்பட்ட விதமாக எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாக இருப்பவனுக்கு அவைகளிடத்திலிருக்கும் தோஷங்களும் அவைகளோடு ஸம்பந்தப்படுவதினால் உண்டாகிய தோஷங்களும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. 'விதத்தைச் சொல்லுகிறார்' என்பதினால் மூன்றாவது அத்யாயம் முதற்கொண்டு தொடர்ந்து

களிலும் என்னுடையது என்கிற அபிமானத்தை விட்டுவிடுவது ஏற்படு கிறது என்கிற அபிப்ராயத்தினால் பரமாத்மா தனக்கு ஶேஷங்களாகிய ஜீவாத்மாவைக்கொண்டு தனக்குச்ஶேஷங்களாகிய ஶரீரம், இந்த்ரியம், ப்ராணன், இவைகளினால் தன்னுடைய லீலையாகிற ப்ரயோஜனத் திற்காக ஆரம்பிக்கிறானல்லவா. ஆகையினால் ஜீவாத்மாவிற்கு உண் டாகிற பசி நிவ்ருத்திப்பது, முதலிய பலமும் அதற்கு ஸாதனமாகிய கர்ம மும் பரமாத்மாவினுடையதே—

𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑌾𑌨𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌿 𑌨𑌿𑌬𑍋𑌧 𑌮𑍇।
𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍇 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍॥

கொண்டிருக்கிற கர்த்தாவல்ல என்கிற அநுஸந்தானத்தைப் பற்றி இவ்விடத்திலேயே காரணங்களோடு கூட உள்ளபடியே இருக்கிற ஸ்வ ரூபத்தை நிரூபித்திருக்கிறது என்று காட்டப்பட்டது. கீழ் ஆரம்பிக் கப்பட்டிருக்கிற மூன்று விதமான த்யாகங்களுக்குள் ஒன்றின் ஸ்வரூப த்தை நிரூபிக்கிறது என்று ஸங்கதி அறியவும். மூன்று விதமான த்யா கமும் ஸாத்விக மென்று சொல்லப்பட்டிருக்க எதற்காக கர்த்ருத்வ த்யாகத்தின் விதத்தை மாத்திரம் நிரூபித்திருக்கிறது என்கிற ஆக்ஷே பத்திற்கு 'ஸமாதானம் சொல்லுகிறார்—'இதிலேயே' என்றாரம்பித்து. 'என்கிற' என்னும் பதம் இவ்விடத்தில் காரணத்தைச் சொல்லுகிறது. ருத்விக் முதலியவர்கள் கர்த்தாவாக இருந்தபோதிலும் யஜமானனுக்கு அந்தக் கர்மத்தினிடத்திலும் அதின் பலத்தினிடத்திலும் என்னு டையது என்கிற அபிமானம் காணப்படுகிறது. அப்படியே ஏன் இந்த ஜீவாத்மாவிற்கும் இருக்கக் கூடாது. ஆகையினால் கர்த்தாவாக இருக் கையை விட்ட மாத்திரத்தினால் கர்மத்தினிடத்திலும் அதின் பலத்தி னிடத்திலும் என்னுடையதென்கிற புத்தி எப்படி நிவ்ருத்திக்கிறது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'பரமாத்மா' என்றாரம்பித்து. 'அல்லவா' என்பது ப்ரமாணங்களில் ப்ரஸித்தமாக இருப்பதைக்காட்டுகிறது. [1] '𑌤𑍍𑌵𑌂 𑌨𑍍𑌯𑌞𑍍𑌚𑌦𑍍𑌭𑌿𑌰𑍁𑌦𑌞𑍍𑌚𑌦𑍍𑌭𑌿𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑍂- 𑌤𑍍𑌰𑍋𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑍈𑌃। 𑌹𑌰𑍇 𑌵𑌿𑌹𑌰𑌸𑌿 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌕𑌨𑍍𑌦𑍁𑌕𑍈𑌰𑌿𑌵

---

1 *ஹரே - விஷ்ணுவே, த்வம் - நீர், ந்யஞ்சத்பி:—கீழே விழுகிறதுகளாக கவும், உதஞ்சத்பி:—மேலே கிளம்புகிறதாகவுமிருக்கிற, கர்மஸூத்ரோபபாதி தை:—கர்மங்களாகிற கயிறுகளினால் கட்டப்பட்டிருக்கிற, க்ரீடாகந்துகைரிவ— விளையாடுவதற்காக ஏற்பட்ட பந்துகள்போலிருக்கிற,ஜந்துபி:—ப்ராணிகளினால், விஹரஸி விளையாடுகிறீர்.*

ப - ரை] மஹாபாஹோ - பாஹு பலமுள்ளவனுகிய அர்ஜுந, ஸாங்க்யே - ஆத்மஜ்ஞானத்தைச் சொல்லுகிற, க்ருதாந்தே - நிஶ்சயத்தில், ஸர்வகர்மணாம் - எல்லாக்கர்மங்களினுடையவும், ஸித்தயே - உத்பத்திக்காக, ப்ரோக்தாநி - சொல்லப்பட்ட, காரணாநி - காரணங்களாயிருக்கிற, பஞ்ச - ஐந்துவிதமாகிய, இமாநி - இவைகளை, மே - என்னுடைய வார்த்தையினால், நிபோத - தெரிந்துகொள். 13

பா| 'ஸாங்க்ய' ஆவது புத்தி, ஸாங்க்யே க்ருதாந்தே - உள்ளபடி

வஜ்ஞாதிஃ ||', 1 'வாஸுஃ க்ரீடநகைரிவ', 2 'க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விஶ்வம் சராசரம்' என்றிவைமுதலிய வசனங்களில் ப்ரஸித்தமான அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'தனக்குச் ஶேஷமாகிய' என்றாரம்பித்து. இந்த்ரியங்களுக்கு யஜமானனாகிய ஜீவாத்மாவிற்கும் யஜமானன் என்றல்லவோ பரமாத்மா ஶ்ருதியில் சொல்லப்படுகிறான். ஆகையினால் இந்த்ரியங்கள் ஜீவாத்மாவிற்குச் ஶேஷங்களாக இருக்கும்பொழுதும் யானை, குதிரை, இவைகளின் அலங்காரங்களில் ராஜாவுக்குப்போலப் பரமாத்மாவின் ஶேஷியாக இருக்கும் தன்மை நிவ்ருத்திக்கிறதில்லை என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தனக்குச் ஶேஷங்களாகிய ஶரீரம்' என்றாரம்பித்து. சுருக்கிச் சொல்லுவதற்குக் காரணமில்லாமையினால் த்ருஷ்டத்திலும் அத்ருஷ்டத்திலும் பலங்களைக் கொடுப்பது முதலியதும் அவனுக்கு லீலை என்றுசொல்லுகிறார்—'தன்னுடைய லீலையாகிற ப்ரயோஜனத்திற்காக' என்று. 3 'லோகவத்து லீலாகைவல்யம்' என்றிவை முதலியவைகளினால் இது விசாரிக்கப்பட்டது என்று தாத்பர்யம். 'லீலை முதலிய ப்ரயோஜனத்திற்காக' என்றும் பாடமுண்டு. அப்பொழுது 'முதலிய' என்னும் பதத்தினால் காருண்யத்தைக் காரணமாகவுடைய பக்தர்களை ரக்ஷிப்பது சேர்த்துக்கொள்ளப்படுகிறது. ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படுகிற கர்மத்தைப் பரமாத்மாவிற்கு ஆராதனமாகவே விதித்திருக்கிறபடியினால் பலங்களோடு சேர்ந்த அந்தக்கர்மம் பரமாத்மாவிற்குச் ஶேஷம் என்பது உசிதம். லோகத்திலேற்பட்ட கர்மமோ

---

1 பாரதம், ஸபாபர்வம் - 61 - 31. பால:-சிறுபிள்ளை, க்ரீடநகைரிவ - விளையாடுகிற கருவிகளினாலே போல (விளையாடுகிறீர்).

2 பாரதம் - ஸபா பர்வம் - 41 - 23 - இதம் - இந்த, விஶ்வம்—எல்லா, சராசரம் - ஸ்த்தாவரஜங்கமமாகிய, பூதம்—ப்ராணியானது, க்ருஷ்ணஸ்ய க்ருதே ஹி—க்ருஷ்ணனுக்காக ஏற்பட்டதல்லவா.

3 ஶாரீரகஸூத்ரம் - 2 - 1 - 33.

இருக்கிற தத்துவங்களைப்பற்றியதாகிய வேதத்திலேற்பட்ட புத்தியினால் ஏனெனில் அப்படி ஶாஸ்த்ரங்களிலும் சொல்லப்படவில்லை, அப்படி ப்ரத்யக்ஷத்தாலும் கண்டறியப்படவில்லை, பசி நிவ்ருத்திப்பது முதலிய பலம் ஜீவாத்மாவிற்கு உண்டாவதாகவே நம்மால் அறியப்படுகிறதாகையினால். ஆகையினால் லோகத்திலேற்பட்ட பலங்கள் ஜீவாத்மாவிற்குச் ஶேஷமாக இருக்கும்பொழுது அந்தப் பலத்திற்கு ஸாதனமாகிய கர்மமும் அந்த ஜீவாத்மாவிற்கே ஶேஷமென்பது உசிதம். ஆகையினால் **'ஸங்கம் த்யக்த்வா'** என்றிவை முதலியவைகளினால் எல்லாக் கர்மங்களையும் பற்றிய ஸங்கத்தை விட்டுவிடவேண்டும் என்று நிரூபித்திருப்பது முடியாது என்னில்? இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஆகையினால்' என்றாரம்பித்து. 'பரமாத்மாவினுடையதே' என்கிற இடத்தில் ஆறும் வேற்றுமை யஜமானன், அவனுடைய பொருள், என்கிற விஶேஷமான ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. எப்படிக் கிளியைக் கூண்டில் வைத்து வளர்ப்பது முதலியதும் அதற்குண்டாகும் ஸுகம் முதலியதும் ராஜாவிற்குச் ஶேஷமோ அதைப்போலவே இவ்விடத்திலும் என்று தாத்பர்யம். 'ஸாங்க்யே க்ருதாந்தே' என்பதினால் இவ்விடத்தில் ஸாங்க்யர்களின் ஸித்தாந்தம் சொல்லப்படுகிறதல்ல, அந்த ஸித்தாந்தத்தில் பரமாத்மாவை ஒப்புக்கொள்ளவில்லையாகையினால். ஶரீரத்தைத் தவிர வேறொன்றிற்குக் கர்த்ருத்வத்தையும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையினாலே 'கர்த்தா கரணம் ச ப்ருதக்விதம்' என்று மேலே கர்த்தாவையும் கரணத்தையும் தனித்தனியாகப் பிரித்துச் சொல்லியிருப்பதும் ஸம்பவிக்காதாகையினாலும், அது வேதத்திற்கு விருத்தமாக இருக்கும்பக்ஷத்தில் தத்துவத்தை உபதேசம் செய்வதற்காக அந்த மதத்தை உபந்யாஸம் செய்திருப்பது பொருந்தாதாகையினாலும், விரோதமில்லாத பக்ஷத்தில் வேதத்தையே மூலமாகவுடையது என்றொப்புக்கொள்ளவேண்டியதாகையினாலே வேதத்திலேயே முடிவுபெறுகிறதாகையினாலும், உசிதமான அர்த்தத்தைச் சொல்லுவதற்காக இடுகுறிப்பெயர் என்கிறதை விட்டுக்காரணப்பெயர் என்றர்த்தம் சொல்லுவது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினாலும். ஆகையினால் வேதங்களிலேயே உள்ளபடியே இருக்கிற தத்துவத்தை நிஶ்சயம் செய்வதற்காக ப்ரவ்ருத்தித்திருக்கும் பாகம் 'ஸாங்க்யே க்ருதாந்தே' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் அதற்கு வ்யுத்பத்தி சொல்லுகிறார்—'ஸாங்க்யா' ஆவது புத்தி' என்று. இந்த ஸந்தர்ப்பத்தை அனுஸரித்துப்புத்தியைவிஶேஷித்துச்சொல்லுகிறார்—'உள்ளபடியே

விசாரிக்கப்பட்ட நிஶ்சயத்தில் எல்லாக் கர்மங்களின் உத்பத்திக்காகச் சொல்லப்பட்டவைகளாகிய ஐந்துவிதங்களாகிய காரணங்களை என்னிடத்திலிருந்துத் தெரிந்துகொள். வேதத்திலேற்பட்ட புத்தி, ஶரீரம், இந்த்ரி

இருக்கிற' என்றாரம்பித்து. இந்த இடத்தில் வஸ்துக்கள் எந்த ஶாஸ்த்ரத்தில் எண்ணப்படுகின்றனவோ அது 'ஸாங்க்ய' என்னப்படுகிறது; அதாவது வேதாந்தம், அதுவே 'க்ருதாந்தம்' என்னப்படுகிறது. செய்யப்படுகிற கர்மங்களுக்கு இதிலே முடிவுண்டாகிற படியினால் என்று சங்கராசார்யரால் சொல்லப்பட்ட அர்த்தம் உசிதமல்ல, வேதாந்த ஶாஸ்த்ரங்களிலும் கர்மங்களின் ஸம்பந்தமுண்டென்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினாலும், இடுகுறிப்பெயர் என்பதை விட்டுவிடவேண்டுமென்பது அவஶ்யமானால் உசிதமான அர்த்தத்தைச் சொல்லுவது யுக்தமாகையினாலும். 'ஸாங்க்ய' என்னும் பதம் நிஶ்சயத்தைச் சொல்லுகிறதாக நிகண்டுக்காரர்களினால் படிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிஶ்சயமே தன்னுடைய புத்தியைக்கொண்டு விசாரிப்பதினால் உண்டாக்கப்பட்டதாகையினால் 'க்ருத' என்னும் பதத்தினால் விஶேஷித்துச் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் 'விசாரிக்கப்பட்ட நிஶ்சயத்தில்' என்று சொல்லப்பட்டது. அதுவுமன்றிக்கே 'ஸாங்க்ய' என்னும் பதமே நிஶ்சயிக்கப்பட்ட வஸ்துவைச் சொல்லுகிறது. 'க்ருதாந்த' என்னும் பதம் 'ஸித்தாந்த' என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறபடியினாலே அவரவர்களினால் ஒப்புக்கொள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறதாகையினால். ஆகையினால் 'விசாரிக்கப்பட்ட' என்று விஶேஷித்துச் சொல்லப்பட்டது. நிஶ்சயமே விசாரிக்கத் தக்கதல்லவா. அதுவுமல்லாமல் பெரியோர்களின் நிஶ்சயம் பின்புள்ள மற்றவர்களினால் விசாரிக்கப்பட்டது என்று தாத்பர்யமாகவுமாம். நிஶ்சயமுண்டாவதற்குக் காரணமாகிய பதங்களை இவ்விடத்தில் 'ஸாங்க்ய' என்னும் பதம் சொல்லுகிறதாகவுமாம். இப்படிச் சொல்லில் 'ப்ரோக்தானி (சொல்லப்பட்டிருக்கிற)' என்பதோடு ஸரியான அந்வயம் வருகிறது. 'ஸித்தயே' என்னும் பதத்தினால் இவ்விடத்தில் பலன்களுக்குக் காரணமாக ஆகுகை முதலியதும் சொல்லப்படுகிறது. 'யஜ்ஞோ ஸ்ருஷ்டாஹமே தேவதாஸ்ச ப்ரபவோ தேவதாஹவ:' என்று கர்மங்களின் ஸ்வரூபம் உண்டாவதைப்பற்றியே மேலே சொல்லியிருக்கிறபடியினால் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'உத்பத்திக்காக' என்று. எனக்குக் காரணங்கள் என்பது ஸம்பவிக்காதாகையினாலும், எனக்குச் ஶேஷங்களாகிய காரணங்கள் என்று சொல்லுவது இவ்விடத்தில் 'நிபோத' என்று மேலே சொல்லப்படுகிற தான்

யங்கள், ப்ராணவாயு, ஜீவாத்மா, இவைகளை ஒத்தாசைக் கருவிகளாகவுடைய பரமாத்மாவையே கர்த்தாவாக * 'எவன் ஆத்மாவிலிருந்துகொண்டு ஆத்மாவிற்குள்ளே இருக்கிறானோ, எவனை இந்த ஆத்மா தெரிந்துகொள்ளவில்லையோ, எவனுக்கு ஜீவாத்மா ஶரீரமோ, எவன் ஆத்மாவை உள்ளே இருந்துகொண்டு நியமிக்கிறானோ, அழிவில்லாத அவன் உனக்கு அந்தர்யாமியாகிய ஆத்மா' என்றும், † 'எல்லா ஜனங்களுக்கும் உள்ளே நுழைந்துகொண்டு நியமிக்கிறவன் எல்லாவற்றிற்கும் ஆத்மா' என்றுமர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் தெரிவிக்கிறதல்லவா. 13

பா — அ] இதையே சொல்லுகிறார் —

அதிஷ்டானம் ததா² கர்தா கரணம் ச ப்ருத²க்³விதம்।
விவிதா⁴ஶ்ச ப்ருத²க் சேஷ்டா தை³வம் சைவாத்ர பஞ்சமம்॥ 14

ஶரீரவாங்மனோபி⁴ர்யத் கர்ம ப்ராரப⁴தே நர:।
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ:॥ 15

தனக்குச் ஶேஷமல்லவாகையினாலே அந்வயிக்காதாகையினாலும் உசிதமான அந்வயத்தைச் சொல்லுகிறார்—'என்னிடத்திலிருந்து' என்று. மேலே சொல்லப்படுகிற ஐந்தும் ஶாஸ்த்ரங்களில் சொல்லியபடியும் தனித்தனியாகக் காரணங்கள் என்பதில் மனதை ஸாவதானமாகச் செலுத்தவேணுமென்று விதிப்பதற்காக இது சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். இருபத்தாறாவதாகிய பரமாத்மாவை ஒப்புக்கொள்ளாதவர்களும், இருபத்தைந்தாவது தத்துவமாகிய ஜீவாத்மாவும் வேறிடத்திலிருக்கிற கர்த்ருத்வத்தை ஆரோபிப்பதற்கு மாத்திரம் இடமாக இருக்கிறான் என்று நிரூபிக்கிறவர்களுமாயிருக்கிற ஸாங்க்யர்களுக்கு இந்த ஸந்தர்ப்பம் முழுமையும் விருத்தம் என்கிற அபிப்ராயத்தினால் காரணப்பெயராக அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பதை நிரூபிக்கிறார்—'வேதத்திலேற்பட்ட புத்தி' என்றாரம்பித்து. 'ஒத்தாசைக்கருவி' ஆவது செய்யவேண்டுமென்றபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட கார்யத்திற்காக அங்கீகரிக்கப்பட்டதாகிய வஸ்து. 13

கீழ்ச் சொல்லியதை விவரிக்கிறதாகையினால் மேல் இரண்டு ஶ்லோகங்களுக்குப் புனருக்தி இல்லை என்பதையும், மற்றவர்கள் மதத்தில் இந்த ஶ்லோகம் விரோதமாக இருக்கிறது என்பதையும் அபிப்பிராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'இதையே சொல்லுகிறார்' என்று. 'இதை' என்பதற்கு ஶ்ருதியில் ஏற்பட்டதும் கீழே

---

* *ப்ருஹதாரண்யகம் - 5 - 7 - 22.* † *தைத்திரீயம், நாராயணம்.*

ப - ரை] நர: - மனுஷ்யன், ந்யாய்யம்வா - ஶாஸ்த்ரங்களை அனுஸரித்தாவது, விபரீதம்வா - ஶாஸ்த்ரங்களுக்கு விருத்தமாயாவதிருக்கிற. யத் - எந்த, கர்ம - கர்மத்தை, ஶரீரவாங்மநோபி: - ஶரீரம், வாக்கு, மனது, இவைகளினால், ப்ராரபதே - ஆரம்பிக்கிருனே, தஸ்ய - அந்தக் கர்மத்திற்கு, அதிஷ்டானம் - ஶரீரம், ததா - அப்படியே, கர்த்தா - ஜீவாத்மா, ப்ருதக்விதம் - வெவ்வேறாக இருக்கிற, கரணம் - இந்த்ரியம், விவிதா - அநேகவிதமாயிருக்கிற, ப்ருதக்சேஷ்டா - வேறான வ்யாபாரத்தையுடைய ப்ராணவாயு, அத்ர-இந்த விஷயத்தில், பஞ்சமம்- ஐந்தாவதாகிய, தைவம் - பரமாத்மா, ஏதே - இந்த, பஞ்ச - ஐந்தும், ஹேதவ: - காரணங்கள். 14—15

பா] ஶாஸ்த்ரங்களில் ஏற்பட்டதாயும் ஶாஸ்த்ரங்களில் தடுக்கப்பட்டதாயுமிருக்கிற ஶரீரத்தினுல் செய்யப்படுகிறதும், வாக்கினுல் செய்யப்படுகிறதும், மனதினுல் செய்யப்படுகிறதுமாகிற எல்லாக் கர்மத்திலும் இந்த

சொல்லப்பட்டதுமாகிய என்றர்த்தம். 'ந்யாய்யம்' என்பதற்கு ந்யாயத்தை விட்டுத் தவருதது என்றர்த்தம், [1] 'தர்மபத்யர்த்தந்யாயாதநபேதே' என்று சொல்லியிருப்பதினுல். 'ந்யாய' என்னும் பதம் இவ்விடத்தில் வேறு அர்த்தங்களைச் சொல்லுவது உசிதமில்லையாகையினுலும்,வ்யுத்பத்தியை யனுஸரித்தும் ஶாஸ்த்ரத்தையேஅபிப்ராயத்தில் கொண்டிருக்கிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்— 'ஶாஸ்த்ரங்களில் ஏற்பட்டதாயும்' என்று. ஶாஸ்த்ரங்களில் ஏற்பட்டதோடு லோகத்தில் லேற்பட்ட கர்மத்தையும் சொல்லுவதாக இருந்தால் அதை விட மற்றொன்றாக கார்யமும் என்று சொல்லியிருக்க வேண்டும். ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் சொன்ன பிறகு 'விபரீதம்' என்னும் பதமானது அதற்கு விரோதமான ஸ்வபாவமுடைய ஶாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்ட கார்யங்களைச் சொல்லுகிறதென்பது ஸ்வராஸ்யமுடையது. கைமுதிக ந்யாயத்தினுல் லோகத்தில் லேற்பட்ட கர்மமும் ஏற்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—'ஶாஸ்த்ரங்களில் தடுக்கப்பட்டதாயு மிருக்கிற' என்று. 'எல்லாக் கர்மத்திலும்' என்பது இதினுல் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறது. ஶரீரத்தினுல் செய்யப்படுகிறதும், மனதினுல் செய்யப்படு

1 அஷ்டாத்யாயீ 4 - 4 - 92, தர்ம, பதி, அர்த்த, ந்யாய, என்கிற பதங்களின் மேல் இவைகளைவிட்டு மாருதது என்னும் அர்த்தத்தில் 'ய' என்னும் விகுதி சேரும்.

ஐந்தும் காரணங்கள் (அவையாவன), अधिष्ठानं - ஶரீரம் ஜீவாத்மாவி னால் அதிஷ்டானம் செய்யப்படுகிறது. ஆகையினால் பஞ்சபூதங்களின் சேர்க்கையாகிற ஶரீரம் அதிஷ்டானம் என்னப்படுகிறது. அப்படியே

கிறதும், வாக்கினால் செய்யப்படுகிறதுகளுமாகிய கர்மங்களில் ஶரீரம் முதலியவைகள் ப்ரதான காரணமாக எப்படி வெவ்வேறாக ஏற்பட்டிருக்கிறதோ அப்படி இந்த ஐந்து காரணங்களும் அல்ல. பின்னை எப்படி என்னில் ஒவ்வொரு கர்மத்திலும் இந்த ஐந்தும் அவஶ்யமாக வேண்டியவைகள் என்கிற அபிப்ராயத்தினால் 'ஶரீரத்தினால் செய்யப்படுகிறதும்' என்பது முதலியது சொல்லப்படுகிறது. எல்லாக் கர்மங்களும் இந்த ஐந்து வஸ்துக்களையும் காரணங்களாக வுடையவைகளாக இருக்க சில கர்மங்களில் ஶரீரம் முதலியது முக்கிய காரணமாகையினாலல்லவோ ஶரீரத்தினால்செய்யப்படுகிறது, முதலிய பிரிவுகள் ஏற்பட்டிருக்கிறது. லோகங்களை ஸ்ருஷ்டிப்பது முதலிய கார்யங்களில் பரமாத்மா ஒருவனே காரணமாக இருந்தபோதிலும் ஜீவாத்மாவினால் செய்யப்படுகிற கர்மங்களில் பரமாத்மாவினால் தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே மற்ற இந்த வஸ்துக்களும் ஒத்தாசைக் கருவிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்கிற அபிப்ராயத்தினால் மற்றக் காரணங்களைச் சொல்லி இருக்கிறது. 1 'अधिष्ठानं क्षेत्रमाहुः' என்று வஸிஷ்டர் காரளன் என்பவனுக்குச் சொல்லியிருக்கிறார். அதை அனுஸரித்துச் சொல்லுகிறார்—'अधिष्ठानं ஶரீரம்' என்று. ஶ்ருதியிலும் 2 'ஓ! இந்திரனே! இந்தச் ஶரீரம் அழியக்கூடியது, ம்ருத்யுவால் பிடிக்கப்பட்டது. அப்படிப்பட்ட இந்தச் ஶரீரம் அழிவில்லாதவனும் ஸ்வபாவத்தில் ஶரீரத்தில் ஸம்பந்தமில்லாதவனுமாயுமிருக்கிற ஜீவாத்மாவிற்கு அதிஷ்டானம்' என்றர்த்தமுள்ள வாக்யத்தில் ஶரீரத்தில் 'अधिष्ठानं' என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. 3 'कृत्यल्युटो बहुलम्' என்பதினால் 'कर्म (செயப்படுபொருள்)' என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறதாகச் ஶரீரத்தில் 'अधिष्ठान' என்னும் பதத்திற்கு வ்யுத்பத்தி சொல்லுகிறார்—'ஜீவாத்மாவினால்' என்றாரம்பித்து. அதிஷ்டாதாவாகிய ஜீவாத்மாவும் பரமாத்மாவினால் அதிஷ்டானம் செய்யப்படுகிறானாகையினால் அவனை விலக்குவதற்காக 'ஜீவாத்மாவினால்' என்று விஶேஷித்துச் சொல்லப்பட்டது. ஜீவாத்மாவினால் அதிஷ்டானம் செய்யப்படுகிற இந்த்ரியங்களைத் தனியா

---

1 பாரதம், மோக்ஷதர்மம் - 312 - 14-ஶரீரத்தை அதிஷ்டானம் என்று சொல்லுகிறார்கள்.

2 சாந்தோக்யம் - 7 - 12 - 1. 3 அஷ்டாத்யாயீ - 3 - 3 - 113.

கர்தா - ஜீவாத்மா. இந்த ஜீவாத்மாவிற்கு ஜ்ஞாத்ருத்வம், கர்த்ருத்வம், உண்டென்று * 'ஜ்ஞோத ஏவ' † 'கர்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்' என்கிற ஸூத்ரங்களில் நிரூபிக்கப்பட்டது. கரணம் ச ப்ருதக்விதம் - வாக்கு, கை, கால், முதலிய மனதுடன் கூடிய ஐந்துவிதமான கர்மேந்த்ரியம்,

கச் சொல்லி இருப்பதினால் அதிலிருந்து சுருக்கிச் சொல்லுவதற்கா கச் சொல்லுகிறார்—'பஞ்ச பூதங்களின் சேர்க்கையாகிற' என்று. எல் லாவற்றிற்கும் கர்த்தாவாகிய பரமாத்மா இவ்விடத்தில் 'தைவம்' என்னும் பதத்தினால் தனித்துச் சொல்லப்படுகிறபடியினாலும் இவ் விடத்தில் 'கர்தா' என்னும் பதம் 1 'ஶாஸ்த்ரபலம் ப்ரயோக்த்ரி' என்கிற ந்யாயத்தைத் தெரிவிப்பதற்காக ஆகையினாலும் 'கர்தா-ஜீவாத்மா' என்று சொல்லப்பட்டது. கர்த்தாவாக இருக்கையா வது ஒன்றை அறிந்து அதில் ஆசையுடையவனாகி அந்த ஆசை யினால் ப்ரயத்தினம் செய்பவனாயிருக்கை. ஜ்ஞான ஸ்வரூபனா கிய ஜீவாத்மாவிற்கு அறியும் தன்மையே ஸம்பவிக்கா தாகையி னால் அதினால் உண்டாகக் கூடிய கர்த்தாவாக இருக்கை உண்டாகவே உண்டாகாது என்றாக்ஷேபம் வருகிற படியினால் அதற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இந்த ஜீவாத்மாவிற்கு' என்றாரம்பித்து. 'ஜ்ஞோத ஏவ' என்றிவை முதலிய ஸூத்திரங்களை எடுத்தது ப்ருதி முதலிய வைகளும் இதினாலேயே இழுக்கப்படுகின்றனவாகையினால். கர்மங் கள் உண்டாவதற்குக்காரணங்களை நிரூபிக்கிறபடியினால் இவ்விடத்தில் 'கரணம்' என்னும் பதம் கர்மேந்த்ரியம் மாத்திரத்தைச் சொல்லு கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'வாக்கு' என்றாரம் பித்து. ஜ்ஞானேந்த்ரியங்களுக்கும் அந்தந்த விஷயங்களைப் பற்றிய ஜ்ஞானங்களை உண்டாக்கி அதின் வழியாகப் பரம்பரையாகக் கர்மங் களில் காரணமாகும் தன்மை இருக்கிறது. அப்படி இருந்தபோதி லும் வஸ்துவின் ஸ்வபாவங்களை ஆலோசிக்கும் பொழுது மனதினால் இந்தக் கார்யத்தைச் செய்யவேண்டுமென்று ஸங்கல்பம் செய்து கொண்டே கர்மங்களைச் செய்கிறபடியினாலும், மனதிற்கு மற்ற ஜ்ஞா னேந்த்ரியங்களைப் போல் வேறொன்றின் வழியாகப பரப்பரையாகக் காரணமாகும் தன்மை இல்லாமையினாலும் 'மனதுடன் கூடிய' என்று சொல்லப்பட்டது மனது ஜ்ஞானேந்த்ரியமாக இருந்தபோதி

* ஶாரீரகஸூத்ரம் - 2 - 1 - 19.	† ஶாரீரகஸூத்ரம் - 2 - 3 - 33.

1. பூர்வமீமாம்ஸை-3-7-17-ஶாஸ்த்ரத்தினுடைய ப்ரயோஜனம் இந்த ஶாஸ் த்ரத்தில் சொல்லியபடி அனுஷ்டிப்பவனுக்கு உண்டாகிறது.

வ்யாப்ருதம் - கர்மங்களைச் செய்வதில் வெவ்வேறு விதமான வ்யாபாரத்தை உடைய என்றர்த்தம். விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா - இவ்விடத்தில் ப்ராணவாயுவின் வ்யாபாரத்தைச் சொல்லுகிற 'சேஷ்டா' என்னும் பதத்

லும் கர்மேந்த்ரியங்கள் ப்ரவ்ருத்தி செய்வதிலும் பொதுவாகையினால் 'கர்மேந்த்ரியம்' என்று சொல்லி இருக்கிறது. "ஶ்ரோத்ராஜ்ஞேநாஹி:" என்றிங்கேயே சொல்லியிருப்பதினாலும் மனது ஸங்கல்பம் முதலிய கார்யங்களைச் செய்வதினாலும் 'கர்மேந்தரியம்' என்று சொல்லியிருக்கிறது. ஸாங்க்யர்களினாலும் இப்படியே 1 'புத்தீந்த்ரியாணி சக்ஷு:ஶ்ரோத்ர க்ராண ரஸநத்வகாக்யாநி | வாக்பாணிபாதபாயூபஸ்தாந் கர்மேந்த்ரியாண்யாஹு:|| உபயாத்மகமத்ர மந: ஸங்கல்பகமிந்த்ரியம் ச ஸாதர்ம்யாத் |' என்று சொல்லப்பட்டது. கர்மங்களின் காரணங்களை நிரூபித்துக்கொண்டு வரும்பொழுது 'வ்யாப்ருதம்' என்று விசேஷணம் சொல்லியிருப்பது அந்தக் கர்மங்களுக்குபயோகங்களாகிய வ்யாபாரங்களாகிற விதங்களைச் சொல்லுகிறதென்று சொல்லுகிறார்—'கர்மங்களைச் செய்வதில்' என்றாரம்பித்து. வாய் முதலிய ஒவ்வொரு இந்த்ரியத்தினுடையவும் வார்த்தை சொல்லுவது, வஸ்துவை எடுப்பது, நடப்பது, மலாதிகளை விடுவது, ஆநந்தத்தை உண்டாக்குவது, ஸங்கல்பத்தைச் செய்வது, முதலிய வ்யாபாரங்கள் வெவ்வேறாகவன்றோ இருக்கின்றன. ப்ரயத்னத்தைக் காரணமாகவுடைய ஶரீரத்தின் வ்யாபாரம் சேஷ்டை என்று சொல்லப்படுகிறது. ஆகையினாலிவ்விடத்தில் கர்மத்திற்கு அதுவே காரணமென்னில் (தனக்குத்தானே காரணமாகையினால்)ஆத்மாஶ்ரயம் என்னும் தோஷம் வருகிறதேஎன்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இவ்விடத்தில் ப்ராணவாயுவின் வ்யாபாரத்தைச் சொல்லுகிற' என்றாரம்பித்து. 'சொல்லப்படுகிறது' என்னும் பதத்தினால் தெரிவிக்கப்படுகிறது என்பது மாத்திரம் சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் அந்தச் சேஷ்டைக்குக் காரணமாகிய மற்றொரு வஸ்துவை லக்ஷணையாகச் சொல்லவேண்டியதென்பதேற்பட்டிருக்கிறபடியினால் வாக்கு முதலியவைகள் கரணம் என்னும் பதம் முதலியவைகளினால் சொல்லப்பட்டபடியினாலும்,

---

1. கண், காது, மூக்கு, நாக்கு, தோல், என்று பேருடையவைகள் ஜ்ஞானேந்த்ரியங்கள், வாக்கு, கை, கால், அபானம், உபஸ்தம், இவைகளைக் கர்மேந்த்ரியங்கள் என்று சொல்லுகிறார்கள். ஸங்கல்பத்தைச் செய்கிற மனது என்கிற இந்த்ரியம் இவை இரண்டிற்கும் பொதுவாகையினால் கர்மேந்த்ரியமாகவும் ஜ்ஞானேந்த்ரியமாகவும் இருக்கிறது.

திஞல் ஐந்துவிதமாகிய வாயு சொல்லப்படுகிறது. ஶரீரம், இந்த்ரியம், இவைகளைத்தரிக்கிற ப்ராணன்,அபானன்,என்கிற பிரிவுகளையுடையஐந்து விதமான வாயுவின் வேவ்வேறு விதமான வ்ருத்திகளும். தைவம் சைவாத்ர பஞ்சமம் - இந்தக் கர்மங்களின் காரணங்களினுடைய தும்பலில்

ப்ராணஸம்வாதம் முதலியவைகளில் இந்த்ரியங்களும் ஶரீரமும் இருப்பதும் ப்ரவ்ருத்தி செய்வதும் ப்ராணவாயுவிற்கு வசப்பட்டதென்பது ஶ்ருதியில் சொல்லியிருக்கிறபடியினல் 'ப்ராண' என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிற 'சேஷ்டா' என்னும் பதத்தினல் ப்ராண வாயுவை லக்ஷணையாகச் சொல்லுவது இவ்விடத்தில் யுக்தம் என்கிற அபிப்ராயத்தினல் சொல்லுகிருர் 'ப்ராணவாயுவின் வ்யாபாரத்தைச் சொல்லுகிற' *என்று. ப்ராணஸம்வாதம், முதலியவைகளை ஜ்ஞாபகப் படுத்துவதினல் ப்ராணவாயுவை லக்ஷணையாகச் சொல்லுவது உசிதம் தான் என்பதையும், அதின் வ்யாபாரங்கள் அநேகம் என்பதையும் விவரிக்கிருர்*—'ஶரீரம், இந்த்ரியம், இவைகளைத் தரிக்கிற' *என்ருரம்பித்து. 'வ்ருதக்' என்னும் பதத்திற்கும் 'விவிதா' என்னும் பதத்திற்கும் புனருக்திபைப்பரிஹரிப்பதற்காகச்சொல்லுகிருர்*—'ப்ராணன், அபானன், என்கிற பிரிவுகளையுடைய' *என்று. அதிஷ்டானம், கர்த்தா, காரணங்கள், இவைகளின் வ்யாபாரத்தைவிட ஶரீரம், இந்த்ரியம், இவைகளைத் தரிப்பதாகிய வ்யாபாரம் வெவ்வேருகையினல் 'வ்ருதக்' என்று சொல்லப்படுகிறது. ப்ராணன் முதலிய வ்ருத்திகளின் வ்யத்யாஸத்தினல் உண்டாக்கப்பட்ட மூச்சுவிடுதல், இமைக் கொட்டுதல் முதலிய வ்யாபாரங்கள் வெவ்வேருகையினல் 'விவிதா' என்னப்படுகிறது என்றும் தாத்பர்யம்.* 'ஐந்து விதமான' *என்னும் பதம் இவ்விடத்தில் ஐந்துவிதமான வ்ருத்திகளையுடைய என்பதைச் சொல்லுகிறது. அப்படியே ஸூத்ரத்திலும்* 1 '*பஞ்சவ்ருத்தி* *ர்மநோவத் வ்யபதிஶ்யதே*' *என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து விதம் என்று சொல்லியிருப்பதும் நாகம், கூர்மம், க்ருகரம், தேவதத்தம், தநஞ்ஜயம், என்கிற மற்ெருரு ஐந்து வ்ருத்திகளையும் குறிக்கின்றது.* '*தைவம் சைவாத்ர பஞ்சமம்*' *என்கிற இடத்தில் தைவமென்று பேருடைய முக்யமான காரணத்தைத் தனித்துச் சொல்லுவதற்காக 'அத்ர' என்றநுவாதம் செய்திருக்கிறது என்று சொல்லுகிருர்*—'இந்தக் கர்மங்களின்' *என்ருரம்பித்து. பரமாத்மாவை ஐந்தாவ*

---

1 ஶாரீரக ஸூத்ரம் - 2 - 4-11.

தைவம் ஐந்தாவது, அதாவது அந்தர்யாமியாகிய பரமாத்மா கர்மங்களை

தாகச் சொல்லியிருப்பதில் ஸ்ருதியினாலும், வஸ்துஸ்வபாவத்தினாலும், பாபம் முதலியவைகளினாலு மேற்பட்ட க்ரமங்கள் ஸம்பவிக்காதாகையினாலும், வார்த்தை க்ரமமாகத் தான் சொல்ல முடியுமாகையினாலும், க்ரமப்படி சொல்லியிருந்த போதிலும் 'பஞ்சமம்' என்று கணக்கிட்டுச் சொல்லியிருப்பதில் ப்ரயோஜனமில்லாமையினாலும், எப்படிக் கடவல்லியில் 1 'இந்த்ரியங்களைவிட விஷயங்கள் மேலானவைகள்' என்றர்த்தமுள்ள வாக்யம் முதலாக ஆரம்பித்து 'மஹானைவிட அவ்யக்தம் மேலானது', அவ்யக்தத்தைவிடப் புருஷன் மேலானவன், புருஷனைவிட மேலானவன் ஒருவருமில்லை, அதுவே மேலானது, அதுவே மேலானகதி' என்றர்த்தமுள்ள வாக்யம் முடிவாகவுள்ள வாக்யத்தில் இந்த்ரியம் முதலிய எல்லா வஸ்துக்களும் ப்ரவ்ருத்தி செய்வதற்கு முக்கிய காரணமாகிய பரமாத்மா ஸ்வாதீனப் படுத்திக்கொள்ள வேண்டிய வஸ்துக்களுக்குள் மேலானதாகச் சொல்லப்படுகிறதோ அதைப்போலவே இவ்விடத்திலும் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அதாவது அந்தர்யாமியாகிய பரமாத்மா' என்றாரம்பித்து. 2 'தைவம் ப்ராக்க்ருதம் கர்ம', 3 'தைவம் திஷ்டம் பாகதேயம்', என்றிவை முதலியவைகளில் முன் செய்த கர்மமாகிய பாக்யம் என்னும் அர்த்தத்தைச் சொல்லுவதாக 'தைவம்' என்னும் பதத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது காரணம் என்பதும் பொருத்தமாகவே இருக்கிறது. ஆகையினால் இவ்விடத்தில் பரமாத்மா என்று எப்படி அர்த்தம் சொல்லப்படுகிறது என்னில்? அதற்கு ஸமாதானம்—முன்பே அழிந்து போன கர்மங்கள் தங்கள் ஸ்வரூபத்தினால் காரணம் என்பது ஸம்பவிக்காது, ஆகையினால் கர்மங்களினால் உண்டாக்கப்படுகிற அத்ருஷ்டம் என்று சொல்லப்படுகிற பரமாத்மாவின் ஸங்கல்பமே காரணம் என்று சொல்லவேண்டும். அதைவிட 'தைவம்' என்னும் பதத்தினாலே அந்தப்பரமாத்மாவையே சொல்லுவது மேலானது. மேலும் 'தைவம்' என்னும் பதம் தேவதை என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுவதாக லோகத்திலும் வேதத்திலும் ப்ரஸித்தமாக இருக்கிறது. எங்கே என்னில் 4 'ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யமுத்ரு

---

1 கடவல்லி - 1 - 3 - 10.

2 தைவம் என்பது முன் செய்யப்பட்ட கர்மம்.

3 நாமலிங்கானுஸாஸநம், 1—வது காண்டம், கால வர்க்கம்.

4 நாரஸிம்ஹ புராணம் - 18 - 33. புஜம் - கையை, உத்ருத்ய - தூக்கிக் கொண்டு, ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யம்-மூன்று தரம் ஸத்யமாக, உச்யதே-சொல்

த்ருஹ்யதே | வேதஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத் பரம் ||' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் வேறு அர்த்தம் ஸம்பவிக்காது. இப்படியே ஸ்ரீமத் ராமாயணத்திலும் 1 'ஸ்வாதீநம் ஸமதிக்ரம்ய மாதரம் பிதரம் குரும் | அஸ்வாதீநம் கதம் தைவம் ப்ரகாரைரபிராத்யதே ||' என்றும், அப்படியே ஸபாபர்வத்திலும் 2 'ஶ்ரூயதாம் பரமம் தைவம் தூர்விஜ்ஞேயம் மயாபி ச | நாராயணஸ்து புருஷோ விஶ்வரூபோ மஹாத்யுதி: ||' என்றும், அப்படியே யாஜ்ஞவலக்யரினால் செய்யப்பட்ட யோக ஶாஸ்த்ரத்தில் 3 'ஆர்ஷம் சந்தஶ்ச மந்த்ராணாம் தைவதம் ப்ராஹ்மணம் ததா' என்று முதலில் சொல்லப்பட்ட அர்த்தமே மறுபடியும் 'ஆர்ஷம் சந்தஶ்ச தைவம் ச' என்றும் சொல்லப்படுகிறது. அதிலேயே அஸுரர்களை மயக்குவதற்காக ப்ரம்மாவின் உபதேசத்தை அநுவாதம் செய்யுமிடத்தில் 4 'ஆத்மானம் பூஜயேந்நித்யம் பூஷணாச்சாதநாதிபி: | ஸ்வதேஹ ஏவ தைவம் ஸ்யாந்நாந்யத் தைவம் ந வித்யதே ||' என்

லப்படுகிறது, வேதஶாஸ்த்ராத் - வேதமென்கிற ஶாஸ்த்ரத்தைவிட, பரம் - மேலான ஶாஸ்த்ரம், நாஸ்தி - இல்லை, கேஶவாத் - பகவானைவிட, பரம் - மேலான, தைவம் - தேவதை, ந-இல்லை.

1 ராமாயணம்-அயோத்யா காண்டம், ஸ்வாதீனம்-தனக்கதீனமான, மாதரம்-தாயாரையும், பிதரம் - தகப்பனாரையும், குரும் - ஆசார்யனையும், ஸமதிக்ரம்ய-தாண்டி, அஸ்வாதீநம் - தனக்கதீனமல்லாத, தைவம் - தேவதையானது, ப்ரகாரை:—எவ்விதங்களினால், கதம் - எப்படி, அபிராத்யதே - ஆராதனம் செய்யப்படுகிறது.

2 பரமம் - மேலானதாகிய, மயாபிச - என்னாலும், தூர்விஜ்ஞேயம் - அறியத் தகாததாகிய, தைவம்-தேவதை, ஶ்ரூயதாம் - கேழ்க்கத்தக்கது (அது எதென்னில்), விஶ்வரூப:—ப்ரபஞ்சத்தைச் ஶரீரமாகவுடைய, மஹாத்யுதி:—விசேஷமான காந்தியையுடைய, புருஷ:—புருஷனாகிய, நாராயணஸ்து - நாராயணன் தான்.

3 மந்த்ராணாம் - மந்த்ரங்களினுடைய, ஆர்ஷம் - ருஷியையும், சந்தஶ்ச-சந்தஸ்ஸையும், தைவதம் - தேவதையையும், ததா - அப்படி, ப்ராம்மணம்-ப்ராம்மண வாக்யத்தையும் (அறியவேண்டும்).

4 நித்யம் - எப்பொழுதும், பூஷணாச்சாதனாதிபி:—ஆபரணம், வஸ்திரம், முதலியவைகளினால், ஆத்மானம் - தன்னுடைய தேஹத்தை, பூஜயேத் - பூஜை செய்யவேண்டும், ஸ்வதேஹ ஏவ - தன்னுடைய ஶரீரமே, தைவதம் - தேவதையாக, ஸ்யாத் - ஆகும், அந்யத் - வேறு, தைவம்-தைவமானது, நவித்யதே-இல்லையல்லவா.

னும், அப்படியே 1 ‘தைவாதீநம் ஜகத்ஸர்வம் மந்த்ராதீநம் து தைவதம்। தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் தஸ்மாத்விப்ரா ஹி தைவதம்॥’ என்றும், இந்தக்கீதா ஶாஸ்த்ரத்திலும் 2 ‘ஸாதிபூதாதி தைவம் மாம்’ என்று ப்ரஸ்தாவித்துக் கொண்டு 3 ‘அதிதைவம் கிமுச்யதே’ என்று கேட்கப்பட்ட அர்த்தத்திற்கு 4 ‘புருஷஶ்சாதிதைவதம்’ என்று பதில் சொல்லுகிறார். சாந்தோக்யத்திலும் ஸூர்யன் என்கிற தேவதையினிடத்தி லிருக்கிற புருஷனுக்கு அதிதைவதம் என்று பெயர் சொல்லப்படுகிறது. ‘அவனுக்கு ரஹஸ்யமான பேர் ‘அஹ:’ என்று அதிதைவதம் சொல்லப்பட்டது. அவனுக்கு ரஹஸ்யமான பேர் ‘அஹம்’ என்று இப்படி அத்யாத்மம் சொல்லப்பட்டது’ என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் சொல்லப்படுகிறது. இப்படியே வேறு இடங்களிலும் பார்த்துக் கொள்ளவேண்டியது. மற்றவர்களாலும் இவ்விடத்திலிருக்கும் ‘தைவம்’ என்னும் பதம் கண் முதலிய இந்த்ரியங்களுக்கு ஒத்தாசை செய்கிற ஸூர்யன் முதலிய தேவதைகளைச் சொல்லுகிறதாக வ்யாக்யானம் செய்யப்பட்டது. நாம் அந்த ஸூர்யன் முதலிய தேவதைகளுக்கும் ஒத்தாசை செய்கிற பரமாத்மாவை ‘தைவம்’ என்று சொல்லுகிறோம். இவ்வளவு தான் வ்யத்யாஸம். ஸ்தோத்திரத்திலும் 5 ‘ப்ரதிததைவ பரமார்த்தவிதாம் மதைஶ்ச’ என்று ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. லக்ஷ்மீ கல்யாணத்திலும் 6 ‘தர்மே ப்ரமாணம் ஸமயஸ்ததீயோ வேதாஶ்ச தத்வம் ச ததிஷ்டதைவம்’ என்று ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் ‘தைவம்’ என்னும் பதம் இவ்விடத்தில் தேவதை என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது. அந்தத் தேவதையும் எல்லா வஸ்துக்களையும் ப்ரவ்ருத்தி செய்விக்கக்கூடிய காரணத்தைச்

---

1 விஹகேந்த்ர ஸம்ஹிதை, 22-வது படலம் - 15-ஸர்வம் - எல்லா, ஜகத்-லோகமும், தைவாதீநம் - தேவதைக்கு அடங்கியது, தைவதம்து - தேவதையோவெனில், மந்த்ராதீநம் - மந்த்ரத்திற்கடங்கியது, தத் - அந்த, மந்த்ரம்-மந்த்ரமும், ப்ராம்மணாதீநம் - ப்ராம்மணர்களுக்கு அடங்கியது, தஸ்மாத் - ஆகையினால், விப்ராஹ் - ப்ராம்மணர்களல்லவோ, தைவதம்—தேவதை.

2 பகவத்கீதை 7 - 30. 3 பகவத்கீதை 8 - 1. 4 பகவத்கீதை 8 - 4.

5 ஸ்தோத்திர ரத்னம்-15. ப்ரஸித்தமாகிய தேவதையின் உண்மையை அறிந்தவர்களுடைய மதங்களிலும்.

6 தர்மே - தர்மத்தில், ப்ரமாணம் - ப்ரமாணமாவது, ததீய:—அந்தப் பெரியோர்களினுடையதாகிய, ஸமய:—ஆசாரமும், வேதாஶ்ச—வேதங்களும், தத்வம்ச—தத்துவமும், ததிஷ்டதைவம்—அவர்களுக்கு இஷ்டமான தேவதைதான்.

உண்டுபண்ணுவதில் முக்கியமான காரணம் என்றர்த்தம். இதுவும் கீழே * 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநம் ச॥' என்று சொல்லப்பட்டதல்லவா. மேலேயும் † 'ஈச்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே(அ)ர்ஜுந திஷ்டதி। ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா॥' என்று சொல்லப்போகிறார். ஜீவாத்மாவினு

சொல்லுகிறதாகையினாலும், வேறு தேவதையை விசேஷித்துச் சொல்லுவதற்குக் காரணமில்லாமையினாலும், பரதேவதையைச் சொல்லுகிறது என்பது உசிதம், என்கிற அபிபராயத்தினால் 'அதாவது அந்தர்யாமியாகிய பரமாத்மா' என்பது முதலியது சொல்லப்பட்டது. எப்படி இவன்எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவோ அப்படி இவனுக்கு ஆத்மா ஒருவரும் இல்லை. ஆகையினால் பரமாத்மா என்னப்படுகிறான். எப்படிச் சரீரம் முதலியவைகள் ப்ரவ்ருத்திப்பதற்கு ஜீவாத்மா முக்கியமான காரணமோ அப்படியே அவன் ப்ரவ்ருத்திப்பதற்கு இவன் என்கிற அபிப்ராயத்தினால் 'அந்தர்யாமியாகிய' என்று சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட தாத்பர்யத்தை இந்தக் கீதாசாஸ்த்ரத்தில் முன்பின் ஸந்தர்ப்பங்களைக்கொண்டு ஸ்தாபிக்கிறார்—'இதுவும் கீழே' என்றாரம்பித்து. 1 'ஸ்வதந்த்ர: கர்தா' என்று கர்த்தாவிற்கு லக்ஷணம் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டது. இவ்விடத்திலும் கர்த்தா என்று ஜீவாத்மா சொல்லப்பட்டான். ஆகையினால் மற்றக்காரணங்களை ஏவுகிறவன் என்பதும் வேறொரு காரணத்தினால் தான் ஏவப்படாதவனென்பதும் அவனுக்கு ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையினால் தைவமும் இவ்விடத்தில் அதிஷ்டானம் முதலியவைகளைப் போல அந்த ஜீவாத்மாவிற்கு அடங்கியதாகவே சொல்லவேண்டும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஜீவாத்மாவினுடைய' என்றாரம்பித்து. ஜ்ஞானம், செய்யவேண்டுமென்கிற ஆசை, அதில் ப்ரயத்னம், இவைகள் உண்டானபிறகல்லவோ ஜீவாத்மாவிற்கு மற்றக்காரணங்களை ஏவும் தன்மை உண்டாகிறது. ஜ்ஞானம், முதலியவைகள் உண்டாவதே பரமாத்மாவிற்கு வசப்பட்டதென்று ச்ருதியிலேற்பட்டிருப்பதினால் ஜீவாத்மாவிற்குப் பரமாத்மாவிற்கு வசப்பட்ட கர்த்ருத்வமும், மற்றக்காரணங்களைக் குறித்து ஸ்வதந்த்ரனாக இருக்கையும் விருத்தங்களல்லவென்று சாரீரக ஸூத்ரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது என்று தாத்பர்யம். இந்த அபிப்ராயத்தைத் தெரிந்துகொள்ளாமல் காற்று, ஜலம், முதலியவைகளைப்போல பரமாத்மா

---

* *பகவத்கீதை* - 15 - 15. † *பகவத்கீதை* - 18 - 61.

1 *அஷ்டாத்யாயீ* - 1 - 4 - 54. *கர்த்தாவானவன் ஸ்வதந்த்ரன்.*

டைய கர்த்ருத்வமும் பரமாத்மாவிற்கு வசப்பட்டதென்பது‡'பராத்து தச்ருதே:' என்கிற ஸூத்ரத்தில் நிரூபிக்கப்பட்டது. இப்படி ஆனல் ஜீவாத்மாவிற்குக் கர்த்ருத்வம் பரமாத்மாவிற்கு வசப்பட்டதாயிருந்தால் ஜீவாத்மா கர்மங்களில் ஏவத்தகாதவனுகிருன். ஆகையினுல் இதைச் செய்யாதே என்று சொல்லுகிற ஶாஸ்த்ரங்கள் வ்யர்த்தங்களாய் விடுமே

ஏவுகிருன் என்று நினைத்துக்கொண்டு ஆக்ஷேபிக்கிருர்—'இப்படி ஆனல்' என்ருரம்பித்து. ஜ்யோதிஷ்டோமம் முதலிய கர்மங்களில் பரமாத்மா ப்ரேரணம் செய்வதாயிருந்தால் அப்பொழுது ஜீவாத்மாவைப்பற்றி ஒன்றையும் விதிக்க வேண்டியதில்லை. ஏனென்னில் பலசாலியாகிய ஒருவனுல் இழுத்துக் கொண்டு போகப்படுகிறவனைக் குறித்துப்போ என்று விதிக்கவேண்டியதில்லையல்லவா. அவன் தடுக்கிறதா யிருந்தாலும் அப்பொழுதும் விதிக்க வேண்டியதில்லை. அதிகபலமுள்ளவனுல் தடுக்கப்பட்டிருக்கிற துர்ப்பலனைக்குறித்துப்போ என்று விதிப்பது உசிதமில்லையல்லவா. இப்படியே எந்தக் கார்யத்தில் பரமாத்மா ஏவுகிருனே அந்தக் கார்யத்தில் நிவ்ருத்திக்க முடியாதாகையினுல் மறுப்பதும் ப்ரயோஜன மற்றது. எந்தக் கார்யத்தில் அவன் ஏவுகிறதில்லையோ அந்தக் கார்யத்தில் ப்ரவ்ருத்திக்க முடியாதாகையினுல் மறுக்க வேண்டிய தவர்யமில்லை என்று தாத்பர்யம். இவ்விடத்தில் சார்வாகனைத்தவிரமற்ற ஸித்தாந்தங்களைப்பற்றி வரும்ஆக்ஷேபத்தின் முடிவு இது—¹ 'நிக்ரஹாநுக்ரஹாஜ்ஞாத ஸர்வஸ்யா த்ரஷ்டு ஶாஸ்திவொதித: । நிக்ரஹாநுக்ரஹாத்ருஷ்ட ஜதீஷம் ஸடதே கயம்॥' என்பது. ஜீவாத்மாவிற்கு அறியும் தன்மை, கர்த்தாவாக இருக்கை, பாதந்த்ரனுக இருக்கை, இவைகளில்லை என்கிறஆக்ஷேபங்களைப் போலவே அவன் பாதந்த்ரனுக இருந்தால் விதிக்கிற வாக்யங்களும் தடுக்கிற வாக்யங்களும் ப்ரயோஜன மற்றவைகளாக வேண்டிவரும் என்கிற ஆக்ஷேபத்தையும்,ஐந்தாவது வேதத்தையும், அதின் உபநிஷத்தையும் ப்ரத்யக்ஷமாகக் கண்டறிந்தவராகிய பகவானுகிய வ்யாஸர் தானே பரிஹரித்திருக்கிருர் என்று சொல்லுகிருர்—'இந்த ஆக்ஷேபமும்' என்ருரம்பித்து. ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டதும் தடுக்கப்

---

‡ *ஶாரீரகஸூத்ரம்* - 2 - 3 - 40.

1 *தாத்பர்ய சந்த்ரிகைக்காருடைய காரிகை. நிக்ரஹம் என்றும் அநுக்ரஹம் என்றும் சொல்லப்படுகிற முன் செய்த அத்ருஷ்டத்தினுல் ஏவப்பட்டவனுகிய ஜீவாத்மா அனுக்ரஹம் செய்யவும் நிக்ரஹம் செய்யவும் தகுந்தவனுகிருன் என்கிற இது எப்படிப் பொருந்தும்.*

என்கிற இந்த ஆக்ஷேபமும் ஸூத்ரகாரராலேயே § 'க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்தாவையர்த்யாதிப்ய:' என்கிற ஸூத்ரத்தில் பரிஹரிக்கப்பட்டது. இத்தால் சொல்லப்பட்டதாவது—பரமாத்மாவினால் கொடுக்கப்பட்டதும் அவனையே ஆதாரமாகவுடையதும், அவ

பட்டவைகளும் வ்யர்த்தமாகாமலிருக்க வேண்டியகாரணத்தினாலேயே ஜீவாத்மாவினால் செய்யப்பட்ட ப்ரயத்னத்தை எதிர்பார்த்து பரமாத்மா மேன்மேலும் கார்யங்களில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்கிறான் என்று ஸூத்ரத்தின் அர்த்தம். இவ்விடத்தில் எல்லா ப்ரவ்ருத்திகளும் பரமாத்மாவிற்கு வசப்பட்டிருக்க முதலில் செய்யப்பட்ட ப்ரயத்னத்தை எதிர்பார்த்து என்று எப்படிச்சொல்லப்படுகிறது? ஶாஸ்த்ரங்கள் வ்யர்த்தமாய்ப் போகவேண்டி வரும் என்கிற ஆக்ஷேபத்திற்கு அப்படி வ்யர்த்தமாகாமலிருப்பதற்காக என்று பரிஹாரம் சொல்லில் நாம் சொல்லுவதற்கும் நீர் சொல்லுவதற்கும் வ்யத்யாஸமில்லையே என்றாக்ஷேபம் வரில் ஸூத்ரத்தின் அபிப்ராயத்திலிருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'இத்தால் சொல்லப்பட்டதாவது' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது—ஈஶ்வரன் யந்த்ரம், முதலியவைகளைப்போலத் தன்னுடைய ஸங்கல்பத்தினால் உண்டாக்கப்பட்ட ப்ரவ்ருத்தி செய்யக்கூடிய சக்திகளையுடைய ஶரீரத்தையும் இந்த்ரியங்களையும் கொடுத்திருக்கிறானே அதுவும், பூமி முதலியவைகளைப்போல எல்லா ப்ரவ்ருத்திகளுக்கும் எல்லா நிவ்ருத்திகளுக்கும் பொதுவாக ஸ்வரூபத்தினாலும் ஸங்கல்பத்தினாலும் எல்லாவஸ்துக்களுக்கும் ஆதாரமாக இருக்கிறானே அதுவும், அந்தச் ஶரீரம், இந்த்ரியம், முதலியவைகளை அதிஷ்டானம் செய்யக்கூடிய ஶக்தியை ஜீவாத்மாவிற்குக் கொடுத்திருக்கிறானே அதுவும், இவன் ப்ரவ்ருத்திப்பதற்கு இடமாகிய வெளியிலிருக்கும் விஷயங்களை இவனுக்கு சேரும்படி செய்கிறானே அதுவும், இவையெல்லாம் ஜீவாத்மா கர்த்தா என்பதற்கு அனுகுணமானது. எல்லா ப்ரவ்ருத்திகளுக்கும் நிவ்ருத்திகளுக்கும் பொதுவானது. ஆகையினால் இந்த விஷயத்தில் ஆக்ஷேபிக்க இடமில்லை. இதினாலேயே எல்லா ப்ரவ்ருத்திகளுக்கும் நிவ்ருத்திகளுக்கும் பொதுவாக பகவான் உதாஸீநன் என்று சொல்லப்படுகிறது. இப்படி சக்தியை அடைந்தவனாகிய ஜீவாத்மா ப்ரவ்ருத்தி செய்யும்பொழுது கார்யம் முடிவுபெறுவதற்காகப் பகவான் அனுமதி செய்கிறானே அதுவும் ஜீவாத்மாவிற்குக் கர்த்ருத்வத்தைத் தடுக்காது. பின்னை எப்படி என்னில் அதையே வ்ருத்தி செய்கிறது. ஆகையினால் அதைக்

---

§ ஶாரீரகஸூத்ரம் - 2 - 3 - 41.

னால் கொடுக்கப்பட்ட சக்தியையுடையதுகளாயு மிருக்கிற ஶரீரம், இந்
த்ரியம்,இவைகளைக்கொண்டு ஜீவாத்மாவாகிய தானும் அவனையேஆதார
மாகவுடையவனாய்க் கொண்டும், அவனால் கொடுக்கப்பட்ட சக்தியை
யுடையவனாய்க்கொண்டும், கர்மங்கள் உண்டாவதற்காகத் தன்னுடைய
இஷ்டத்தினால் இந்த்ரியம் முதலியவைகளை அதிஷ்டானம்செய்வதாகிய
ப்ரயத்னத்தைச் செய்ய ஆரம்பிக்கிறான். அவனுக்குள்ளே இருக்கிற பர

கொண்டும் விதிக்கிறதும் தடுக்கிறதுமாகிய ஶாஸ்த்ரங்கள் வ்யர்த்தம்
என்பது ஸம்பவிக்காது. ஒரே கார்யத்தில் பரமாத்மாவாகிய மற்
றொரு கர்த்தா சேர்ந்திருப்பது ஜீவாத்மா ஸ்வதந்த்ரனல்ல என்
பதற்குக் காரணமாகாது. தனித்தனி மனுஷ்யனால் செய்யமுடியாத
தாய் அனேகம் பேர்களினால் சேர்ந்து செய்யப்படுகிற கார்யத்திலும்
லோகத்தில் விதிப்பதையும் தடுப்பதையும் அவைகளின் ப்ரயோஜனத்
தையும் கண்டிருப்பதினால் ப்ரவ்ருத்தி செய்யக்கூடிய சக்தியையுடை
யவனுக்கு ஆசை உண்டாகும்பொழுதுமற்றொருவரால் தடுக்கமுடியாம
லிருப்பதினால் ஸ்வதந்த்ரன் என்பதும் ஏற்படுகிறது. இப்படி I 'கா
ர்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை:'
என்றிவை முதலிய இடங்களிலும் ஜ்ஞானம், ஆசை, இவைகளை முன்
னிட்டு ப்ரவ்ருத்திக்கும்படி செய்கிறபடியினாலும் விஶேஷமாகிய இச்
சையும் அந்தந்தக் குணங்களின் வாஸனைகளின் விஶேஷங்களைக் கார
ணமாக உடையதினால் ஜீவாத்மாவிற்குக் கர்த்ருத்வம் ஸ்தாபிக்கப்பட்
டது. ஆகையினாலேயே இவ்விடத்திலும் ஐந்து காரணங்களுக்குள்
'கர்த்தா' என்று பெயரிருப்பதினால் கர்த்தாவாகவே ஜீவாத்மா நிரூ
பிக்கப்படுகிறான். ஶரீரம், இந்த்ரியங்கள், சக்தி, ஜ்ஞானம், இச்சை,
இவைகளில், வ்யத்யாஸத்தைக் கொடுத்திருப்பதும் கெட்ட கார்யத்
தில் ப்ரவ்ருத்திக்கும் பொழுது தடுக்காமல் இருப்பதும், அனுமதி
செய்வதும், பாபத்தையுண்டாக்குவதும் செய்கிறானே அதுவும் அநா
தியாகிய முன்செய்த கர்மங்களின் வ்யத்யாஸத்தைக் காரணமாகவு
டையதாகையினால் பகவானுக்குப் பக்ஷபாதம், தயையில்லாமை,இவை
களை உண்டாக்காது ப்ரவ்ருத்திகளின் வ்யத்யாஸம் அத்ருஷ்டங்களின்
வ்யத்யாஸத்தைக் காரணமாக வுடையதாயிருந்த போதிலும் அந்த
அத்ருஷ்டமே ஶாஸ்த்ரத்தை முன்னிட்டு இவனுக்கு மேல்வரும் அத்
ருஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. அந்த அத்ருஷ்டமும் அப்படியே.
ஆகையினால் விதிக்கிறதும் தடுக்கிறதுமாகிய ஶாஸ்த்ரங்களுக்கு இட

I பகவத்கீதை -3 - 5.

மாத்மா தான் அனுமதி கொடுப்பதினால் அவனை ப்ரவ்ருத்திப்பிக்கிறான். ஜீவாத்மாவிற்கும் தன்னுடைய புத்தியினாலேயே ப்ரவ்ருத்தி செய்யக் காரணமாகும் தன்மை இருக்கிறது. எப்படி அதிகக் கனமுள்ள பாறை

முண்டாகிறது. முன் ஜன்மத்தில் யஜ்ஞம் முதலியவைகளுக்குக் காரணமாகிய அத்ருஷ்டம் செய்யப்பட்டதென்று அந்த அத்ருஷ்டத்தினாலேயே இந்த ஜன்மத்தில் யஜ்ஞம், முதலியன முடிவு பெறுவல்லவா. ஏனெனில் அந்த யஜ்ஞம், முதலியன ஶாஸ்த்ரங்களினாலுண்டாக்கப்படுகிற புத்தி முதலியவைகளை அபேக்ஷித்திருக்கிறபடியினால். இப்படியே பாபத்திற்குக் காரணமாகிய அத்ருஷ்டமும் தன்னுடைய புத்தியினாலேயே நிவ்ருத்தி செய்யவேண்டியதென்று உத்திரவு செய்பத்தகாததான தசையையுண்டாக்கிப் பாபத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்கிறது. அந்தப் பாபமும் அப்படியே செய்கிறது. இப்படி ஒப்புக்கொள்ளாமல் நல்ல கார்யத்திலும் கெட்ட கார்யத்திலும் ப்ரவ்ருத்திப்பது அத்ருஷ்டத்தையே காரணமாகவுடையதாகையினால் அவைகளுக்கு ஶாஸ்த்ரம் வேண்டியதில்லை என்று சொல்லுகிறவனுக்கு இதற்குமுன் அத்ருஷ்டத்திலும் இப்படியே சொல்லலாமாகையினால் 1 'தன்னுடைய வார்த்தைக்கே' விரோதம் வருகிறது. ஆனால் எல்லா ப்ரவ்ருத்திகளும் அத்ருஷ்டத்தையே காரணமாக வுடையதாயிருந்தால் ஶாஸ்த்ரம் ப்ரயோஜனமற்றதாய்ப் போகவேண்டி வருகிறது. ஶாஸ்த்ரமோ எல்லோராலும் ப்ரயோஜனமுடையது என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகையினால் அத்ருஷ்டத்தைக் காரணமாக வுடையதென்பது உசிதமல்ல என்று நினைக்கிறாயோ? அப்படிக்கும் சொல்ல வழியில்லை. ஏனெனில் லோகத்தில் உண்டாகிய விதிப்பது, மறுப்பது, இவைகளைப்பற்றியும் இப்படிச் சொல்லலாமாகையினால். அவ்விடத்திலும் தந்தம் காரணங்களினுடைய வ்யத்யாஸத்தைக்காரணமாகவுடையது ப்ரவ்ருத்திப்பது, நிவ்ருத்திப்பது, முதலியவைகளின் வ்யத்யாஸம் என்று சொல்லில் 'ஶாஶாநய (மாட்டைக் கொண்டு வா)' என்றிவை முதலிய உத்திரவினால் என்ன ப்ரயோஜனம். ஆனால் அந்த உத்திரவும் தன்னுடைய காரணத்தினால் உண்டாக்கப்பட்டதாய் ப்ரவ்ருத்திப்பது, நிவ்ருத்திப்பது. இவைகளின் காரணங்களினுடைய நடுவாலே சேர்ந்திருக்கிறது என்று நினைக்கிறாயோ? அப்படியாகில்

---

1 அத்ருஷ்டம் என்பது ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படுகிற கர்மங்களினால் உண்டாகிறது என்று முன் சொல்லி அத்ருஷ்டத்தினாலேயே எல்லாக் கர்மங்களும் செய்விக்கப்படுகிறபடியினால் ஶாஸ்த்ரம் எப்பொழுதும் வேண்டியதில்லை என்று சொல்லுவது ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.

கள், மரங்கள், முதலியவைகள் சலிப்பதற்குக் காரணமாகிய வ்யாபாரங்களில் அநேக மனிதர்களினால் செய்யக்கூடியதாயிருக்க அநேகம் பேரைக்காரணமாக இருக்கையும், அதில் ஒருவனுக்குச் செய் என்கிற

வேதத்தில் சொல்லப்படுகிற உத்தரவும் என்று தெரிந்துகொள். இப்படியாகில் லோகத்திலேற்பட்ட உத்தரவையும் விட்டுவிடுகிறோம் என்று சொல்லில் அஹோ! ஒருவர்க்கொருவர் வ்யவஹாரங்களும், வ்யுத்பத்தி முதலியவைகளும் ஸம்பவிக்காதாகையினால் சார்வாகனுக்கும் வேறு வழியில்லை. ஆகையினால் ஊமையாயிருந்துவிடவேண்டியது தான். இப்படிப் பொதுவாக எல்லாக் கர்மங்களும் அத்ருஷ்டங்களின் வ்யத்யாஸத்தைக் காரணங்களாக வுடையதாயிருந்தபோதிலும் ஶாஸ்த்ரத்திற்கும் இடமுண்டாக இருக்க அந்த ஶாஸ்த்ரமே பரமாத்மாவின் புத்தியே அத்ருஷ்டம் என்று உபதேசிக்கிறது. அப்படிப்பட்ட ஈஶ்வரனும் ப்ரமாணத்தினால் அறியப்படுகிறான். ஆகையினால் இந்த விஷயத்தில் ஒருவித ஆக்ஷேபங்களுக்கும் இடமில்லை. ஆனால் பக்ஷபாதம், தயையில்லாமை, முதலிய தோஷங்களும் பரமாத்மாவிற்கில்லை. அப்படியே நம்மாசார்யனாகிய வாதிஹம்ஸாம்புதாசார்ய (அப்புள்ளார்) ரால் 1 'கர்மணாம் வைஷம்யே ஸதி க்ருதி

ணாம் விஷம: கிம் நாம குர்யாத் க்ருதீ। கிம் வா தாரதயா

உபேத வரதோ வாஞ்சதி சேத் தாஸ்யதி॥' என்றருளிச் செய்

யப்பட்டது. ஆகையினால் சார்வாகனைத் தவிர மற்ற எல்லா ஸித்தாந்தத்திலிருப்பவர்களும் பொதுவாகிய ஸமாதானத்தின் ஸாராம்ஶம் இது— 2 'தத்ததிஷ்டாத்ருஷ்ட மூல ஶாஸ்த்ரவஶ்ய உபாதுவயா

1 கர்மணாம் - கர்மங்களுக்கு, வைஷம்யேஸதி - வ்யத்யாஸங்கள் உண்டாயிருக்க, க்ருதி-எல்லாவற்றையும் செய்கிற பகவான், கிம்நாமகுர்யாத்-என்ன செய்வான், வரத:—வரத்தைக்கொடுப்பவனாகிய பகவான், உதாரதயா-உதாரனாக இருப்பதினால் (இவர்கள்), தூர்கதிம் - கெட்டகதியை, வாஞ்சந்திசேத் ஆசைப்படுவார்களேயானால், கிம்வாததீத - வேறு எதைக்கொடுப்பான்.

2 தாத்பர்யசந்த்ரிகைக்காரருடைய காரிகை - தத்ததிஷ்டா-அந்தந்த ஸித்தாந்தத்திலிருப்பவர்களினால் ஒப்புக்கொள்ளப்பட்ட, அத்ருஷ்ட - அத்ருஷ்டத்தை, மூல - காரணமாகவுடைய, ஶாஸ்த்ரவஶ்யதயா —ஶாஸ்த்ரத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கும் தசையின், அந்வயாத்-ஸம்பந்தத்தினால், புன:—மறுபடியும், ததாததா-அந்தந்தவிதமாகவே, அத்ருஷ்ட ஸம்பத்தி:-அத்ருஷ்டத்தின் உத்பத்தி, உபபத்யதே-உசிதமாகிறது, புமான் - ஜீவாத்மா, புமர்த்தஸாதனத்வேந - புருஷார்த்தங்களுக்கு ஸாதனமாக, ப்ரதிதே-அறியப்படுகிறபடியினால், ஸ்வேச்சயா-தன்னுடைய இஷ்டத்தினால், ப்ரவர்த்தேத-ப்ரவ்ருத்தி செய்வான், இதி-என்று, தாதர்த்யாத்—இதற்காக ஏற்பட்டிருப்பதினால், சோதனா - விதி, அத்ர - இவ்விடத்தில், ஸாவகாசா - இடமுடையது.

விதிக்கும், செய்யாதே என்கிற மறுத்தலுக்கும் விஷயமாக இருக்கையும் ஸம்பவிக்கிறதோ அதைப்போல— என்பது. 14—15

𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌂 𑌸𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌤𑍁 𑌯𑌃 ।
𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨 𑌸 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑌿𑌃 ॥ 16

ப. ரை] ***𑌏𑌵𑌂 𑌸𑌤𑌿*** – இப்படி இருக்கும்போழுது, ***𑌯𑌃*** - எவன், ***𑌤𑌤𑍍𑌰*** - அந்தக் கர்மத்தில், ***𑌕𑍇𑌵𑌲𑌂*** - ஒருவனுகிய, ***𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂*** - ஜீவாத்மாவை, ***𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂*** - கர்த்தாவாக, ***𑌪𑌶𑍍𑌯𑌤𑌿*** – தெரிந்து கொள்ளுகிருனே, ***𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑌿𑌃*** - விபரீதமான புத்தியையுடைய, ***𑌸𑌃*** - அவன், ***𑌅𑌕𑍃𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍*** - உள்ளபடியான புத்தி உண்டாகாமையினுல், ***𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿*** - (கர்த்தாவை உள்ளபடி) அறிகிறதில்லை. 16

பா] ஜீவாத்மாவிற்குக் கர்த்ருத்வம் பரமாத்மாவின் அனுமதியினுல் உண்

𑌚 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌯𑌥𑌾 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌪𑍍𑌰𑌦𑍇 ॥ 𑌪𑍍𑌰𑌾𑌣𑌯𑍁 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌤𑍋𑌽𑌹 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌤𑌃 । 𑌸𑍃𑌷𑍍𑌟𑍇𑌷𑍁 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑍇 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌦𑌾𑌹𑌨𑌃 ॥’ என்பது.

இவ்விடத்தில் ஶரீரம், இந்த்ரியம், இவைகளைக் கொடுப்பது முதலிய பொதுவான உபகாரங்களை எதிர்பார்க்கிறபடியினுல் ஜீவாத்மாவின் கர்த்ருத்வம் பரமாத்மாவினுல் உண்டானது என்பது ‘ஶக்தியுடையவனுய்க் கொண்டு’ என்கிற வரையிலுள்ள வாக்யத்தினுல் சொல்லப்பட்டது. ‘கர்மங்கள் உண்டாவதற்காக’ என்றாரம்பிக்கும் வாக்யத்தினுலோ வெனில் விஶேஷமான ப்ரவ்ருத்தியில் ஜீவாத்மாவிற்கு ஸ்வாதந்த்ரியம் உண்டு என்று காட்டப்பட்டது. அதிலும் பரமாத்மாவின் உபகாரம் ‘அவனுக்குள்ளே இருக்கிற’ என்பது முதலியதினுல் சொல்லப்பட்டது. ‘அவனை’ என்பதற்கு ப்ரயத்தினம் செய்ய ஆரம்பித்துக்கொண்டிருப்பவனை என்றர்த்தம். 14–15

இப்படி ஐந்து வஸ்துக்கள் சேர்ந்து காரணமாக இருந்தபோதிலும் ஜீவாத்மாவே கர்த்தாவாக இருக்கும் பக்ஷத்தில் கர்த்தாவல்ல என்றனுஸந்தானம் செய்வது ப்ரமமாகவே இருக்கவேண்டியதல்லவா. விதிக்கிறதாயும், மறுக்கிறதாயுமிருக்கிற ஶாஸ்த்ரங்களுக்கு ப்ரயோஜனமுண்டாவதற்காகக் கர்த்ருத்வத்தை இல்லையென்று சொல்லமுடியாது. ஒத்தாசைக் கருவிகளை எதிர்பாராத கர்த்ருத்வம் மறுக்கப்படுகிறது என்று சொல்லுவதும் ஸரியல்ல, அப்படிப்பட்ட கர்த்ருத்வத்திற்கு ப்ரஸ்தாவமே இல்லாமையினுல் அதை மறுப்பது பொருந்தாதாகையினுல். ஒருவனும் தேஹம், இந்த்ரியங்கள், தடி, சக்கிரம், முதலியவைகளை எதிர்பாராமல் செய்கிறேன் என்று எண்ணுவதில்லையல்ல

ஸ்தோத்திரம் செய்வதில் இந்தவசனத்திற்கு தாத்பர்யமாகையினாலல்லவோ 1 'ஸர்வவர்ணேஷு தே ஶூத்ரா யே ஹ்யபக்தா ஜநார்த்தநே' என்று பகவத்பக்தி இல்லாதவனைக் குறித்து நிந்தித்திருப்பது பொருந்தும் ஆனால் இவ்விடத்தில் ஸ்தோத்திரம் செய்திருப்பதற்கும், நிந்தித்திருப்பதற்கும் ஆதாரம் என்ன? எனில் மனதில் உண்டாகிய ஸத்வம் முதலிய குணங்களின் வ்ருத்திதான். எப்படிப்பட்ட குணங்களிருப்பதினால் ப்ராம்மணன் முதலியவர்களுக்கே ப்ராம்மணனாகயிருக்கும் தன்மை உண்டென்று 2 'மௌனத்தையும், அமௌனத்தையும் அடைந்து பிறகு ப்ராம்மணனாகிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் சொல்லப்படுகிறதே, 3 'விஷ்ணும் க்ராந்தம் வாஸுதேவம் விஜாநந் விப்ரோ விப்ரத்வம் கச்சதே தத்வதர்ஶீ', 4 'சண்டாளமபி வ்ருத்தஸ்தம் தம் தேவா ப்ராஹ்மணம் விது:' என்றிவை முதலியதும் சொல்லப்படுகிறதே, ஶரீரத்தினுண்டாகிய ஸத்வம் முதலிய குணங்களின் வ்யத்யாஸத்தைக் காரணமாகவுடைய ப்ராம்மணன் முதலிய ஜாதி எதுவோ, அது மனதில் ஸத்வகுணம் வ்ருத்தியடைந்தபோதிலும் ஶரீரத்தைப்பற்றித் தொடர்ந்திருப்பதினால் இந்தச் ஶரீரம் விடுமளவும் ஜாதிகளின் நியமங்கள் ஸ்திரமாகவே இருக்கின்றன. அந்தஜ் ஜாதியை யனுஸரித்த கர்மங்களும் அதினாலேயே அப்படியே இருக்கின்றன. ஆகையினாலல்லவோ ப்ரம்மவித்யையை யறிந்தவராகிய விதுரர் தனக்கதைச் சொல்லுவதி லதிகாரமில்லையென்று 5 'ஶூத்ரயோநாவஹம் ஜாதோ நாதோ(அ)ந்ய

1 விஹகேந்த்ர ஸம்ஹிதை - 24 - 10. யே - எவர்கள், ஜநார்த்தநே - பகவானிடத்தில், அபக்தா: - பக்தி இல்லாதவர்களோ, தே - அவர்கள், ஸர்வ வர்ணேஷு - எந்த வர்ணங்களி லிருந்தபோதிலும், ஶூத்ரா: - ஶூத்திரர்கள்.

2 ப்ருஹதாரண்யகம் - 5 - 5 - 2.

3 பாரதம் - ஆனுஶாஸநிக பர்வம் - 16 - 2. க்ராந்தம் - லோகங்களை அளந்தவனாகிய, வாஸுதேவம் - வஸுதேவருக்குப் பிள்ளையாகிய, விஷ்ணும் - பகவானை, விஜாநந் - தெரிந்துகொண்டவனாகிய, தத்வதர்ஶீ - உண்மையை அறிந்தவனாகிய, விப்ர: - ப்ராம்மணன், விப்ரத்வம் - ப்ராம்மணனாயிருக்கையை, கச்சதே - அடைகிறான்.

4 வ்ருத்தஸ்தம் - தன் ஜாதிக்குரிய நடத்தையிலிருக்கிற, சண்டாளமபி - சண்டாளனையும், தேவா: - தேவதைகள், ப்ராம்மணம் - ப்ராம்மணனாக, விது: - தெரிந்துகொண்டார்கள்.

5 பாரதம் - உத்யோகபர்வம் - ஸநத்ஸுஜாதீயம், 41 - 5. அஹம் - நான், ஶூத்ரயோநௌ - ஶூத்திர ஸ்திரீயினிடத்தில், ஜாத: - பிறந்தவன், தத: - ஆகையினால், அந்யத் - மற்றொரு விஷயத்தை, வக்தும் - சொல்ல, நோத்ஸஹே - உத்ஸாஹமுள்ளவனாக இல்லை.

வத்ஸா ஊத்ஸவே' என்பதினால் சொல்லியிருக்கிறார். ஶமம் முதலிய குணங்கள் நிறைந்த சூத்திரன் முதலியவர்களிடங்களிலும் 1 ஸ்திரீகளின் ஸ்வபாவத்தையுடைய தாயாரிடத்திலேபோல அவமானம் முதலியவைகள் செய்யக்கூடாது என்பதை உத்தேசித்து மற்றஜாதியாரைப்போலப்பார்க்கக்கூடாதென்று மறுத்திருக்கிறது. அப்படியே ஸ்ம்ருதியில் 2 'ஏதை: ஸமேத: ஶூத்ரோऽபி வார்த்தகே மாநமர்ஹதி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினாலே 3 'பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேऽபி வர்த்ததே। தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்' என்றிவை முதலியதும் 4 ஜாதிதர்மங்களுக்கு விருத்தமில்லாதபடி அர்த்தம்சொல்லி நிரூபிக்கப்பட்டது. ஸமம் என்று சொல்லியிருப்பதும் எல்லாவற்றையும் விட மேல்பட்ட பலம் இவர்களுக்கு ஸமம் என்பதைப்பற்றியது. ஆகையினால் அபஶூத்ராதிகரண ந்யாயத்திற்கு விரோதமில்லை. நம்மாசாரியனாகிய 5 அப்புள்ளாரினாலும் பகவத்பக்தியுள்ளவானாகையினால்

1 ஸ்திரீ ஸ்வபாவமாவது மாதவிடாய் காலத்தில் ஒதுங்கி இருக்கிறது. அப்படிப்பட்ட தாயாரை மற்றக்காலங்களைப்போல் நமஸ்காரம் செய்யக்கூடாமலிருந்தபோதிலும் அலக்ஷியம் செய்யக்கூடாது, அதைப்போல என்று தாத்பர்யம்.

2 ஏதை: - இந்தக் குணங்களோடு ஸமேத: - கூடிக்கொண்டிருக்கிற, ஶூத்ரோபி-சூத்திரனும், வார்த்தகே - கிழவயதில், மாநம் - பூஜையை, அர்ஹதி- அடையத்தகுந்தவனாகிறான்.

3 காருடபுராணம் - பூர்வகண்டம்-219-8. ஏஷா-இந்த, அஷ்டவிதா - எட்டுவிதமான, பக்தி: பக்தி, யஸ்மிந்-எந்த, ம்லேச்சேபி - ம்லேச்சனிடத்திலும், வர்த்ததே - இருக்கிறதோ, தஸ்மை - அவன்பொருட்டு, தேயம் - கொடுக்கவேண்டும், தத:-அவனிடத்திலிருந்து, க்ராஹ்யம் - க்ரஹிக்கத்தகுந்தது, ஸச - அவனும், யதாஹ்யஹம் - என்னைப்போல, பூஜ்ய: - பூஜிக்கத்தகுந்தவன்.

4 திருமாலை - 42-வது பாட்டு - 'தொழுமினீர் கொடுமின்கொண்மின்' என்கிற இடத்தில் 'அவர்கள் உங்கள் பக்கல் ஒரு ஜ்ஞானாபேக்ஷை பண்ணில் நீங்கள் ஆதரித்துச் சொல்லுங்கோள். அவர்கள் பகவத் ஜ்ஞானத்தை உங்களுக்கு ப்ரஸாதிக்கில் கேட்டு க்ருதார்த்தராகுங்கோள்' என்று வ்யாக்யானம் செய்து இதற்கு ஸம்வாதமாக 'தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம்' என்கிறவசனம் எடுத்து உதாஹரிக்கப்பட்டது. ஆகையினால் இது ஜ்ஞானத்தைக் கொடுத்தல், கொள்ளுதல், இவைகளைச் சொல்லுகிறதென்றேற்பட்டது. ஆகையினால் ஜாதி தர்மங்களுக்கு விரோதமான பெண் கொடுப்பது முதலியது இங்கு தாத்பர்யமல்ல.

5 இவ்வர்த்தத்தைத் தாமே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில் 'கேவல ப்ராம்மணனுக்கும் கேவல சூத்திரனுக்குமுள்ள எல்லை பாகவத ப்ராம்மணனுக்கும் பாகவத சூத்திரனுக்கும் கொள்ளவேண்டுமென்றும் இவர்களை ஸமர் என்கிற ஶாஸ்த்ரங்களும் பரம புருஷார்த்த ஸாம்யாதிகளாலே என்றும் கிடாம்பி அப்புள்ளார் அருளிச் செய்தார்' என்று விசதமாக அருளிச் செய்திருக்கிறார்.

கோவேனில் செய்யவேண்டிய கர்மமும் ஜீவனோபாயமும் மூன்று வர்ணத்தாரினுடைய பணிவிடைதான். 44

ஸ்வே ஸ்வே கர்மண்யபிரதஸ்ஸம்ஸித்திம் லபதே நர: |
ஸ்வகர்மநிரதஸ்ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு || 45

ப - ரை] நர: - மனிதன், ஸ்வே ஸ்வே - தன் தன்னுடையதாகிய, கர்மணி - கர்மத்தில், அபிரத: - ஆசையுடையவனாய்க் கொண்டு, ஸம்ஸித்திம் - பரமபதத்தை, லபதே - அடைகிறான், ஸ்வகர்மநிரத: - தன்னுடைய கர்மத்தைச் செய்துகொண்டிருப்பவன், யதா - எப்படி, ஸித்திம் - பரமபதத்தை, விந்ததி - அடைகிறானோ, தத் - அதை, ச்ருணு - கேள்.

பா] ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டதாகிய தன் தன் கர்மத்தைச் செய்துகொண்டிருக்கிற மனிதன் பரமபதத்தை அடைகிறான். தன்னுடைய

சூத்திரனுக்கு மேன்மையுண்டாகில் அந்தப் பகவத்பக்தியினாலேயே ப்ராம்மணனுக்கும் மேன்மை உண்டாகலாமாகையினால் மறுபடியும் பாகவத சூத்திரனுக்கும் பாகவத ப்ராம்மணனுக்கும் வ்யத்யாஸமே ஏற்படுகிறது என்றருளிச் செய்யப்பட்டது. ஆகையினால் யுக்திக்கும் ப்ரமாணங்களுக்கும் ஒருவித விரோதமுமில்லையாகையினால் 'சூத்திரனுக்கு ஜீவனோபாயமும் கர்மமும்' ஒன்றென்று பாஷ்யத்தில் சொல்லியிருப்பது மிகவும் பொருத்தமுடையது. 44

தா] மோக்ஷத்தைப் பற்றி உபதேசம் செய்யும் ஶாஸ்த்ரத்தில் வர்ணாஶ்ரமதர்மங்களைப் பிரித்திருப்பது எதற்காக? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—இந்த ஶ்லோகத்தினால். 'ஸம்ஸித்தி' என்னும் பதம் இவ்விடத்தில் பரமபதத்தைச்சொல்லுகிறது என்பது இந்த ஸந்தர்ப்பத்தினால் ஏற்பட்டது. 1 'ஶாஶ்வதம் பதமவ்யயம்' என்றல்லவோ மேலேயும் சொல்லப்போகிறார். அன்றிக்கே 'ஸித்திம்' என்னும் பதம் 'நைஷ்கர்ம்யஸித்திம்' என்று மேலே சொல்லப்போகிற ஜ்ஞானநிஷ்டையைச் சொல்லுகிறதாகவுமாம். அதுவும் பரமபதத்தளவும் முடிவு பெறுகிறது என்று தெரிவிப்பதற்காக இவ்விடத்தில் மேலான ப்ரயோஜனமாகிய பரம பதத்தைச் சொல்லியிருக்கிறதாகவுமாம். தன் கர்மங்களைச் செய்து கொண்டிருந்த போதிலும் சூத்திரனுக்குப் பரமபதத்தை யடைவது எப்படி ஸம்பவிக்கும்? அவனுக்கு மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய ப்ரம்ம வித்யையில் அதிகாரமில்லையென்பது ஶாரீரக ஶாஸ்த்ரத்தில் அபஶூத்ராதிகரணத்தில் ஸ்தாபிக்கப்பட்டிரு

---

1 பகவத்கீதை -18 - 56

கர்மத்தைச் செய்துகொண்டிருக்கிறவன் எவ்விதமாகப் பரமபதத்தை யடைகிறானோ அந்த விதத்தைக் கேள். 45

யத꞉ ப்ரவ்ருத்திர் பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம் |
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ꞉ | 46

ப - ரை] பூதாநாம் – ப்ராணிகளுக்கு, யத꞉ - எவனிடத்திலிருந்து, ப்ரவ்ருத்தி꞉ - உத்பத்தி முதலிய வ்யாபாரம் (உண்டாகிறதோ), யேந - எவனால், இதம் - இந்த, ஸர்வம் - எல்லாம், ததம் - வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ, தம் - அவனை, ஸ்வகர்மணா - தன்னுடைய கர்மத்தினால், அப்யர்ச்ய - ஆராதனம் செய்து, மாநவ꞉ - மனிதன், ஸித்திம் - ஸித்தியை, விந்ததி - அடைகிறான். 46

க்கிறதே என்னில் அது உண்மையே யானாலும் வேறு ஜன்மங்களில் ப்ரம்ம வித்யையில் அதிகாரமுண்டாகி அதின் வழியாகப் பரம்பரையாய் பரமபதத்தை அடைவதுண்டாகிறது என்று சொல்லப்படுகிற படியினால் விரோதமில்லை. விதுரர் முதலியவர்களைப் போல முன் ஜன்மத்தில் நடந்ததை அறியும் சக்தியுடையவர்களாய் முன் ஜன்மத்தில் ஆரம்பிக்கப்பட்ட ப்ரம்ம வித்யையை அப்யாஸம் செய்துகொண்டிருப்பவர்களுக்குத் தந்தம் வர்ணங்களுக்குரிய தர்மங்கள், அதைச்செய்யாமையினால் உண்டாகும் தோஷத்தைப் பரிஹரிப்பதற்காக என்பதும், அவர்களுக்கு நேரிலேயே பரமபத ப்ராப்தி உண்டாகிற தென்பதும் ஸ்பஷ்டமாயறியத் தக்கது. அப்படியே பகவானுடைய வசனங்களினால் 1 'அந்யே ச தர்மவ்யாதாத்யா꞉ பூர்வாப்யாஸாஜ்ஜுகுப்ஸிதே | வர்ணாவரத்வே ஸம்ப்ராப்தா꞉ ஸம்ஸித்திம் ச்ரமணீ யதா ||' என்று சொல்லப்பட்டது. அல்பப் பலத்தைக்கொடுக்கும் சக்தியையுடைய இந்திரன் முதலிய தேவதைகளின் ஆராதனங்களாகிய வர்ணாச்ரம தர்மங்கள் பரமபதத்தை அடைவதற்குக் காரணங்கள் என்பது எப்படிப் பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'ஸ்வகர்மநிரத꞉' என்று சொல்லப்படுகிறது 'யதா (எப்படி)' என்பதற்குப் பதிலாக இருப்பதினால் 'தத்' என்னும் பதமும் அந்த விதத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'அந்த விதத்தைக் கேள்' என்று. 45

---

1 விஷ்ணு தர்மம் - 102 - 50. அந்யே - இன்னும் சில, தர்ம வ்யாதாதயோபி - தர்ம வ்யாதர் முதலியவர்களும், பூர்வாப்யாஸாத்-முன் ஜன்மத்தில் சொன்ன பழக்கத்தினால், ஜுகுப்ஸிதே - அருவருக்கப்பட்டிருக்கிற, வர்ணாவரத்வே - தாழ்ந்த ஜாதியில் பிறந்திருக்கும் பொழுதே, ஸம்ஸித்திம் - மோக்ஷத்தை, ச்ரமணீ யதா-சபரியைப் போல, ஸம்ப்ராப்தா - அடைந்தார்கள்.

பா] ப்ராணிகளுக்கு உத்பத்தி முதலிய வ்யாபாரம் எவனிடத்தி லிருந்து உண்டாகிறதோ, எவனால் இவை எல்லாம் வ்யாபரிக்கப்பட்டிருக்கிறதோ, அப்படிப்பட்டவனாகிய இந்திரன் முதலிய தேவதைகளுக்கு அந்தர்யாமியாக இருக்கிற என்னைத் தன்னுடைய கர்மத்தினால் ஆராதனம் செய்து என்னுடைய அனுக்ரஹத்தினாலேயே என்னை அடைவதாகிய ஸித்தியை மனிதன் அடைகிறான் எல்லாம் என்னிடத்தி லிருந்தே உண்டாகிறது இவை யெல்லாம் என்னாலேயே வ்யாபரிக்கப்பட்டிருக்கிறது என்பது * 'அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா। மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய॥' † 'மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்த்திநா।' ‡ 'மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசர

தா] எல்லாவற்றிற்கும் காரணமாயும், எல்லாவற்றிற்கு மந்தர்யாமியுமாகிய பரமாத்மா தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகளும் தனக்குச் சரீரங்களுமாகிய இந்திரன் முதலியவர்களைச் சொல்லுகிற பதங்களினால் வேதத்தில் சொல்லப்படுகிறானாகையினால் வர்ணாச்ரம தர்மங்கள் அந்தப் பகவானுடைய ஆராதனமாகையினால் பரம பதத்திற்கு ஸாதனங்கள் என்பது உசிதந்தான் என்று இந்த ச்லோகத்தினால் சொல்லப்படுகிறது. 'ப்ரவ்ருத்தி:' என்னும் பதம் இவ்விடத்தில் சலிப்பதை மாத்திரம் சொல்லுகிறது என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'உத்பத்தி முதலிய' என்று. சேதனாசேதனங்களைச் சொல்லுகிற 'பூத' என்னும் பதத்தோடு சேர்ந்திருக்கிற 'ப்ரவ்ருத்தி:' என்னும் பதம், இவ்விடத்தில் விசேஷித்து அர்த்தம் சொல்லக்காரணமில்லாமையினால் எல்லாவித வ்யாபாரங்களையும் சேர்த்துச் சொல்லுகிறது என்று தாத்பர்யம். எல்லாவிதக் காரணங்களாயு மிருப்பதற் குபயோகமான ஆகாரம்சொல்லப்படுகிறது-'யேந ஸர்வமிதம் ததம்' என்று.'ததம் (வ்யாபரிக்கப்பட்டிருக்கிறது)' என்பதற்கு நியந்தாவாக இருந்துகொண்டு என்று தாத்பர்யம். 'தம்' (அவனை)' என்று வேறொருவனைச் சொல்லுவது போலச் சொல்லி யிருக்கிற பதம் 'என்னை' என்று எப்படி வ்யாக்யானம் செய்யப்படுகிறது? என்றாக்ஷேபம் வரில் அதற்கு ஸமாதானமாக 'யத: (எவனிடத்தி லிருந்து)' என்றநுவாதம் செய்திருப்பது முன்னால் சொல்லி யிருப்பதை எதிர் பார்க்கிறபடியினால் அப்படி முன்னால் சொல்லியிருக்கிறதை ஜ்ஞாபகப்படுத்துகிறார்—'எல்லாம் என்னிடத்திலிருந்தே' என்றாரம்பித்து: எல்லாவற்றிற்கும் காரணமென்பதிலும் எல்லாவற்றையும் விட மேலானவன் என்பதிலும், எல்லா

---

* பகவவத்கீதை - 7 - 6 † பகவத்கீதை 9 - 4 ‡ பகவத்கீதை 9-10.

ஸம்' ¶ 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே' என்றிவை முதலிய இடங்களில் முன்பே சொல்லப்பட்டது. 46

ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் । *

ப-ரை] ஸ்வதர்ம: - தன்னால் அனுஷ்டிக்கக்கூடிய வர்ணாஶ்ரமதர்மம், விகுண: - அங்கங்களினால் குறைவு பட்டிருந்தபோதிலும், ஸ்வநுஷ்டிதாத் - நன்றாயனுஷ்டிக்கப்பட்ட, பரதர்மாத் - இந்த்ரியங்களை ஜயித்தவனால் அனுஷ்டிக்கக்கூடிய ஜ்ஞானயோகமாகிற தர்மத்தைவிட, ஶ்ரேயாந் - சிறந்தது. *

பா] இவ்விதமாகக் கர்த்ருத்வம் முதலியவைகளைவிட்டு எனக்காராதனமாகச் செய்கிற கர்மம் ஸ்வதர்மம். தன்னாலேயே செய்யத்தகுந்ததாகையினால் 'ஸ்வதர்மம்' என்னப்படுகிறது ப்ரக்ருதியோடு சேர்ந்திருக்கிற புருஷ

வற்றையும் வ்யாபித்திருக்கிறான் என்பதிலும், எல்லாவற்றையும் நியமிக்கிறான் என்பதிலும் உதாஹரித்திருக்கும் வசனங்களுக்கு ஸம்பவிப்பதைப்போலத் தாத்பர்யம் கண்டுகொள்ளவும். 46

தா] இப்படி வர்ணாஶ்ரம தர்மங்கள் ஸ்வரூபத்தினால் விடத்தக்கவைகளல்ல என்பதும் பரமாத்மாவை அடைவதற்கு ஸாதனமாகும் விதமும் சொல்லப்பட்டது. பிறகு 1 'தைவமேவாபரே யஜ்ஞம்' என்றிவை முதலிய இடங்களில் சொல்லப்பட்ட முக்கியமான தர்மத்தோடு சேர்ந்திருப்பதினாலும் சில நியமம் முதலியவைகளோடு சேர்ந்திருப்பதினாலும் கர்மயோகத்திற்குள்ளடங்கியதாகிய அந்த வர்ணாஶ்ரம தர்மங்கள் ஜ்ஞானயோகத்தில் அதிகாரமுள்ளவனாலும் விடத்தக்கவைகளல்ல என்று முன் சொன்னது ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது—இந்த ஶ்லோகம் முதலாக. இவ்விடத்தில் 'ஸ்வதர்ம' என்னும் பதம் தன்னுடைய வர்ணாஶ்ரமங்களுக்கேற்பட்ட தர்மங்களைச் சொல்லுகிறதல்ல. அப்படியாகில் 'பரதர்ம' என்னும் பதத்தினால் வேறு வர்ணம், முதலியவைகளின் தர்மத்தைச் சொல்லவேண்டிவரும். அது உசிதமல்ல, அது ஶாஸ்த்ரங்களினால் மறுக்கப்பட்டிருப்பதினாலே அதர்மமாகையினாலே தன்னுடைய தர்மம் அதைவிட மிகவும் சிறந்தது என்று சொல்லியிருப்பது பொருந்தாதாகையினால். ஏனெனில் பாபத்தைவிடப் புண்ணியம் சிறந்ததென்று சொல்லப்படுகிறதில்லையல்லவா. ஆகையினாலேயே வேதத்திற்குப் புறம்பான தர்மங்களைவிட வேதத்தில் சொல்லப்படுகிற தர்மம் சிறந்தது என்று சொல்லப்படுகிறது என்

¶ பகவத்கீதை - 10 - 8. 1 பகவத்கீதை - 4 25.

னால் இந்த்ரியங்களின் வ்யாபாரங்களாகிய கர்மயோகமென்கிற தர்மம் ஸுலபமாய்ச் செய்யக்கூடியதாயாகிறதல்லவா, ஆகையினால் கர்மயோகமென்று பேருடைய தன்னுடைய தர்மம் அங்கங்களினால் குறைவுபட்டிருந்த போதிலும் இந்த்ரியங்களை ஜயிக்கஸாமர்த்தியமுடைய புருஷனால் அனுஷ்ட்டிக்கக்கூடியதாயும் எல்லா இந்த்ரியங்களையும் அடக்குவதாகையினாலே தவறுதல் நேரிடக்கூடியதாயும், எப்போழுதாவது ஒரு ஸமயத்தில் பூர்ணமாயனுஷ்ட்டிக்கப்பட்டதாயுமிருக்கிற ஜ்ஞானயோகத்தைவிட மேலானது.

பது உசிதமல்ல. க்ஷத்திரியனாகிய அர்ஜுநனைக்குறித்து 1 'ஶ்ரேயோ போக்தும் பைக்ஷ்யம்' என்றவனாலேயே சொல்லப்பட்ட ப்ராம்மணர்களின் தர்மமாகிய ஸந்நியாஸத்தை மறுத்திருக்கிறது இது என்பதும் உசிதமல்ல. அது இவனுக்கு ஶாஸ்த்ரத்தினால் விதிக்கப்பட்டிருந்தால் அதை மறுப்பது பொருந்தாது. ஶாஸ்த்ரத்தினால் விதிக்கப்படாமலிருந்தால் அது பாபமாகையினாலேயே முன்பு சொல்லியதினால் ஸமாதானமேற்பட்டு விட்டபடியினாலும். ஆபத்காலங்களில் அடுத்த தாழ்ந்ததாகிய ஜீவனோபாயம் இவனால் விடக்கூடியதல்ல ஆகையினால் இவ்விடத்தில் 'ஸ்வதர்ம', 'பரதர்ம' என்னும் பதங்கள் முன்போலவே கர்மயோகம், ஜ்ஞானயோகம், இவைகளைச் சொல்லுகின்றனவாக வ்யாக்யானம் செய்யப்பட்டதுகள். 'ஸ்வ' என்னும் பதம் ஜாதியைச் சொல்லுகிறது என்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'தன்னாலேயே' என்றாரம்பித்து. 'ஸ்வபாவநியதம் கர்ம' என்று மேலே சொல்லியிருப்பதை யனுஸரித்துக் கர்மங்களைச் சொல்லுகிற 'தர்ம' என்னும் பதம் இந்த ஸந்தர்ப்பத்தை யனுஸரித்தும் பலங்களில் ஆசையில்லாமல் செய்கிற கர்மங்களைச் சொல்லுகிறது. அவ்விடத்தில் தன்னாலேயே செய்யத்தகுந்ததாகையினால் என்பதை விவரிக்கிறார்—'ப்ரக்ருதியோடு சேர்ந்திருக்கிற' என்றாரம்பித்து. 'விகுண:' என்னும் பதம் விடத்தக்கது என்கிற ஆக்ஷேபத்தைக் காட்டுகிறது என்று சொல்லுகிறார்—'அங்கங்களினால்' என்றாரம்பித்து. வேறு சக்தியில்லாமையினாலே முக்கிய கல்பமாகச் செய்யமுடியவில்லை என்றொப்புக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் என்றர்த்தம். 'ஸ்வ' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற கர்மயோகம் செய்யத்தகுந்தவனைவிட மற்றொருவன் இவ்விடத்தில் பரன் என்னப்படுகிறான். அவனாவது ஜ்ஞானயோகத்தைச் செய்யத்தகுந்தவன் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இந்த்ரியங்களை ஜயிக்க ஸாமர்த்தியமுள்ள புருஷனால்' என்று. தவறுதல் நேரிடக்கூடிய தர்மம் நன்றாயனுஷ்ட்டிக்கப்பட்ட தென்பது எப்படி ஸம்பவிக்கும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'எப்போழுதாவது ஒரு ஸமயத்தில்' என்று. *

---

1 பகவத்கீதை - 2 - 5

பா-அ] இதையே நிரூபிக்கிறார்—

ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம் ‖ 47

ப - ரை] ஸ்வபாவநியதம் - ஸ்வபாவத்தினலேயே ஏற்பட்டதாகிய, கர்ம - கர்மத்தை, குர்வந் - செய்துகொண்டிருப்பவன், கில்பிஷம் - ஸம்ஸாரத்தை, நாப்நோதி - அடைவதில்லை. 47

பா] ப்ரக்ருதியோடு சேர்ந்திருப்பவனுக்கு இந்த்ரியங்களின் வ்யாபாரங்களாகையினலே கர்மங்கள் ஸ்வபாவத்தினலேயே ஏற்பட்டவைகளாகையினல் கர்மங்களைச்செய்து கொண்டிருப்பவன் ஸம்ஸாரத்தை அடைவதில்லை, கர்மங்கள் தவறுதல்கள் நேரிடக்கூடியவைகளல்லவாகையினல். ஜ்ஞானயோகம் எல்லா இந்த்ரியங்களையும் அடக்குவதினல் உண்டாகக்கூடியதாகையினலே தவறுதல் நேரிடக்கூடியதாகையினல் அதில்நிஷ்டையுடையவன் தவறுதலினல் ஸம்ஸாரத்தை அடைந்தாலுமடைவான். ஆகையினல் கர்மநிஷ்டையே மேலானது என்று மூன்றுவது அத்யாயத்தில் சொல்லப்பட்டதை ஜ்ஞாபகப்படுத்துகிறார். 47

தா] 'ஸ்வபாவநியதம்' என்கிற இடத்தில் ஜாதிக்கேற்பட்டது என்றர்த்தம் என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'இதையே' என்றாரம்பித்து எப்படி எட்டிமரம், வேப்பமரம், புளி, இவைகளில் உண்டாகிய புழுக்களுக்கு ஆஹாரங்கள் அதின் ஸ்வபாவத்தினல் ஏற்பட்டிருக்கிறதோ அதைப்போல என்று தாத்பர்யம். 'கில்பிஷ' என்னும் பதம் அதிக அநிஷ்டத்தைச் சொல்லுகிறது என்று தெரிவிப்பதற்காகப் பாபத்தின் பலத்தைச் சொல்லுகிற 'ஸம்ஸார' என்னும் பதத்தினல் வ்யாக்யானம் செய்யப்பட்டது. ஜ்ஞானயோக நிஷ்டையில் ஸம்பவிக்கக் கூடியது ஸம்ஸாரம், அது இதற்கில்லை என்று தெரிவிப்பதற்காகவாவது, கர்மயோகத்தைச் செய்தவன் ஸம்ஸாரத்தை யடைவதில்லை யென்று மறுத்ததினல் மற்றவனடைகிறான் என்றேற்படுகிறது என்கிற அபிப்ராயத்தினலாவது சொல்லுகிறார்—'ஜ்ஞானயோகம்' என்றாரம்பித்து, வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறது என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காகவும், இதில் அதிக ப்ரீதி உண்டென்று தெரிவிப்பதற்காகவும் புனருக்தியைப் பரிஹரிப்பதற்காகவும் 'மூன்றுவது அத்யாயத்தில்' என்பது முதலியது சொல்லப்பட்டது. 47

ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷமபி ந த்யஜேத் ।
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்நிரிவாவ்ருதா: ॥ 48

ப - ரை] கௌந்தேய — அர்ஜுந, ஸஹஜம் - ஸ்வபாவத்திலேற்பட்டதாகிய, கர்ம - கர்மத்தை, ஸதோஷமபி - தோஷத்தோடு கூடியிருந்தபோதிலும் ந த்யஜேத் - விடக்கூடாது, ஹி-எந்தக் காரணத்தினால், ஸர்வாரம்பா: — எல்லாக் கர்மங்களின் ஆரம்பங்களும், தூமேந - புகையினால், அக்நிரிவ - நெருப்பைப் போல, தோஷேண — தோஷத்தினால், ஆவ்ருதா: — வ்யாபரிக்கப்பட்டிருக்கின்றனவோ. 48

பா] ஆகையினால் ஸ்வபாவத்தினாலேயே ஏற்பட்டதாகையினால் ஸுலபமாய்ச் செய்யக்கூடியதாயும் தவறுதல் நேரிடக்கூடாததாயுமிருக்கிற கர்மத்தை அது துக்கத்தோடு கூடியிருந்தபோதிலும் விடக்கூடாது. ஜ்ஞானயோகத்தைச் செய்யத் தகுந்தவனாயிருந்தபோதிலும் கர்மயோகத்தையே செய்

தா] 'ஸ்வபாவத்தினாலேயே ஏற்பட்டதாகையினால்' என்பதற்கு அவரவர்களின் வாஸனையினால் ஏற்பட்டிருக்கிறபடியினால் என்றர்த்தம். இப்படியாகில் விடக்கூடாதென்பது எப்படிப் பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஸுலபமாய்ச் செய்யக்கூடியதாயும்' என்று. 'தோஷம்' என்னும் பதத்தினால் பாபத்தைச் சொல்லுகிறது யுக்தமல்ல, ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கார்யத்தில் பாபமுண்டாகாததாகையினால். அப்படிப் பாபமுண்டாகில் 'ந த்யஜேத்' என்பது உசிதமல்ல, பாபம் எல்லோராலும் விடத்தக்கதாகையினால். ஆகையினால் இவ்விடத்தில் ஶரீரத்திற்கு ஶ்ரமம் முதலியவைகளுடன் சேர்ந்திருக்கிறதென்பது 'ஸதோஷம்' என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு மாத்திரத்தினாலும் சோம்பேறிகளுக்கு விடவேண்டும் என்கிற புத்தி உண்டாய்விடும் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'துக்கத்தோடுகூடியிருந்தபோதிலும்' என்று. இத்தால் கபிலருடைய மதத்தை ஆரோபித்துக்கொண்டு 'ஸதோஷம்' என்றனுவாதம் செய்திருக்கிறது என்று மற்றவர்கள் வ்யாக்யானம் செய்திருப்பது நிராகரிக்கப்பட்டது. மோக்ஷத்தில் ஆசையுடையவனுக்கு ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டதாயும் சிறந்ததென்று கீழே சொல்லப்பட்டதாயுமிருக்கிற கர்மயோகத்தில் அல்பமான கஷ்டத்தைப் பொறுக்காமையினால் விடவேண்டுமென்கிற புத்தி எப்படி உண்டாகும்? ஆகையினால்விடுவதற்குப்ரஸ்தாவமே இல்லாமையினால் விடக்கூடாதென்று மறுத்திருப்பது உசிதமல்ல, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்— 'ஜ்ஞானயோகத்தைச் செய்யத்தகுந்தவனாயிருந்தபோதிலும்' என்று.

என்றர்த்தம். கர்மயோகத்தின் ஆரம்பங்களும் ஜ்ஞானயோகத்தின் ஆரம்பங்களும் புகையினால் அக்னிபோலத் துக்கத்தினால் சூழப்பட்டிருக்கின்றன. இவ்வளவுதான் வ்யத்யாஸம். கர்மயோகம் ஸுலபமாய்ச் செய்யக்கூடியது, தவறுதல் நேரிடக்கூடாதது. ஜ்ஞானயோகம் இதற்கு விரோதமான ஸ்வபாவமுடையது என்பது. 48

𑌅𑌸𑌕𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 ।
𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌨𑍇𑌨𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ 49

ப - ரை] 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 - எல்லா விஷயங்களிலும், 𑌅𑌸𑌕𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 - பற்றுதலையடையாத புத்தியையுடையவனாய்க் கொண்டே, 𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾-ஜயிக்

'போதிலும்' என்னும்பதம் மற்றவர்களைப்பற்றிக் கேழ்க்கவே வேண்டியதில்லை என்று தெரிவிப்பதற்காக. கஷ்டமில்லாத உபாயத்தைப்பார்த்தால் தன்னுடைய அதிகாரத்தை யோசிக்காமல் அதில் ப்ரவ்ருத்தியுண்டாகுமாகையினால் அதிலிருந்தும் தடுக்கப்படுகிறான் என்றர்த்தம். துக்கத்தோடுகூடியது, துக்கமில்லாதது என்கிற வ்யத்யாஸத்தை ஒப்புக்கொண்டு தவறுதல்நேரிடக்கூடாததுமுதலிய காரணங்களினால் கர்மயோகமே செய்யவேண்டுமென்று நியமம் சொல்லப்பட்டது. பிறகு துக்கத்தோடு கூடினதென்பது இரண்டிற்கும் ஸமானம் என்று சொல்லப்படுகிறது—'𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌾 𑌹𑌿' என்றாரம்பித்து. 'கர்மயோகத்தின் ஆரம்பங்களும் ஜ்ஞானயோகத்தின் ஆரம்பங்களும்' என்பதினால் '𑌸𑌰𑍍𑌵' என்னும் பதத்தினால் இவ்விடத்தில் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட எல்லாக் கர்மங்களும் சொல்லப்படுகின்றன என்று சொல்லுகிறார். துக்கம் ஸமமாக இருந்தால் ஒன்றைமாத்திரம் செய்யவேண்டுமென்று நியமிப்பதில் என்ன ப்ரயோஜனம்? அந்தத்துக்கம் கர்மயோகத்தை விடுவதற்கு ஏன் காரணமாகாது? என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இவ்வளவுதான் வ்யத்யாஸம்' என்றாரம்பித்து. கர்மங்களை ஆரம்பிப்பதில் ஶரீரத்திற்கு ஶ்ரமம் மாத்திரம். ஜ்ஞானயோகத்தை ஆரம்பிப்பதிலோவெனில் அதிக ஸமீபத்திலிருந்தபோதிலும் 1 'முழங்கை முண்டு' நடுவில் ஒட்டிக்கொண்டிருக்கிற வஸ்துவைப்போலிருக்கிற ஜீவாத்மாவைத் தேடுவதினால் இந்த்ரியம், மனது, இவைகளை அடக்குவதினால் உண்டாகிய ஶ்ரமம் அதிகத்துக்கம் என்று தாத்பர்யம். 48

1 *தாத்பர்ய சந்த்ரிகையின் மற்றொரு பாடாந்தரப்படி 'முழங்கை முண்டில் ஒட்டிக்கொண்டிருக்கிற வெல்லம் போல் இருக்கிற ஜீவாத்மாவை' என்றர்த்தமாகவுமாம்.*

கப்பட்ட மனதையுடையவனுய்க் கொண்டும், விகதஸ்ப்ருஹ:-ஆசை யில்லாதவனுய்க் கொண்டும் (இருக்கிறவன்), ஸந்ந்யாஸேந - கீழ்ச் சொல்லிய கர்ம ஸந்நியாஸத்திஞல், பரமாம் - உயர்ந்ததாகிய, நைஷ்கர்ம்யஸித்திம் - த்யானயோகத்தின் ஸித்தியை, அதிகச்சதி - அடைகிறுன். 49

பா] பலம் முதலியவைகளிடத்தில் பற்றுதலில்லாத புத்தியையுடையவனுயும், ஜயிக்கப்பட்ட மனதையுடையவனுயும், பரமாத்மாவையே கர்த்தா என்றனுஸந்தானம் செய்வதிஞல் தான் கர்த்தா என்பதில் ஆசையில்லாதவனுயும், கீழ்ச் சொல்லியபடி த்யாகத்தைவிட வேறுபட்டதல்ல என்று நிஶ்சயம் செய்யப்பட்ட ஸந்நியாஸத்துடன் கர்மங்களைச் செய்து கொண்டிருப்பவன் உயர்ந்ததாயும், ஜ்ஞான யோகத்திற்கும் ப்ரயோஜனமாயுமிருக்கிற த்யான நிஷ்டையை யடைகிறுன். அதாவது எல்லா

தா] 'அஸக்தபுத்தி:' என்று சொல்லி இருந்தபோதிலும் மறுபடியும் 'விகதஸ்ப்ருஹ:' என்று சொல்லியிருப்பது பலம், ஸங்கம், இவைகள் நிவ்ருத்திப்பதாகிய த்யாகத்தோடு சேர்த்துச் சொல்லப்பட்ட கர்த்ருத்வ த்யாகத்தைச் சொல்லுகிறதென்பது உசிதமாகையினுல் கனவிலும் தன்னிடத்தில் கர்த்ருத்வம் உண்டாகிறதென்றனுஸந்தானத்தின் ப்ரஸ்தாவமே இல்லாமலிருப்பதாகிய த்யாகத்தின் உயர்ந்த தசையைச் சொல்லுவதற்காக என்று சொல்லுகிறுர்—'தான் கர்த்தா என்பதில் ஆசை இல்லாதவனுயும்' என்று. 'ஸந்ந்யாஸேந' என்பது ஜ்ஞானயோகம் முதலியதைச் சொல்லுகிறதல்ல, கீழ்க்கர்மங்களைவிடக் கூடாதென்று சொல்லியிருப்பது பொருந்தாதாகையினுலும், இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட ஸந்நியாஸத்தைச் சொல்லுகிறதென்பது உசிதமாகையினுலும் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'கீழ்ச் சொல்லியபடி' என்றுரம்பித்து. இவ்விடத்தில் 'நைஷ்கர்ம்யஸித்திம்' என்னும் பதம் மோக்ஷத்தைச் சொல்லுகிறதல்ல, 'ஸித்திம்ப்ராப்த:' என்றுரம்பித்து மறுபடியும் அவனுக்குச் செய்யவேண்டிய கார்யத்தை விதித்திருக்கிறபடியினுல். ஜ்ஞானயோகம் மாத்திரத்தைச் சொல்லுகிறதுமல்ல, 'பரமாம்' என்று இங்கு விஶேஷணமிருக்கிறபடியினுலும், 'நைஷ்கர்ம்ய' என்னும் பதத்தினுல் மாத்திரம் அதைச் சொல்லலாமாகையினுலும். ஆகையினுல் இவ்விடத்தில் ஜ்ஞான நிஷ்டையின் பலத்தினுடைய ஆரம்பம் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'த்யான நிஷ்டையை' என்று. 'நைஷ்கர்ம்யஸித்திம்' என்கிற இடத்தில் நைஷ்கர்

இந்த்ரியங்களின் வ்யாபாரங்கள் ஓய்ந்துவிடுவதாகிய மேலே சொல்லப் போகிற த்யான யோகத்தை அடைகிறான். 49

സിദ്ധിം പ്രാപ്തോ യഥാ ബ്രഹ്മ തഥാപ്നോതി നിബോധ മേ |
സമാസേനൈവ കൌന്തേയ നിഷ്ഠാ ജ്ഞാനസ്യ യാ പരാ || 50

ப - ரை] കൌന്തേയ - அர்ஜுந, സിദ്ധിം - த்யான யோகத்தின் ஸித்தியை, പ്രാപ്തഃ - அடைந்தவன், യഥാ - எவ்விதத்தினால், ബ്രഹ്മ - ப்ரம்மத்தை, ആപ്നോതി - அடைகிறானே, തഥാ - அந்தவிதத்தை, മേ - என்னிடத்திலிருந்து, സമാസേന - சுருக்கமாக, നിബോധ - தெரிந்துகொள், യാ - எந்த ப்ரம்மமானது, ജ്ഞാനസ്യ - த்யானத்திற்கு, പരാ - உயர்ந்ததாகிய, നിഷ്ഠാ - அடைய வேண்டிய ப்ரயோஜனமோ. 50

பா] ப்ரயாணம் புறப்படுகிற வரையில் தினந்தோறும் அனுஷ்டிக்கப்படுகிற கர்ம யோகத்தினால் உண்டாக்கப்பட்ட த்யானமாகிற ஸித்தியை அடைந்தவன் எவ்விதமாக இருந்துகொண்டு ப்ரம்மத்தை அடைகிறானோ,

---

ம்யத்தின் ஸித்தியாகிய என்கிற ஸமாஸத்தினாலாவது 'പരമാം' என்கிற விசேஷணத்தினாலாவது ஏற்பட்டதை விவரிக்கிறார்—'ஜ்ஞான யோகத்திற்கும் ப்ரயோஜனமாயுமிருக்கிற' என்று. மேல் சொல்லப் போகிற க்ரந்தத்தை அனுஸரித்தும் இந்த அர்த்தத்தைச் சொல்லுகிறது உசிதம் என்று சொல்லுகிறார்—'மேலே சொல்லப்போகிற' என்று. 'நிர்க்கதகர்மா நிஷ்கர்மா (கர்மங்களொன்றுமில்லாதவன் அவனுடைய ஸ்வபாவம் நைஷ்கர்ம்யம்)' என்கிற வ்யுத்பத்தியை விவரிக்கிறார்—'எல்லா இந்த்ரியங்களினுடையவும்' என்றாரம்பித்து. 49

സിദ്ധിം പ്രാപ്തഃ' என்பது கீழ்ச்சொல்லியதை அனுவாதம் செய்கிறது என்பதை அதின் விசேஷணங்களோடு கூடின காரணத்தை விவரித்துக்கொண்டு சொல்லுகிறார்—'ப்ரயாணம் புறப்படுகிறவரையில்' என்றாரம்பித்து. ஸித்தியை யடைந்தவன் ப்ரம்மத்தை யடைகிறான் என்று சொல்லியிருப்பதினால் மற்றவர்களைச் சொல்லுகிறது இது என்று தெரிவிப்பதற்காக 'த்யானமாகிற ஸித்தியை யடைந்தவன்' என்று சொல்லப்பட்டது. 'യഥാ' என்பது மேல்க்ரந்தத்தை அனுஸரித்துப் புருஷனுடைய வ்யாபாரத்தினால் செய்யத்தகுந்த உபாயத்தின் விதத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—' எவ்விதமாக இருந்துகொண்டு' என்று. 'മേ നിബോധ' என்பதற்கு என்னிடத்திலிருந்து நிஶ்சயமாய்த் தெரிந்துகொள் என்றர்த்தம். உயர்ந்த பலத்தி

அந்த விதத்தைச் சுருக்கமாக என்னிடத்திலிருந்து தெரிந்துகொள். அந்த ப்ரம்மமே 'நிஷ்டா ஜ்ஞாநஸ்ய யா பரா' என்று விசேஷித்துச் சொல்லப்படுகிறது. த்யானமாகிய ஜ்ஞானத்திற்கு எந்த ப்ரம்மம் மேலான அடைய வேண்டிய ப்ரயோஜனமோ என்றர்த்தம். 50

புத்த்யா விஶுத்தயா யுக்தோ த்ருத்யாத்மாநம் நியம்ய ச |
ஶப்தாதீந் விஷயாம்ஸ்த்யக்த்வா ராகத்வேஷௌ வ்யுதஸ்ய ச || 51

விவிக்தஸேவீ லக்வாஶீ யதவாக்காயமாநஸ: |
த்யாநயோகபரோ நித்யம் வைராக்யம் ஸமுபாஶ்ரித: || 52

அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம் |
விமுச்ய நிர்மம: ஶாந்தோ ப்ரஹ்மபூயாய கல்பதே || 53

ப-ரை] விஶுத்தயா - பரிசுத்தமாகிய, புத்த்யா - புத்தியுடன், யுக்த: - சேர்ந்தவனாய். த்ருத்யா - தைர்யத்தினால், ஆத்மாநம் - மனதை, நியம்ய - அடக்கிக்கொண்டும், ஶப்தாதீந் - ஶப்தம் முதலிய, விஷயாந் - விஷயங்களை, த்யக்த்வா - விட்டு விட்டு, ராகத்வேஷௌ - ஆசையையும் த்வேஷத்தையும், வ்யுதஸ்ய - தள்ளி, விவிக்தஸேவீ - ஜனமில்லாத இடத்தை அடைந்தவனாயும், லக்வாஶீ - மிதமான ஆஹாரத்தை ஸாப்பிட்டுக் கொண்டும், யதவாக்காயமாநஸ: - அடக்கப்பட்டவாக்கு, ஶரீரம், மனது, இவைகளை யுடையவனாய்க் கொண்டும், நித்யம் - எப்பொழுதும், த்யாநயோகபர: - த்யான யோகம் செய்து கொண்டும், வைராக்யம் - மற்ற விஷயங்களில் ஆசையில்லாமையை, ஸமுபாஶ்ரித: - அடைந்தவனாய்க் கொண்டும், அஹங்காரம் - அஹங்காரத்தையும், பலம் - தன் வாஸனையின் பலத்தையும், தர்பம் - கொழுப்பையும், காமம் - காமத்தையும், க்ரோதம் - கோபத்தையும், பரிக்ரஹம் - மற்றெல்லா வஸ்துக்களையும், விமுச்ய - விட்டு விட்டு, நிர்மம: - மமகார மில்லாதவனாயும்,

---

லல்லவோ உபாயம் முடிவு பெறுகிறது. ஆகையினால் அதுவே உபாயம் முடியுமிடமாகையினால் 'நிஷ்டா' என்று சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அந்த ப்ரம்மமே' என்று. 'ஜ்ஞாந' என்னும் பதம் இவ்விடத்தில் மேலே சொல்லப்போகிற த்யானத்தில் முடிவு பெறுகிறது என்று சொல்லுகிறார்—'த்யானமாகிற' என்றாரம்பித்து. 50

ஶாந்த: - சாந்தியை யுடைவனாயு மிருக்கிற (த்யான யோக நிஷ்டன்), ப்₃ரஹ்ம பூ₄யாய - பரிசுத்தமான ஆத்மாவை அடைவதற்கு, கல்பதே - யோக்கியனாகிறான். 51—53

பா] உள்ளபடியே இருக்கிற ஜீவாத்மாவின் உண்மையைப் பற்றிய புத்தியோடு கூடினவனாயும், மனதை விஷயங்களி லிருந்து திருப்புவதினால் யோகம் செய்யத் தகுந்ததாகச் செய்து கொண்டும், ஶப்தம் முதலிய விஷயங்களை ஸமீபத்தி லில்லாதவைகளாகச் செய்துகொண்டும் அவைகளி லுண்டாகிற ஆசை த்வேஷம், இவைகளைத் தள்ளிக் கொண்டும், த்யானம் செய்வதற்கு விரோதிகளாகிய வஸ்துக்க ளொன்று மில்லாத இடத்தி

தா] இவ்விடத்தில் 'பு₃த்₃தி₄' என்னும் பதம் மேலே ப்ரஸ்தாவிக்கப் படுகிற 'ப்₃ரஹ்ம' என்னும் பதத்தின் அபிப்ராயத்திலேற்பட்ட அர்த்தத்தைப்பற்றிய புத்தியைச் சொல்லுகிறது. அதற்கு சுத்தியாவது பூர்ணமாகத் தெரிந்துகொள்ளாமை, ஸந்தேஹம், விருத்தமாக அறிதல் முதலிய தோஷங்களில்லாமை. என்று சொல்லுகிறார்—'உள்ளபடியே இருக்கிற' என்றாரம்பித்து. 'த்₄ருத்யா' என்பதினால் முன்பு சொல்லிய விதமான ஸாத்விக த்ருதி சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'விஷயங்களிலிருந்து திருப்புவதினால்' என்று. இவ்விடத்தில் தைர்யத்தினால் மனதை அடக்குவதாகிய கர்மம் சொல்லப்பட்டது. மறுபடியும் முன்பே விடப்பட்ட ஶப்தம் முதலிய விஷயங்களைப்பற்றி அப்பொழுது விட்டு என்று சொல்லப்படுகிறதே அது எப்படிப்பட்டது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஸமீபத்தில் இல்லாதவைகளாய்ச் செய்துகொண்டு' என்று. விஷயங்கள் ஸமீபத்திலிருப்பது ஜிதேந்த்ரியனையும் கலக்கிவிடுமல்லவா என்று தாத்பர்யம். 'ராக₃த்₃வேஷௌ வ்யுத₃ஸ்ய' என்று விஷயங்களிலுண்டாகிய ராக த்வேஷங்களைத் தள்ளுவதும் அப்பொழுது செய்யவேண்டியதைப்பற்றியது என்று தெரிவிப்பதற்காகவும் 'ஶப்₃தா₃தீ₃ந் விஷயாம்ஸ் த்யக்த்வா' என்பதோடு புனருக்தியைப் பரிஹரிப்பதற்காகவும் சொல்லுகிறார்—'அவைகளினாலுண்டாகிற' என்றாரம்பித்து. இத்தால் விஷயங்கள் ஸமீபத்தில் இல்லாமையின் ப்ரயோஜனம் காட்டப்பட்டது. அன்றிக்கே தூரத்திலிருந்தபோதிலும், அவைகளில் ஸூக்ஷ்மமாகிய ஆசையும் விடத்தக்கது என்று தாத்பர்யமாகவுமாம். 'விவிக்த' என்பதற்கு இல்லாமலிருக்கிற என்றர்த்தம். அதை இந்த ஸந்தர்ப்பத்திற்குபயோகமான அர்த்தத்தினால் விசேஷித்துச் சொல்லுகிறார்—'த்யானம் செய்வதற்கு விரோதிகளாகிய' என்றாரம்பித்து. 'ஸேவீ' என்பதினால் முன்பு

லிருந்து கொண்டும், அதிகமாக ஸாப்பிடுவது, ஸாப்பிடாம லிருப்பது, இவைகளில்லாம லிருப்பவனாயும், த்யானத்திற் கனுகுணமாகச் செய்யப்பட்ட ஶரீரம் வாக்கு, மனது, இவைகளின் வ்யாபாரங்களை யுடையவனாய்க் கொண்டும் இப்படிப்பட்டவனாய் ப்ரயாணம் புறப்படுகிற வரையில் தினந்தோறும் த்யானம் செய்து கொண்டும், த்யானம் செய்யப்படுகிற வஸ்துவைத் தவிர மற்ற விஷயங்களில் தோஷங்களை நிரூபிப்பதினால் அந்தந்த விஷயங்களில் ஆசை இல்லாமையை வ்ருத்தி செய்து கொண்டும், ஆத்மாவல்லாத வஸ்துவினிடத்தில் இதுவே ஆத்மா என்கிற அபிமானத்தையும், அது வ்ருத்தி யடைவதற்குக் காரணமாகிய வாஸனையின்

சொல்லப்பட்ட 'நாத்யஶ்நத:' என்பது முதலியது ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது என்று சொல்லுகிறார்—'அதிகமாக ஸாப்பிடுவது' என்றாரம்பித்து. 'த்ருத்யாத்மாநம் நியம்ய ச' என்பதோடு 'யதவாக்காயமாநஸ:' என்பதற்குப் புனருக்தியைப் பரிஹரிப்பதற்காகச் சொல்லுகிறார்—'த்யானத்திற்கனுகுணமாகச்செய்யப்பட்ட' என்றாரம்பித்து. ஶரீரத்தை த்யானத்திற் கனுகுணமாகச் செய்வதாவது உறுதியான ஆஸநம் முதலியவைகளை அடைதல். வாக்குக்கோவெனில் ப்ரணவம் முதலியவைகளைத் தவிர மற்ற வார்த்தைகளை விட்டுவிடுதல். மனதிற்கோவெனில் ஶுபாஶ்ரயமாகிய பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை நினைத்துக்கொண்டிருத்தல் கீழ்ச்சொல்லியவைகளெல்லாம் த்யானயோகத்திற்கங்கங்கள் என்று சொல்லுகிறார்—'இப்படிப்பட்டவனாய்' என்று. 'நித்யம்' என்னும் பதத்தின் தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—'ப்ரயாணம் புறப்படுகிற வரையில் தினந்தோறும்' என்று. 'ராகத்வேஷௌ வ்யுதஸ்ய' என்பதினால் ஶப்தம் முதலிய விஷயங்களிலுண்டாகிய ஆசை, த்வேஷம், இவைகளை விலக்கவேண்டுமென்று சொல்லப்பட்டபடியினால் 'வைராக்யம் ஸமுபாஶ்ரித:' என்கிற இது அபிமானத்தினாலுண்டாகிய வஸ்துக்களைப்பற்றியது. அதில் 'ஸம்' என்னும் உபஸர்க்கத்தின் அர்த்தமாகிய நன்மையாவது முன்பு ஏற்பட்டிருந்தபோதிலும் அதையே நன்றாக உறுதிப்படுத்தல் என்கிற அபிப்ராயத்தினால் 'ஆசையில்லாமையை வ்ருத்திசெய்துகொண்டும்' என்று சொல்லப்பட்டது. இப்படியே அஹங்காரம் முதலியவைகளை விடுவதிலும் அறியவேண்டியது. ஶரீரம், மனது, ப்ராணவாயு முதலியவைகளின் பலங்கள் யோகத்திற்கு விரோதி இல்லையாகையினால் 'வாஸனையின் பலத்தையும்' என்று விஶேஷித்துச் சொல்லி இருக்கிறது. கர்வமாவது இவ்விடத்தில் கீழ்ச்சொல்லிய அஹங்காரம், பலம், இவைகளைக் காரணமாகவுடையதாகிய செய்யவேண்டிய கார்யத்தைச் செய்யாமை. நான்

பலத்தையும், இதனாலுண்டாகிற கர்வத்தையும், காமத்தையும், கோபத்தையும், மற்றெல்லா வஸ்துக்களையும் விட்டு விட்டுத் தன்னைச் சேர்ந்தவைகளல்லாத எல்லா வஸ்துக்களிடங்களிலும் தன்னுடைய தென்கிற புத்தி இல்லாதவனாயும், ஆத்மாவை அனுபவிப்பதொன்றையே ஸுகமாக வுடையவனாயும், இப்படிப் பட்டவனாய்க்கொண்டு த்யான யோகம் செய்கிறவன் ப்ரம்மமாவதற்குத் தகுந்தவனாகிறான். எல்லா ஸம்ஸார பந்தங்களிலிருந்து விடுபட்டவனாய் உள்ளபடியே இருக்கிற ஜீவாத்மாவை அனுபவிக்கிறான் என்றர்த்தம். 51—53

ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி |
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் || 54

ப-ரை] ப்ரஹ்மபூத: - பரிசுத்த ஆத்மாவை யனுபவிக்கிறவனாய், ப்ரஸந்நாத்மா - துக்கம்முதலியவைகளில்லாதஸ்வரூபத்தையுடையவனாய், ந ஶோசதி - வேறொன்றைப்பற்றித் துக்கிப்பதுமில்லை, ந காங்க்ஷதி-

---

யோகி, நான் ஶாந்தன் என்றுண்டாகும் கர்வமும் விடத்தக்கது. 1 'ஹ்ருஷ்டோ த்ருப்யதி த்ருப்தோ தர்மமதிக்ராமதி' என்று ஶ்ருதியில் சொல்லியிருப்பதினால் மனது, வாக்கு, ஶரீரம் இவைகளின் வ்யாபாரங்கள் நிவ்ருத்தி சொல்லப்பட்டபடியினால் 'ஶாந்த:' என்னும் பதம் இவ்விடத்தில் ஶாந்திக்கு விஶேஷமான காரணத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'ஆத்மாவை அனுபவிப்பதொன்றையே ஸுகமாகவுடையவனாயும்' என்று. இந்த்ரியங்களின் வ்யாபாரங்கள் ஓய்வதும் கோபம் முதலியவைகள் நிவ்ருத்திப்பதும் வெளியிலுண்டாகும் ஸுகத்தில் ஆசை இல்லாமையினால். அதுவும் அதைவிட விஶேஷமான ஆத்மாவை அனுபவிப்பதாகிய ஸுகம் ஸித்தித்துவிட்டபடியினால் என்று தாத்பர்யம். கீழ்ச்சொல்லிய எல்லாக் கர்மங்களிலும் த்யானயோகம் முக்கியம் என்று சொல்லுகிறார்—'இப்படிப் பட்டவனாய்க்கொண்டு த்யானயோகம் செய்கிறவன்' என்று. இவ்விடத்தில் த்யானமே யோகமென்று சொல்லப்படுகிறது. த்யானத்தினால் உண்டாகிறயோகமாகவுமாம். அடுத்த ஶ்லோகத்தின் அர்த்தத்தை யோசித்து இவ்விடத்தில் 'ப்ரஹ்ம' என்னும் பதம் பரிசுத்தமான ஜீவாத்மாவைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'எல்லா ஸம்ஸார பந்தங்களிலிருந்து' என்றாரம்பித்து. 51—53

---

1 ஹ்ருஷ்ட: - ஸந்தோஷத்தை யடைந்தவன், த்ருப்யதி - கொழுப்படைகிறான், த்ருப்த: - கொழுப்படைந்தவன், தர்மம் - தர்மத்தை, அதிக்ராமதி - மீறி நடக்கிறான்.

ஆசைப்படுவதுமில்லை, ஸர்வேஷு - எல்லா, பூதேஷு - ப்ராணிகளிடங்களில், ஸம: - ஸமமான புத்தியையுடையவனாய்க்கொண்டு, பராம் — மிகவும் உயர்ந்ததாகிய, மத்பக்திம் - என்னிடத்தில் பக்தியை, லபதே — அடைகிறான். 54

பா] ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற அளவில்லாத ஜ்ஞானமொன்றையே ஸ்வரூபமாகவுடையதாயும், எனக்குச் சேஷமாயிருப்பதொன்றையே ஸ்வபாவமாக வுடையதாயுமிருக்கிற தன்னுடைய ஆத்மஸ்வரூபத்தையுடையவனாயும், * 'இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்' என்பதினால் தனக்குச் சேஷமென்று சொல்லப்பட்டதல்லவா, கஷ்டம், கர்மம், முதலியவைகளினால் கலக்கத்தை யடையாத ஸ்வரூபத்தை யுடையவ

தா] இப்படிக் கர்மயோகம் முதலியவைகளினால் உண்டாக்கப்பட்ட ஜீவாத்மாவை யனுபவிப்பது பரபக்தியில் அதிகாரத்தை உண்டாக்குகிறது என்பது இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுகிறது இந்த அபிப்ராயத்தினால் பகவானுக்குச் சேஷமாயிருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக யுடையவனாயிருக்கையும் ப்ரகாசிக்கிறதென்று சொல்லப்பட்டது. யோகத்தினாலுண்டாக்கப்பட்ட 'ப்ரஹ்ம' என்று சொல்லப்பட்டது பெரிதாக இருக்கைஎன்கிற அபிப்ராயத்தினால் 'அளவில்லாதஜ்ஞானம்' ப்ரகாசிக்கிறது என்று சொல்லி இருக்கிறது. பகவானுக்குச் சேஷமாக இருக்கை ஆத்மாவிற்கு ஸ்வரூபத்தோடு சேர்ந்ததென்பது முன்னமேயே சொல்லப்பட்டது என்று சொல்லுகிறார்—'இதஸ்த்வந்யாம்' என்றாரம்பித்து. 1 'ராகாத்யதூஷிதே சித்தே நாஸ்பதீ மதுஸூதந:' என்றிவை முதலியவைகளில் சொல்லப்பட்ட பரபக்தி, செய்பத்தகாத அயோக்யதை இல்லாமை, 'ப்ரஸந்நாத்மா' என்பதினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார் —'கஷ்டம், கர்மம், முதலியவைகளினால் கலக்கத்தையடையாத' என்று. 'முதலிய' என்னும் பதத்தினால் விபாகம், ஆசை, இவைகளும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன, அவைகளும் கலக்கங்களாகையினாலும், 2 'க்லேசகர்மவிபாகாசயை:' என்று சேர்த்துச் சொலலப்பட்டிருப்பதினாலும். அவித்யை, அஹங்காரம் முதலியவைகள் ஐந்தும் க்லேசங்கள். புண்ணியம் பாபம் இவை

* பகவத்கீதை - 7 -5

1 விஷ்ணுதர்மம் - 9 - 10. மதுஸூதந: பகவான் ராகாதிதூஷிதே-ஆசை முதலியவைகளினால் கெடுக்கப்பட்டிருக்கிற, சித்தே - மனதில், நாஸ்பதீ - இடத்தையுடையவனல்ல, அதாவது வசிக்கமாட்டான் என்றர்த்தம்.

2 யோகஸூத்ரம்.

ஞயுமிருப்பவன் என்னைத் தவிர வேறொரு ப்ராணியையும் குறித்துத் துக்கிப்பதுமில்லை ஆசைப்படுவதுமில்லை. பின்னை எப்படி என்னில் என்னைத் தவிர மற்றெல்லா ப்ராணிகளைப்பற்றியும் இவைகள் அநாதரிக்கத் தக்கவைகள் என்கிற விஷயத்தில் ஸமமான புத்தியையுடையவனுய்க்கொண்டு எல்லா வஸ்துக்களையும் த்ருணம்போல் நினைத்துக்கொண்டு எல்லாவற்

இரண்டும் கர்மம். ஜாதி, வயது, ஸுகங்கள், இவைகள் விபாகங்கள். அவைகளினுல் உண்டாகும் ஸம்ஸ்காரங்கள் ஆசயங்கள். [1] 'யஸ்மிந் ஸ்திதோ ந து:கேந குருணாபி விசால்யதே' என்று முன்பு சொன்னதே 'நசோசதி' என்பதினுல் சொல்லப்பட்டது. அப்படியே 'யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத:' என்று சொல்லப்பட்டது 'நகாங்க்ஷதி' என்பதினுல் ஜ்ஞாபகப் படுத்தப்பட்டது. இவ்விடத்தில் 'ந ப்ரஹ்ருஷ்யதி' என்கிற பாடாந்தரம் அப்ரஸித்தமாகையினுல் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அதில் ஆத்மாவை அநுபவிப்பதினுல் உண்டாகிய ஸுகத்தினுல் வெளியிலிருக்கும் விஷயங்களில் ஆசை இல்லாமை உண்டாகிறது. பரமாத்மாவோ வெனில் ஜீவாத்மாவை விட மேலான ஸுகமாகச் சாஸ்த்ரங்களில் கேழ்க்கப்பட்டிருப்பதினுல் அவனை அநுபவிக்க வேண்டுமென்கிற ஆசை மிகுதியாக நிற்கிறது என்கிற அபிப்ராயத்தினுல் 'என்னைத்தவிர வேறொரு ப்ராணியையும் குறித்து' என்று சொல்லப்பட்டிருக்கிறது. துக்கமும் ஆசையும் உண்டாகாமலிருப்பதற்குக் காரணம் 'ஸம:' என்பதினுல் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் 'அநாதரிக்கத்தக்கவைகள் என்கிற விஷயத்தில் ஸமமான புத்தியை யுடையவனுய்க்கொண்டு' என்று சொல்லப்பட்டது. அதாவது எல்லா வஸ்துக்களிடங்களிலும் ஸமமான அநாதரவை உடையவனுய்க் கொண்டு என்றர்த்தம். மேலான தத்துவம், தாழ்ந்த தத்துவம், இவைகளின் பகுத்தறிவிற்கு ப்ரயோஜனமாகிய மற்ற வஸ்துக்களைப்பற்றிய அநாதரவு ஸமம் என்பதை ப்ரகாசப்படுத்துகிருர்—'எல்லாவஸ்துக்களையும்' என்ருரம்பித்து. 'எல்லா வஸ்துக்களையும்' என்பதினுல் ப்ரம்மா முதல் புழுவரையிலுள்ள எல்லா வஸ்துக்களுக்கும் ஒன்றுக்கொன்றுள்ள வ்யத்யாஸம் மேரு பர்வதத்தைக்குறித்து உளுந்து, கடுகு, இவைகளுக்கு ஒன்றுக்கொன்றுள்ள வ்யத்யாஸத்தைப்போலஅநாதரிக்கத்தக்கது என்பது காட்டப்பட்டது. 'த்ருணம் போல்' என்பதற்கு ரத்னமயமான மலையில் ஏறுவதற்கு யத்தினம் செய்து கொண்டிருப்ப

---

1 பகவத்கீதை-6-22.

றிற்கு மீஶ்வரனையும் எல்லாலோகங்களினுடையவும் உத்பத்தி, ஸ்திதி, லயம், இவைகளை விளையாட்டாகஉடையவனையும், கெட்ட குணங்களின் ஸம்பந்தமில்லாதவனையும், எல்லை இல்லாத மேன்மையையுடைய எண்ணிறந்த கல்யாண குணங்களுக்கே இருப்பிடமாயும், அழகு நிறைந்த

வனுக்கு வைக்கோலின் கும்பல்களில் ஆசை உண்டாகாதல்லவா என்று தாத்பர்யம். இவ்விடத்தில் 'ஈஶ' என்னும் பதத்தினால் பரபக்தியுண்டாவதற்கும் அது வ்ருத்தியடைவதற்கும் காரணமாக இந்தக் கீதாஶாஸ்த்ரத்தில் முன்னும், மற்ற ஶாஸ்த்ரங்களிலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டவைகளும் உபாஸநம் செய்யும்பொழுது அநுஸந்திக்கவேண்டியவைகளுமான ஆகாரங்கள் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டன என்று சொல்லுகிறார்—'எல்லாவற்றிற்கு மீஶ்வரனையும்' *என்றாரம்பித்து.* 'எல்லாவற்றிற்கு மீஶ்வரனையும்' *என்பதற்கு, என்னால் நியமிக்கப்பட்டவனையும் ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டவனையு மிருக்கிறவனுக்குத் தன்னைப்போலவே இருக்கிற என்னால் நியமிக்கப்படுகிறவர்களினால் என்ன ப்ரயோஜனம் என்று தாத்பர்யம்.* 'எல்லா லோகங்களினுடையவும்' *என்றாரம்பிக்கும்வாக்யத்திற்கு* 1 *'காரணவஸ்துவே த்யானம் செய்யத்தக்கது' என்றர்த்தமுள்ள வாக்யம் ஶ்ருதியில் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். அன்றிக்கே இந்த்ரியங்கள், ஶரீரம், இவைகளைக் கொடுத்தது முதலியவைகளினால் மிகவும் உபகாரம் செய்தவனையும் நான்குவிதப்புருஷார்த்தங்களுக்கும் காரணமாயுமிருக்கிற அந்தப்பரமாத்மா இருக்க அவனால் ஸ்ருஷ்டிக்கப்படுகிறவனையும் ஸம்ஹரிக்கப்படுகிறவனையுமிருக்கிற மற்ற எவன் ஆஶ்ரயிக்கத்தகுந்தவன் என்று தாத்பர்யம்.* 'கெட்ட குணங்களின் ஸம்பந்தமில்லாதவனையும்' *என்பதற்கு இந்தப் பரமாத்மா உள்ளபடியே அறியப்பட்டானேயானால் மற்ற வஸ்துக்களிடங்களிலேபோல அலக்ஷியம் ஆசையில்லாமை முதலியவைகள் உண்டாவதற்குக் காரணமில்லையல்லவா என்று தாத்பர்யம்.* 'எல்லையில்லாத' *என்பது முதலியவற்றிற்கு ஒவ்வொரு குணங்களின் மேன்மையும் மனதை இழுக்கக்கூடியது. இப்படிப்பட்டகுணங்கள் அநேகம் சேர்ந்திருந்தால் கேழ்க்கவே வேண்டியதில்லை என்று தாத்பர்யம். எது மேலானதும் ஸுலபமானதுவோ அதுவேயல்லவோ ஆஶ்ரயிக்கத்தக்கது. ஆகையினால் ஸௌலப்யத்திற் குபயோகமான குணங்களையும் இங்கே சேர்த்துக்கொள்ள வேண்டியது.* 'அழகு நிறைந்த அம்ருத ஸமுத்திரமாயும்' *என்பது ஶுபாஶ்ரயமான திவ்யமங்கள விக்ரஹத்தின் குணங்களைக் குறிக்கிறது.*

---

1 *அதர்வஶிகோபநிஷத்.*

அம்ருத ஸமுத்ரமாயும், லக்ஷ்மியை யுடையவனாயும், தாமரைப்பூக்களைப் போன்ற கண்களை யுடையவனாயும், தனக்கு ஸ்வாமியாயுமிருக்கிற என்

‘லக்ஷ்மியை யுடையவனாயும்’ என்பதற்கு ஸ்ரீ என்பவள் எல்லாருக்கும் ஆஶ்ரயிக்கத்தகுந்தவளல்லவா. அவளும் இவனை எப்பொழுது மாஶ்ரயித்திருக்கிறாள் என்று தாத்பர்யம். ஶ்ரீயதே - எல்லாராலும் அடையப்படுகிறாள், ஶ்ரயதே – பகவானை அடைந்திருக்கிறாள், என்றல்லவோ ஸ்ரீஎன்னும் பதம் நிர்வசனம் செய்யப்பட்டது. ‘உசஃ’ என்னும் விகுதி எப்பொழுதும் சேர்ந்திருக்கிறாள் என்பதைக் காட்டுகிறது. 1 ‘பூமியும் லக்ஷ்மியும் உனக்குப் பத்னிகள்’ என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களுமிருக்கின்றன. புராணத்திலும் 2 ‘நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோஃ ஶ்ரீரநபாயிநீ’ என்று சொல்லப்படுகிறது. இத்தால் உபாஸிக்கத்தக்கவனாயிருக்கை அடையத்தக்கவனாயிருக்கை முதலிய எல்லாம் பத்னியோடு கூடிய பகவானுக்கே என்றுதெரிவிக்கப்பட்டது. ரஹஸ்யாம்நாயம் தெரிந்தவர்களும் இந்த அர்த்தத்தையே ‘எப்பொழுதும் ஸமீபத்திலிருக்கிற ஶக்தி’ என்றர்த்தமுள்ள வாக்யத்திலை சொல்லுகிறார்கள். ‘தாமரைப்பூக்களைப்போன்ற கண்களையுடையவனாயும்’ என்றது அவயவங்களின் ஸௌந்தர்யங்கள் எல்லாவற்றையும் குறிக்கிறது. 3 ‘அவனுக்கு ஸூர்யனால் மலர்த்தப்பட்ட தாமரைப்புஷ்பங்கள் எப்படியோ அப்படிக்கண்கள் இருக்கின்றன, அவனுக்கு உத் என்று திருநாமம், இவன் எல்லாப் பாபங்களிலிருந்தும் மேற்பட்டவன், எவன் இப்படி த்யானம் செய்கிறானோ அவன எல்லாப் பாபங்களிலிருந்தும் மேலேபோகிறான்’ என்றர்த்தமுள்ளஶ்ருதிவாக்யத்தில் எல்லாப் பாபங்களும் விடவேண்டுமென்றாசையுடையவன் உபாஸநம் செய்ய வேண்டியதற்காகத்தாமரைப் பூக்களைப்போன்ற கண்களையுடையவனாயிருக்கிறான்என்றுசொல்லப்பட்டது. 4 ‘சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி’, 5 ‘யம்வைஶ்ருஉயாஸூஷ்ந:’ என்றிவை முதலிய

1 புருஷஸூக்தம்.

2 விஷ்ணுபுராணம் - 8 - 17. ஜகந்மாதா - லோகங்களுக்குத் தாயாராகிய, ஏஷா - இந்த, ஸ்ரீ: - லக்ஷ்மி, விஷ்ணோ: - பகவானுக்கு, நித்யைவ - எப்பொழுதும் இருக்கிறவள், அநபாயிநீ - விட்டுப் பிரியாதவள்.

3 சாந்தோக்யம் - 1 - 1 - 6

4 ராமாயணம் - ஆரண்யகாண்டம் - 74 - 13. சபரி ஸ்ரீராமனைப்பார்த்துச் சொல்லுகிறாள் - உம்முடைய மிகவும் குளிர்ந்த கடாக்ஷங்களினால் பரிசுத்தையானேன். 5 261-ம் பக்கம், 1-ம் புட்நோட்டைப் பார்க்க.

னிடத்தில் எல்லையில்லாத ப்ரியமாகிய அநுபவமாகிற மேலான பக்தியை யடைகிறான். 54

பா-அ] இதின் பலத்தைச்சொல்லுகிறார்—

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌯𑌾𑌵𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃।
𑌤𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑌤𑍇 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍॥ 55

ப—ரை] (நான்) - **𑌯𑌃** - எப்படிப்பட்டவனாகவும், **𑌯𑌾𑌵𑌾𑌨𑍍** - எவ்வளவாகவும், **𑌅𑌸𑍍𑌮𑌿** — ஆகிறேனோ, (அப்படிப்பட்ட) **𑌮𑌾𑌂** - என்னை, **𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾** — பக்தியினால், **𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃** - உள்ளபடியே, **𑌅𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿** - அறிகிறான், **𑌮𑌾𑌂** - என்னை, **𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃** - உள்ளபடியே, **𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾** - அறிந்து, **𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍** — அதற்குப்பிறகு, **𑌤𑌤𑌃** — அந்தப் பக்தியினாலேயே, **𑌵𑌿𑌶𑌤𑍇** - அடைகிறான் 55

பா] நான் ஸ்வரூபத்தினாலும் ஸ்வபாவங்களினாலும் எப்படிப்பட்டவனோ, குணங்களினாலும் விபூதிகளினாலும் எவ்வளவானவனோ, அப்படிப்

இடங்களிலும் அவனுடைய கடாக்ஷம் மிகவும் பரிசுத்தமான தென்பது சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். பக்தி உண்டாவது முதலியவற்றில் கீழ்ச் சொல்லிய தெல்லாம் ஒருதட்டாகவும் ஸ்வாமி என்பது ஒருதட்டாகவுமிருக்கிறது. இவன் ஒன்று குறைந்த எல்லாவற்றிற்கும் யஜமானனல்லவே என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— 'தனக்கு ஸ்வாமியாயுமிருக்கிற' என்று. 54

'இதின் பலத்தைச் சொல்லுகிறார்' என்கிற இடத்தில் பரம்பரையாகவும் நேராகவுமிருக்கிற பலத்தை என்று சேர்த்துக்கொள்ளவும். கீழே சொல்லப்பட்ட லோகங்களுக்குக் காரணமாக இருக்கையை லக்ஷணமாகவுடைய எல்லாவற்றிற்கு மீச்வரனாகிய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறதென்கிற அபிப்ராயத்தினால் 'யஃ' என்பதற்கு அர்த்தம் சொல்லுகிறார்—'ஸ்வரூபத்தினாலும்' என்று. சில குணங்கள் உண்டென்றும் சில கெட்ட குணங்கள் இல்லாதவனென்றும் சொல்லியிருக்கிற போதகவாக்யங்களினா லறியப்பட்ட எல்லாவித்யைகளிலும் அனுஸந்திக்கத்தகுந்த ஸ்வரூபநிரூபக தர்மங்களை உடையவனாயிருக்கை 'ஸ்வபாவங்களினாலும்' என்று சொல்லப்பட்டது. ஸ்வரூபநிரூபக தர்மங்களில்லாவிடில் ஸ்வரூபமே நிரூபிக்கப்படாமையினால் வஸ்து ஒரு ஸ்வபாவமுமில்லாததாகிவிடும் 'ஸ்வரூப' என்னும் பதம் ஸ்வரூபநிரூபக தர்மங்களைச் சொல்லுகிறது. 'ஸ்வபாவ' என்னும் பதம் ஸௌலப்யத்தைச் சொல்லுகிறது என்றும் சிலர்சொல்லுகிறார்கள். 'யாவாந்'

பட்ட என்னை இப்படிப்பட்ட பக்தியினுல் உள்ளபடியே அறிகிறான், என்னை உள்ளபடியே அறிந்து அப்படி யறிந்த பிறகு அந்தப் பக்தியினாலே யே என்னை அடைகிறான். உள்ளபடியே ஸ்வரூபம், ஸ்வபாவம், குணங்கள், விபூதிகள், இவைகளைப் பார்த்தபிறகுண்டாகிய எல்லை இல்லாத

என்னும் பதம் அதிகம் குறைவு என்று சொல்லத்தகுந்த ஆகாரத்தைப்பற்றியதென்பது உசிதம் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறார்—'குணங்களினுலும் விபூதிகளினுலும்' என்று. இவ்விடத்தில் 'குண' என்னும்பதம்நிரூபிதஸ்வரூபவிஶேஷணங்களாகிய ஜ்ஞானம், ஶக்தி, முதலிய எல்லா ஸ்வபாவங்களையும் சொல்லுகிறது. 'யாவாந்யஶ்ச' என்கிற பதங்களை ஶ்லோகத்தில் சொல்லியிருக்கும் வரிசையை மாற்றி வ்யாக்யானஞ் செய்தது புத்தியில் விஷயமாகும் வரிசையைக் காட்டுவதற்காக. 'தத்வத:'என்பது'யாவாந்யஶ்ச'என்கிற இடத்தில் வேண்டியதில்லை யாகையினுலும், 'அபிஜாநாதி' என்கிற இடத்தில் ஸம்ஶயம் முதலியவைகளை விலக்குவதற்காக வேண்டியிருக்கிறபடியினுலும் 'தத்வத: அபிஜாநாதி' என்றந்வயம் சொல்லப்பட்டது. 'மாம் தத்வதோऽபிஜாநாதி' என்று கீழ்ச்சொல்லிய அர்த்தத்தையே 'மாம் தத்வதோ ஜ்ஞாத்வா' என்றனுவாதம் செய்திருப்பது உபாயமாக இருந்தபோதிலும் மிகவும் போக்யமாகையினுலும் கிடைப்பது மிகவும் அரிதாகையினுலும் இதில் அதிக ப்ரீதியைக் காட்டுவதற்காக. 'தத்வதோஜ்ஞாத்வா' என்பதினுலேயே ஜ்ஞான முண்டான பிறகு ஸித்தி உண்டாகிறது என்றேற்படுகிறபடியினுல் காரணங்கள் பூர்த்தியாக இருக்கிறதென்பதும் ஏற்பட்டிருப்பதினுலும், 'ததநந்தரம்' என்பதினுல் ஜ்ஞானத்திற்குப் பிறகு அடைவதுண்டாகிறதென்று நேரில் சொல்லியிருக்கிறபடியினுலும், 'பக்த்யா த்வநந்யயா' என்கிற இடங்களில் முன்பே பகவானை அடைவதில் பக்தியே காரணமென்று சொல்லி இருப்பதினுலும் 'தத:' என்பதற்கு'பக்தியினுலேயே' என்றர்த்தம் சொல்லப்பட்டது. 'ப்ரவேஷ்டும்'என்று முன்பு சொன்ன அர்த்தமே இங்கும் சொல்லப்படுகிறது என்று தெரிவிப்பதற்காக 'அடைகிறான்' என்று சொல்லப்பட்டது. உள்ளபடியே அறிவதும் உயர்ந்த தசையையடைந்ததாகிய பக்தியினுல் அந்யோந்யாஶ்ரயதோஷமும் பக்திக்கு வெவ்வேறுவரிசை க்ரமங்கள்இருக்கிறபடியினுல் பரிஹரிக்கப்பட்டது. அப்படிப்பட்ட தசையையுடைய அந்தப்பக்தியே நேரில் மோக்ஷத்திற்கு ஸாதனம் என்று சொல்லுகிறார்—'உள்ளபடியே ஸ்வரூபம், ஸ்வபாவம்' என்றாரம்பித்து. 'பார்த்த பிறகுண்டாகிய' என்று சொல்லியிருப்பதி

மேன்மையையுடைய பக்தியினுலென்னை அடைகிருனென்றர்த்தம். இவ்விடத்தில் 'தத:' என்பதினுல் அடைவதற்குக் காரணமாகக் கீழ்ச்சொல்லப்பட்ட பக்தியே சொல்லப்படுகிறது, * 'பக்த்யா த்வநந்யயா ஶக்ய:' என்று அந்தப் பக்தியே, உள்ளபடியே பகவானை யடைவதற்குக் காரணமென்று சொல்லி யிருப்பதினுல். 55

பா - அ] இப்படிப் பலம் முதலியவைகளை விட்டுப் பரமாத்மாவிற் காராதனங்களாக அனுஷ்ட்டிக்கப்படுகிற வர்ணாஶ்ரமங்களுக்குத் தகுந்ததாகிய நித்யநைமித்திகக் கர்மங்களின் பரிபாகம் சொல்லப்பட்டது இப்பொழுது கீழ்ச்சொல்லிய விதமாக அனுஷ்ட்டிக்கப்படுகிற காம்யகர்மங்களுக்கும் இதே பரிபாகமுண்டாகிறதென்று சொல்லுகிருர்—

ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாஶ்ரய: |
மத்ப்ரஸாதாதவாப்நோதி ஶாஶ்வதம் பதமவ்யயம் || 56

ஞல் 'தத்த்வதோऽபிஜாநாதி' என்பது ஸாக்ஷாத்காரத்தைச்சொல்லுகிறதென்று காட்டப்பட்டது. பரபக்தியினுலும் தத்வ ஜ்ஞானமே உண்டாக்கப்படுகிறது. அந்தஜ்ஞானமேநேரில் மோக்ஷத்திற்கு ஸாதனமென்கிற குத்ருஷ்டிகளின் மதத்தை நிராகரிக்கிருர்—'இவ்விடத்தில்' என்றாரம்பித்து. 'பக்தியே' என்பதினுல் ஸாக்ஷாத்காரத்தை விலக்குகிறது. இவ்விடத்தில் பக்தி தூரத்தில் சொல்லப்பட்டது, ஜ்ஞானம் ஸமீபத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தபோதிலும் தூரத்தில் சொல்லப்பட்ட பக்தியைச் சொல்லுவதுசிதம். அப்படிக்கில்லாவிடில் 'தத்த்வதோ ஜ்ஞாத்வா' என்பவை முதலியவைகளோடு புனருக்திவரும். இவ்விடத்தில் ஸாக்ஷாத் காரத்திற்குக்காரணமாகிய பக்தியை யனுவாதம் செய்வதில் ப்ரயோஜனமில்லாமையினுல் அதற்கு மேல்பட்ட தசையோடு கூடிய அந்தப் பக்தியே சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். முன்பு சொன்ன காரணத்தைச் சொல்லுகிருர்— 'பக்த்யா த்வநந்யயா' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது—உபக்ரமாதிகரணந்யாயத்தையனுஸரித்து முதலில்சொல்லியிருப்பது ப்ரபலம், விசதமாகவும் அவிசதமாகவுமிருக்கிற ப்ரமாணங்களுக்குள் விசதமாகச் சொல்லியிருக்கிறதை யனுஸரித்து மற்றென்றுக்கு அர்த்தம் சொல்லவேண்டும்—என்பது. 55

கீழ் ஜ்ஞானநிஷ்டை சொல்லப்பட்டது. மேலே கர்மநிஷ்டை சொல்லப்படுகிறது என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காக முன்பும் கர்மநிஷ்டையிலேயே சில உட்பிரிவுகளின் பரிபாகம் சொல்லப்பட்டது என்றனுவாதம் செய்துகொண்டு ஸங்கதியைச் சொல்லு

---

* பகவத்கீதை - 11 - 54.

ப - ரை] ***மத்வ்யபாச்ரய:*** - என்னை ஆச்ரயித்தவனாய்க்கொண்டு, அதாவது என்னிடத்திலே பலாதிகளை ஸமர்ப்பித்துவிட்டு, ***ஸர்வ கர்மாண்யபி*** - எல்லாக் கர்மங்களையும், ***ஸதா*** - எப்பொழுதும், ***குர்வாண:*** - செய்துகொண்டிருக்கிறவன், ***மத்ப்ரஸாதாத்*** - என்னுடைய அனுக்ரஹத்தினால், ***சாச்வதம்*** - அழிவில்லாத, ***அவ்யயம்*** - குறைவில்லாத, அதாவது பூர்த்தியான, ***பதம்*** - அடையவேண்டிய ப்ரயோஜனமாகிய என்னை, ***அவாப்னோதி*** – அடைகிறான். 56

ரா] கேவலம் நித்யங்களாயும் நைமித்திகங்களாயு மிருக்கிற தர்மங்களை மாத்திரமல்ல, பின்னை எதை என்னில் காம்யங்களாகிய எல்லாக் கர்மங்களையும் கர்த்ருத்வம் முதலியவைகளை என்னிடத்தில் விட்டுவிட்டுச் செய்கிறவன் என்னுடைய அனுக்ரஹத்தினால் அழிவில்லாததான அடைய வேண்டிய ப்ரயோஜனமாகிய என்னைப் பூர்ணமாக அடைகிறான். '***பத்யதே*** (அடையப்படுகிறது)' என்கிற வ்யுத்பத்தியினால் '***பதம்***' என்னப் படுகிறது. 56

---

*கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'பரிபாகம்' ஆவது இவ்விடத்தில் கீழிரண்டு ச்லோகங்களில் சொல்லப்பட்ட பரபக்தி, பரஜ்ஞானம், பரம பக்திவரையிலுள்ள பலங்கள். சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்கள் முன்பு சொல்லப்பட்ட படியினால் '**ஸர்வ கர்மாண்யபி**' என்று சாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்டவைகளை அனுஷ்டானம் செய்வது பகவான் ஒருவனிடத்திலேயே பக்தியை யுடையவனாயிருக்கையை ஸ்தோத்திரம் செய்வதற்காகச் சொல்லப்படுகிறதென்று தன்னிஷ்ட ப்ரகாரம் நடப்பதில் ஆசையுடைய சங்கராசாரியர் முதலியவர்களினுடைய மதத்தை நிராகரிக்கிறார்—'இப்பொழுது' என்றாரம்பித்து. '**ஸர்வ**' என்னும் பதம் இவ்விடத்தில் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களிலேயே கீழ்ச்சொல்லப்படாதவைகளைச் சேர்த்துக்கொள்ளுவதற்காக என்று தாத்பர்யம். இத்தையே விவரிக்கிறார்—'கேவலம்' என்றாரம்பித்து. கீழ் ச்லோகத்தில் சொல்லப்பட்ட ப்ரயோஜனமே இவ்விடத்திலும் '**சாச்வதம்**' என்கிற விசேஷணத்தோடு கூடிய '**பதம்**' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் அதற்கு வ்யுத்பத்தி சொல்லுகிறார்—'**பத்யதே**' என்றாரம்பித்து.* 56

பா - அ] எந்தக் காரணத்தினால் இப்படியாகிறதோ ஆகையினால்—

𑌚𑍇𑌤𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌮𑌯𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌭𑌵 ॥ 57

ப - ரை] 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 - புத்தியோகத்தை, அதாவது ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றிய புத்தியை, 𑌉𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 - அடைந்து, 𑌚𑍇𑌤𑌸𑌾 - மனதினால், 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 - எல்லாக் கர்மங்களையும், 𑌮𑌯𑌿 - என்னிடத்தில், 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 - ஸமர்ப்பித்துவிட்டு, 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 - என்னையே ப்ரயோஜனமாகவுடையவனாய்க் கொண்டு, 𑌸𑌤𑌤𑌂 - எப்பொழுதும், 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 - என்னிடத்திலேயே செலுத்தப்பட்ட மனதையுடையவனாக, 𑌭𑌵 - இரு.

பா] ஆத்மா எனக்குச் சேஷபூதம், என்னால் நியமிக்கப்படுகிறது, என்கிறபுத்தியினால், இதுவும் * '𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑍇𑌤𑌸𑌾' என்று கீழே சொல்லப்பட்டதல்லவா. கர்த்தாவோடு கூடியதாயும் ஆராதிக்கப்படுகிற தேவதைகளோடு கூடியதாயுமிருக்கிற எல்லாக் கர்மங்களையும் என்னிடத்தில் வைத்துவிட்டு நானே ப்ரயோஜனமாக அடையத்தகுந்தவன் என்றனுஸந்தானம் செய்துகொ

தா] கீழ்ச் சொல்லியதாகிய பரமபுருஷார்த்தத்திற்கு ஸாதனமென்பது மேலே உபாயத்தை விதிப்பதற்குக்காரணம் என்று சொல்லுகிறார்—'எந்தக் காரணத்தினால்' என்றாரம்பித்து. '𑌚𑍇𑌤𑌸𑌾' என்னும் பதத்திற்கு ப்ரயோஜனம் உண்டாவதற்காக அதினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டதாகிய பகவானிடத்தில் கர்மங்களை த்யாகம் செய்வதற்குக் காரணமாக இருக்கும் தன்மை எவ்விதமான மனதிற்குண்டாகுமோ அப்படிப்பட்ட ஸ்வபாவத்தைச் சொல்லுகிறார்—'ஆத்மா எனக்குச் சேஷபூதம்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் '𑌚𑍇𑌤𑌸𑌾' என்னும் பதத்தின் தாத்பர்யத்தையே கீழே விசேஷணத்துடன் சொல்லியிருப்பதைக் கொண்டு ஸ்தாபிக்கிறார்—'இதுவும்' என்றாரம்பித்து. '𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑍇𑌤𑌸𑌾' என்பதற்குப் பகவானுக்குச் சேஷமாயிருக்கை முதலிய விசேஷணங்களோடு கூடிய உள்ளபடி இருக்கிற ஜீவாத்மாவைப்பற்றிய புத்தியினால் என்றர்த்தம். '𑌸𑌰𑍍𑌵' என்னும் பதத்தினால் கர்மங்களின் ஸ்வரூபங்கள் எல்லாவற்றையும்போலக் கீழ்ச்சொல்லிய விதமாகக் கர்மங்களோடு சேர்ந்த வஸ்துக்களெல்லாமும் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது என்று சொல்லுகிறார்—'கர்த்தாவோடு கூடியதாயும்' என்றாரம்பித்து. '𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂' என்னும் பதத்தினால் மோக்ஷத்தில்

---

* பகவத்கீதை - 3 - 30.

ண்டு கர்மங்களைச் செய்துகொண்டே இந்தப் புத்தியையடைந்தே எப்பொழுதும் மனதை என்னிடத்தில் செலுத்திக்கொண்டிரு. 57

மச்சித்த: ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத் தரிஷ்யஸி ।
அத சேத்த்வமஹங்காராந் ந ச்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி ॥ 58

ப — ரை] மச்சித்த:-என்னிடத்தில் செலுத்தப்பட்ட மனதையுடையவனாய்க்கொண்டு, ஸர்வதுர்காணி - எல்லாக் கஷ்டங்களையும், மத்ப்ரஸாதாத் - என்னுடைய அனுக்ரஹத்தினால், தரிஷ்யஸி — தாண்டப்போகிறாய், அத - அப்படிக்கில்லாமல், த்வம் - நீ, அஹங்காராத் - அஹங்காரத்தினால், ந ச்ரோஷ்யஸி சேத் - (என்னுடைய வார்த்தையை) கேட்க்காமல் போகிறாயேயானால், விநங்க்ஷ்யஸி - நாசமடையப்போகிறாய். 58

பா] இப்படி என்னிடத்தில் செலுத்தப்பட்ட மனதையுடையவனாய்க்கொண்டு எல்லாக்கர்மங்களையும் செய்துகொண்டிருந்து ஸம்ஸாரத்திலுண்

ஆசையுடையவனுக்கு அஸாதாரணமாகிய பகவானே கர்த்தா என்கிற அனுஸந்தானம் முதலியது எல்லாம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது என்று சொல்லுகிறார்—'இந்தப் புத்தியை யடைந்தே' என்று. 57

தா] *'மச்சித்த: ஸர்வதுர்காணி' என்கிற இடத்தில் 'மச்சித்த' என்னும் பதத்தினால் முன் ச்லோகத்தில் சொன்னதையே அனுவாதம் செய்திருப்பதினாலும் அந்த ச்லோகத்திலும் ஒருவித புத்தி விசேஷத்தோடு கூடிய கர்மங்களை விதித்திருப்பதினாலும் மேல் க்ரந்தங்களிலும் யுத்தமென்று பேருடைய தன ஜாதிக் கனுகுணமான தர்மத்தில் உத்ஸாகத்தை உண்டாக்குவது ஸ்பஷ்டமாக ஏற்படுகிறபடியினாலும் இவ்விடத்திலும் அதே தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—'என்னிடத்தில் செலுத்தப்பட்ட' என்றாரம்பித்து. மனதை என்னிடத்தில் செலுத்தவேண்டும் என்பது மாத்திரம் இந்த ச்லோகத்தில் விதிக்கப்படுவதாக இருந்தால் அடுத்த ச்லோகத்தில் யுத்தத்திலிருந்து திரும்புவதாகிய எண்ணத்தை நிராகரித்திருப்பது பொருந்தாது என்று தாத்பர்யம். 'துர்க' என்னும் பதம் மலைகள், காடுகள், ஜலங்கள் இவைகளினால் போகக்கூடாத இடங்களில் ப்ரஸித்தமாக இருப்பதினாலும் க்ஷத்திரியனாயும் யுத்தம் செய்யவேண்டுமென்கிற ஆசையுடையவனாயுமிருக்கிற அர்ஜுநனுக்கு அவைகளைத் தாண்டவேண்டுமென்கிற அபேக்ஷை ஸம்பவிக்கலாமாகையினாலும் அவைகளைச் சொல்லுவது என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காக முன்பின் ஸந்தர்ப்பங்களை அனுஸரித்து 'ஸம்ஸாரத்திலுண்டாகிய' என்று விசேஷித்துச் சொல்லப்பட்*

டாகிய எல்லாக் கஷ்டங்களையும் என்னுடைய அனுக்ரஹத்தினாலேயே தாண்டப்போகிறாய். அப்படிக்கில்லாமல் நீ அஹங்காரத்தினால் அதாவது நானே எனக்குச் செய்யவேண்டிய கார்யம், செய்யத்தகாத கார்யம்இவைகளைப் பற்றி எல்லாம் தெரிந்தவன் என்கிறஎண்ணத்தினால்,என்னுடைய வார்த்தையைக் கேழ்க்காமல் போகிறாயேயானால் நாசமடைந்தவனா

டது. 'ஸர்வதுர்காணி' என்பதினால் வ்யுத்பத்தி, அனுஸாஸநம், ஶ்ருதி, ஸ்ம்ருதி, முதலியவைகளுக்கு விருத்தமாக இருக்கிற அபூர்வம் முதலியவைகளைக் கல்பிப்பது விலக்கப்பட்டது. தான் பலத்தைக் கொடுக்கும்பொழுது தடங்கலாக இருக்கிற நிக்ரஹ ஸங்கல்பம் நிவ்ருத்திப்பது மாத்திரத்தை எதிர்பார்த்திருக்கிறான் என்பதும் தெரிவிக்கப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'என்னுடைய அனுக்ரஹத்தினாலேயே' என்று. இப்படி நித்யங்களும், நைமித்திகங்களும், காம்யங்களுமாகிய கர்மங்கள் ஒருவிதப் புத்தி விஶேஷம், நியமம், முதலியவைகளோடு சேருவதினால் கர்மயோகம் என்கிற பேரை உடையவைகளாய்க் கொண்டு பரம்பரையாகப் பரிபூர்ணமாகப் பகவானை அடைவதளவாகப் பரிபாகத்தை உண்டாக்குகிறது என்று நிரூபித்து எவ்விதத்தினாலும் கர்மயோகமே உனக்குச் செய்யத்தக்கது என்று முடிக்கப்பட்டது. பிறகு அதைச் செய்யாவிடில் தோஷத்தைச் சொல்லுகிறார்—'அதசேத்' என்கிற பாதி ஶ்லோகத்தினால். ஹிதமான வார்த்தையை அனாதரவு செய்வதற்குக் காரணமாகிய அஹங்காரத்தைச் சொல்லுகிறார்—'அதாவது நானே எனக்குச் செய்யவேண்டிய' என்றாரம்பித்து. 'நஶ்ரோஷ்யஸி' என்பது கேட்டுக்கொண்டிருந்தபோதிலும் கேட்டதின் ப்ரயோஜனமில்லாமையைக் காட்டுகிறது. 'விநங்க்ஷ்யஸி' என்பதினால் அநாதிகாலமாகத் தொடர்ந்து வருகிற ஜீவாத்மாவின் நாசம் மேல் வரப்போகிற காலங்களிலும் தொடர்ந்திருக்கும் என்பது சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'நாசமடைந்தவனாகப் போகிறாய்' என்று. 1 'புத்திநாஶாத்ப்ரணஶ்யதி' என்று கீழ்ச்சொல்லப்பட்டதே ஞாபகப்படுத்தப்படுகிறது என்று தாத்பர்யம். தன் வார்த்தையைக் கேழ்க்காமலிருப்பதற்குக் காரணமாகிய நமக்கு வேறொரு ஆப்தர்களிருக்கிறார்கள் என்கிற எண்ணத்தை நிராகரித்துக்கொண்டு 'விநங்க்ஷ்யஸி' என்பது சாபவார்த்தையைப்போலிருக்கிறது என்று தெரி

---

1 பகவத்கீதை -2-63.

கப்போகிறாய். என்னைத்தவிர வேறொருவனும் எல்லா ப்ராணிகளினுடையவும் செய்யத்தகுந்த கார்யம், செய்யத்தகாத கார்யம் இவைகளைத் தெரிந்துகொண்டவனும் நியமிக்கிறவனுமில்லையல்லவா. 58

𑌯𑌦𑌹𑌂𑌕𑌾𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌨 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 ।
𑌮𑌿𑌥𑍍𑌯𑍈𑌷 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌸𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌨𑌿𑌯𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ 59

ப - ரை] 𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌂 - அஹங்காரத்தை, 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 - அடைந்து, 𑌨 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑍇 - நான் யுத்தம் செய்யப்போகிறதில்லை, 𑌇𑌤𑌿 - என்று, 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌯𑌦𑌿 - எண்ணுகிறாயேயானால், 𑌏𑌷𑌃 - இந்த, 𑌤𑍇 - உன்னுடைய, 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌃 - நிஶ்சயம், 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 - பொய், 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 - ப்ரக்ருதியானது, 𑌤𑍍𑌵𑌾𑌂 - உன்னை, 𑌨𑌿𑌯𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 - (யுத்தத்தில்) ஏவப்போகிறது. 59

பா] தனக்கு நன்மை தீமைகளைத் தெரிந்துகொள்ளுவதைப்பற்றித் தான்

விப்பதற்காகவும் தானே மிகவும் ஆப்தன் என்று சொல்லுவதினால் தன்னால் உபதேசிக்கப்பட்டது வாஸ்தவம் என்றும் சொல்லுவதில் அபிப்ராயத்தைத் தெரிவிக்கிறார்—'என்னைத்தவிர' என்றாரம்பித்து. உபதேசம் செய்கிற மற்றவர்கள் என்றால் பேசுவிக்கப்பட்டவர்களாய் அல்பவிஷயத்தை யுடையதாகிய கொஞ்சவார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். நானோவெனில் எல்லா அதிகாரிகளுக்கும் எல்லாவிதமுமான நன்மை தீமை இவைகளைத் தெரிந்து கொண்டவன். மற்றவர்களால் சொல்லப்பட்ட ஶாஸ்த்ரங்கள் எவைகளோ, அப்படி ஒருவராலும் சொல்லப்படாத வேதங்கள் எவைகளோ, அவைகள் எல்லாம் என்னுடைய உத்தரவாகையினாலேயே ப்ரமாணங்களாக இருக்கின்றன என்று தாத்பர்யம். 58

இப்படிப் பகவானுடைய உத்தரவைக் கேழ்க்காமலிருப்பதின் ப்ரயோஜனமாகிய யுத்தத்திலிருந்து திரும்புவது ஆத்ம நாசத்திற்குக் காரணமென்று சொல்லப்பட்டது. பிறகு யுத்தத்திலிருந்து திரும்பவேமுடியாது என்று சொல்லப்படுகிறது — இந்த ஶ்லோகத்தினால். மேலும் கர்மயோகம் என்றால் செய்யவேண்டியதாக இருக்கட்டும். ஆனாலும் யுத்தத்தைத் தவிர வேறு ஏதாவது கர்மயோகத்தைச்செய்து கொண்டிருக்கிற எனக்கு நாசமுண்டாகாது என்கிற ஆக்ஷேபத்தை நிராகரிக்கிறார் — இந்த ஶ்லோகத்தினால். யுத்தத்திலிருந்து திரும்புவதற்குத் தக்கபடி அஹங்காரத்தை விவரிக்கிறார் — 'தனக்கு நன்மை தீமைகளை' என்றாரம்பித்து. அஹங்காரத்தை யடைவதின் ப்ரயோஜன

ஸ்வதந்த்ரன் என்கிற அபிமானத்தை யடைந்து என்னுடைய உத்திரவை அநாதரித்து நான் யுத்தம் செய்யப்போகிறதில்லை என்று எண்ணுகிறாயே யானால் இந்த உன்னுடைய நான் ஸ்வதந்த்ரன் என்கிற எண்ணம் பொய்யாகப்போகிறது ஏனெனில் ப்ரக்ருதி உன்னை யுத்தத்தி லேவப்போகிறது. நான் ஸ்வதந்த்ரன் என்பதில் பயந்தவனாய் மூடனாகிய உன்னை ப்ரக்ருதி ஏவப்போகிறது. 59

பா - அ] அதையே நிரூபிக்கிறார்—

ஸ்வபாவஜேந கௌந்தேய நிபத்³த⁴꞉ ஸ்வேந கர்மணா ।
கர்தும் நேச்ச²ஸி யந்மோஹாத் கரிஷ்யஸ்யவஶோ(அ)பி தத் ॥

ப - ரை] கௌந்தேய - அர்ஜுந, ஸ்வபாவஜேந - ஸ்வபாவத்தினாலுண்டாகிய, ஸ்வேந - தன்னுடையதாகிய, கர்மணா - கர்மத்தினால், நிபத்³த⁴꞉- கட்டப்பட்டவனாய்க்கொண்டு, யத் - எந்தக் கார்யத்தை, மோஹாத் - அஜ்ஞானத்தினால், கர்தும் - செய்ய, நேச்ச²ஸி - இச்சிக்கிறாயில்லையோ, தத் - அந்தக் கார்யத்தை, அவஶ꞉-பரவசனாய்க்கொண்டு, கரிஷ்யஸி - செய்யப்போகிறாய். 60

த்தைச் சொல்லுகிறார்—'என்னுடைய உத்திரவை அநாதரித்துவிட்டு' என்று. 'ந ஶ்ரோஷ்யஸி' என்று கீழ்ச் சொல்லியதற்கும் இதுவே அர்த்தம். 'வாஷ்டீ' என்பதினால் சொல்லப்படுகிற அர்த்தத்தைச்சொல்லுகிறார்—'நான் ஸ்வதந்த்ரன் என்கிற எண்ணம்' என்று. நான் ஸ்வதந்த்ரன் என்கிற புத்தியை உள்ளடக்கிக்கொண்டிருக்கிற எண்ணம் என்றுவது நான் ஸ்வதந்த்ரன் என்கிற புத்தியினால் உண்டாகிற எண்ணம் என்றுவதர்த்தம். இவை இரண்டும் 'ந யோத்ஸ்யே' என்பதினாலும், 'அஹம் காரமாஶ்ரித்ய' என்பதினாலும் குறிக்கப்பட்டது. 'ப்ரக்ருதி...ஏவப்போகிறது' என்பது உசிதமல்ல, அது அறிவில்லாததாகையினாலும், ஏவுகிறதென்பது அறிவை உடையவன் செய்கிற வ்யாபாரமாகையினாலும் என்கிற ஆக்ஷேபத்தை இது இவனை நிந்திப்பதற்காகச் சொன்னது என்கிற அபிப்ராயத்தினால் பரிஹரிக்கிறார்—'நான்ஸ்வதந்ரன்என்பதில்' என்றாரம்பித்து. என்னுடையஉத்திரவுப்படி செய்தாயேயாகில்உனக்கு வரவேண்டியதெல்லாம்ஸர்வஜ்ஞனாகிய என்னுடையபொறுப்பாய்விடும். என்னுடைய உத்திரவைத் தாண்டினாயே யானால் நான் உதாஸீநனாக இருக்கும்பொழுது ப்ரக்ருதிக்கு வசப்பட்ட நீ உனக்குத் தீமையைக் கொடுக்கக்கூடிய கார்யங்களிலேயே ப்ரவ்ருத்திக்கப் போகிறாய் என்று தாத்பர்யம். 59

பா] க்ஷத்திரியனுக்கு ஸ்வபாவத்தினாலுண்டாகிய கர்மம் சௌர்யம். ஸ்வபாவத்தினாலுண்டாகிய சௌர்யமாகிற கர்மத்தினால் கட்டப்பட்டவனாய்க் கொண்டு அதினாலேயே பரவசனாய்க்கொண்டும் அயலாரினால் செய்யப்படுகிற அவமானத்தைப் பொறுக்காதவனாய் நீயே அப்படிப்பட்ட யுத்த

தா] புனருக்தியைப் பரிஹரிப்பதற்காகச் சொல்லுகிறார்—இதையே நிரூபிக்கிறார்' என்று. ப்ரக்ருதி ஏவுகிற விதத்தை அதற்கு நடுவில் நேரிடக்கூடிய வ்யாபாரத்தைக்கொண்டு நிரூபிக்கிறார் என்றர்த்தம். ப்ரக்ருதி என்று சொல்லப்பட்ட அர்த்தமே 'ஸ்வபாவ' என்னும் பதத்தினால் அனுவதிக்கப்படுகிறது. 'ஸ்வபாவ' என்னும்பதம் 1 'ஸ்வபாவோऽத்யாத்மமுச்யதே' என்கிற இடத்தில் வ்யாக்யானஞ் செய்யப்பட்டது. ப்ரக்ருதி என்னும் ஶப்தம் இவ்விடத்தில் தேஹம் முதலியவைகளாக மாறி இருக்கிற ப்ரக்ருதியைச் சொல்லுவதாக இருந்தபோதிலும் 'ஸ்வபாவ' என்னும் பதம் முன்பு சொன்ன அர்த்தத்தையே சொல்லுகிறது. 2 'ஶௌர்யம் தேஜ:' என்றிவை முதலியதை ஜ்ஞாபகப்படுத்துகிறார்—'க்ஷத்திரியனுக்கு' என்றாரம்பித்து, 'ஸ்வஜ' என்பதற்கு க்ஷத்திரியனுக்கே அஸாதாரணமான என்றர்த்தம். 'ஶௌர்யம்' ஆவது பயமில்லாமல் ப்ரவேசிக்கும்படியான ஸாமர்த்தியம். இத்தால் இதினாலுண்டாக்கப்படுகிற கர்மம் இவ்விடத்தில் வாஸனையின் பலத்தினால் மறுபடி அதிலே ஆசை உண்டாகிறபடியினாலே ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமென்று சொல்லப்பட்டது. என்னுடைய வார்த்தையை அனாதரவு செய்தபோதிலும் வேறுவிதக் காரணத்தினால் நீ யுத்தத்தைச் செய்யவே போகிறாய் என்பது 'அபி' என்னும் பதத்தின் அர்த்தம். இந்த அபிப்ராயத்தினால்சொல்லுகிறார்-'நீயே' என்று. 'அயலாரினால் செய்யப்படுகிற அவமானத்தைப் பொறுக்காதவனாய்' என்கிற விஶேஷணம் பரவசனாயிருப்பவனுக்குக் கர்மங்களில் கர்த்தாவாக இருக்கை எப்படி ஸம்பவிக்கும்? என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரிப்பதற்காக. பொறாமை, செய்யவேண்டுமென்கிற ஆசை முதலிய சண்டையை விருத்திசெய்யக்கூடிய குணங்களுக்குப் பாவசனாயிருக்கைகர்த்தாவாக இருப்பதற்குபயோகமுள்ளது தான் என்று தாத்பர்யம். 'கர்தும் நேச்சஸி யந்மோஹாத்' என்று வாக்யத்திற்குள் மற்றொரு வாக்யம் சொல்லியிருக்கிறது பரிஹாஸம், தயவு, இவை இரண்டின் ஸம்பந்தத்தினால். அதை விவரிக்கிறார்—'எந்தயுத்தத்தை' என்றாரம்பித்து, தகுந்த ஸமயத்தில் தன்னுடைய வர்ணாஶ்ரம தர்மமாகிய யுத்தத்தை யனுஷ்ட்

---

1 பகவத்கீதை - 8 - 41. 2 பகவத்கீதை 18 - 43.

தைச் செய்யப்போகிறாய், எந்த யுத்தத்தை இப்பொழுது அஜ்ஞானத்தினால் செய்ய விரும்புகிறாயில்லையோ. 60

பா - அ] எல்லா ப்ராணிகளின் கூட்டமும் எல்லாவற்றிற்கு மீச்வரனாகிய என்னால் முன் செய்த கர்மங்களுக்குத் தக்கபடி ப்ரக்ருதியை யனுஸரிப்பதில் நியமிக்கப்பட்டிருக்கிறது. இதைக் கேள்—

ஈச்வர꞉ ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே(அ)ர்ஜுந திஷ்டதி |
ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா || 61

ப - ரை] அர்ஜுந - ஓ! அர்ஜுந, ஈச்வர꞉ - எல்லாவற்றிற்கு மீச்வரனாகிய பகவான், ஸர்வபூதாநாம் — எல்லா ப்ராணிகளினுடையவும், ஹ்ருத்தேசே - ஹ்ருதயமாகிற இடத்தில், யந்த்ராரூடாநி-யந்த்ரத்திலேறி இருக்கிற, ஸர்வபூதாநி - எல்லா ப்ராணிகளையும், மாயயா - தன்னுடையதாகிய ப்ரக்ருதியினால், ப்ராமயந் - சுற்றிக்கொண்டு, திஷ்டதி — இருக்கிறான். 61

டா] எல்லாவற்றையும் நியமிக்கிறதையே ஸ்வபாவமாக வுடைய வாஸுதேவன், எல்லா ப்ராணிகளினுடையவும் எல்லாவித ப்ர

டிப்பதை விட்டுவிட்டு ஸமயம் தாண்டின பிறகு அயலாருடைய அவமானத்தினால் வெட்கத்தை யடைந்தவனாய்க்கொண்டு ஜலங்கள் போன பிறகு அணைகட்டுவதைப்போலச் செய்யப்போகிறாய் என்பது நிகழ்காலமாயும் எதிர்காலமாயும் சொல்லியிருப்பதற்குத் தாத்பர்யம் என்றபிப்ராயம். 1 'நசேத் த்வமஹங்காராத்' என்கிற இடத்திலேபோல உபதேசம் செய்யப்பட்ட அர்த்தம் மனதில் ஏறாமை இவ்விடத்தில் 'மோஹ' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'அஜ்ஞானத்தினால்' என்று. 60

கீழ்ச்சொல்லப்பட்ட அர்த்தத்தை ஸ்தாபிப்பதற்காக நீ பேசாமலிருந்தால் நான் எப்படி ப்ரவ்ருத்தி செய்வேன். அப்படி நான் ப்ரவ்ருத்தி செய்தால் நீ எல்லாவற்றிற்கும் காரணம் என்பது எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபம் இந்த ஶ்லோகத்தினால் பரிஹரிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்—'எல்லா ப்ராணிகளின் கூட்டமும்' என்று. கீழ்ச்சொல்லப்பட்ட ஸ்வபாவத்திற்கு வசப்பட்டிருக்கையும் என்னாலேயே செய்யப்பட்டது. நான் எல்லாவற்றிற்கும் பொதுவான காரணமாகையினால் ஒரு விரோதமுமில்லை என்று தாத்பர்யம். 'ஈச்வர꞉' என்னும் பதம் இவ்விடத்தில் 'ஈஷ்டே' என்னும் பதம் முதலிய

1 பகவத்கீதை - 18 - 58.

வ்ருத்தி நிவ்ருத்திகளுக்குக் காரணமாகிய ஜ்ஞானம் உண்டாகிற இடத்தில் இருக்கிறான். என்ன செய்துகொண்டிருக்கிறான்? அதை எப்படிச் செய்கிறான்? என்னில் தன்னாலேயே செய்யப்பட்ட தேஹம், இந்த்ரியங்

வைகளைப்போலத் தாழ்ந்த ஈஶ்வரர்களை இடுகுறிப் பெயராய்ச் சொல்லுகிறது என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரிப்பதற்காகக் காரணப் பெயர் என்பதையும் அந்த அர்த்தம் நிறைந்திருக்கிற வஸ்துவின் பேரையும் காட்டுகிறார்—'எல்லாவற்றையும் நியமிப்பதையே' என்றாரம்பித்து. சிலவற்றைக் குறித்து ஈஶ்வரனாயிருக்கிற வஸ்து எல்லாவற்றிற்கு மீஶ்வரனாயிருக்கும் வஸ்து இவைகளுக்குள் வேறொரு பதத்துடன் சேராத பொதுவாகிய 'ஸர்வபூதாநாம்' என்னும் பதம் எல்லாவற்றிற்கு மீஶ்வரனையே காட்டும் என்கிற நியாயத்தினால் இங்கு ஈஶ்வரனாயிருக்கை எல்லா வஸ்துக்களையும் பற்றியது என்பது ஏற்பட்டது. அப்படி நியமிப்பதும் அவைகளுக்குள் வ்யாபித்துக்கொண்டிருப்பதினால் என்பது 'வாஸுதேவ' என்னும் பதத்தினால் காட்டப்பட்டது. சொல்லுகிறவனாகிய கண்ணனையே இந்த 'ஸர்வபூதாநாம்' என்னும்பதம் சொல்லுகிறது என்று தெரிவிப்பதற்காக 'வாஸுதேவ' என்னும் பதம். எல்லாவற்றிற்கு மீஶ்வரனாகிய என்னால் என்றல்லவோ கீழே சொல்லப்பட்டது. எல்லா இடங்களிலும் வ்யாபித்துக்கொண்டிருக்கிற பகவானைப்பற்றி ஹ்ருதயமாகிற இடத்தில் விசேஷமாக இருக்கிறான் என்று சொல்லியிருப்பது எதற்காக என்றாக்ஷேபம் வருகிறபடியினால் அதற்கு ஸமாதானம் சொல்லுகிறார்.—'எல்லாவித ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு' என்றாரம்பித்து. இத்தால் ஹ்ருதயத்தி லிருப்பதற்கு 'ஹ்ருத்தேஶே' என்று சொல்லப்படுகிற விஷயத்தில் உபயோகமுண்டென்று காட்டப்பட்டது. 'எப்படி' என்பதற்கு எந்தக் கருவியைக்கொண்டு என்று தாத்பர்யம். 'மாயயா' என்பது அதற்குப் பதில். 'என்ன செய்துகொண்டிருக்கிறான்' என்பதற்கு 'ஸர்வபூதாநாம்' என்னும் பதத்தினால் எல்லாவற்றையும் நியமிக்கிறான் என்பதைக்கொண்டு நிரூபிக்கக்கூடியவனைத் தெரிந்துகொள்ளப்பட்ட இவன் எப்படிப்பட்ட நியமனத்தைச் செய்கிறான் என்றர்த்தம். 'ஹ்ருத்தேஶே' என்றாரம்பித்துக் கடைசிவரையில் ஒரே வாக்யம். அதில் முன்பாதியிலிருக்கிற 'திஷ்டதி' என்னும் பதத்தைச் சேர்த்தந்வயம் சொல்லிக்கொள்ள வேண்டியது. முன்பு சொல்லப்பட்ட எல்லா அர்த்தங்களையும் யோசித்து 'யந்த்ர, மாய,' முதலிய பதங்களின் அர்த்தத்தை விவரிக்கிறார்—'தன்னாலேயே செய்யப்பட்ட' என்றாரம்பித்து. 'ஸ்தித' என்னும் பதத்தினாலும், ஹ்ருதயமாகிய இடத்தைச் சொல்லியிருப்பதினாலும் புரு

கள் என்கிற தசையையுடைய ப்ரக்ருதி என்று பேருடைய யந்த்ரத்திலேறிக்கொண்டிருக்கிற எல்லா ப்ராணிகளையும் தன்னுடையதாயும் ஸத்வம் முதலிய குணங்கள் நிறைந்ததுமாயுமிருக்கிற மாயையினால்

ஷன் ப்ரவ்ருத்திப்பதற்குத் தகுந்ததாயிருப்பதினாலும் வஸ்துவின் ஸ்வபாவத்தினாலும் ‘ஆரூட’ என்னும் பதம் இவ்விடத்தில் தேஹம், இந்த்ரியங்கள், இவைகளின் சேர்க்கையைச் சொல்லுகிறது. மஹானுக்கு மேல்பட்டு ‘அவ்யக்தம்’ என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட ஶரீரம் அவ்விடத்திலேயே 1 ‘ஶரீரத்தைத் தேராக அறி’ என்றர்த்தமுள்ள வாக்யத்தினால் தேர் என்று பேருடைய யந்த்ரமாக நிரூபித்துச் சொல்லப்பட்டது என்று தெரிவிப்பதற்காக ‘தேஹம் இந்த்ரியங்கள் என்கிற தசையையுடைய’ என்று சொல்லப்பட்டது. அப்படியே ஶ்ருதியிலும் 2 ‘எல்லாவற்றிற்கும் உயிரோடிருப்பதற்குக் காரணமாயும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயுமிருக்கிற அந்த ப்ரக்ருதியாகிற சக்ரத்தில் ஜீவாத்மா சுற்றப்படுகிறான்’ என்றும், ‘தன்னையும் தன்னை நியமிக்கிறவனாகிய பரமாத்மாவையும் வெவ்வேறாகத் தெரிந்துகொண்டு அந்தப பகவானால் ப்ரீதி செய்யப்பட்டவனாய் மோக்ஷத்தை யடைகிறான்’ என்றுமர்த்தமுள்ள வாக்யங்கள் சொல்லப்படுகின்றன. இத்தால் யந்திரத்திலேறியிருக்கிறது போல என்று ‘இவ’ என்னும் பதம் லோபித்திருக்கிறது என்று வ்யாக்யானம் செய்தவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள். ‘தன்னுடையதாகிய’ என்பதற்கு முதலில் 3 ‘குணமயீ மமமாயா’ என்றல்லவோ சொல்லப்பட்டது. ஶ்ருதியிலும் 4 ‘மாயையுடையவன் இந்தப்ரக்ருதியிலிருந்து இந்தப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கிறான். அதில் மற்றொருவன் மாயையினால் கட்டப்பட்டிருக்கிறான். மாயையையாவது ப்ரக்ருதி. மாயையையுடையவனோ எல்லாவற்றிற்கு மீஸ்வரனென்றறியவேண்டும்’ என்றர்த்தமுள்ள வாக்யமுமிருக்கிறது என்று தாத்பர்யம். ஜீவாத்மாவிற்குக் கர்த்ருத்வம் முதலியதில்லை என்பதைப்பரிஹரிப்பதற்காக—‘குணங்களுக்குத் தக்கபடி’ என்று சொல்லப்பட்டது. ஜீவாத்மாவை ஈஶ்வரன் பிசாசு பிடித்தவர்களைப்போல அவசமாக ப்ரவ்ருத்திக்கச் செய்கிறதில்லையல்லவா. பின்னை எப்படி என்னில் ஸத்வம் முதலிய குணங்கள் நிறைந்த வஸ்துக்களை முன்னே வைத்துக்கொண்டு முன்பேற்பட்ட வாஸனையினால் உண்டாக்கப்பட்ட ஆசைகளை அவைகளிடங்களில் உண்டாக்கி அதின் வழியாக

---

1 கடவல்லீ-3-3. 2 ஶ்வேதாஶ்வதரம் - 1 - 6.
3 பகவத்கீதை - 7 - 14. 4 ஶ்வேதாஶ்வதரம் - 4 - 9 - 10.

குணங்களுக்குத் தக்கபடி ப்ரவ்ருத்திக்கும்படி செய்துகொண்டு இருக்கிறான் என்றர்த்தம். முன்பும் இது * 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநம் ச' என்றும், † 'மத்த: ஸர்வம் ப்ரவர்ததே' என்றும் சொல்லப்பட்டது. ‡ 'எவன் ஆத்மாவிலிருந்து கொண்டு' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளும் இப்படியே சொல்லுகின்றன. 61

டா - அ] இந்த மாயை நிவ்ருத்திப்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்—

தமேவ ஶரணம் கச்ச ஸர்வபாவேந பாரத ।
தத்ப்ரஸாதாத்பராம் ஶாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம் ॥ 62

ப - ரை] பாரத - ஓ! அர்ஜுந, தமேவ — அந்தப் பகவானையே, ஸர்வபாவேந - எல்லாவித அபிப்ராயத்தினாலும், ஶரணம்-ஶரணமாக, கச்ச — அடை, தத்ப்ரஸாதாத் - அவனுடைய அனுக்ரஹத்தினால், பராம்- உயர்ந்ததாகிய, ஶாந்திம் - ஶாந்தியையும், அதாவது ஸம்ஸாரபந்தங்களின் ஓய்தலையும், ஶாஶ்வதம்-அழிவில்லாத, ஸ்தாநம் - இடத்தையும், ப்ராப்ஸ்யஸி - அடையப்போகிறாய். 62

டா] எந்தக் காரணத்தினாலிப்படியோ ஆகையினால் எல்லாவற்றையும்

ப்ரவ்ருத்திக்கச் செய்கிறானாகையினால் விரோதமில்லை. சுற்றிக்கொண்டு என்கிற இடத்தில் ப்ரவ்ருத்தி செய்வதற்குக் காரணமாக அஜ்ஞானத்தையுண்டாக்குவதும் உள்ளே அடங்கி இருக்கிறது, பதத்திற்கு நேராக அது அர்த்தமல்ல என்று சொல்லுகிறார்—'ப்ரவ்ருத்திக்கும்படி செய்துகொண்டு' என்று. 'எவன் ஆத்மாவில் இருந்துகொண்டு' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் சொல்லப்படுகிற அந்தர்யாமி ஸுபாலோபநிஷத்தில் 1 'இவன் எல்லாப்ராணிகளுக்கும் அந்தராத்மாவாயும், கர்மஸம்பந்தங்களில்லாதவனாயும், உயர்ந்தவனாயுமிருக்கிற ஒரே தேவனாகிய நாராயணன்' என்றர்த்தமுள்ள வாக்யத்தினால் நாராயணன் என்று விஶேஷித்துச் சொல்லப்பட்டான். 61

தா] ஸ்வதந்த்ரனாகிய பகவான் தன்னுடைய மாயையினால் எவும்பொழுது பராதீனனாகிய ஜீவன் அதை எப்படித் தாண்டமுடியும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறது 'தமேவஶரணம்' என்கிற ஶ்லோகம் என்று சொல்லுகிறார்—'இந்தமாயை நிவ்ருத்திப்பதற்கு' *என்றாரம்பித்து.* 'எந்தக் காரணத்தினால் இப்படியோ'*என்றதற்கு வேறு*

---

* *பகவத்கீதை* - 15 - 15.
† *பகவக்கீதை* - 10 - 8.
‡ *ப்ருஹதாரண்யகம்* -5-7-12.
1 *ஸுபாலோபநிஷத்.*

நியமிக்கிறவனுயும் தன்னை அடைந்தவர்களிடத்தில் ப்ரீதியினுல் உனக்குத் தேரோட்டுவதில் இருப்பவனுயும், இப்படிச் செய் என்று உத்திரவு செய்கிறவனுயுமிருக்கிற அந்தப் பரமாத்மாவையே எல்லாவித அபிப்ராயத்திலும் ஸரணமாக அடை, அதாவது எவ்விதத்திலும் அவனை அனுஸரி. அப்படிக்கில்லாமல் போனபோதிலும் அவனுடைய மாயையினுல் உண்

விதமாகத் தன்னுடைய புத்தியினுல் நிவ்ருத்தி செய்ய முடியாதாகையினுல் என்றர்த்தம். அன்றிக்கே எல்லாம் ஈஸ்வரனுக்கு வசப்பட்டதாகையினுல் என்றர்த்தமாகவுமாம். 'தமேவ' என்பதினுல் என்னுடைய மாயையை நிவ்ருத்தி செய்ய மற்ற எவன் ஸக்தியுள்ளவனுவான் என்று காட்டப்பட்டது என்று சொல்லுகிருர்—'எல்லாவற்றையும் நியமிக்கிறவனுயும்' என்ருரம்பித்து. மிகவும் ஸ்வாதீனனுகிய அந்தப் பரமாத்மாவே இப்பொழுது ரதிகனுகிய உனக்கு ஸாரதியாக இருந்துகொண்டு பராதீனனுய் உனக்கு உத்திரவு செய்கிருன் என்கிற அபிப்ராயத்தினுல் 'தன்னை அடைந்தவர்களிடத்தில்' என்பது முதலியது சொல்லப்பட்டது. இப்படி அவனை அனுஸரிக்கவேண்டியதென்பதற்காக மேன்மையும் ஸௌலப்யமும் காட்டப்பட்டது. 'ஸர்வ' என்னும் பதம் இவ்விடத்தில் மனதின் வ்யாபாரத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிருர்— 'எல்லாவித அபிப்ராயத்திலும்' என்று. எல்லாவிதமாகவும் என்றர்த்தமாகவுமாம். அப்பொழுது 1 'ஸர்வஸாதாரண்யம்' என்று கீழ்ச் சொல்லிய விதமாக அந்தர்யாமியாகவும், உபதேசம் செய்கிறவனுகவும், அடையத்தக்கவனுகவும், அடைவிக்கிறவனுகவும் இருக்கிறவன் இவன் ஒருவனே என்கிற அனுஸந்தானம் சொல்லப்படுகிறதாகவுமாம். இந்தப் பக்ஷத்தில் 'ஸரண' என்னும் பதம் உபதேசம் முதலியவைகளைச்செய்து அதின் வழியாகக் காப்பாற்றுகிறவன் என்னுமர்த்தத்தைச் சொல்லுகிறது. இந்த வழியாகவே உபாயமாகிருன் என்னுமர்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம். உபதேசம் செய்ததைப் போல அனுஷ்டிப்பதே இவ்விடத்தில் ஸரணமாகவடைதல் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—அதாவது எவ்விதத்திலும் அவனை அனுஸரி' என்று. 2 'நஸ்ரோஷ்யஸி', 3 'நயோத்ஸ்ய இதி' என்று கீழ்ச்சொல்லியதை மறுப்பதில் தாத்பர்யமாகையினுல் அனுஸரிப்பதே இவ்விடத்தில் ஸரணமாக அடைவது என்று தெரிவிப்பதற்காக அப்படிச் செய்யாவிடில் தோஷமுண்டாகும் என்று கீழ்ச் சொல்லியதுடன் சேர்த்துச் சொல்லுகிருர்—'அப்படிக்கில்லாமல் போனபோ

1 பகவத்கீதை. 2 பகவத்கீதை - 18-58-8 3 பகவத்கீதை - 18-59.

டாக்கப்பட்ட அஜ்ஞானத்தினுல் யுத்தம் முதலியவைகளைச் செய்வது உன்னுல் விடமுடியாது அப்படிச் செய்வாயாகில் நாசமடைந்தவனுகப் போகிருய். ஆகையினுல் அந்தப் பரமாத்மா சொல்லியவிதமாக யுத்தம் முதலியவைகளைச் செய் என்றர்த்தம். இப்படிச் செய்துகொண்டிருந்தாயே யாகில் அவனுடைய அனுக்ரஹத்தினுல் கர்மங்களினுலுண்டாகிய எல்லா

திலும்' என்ருரம்பித்து. இந்த ஸந்தர்ப்பத்திற்குபயோகமாகையினுல அனுஸரிப்பதென்பது இன்னதென்று விஶேஷித்துக் காட்டிக்கொண்டு தன்னுடைய அபிப்ராயத்தைச் சொல்லி முடிக்கிருர்—'ஆகையினுல் அந்தப்பரமாத்மா சொல்லியவிதமாக' என்ருரம்பித்து. தன்னுடையவர்ணுஶ்ரமங்களுக்குத் தகுந்ததாகிய அவனுடைய உத்திரவை அனுஸரிப்பதே யல்லவோ அவனுக்கு ப்ரீதியை யுண்டாக்கக்கூடிய வ்யாபாரம் என்று தாத்பர்யம். அவன் சொன்னதை அனுஸரிப்பது அவனுடைய அனுக்ரஹத்திற்குக் காரணமாகையினுல் மேல் பாதியோடு சேர்த்துச் சொல்லுகிருர்—'இப்படிச் செய்து கொண்டிருந்தாயேயாகில்' என்ருரம்பித்து. 1 'மத்ப்ரஸாதாத்' என்று கீழ்ச்சொன்ன அர்த்தமே 'தத்ப்ரஸாதாத்' என்றிங்கு சொல்லப்படுகிறது. அவ்விடத்தில் சொல்லப்பட்ட எல்லாக்கஷ்டங்களையும் தாண்டுவது இங்கு 'பராம்ஶாந்திம்' என்று சொல்லப்படுகிறது. ஶாந்திக்கு மேன்மையாவது எவ்விதமான துக்கம் நீங்கிற்ருே அதைப்போன்ற துக்கத்தை உண்டாக்கக்கூடிய காரணம் இனி இல்லாததினுல் மறுபடியும் இதைப்போன்ற துக்கம் உண்டாகாமலிருக்கை என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—'கர்மங்களினுலுண்டாகிய' என்ருரம்பித்து. இதனுல் அநிஷ்டங்கள் நிவ்ருத்திபபது சொல்லப்பட்டது. 'ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி' என்றிஷ்டத்தை அடைவது சொல்லப்படுகிறது. 'ஶாஶ்வத' என்னும் பதத்தினுல் ப்ரம்மா முதலியவர்களின் ஸ்த்தானம் விலக்கப்படுகிறது. மிகவும் ஸூக்ஷ்மமாகிய அவஸ்த்தையையுடைய மூல ப்ரக்ருதியே முக்தர்களினுல் அடையவேண்டிய இடமென்று சிலர் சொல்லுகிருர்கள். ஸத்யலோகம் முதலியவைகளுக்குள்ளேயே விஷ்ணுவின் ஸ்த்தானம் என்றுசிலர்சொல்லுகிருர்கள். ஆகையினுல் 'ஸ்தாநம்' என்னும் பதத்திற்கு முக்கியமான அர்த்தத்தைச் சொல்லுவதற்காகவும் வாதிகளை நிராகரிப்பதற்காகவும் ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத இடத்தை ஶ்ருதிகளைக்கொண்டு நிரூபிக்கிருர்—'எந்த இடம்' என்ருரம்பித்து. வேதத்தை அத்யயனம் செய்த

---

1 பகவத்கீதை 18-58.

ஸம்ஸாரபந்தங்களின் விடுதலையும் அழிவில்லாத இடத்தையும் அடையப் போகிறாய். எப்படிப்பட்ட இடம் * 'விஷ்ணுவினுடைய அந்த உயர்ந்த ஸ்த்தானத்தை ஸூரிகள் எப்பொழுதும் பார்க்கிறார்கள்' என்றும், † 'அந்த மஹாத்மாக்கள் அந்த ஸ்த்தானத்தை அடைகிறார்கள், எந்த இடத்தில் அநாதியாகிய தேவர்கள் இருக்கிறார்களோ' என்றும், 'எந்த இடத்தில் முதலிலேயே பிறந்தவர்களாயும் அநாதியாயுமிருக்கிற ஸூரிகளிருக்கிறார்களோ' என்றும், ‡ 'ஸ்வர்க்கத்திற்கு மேல் ஸூக்ஷ்மமான இடத்தில் வைக்கப்பட்டது' என்றும், § 'எவன் இந்த லோகங்களுக்கு யஜமானனோ அவன் மேலான ஆகாசத்திலிருக்கிறான்' என்றும், ¶ 'பிறகு இந்த ஸ்வர்க்கத்திற்கும் மேலான இடத்தில் எந்தத் தேஜஸ்ஸு ப்ரகாசிக்கிறதோ' என்றும்,

---

வர்களுக்கு அதிக நம்பிக்கை உண்டாவதற்காக 'அநேகம் ஶ்ருதிகளினால்' என்று சொல்லப்பட்டது. இத்தால் 1 'இரண்டாவது வஸ்துவில்லாத ஸத்து ஒன்றே இருந்தது' என்றர்த்தமுள்ள வாக்யம் முதலிய காரண ஶ்ருதிகள் மேலே ஸ்ருஷ்டிக்கப்போகிற கார்யமாகிற ப்ரபஞ்சங்கள் மாத்திரம் இல்லை என்பதையே அநேகம்ஶ்ருதிகளுக்குவிரோதமில்லாமைக்காகச் சொல்லுகின்றன என்பது தெரிவிக்கப்பட்டது. 'விஷ்ணுவினுடைய அந்த' என்றாரம்பிக்கும் ஶ்ருதிவாக்யம் தனித்தனியே எல்லாக்காலங்களிலும் அனுபவித்துக்கொண்டிருக்கிற அநேகம் நித்ய ஸூரிகளோடு கூடிய இடத்தை விதிக்கிறது. இந்த வாக்யத்தில் சொல்லப்படுகிற எல்லா அர்த்தமும் இதற்குமுன் ஒரு ப்ரமாணத்தினாலும் ஏற்படவில்லை. ஆகையினால் 'விஷ்ணுவினுடைய' என்றுவேறு சொல்லி இருப்பதினால் பகவானுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது என்பது உசிதமல்ல. 'எந்த இடத்தில்' என்றர்த்தமுள்ள வாக்யத்திலும் 'தேவர்கள் இருக்கிறார்களோ' என்கிற இடத்தில் ஒருகாலத்தைக் குறிக்காமையினால் எப்பொழுதும் இருக்கிறார்கள் என்பதேற்பட்டது. இந்தக் கீதையிலும் 'ஶாஶ்வதம் ஸ்தானம்' என்று சொல்லப்பட்டது பரமாத்மாவினுடைய ஸ்த்தானம்தான் என்பது வேறுஸந்தர்ப்பத்தில் வ்யக்தமாக ஏற்பட்டிருக்கிறது. 2 'ரம்யாணி காமசாராணி விமாநாநி ஸபா

---

* ருக்வேதம் - 1-2-7.   † புருஷஸூக்தம்.
‡ தைத்திரீயம், நாராயணம்.   § தைத்திரீயம், நாராயணம்.
¶ சாந்தோக்யம் - 6 - 16 - 7.   1 சாந்தோக்யம் - 6-2-1.

2 *பாரதம் - சாந்திபர்வம் - மோக்ஷதர்மம் - 196 - 4. ரம்யாணி - அழகான, காமசாரணி - இஷ்டப்படி ஸஞ்சரிக்கக்கூடியவைகளான, விமானநி - விமானங்களும், ததா - அப்படியே, ஸபா:-ஸபைகளும், விவிதா:-அநேகவிதங்களான, ஆக்ரீடா:-விளையாடுமிடங்களும், அம்லோதகா:-தெளிந்த ஜலங்களையுடைய, பத்மின்*

‖ 'அவன் இந்த ஸம்ஸாரமண்டலத்திற்கு அக்கரையாகிய விஷ்ணுவின் அந்தப் பரமபதத்தை அடைகிறான்' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்கள் முதலிய அநேகம் ஶ்ருதிகளினால் சொல்லப்படுகிறதோ. 62

இதி தே ஜ்ஞாநமாக்யாதம் குஹ்யாத் குஹ்யதரம் மயா |
விம்ருஶ்யைதத் அஶேஷேண யதேச்சஸி ததா குரு ‖ 63

ப-உரை] இதி - இவ்விதமாக, தே - உனக்கு, மயா - என்னால், குஹ்யாத் - ரஹஸ்யமான அர்த்தத்தைவிட, குஹ்யதரம் - மிகவும் ரஹஸ்யமாகிய. ஜ்ஞாநம் - ஜ்ஞானமானது, ஆக்யாதம் - சொல்லப்பட்டது, ஏதத் - இதை, அஶேஷேண - முழுமையும், விம்ருஶ்ய-பராமர்ஶித்து, யதேச்சஸி - எப்படி ஆசைப்படுகிறாயோ, ததா - அப்படி, குரு - செய். 63

பா] இவ்விதமாக உனக்கு மோக்ஷத்திலாசையுடைவர்களினால் அறிய

ஸ்த: | ஶக்ராத்யா விவிதா ராஜந் ஸம்ஸ்ருஷ்டௌ ஸ்தானகா: | ஸர்வ ஏதே நிரயாஸ்தாத ஸ்தானஸ்ய பரமாத்மன: |' என்றுசொல்லப்பட்டது. பகவானாகிய பாராசரரும் 1 'ஏகாந்திந: ஸதா ப்ரஹ்மத்யாயினோ யோகினோ ஹி யே | தேஷாம் தத்பரமம் ஸ்தானம் யத்வை பஶ்யந்தி ஸூரய:‖' என்று சொல்லியிருக்கிறார். 62

இப்படி அர்ஜுநனுக்கு யுத்தத்தில் உத்ஸாஹத்தை உண்டு பண்ணுவதென்கிற வ்யாஜத்தினால் வேதாந்த ஶாஸ்த்ரங்களின் அர்த்தங்கள் எல்லாவற்றையும் உபதேசம் செய்து முடிவில் யுத்தம் செய்யவேண்டியதென்று ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு 2 'ஸஹி த

யஶ்ச - தாமரையோடைகளும், ராஜந்-ஓ! ராஜாவே (ஸ்வர்க்கம் முதலிய லோகங்களிலிருக்கின்றன), ஏதேவை-இவைகளெல்லாம், தாத - ஓ! குழந்தாய், பரமாத்மன:-பரமாத்மாவினுடைய, ஸ்தானஸ்ய - இடத்திற்கு, நிரயா:-நரகங்கள்.

‖ கடவல்லீ - 1 - 3 - 9.

1 விஷ்ணுபுராணம் - 1-6 - 39. ஸதா-எப்பொழுதும், ப்ரம்மா - பரப்ரம்மத்தை, த்யாயின:-த்யானம் செய்துகொண்டிருக்கிற, ஏகாந்தின:-ஒரே நிஶ்சயத்தையுடைய, 'யோகிந:-யோகிகள், யே - எவர்களோ, தேஷாம் - அவர்களுக்கு, தத்-அப்படிப்பட்ட, பரமம்-மிகவும் உயர்ந்ததாகிய, ஸ்தானம்-இடம்கிடைக்கிறது, யத்வை-எந்த ஸ்தானத்தை, ஸூரய:-நித்ய ஸூரிகள், பஶ்யந்தி-பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ.

2 பாரதம் - அநுகீதை - ஸ:-அந்த, தர்ம:-தர்மமானது, ப்ரம்மண:-பரப்ரம்மத்தின், பதவேதனே-ஸ்தானத்தை அறிவதில், ஸுபர்யாப்தோஹி-போதுமானதல்லவா.

வேண்டியதாயும் ரஹஸ்யங்களான அர்த்தங்கள் எல்லாவற்றையும்விட மிகவும் ரஹஸ்யமாயும், கர்மயோகத்தைப்பற்றியதாயும், ஜ்ஞானயோகத்தைப்பற்றியதாயும், பக்தி யோகத்தைப்பற்றியதாயுமிருக்கிற ஜ்ஞானமேல்

ஸர்வகுஹ்யதமம் பூய: ஶ்ருணு மே பரமம் வச:' என்று மேலே ஜ்ஞாபகப் படுத்தப்போகிறவிதமாய்வேறுகேழ்க்கவேண்டியதில்லையென்று தெரிவிப்பதற்காக ப்ரஸ்தாவித்துக்கொண்டுவரப்பட்டமூன்றுவிதமான நிஷ்டைகளும் பூர்த்தியாக உபதேசம் செய்யப்பட்டபடியினுல் இவைகள் அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி அனுஷ்டிக்கத்தக்கவைகள் என்று சொல்லி நிகமனம் செய்யப்படுகிறது—இந்த ஶ்லோகத்தினுல். அர்த்தங்களும் வார்த்தைகளும் அழகாயிருப்பதும் பூர்ணமாக இருப்பதும் 'இதி (இவ்விதமாக)' என்பதினுல் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—'இவ்விதமாக' என்றாரம்பித்து. 'உனக்கு' என்பதற்கு 1 'ப்ரபந்நஸ்ய' என்று கேட்டவனும் என்னையே சரணமாக அடைந்தவனும் ஶிஷ்யனுமாகிய உனக்கு என்றர்த்தம். இவ்விடத்தில் லோகத்திலேற்பட்ட ப்ரமாணங்களினுல் கண்டறியப்படுகிற விஷயங்களையுடைய ஆயுர்வேதம், தனுர்வேதம், காமஶாஸ்த்ரம், அர்த்த ஶாஸ்த்ரம், நீதி ஶாஸ்த்ரம், முதலியவைகளினுல் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானங்களைவிட இந்த்ரியங்களுக்குப் புலப்படாததாய் பரலோகத்திலுண்டாகிய ஸ்வர்க்கம் முதலிய ப்ரயோஜனங்களையும் அவைகளின் உபாயங்களையும்பற்றிய வேதமாகிற ஶாஸ்த்ரத்தினுல் உண்டாக்கப்படுகிற அநேகவிதமான ஜ்ஞானம் 'குஹ்யாத் (ரஹஸ்யமான)' என்னும் பதத்தினுல் சொல்லப்படுகிறது. 'குஹ்யதரம்' என்னும் பதத்தினுல் வேதாந்தங்களினுல் உண்டாக்கப்பட்டதாயும், அதின் அர்த்தத்தை விவரிக்கிற இந்தக் கீதாஶாஸ்த்ரத்தில் நிரூபிக்கப்பட்டதாயும், மோக்ஷத்தி லாசையுடையவர்களால் அவரவர்களதிகாரத்திற்குத் தக்கபடி அனுஷ்டிக்கத்தக்கதாயு மிருக்கிற நேராகவும் பரம்பரையாகவும் மோக்ஷத்திற்குபாயங்கள் எல்லாவற்றையும்பற்றிய ஜ்ஞானம் சொல்லப்படுகிறது. அவ்விடத்தில் மற்ற மூன்று ப்ரயோஜனங்களில் மாத்திரம் ஆசையுடையவர்களுக்கு மறைக்கத்தகுந்ததாகையினுல் 'குஹ்யதரம்' என்று சொல்லியிருக்கிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—'மோக்ஷத்தி லாசையுடையவர்களினுல்' என்றாரம்பித்து. இந்தக் கீதாஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட அர்த்தங்களுக்

---

1 பகவத்கீதை-18-59.

லாம் சொல்லப்பட்டது. இதை முழுமையும் பராமர்ஸித்து உன் அதி காரத்திற்குத்தக்கபடி எப்படி இஷ்டப்படுகிறாயோ அப்படிச் செய். அதா

குள்ளேயே 'குஹ்யம்', 'குஹ்யதரம்' என்கிற பிரிவு சொல்லலாம். அதிலும் இந்தக் கடைசி அத்யாயத்தில் சொல்லப்பட்ட அர்த்தமே 'குஹ்யதரம்' என்று சொல்லி முடிக்கப்படுகிறது என்கிற ஆக்ஷேபத்தை விலக்குகிறார்—'கர்மயோகத்தைப் பற்றியதாயும்' என்றாரம்பித்து. 'விம்ருஸ்யைதத் அசேஷேண யதேச்சஸி ததா குரு' என்கிற மேல் வாக்யத்தை யோசித்து அதின் ஸ்வாரஸ்யத்தினால் கீதாஸாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட எல்லா அர்த்தமும் இவ்விடத்தில் 'குஹ்யதர' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறதென் றேற்படுகிறது. அவைகளுக்குள் உட்பிரிவின் வ்யத்யாஸங்களை வெனில் 'ஸர்வகுஹ்யதமம்' என்கிற அடுத்த ஸ்லோகத்தில் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். 'ஆக்யாதம் (சொல்லப்பட்டது)' என்பதினால் சொல்லவேண்டியது வேறில்லை என்பது தெரிவிக்கப்பட்டது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எல்லாம் சொல்லப்பட்டது' என்று. 'யதா (என்றால்)' என்பதற்கு ஸ்வபாவத்திலேயே எல்லாந் தெரிந்தவனாயிருக்கை முதலிய குணங்களிருப்பதினால் மிகவும் ஆப்தனாயும் உனக்கு நன்மையை விரும்புகிறவனாகவு மிருக்கிற என்னால் என்றர்த்தம். 'இதை முழுமையும் பராமர்ஸித்து' என்பதினாலேற்பட்ட அர்த்தத்தைச்சொல்லுகிறார்— 'உன் அதிகாரத்திற்குத் தக்கபடி' என்று முதலிலேயே செய்ய வேண்டியவைகளை விட்டுவிடுவது யுக்தமல்ல என்று தாத்பர்யம். 'யதேச்சஸி ததா குரு' என்பது யுத்தத்தைச் செய்தாலும் செய் செய்யாமலிருந்தாலும் இரு, என்பதைச் சொல்லுகிறதல்ல, மூன்றுவிதமான நிஷ்டைகளிலும் நித்யங்களும் நைமித்திகங்களாயுமிருக்கிற வர்ணாஸ்ரமங்களைச் சேர்ந்த கர்மங்கள் அவஸ்யம் அனுஷ்டிக்கவேண்டியவைகள் என்று சொல்லியிருப்பதினாலும், 1 'யத்யஹங்காரமாஸ்ரித்ய' என்பது முதல் இரண்டு ஸ்லோகங்களினால் அர்ஜுநனால் யுத்தத்தை விடமுடியாது என்று சொல்லுகிற பகவானுக்கு அதைச் செய்யாமலிருந்தாலுமிரு என்கிற தாத்பர்யத்தைச் சொல்லுவது பொருந்தாததாகையினாலும். ஆகையினால் இவ்விடத்தில் அவரவர்கள் அதிகாரத்திற்குத்தக்கபடி உபதேசிக்கப்பட்டிருக்கிற ஸாஸ்த்ரத்தின் அர்த்தங்களின் வரிசைகளாகிய கர்மயோகம் ஜ்ஞானயோகம் பக்தியோகம் இவைகளில் மிகவும் புத்திமானாகிய நீ எனக்கு இப்பொழுது இந்தக்

---

1 பகவத்கீதை - 18-59.

வது கர்மயோகத்தையாவது, ஜ்ஞானயோகத்தையாவது பக்தியோகத்தை யாவது உன்னிஷ்ட ப்ரகாரம் செய் என்றர்த்தம். 63

ஸர்வகு₃ஹ்யதமம் பூ₄ய: ஶ்ருணு மே பரமம் வச: |
இஷ்டோ(அ)ஸி மே த்₃ருட₄மிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம் || 64

ப - ரை] ஸர்வகு₃ஹ்யதமம் - எல்லாவற்றையும்விட மிகவும் ரஹஸ்யமாயிருக்கிற, மே - என்னுடைய, பரமம் — மேலானதாகிய, வச: - வார்த்தையை, பூ₄ய: - மறுபடியும், ஶ்ருணு - கேள், மே - எனக்கு, த்₃ருட₄ம் - மிகவும், இஷ்ட: - ப்ரியனாக, அஸி — ஆகிறாய், இதி - என்கிற, தத: - அதனால். தே - உனக்கு, ஹிதம் - நன்மையை, வக்ஷ்யாமி - சொல்லப்போகிறேன். 64

பா] ரஹஸ்யங்களாகிய கீழ்ச்சொல்லிய எல்லாவற்றிலும் பக்தி யோகம் சிறந்ததாகையினால் மிகவும் ரஹஸ்யமானது என்று முன்பே * ‘இதம்

கர்மத்தில் அதிகாரம் இருக்கிறது என்று பராமர்ஶித்து அந்தப்படியிருந்துகொண்டு வர்ணாஶ்ரமதர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டே இரு என்று சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘அதாவது கர்மயோகத்தையாவது’ என்றாரம்பித்து. இத்தால் கர்மயோகம், ஜ்ஞானயோகம், இவைகளைப்பற்றி நிகமனம் செய்திருக்கிறது இது, ‘ஸர்வகு₃ஹ்யதமம்’ என்றாரம்பித்து பக்தியோகத்தைப்பற்றி நிகமனம் செய்திருக்கிறது, என்று சிலரால் செய்யப்பட்ட பிரிவு நிராகரிக்கப்பட்டது. 63

பொதுவாக மூன்றுவித நிஷ்டைகளையும் பற்றி நிகமனம் செய்த பிறகு மூன்றுவிதநிஷ்டைகளும் மற்றவைகளைவிட மிகவும் ரஹஸ்யம் என்று சொல்லப்பட்ட பிறகு இந்த மூன்றுவித நிஷ்டைகளுக்குள் பரம்பரையாகவும் நேராகவுமிருக்கிற உபாயங்களைப் பிரித்துக்காட்டிக் குஹ்யதமமாகிய அர்த்தத்தில் நிஶ்சயத்தை உண்டாக்குவதற்காகவும் மறுபடியும் அதுவே ப்ரதானமானதினால் அதிலேயே இந்தச் ஶாஸ்த்ரத்திற்கு முக்கியமான தாத்பர்யமென்று தெரிவிப்பதற்காகவும் ‘ஸர்வகு₃ஹ்யதமம்’ என்றாரம்பித்து இரண்டு ஶ்லோகங்களினால் பக்தியோகமாகிய ஶாஸ்த்ரத்தின் ஸாரார்த்தம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. இந்த அபிப்ராயத்தினாலேயல்லவோ ‘ஶாஸ்த்ரஸாரார்த₂ உச்யதே’ என்று ஸங்க்ரஹத்தில் சொல்லப்பட்டது. இந்த அத்யாயத்தின் முதலில் வ்யாக்யானமும் செய்யப்பட்டது. இவ்விடத்தில்

* பகவத்கீதை-9-1.

தா தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே' என்றிவை முதலிய இடங்களில் சொல்லப்பட்டது. மறுபடியும் அதைப்பற்றியதாயும் மிகவும்

மிகவும் ஸாரதமமாகிய ப்ரபத்தியும் ஸாரார்த்தத்திற் கங்கமாகச் சரமச்லோகத்தில் சொல்லப்படுகிறபடியினால் அதுவும் 1 'சாஸ்த்ரஸாரார்த்த:' என்பதினாலேயே சேர்த்துச் சொல்லப்பட்டது. 'ஸர்வகுஹ்யதமம்' என்கிற இடத்தில் ஸூத்ரத்தில் பதங்களின் பிரிவையுடைய 2 'ஸப்தமீசௌண்டை:' என்கிற ஸூத்ரத்தினால் ஸமாஸம் வந்திருக்கிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'ரஹஸ்யங்களாகிய கீழ்ச் சொல்லிய எல்லாவற்றிலும்' என்று ஏழாம் வேற்றுமையாகச் சொல்லியிருக்கிறது. 'குஹ்யதம' என்னும் பதம் முன்பு சொன்னதே இங்கு ஜ்ஞாபகத்திற்கு வருகிறபடியினாலும், 'பூய: (மறுபடியும்)' என்கிறபதத்தின் ஸ்வாரஸ்யத்தினாலும் 'மந்மநா' என்கிற ச்லோகமும் முன்பு சொல்லப்பட்டதே ஸ்வல்ப வ்யத்யாஸத்துடன் இங்கு படிக்கப்பட்டிருப்பதினாலும் அந்தப் பக்தியோகமே இவ்விடத்தில் சாஸ்த்ரத்தின் முடிவிலும் இந்தச் சாஸ்த்ரத்திற்கு இதுவே ஸாரம் என்று தெரிவிப்பதற்காகச் சொல்லப்படுகிறது, வேறொரு அர்த்தம் சொல்லப்படவில்லை, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'மிகவும் ரஹஸ்யமானதென்று முன்பே' என்றாரம்பித்து. இவ்விடத்தில் அர்த்தம் 'குஹ்யதமம்' என்பதே வார்த்தையில் உபசாரமாகச் சொல்லப்பட்டது என்று சொல்லுகிறார்—'மறுபடியும் அதைப்பற்றியதாயும்' என்று. மறுபடியும் கேழ்ப்பது 'ச்ருணு (கேள்)' என்பதினாலேயே ஏற்படுகிறபடியினால் கீழே கேழ்க்கப்பட்ட அர்த்தத்தைப்பற்றியது என்பதைச் சொல்லுகிறது இவ்விடத்தில் 'பூய:' என்னும் பதம். நடுவில் வேறொன்றை இடையிடாமல் நேரில்உபாயமாக இருக்கிற குஹ்யதமமான அர்த்தத்தை நிச்சயம் செய்வதற்காக மறுபடியும்சொல்லுவதுப்ரயோஜனத்தை யுடையதுதான் என்றுதாத்பர்யம். மேலானவார்த்தை என்று சொல்லியிருப்பது இதற்குமேல் சொல்லவேண்டியதில்லை என்று நிகமனம் செய்கிற அபிப்ராயத்தினால். அன்றிக்கே அர்த்தம் மிகவும்சிறந்ததாகையினால் அதைப்பற்றியவார்த்தையும் சிறந்ததென்று சொல்லப்படுகிறதாகவுமாம். 3 'யஸ்மாத்தர்மாத்பரோ தர்ம: கச்சந நேஹ' என்று பகவானைப்பற்றிய யோகம் யஜ்ஞம்முதலிய எல்லாத்

---

1 கீதார்த்தஸங்க்ரஹ ச்லோகம்-22. 2 அஷ்டாத்யாயீ-2-1-40

3 இஹ - இந்தலோகத்தில், யஸ்மாத்தர்மாத் - எந்தத்தர்மத்தைவிட, பர:- மேலான, தர்ம:-தர்மம், கச்சன-ஒன்றும், ந - இல்லையோ.

சிறந்ததாயுமிருக்கிற என்னுடைய வார்த்தையைக்கேள். எனக்கு மிகவும் ப்ரியனென்கிற அதனால் உனக்கு நன்மையைச் சொல்லப்போகிறேன். 64

𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋
𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁 ।
𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑍇
𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 ॥ 65

ப - ரை] 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 - என்னிடத்தில் பக்தியை யுடையவனாய்க் கொண்டு 𑌮𑌨𑍍𑌮𑌨𑌾𑌃 - என்னிடத்தில் செலுத்தப்பட்ட மனதையுடையவனாய், 𑌭𑌵 —

தர்மங்களை விடமேலானதென்றும் இதைவிட மேலானதில்லை என்றும் சொல்லப்படுகிறது. அப்படியே 1'𑌇𑌜𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌦𑌮𑌾𑌹𑌿𑌂𑌸𑌾 𑌦𑌾𑌨𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 । 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌯𑌦𑍍𑌯𑍋𑌗𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 ॥' என்றும் சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் ஆத்மா எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாகிய பரமாத்மா. ஸந்தோஷப் படுத்துவதற்காகவாவது ஸ்தோத்திரம் செய்வதற்காகவாவது சொல்லி யிருக்கிறது என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காக '𑌇𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑌿' என்றாரம்பித்துச் சொல்லப்படுகிறது. '𑌇𑌷𑍍𑌟𑌃' என்பதற்கு ப்ரீதிக்குப் பாத்திரம் என்றர்த்தம். '𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌸𑌿' என்று மேலே சொல்லி யிருப்பதைப் போல. '𑌦𑍃𑌢𑌮𑌿𑌷𑍍𑌟𑌃' என்பதற்கு மிகவும் ப்ரியன்என்று அர்த்தம். 2'𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋𑌽𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌹𑌂 𑌸 𑌚 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃' என்றிவை முதலியவைகளினால் முன்பு சொலலப்பட்ட ஜ்ஞானியைப் போலவே மிகவும் ப்ரியனாகிறாய். எப்படியானால் குஹ்யதமமான அர்த்தம் உபதேசிக்கத் தகுந்ததாகுமோ அப்படி ப்ரியனாகிறாய் என்றர்த்தம். எந்தக் காரணத்தினால் நீ ப்ரியனோ ஆகையினால் உனக்கு நன்மையைச் சொல்லுகிறேன் என்று தாத்பர்யம். 64

---

1 இஜ்ய - பகவானை ஆராதனம் செய்தல், ஆசார - கர்மங்களை அனுஷ்டித்தல், தம- இந்த்ரியங்களை அடக்குதல், அஹிம்ஸா - ஹிம்ஸை செய்யாமலிருத்தல், தாநம் - கொடுத்தல், ஸ்வாத்யாய-வேதாத்யயனம செய்தல், இதுகளாகிற, கர்மணாம்-கர்மங்களுக்குள், யோகேந - யோகத்தினால், ஆத்மதர்சனம் - பரமாத்மாவை ஸாக்ஷாத்கரித்தல், யத் - எதுவோ, அயம் இது, பரம:-மிகவும் மேலாகிய, தர்ம:-தர்மம். 2 பகவத்கீதை - 7 - 17.

இரு, மத்யாஜீ – என்னை ஆராதனம் செய்துகொண்டிருப்பவனாயும் (இரு), மாம் - என்னை, நமஸ்குரு - நமஸ்காரம் செய், (இப்படிச் செய்துகொண்டிருந்தாயே யானால்) மாமேவ – என்னையே, ஏஷ்யஸி - அடையப் போகிறாய், ஸத்யம் - இது உண்மை, தே – உனக்கு, ப்ரதிஜாநே - ப்ரதிஜ்ஞை செய்கிறேன், மே - எனக்கு, ப்ரிய: - இஷ்டனாக, அஸி - ஆகிறாயல்லவா. 65

பா] வேதாந்தங்களில் * 'நான் ஸூர்யனுடைய வர்ணம் போன்ற வர்ணத்தையுடையவனாயும் ப்ரக்ருதிக்கு மேலான இடத்தில் இருப்பவனாயுமிருக்கிற இந்த மஹா புருஷனை அறிகிறேன், அவனை இப்படித் தெரிந்துகொண்டவன் இந்த ஜன்மத்திலேயே மோக்ஷத்தை அடைந்தவனாகிறான். மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் விதிக்கப்பட்டதாயும் வேதனம், த்யானம், உபாஸநம்,

---

தா] 'வேதநாஹம்' என்பது ப்ரயோஜனத்திற்கு நேரில் உபாயமாக இருப்பதினால் குஹ்யதமமாகிய அங்கியின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறதென்று தெரிவிப்பதற்காக அந்த அங்கியின் ஸ்வரூபத்தை முதலில் ப்ரமாணங்களைக் கொண்டு நிரூபிக்கிறார்—'வேதாந்தங்களில்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் புருஷஸூக்த வாக்யத்தை எடுத்திருப்பது மற்ற உபநிஷத்துக்கள் இதை அநுஸரித்தவைகள் என்று தெரிவிப்பதற்காகவும், 'வேறுவழியில்லை' என்பதினால் இதினால் உண்டாக்கப்படுகிற வேறொரு உபாயம் நடுவில் இருக்கிறதோ என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காகவும், இந்தக் கீதாஶாஸ்த்ரத்தில் 1 'வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:' என்றுசொல்லியிருக்கிற வாஸுதேவன் இந்த உபநிஷத் வாக்யத்தில் சொல்லப்படுகிறபடியினாலே 'வேதநாஹம்' என்று விதிக்கப்படுகிற த்யானம் மஹா புருஷனைப்பற்றிய த்யானம் என்று தெரிவிப்பதற்காகவும். இந்த வாக்யத்தில் 'வேதநம் (அறிவது)' அல்லவோ சொல்லப்பட்டது, பக்தி சொல்லப்படவில்லையே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'த்யாநம், உபாஸநம், முதலிய பதங்களினால் சொல்லப்படுகிற' என்று. 'முதலிய' என்னும் பதத்தினால் அந்தந்த ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட 'பக்தியோக' முதலிய பதங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஒரே ஸந்தர்ப்பத்தில் சொல்லப்படுகிற த்யானம், உபாஸநம் என்கிற பதங்களினால் வேதனமே விஶேஷித்துச் சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லாவிடில் அல்பகா

---

* புருஷஸூக்தம். 1 பகவத்கீதை-15-18.

முதலிய பதங்களினால் சொல்லப்படுகிறதாயும் நேரில் பார்ப்பதைப்போல விசதமாக இருப்பதாயும் மிகவும் ப்ரியமாயுமிருக்கிற த்யானம் இவ்விடத்

ர்யம் பெரிய கார்யம் இவை இரண்டையும், ஒரு பலத்திற்காக இதையாவது அதையாவது செய்ய வேண்டும் என்று விகல்பமாகச் சொல்லுவது பொருந்தா தாகையினால் த்யானம் முதலியவைகளை விதித்திருப்பது வ்யர்த்தமாய்ப் போகவேண்டி வரும் என்று தாத்பர்யம். வேதநம், உபாஸநம், இவைகளைச் சொல்லுகிற பதங்களை ஆரம்பத்திலும் முடிவிலும் கலந்து சொல்லி யிருப்பதைக் காண்பதினால் (அதாவது வேதநம் என்னும் பதத்தினா லாரம்பித்து உபாஸநம் என்னும் பதத்தினால் முடிப்பதையும், உபாஸநம் என்னும் பதத்தினால் ஆரம்பித்து வேதநம் என்னும் பதத்தினால் முடிப்பதையும் இப்படிக் கலந்து ப்ரயோகித்திருப்பதை ஸ்ருதிவாக்யங்களில் கண்டிருப்பதினால்) வேதனமென்பது உபாஸநம் என்று ஸாரீரகபாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் வ்யக்தமாய் நிரூபிக்கப்பட் டிருக்கிறது. மேலும் 1 'அவன் பார்க்கத்தக்கவன் கேழ்க்கத் தக்கவன், மனனம் செய்யத்தக்கவன், த்யானம் செய்யத்தக்கவன்' என்றர்த்த முள்ள வாக்யத்தைச் சொல்லி, கீழ்ச்சொல்லிய பார்ப்பது முதலியவைகளை அநுவாதம் செய்கிற மற்றொரு ஸ்ருதிவாக்யம் 2 'ஆத்மாவைப் பற்றிய பார்வையினாலும் கேழ்ப்பதினாலும் மனனம் செய்வதினாலும் விஜ்ஞானத்தினாலும்' என்று '**விஜ்ஞாந**' என்னும் பதத்தினால் த்யானத்தை அநுவாதம் செய்கிறது. இப்படியே பராபரவஸ்துவாகிய அந்தப் பகவான் பார்க்கப்பட்டிருக்கும் பொழுது என்றர்த்தமுள்ள வாக்கியத்தினால் சொல்லப்படுகிற பார்ப்பது நேராக ப்ரத்யக்ஷரூபமல்ல, முன்பு சொல்லியபடி அல்பகார்யம் பெரிய கார்யம் முதலியவைகளுக்கு விகல்பம் பொருந்தா தாகையினாலேயே. அதிகாரிகள் வெவ்வேறாகையினால் விகல்பம் ஸம்பவிக்கலாம் என்பதுமில்லை, அப்படி யேற்படுத்துவதற்கு ப்ரமாண மில்லாமையினால். ஒன்று வழியாகவும் மற்றொன்று அதின் வழியாக உபாயமாகிறது என்று கல்பிப்பதும் முடியாது, இடைவிடாத த்யானம் செய்வதும் நேரில் பார்ப்பதும் ஒருவித வ்யத்யாஸ மில்லாமல் நேரில் உபாய மென்று ஸ்ருதியில் சொல்லி யிருக்கிற படியினால். ஆகையினால் இவைஇரண்டும் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிற தென்று சொல்ல வேண்டிய தவஸ்யமாகையினாலே ஒன்றை ஔபசாரிக மென்று சொல்லாமல் அது ஸம்பவிக்காதாகையினால் ப்ரயோஜன மில்லாமல் ஔபசாரிகமாகச் சொல்லுவது பொருந்தா தாகையினாலும் த்யானத்தைச் சொல்லுகிற பதத்

---

1 ப்ருஹதாரண்யகம் 4-5-6. 2 ப்ருஹதாரண்யகம் 2-4-5.

தில் ‘உபாஸநஸ்வ’ என்றாரம்பித்து விதிக்கப்படுகிறது. அதிகமாக என்டனித்தில் ப்ரீதியுடையவனாய் என்னிடத்தில் அதிகமான ப்ரீதியுடையனாவகையினாலே தானும் மிகவும் ப்ரியமானதாயுமிருக்கிற த்யானத்தின்

தினால் ப்ரத்யக்ஷமாகப் பார்ப்பதை ஔபசாரிகமாகச் சொல்லில் ஒரு வித மேன்மையும் ஸித்திக்காதாகையினாலும் த்யானத்தை ப்ரத்யக்ஷத்தைச் சொல்லுகிற பதத்தினால் உபாசாரமாகச் சொல்லிலேலாவெனில் ப்ரத்யக்ஷத்தைப் போல விசதமாக இருக்கவேண்டுமென்கிற விசேஷத்தை விதிக்கிற படியினாலே ப்ரயோஜனத்தோடு கூடியதாகையினாலும் 1 ‘ஸ்வப்நதீகம்யம்’ என்றிவை முதலிய வசனங்களில் சொல்லப்படுகிற விதமாயிருக்கும் தன்மையையுடைய த்யானமே 2 ‘அவன்பார்க்கப்பட்டிருக்கும் பொழுது’ என்றும், 3 ‘அவனை நேரில்பார்த்து’ என்றும், 4 ‘அவன் பார்க்கத் தக்கவன்’ என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளினால் விதிக்கப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘நேரில் பார்ப்பதைப் போல விசதமாக இருப்பதாயும்’ என்று. ‘த்யாநம்’ என்பதற்கு மனதை ஒரே வஸ்துவினிடத்திலேயே அதிகக் காலம் செலுத்துவது என்றர்த்தம். இந்த த்யானம் என்னும் பதத்தினால் இதனாலுண்டாகிற எண்ணெயின் தாரையைப் போல் இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருப்பது லக்ஷணையாகச்சொல்லப்படுகிறது. வேதாந்தங்களில் சொல்லப்பட்ட வேதநம் என்று பிரித்துக்கொண்டு த்யானம் உபாஸநம் என்று தனிவாக்யமாகவும் பாடமாகும். அப்பொழுது அந்த வேதநம் என்பது விசேஷ்யம். வேதநம், த்யாநம், உபாஸநம், என்று ஒரே வாக்யமாகப் பாடமாக இருக்கும் பொழுது த்யானம் என்பது விசேஷ்யம் இதுவே பக்தியாக இருக்க வேண்டுமென்பதைச்சொல்லுகிறார்—‘மிகவும் ப்ரியமாயு மிருக்கிற’ என்று. ‘இவ்விடத்தில்’ என்பதற்கு நேரில் மோக்ஷத்தின் உபாயத்தை உபதேசிக்கும் பொழுது என்றர்த்தம். வேதாந்தங்களில் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அர்ஜுநனால் அறிந்துகொள்ளப் படாமையினால் அவனைக் குறித்து ‘உபாஸநாஃ’ என்பது விதிக்கப்படுகிறது தான் என்று சொல்லுகிறார் ‘விதிக்கப்படுகிறது’என்று. ‘இஷ்டஃ’ என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—‘அதிகமாக என்னிடத்தில் ப்ரீதியுடையவன்’ என்று. எவனுக்கு நான் அதிகமாக ப்ரீதி செய்யக்கூடிய விஷயமா யிருக்கிறேனோ அவன் ‘அத்யர்த்தப்ரியஃ’ என்று சொல்லப் படுகிறான்.

---

1 கனவுகண்டதுபோலிருக்கிற புத்தியினாலறியத்தகுந்தவர்.
2 முண்டகோபநிஷத்-2-2-9 3 கடோபநிஷத்-1-3-15.
4 ப்ரஹதாரண்யகம்-6-5-6.

துடர்ச்சியைச்செய் என்றர்த்தம். ‘மத்யாஜீ’ என்கிற இடத்திலும் ‘மத்த:’ என்பது சேர்த்துக்கொள்ளப்படுகிறது ‘யஜநம்’ ஆவது தேவதையை ஆராதனம் செய்தல். மிகவும் ப்ரியமாகிய என்னுடைய ஆராதனத்தைச் செய்துகொண்டிரு ஆராதனமாவது பரிபூர்ணமான கைங்கர்யம். என்னை நமஸ்காரம் செய் நமஸ்காரமாவது வணங்குதல், அதாவது மிகவும் ப்ரிய மாக இருக்கிற என்னிடத்தில் மிகுந்த வணக்கத்தைச் செய் என்றர்த்தம்.

---

1 ‘ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோ(அ)த்யர்த்தமஹம்’ என்றல்லவோ சொல்லப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் விதிக்கப்படுகிற அவஶ்யம் செய்யவேண்டிய கார்யத்தில் இந்த விஶேஷணம் சேரவேண்டும் என்கிற அபிப்ராயத்தினுல் கர்த்தாவிற்கு விஶேஷணமாகச் சொல்லி இருக்கிறது என்று சொல்லுகிறார்—‘என்னிடத்தில் அதிக...ப்ரியமான தாயுமிருக்கிற’ என்று. ‘மத்யாஜீமாம் நமஸ்குரு’ என்கிற இரண்டு பதங்களினுலும் அங்கியைச் சொல்லியிருப்பதினுல் அதற்கு மிகவும் அந்தரங்கமாகிய அங்கங்கள் குறிக்கப்படுகின்றன என்று தெரிவிப்ப தற்காகச் சொல்லுகிருர்—‘மத்யாஜீ என்கிற இடத்திலும்’ என்ருரம்பித்து. ‘யாஜீ’ என்னும் பதத்தினுல் இவ்விடத்தில் அபிப்ராயத்தி லில்லாத ஜ்யோதிஷ்டோமம் முதலியவைகள் தோன்றுகின்றனவே அதை விலக்குவதற்காக தாதுவின் வ்யுத்பத்தியை ஜ்ஞாபகப்படுத்து கிருர்—‘யஜநம்’ ஆவது’ என்ருரம்பித்து. ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிருர்—‘மிகவும் ப்ரியமாகிய’ என்ருரம்பித்து. பக்தியில் சேர்ந் ததாகையினுல் ஸ்வரூபத்திற்குத் தகுந்ததென்று தெரிவிப்பதற்காக வும் இது மிகவும் ஸாரதமம் என்றேற்படுவதற்காகவும் ஸாரமான அர் த்தத்தை விதிக்கிற பாஞ்சராத்திர ஶாஸ்த்ரம் முதலியவைகளினுல் விதிக்கப்படுகிற விதத்தை ஜ்ஞாபகப்படுத்துகிருர்—‘ஆராதனமாவது’ என்ருரம்பித்து. மனதின் ஒருவித வ்யாபாரத்தில் முடிவுபெறுவதற் காகச் சொல்லுகிருர்—‘நமஸ்காரமாவது வணங்குதல்’என்று. இத்தால் கீழேவிழுந்து நமஸ்காரம் செய்வது மாத்திரத்தைச் சொல்லுகிறது என்பது விலக்கப்பட்டது. நமஸ்காரம் மூன்றுவிதமாக அல்லவோ ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிறது. ‘மத்த:’ என்னும் பதத்தை இந்த இடத்திலும் சேர்த்துக்கொள்ளுவதினுல் ஏற்பட்டதாகிய இதின் அபி ப்ராயததைச்சொல்லுகிருர்—‘அதாவது மிகவும் ப்ரியமாயிருக்கிற’என்று. தானும் தன்னைச்சேர்ந்த வஸ்துக்களெல்லாமும் பகவானுக்கு ஶேஷ பூதமே என்றனுஸந்தானம் செய்வதினுல் அதிகமாக வணக்கமுண்டா

---

1 பகவத்கீதை-7-17.

இப்படிச்செய்துகொண்டிருந்து என்னையே அடையப்போகிறாய். இது உண்மையென்று உனக்கு ப்ரதிஜ்ஞை செய்கிறேன். ஸந்தோஷத்திற்காக மாத்திரம் சொன்னதல்ல. எந்தக் காரணத்தினால் நீ எனக்கு மிகவும் ப்ரியனாகிறாயோ†‘प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः’ என்று முன்பே சொல்லப்பட்டதல்லவா. எவனுக்கு என்னிடத்தில் அதிகமான ப்ரீதி இருக்கிறதோ அவனிடத்தில் எனக்கும் அதிகமான ப்ரீதி உண்டாகிறது என்று தாத்பர்யம். ‘இப்படிச் செய்துகொண்டிருந்து’ என்பதினால் கீழ்ச் சொல்லியபடி அதிக ப்ரீதியையுடையவனாயிருக்கை முதலியவைகளை அநுவாதம் செய்கிறது என்பது மாத்திரம் தாத்பர்யம். அதில்லாமல் தன்னிடத்தில் தானிருந்துகொண்டிருப்பது முதலியது தாத்பர்யமில்லை. ‘என்னையே’ என்கிற அவதாரணத்தினால் நடுவில் வேறொரு தாமதமுமில்லை என்பது சொல்லப்படுகிறது. ‘உண்மை’ என்பது ப்ரதிஜ்ஞைக்கு விசேஷணமே ஒழிய அது ப்ரதிஜ்ஞை செய்யப்படுகிறதல்ல. 1 ‘வாஸ்தோஷ்பதியே! நம்மை நீ தெரிந்துகொள்’ என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளிலேபோலே வேறொருகதியும் இல்லாமையைப்பற்றிய ‘ப்ரதி’ என்னும் உபஸர்க்கம் ஒரு அர்த்தத்தையும் சொல்லுகிறதல்ல என்பதை நிராகரிக்கிறார்—‘ப்ரதிஜ்ஞை செய்கிறேன்’ என்று 2 ‘द्यौः पतेत् पृथिवी शीर्येद्धिमवाञ्छकलीभवेत्। शुष्येत्तोयनिधिः कृष्णे न मे मोघं वचो भवेत्’ என்றிவை முதலிய பகவானுடைய வார்த்தையையனுஸரித்துத் தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—‘ஸந்தோஷத்திற்காக மாத்திரம் சொன்னதல்ல’ என்று. இவ்விடத்தில் ப்ரியமான வார்த்தையாகையினால் ஸந்தோஷத்தை உண்டு பண்ணக் கூடிய அர்த்தவாதம் இது என்பது ஸந்தேஹிக்க வேண்டியதில்லை என்றர்த்தம். இப்படி இருந்துகொண்டிருப்பவனுக்குத் தன்னை அடைகிற விஷயத்தில் தன்னுடைய ப்ரீதிபாகிற நடுவில் உண்டாகக் கூடிய வ்யாபாரத்தைச் சொல்லிக்கொண்டு ஸந்தோஷத்திற்காக மாத்திரம் சொன்னதென்கிற ஸந்தேஹம் நிராகரிக்கப்படுகிறது ‘प्रियोऽसि मे’ என்பதினால், என்று

---

† பகவத்கீதை-7-17. 1 யஜுர்வேதம்-3-4.

2 பாரதம்-உத்யோகபர்வம்-31-48. க்ருஷ்ணே-த்ரௌபதியே, த்யௌ: - ஆகாசம், பதேத்-கீழேவிழும், ப்ருதிவீ-பூமி, ஶீர்யேத்-வெடித்துவிடும், ஹிமவான்—ஹிமவத் பர்வதம், ஶகலீபவேத் - சூர்ணமாய்விடும், தோயநிதி: - ஸமுத்திரம், ஶுஷ்யேத்-உலர்ந்துவிடும், மே-என்னுடைய, வச:-வார்த்தை, மோகம்-வ்யர்த்தமாக, நபவேத்-ஆகாது.

கிறது. ஆகையினால் அவனுடைய பிரிவைப் பொறுக்காதவனாகிய நான் அவனை என்னை அடைவிக்கிறேன். ஆகையினால் என்னையே அடையப் போகிறாய்' என்று ப்ரதிஜ்ஞை செய்தது உண்மையே. 65

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய
மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥ 66

[இது பாஷ்யத்தின் முதல் யோஜனையை அநுஸரித்தது.]

ப - ரை] ஸர்வதர்மாந் - கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகங்களாகிய எல்லாத் தர்மங்களையும், பரித்யஜ்ய - கீழ்ச்சொல்லிய விதமாக ஸாத்விக த்யாகம் செய்துவிட்டு, அதாவது அவைகளைச் செய்துகொண்டே அவைகளின் கர்த்ருத்வம், பலம், முதலியவைகளை விட்டுவிட்டு, ஏகம் - ஒருவனாகிய, மாம் - என்னை, ஶரணம் - ரக்ஷிப்பவனாக, அதாவது

சொல்லுகிறார்—'எந்தக் காரணத்தினால்' என்றாரம்பித்து. இனி உண்டாக வேண்டியதாகிய ஜ்ஞானியாக இருக்கையை ஸித்தமாக வைத்துக் கொண்டு 'ப்ரியோஸி' என்று அதின் ப்ரயோஜனத்தைச் சொல்லி இருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் 1'ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தம்' என்று பொதுவாகிய முன் சொல்லிய காரணத்தைச் சொல்லியிருக்கிறது. இத்தால் 'ப்ரிய:' என்னும் பதம் இது கீழ்ச்சொல்லப்பட்டதென்பதைக் காட்டுகிறது என்பது தெரிவிக்கப்பட்டது. கீழ்ச்சொன்ன அர்த்தம் ஸம்பவிக்காது என்கிற ஸந்தேஹத்தைப் பரிஹரிப்பதற்காக லோகத்தில் கண்டறியப்பட்டதையும் பகவானுடைய அபிப்ராயத்தையும் அநுஸரித்து உதாஹரிக்கப்பட்ட வசனத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'எவனுக்கு என்னிடத்தில்' என்றாரம்பித்து. அதினாலேற்பட்ட அர்த்தத்தைச்சொல்லுகிறார்—'ஆகையினால் அவனுடைய பிரிவை' என்றாரம்பித்து. கார்யத்தைக் காரணத்தோடு சேர்த்து அர்த்தம் சொல்லுகிறார்—'ஆகையினால் என்னையே' என்றாரம்பித்து. 65

1 பகவத்கீதை-7—17

அந்தக் கர்மங்களினால் ஆராதிக்கப்பட்டு அவைகளின் பலன்களைக் கொடுப்பவனாக, வ்ரஜ - அநுஸந்தானம் செய், அஹம் - நான், த்வா - (இப்படிச் செய்து கொண்டிருக்கிற) உன்னை, ஸர்வபாபேப்ய: - எல்லாப் பாபங்களிலிருந்தும், மோக்ஷயிஷ்யாமி - விடுவிக்கிறேன், மாஶுச: — துக்கப்படாதே.

[இது பாஷ்யத்தின் இரண்டாம் யோஜனையை அநுஸரித்தது.]

ப - ரை] ஸர்வதர்மாந் - எல்லாத் தர்மங்களையும், பரித்யஜ்ய - விட்டு விட்டிருக்கிற நீ, அன்றிக்கே கீழ்ச்சொல்லிய கர்ம யோகம் முதலிய எல்லாத் தர்மங்களையும் விட்டிருக்கிற நீ, ஏகம் - ஒருவனாகிய, மாம் - என்னை, ஶரணம் - உபாயமாக, வ்ரஜ - அடை, அஹம் - நான், த்வா - உன்னை, ஸர்வபாபேப்ய: - எல்லாப் பாபங்களிலிருந்தும், அதாவது என்னிடத்தில் பக்தி செய்வதற்குத் தடையான எல்லாப் பாபங்களிலிருந்தும், மோக்ஷயிஷ்யாமி - விடுவிக்கிறேன், மாஶுச: - துக்கப்படாதே 66

பா] கர்மயோகம் ஜ்ஞானயோகம், பக்தி யோகங்களாகிய, உயர்ந்த ப்ரயோஜனமாகிய மோக்ஷத்திற்கு ஸாதனங்களாகிய தர்மங்களை எனக்காராதனமாக மிகுந்த ப்ரீதியுடன் அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கபடிச் செய்து

தா] இப்படி விஸ்தாரமாகவும் சுருக்கமாகவும் சொல்லப்பட்ட கர்மயோகம் முதலிய மூன்றுவித யோகங்களுக்கும் பொதுவாகிய மிகவும் ஸாரமான அநுஸந்தானத்தை எடுத்துக் காட்டி அதிலேயே 1 'மாமேவைஷ்யஸி' என்று கீழ்ச்சொல்லப்பட்ட இஷ்டத்தை அடைவதற்குத் தடங்கல்களாகிய அநிஷ்டங்களின் நிவ்ருத்தி உண்டாகிறது என்று சொல்லப்படுகிறது—இந்த ஶ்லோகத்தினால். இதையே சொல்லுகிறார்—'கர்மயோகம்' என்றாரம்பித்து. 'ஸர்வ' என்னும் பதத்தினால் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட மூன்று விதமான யோகமும் பொதுவாகச் சொல்லப்படுகிறது. கர்மயோகம் முதலியவைகள் நைர்யத்திற்குக் காரணங்களாகையினால் 'பரி' என்னும் பதத்திற்கு அர்த்தமாகின்றன என்று சொல்லுகிறார்—'உயர்ந்த ப்ரயோஜனமாகிய' என்றாரம்பித்து. ஆங்காங்கு ஸம்பவிப்பதைப் போல பரம்பரையாகவும் நேராகவும் என்று சேர்த்துக்கொள்ளவும். அவைகள் மோக்ஷத்திற்கு ஸாதனமாக இருப்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்—'எனக்காராதனமாக' என்று. மற்ற மூன்றுவிதப் புருஷார்த்தங்களில் ஆசை இல்லாமைக்குக் காரணத்தைச் சொல்லுகிறார்—'மிகுந்த ப்ரீதியுடன்' என்று.

1 பகவத்கீதை - 18-65 2 பகவத்கீதை - 18-63

கொண்டே கீழ்ச் சொல்லிய விதமாக அவைகளின் பலம், அந்தக் கர்மங்கள், அவைகளில் கர்த்ருத்வம் முதலியவைகளை விட்டுவிடுவதினால் அவைகளை விட்டு என்னொருவனையே கர்த்தாவாகவும், ஆராதிக்கப்படு

பவனாகவும் ஸர்வேச்வரனாகவும் அனுஸந்தித்துக்கொண்டு 'மத்வ்யபாச்ரய:' என்று கீழ்ச்சொல்லியதை அனுஸரித்துச் சொல்லுகிறார்—'அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி' என்று. முறையே இவை எல்லாம் இவனுக்கு அனுஷ்டிக்க வேண்டியதாகும் என்று தாத்பர்யம். 'செய்து கொண்டே' என்பதினால் ஸ்வரூபத்தை விட்டு விடுவது முதலிய பக்ஷங்கள் தாமஸமாயிருக்கை முதலிய காரணங்களினால் முன்னமேயே நிராகரிக்கப்பட்டன என்பது ஜ்ஞாபகப்படுத்தப் பட்டது. 'பரித்யஜ்ய' என்னும் பதத்தின் தாத்பர்யத்தில் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'கீழ்ச்சொல்லிய விதமாக' என்றாரம்பித்து. இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கும் விதமாக என்றர்த்தம். கர்மங்களை விடுவதாவது அந்தக் கர்மங்கள் தனக்குச் சேஷ பூதங்கள் என்கிற அபிமானத்தை விடுவது. பக்தி யோகத்திலும் ஐச்வர்யம் முதலிய மற்றப் பலங்கள் விடத்தக்கவைகளே. மோக்ஷமென்று பேருடைய பலமும் எல்லாவற்றிற்கும் சேஷியாகிய பகவானுக்குச் சேஷ பூதம் என்கிற புத்தியினால் தனக்குச் சேஷமென்கிற புத்தி பரிஹரிக்கத் தக்கது. 'முதலியவைகளை' என்பதினால் சட்டைகளைப் போலிருக்கிற இந்திரன் முதலிய தேவதைகள் ஆராதிக்கப் படுகிறார்கள் என்கிற அபிமானமும் சேர்த்துக்கொள்ளப் படுகிறது. மேலும் அந்தக் கர்மத்தைப் பற்றிய கர்த்ருத்வம் தனக்குச் சேஷம் என்கிற புத்தியும் 'முதலியவைகளை' என்னும் பதத்தினால் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. 'விட்டு விடுவதினால் அவைகளை விட்டு' என்பதினால் கர்மங்களை விடுவதாவது அந்தக் கர்மத்தைப் பற்றிய இவைகளை விட்டு விடுவது தான் என்று பொதுவான பதத்திற்கு விசேஷமான அர்த்தம் சொல்லப்பட்டது. மற்ற இடத்தில் தன்னிடத்தில் கர்த்ருத்வமும் அதை விட வேறாகிய இந்திரன் முதலியவர்களிடத்தில் உபாஸிக்கத்தகுந்தவனாயிருக்கையும், இவை இரண்டையும் விட வேறாகிய ஸ்வர்க்கம் முதலியவைகளில் அடையத் தகுந்த ப்ரயோஜனமாயிருக்கையும் இவை எல்லாவற்றையும்விட வேறாகிய கர்மத்தில் உபாயமாக இருக்கையும் உண்டென்றபிமானித்துக்கொண்டல்லவோ வேதாந்தம் தெரியாதவர்கள் ப்ரவ்ருத்திக்கிறார்கள். அப்படி உன்னால் அனுஸந்திக்கத்தக்கதல்ல. இவை எல்லாவற்றையும் ஒருவனாகிய என்னிடத்திலேயே அனுஸந்தானம் செய் என்று 'மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்பதின் அபிப்ராயம். இதையே சொல்லுகிறார்—'என்னொருவனையே' என்றாரம்பித்து.

கிறவனாகவும், அவைகளினால் அடைய வேண்டிய ப்ரயோஜனமாகவும், உபாயமாகவும் அனுஸந்தானம் செய். இதுவே எல்லாத்தர்மங்களினு

இவ்விடத்தில் கர்த்ருத்வம் முதலிய நாலுவித அர்த்தத்திலும் தனித் தனியாகவாவது இவை எல்லாம் சேர்ந்து ஒருவிதக் காரணத்தினாலாவது **'ஶரணம்'** என்னும் பதத்திற்கு அர்த்தமாக இருப்பது ஸம்பவிக்காதாகையினால் கர்த்ருத்வம் முதலியது 'ஏகம்' என்பதினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டதென்று அனுவாதம் செய்யப்பட்டது. 'உபாயமாகவும்' என்பதோவெனில் **'ஶரணம்'** என்னும் பதத்தின் அர்த்தத்தைச்சொல்லி இருக்கிறது. 'கர்த்தாவாகவும்' என்பதற்கு கர்த்தாவாகிய ஜீவனையும் ஏவுகிறவனாகவும், அவனுக்கந்தர்யாமியாகவும், அனுமதிகொடுக்கிறவனாகவுமிருக்கிற என்றர்த்தம். இவைகளை அனுஸந்தானம் செய்வதினால் தானே கர்த்தா என்கிற அபிமானத்தை விடுதல் ஏற்படுகிறது. கர்மங்கள் வேறுதேவதைகளுக்குச் சேஷ பூதங்கள், தனக்குச் சேஷபூதங்கள் என்கிற புத்தியை விடுவதற்காகச் சொல்லுகிறார்—'ஆராதிக்கப்படுகிறவனாகவும்' என்று. 1 **'அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம்போக்தா ச'**, 2 **'ஸ்வகர்மணா தமப்யர்ச்ய'** என்றிவை முதலியது முன்பேசொல்லப்பட்டதல்லவா. 'அடையவேண்டிய ப்ரயோஜனமாகவும்'என்பதுடன் நேராகவும் பரம்பரையாகவும் என்று சேர்த்துக் கொள்ளவேண்டியது. இத்தால் ஸ்வர்க்கம் முதலிய பலங்களை விடுதல் ஏற்படுகிறது. மூன்றுவித த்யாகங்களையும் செய்யவேண்டியதற்காக அனுவதிக்கப்பட்ட மூன்றுவித ஆகாரம் சொல்லப்பட்டது. இவ்விடத்தில் **'ஶரணம்'** என்னும் பதத்தினால் விதிக்கப்படுகிற அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'உபாயமாகவும்' என்று. அந்தப் பகவானையல்லவோ எல்லா ஶாஸ்த்ரங்களிலும், ப்ரீதியடைந்தவனாய்க்கொண்டு பலத்தைக் கொடுக்கிறான் என்று சொல்லப்படுகிறது, என்று முன்னமேயே நிஶ்சயிக்கப்பட்டது. தன்னால் செய்யப்படுகிற அழியக்கூடியவைகளாகிய யாகம்,உபாஸநம், முதலிய கார்யங்களில் காலாந்தரத்தில் வரப்போகிற பலத்திற்கு ஸாதானமிவை என்கிற புத்தியை விட்டுவிட்டுத்தானே எப்பொழுதும் ஸித்தனாயும், நித்யமாக இருப்பவனாயும்,எல்லாம் தெரிந்தவனாயும், ஸத்ய ஸங்கல்பனாயுமிருக்கை, மிகவும் உதாரனாக இருக்கை முதலிய குணங்களையுடையவனாயும் ஶாஸ்த்ரார்த்தங்கள் எல்லாவற்றினாலும் ஆராதிக்கப்படுகிறவனாயுமிருக்கிற எனனிடத்தில்

1 பகவத்கீதை - 9-24
2 பகவத்கீதை - 18-46

டையவும் ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படுகிற த்யாகம் என்பது *'𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌭𑌰𑌤𑌸𑌤𑍍𑌤𑌮 । 𑌤𑍍𑌯𑌾𑌗𑍋 𑌹𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ॥' என்றாரம்பித்து † '𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌫𑌲𑌂 𑌚𑍈𑌵 𑌸 𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍋 𑌮𑌤𑌃 । 𑌨 𑌹𑌿 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑌾 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍁𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌸 𑌤𑍍𑌯𑌾𑌗𑍀𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇' என்கிற வரையிலும் இந்த அத்யாயத்தின் முதலிலேயே நன்றாய் நிரூபிக்கப்பட்டது இப்படிச் செய்துகொண்டிருக்கிற உன்னை என்னை அடைவதற்குத் தடையாகவும் அநாதிகாலமாகச் சேர்க்கப்பட்டதாயும் எண்ணிறந்ததாயுமிருக்கிற செய்யத்தகாத கார்யத்தைச் செய்வது, செய்ய வேண்டிய கார்

இவனே பலத்தைக்கொடுக்கிறவன் என்றநுஸந்தானம் செய், என்று தாத்பர்யம். கர்மங்களின் ஸ்வரூபத்தை விட்டுவிடுவது முதலிய பக்ஷங்களில் இந்த ஸந்தர்ப்பம் பொருந்தாது என்று சொல்லுகிறார்—'இதுவே' என்றாரம்பித்து. 'நன்றாய் நிரூபிக்கப்பட்டது' என்பதற்குக் கருத்தாவது—இந்த ஶ்லோகத்தின் அர்த்தத்தை மேலெழுந்தபடியே பார்ப்பதினாலும் கபட யுக்திகளினாலும் வர்ணாஶ்ரம தர்மங்களின் ஸ்வரூபத்தையே விட்டுவிடவேண்டும் என்றிவை முதலிய பக்ஷங்கள் எப்படி உண்டாகாதோ அவ்விதமாக நிரூபிக்கப்பட்டது—என்பது. 'நான்' என்பதற்குக்கீழ்ச்சொல்லிய விதமாக ஆராதிக்கப்பட்டவனாயும் பலத்தைக் கொடுப்பதற்குபயோகமான ஸர்வஜ்ஞனாக இருக்கை, ஸர்வசக்தியாக இருக்கை, மிகுந்த கருணையுடையவனாயிருக்கை முதலிய குணங்களின் கூட்டங்களையுடைய நான் என்று தாத்பர்யம். இவ்விடத்தில் '𑌮𑌾' என்று சொல்லியிருப்பது உபாயத்தை அனுஷ்டித்தவனாக இருக்கும் தசையோடு கூடினவனைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'இப்படிச் செய்துகொண்டிருக்கிற உன்னை' என்று. நேரான உபாயத்தையும் '𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃' என்னும் பதத்தினால்சொல்லியிருப்பதினாலும், 1 '𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿' என்று கீழ்ச்சொல்லி யிருப்பதினாலும், 'என்னை அடைவதற்குத் தடையாகவும்' என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் தடங்கல்கள் நிவ்ருத்திப்பதே உபாயத்தினால் உண்டாக்கப்படுகிறது. தன்னுடைய ஸ்வரூபம் உள்ளபடி ப்ரகாசிப்பதாகிய பகவானை யடைவதோவெனில் தானாகவே உண்டாய் விடும் என்றபிப்ராயம். இவ்விடத்தில் '𑌸𑌰𑍍𑌵'

* பகவத்கீதை - 18 - 4. † பகவத்கீதை - 18 - 11

1 பகவத்கீதை - 18-65

யத்தைச் செய்யாமலிருப்பது, ஆகிய எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். வ்யஸனப்படாதே.

என்னும் பதத்தின் தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—'அநாதிகாலமாக' என்றாரம்பித்து.

மூன்று விதமான யோகங்களையும் பற்றி நிரூபணம் செய்தபிறகு எல்லாவற்றிற்கும் குஹ்யதமமாகிய ஶாஸ்த்ரஸாரார்த்தமும் தனித்துக் காட்டப்பட்ட பிறகு இவைகளுக்கு மேல் மூன்று யோகங்களுக்கும் பொதுவாயும் முன்னால் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டதாயுமிருக்கிற அனுஸந்தானத்தையே மறுபடியும் இவ்விடத்தில் சொல்லுவதில் என்ன ப்ரயோஜனம்? இந்த ஶ்லோகம் வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறதுமல்ல, அப்படித் தோன்றாமையினாலும் ஸங்க்ரஹத்தில் அப்படிச் சொல்லப்படாமையினாலும். இந்தச் ஶாஸ்த்ரத்தின் ஆரம்பத்திலேயே பாஷ்யத்தில் 1 'தமுவாச' என்கிற ஶ்லோகத்தின் வ்யாக்யானத்தில் 'பரமாத்மாவின் உண்மையை அடைவதற்குபாயமாகிய கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம் இவைகளைப்பற்றிய 2 'ந த்வேவாஹம் ஜாது நாஸம்' என்றாரம்பித்து 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:' என்கிற வரையிலுமுள்ள வார்த்தையைச் சொன்னார் என்றர்த்தம், என்று சொல்லப்பட்டது. மேலும் இவ்விடத்தில் 'மா ஶுச:' என்பது முதலில் உண்டாகிய தாகிய இடமில்லாத இடத்தில் உண்டான ப்ரீதி முதலியவைகளைக் காரணமாகவுடைய துக்கத்தைப் போக்குவதற்காகவல்ல, அது முழுமையும் முன்பே போக்கடிக்கப்பட்டபடியினால். ஆகையினால் 3 'மா ஶுச: ஸம்பதம் தைவீமபிஜாதோஸி' என்கிற இடத்தில் அடுத்த கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்டதைக் காரணமாகவுடைய துக்கத்தைப் போக்கடிப்பதற்காக, என்பது எப்படி ஒப்புக்கொள்ளப்பட்டதோ அப்படியே இவ்விடத்திலும் சொல்லுவது உசிதம். ஸூக்ஷ்மமான புத்தியுடையவனும் க்ஷத்திரியனும் தர்மத்தை அனுஷ்டானம் செய்பவர்களுக்குள் முதன்மையாயுமிருக்கிற அர்ஜுநனுக்கு ஸர்வஜ்ஞனால் சொல்லப்பட்ட உபாயங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளாமையினாலாவது, தான் தகாதவன் என்பதினாலாவது, முக்கியமான பாகத்தைப்பற்றிய நிஶ்சயமில்லாமையினாலாவது, இந்தத் துக்கம் உண்டாகவில்லை. பலத்தைப்பற்றிய ஸந்தேஹமும் 4 'மாமே

---

1 பகவத்கீதை- 2 2 பகவத்கீதை - 2-12
3 பகவத்கீதை - 16 - 5 4 பகவத்கீதை - 18,65

அதுவுமன்றிக்கே எல்லாப் பாபங்களிலிருந்து விடுபட்டவனை யும் பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவனாய் மிருக்கிற புருஷனால் பக்தியோகம் செய்யத் தக்கதாகையினாலும் அதை ஆரம்பிப்பதற்குத் தடங்கலான பாபங்கள் எண்ணிறந்தவைகளாகையினாலும் அதற்கு ப்ராயச்சித்தங்களாகிய அல்பகாலங்களில் செய்யப்பட்ட தர்மங்களி

ஷெவஷ்ணவீ' என்பவை முதலியவைகளினால் முழுமையும் நிவ்ருத்தி செய்யப்பட்டது. ஆகையினால் மிருதியாயிருக்கிற படியினால் வெகு நீண்டகாலம் இடைவிடாமல் ப்ரீதியுடன் அனுஷ்டிக்கத்தக்கதாகிய உபாயம் செய்யமுடியாமையினாலாவது, பலம் தாமதப்பட்டுக்கிடைக் கும் என்பதினாலாவது இந்தத் துக்கம் ஸம்பவிக்கலாமாகையினால் அப் படிப்பட்ட துக்கத்தை இந்த ஸ்லோகம் போக்கடிக்கிறதாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தினால் கீழ்ச்சொல்லிய அர்த்தத்தில் த்ரு ப்தி இல்லாமையினால் இங்கு உசிதமாயும் 'தூ்ம' என்னும் பதத் திற்கு ஸ்வாரஸ்யமான அர்த்தத்தோடு கூடியதாயுமிருக்கிற வேறு அர் த்தத்தைச்சொல்லுகிறார்—'அதுவுமன்றிக்கே' என்றாரம்பித்து. அதில் 'எல்லாப்பாபங்களிலிருந்து விடுபட்டவனையும்' என்பது உபாயத்திற்கு விரோதிகளாகிய எல்லாப்பாபங்களையும் குறிக்கிறது. பாபம்நிவ்ருத்திப் பதினால் பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதி உண்டாகிறது. 1'நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்திः ப்ரஜாயதே' என்றல்லவோ சொல்லப்படுகிறது 2 'விக்நாயநைந கோவிந்தே ந்ருணாம் பக்திர் நிவார்யதே' என்றிவை முதலியவைகளை நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'அதை ஆரம்பிப்பதற்குததடங்கலான' என்றாரம்பித்து. 1 'ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு' என்றிவை முதலியவைகளை அனு ஸரித்து 'அல்பகாலங்களில் செய்யப்பட்ட' என்றாரம்பித்துச் சொல்லப் பட்டது. இந்தப பாடத்தில் அவ்வளவு தாமதத்தைப் பொறுக்காமை சொல்லப்பட்டது. 'அபரிமிதகாலக்ருதைः' என்று பாடமானால் 'அபரி' என்னும் பதம் சேர்த்துக் கொள்ளத்தக்கது. அளவிறந்த காலங்களில் செய்யப்பட்ட போதிலும் என்றர்த்தம். இத்தால் இந்த

---

1 லகு விஷ்ணு ஸ்ம்ருதி - (அனேகம் ஆயிரம் ஜன்மங்களில் செய்த புண் ணிய கர்மங்களினால்) க்ஷீணபாபானாம் - போக்கடிக்கப்பட்ட பாபங்களையுடைய, நராணாம் - மனிதர்களுக்கு, க்ருஷ்ணே - க்ருஷ்ணனிடத்தில், பக்தி:—பக்தி, ப்ர ஜாயதே - உண்டாகிறது.

2 ந்ருணாம் - மனிதர்களுக்கு, கோவிந்தே - பகவானிடத்தில், பக்தி:— பக்தியானது, விக்நாயுதைந-அனேக விக்னங்களினால், நிவார்யதே - தடுக்கப்படு கிறது.

னால் அந்தப் பாபங்கள் நிவ்ருத்தி செய்யக்கூடாததாகையினாலும் தனக்குப் பக்தியோகத்தை ஆரம்பிக்க யோக்யதை இல்லை என்பதை ஆலோசித்துத் துக்கப்படுகிற அர்ஜுநனுடைய துக்கத்தைப் போக்கடித்துக்கொண்டு ஸ்ரீபகவான் சொல்லுகிறார்—'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ' என்று. பக்தியோகத்தை ஆரம்பிப்பதற்குத் தடங்கலாயும் அநாதிகாலமாகச் சேர்க்கப்பட்டதாயும் அநேகவிதங்களாயும் எண்ணிறந்தவைகளாயுமிருக்கிற பாபங்களுக்குத் தகுந்தபடி அவைகளுக்கு ப்ராயச்சித்தங்களாகிய க்ருச்ரம், சாந்த்ராயணம், கூஶ்மாண்டம், வைச்வாநரம், வ்ராததபதி, பவித்ரேஷ்டி, த்ரிவ்ருத், அக்னிஷ்டோமம், முதலியவைகளாகிய அநேகவிதங்களாயும் எண்ணிறந்தவைகளாயும்

உபாயம் ஸம்பாதிக்கமுடியாது என்பது தெரிவிக்கப்பட்டது. 'துக்கத்தைப்போக்கடித்துக்கொண்டு' என்பதற்கு துக்கத்தைப்போக்கடிப்பதற்காக என்றர்த்தம். 'மந்மநா பவ மத்பக்த:' என்று கீழ் ச்லோகத்தில் பக்தியோகம் ப்ரஸ்தாவிக்கப்பட்டபடியினால் அதை ஆரம்பிப்பதற்கு விரோதிகளாகையினாலே துக்கத்திற்குக் காரணங்களாயிருக்கிற பாபங்களைச் சொல்லுகிறது இவ்விடத்தில் 'ஸர்வபாப' என்னும் பதம். அந்தந்தப்பாபங்களை நிவ்ருத்தி செய்வதற்குக் காரணங்களாகச் சொல்லப்பட்ட தர்மங்களின் கூட்டங்களைச்சொல்லுகிறது 'ஸர்வதர்மாந்' என்னும் பதம். 'எந்தச் சாஸ்த்ரங்களைச்சுருக்கி சொல்லியிருக்கிறதோ அந்தத்கர்மத்தினால் பாபத்தைப் போக்கடித்துக்கொள்ளுகிறான்' என்றர்த்தமுள்ள ச்ருதிவாக்யம் பன்மையாகச் சொல்லி இருப்பதினாலும், 'ஸர்வ' என்னும் பதத்தினாலும் பாபங்களிலும் தர்மங்களிலும் அவைகள் அநேக விதங்களென்பதும் எண்ணிறந்தவைகள் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. இதையே சொல்லுகிறார்—'பக்தியோகத்தை ஆரம்பிப்பதற்குத் தடங்கலாயும்' என்றாரம்பித்து. 'க்ருச்ரம், சாந்த்ராயணம்' என்றாரம்பித்துப் பாபத்தைப் போக்கடிக்கக் கூடியவைகள் என்றெடுப்புக்கொள்ளப்பட்டவைகளைச் சொல்லியிருக்கிறது. 'அக்னிஷ்டோமம்' முதலியவைகளும் அவைகளுக்கு உபயோகங்கள் வெவ்வேறாக இருப்பதினால் அநேகவிதமான பலங்களுக்கு ஸாதனங்கள் என்பது முன்பே சொல்லப்பட்டது. 'முதலியவைகளாகிய' என்னும் பதத்தினால் கர்மயோகங்களின் உட்பிரிவாக 1 'தைவபைத்ர்யயஜ்ஞம்' என்றிவை முதலியவைகளினால் முன்பு நிரூபிக்கப்பட்டவைகளும் நிரூபிக்கப்படாதவைகளும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. இப்படியே ஜ்ஞான

---

1 தைத்திரீயம் - 2.

அல்பகாலம் ஜீவித்திருக்கிற உன்னால் அனுஷ்ட்டிக்க முடியாதவைகளு

யோகமும் 'முதலியவைகளாகிய' என்னும் பதத்தினால் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. அதுவும் பக்தியோகத்தை ஆரம்பிப்பதற்கு விரோதியாகிய பாபத்தைப் போக்கடிக்கிறதென்று முன்பே நிரூபிக்கப்பட்டிருப்பதினால். 'அல்பகாலம் ஜீவித்திருக்கிற' என்பது ஒரு ஶரீரத்தை அபிப்ராயத்தில் கொண்டிருக்கிறது. மிகவும் செய்யமுடியாத கார்யங்களை அனுஷ்ட்டானம் செய்வதினாலுண்டாகிய அநேகம் ஜன்மங்களில் செய்த புண்ணிய கர்மங்களின் ஸித்தியினால் உண்டாக்கக் கூடியது பக்தியோகம் என்கிற நிஶ்சயத்தினாலல்லவோ அர்ஜுநனுக்குத் துக்கமுண்டாயிருக்கிறது. 'ஸவ்ர் யஜூரிது வரித்யஜ்ய' என்று இந்த யோஜனையில் ஸ்வரூபத்தை விட்டு விடுவதே சொல்லப் படுகிறது. இதனாலே நித்ய நைமித்திகக் கர்மங்களுக்கு லோபம் வரவேண்டியதில்லை, அனுஷ்ட்டிக்க முடியாத ப்ராயஶ்சித்தம் முதலியவைகளைப்பற்றியதென்று சொல்லியிருக்கிறபடியினால். இதே ந்யாயத்தினால் நித்ய நைமித்திக கர்மங்களிலும் எவைகள் அனுஷ்ட்டிக்க முடியாதவைகளோ அவைகளைப்பற்றி விட்டுவிடு என்று விதிக்கலாமாகையினாலும், ஶக்தியுள்ளவனைக் குறித்தே ஶாஸ்த்ரங்கள் ப்ரவ்ருத்திக்கின்றனவாகையினாலே அஶக்தன் செய்யாவிடில் தோஷமில்லாமையினாலும், அனுகல்பத்தை மாத்திரம் அனுஷ்ட்டிக்க ஶக்தி இருக்கும் பக்ஷத்தில் அதுவே அனுஷ்டிக்கத் தக்கதாகையினாலும், இவ்விடத்தில் முக்கியமான கல்பத்தை அனுஷ்ட்டிக்க ஶக்தி இல்லாதவனைக் குறித்து எல்லாவித முக்கிய கல்பங்களுக்கும் அனுகல்பமாகப் பகவானிடத்தில் ப்ரபத்தி ஒன்றையே விதிக்கிறபடியினாலும், ஶக்தியுள்ளவன் ஶக்தி இல்லாதவன் முதலிய அதிகாரி வெவ்வேறாகையினாலும், முக்கிய கல்பம், அனுகல்பம், இவைகளுக்கு விஶேஷமான பலங்கள் ஸம்பவிக்கலாமாகையினாலும். ஆகையினாலேயே அல்பகார்யங்கள் பெரிய கார்யங்கள் இவைகளிரண்டையும் விகல்பமாகச் சொல்லுவது பொருந்தாது என்கிற ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை. எப்படி 1 'ப்ரணவம் வா த்ரிஸ்ஸ்ஸௌஜ ஸ்மரேத்வா விஷ்ணுமவ்யயம்' என்றும், 2 'ஶா

---

1 ப்ரணவத்தை மூன்று தரம் சொல்லவேண்டும். பகவானையாவது ஸ்மரிக்க வேண்டும்.

2 மாந்த்ரிகஸ்நாநம், பௌமஸ்நாநம், ஆக்நேய ஸ்நானம், வாயவ்ய ஸ்நானம் திவ்யஸ்நானம், வாருணஸ்நானம், மானஸ ஸ்நானம், என்று ஸ்நானம் ஏழுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மான எல்லாத் தர்மங்களையும் விட்டுவிட்டு பக்தியோகத்தின் ஆரம்பம்

[illegible] ' என்று சொல்லப்படு கிற பகவானை நினைப்பதே தலைமுழுகுவது முதலிய ஸ்நானங்களைச் செய்யச்சக்தி இல்லாதவனுக்கு அதின் பலத்தைக் கொடுப்பதாக விதிக்கப்படுகிறதோ, அப்படியே இவ்விடத்திலுமாகையினால் ஒருவிதத் தோஷமுமில்லை. இவ்விடத்தில் செய்யமுடியாமையினாலும்வெகுகாலம் செய்யக்கூடியதா யிருக்கிறபடியினாலும் அல்பசக்தியுடையவனையும் அல்பகாலம் ஜீவித்திருப்பவனையுமிருக்கிற புருஷனால் செய்யமுடியாத தர்மங்களினுடைய ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற த்யாகமே (விட்டு விடுவதே) பகவானொருவனையே உபாயமாக வரிக்கவேண்டுமென்று விதித்திருப்பதற்கு உபகாரமாக விதிப்பதைப்போல அனுவாதம் செய்யப்படுகிறது. எப்படி த்யானத்திற்குபகாரமாக இருப்பதினால் தன்னிஷ்டத்தினாலேயே ஏற்பட்டவைகளான கேழ்ப்பதும் மனனம் செய்வதும் 1 'கேழ்க்கத்தகுந்தவன் மனனம் செய்யத்தக்கவன்' என்கிற வாக்யங்களினால் அனுவாதம் செய்யப்படுகிறதோ அதைப்போல. அவனொருவனையே உபாயமாக வரிக்கவேண்டுமென்று விதித்திருப்பதும் அவனைத்தவிர மற்ற உபாயங்களை விட்டிருப்பதோடு சேர்ந்திருக்கிறது. இத்தால் அந்தப் பலத்திற்கு ஸாதனமாக விதிக்கப்பட்டிருக்கிற இதர தேவதைகளைப்பற்றிய தர்மங்களையும் பகவானிடத்திலும் மற்றத் தர்மங்களையும் விட்டுவிடுவது சேர்த்துக்கொள்ளப்படுகிறது. இப்படி இதர தேவதைகளைப்பற்றிய தர்மங்களைச் செய்யக்கூடாதென்று மறுப்பது தானாகவே ஏற்பட்டிருக்கும் பொழுது அந்த அர்த்தம் ஸித்திப்பதற்காக இவ்விடத்தில் 2 வ்யதிகாரண ஸமாஸம் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல, என்கிற அபிப்ராயத்தினால் 'எல்லாத்தர்மங்களையும்' என்று சொல்லப்பட்டது. தர்மங்களை யனுஷ்டிப்பதில் ஶக்தியுள்ளவனைக்குறித்து அவைகளைச்செய்யக்கூடாதென்று மறுத்தால் மற்ற ஶாஸ்த்ரங்கள் வ்யர்த்தமாக வேண்டிவரும். ஶக்தியில்லாதவனைக்குறித்தோவெனில் அவன் ஶக்தியில்லாமையினால் ஏற்கனவே செய்யாமையினால்ஶாஸ்த்ரத்தில் விதிக்கவேண்டியதில்லை? என்னில்இது உசிதமல்ல, ஶக்தி இல்லாதவனைக் குறித்தே ப்ரம்மாஸ்த்ரத்தின் கட்டு

---

1 ப்ருஹதாரண்யகம் - 6 - 5 - 6.

2 ஸர்வேஷாம் கர்மா:—எல்லாத் தேவதைகளையும் பற்றிய கர்மங்கள் என்பது.

முதலியவைகளைப்போல வேறு உபாயத்தை அங்கீகரிப்பது இதற்கு விரோதி என்று தெரிவிப்பதற்காகச் சொல்லவேண்டியதாகையினால். இதுவுமன்றிக்கே எந்தப் பலத்திற்காகச் ஶரணாகதி செய்யப்பட்டதோ அந்தப் பலத்தைக் குறித்து வேறு உபாயங்களை அனுஷ்டிக்கக்கூடிய ஶக்தி பிற்பாடு சில காரணங்களினால் ஸம்பவித்தபோதிலும் அந்தப் பலத்திற்காக அதை அங்கீகரிப்பது செய்யக்கூடாது என்று தெரிவிப்பதினால் இது ப்ரயோஜனத்தோடு கூடியதே. இவ்விடத்தில் '**அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**' என்று பலம் பகவானொருவனாலேயே உண்டாக்கக்கூடியது என்பது சொல்லப்படுகிறபடியினால் அவனொருவனிடத்திலேயே ப்ரபத்தி ஒன்றே பலத்திற்கு ஸாதனமாக அனுஷ்டிக்கவேண்டியதாக விதிக்கப்படுகிறது. எல்லாத் தர்மங்களையும் விட்டுவிடுவதோவெனில் ஒரே வாக்யத்தில் சொல்லப்பட்டிருப்பதினால் அதற்கங்கமாக ஏற்பட்டது. 1 'பலவத்ஸந்நிதாவபலம் ததங்கம்' என்கிற ந்யாயத்தினால், அதில் முன்பே ஏற்பட்டிருக்கிற த்யாகத்தைச் சொல்லும்பக்ஷத்தில் அதிகாரத்தில் சேர்ந்து விடுகிறது. அப்படிக்கில்லாவிடில் லிங்கத்தினால் அவனொருவனையே ஶரணமாக அடைவதற்குபயோகமான ரூபத்தைச் சொல்லுகிறது. அவனொருவனே உபாயம் என்கிற நிஶ்சயம் அவனைத் தவிர வேறொரு உபாயத்தை அனுஷ்டிப்பதோடு விருத்தமானது. ஆகையினால் நெல்லைக் குத்துவது யாகத்திற்கு வேண்டியதாகிய அரிசியாக வேண்டியதற்குபயோகமாகும் வரையில் முடிவு பெறுகிறதைப்போல அவனொருவனைக் குறித்து ப்ரபத்தி செய்வதற்கு விரோதியான தர்மங்களைவிட்டுவிடவேண்டும் என்பதில் முடிவு பெறுகிறபடியினால் அந்தப் பலத்திற்குபாயங்களல்லாமலும் அதற்கு விரோதிகளல்லாமலுமிருக்கிற நித்ய கர்மம் முதலியவைகளை விட்டுவிடுவது இதற்கு ஒத்தாசையாக வேண்டியதில்லையாகையினால் வர்ணாஶ்ரமங்களைக்குறித்து ஸ்வதந்த்ர விதிகளினால் ஏற்பட்ட தர்மங்கள் முன்போலவே இருக்கின்றன. அவைகளும் ப்ரபத்திக்கு அங்கங்களுமல்ல அங்கிகளுமல்ல, அப்படி ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்படாமையினாலும், ஶக்தி இல்லாதவனைக்குறித்து செய்யமுடியாத நித்ய நைமித்திக கர்மங்களை அங்கமாகவுடைய ப்ரபத்தியை விதிப்பது பொருந்தாதாகையினாலும், அப்படி ப்ரபத்திக்கு அங்கமாக இல்லாமலிருந்தபோதிலும் வேறொருபலத்திற்காகவாவது

1 மீமாம்ஸாந்யாயம் ப்ரயோஜனத்திற்குபாயமாகச் சொல்லப்படுகிற ஒரு கர்மத்தின் ஸமீபத்தில் பலத்திற்கு உபயோகமாகவல்லாமல் சொல்லப்படுகிற தர்மம் அதற்கங்கம்.

வர்ணாஶ்ரமங்களுக்காகவாவது யஜ்ஞம் முதலியவைகளை அநுஷ்டிப்பது உசிதமாகையினாலும், 'ஸர்வ'என்னும் பதத்தினால் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு எதிர்நடையாக 'ஏகம்' என்கிறஇடத்தில் 'ஏக' என்னும் பதம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் பகவானிடத்தில் ப்ரபத்தி ஒன்றே எல்லாவற்றிற்கும் ப்ராயஶ்சித்தமாகும் என்று சொல்லப்பட்டதாகிறது. ஶரணாகதியின் ஸ்வபாவத்தினால் அதைத்தவிர மற்ற உபாயத்தை விட்டுவிடவேண்டும் ஏற்படும் அப்படியே 1 'அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிஶ்வாஸ பூர்வகம் | ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்தி: ஶரணாகதி:||' என்றுலக்ஷணம் சொல்லியிருக்கிறார்கள். இவ்விடத்தில் 'ஶரண' என்னும் பதம் உபாயம் என்னுமர்த்தத்தைச் சொல்லுகிறது. அப்படியே ப்ரபத்தி ப்ரகரணத்தில் 2 'உபாயே க்ருஹரக்ஷித்ரோ: ஶப்த: ஶரணமித்யயம் | வர்த்ததே ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தைகவாசக

1 பரதமுனி வாக்யம். ஸ்வாபீஷ்டே—தன்னுடைய இஷ்டபலமானது, அநந்யஸாத்யே - வேறொரு உபாயத்தினாலும் ஸாதிக்கமுடியாமலிருக்கும்பொழுது, மஹாவிஶ்வாஸபூர்வகம்-மஹாவிஶ்வாஸத்தை முன்னிட்டுக்கொண்டு, ததேகோபாயதாயாச்ஞா - அவனொருவனே உபாயமாக வேண்டுமென்று யாசிப்பது, ப்ரபத்தி:—ப்ரபத்தி, அதுதான் ஶரணாகதி.

2 அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - 36-38. அயம் - இந்த, ஶரணமிதி - ஶரணம் என்கிற, சப்த:-பதம், உபாயே - உபாயம் என்கிற அர்த்தத்திலும், க்ருஹரக்ஷித்ரோ:—வீடு, காப்பாற்றுகிறவன், என்கிற அர்த்தங்களிலும், வர்த்ததே - இருக்கிறது, அதாவது இந்த மூன்று வித அர்த்தங்களையும் சொல்லுகிறது, ஸாம்ப்ரதம்து - இப்பொழுதோவெனில், இவ்விடத்தில் இப்பொழுது என்பதினால் இந்த ஸந்தர்ப்பம் த்வயம் என்னும் மந்த்ரத்திற்கு வ்யாக்யானம் செய்துகொண்டு வரும் ஸந்தர்ப்பமாகையினால் த்வயத்தில் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது, ஆகையினால் ஶரணாகதியைச் சொல்லும் எல்லா இடங்களிலும் என்று தாத்பர்யம், ஏஷ:—இந்தப்பதம், உபாயார்த்தைகவாசக:—உபாயம் என்கிற ஒரு அர்த்தத்தையே சொல்லுகிறது, என்றர்த்தம். இவ்விடத்தில் சிலர் 'ஏக' என்னும் பதத்தின் அர்த்தமாகிய ஏகத்வம் 'ஸ்வாநந்யஸ்ய யத்நாந்தரஸ்ய க்ருதா நிரபேக்ஷஸ்ய ஸம்பந்தாஸ்த்வநிஷ்டே ப்ருதிவ்யோமிதாகார ஹாஸ்யஸம்பந்தேந யதி பாரதந்த்ர்யேண ஸ்வதந்த்ரோ 'ஶரண' ஶப்தேநேதி | ததாச உபாயஸ்ய நிரபேக்ஷஸ்ய விஶிஷ்டாயத்நாந்தரஸ்ய க்ருதா நிரபேக்ஷ: ஸ்வாநந்யஸ்ய யத்நாந்தரஸ்ய க்ருதா நிரபேக்ஷஸ்ய ஸம்பந்தாஸ்த்வநிஷ்டே ப்ருதிவ்யாமிதாகாராஹாஸ்யஸம்பந்தேந ததேகஸ்யவிஶிஷ்ட ஶரணஶப்த இதிவாச்ய: | இதின் கருத்தாவது - உபாயார்த்தைகவாசக:-என்கிற இடத்திலிருக்

கும் ‘ஏக’ என்னும் பதத்திற்கு ஏகத்வம் (ஒன்றாக இருக்கை) அர்த்தம். அது ‘ஏஷ:’ என்னும் பதத்தின் அர்த்தமாகிய ஶரணஶப்தத்தில் கீழ்ச் சொல்லிய ஸம்பந்தத்தினால் அந்வயிக்கிறது. கீழ்ச்சொல்லிய ஸம்பந்தத்தின் கருத்தாவது—உபாயமாக இருக்கும் ஸ்வபாவம் அனேகமாக இருந்தால் இதினிடத்திலிருக்கும் உபாயமாகும் தன்மையைத் தவிர மற்றொன்றைச் சொல்லாது—என்பது, என்று சொல்லி இதற்கு ‘பசுனாயஜேத’ என்கிற இடத்தில் அனேக பசுக்களைக்கொண்டு ஒரு யாகம் செய்தால் அது ஸரியான யாகமில்லாமையினால் அத்ருஷ்டம் உண்டாகிறதில்லை. ஆகையினால் ‘பசுனா’ என்கிற பதத்திலிருக்கும் ஒருமையின் அர்த்தமாகிய ஏகத்வம் (ஒன்றாக இருக்கை) பசுவினிடத்தில் கீழ்ச் சொல்லியதைப்போல அந்வயிக்கிறது என்று உதாஹரணம் சொல்லியிருக்கிறார்கள். இது யோசிக்கத்தகுந்த விஷயம். ஏனெனில் இவ்விடத்தில் ‘பசுனாயஜேத’ என்கிற இடத்தை உதாஹரணமாக வைத்துக்கொண்டு ‘பசுனா’ என்கிற பதத்திலிருக்கும் ஒருமைக்கு ஒன்று என்றர்த்தம். ஆகையினால் அந்த ஒன்றென்கிற பதம் பசு என்னும் பதத்தோடு சேர்ந்து ஒரு பசுவைக்கொண்டு யாகம் செய்ய வேண்டும் என்றர்த்தமாகிறபடியினால் அனேகம் பசுக்களைக்கொண்டு ஒரு யாகத்தைச் செய்தால் அத்ருஷ்டம் உண்டாகாது என்று மீமாம்ஸகர்களின் கொள்கை. இதை உதாஹரணமாக வைத்துக்கொண்டு இவ்விடத்தில் ‘ஏக’ என்னும் பதம் ‘ஏஷ:’ என்னும் பதத்தோடு அந்வயிக்கிறது என்று நினைத்து அதற்கொருவிதமான ஸம்பந்தத்தைக் கட்டியிருப்பது மிகவும் அனுசிதம். அவ்விடத்தில் ‘பசு’ என்னும் பதத்திலேயே ஒருமை இருக்கிறபடியினால் அந்த ஒருமையின் அர்த்தமாகிய ஒன்றென்பது ‘பசு’ என்னும் பதத்தோடு சேரவேண்டியது ‘ப்ரத்யயானாம் ப்ரக்ருத்யர்த்தான்வித ஸ்வார்த்த போதகத்வம்’ என்கிற ந்யாயத்தை அனுஸரித்ததாக இருக்கிறது. இவ்விடத்தில் ‘உபாயார்த்தைக வாசக:’ என்கிற ஸமஸ்தபதத்தின் நடுவிலிருக்கிற ‘ஏக’ என்னும் பதத்தின் அர்த்தமாகிய ஒன்று என்பது (ஏகத்வம்) ‘ஏஷ’: என்னும் பதத்தின் அர்த்தமாகிய ஶரணஶப்தத்தில் அந்வயிக்க வேண்டுமென்கிற நிர்ப்பந்தமுமில்லை. அப்படி அந்வயிப்பதில் ப்ரயோஜனமுமில்லை, ந்யாயமுமில்லை. உபாயம் என்கிற அர்த்தம் ஒன்றையே சொல்லுகிறது என்று நேரிலேயே சொல்லியிருப்பதினால் ‘உபாயகஸ்வ வ்யதிரிக்தாஹா ஹாயகஸ்வ விஶிஷ்ட உபாயகஸ்வ பரிஹாராய ஹாயகம்’ என்றே நேரில் அர்த்தமாகிறது. அதாவது உபாயத்வம் தவிர வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறதில்லை. உபாயத்வம் என்கிற ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறது என்று ஸ்பஷ்டமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இவ்வளவு ஶ்ரமப்பட்டு அர்த்தம் சொன்னதற்கு தாத்பர்யம் என்னவென்று யோசிப்போம். பகவானே உபாயம் என்று சொல்லுவதினால் கொஞ்சம் கொஞ்சமாக ப்ரபத்தி உபாயமல்ல என்று சொல்லுவதில் தாத்பர்யமாயிருக்கலாம். அதுவும் தங்கள் பூர்வாசார்யர்களின் க்ரந்தங்களைப் பரிசயம் செய்யாததினால் உண்டான குற்றமென்று சொல்லலாம். எப்படி என்னில் 36,000-படி முதல் ஸ்ரீயஃபதியில் ‘இவ் விரோதி நிவ்ருத்திக்கும் புருஷார்த்த ஸித்திக்கும் உபாயம் ஏதென்னில் த்ரைவர்ணிகாதிகாரமான பக்தியும் அகிஞ்சனாதிகாரிகமான ப்ரபத்தியும் என்றிரண்டி

றே வேதாந்த ஸித்தமான உபாயம், இதில் ப்ரபத்தியே உபாயமென்று தமக்கு ஸித்தாந்தம் என்னும் ஆகாரம் தோற்ற உபாயவேஷத்தை அருளிச்செய்தார்.' என்னும வாக்யமிருக்கிறது. அர்த்த பஞ்சகம் என்னும் ரஹஸ்யத்தில் கர்மயோகம், ஜ்ஞானயோகம்,பக்தியோகம்,ப்ரபத்தி, ஆசார்யநிஷ்டை ஆக உபாயம் ஐந்து என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. 'வீடுமின் முற்றவும்' என்னும் திருவாய்மொழியின் ப்ரவேசத்தில் 'நாநாஶூந்யாதி ஹேத்வாத்வயவேதோ ந ஹ்யஜ்ஞேந ஸித்திர்விதேத ஸாத்யஸாதநயோ:' என்று வேதாந்த ஸித்தோபாயம் த்விவிதமாகையிலே எந்த உபாயத்தை இத்திருவாய்மொழி சொல்லுகிறதென்ன இத்திருவாய்மொழி தன்னை (இத்யாதி)இத்தால்பரபக்தியுபாயத்தைச்சொல்லுகிற தென்றபடி' என்கிற வாக்யஙகள் காணப்படுகின்றன. 'உலகமுண்ட' திருவாய்மொழியின் ப்ரவேசத்தில் 36,000படியில்'இனித்தான் ஶரணாகதி பல ப்ரதையாமிடத்தில் ஶரண்யன்பக்கலிலே பண்ணவும் வேணும் தானதிகாரியாகவும் வேணும்' என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. 'நெறியெல்லாமெடுத் துரைத்த' என்பதற்கு வ்யாக்யானம் செய்யுமிடத்திலும் கர்மயோகம் முதலாக ப்ரபத்திவரையிலுமுள்ள உபாயங்களை யெல்லாம் என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படியே இன்னும் அனேக ரஹஸ்யங்களில் பல இடங்களிலும் ப்ரபத்தி உபாயமென்று விசதமாக அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தங்கள் ஆசார்யர்களினுடைய ஸ்ரீஸூக்திகளை அறியாமையாலே 'ப்ரபத்யனுபாயத்வ விசாரம்' எழுதுகிறவர்களும், 'ஶரணஶப்தார்த்த விசாரம்' எழுதுகிறவர்களுமாக இருக்கிருர்கள். ஆகையினுல் இதைக்கொண்டு ப்ரபத்தி உபாயமில்லை என்று சொல்லுவது முடியாது. அந்த ஸம்பந்தத்தில் அந்த ஆத்தமுமேற்படாது. உபாயத்வம் என்கிற ஒருவித ஸ்வபாவத்தையுடைய வஸ்துவைத் தவிர மற்ற வஸ்துவைச் சொல்லுகிறதில்லை என்பது மாத்திரம் அதிலுலேற்படுமே ஒழிய உபாயத்வம் என்கிற ஸ்வபாவத்தையுடைய ப்ரபத்தியை அதினுல் விலக்க முடியாது. மேலும் அதிலேயே ரக்ஷகனுக இருக்கையும் உபாயமாக இருக்கையும் ஒன்ருக இருந்தால் ரக்ஷகன் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறதல்ல என்று விலக்கி உபாயமென்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறதென்று தனித்துச் சொல்லியிருப்பது பொருந்தாது. கீழ்ச்சொன்ன ஸம்பந்தமும் ஒவ்வாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவை இரண்டும் ஒன்றென்று சொல்லுகிறவர்களுக்கு இது தூஷணமாகுமே ஒழிய நம் தேசிகனுடைய ஸித்தாந்தத்தில் இது கொஞ்சமேனும் ஒட்டாதாகையினுல் 'ஸ்வஹஸ்தோத்க்ஷிப்தேத: ஸ்வகண்டநிஜஶ்ரோத்ருஷ்டவஹஸம்ஸ்ருஷ்டி ஜம்ஹாமேவைஷ ஜம்ப தவஸாரவிம்வதிஜய:।' என்று ஸ்ரீதேசிகன் தாமே அருளிச் செய்திருக்கிறபடியே தன் கையினுல் சேற்றை எடுத்து ஆகாசத்தில் பூச எத்தனித்து வீசி எறியும் பொழுது அது தன் மேலேயே விழுந்து தானே தன் ஶரீரத்தைச் சேறுக்கிக் கொள்ளுவது போலத் தானே தன்னைப் பரிஹாஸத்திற்குப் பாத்திரனுக்கிக்கொள்ளுகிருன்.இவ்விடத்திலேயே தாத்பர்ய சந்த்ரிகையில் 'உபாயமாக இருக்கையாவது கருணை முதலிய குணஙகளோடு கூடிய பகவான் உபாயங்களின் ஸ்தானத்திலிருந்துகொண்டு

ஸித்திப்பதற்காக மிகுந்த கருணையுடையவனும் ஒருவித வ்யத்யாஸங்களையும் யோசிக்காமல் எல்லா லோகங்களுக்கும் ஶரண்யனும் தன்னை

க:॥' என்று சொல்லப்பட்டது 1 'ஶரணம் க்ருஹரக்ஷித்ரோ: உபாயேச நிகத்யதே' என்றும் சொல்லுகிறார்கள். உபாயமாக இருக்கையாவது கருணை முதலிய குணங்களோடு கூடிய பகவான் உபாயத்தின் ஸ்தானத்திலிருந்துகொண்டு அதின் கார்யத்தைத் தான் செய்கிறபடியினால் என்கிற அபிப்ராயத்தினால் 'மிகுந்த கருணையுடையவனும்' என்றிவை முதலிய குணங்களைச் சொல்லியிருக்கிறது. 'ஶக:' என்பது வேறொரு ஒத்தாசை வேண்டியதில்லை என்பதைச் சொல்லுகிறதாகவுமாம். அது ஸித்திப்பதற்காகவும் 'ஶரம்' என்பதினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டவைகளாகக் கருணை முதலிய குணங்களைச் சொல்லி இருக்கிறது. 'மிகுந்த கருணையுடையவனும்' என்பதற்கு 2 'வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்' என்றிவை முதலியவைகளினால் க்ருபை அதிகமென்பதும் அதனால் ஶரண்யன் என்பது மேற்பட்டது என்று தாத்பர்யம். அந்தக் கருணைக்குச் சுருக்கமில்லை என்று சொல்லுகிறார்—'ஒருவித வ்யத்யாஸங்களையும்' என்றாரம்பித்து. 3 'எல்லாவற்றிற்கும் யஜமானனும் நியமிக்கிறவனும் எல்லாவற்றிற்கும் ரக்ஷகனும் ஸுஹ்ருத்தாயுமிருக்கிற' என்றர்த்தமுள்ள வாக்யமும் ஶ்ருதியில் சொல்லப்படுகிறது. 4 'ஸர்வலோக ஶரண்யாய' என்று ராவணன் தம்பியின்

அதின் கார்யத்தைத் தான் செய்கிறபடியினால்' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அதினால் உபாயத்தின் ஸ்தானத்தில் நிற்கையாகிற ஒரு விஶேஷம் ரக்ஷகனாக இருக்கையை விட வேறாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியினால். இனி இவ்விஷயத்தில் சொல்லவேண்டிய விஸ்தாரங்கள் நிக்ஷேப ரக்ஷை, பதத்ராணம், முதலிய நம்முடைய க்ரந்தங்களில் கண்டு கொள்ளுவது.

1 *நிகண்டு-ஶரணம் என்னும் பதம் உபாயம், வீடு, ரக்ஷிக்கிறவன், என்னும் அர்த்தங்களில் சொல்லப்படுகிறது.*

2 *ராமாயணம்-சுந்தரகாண்டம் - 38.34-காகுத்ஸ்த:—ஸ்ரீராமன், வதார்ஹமபி-கொல்லத்தகுந்ததாயிருந்த போதிலும் (அந்தக்காகத்தை), க்ருபயா - க்ருபையினால், பர்யபாலயத் - காப்பாற்றினார்.*

3 *ஶ்வேதாஶ்வதரம் - 3-17*

4 *ராமாயணம் - யுத்தகாண்டம் - 17-15. எல்லா லோகங்களுக்கும் ரக்ஷகனாயிருக்கிற.*

அடைந்தவர்களிடத்தில் வாத்ஸல்யத்திற்கு ஸமுத்ரமாயுமிருக்கிற என்னொருவனையே ஶரணமாக அடை. நான் உன்னைக் கீழ்ச்சொல்லியவிதமான பக்தியோகத்தை ஆரம்பிப்பதற்குத் தடங்கல்களாகிய எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். நீ துக்கப்படாதே. 66

வார்த்தையுமிருக்கிறது. 1 ‘விபீஷணோ வா ஸுக்ரீவ யதிவா ராவண: ஸ்வயம்’ என்கிற தன்னுடைய வார்த்தையுமிருக்கிறது என்று தாத்பர்யம். ‘வ்யத்யாஸங்கள்’ என்னும் பதம் இவ்விடத்தில் ஜாதி, வர்ணம், வித்யை, நன்னடத்தை, குணங்கள், ஸம்ஸ்காரங்கள், முன் செய்ததாகவாவது, இனிச் செய்யப்போகிறதாகவாவதிருக்கிற உபகாரம் முதலியவைகளைச் சொல்லுகிறது. கீழ்ச்சொல்லியவைகளை விட்டுப் பிரியாததான மற்றொரு குணத்தைச் சொல்லுகிறார்—‘தன்னை அடைந்தவர்களிடத்தில்’ என்றாரம்பித்து. 2 ‘விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல:’ என்றல்லவோ சொல்லப்பட்டது. 3 ‘தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்’ என்றிவை முதலிய இடங்களில் சொல்லியிருக்கிறபடி தோஷங்களை அனுதரவு செய்வதற்காகவாத்ஸல்யத்தைச் சொல்லி இருக்கிறது. நடப்பதைச் சொல்லுகிற தாதுக்களெல்லாம் அறிவதைச் சொல்லுவதாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதினால் ‘வ்ரஜ’ என்னும் பதம் முன் யோசனையில் அனுஸந்தானம் மாத்திரத்தைச் சொல்லுவதாக வ்யாக்யானம் செய்யப்பட்டது. இந்த யோசனையிலேயே வெனில் ரக்ஷிக்கப்போகிறான் என்கிற மஹா விஶ்வாஸத்தை முன்னிட்டுக்கொண்டு மற்ற அங்கங்களோடு கூடிய நிஶ்சயமாகிற ஒருவித விஶேஷமான புத்தியைச் சொல்லுகிற பதத்தினால வ்யாக்யானம் செய்கிறார்—‘ஶரணமாக அடை’ என்று. ‘நான் உன்னை’ என்பதற்கு எல்லாந் தெரிந்தவனும் எல்லாவிதச் ஶக்தியை யுடையவனுமிருக்கிற நான் அல்பம் தெரிந்தவனும் அல்ப ஶக்தியுடையவனுமிருக்கிற உன்னை என்றர்த்தம். ‘ஸர்வஜ்ஞ:’ என்பதற்கு ஒன்றும் ஸாலய

---

1 ராமாயணம் - யுத்தகாண்டம்-17-36. ஸுக்ரீவ - ஓ ஸுக்ரீவ, (இவன்) விபீஷணோவா-விபீஷணனுயிருந்த போதிலும், யதிவாராவணஸ்வயம்—ராவணனாக இருந்தபோதிலும் (அழைத்துக்கொண்டுவா).

2 ராமாயணம்-சுந்திரகாண்டம்-21-19. ஸ:—அந்த ஸ்ரீராமன், தர்மஜ்ஞ:-தர்மங்களை அறிந்தவராகவும், ஶரணாகதவத்ஸல:-தன்னை அடைந்தவர்களிடத்தில் ப்ரீதியையுடையவராகவும், விதித:ஹி - (எல்லாராலும்) அறியப்பட்டவரல்லவா.

3 ராமாயணம்-யுத்தகாண்டம்-18-3-தஸ்ய - அந்த ஶரணாகதி செய்தவனுக்கு' தோஷ:-பாபம், ஸ்யாத்யத்யபி-இருந்தாலும் இருக்கட்டும்.

மாய்ச் செய்யக்கூடியதாயுமிருக்கிற உபாயத்தினால் தாமதமில்லாமல் ஸகல பலங்களும் ஸித்தித்து விடுகிறபடியினால் எண்ணிறந்தவைகளாயும் செய்யமுடியாதவைகளாயும் தாமதப்பட்டுப் பலத்தை உண்டாக்கக்கூடியவைகளாயும் தனித்தனியே ஒவ்வொரு பாபத்தையும் போக்கடிக்கக்கூடியதாயு மிருக்கிற தர்மங்களினால் இப்பொழுதே பக்தி யோகத்தை ஆரம்பிக்கத் தகுந்த யோக்யதையை ஸம்பாதிப்பது முடியாது என்பதினாலுண்டாகிய துக்கத்தை யடையாதே என்றர்த்தம் இப்படிச் சிலவித இஷ்டபலங்களுக்கும் ஸாதனமாகப்பகவச் சாஸ்த்ரம் முதலியவைகளில் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிற பகவானிடத்தில் ப்ரபத்தி இவ்விடத்தில் கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்ட பக்தியோகத்தை ஆரம்பிப்பதற்கு விரோதியாகிய பாபங்களை நிவ்ருத்தி செய்வதாகிய ஒரு உதாஹரணத்தில் காட்டப்பட்டது.

1 ஸ்வது₃ஷ்கரேண ஶோசேத்₃யோ
யேந யேநேஷ்டஹேதுநா ।
ஸ தஸ்யாஹமேவேதி
சரமஶ்லோக ஸங்க்₃ரஹ: ॥

ஆகையினாலேயே இவ்விடத்திலிருக்கிற பாஷ்யத்திற்கும் ஶரணாகதி கத்யத்திற்கும் விரோதமில்லை என்று தாத்பர்யம். இந்த ஶ்லோகத்தில் ‘மந்மநா ப₄வ’ என்கிற ஶ்லோகத்தினால் கர்மயோக நிஷ்டைகள் எல்லாவற்றிற்கும் முக்கியமான ரஹஸ்யமாகிய பகவானையே ஶரணமாகவுடையவனா யிருக்கையை நிகமனம் செய்து பிறகு இப்பொழுது கர்மயோக நிஷ்டைக்குப் பலமாகிய எல்லா வேதாந்தங்களுக்கும் ஸாரமாய் விதிக்கப்பட்டிருக்கிற தத்துவ ஜ்ஞானம் சொல்லவேண்டியதாகையினால் அதைச் சொல்லுகிறார் — ‘ஸர்வத₄ர்மாந்’ என்கிற ஶ்லோகத்தினால் என்று சங்கராசார்யரால் அர்த்தம்

1 தாத்பர்ய சந்த்ரிகைக் காராகிய ஸ்ரீமந் நிகமாந்த தேசிகன் அருளிச்செய்தது. ய:-எவன், ஸ்வதுஷ்கரேண-தன்னால் செய்யமுடியாததாகிய, யேநயேந-எந்தெந்த, இஷ்டஹேதுநா - இஷ்டபலத்திற்குக் காரணமாகிய உபாயத்தினால், ஶோசேத்-துக்கிப்பனோ, ஸ: தஸ்ய-அவனுக்கு அந்தந்த உபாயம், அஹமேவ-நானே, இதி-என்று, சரமஶ்லோக ஸங்க்ரஹ:-சரமஶ்லோகத்தின் ஸாரமான அர்த்தம்.

சொல்லப்பட்டது. இதுவும் 1 'ஸந்ந்யாஸஸ்ய விபரீதாம்ஸு' என்கிற தற்கு ஒரு உதாஹரணம். ஏனெனில் கர்மயோகநிஷ்டையைவிட வேறாக பக்தியோக நிஷ்டை கீழ் ஶ்லோகத்தில் காட்டப்பட்டிருப்பதினாலும், இந்த ஶ்லோகத்திலேயே 'ஶரணம் வ்ரஜ' என்று நேரில சொல்லியிருக்கிறபடியினாலும் முன் ஶ்லோகத்தில் பகவானையே ஶரணமாக வுடையவனாயிருக்கையை உபஸம்ஹாரம் செய்திருக்கிறது பொருந்தவில்லை யாகையினால். மேலும் இந்த ஶ்லோகத்தில் 'ஏகம்' என்பதற்கு எல்லாவற்றிற்கு மாத்மாவாயும் எல்லாவற்றிற்கும் ஸமானனாயும் எல்லா ப்ராணிகளிடத்திலு மிருப்பவனாயும் ஈஶ்வரனாயுமிருக்கிற என்னை நானே அவன் என்று சரணமாக வடை, என்னைவிட வேறொருவரில்லை என்று தெரிந்துகொள், என்றர்த்தம் என்று சொல்லப்பட்டதே. இந்த விஷயத்தில் பதங்களுக்கு இப்படி அர்த்தம் சொல்லக்கூடிய ஶக்தி இல்லை. பதங்களுக்கப்படி அர்த்தமில்லாமலிருக்க அதைவிட்டு லக்ஷணையாக அர்த்தம் சொல்லுவதில் காரணத்தை ஒன்றையும் காணேம். அதுவு மல்லாமல் 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்கிற வாக்யத்தின் ஸ்வாரஸ்யததினாலும் ஸ்ரீராமன் விபீஷணன் முதலியவர்களைப்போலச் ஶரணமாக அடையப்படுகிறவனுக்கும் ஶரணமாக அடைகிறவனுக்கும் ரக்ஷிக்கிறவன் ரக்ஷிக்கப்படுகிறவன் என்கிற வ்யத்யாஸமே ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. மற்ற ஶாஸ்த்ரங்களும் இதற்கு விரோதமில்லாமல் முன்பே ஸ்தாபிக்கப்பட்டன. மேலும் இவ்விடத்தில்—'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய' என்பதினால் எல்லாக் கர்மங்களினுடையவும் ஸ்வரூபத்தையே விட்டுவிட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதே அதுவும் இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட தாமஸ த்யாகத்தை அங்கீகரித்ததாகும். இதை நிராகரிப்பதற்காகவே பாஷ்யத்தில் இந்த ஶ்லோகத்தில் ஸாத்விக த்யாகம் சொல்லப்பட்டது. கர்மங்களில் அதிகாரமுள்ளவர்களுக்குள்ளேயே ஸாத்விகம், ராஜஸம், தாமஸம், என்று சொல்லப்படுகிற வ்யத்யாஸங்கள் உண்டு. தத்துவத்தை அறிந்தவர்களாய் எல்லாக் கர்மங்களையும் விட்டவர்களுக்கு அஜ்ஞானம், துக்கம், இவைகளைக் காரணமாகவுடைய த்யாகம் ஸம்பவிக்காதாகையினால், ஸாத்விக த்யாகமும் அந்தக் கர்மங்களில் நிஷ்டையுடையவர்களைக் குறித்தே சொல்லப்படுகிறது என்று அவ்விடத்திலேயே நம்மால் வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்

1 பகவத்கீதை-18-32.

கிறது என்னில் அதுவும் உசிதமல்ல, அவ்விடத்தில் கேட்டிருப்பது பொதுவாக த்யாகம், ஸந்நியாஸம், இவைகளின் ஸ்வரூபத்தைப்பற்றியதாகையினால் பதிலும் பொதுவாகச் சொல்லியிருக்கிறதென்பதேற்படுகிறது. ஜ்ஞானயோகத்தில் நிஷ்டையுடையவர்களுக்கு நித்யமாயும் நைமித்திகமாயுமிருக்கிற கர்மங்களின் ஸ்வரூபத்தை விட்டுவிடுவது முன்னமேயே நிராகரிக்கப்பட்டிருப்பதினால் அநுகீதையில் 1 '𑌨𑍈𑌵 𑌧𑌰𑍍𑌮𑍀 𑌨 𑌚𑌾𑌧𑌰𑍍𑌮𑍀 𑌨 𑌚𑌾𑌪𑌿 𑌹𑌿 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑍀 । 𑌯𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑌾𑌸𑌨𑍇 𑌲𑍀𑌨𑌃 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 ॥' என்றும், 2 '𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌲𑌕𑍍𑌷𑌣𑌂' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறதே அதுவும், ஸ்ரீபாகவத புராணத்தில் 3 '𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍁𑌦𑍍𑌧𑌵𑍋𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌚𑍋𑌦𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌚𑍋𑌦𑌨𑌾𑌂 । 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍇𑌵 𑌚 ॥ 𑌮𑌾𑌮𑍇𑌕𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 । 𑌯𑌾𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑍇𑌨 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌹𑍍𑌯𑌕𑍁𑌤𑍋𑌭𑌯𑌂' ॥ என்றும், மற்றோரிடத்திலும் 4 '𑌤𑍍𑌯𑌜 𑌧𑌰𑍍𑌮𑌮𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚 𑌤𑍍𑌯𑌜 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍃𑌤𑍇 𑌉𑌭𑍇 । 𑌉𑌭𑍇

---

1 பாரதம்-ஆச்வமேதிக பர்வம்-நைவதர்மீ-தர்மங்களைச் செய்யாதவனாகவும், நசாதர்மீ-அதர்மங்களைச் செய்யாதவனாகவும், நசாபிஹி சுபாசுபீ-சுபமான பலம், அசுபமான பலம், இவைகளில் ஆசையில்லாதவனாகவும், ய: - எவன், ஏகாஸனே-ஒரே ஆஸனத்திலேயே, லீந:-உட்கார்ந்துகொண்டு, தூஷ்ணீம்-பேசாமல், கிஞ்சித்-ஒன்றையும், அசிந்தயந் - யோசிக்காமல், ஸ்யாத்-இருப்பானோ.

2 ஜ்ஞானமானது ஸந்நியாஸத்திற்கு அடையாளம்.

3 பாகவதம்-11-12-14,15. உத்தவ-உத்தவரே, த்வம்-நீ, தஸ்மாத்-ஆகையினால், சோதநாம் - விதியையும், ப்ரதிசோதநாம்-மறுத்திருப்பதையும், உத்ஸ்ருஜ்ய-விட்டுவிட்டு, ப்ரவ்ருத்திம் - விதிக்கப்பட்ட கார்யங்களில் ப்ரவ்ருத்திப்பதையும், நிவ்ருத்திம்ச - மறுக்கப்பட்ட கார்யங்களில் நிவ்ருத்திப்பதையும், ஶ்ரோதவ்யம்-இனி கேட்கவேண்டியதையும், ஶ்ருதமேவச-இது வரையில் கேட்டதையும், உத்ஸ்ருஜ்ய-விட்டுவிட்டு, ஸர்வதேஹிநாம்-எல்லா ப்ராணிகளுக்கும், ஆத்மானம்-ஆத்மாவாயிருக்கிற, மாமேகமேவ-என்னொருவனையே, ஸர்வாத்மபாவேந-எல்லாவற்றிற்கும் இவன் ஆத்மா என்கிறபாவத்தினால், ஶரணம்-சரணமாக, யாஹி-அடை, அகுதோபயம்-ஒன்றுக்கும் பயமில்லாமலிருக்கிற இடத்தை, யாஸ்யஸி-அடையப் போகிறாய்.

4 பாரதம்-சாந்திபர்வம்- மோக்ஷதர்மம் - 337-40. தர்மம் - தர்மத்தையும், அதர்மம் - அதர்மத்தையும், த்யஜ - விடு, ஸத்யாந்ருதேபி - ஸத்யம், அந்ருதம், இவைகளையும், த்யஜ-விடு, உபே - இரண்டுகளாகிய, ஸத்யாந்ருதே - ஸத்யம், அந்ருதம், இவைகளை, த்யக்த்வா-விட்டு, யேன-எதனால், த்யஜஸி-விடுகிறாயோ, தத்-அதையும், த்யஜ-விட்டுவிடு.

ஸத்யாந்ருதே த்யக்த்வா யேந த்யஜஸி தத்த்யஜ ||' என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே இப்படிப்பட்ட வசனங்களெல்லாம் ஸாத்விக த்யாகத்தைச் சொல்லுகிறதாகவே அர்த்தம் சொல்லவேண்டியது. ஸமாதியிலிருக்கும் தசையைச் சொல்லுகிற வசனங்களுக்கு ஒருவித விரோதமுமில்லை. மேலும் 1 'த்யஜ தர்மமஸங்கல்பாதர்மஞ்சாப்யஹிம்ஸயா | உபே ஸத்யாந்ருதே புத்த்யா புத்திம் பரமநிஶ்சயாத்'॥ என்றிவை முதலிய வசனங்களினால் மேற்கூறிய வசனங்களில் ஸாத்விக த்யாகமே சொல்லப் படுகிறதென்று வ்யக்தமாக ஏற்படுகிறது. 'ஏகம்' என்கிற இடத்திலும் ஒருவித விஶேஷமுமில்லாத சித்தோடு ஒன்றென்று சொல்லுகிறது என்கிற அர்த்தத்தைக் கேட்கிற சிறுவர்களும் 2 பரிஹாஸம் செய்வார்கள். பாஷ்யத்தில் சொல்லப்பட்ட 'ஶரணம்' என்னும் பதத்தின் அர்த்தமோவெனில் இந்தப் பதத்தின் ஸ்வாரஸ்யத்திற்கும், இந்த க்ரந்தத்தின் முன்பின் ஸந்தர்ப்பங்களுக்கும் மற்ற ஶாஸ்த்ரங்களுக்கும் பொருத்தமானது. 'ஶரண' என்னும் பதமும் மிகவும் வெவ்வேறாக இருக்கிற வஸ்துக்களிடங்களிலும் ப்ரயோகிக்கப்பட்டிருக்கக் காணப்படுகிறது. 3 'ஸோ'ஹ

1 பாரதம்- சாந்திபர்வம்-மோக்ஷதர்மம்-337-41. தர்மம் - தர்மத்தை, அஸங்கல்பாத்-பலங்களில் ஆசை இல்லாமையினால், த்யஜ-விட்டு விடு, அதர்மஞ்ச-அதர்மத்தையும், அஹிம்ஸயா-ஒருவரையும் ஹிம்ஸை செய்யாமையினால், த்யஜ-விட்டு விடு, உபே-இரண்டுகளாகிய, ஸத்யாந்ருதே-ஸத்ய-கைவல்யம், அந்ருத-ஐஶ்வர்யம், இவைகளை, புத்த்யா-அவைகளின் தோஷங்களைத் தெரிந்துகொள்ளுவதினால் (விடு), புத்திம்-அந்தப் புத்தியையும், பரமநிஶ்சயாத்-பகவானே இவ்விதமான புத்தியைக் கொடுத்தான் என்கிற நிஶ்சயத்தினால் (விடு,) கீழ்ச்சொல்லிய வசனங்களுக்கு ஸாத்விக த்யாகமே அர்த்தம் என்பது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில் விசதமாக அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

2. 'மாம்' என்கிற இடத்தில் கண்ணனாய் அவதரித்திருக்கும் தசையில் விக்ரஹங்கள், அப்பொழுது செய்யும் வ்யாபாரங்கள், இவைகளோடு கூடிய தன்னைக் குறிக்கிறபடியினாலும் எதிரிலிருக்கும் 'நீ' என்று சொல்லப்படுகிற ஜீவனைவிட 'நான்' என்பது வேறென்று காட்டுகிறபடியினாலும் ஒரு விஶேஷமுமில்லாத வஸ்து இதற்கர்த்தம் என்பது பரிஹஸிக்கத் தக்கதே என்று தாத்பர்யம்.

3. அஹம்-நான். இமாம்-இந்த ப்ரக்ருதியை, ஹித்வா-விட்டு, அபேத்ய-போய், நிராமயம்-ஒருவிதப் பீடையுமில்லாத ஸ்தானத்தை. ஸம்ப்ரயிஷ்யே-அடையப்போகிறேன், மம-எனக்கு, அநேநஸஹ-இந்தப் பகவானோடு கூட, ஏகத்வம்-ஒன்றாக இருக்கை, க்ஷமம்-உசிதமானது, அநயாஸஹ-இந்த ப்ரக்ருதியுடன், ஏகத்வம்-சேர்ந்திருக்கை, நக்ஷமம்-உசிதமல்ல,

த்ராஹுசிரோ ஹித்வா ஸம்க்ராமேஷு நிராயுதம்। க்ஷேமம் தே ஸஹானேந ஸேநகக்ஷேணயா ஸஹ ॥' என்றும், அப்படியே 1 'வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம:' என்கிற கேள்விக்குப் பதிலாக 2'ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத' என்றிவை முதலிய இடங்களில் அப்படி ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்கிற இடத்தில் ஶரணாகதிக்கு விரோதமான தர்மங்களை மாத்திரம் விடவேண்டுமென்று சொல்லுகிறது என்று பாதவப்ரகாசன் முதலியவர்கள் சொன்ன அர்த்தத்தில் நமக்கு விவாதமில்லை. அவஶ்யம் செய்யவேண்டியவைகளாயிருந்தபோதிலும் எல்லாக கர்மங்களையும் விட்டுவிட்டு என்று ஶரணாகதியை ஸ்தோத்திரம் செய்கிறது என்கிற அர்த்தமோவெனில் 'அபி' என்னும் பதத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டியது முதலிய தோஷங்களினால் உசிதமல்ல. அவஶ்யம் செய்யவேண்டியதில்லாத தர்மங்களை விட்டுவிட வேண்டுமென்று இங்கே சொல்லப் படுகிறது என்று நாராயணார்யர் செய்த வ்யாக்யானத்திலும் அனுஷ்ட்டானத்திற்கொரு விரோதமுமில்லை.

மேலும் இந்தக் கீதையில் ஆரம்பம் முதல் பராமர்ஶித்துப் பார்ப்போம். முதலத்யாயத்தில் அர்ஜுநனுக்கு உண்டாகிய இடமில்லாத இடத்தில் ப்ரீதி, கருணை முதலியவைகளினால் ஶாஸ்த்ரத்தை மீறி நடக்கவேண்டும் என்று ஆசையையுடைய அந்த அர்ஜுநனால் சொல்லப் பட்ட ஆக்ஷேபங்களைப் பரிஹரிப்பதற்காக இரண்டாவது அத்யாயத்தினால் வேதாந்த ஶாஸ்த்ரம் சொல்லப்பட்டது என்கிற அர்த்தத்தில் ஒருவருக்கும் விவாதமில்லை. இரண்டாவது அத்யாயத்தில் சொல்லப்பட்ட யோகம் முதலியவைகளினாலும் பகவானே ஆராதிக்கப் படுகிறான் என்கிற விஷயத்திலும் ஒருவித விவாதமுமில்லை. யாகத்திற்காக நெல் முதலியவைகளை ப்ரோக்ஷணம் செய்யவேண்டும், குத்தவேண்டும் என்று விதித்திருக்கிற ஶாஸ்த்ரங்களை அனுஷ்ட்டிப்பதினாலும் அந்தப் பகவானேயல்லவோ ஆராதிக்கப்படுகிறான்.

1. ராமாயணம், சுந்திரகாண்டம் - 35 - 2. வாநராணாம் - குரங்குகளுக்கும், நராணாம்ச - மனிதர்களுக்கும், ஸமாகம:-சேர்க்கை, கதம்-எப்படி, ஆஸீத்-உண்டானது.

2 ராமாயணம், சுந்திரகாண்டம் - 35 - 52. தேவீ-ஓ ஸீதையே! ராம ஸுக்ரீவயோ: - ராமன் ஸுக்ரீவன், இவர்களுக்கு, ஐக்யம் - சேர்க்கையானது, ஏவம்-இவ்விதமாக, ஸமஜாயத-உண்டானது.

ஆனால் அவ்விடங்களில் நேரில் பகவானைப்பற்றிச் சொல்லப்படவில்லை என்பது அந்த ஸந்தர்ப்பங்களைக் கொண்டும், மேலே நேரில் பகவானைப் பற்றிய யோகம் செய்கிறவர்கள் 1 'யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேநாந்தராத்மநா' என்றாரம்பித்து நிரூபிக்கப்படுகிறபடியினாலும் ஸ்தாபிக்கப்பட்டது. மூன்றாவது அத்யாயத்தில் யோகமென்று சொல்லப்படுகிற உபாயத்தின் பாகங்களாகிய க்ரியா யோகம், புத்தி யோகம், இவைகளை நிரூபித்திருக்கிறது என்பதும் 2 'ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம்' என்பதினால் அதிகாரிகள் வெவ்வேறென்று நிரூபித்திருப்பதினால நிராகரிக்கப்பட்டது. 3 'தூரேண ஹ்யவரம் கர்ம' என்று சொல்லியிருப்பதினால் இவை இரண்டும் ஸமம் என்பது பொருந்ாது என்று சொலலுவது உசிதமல்ல, இது அந்த ஸந்தர்ப்பத்தில் நிந்திக்கப்படுகிற காம்ய கர்மங்களைப் பற்றியதென்று ஸ்தாபிக்கப்பட்டபடியினால். 4 'யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாத்' என்றிவை முதலிய இரண்டு ஶ்லோகங்களில் இந்த லோகங்களில் பார்க்கப்படுகிறதும் ஶாஸ்த்ரங்களில் கேழ்க்கப்படுகிறதுமாகிய ஶப்தம் முதலிய விஷயங்களில் ஆசையில்லாதவனும் பரமாத்மா ஒருவனிடத்திலேயே ஆசையுடையவனுமிருக்கிற புருஷனுக்குக் கர்மங்களை அநுஷ்டானம் செய்வதில் ப்ரயோஜனம் இல்லை என்பதும் அக்ருத்யங்களைச் செய்வதில் தோஷமில்லை என்பதும் நிரூபிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டதே அதுவும் யுக்தமல்ல, 5 'கெட்ட நடத்தையிலிருந்து ஓயாதவனுக இல்லாமல்' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளுக்கு விரோதம் வருகிறதென்று முன்னமேயே நிரூபித்திருப்பதினால். ஆகையினாலேயே இந்த ஶ்லோகத்தில் உதாஹரிக்கப்பட்ட 6 'ஹத்வாபி ஸ இமாம் லோகாந்' என்று மேலே சொல்லப் போகிறதும் வேறு விஷயத்தைப் பற்றியதென்று அவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்படிக்கல்லாமல் ஸமாதியிலிருக்கும் தசையில் வேறு செய்யவேண்டிய கர்மங்களில்லை என்பது இந்த இரண்டு ஶ்லோகங்களில் சொல்லப்படுகிறது, என்றபிப்ராயமானால் அப்பொழுது முக்தியை யடைந்த தசையிலே போல ஒரு விரோதமுமில்லை. ஆகையினால் அதை ஒப்புக்கொள்ளுகிறோம். மேலும் அவர்களினாலேயே ஆறாவது அத்யாயத்தில் ஸமாதியிலிருக்கும் தசையிலேயே கர்மங்களைச் செய்யவேண்டியதில்லை யென்பது நிரூ

1 பகவத்கீதை - 6-47 2 பகவத்கீதை - 3-3 3 பகவத்கீதை-2-49
4 பகவத்கீதை-3-17 5 கடவல்லீ-1-2-24 6 பகவத்கீதை- 18-17

பிக்கப்பட்டிருக்கிறது. எப்படி என்னில் 1 'யம் ஸந்ந்யாஸ இதி ப்ராஹு: யோகம் தம் வித்தி பாண்டவ' என்கிற ஶ்லோகத்தில் ஸமாதியிலிருக்கும் காலத்திலேயே கர்ம ஸந்யாஸம் செய்யவேண்டியது, மற்ற ஸமயத்தில் செய்யக்கூடாது என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. அப்படியே 2 'ஆருருக்ஷோர் முநேர் யோகம்' என்கிற இடத்திலும் ஜிதேந்த்ரியனுகிய எவனுக்குக் கர்மங்களைச் செய்ய வேண்டிய காலம் முழுமையும் யோகத்தினுலேயே வ்யாபரிக்கப்பட்டிருக்கிறதோ அவனுக்குக் கர்மங்களை த்யாகம் செய்வது யுக்தம், மற்றவனுக் கல்ல என்று சொல்லப்பட்டது. ஆகையினுல் இதுவே மூன்ருவது, நான்காவது, ஐந்தாவது அத்யாயங்களில் பகவானுல் நிரூபிக்கப்பட்டது என்றறியவேண்டியது. மூன்ருவது அத்யாயத்தில் 3 'யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாத்' என்கிற இடத்திலும், நான்காவது அத்யாயத்தில் 4 ''யோகஸந்ந்யஸ்த கர்மாணம்' என்கிற இடத்திலும், ஐந்தாவது அத்யாயத்தில் 5 'ஸர்வ கர்மாணி மநஸா ஸந்ந்யஸ்யாஸ்தே' என்கிற இடத்திலும் சொல்லப்பட்டது. ஆகையினுல் ஆத்மாவினிடத்திலேயே ஆசையுடையவர்களாய் ஜிதேந்த்ரியர்களாய் யோகம் செய்துகொண் டிருப்பவர்களுக்கே கர்மங்களை விட்டுவிடுவது உசிதமாகும். அவர்களுக்கும் லோகத்தில் ப்ரஸித்தர்களாயும் எல்லாலோகங்களும் இவர்களைப்பார்த்து அனுஷ்டானம் செய்யக் கூடியவர்களாயும் வித்வான்களாயு மிருக்கிறவர்களுக்கு இந்தக் கர்மங்களினுல் தங்களுக் கொருவித லாபமில்லாவிடினும் லோகங்களுக்கு அநுக்ரஹம் செய்வதற்காகக் கர்மயோகமே உசிதம் என்று பகவானுடைய அபிப்ராயமாக அறியவேண்டியது என்று நிகமனம் செய்யப்பட்டது. அக்ருத்யத்தை அனுஷ்டானம் செய்வதில் தோஷமில்லாமையினுல் அக்ருத்யத்தைச் செய்யாமலிருப்பதில் ஒருவித ப்ரயோஜனமுமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறதே அது அந்த ஸமாதி தசையில் ப்ரஸ்தாவமில்லாததைப் பற்றிச் சொல்லி இருக்கிறது. 6 'கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:' என்கிற இடத்தில் ராஜாக்களைச் சொல்லி இருப்பது அவர்களுடைய சரித்திரங்கள் லோகத்தில் ப்ரஸித்தமாக இருக்கிறபடியினுல் என்று சொல்லப்பட்ட இந்தத் தாத்பர்யமே இவ்வி

1 பகவத்கீதை-6–2 2 பகவத்கீதை - 6-3 3 பகவத்கீதை - 3-17
4 பகவத்கீதை - 4-41 5 பகவத்கீதை- 5-13 6 பகவத்கீதை-3-20

டத்திலுசிதமாயிருக்கிறது. அதற்கப்புறம் 1 '𑌏𑌵𑌂 𑌪𑌰𑌂𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃' என்று சொல்லியிருப்பதினால் ராஜாக்களாயிருக்கிற யோகிகளுக்கே இந்தக் கர்மங்களை விடக்கூடாதென்று உபதேசம் செய்திருக்கிறது, மற்றவர்களுக்கில்லை என்று மற்றொரு பக்ஷம் சொல்லப்பட்டதே அது அவ்வளவு உசிதமல்ல, மற்றவர்களுக்கும் கர்மங்களின் ஸ்வரூபத்தை விட்டுவிடக்கூடாதென்பது எல்லா இடங்களிலும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதினால். ஆகையினாலேயே நான்காவது அத்யாயத்தில் இவ்விடத்தில் சிலர் '𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃' என்று சொல்லியிருப்பதினாலும், முன் அத்யாயத்தில் உதாஹரணத்திற்காக ஜனகனைச் சொல்லி இருப்பதினாலும், ஒன்பதாம் அத்யாயத்தில் 2 '𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑌗𑍁𑌹𑍍𑌯𑌂' என்று சொல்லப்போகிறபடியினாலும் பகவானால் உபதேசம் செய்யப்பட்ட இந்த யோகத்தில் ராஜாக்களுக்கே அதிகாரமுண்டு. மற்றவர்களுக்கில்லை என்று எண்ணுகிறார்கள். அது உசிதமல்ல, ஒன்பதாம் அத்யாயத்தில் 3 '𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍' என்று இதில் எல்லாருக்கும் அதிகாரமுண்டென்று சொல்லப்படுகிறபடியினால். ஆகையினால் ராஜாக்களின் ப்ரவ்ருத்தியைச் சொல்லியிருப்பது உதாஹரணம் காட்டுவதற்காகவே ஒழிய வேறுவிதமாக இல்லை என்றொப்புக்கொள்ள வேண்டும், என்று தன்னாலேயே சொல்லப்பட்டது. ஐந்தாவது அத்யாயத்தில் 4 '𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌶𑍍𑌚 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌾𑌵𑍁𑌭𑍌' என்று சொல்லப்பட்ட ஸந்நியாஸம் கர்மயோகம் இவைகளுக்குப் பிறகு 5 '𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑍌 𑌪𑍃𑌥𑌗𑍍𑌬𑌾𑌲𑌾𑌃' என்று சொல்லப்பட்ட ஸாங்க்ய யோகங்கள் வெவ்வேறு என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறதே அதுவும் உசிதமல்ல. 6 '𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍' என்று முன்பு சொல்லப்பட்டதே இவ்விடத்திலும் ஜ்ஞாபகப் படுத்தப்படுகிறபடியினால் ப்ரஸித்தி இருப்பதற்கும் விரோதமில்லை. இந்த ஶாஸ்த்ரத்தில் கர்மயோகம் ஜ்ஞானயோகம் இவைகளுக்கு இப்படியே ப்ரஸித்தி இருக்கிறபடியினால் '𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌾𑌵𑍁𑌭𑍌' என்பதோடு புனருக்தியுமில்லை. ஸங்க்ரஹமாயும் விஸ்தாரமாயும் சொல்லியிருக்கிறபடியினாலே புனருக்தி பரிஹரிக்கப்படுகிறபடியினால் மற்ற எல்லா வ்யாக்யாதாக்களினாலும் இப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதி

1 பகவத்கீதை - 4-2 2 பகவத்கீதை -9-2 3 பகவத்கீதை-9-32
4 பகவத்கீதை-5-2 5 பகவத்கீதை-5-4 6 பகவத்கீதை-3-3

னாலும் 1 'பண்டிதா: ஸமதர்சிந:' என்கிற இடத்தில் எல்லா ப்ராணிகளிடங்களிலும் ஹிம்ஸை செய்யக்கூடாது என்கிற புத்தியும் அனுக்ரஹம் செய்யவேண்டுமென்கிற புத்தியும் எல்லா ப்ராணிகளும் பகவானால் ரக்ஷிக்கத் தக்கவைகள் பகவானுடைய விபூதிகள் என்கிற புத்தியும் 'ஸமதர்சிந:' என்னப்படுகிறது என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. அதில் ஒரு விவாதமுமில்லை. அவ்விடத்திலேயே பிறகு ஹிம்ஸை செய்வதிலும் அனுக்ரஹம் செய்வதிலும் பலம் ஸமம் என்கிற புத்தியும், ப்ராம்மணனுபிருக்கை முதலிய ஜாதிகளை மறுப்பதும் ஸமதர்சனமல்ல. ஏனெனில் இதர சாஸ்த்ரங்களையனுஸரித்தும் மற்ற ப்ரமாணங்களை அனுஸரித்தும் இப்படியே சொல்லவேண்டும் என்று சொல்லப்பட்டதே இதுவும் ஆத்மாவைத் தவிர மற்ற வஸ்துக்கள் பொய்யென்று சொல்லுகிறவர்களின் மதத்திற்கே தூஷணமாகுமேயொழிய ஸ்வபாவத்திலேயே ஒன்றோடொன்று ஸமமாக இருக்கிற ஆத்மாக்களுக்கே உண்மையாகிய தேஹங்களாகிற உபாதியினால் உண்டாகிற வ்யத்யாஸமுண்டென்று சொல்லுகிற மதத்திற்குத் தூஷணமாகாது. வெவ்வேறு விதமான தேஹங்களையுடைய ஆத்மாக்களினுடைய ஸ்வரூபம் ஸமம் என்று தெரிந்துகொள்ளுவதில் மற்ற சாஸ்த்ரங்கள் ப்ரமாணங்கள், இவைகளுக்கு விரோதமில்லாமையினாலும் மேலும் அவைகளுக்கு ஒத்திருப்பதினாலும். ஆறாவது அத்யாயத்தில் சொல்லப்பட்ட யோகத்திற்கு விஷயங்களின் வ்யக்யாஸம் முதலியவை அவ்விடத்திலேயே ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்த யோகிகள் அனேகவிதங்களென்பது அவர்களாலும் மறுக்க முடியாது. ஆகையினாலே 2 'யோகிநாமபி ஸர்வேஷாம்' என்கிற ஶ்லோகத்தில் யோகிகள் அவரவர்கள் மனதைச் செலுத்துகிற விஷயங்கள் வெவ்வேறாகையினால் அனேக விதமானவர்கள். அவர்களுக்குள் என்னிடத்திலேயே செலுத்தப்பட்ட மனதையுடையவனாய் என்னையே ஶ்ரத்தையினால் எவன் பக்தி செய்கிறானோ அவன் யோகம் செய்கிறவர்களுக்குள் மேலானவன் என்றென்னுடைய அபிப்ராயம் என்றும், இவ்விடத்தில் சுருக்கமாகவும் விஸ்தாரமாகவும் எந்த யோகம் சொல்லப்பட்டதோ அது எல்லா யோகங்களையும்விட மிகவும் சிறந்தது என்றபிப்ராயம் என்றும் வ்யாக்யானம் செய்தார்கள். 3 'ஶப்தப்ரஹ்மாதிவர்ததே' என்கிற இதுவும் மூன்று குணங்களையுடைய ப்ரக்ருதியைத் தாண்டுகிறான் என்று சொல்லுகிறது என்றேஒப்புக்கொள்ள வேண்டும். இவ்விடத்தில வேதங்களைச் சொல்லி அதின் வழியாக

1 பகவத்கீதை-5-18 2 பகவத்கீதை-6-47 3 பகவத்கீதை-6-44

அதின் பலங்களைச் சொல்லுகிறதென்று சொல்லில் லக்ஷணையின் பேரில் லக்ஷணையும் அதின் பேரில் அர்த்தங்களைச் சுருக்கிச் சொல்ல வேண்டியது முதலிய கஷ்டங்கள் உண்டாகின்றன. பாஷ்யத்தில் சொல்லியிருக்கிற விதமோவெனில் சிகரத்தைப் பிடித்துத் தூக்கினதைப் போலத் தாத்பர்யத்தை வ்யக்தமாய்ச் சொல்லுகிறதென்பது விசேஷம். 1 'தவஸ்விப்யோऽதிகோ யோகீ' என்கிற ஶ்லோகத்தில் 'இவ்விடத்தில் 'தவஃ' என்னும் பதத்தினுல் வானப்ரஸ்தர்களின் தர்மம் சொல்லப்படுகிறது. 'ஜ்ஞாந' என்னும் பதத்தினுல் ப்ரம்மசாரிகளின் தர்மம் சொல்லப்படுகிறது' 'கர்ம' என்னும் பதத்தினுல் க்ரஹஸ்தர்களின் தர்மம் சொல்லப்படுகிறது என்று சொல்லப்பட்டதே இந்தப் பிரிவு ஒருவிதக் காரணமுமில்லாதது. எல்லா ஆஶ்ரமங்களிலும் அந்தந்த ஆஶ்ரமங்களுக்கு விரோதமில்லாத தபஸ்ஸு, ஜ்ஞானம், கர்மங்கள், ஸம்பவிக்கலாமாகையினுலும் இருக்கிறபடி அர்த்தம் சொல்லுவதில் ஒரு வித விரோதமில்லாமையினுலும் வானப்ரஸ்தன் முதலியவர்களை லக்ஷணையாகச் சொல்லுவதில் ப்ரயோஜனமில்லாமையினுலும். ஏழாவது அத்யாயத்தில் சொல்லப்பட்ட சேதனங்களும் அசேதனங்களுமாகிய இரண்டுவித ப்ரக்ருதிகளும் ப்ரம்மத்தின் ஸ்வரூபத்தைவிட மிகவும் வேறுபட்டது என்பது அந்தந்த இடங்களில் நம்மால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தாழ்ந்த ப்ரக்ருதி எட்டு விதம் என்று பிரித்திருப்பதும் அங்கு சொல்லியிருப்பதைப் போல உசிதமாக இருக்கிறதென்று ஸ்தாபிக்கப்பட்டது. 2 'ரஸோऽஹமப்ஸு' என்றிவை முதலிய இடங்களில் சேர்த்துச் சொல்லியிருப்பதற்குக் காரணத்தை நிரூபிப்பதற்காக எல்லாக் கல்யாண குணங்களின் சேர்க்கையைச் சரீரமாகவுடையவன் நான் ஆகையினுல் எல்லா இடங்களிலுமிருக்கிற கல்யாண குணங்களெல்லாம் என்னுடைய அம்ஶங்கள் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர் என்று சொல்லப்பட்டதே அவ்விடத்திலும் ரஸம் முதலிய கல்யாண குணங்களின் சேர்க்கையே பகவானுடைய ஸ்வரூபமல்ல. ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத பகவானுடைய விக்ரஹமும் ப்ரக்ருதியிலுண்டாகிய ரஸம் முதலியவைகள் நிறைந்ததல்ல. ஆகையினுல் ரஸம் முதலியவைகளே பகவானுக்குச் சரீரம் என்று சொல்லப்பட்டதாகும். அப்பொழுது சேர்க்கையாயும் பிரிவாயும் இருப்பதினுல் அதினுடைய அம்ஶம் என்று சொல்லியிருப்பது ப்ரயோஜன

1 பகவத்கீதை-6-46 2 பகவத்கீதை-7-8

மற்றது. ஆகையினால் அந்த ரஸம் முதலியவைகள் உண்டாவது அந்தப் பகவானுக்கு வசப்பட்டது, என்பது முதலிய காரணங்களினாலேயே அவைகளோடு சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்கிற வழியே நல்ல வழி. பேதமும் அபேதமும் உண்டென்கிற ந்யாயத்தை அனுஸரித்துக் கல்யாண குணங்களோடு அபேதமாய்ச் சொல்லி இருக்கிற தென்னில் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாயிருக்கிற பகவானுக்கு அப்படியே கெட்ட குணங்களோடும் அபேதம் உண்டாகுமாகையினால் எல்லா விகாரங்களுக்கும் இருப்பிடமாயிருக்கை முதலிய தோஷங்கள வரும். இப்படியே மேலும் ஒன்று சேர்த்துச்சொல்லி இருக்கிற இடங்களில் கண்டுகொள்ளுவது. எட்டாவது அத்யாயத்தில் 1 'கிம் தத் ப்ரஹ்ம' என்றிவை முதலிய கேள்வைகள் ஒரே அதிகாரிக்கு அறியவேண்டிய விஷயத்தைப்பற்றிய தென்பது அவ்விடத்திலேயே நம்மால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. ப்ரம்மாவின் ஆயுஸ்ஸு, தினம், இவைகளைக் கல்பனை செய்திருப்பதும், புருஷர்களின் ராத்திரி பகல்களின் வ்யத்யாஸங்களைக் காரணமாகவுடைய மஹா கல்பம் முதலியவைகளைச் சொல்லி இருப்பதும், இதர ஸ்ம்ருதிகள் முதலியவைகளை யனுஸரித்து நம்மாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினால் ப்ரம்மாவின் பகல் முடிவில் மஹா ப்ரளயம் உண்டாகிறதென்று சொல்லுகிறவர்களுக்கே இது தூஷணமாகும். 2 'யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்தாம பரமம் மம' என்பது பரமபதத்தைச் சொல்லுவது என்பதில் ஸித்தாந்தத்திற்கு விரோதமில்லாமல் போனபோதிலும் பரிசுத்தமான ஜீவாத்மாவைச் சொல்லுகிறதென்பதில் யுக்திகள் அங்கேயே நிரூபிக்கப்பட்டன. 3 'அக்நிர்ஜ்யோதிரஹ:', 4 'தூமோ ராத்ரி:' என்கிற இடத்தில் அக்னி, தூமம், என்கிற பதங்களினால் ஒரு தினத்தின் பாகங்களாகிய காலங்கள் சொல்லப்படுகின்றன என்று சொல்லப்பட்டதே அது உசிதமல்ல. அவ்விடத்தில் அந்தந்தப் பதங்களினால் தேவயானம், பித்ருயானம், என்கிற பேர்களையுடைய இரண்டுவிதக் கதிகள் ஜ்ஞாபகப்படுத்தப் படுகின்றன வாகையினாலும், 5 'நைதே ஸ்ருதீ' என்று நிகமனம்செய்திருப்பதினாலும், 6 'யத்ர காலே' என்று ஆரம்பத்திலிருக்கிற 'காலே' என்னும் பதம் காலத்திற்கபிமானிகளான தேவதைகள் ஆதிவாஹிகர்களில் பெரும்பாலுமிருக்கிறார்கள் என்கிற தாத்பர்யத்தினால் சொல்லப்படுகிறது என்று

1 பகவத்கீதை-8-1 2 பகவத்கீதை-15-6 3 பகவத்கீதை-8-24
4 பகவத்கீதை-8-25 5 பகவத்கீதை - 8-27 6 பகவத்கீதை-8-23

ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினாலும். ஆகையினால் உத்தராயணம் சுக்ல பக்ஷம், பகல், இவைகள் சேர்ந்த ஸமயத்தில் ப்ரம்மவித்துக்களாகிய யோகிகள் திரும்பி வராமல் இருப்பதற்காகப் போகவேண்டும் என்று நியமனம் செய்வதும் முடியாது. தக்ஷிணாயனம், க்ருஷ்ணபக்ஷம், ராத்திரி, இவைகள் சேர்ந்த காலத்தில் மரணமடைந்த யோகிகள் சந்திரனையடைந்து மறுபடியும் திரும்பி வருகிறார்களென்பது இரண்டாவது ஶ்லோகத்தில் சொல்லப்படுகிறதென்பதும் உசிதமல்ல, 1 'நிஶி நேதி சேந்ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத் தர்ஶயதி ச|' 2 'அதஶ்சாயநேபி தக்ஷிணே' என்கிற அதிகரணங்களினால் தக்ஷிணாயனத்திலும், ராத்திரியிலும் மரணமடைந்த யோகிக்கும் தைத்திரீயோபநிஷத்தில் சொல்லியவிதமாகச் சந்திரனோடு ஸாயுஜ்யத்தை முன்னிட்டுக்கொண்டு பரமாத்மாவை அடைவதும் திரும்பிவராமலிருப்பதும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினால். இந்த ஶ்லோகம் நேராகப் பகவானைப்பற்றி யோகம் செய்கிறவர்களைத் தவிர வேறு புகை முதலிய மார்க்கத்தில் போகக்கூடிய அதிகாரிகளைப்பற்றியதென்பது ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினால் அக்னி, ஜ்யோதிஸ்ஸு, தூமம், முதலிய பதங்கள் கீழ்ச்சொல்லிய காலங்களைச் சொல்லுகிறதென்பது எப்படித் தெரிந்துகொள்ளப்படுகிறது என்று ஆக்ஷேபித்துக்கொண்டு ஶ்ருதிகள் ஸ்ம்ருதிகள் எல்லாவற்றிலும் உத்தராயணம், சுக்லபக்ஷம், பகல் இவைகள் பொதுவாக தேவதைகளின் ஸம்பந்தமுள்ள கர்மங்களுக்கங்கமாகச் சொல்லப்பட்டிருப்பதினால் மரணமடையும் காலமும் தேவதையை யுத்தேசித்ததாகையினால் என்றுசொல்லப்பட்டதே, அதுவுசிதமல்ல. மற்ற ஶாஸ்த்ரங்களில் மரணமடைவது தேவதையின் ஸம்பந்தமான கர்மமென்று சொல்லப்பட்டிருந்தால் தக்ஷிணாயனம் முதலிய காலங்களில் மரணமடையக் கூடாதென்று ஏற்படுமாகையினால். ஸாவதானமில்லாத மனதையுடையவர்களுக்கும் ஸுலபமாய்ச் செய்யக் கூடியதாயும் ஸுகமாய் அறியக் கூடியதாயும் சீக்கிரமாகப் பலத்தைக் கொடுக்கக் கூடியதாயுமிருக்கிற பகவானிடத்தில் ப்ரபத்தி செய்யும் விதத்தைச் சொல்லுவதற்காக ஸ்ரீபகவான் சொல்லுகிறார்— என்று ஒன்பதாவது அத்யாயத்தின் ஆரம்பத்தில் வ்யாக்யானஞ் செய்யப்பட்டது. அதுவும் முன்பு சொல்லப்பட்ட ஜ்ஞானியினால் செய்யக் கூடியதாகிய வேறொரு இடத்திலும் செலுத்தாத பக்தியை விவரிக்கிறது என்பதே மேல் ஶ்லோகங்களி லேற்படுகிறபடியினால்

1 ஶாரீரக ஸூத்ரம்-4-2-18 ராத்திரியில் மரணமடைந்தவனுக்கு மோக்ஷம் உண்டாகாது என்னில் அது உசிதமல்ல கர்மங்களின் ஸம்பந்தம் இந்தத் தேஹம் வரையில் மாத்திரம் இருக்கக்கூடியவைகளாகையினால். அப்படியே ஶ்ருதியும் சொல்லுகிறது.

2 ஶாரீரக ஸூத்ரம்-4-2-19 ஆகையினாலேயே தக்ஷிணாயனத்தில் மரணமடைந்தவனுக்கும் மோக்ஷமுண்டு.

நிராகரிக்கப்பட்டது. 1 'ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே' என்கிற ஶ்லோகத்தில் ஜ்ஞானயோகம் கர்மயோகம் இவைகளோடு சேர்த்து உபாஸநம் செய்வது ஒன்றாக உபாஸனம் செய்வது. இவைகளைத் தனித்தனியாகச் செய்துகொண்டு உபாஸநம் செய்வது தனியாக உபாஸனம் செய்வது. இங்கு 'ஜ்ஞாந' என்னும் பதத்தினால் ஒரு விதமான புத்தி சொல்லப்படுகிறதாகவுமாம். இதன் அர்த்தமாவது—சிலர் கர்மயோகம், புத்தியோகம், இவைகளைச் சேர்த்தனுஷ்டித்துக்கொண்டு உபாஸிக்கிறார்கள். சிலர் கேவலம் கர்மயோகத்தினாலும் கேவலம் புத்தியோகத்தினாலும் இப்படி அநேகவிதமாக உபாஸிக்கிறார்கள்—என்பது, என்று வ்யாக்யானஞ் செய்யப்பட்டது. இவ்விடத்தில் ஜ்ஞானயோகம் முதலியவைகளைச் சொல்லக் கூடிய பதம் ஒன்றும் காணப்படவில்லை. 2 'அஹம் க்ரது:' என்றிவை முதலிய மேலே இத்தை விவரிக்கிற க்ரந்தத்தை அனுஸரித்து ஒன்றாக இருக்கையும் அநேகவிதமாக இருக்கையும் உபாஸநம் செய்யப்படுகிற வஸ்துவைப் பற்றியதென்பது ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. 3 'அநந்யாஶ்சிந்தயந்தோ மாம்' என்றிவை முதலிய இடங்களிலோவெனில் அவஶ்யமாக நேரிடக்கூடிய யோகக்ஷேமங்களுக்காகவும் என்னிடத்தில் பக்தி செய்துகொண்டிருக்கிற ஏகாந்திகளினால் இதர தேவதைகளாவது மற்றக்கர்மங்களாவது அபேக்ஷிக்க வேண்டியதில்லை என்றிவை முதலியது சொல்லப்பட்டதோ அதெல்லாம் நம்மால் அங்கீகரிக்கப்பட்டதே. பத்தாவது அத்யாயத்தில் 4 'விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிம் ச' என்கிற இடத்தில்'யோக' என்னும் பதத்திற்குப் பகவானைப் பற்றிய கர்மயோகத்தைச் சொல்லுவதாக வ்யாக்யானம் செய்திருப்பது யுக்தமல்ல. 5 'பஶ்ய மே யோகமைஶ்வரம்', 6 'ஏதாம் விபூதிம் யோகம் ச' என்றிவை முதலிய இடங்களில்'யோக' என்னும்பதத்தினால்சொல்லப்படுகிற அர்த்தத்திற்கு விரோதம் வருகிறபடியினாலும் பிறகு இந்த அத்யாயத்தில் அந்தக் கர்மயோகத்தைப்பற்றி விவரிப்பதைக்காணாமையினாலும் அதுநிராகரிக்கப்பட்டது. 'கச்சிதேதச்ச்ருதம்' என்றாரம்பிக்கிற பதினெட்டாவது அத்யாயத்தின் கடைசி ஶ்லோகம் இதற்குப் பதில் என்பதும் வெகுதூரம் நடுவில் விட்டிருப்பதினாலும் அதிலும் விவரத்தைக் காணாமையினாலும் நிராகரிக்கப்பட்டது. சில விபூதிகளும் எல்லா லோகங்

1 பகவத்கீதை-9-15 2 பகவத்கீதை-9-16 3 பகவத்கீதை-9-22
4 பகவத்கீதை - 10-18 5 பகவத்கீதை - 11-8 6 பகவத்கீதை-10-7

களும் பகவானுடைய ஸ்வரூபத்தில் ஏகதேசமாகையினால் அதின் ஒரு பாகமாகையினால் ஒன்று சேர்த்துச் சொல்லி இருக்கிறது என்று அர்த்தம் சொல்லியிருப்பதும் முன்பு சொல்லியபடி எல்லாத்தோஷங்களுக்கு மிருப்பிடமாக வேண்டிவரும் என்பதினால் நிராகரிக்கப்பட்டது. இப்படியே விஸ்வரூபவிக்ரஹத்திற்கு இந்த ப்ரபஞ்சங்கள் அவயவங்கள் என்று சொல்லியிருப்பதும் இவைகள் ப்ரக்ருதியைச் சேர்ந்தவைகளாகையினாலும் பகவானுடைய விக்ரஹம் ப்ரக்ருதியைச் சேர்ந்ததல்லாமையினாலும் ப்ரக்ருதியைச் சேராத விக்ரஹத்திற்கு ப்ரக்ருதியைச் சேர்ந்தவைகள் அவயவங்களாக இருப்பது ஸம்பவிக்காதாகையினாலும் நிராகரிக்கப்பட்டது. பனிரெண்டாவது அத்யாயத்தில் சொல்லப்பட்ட அக்ஷரோபாஸனம் பகவானைப்பற்றிய உபாஸனத்தைவிட வேறுபட்டதென்பது அந்த அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் வாக்யங்களின் ஸ்வாரஸ்யத்தினாலும் தான் புருஷோத்தமன் என்று நிரூபித்திருக்கும் இதர ஸந்தர்ப்பங்களோடு பொருந்தி இருப்பதினாலும். ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் வெவ்வேறென்று சொல்லியிருப்பது அவஸ்த்தைகளின் வ்யத்யாஸத்தைப் பற்றியது. அவஸ்த்தைகளின் வ்யத்யாஸமாவது நிர்விசேஷமான ப்ரம்மம் எல்லா வஸ்துக்களாகவும் மாறி இருப்பதும், எல்லாக் கல்யாண குணங்களின் கும்பல்களும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறதும், என்று தாத்பர்யம் என்று சொல்லப்பட்டது. இது அனேக விகல்பங்களான விரோதங்கள் நிறைந்திருக்கிறபடியினால் சிறுவன் முதல்கொண்டு பரிஹஸிக்கத் தக்கது. வேறு க்ரந்தத்தில் இதைப்பற்றிய தூஷணங்களைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லி இருப்பதினால் இவ்விடத்தில அதை விவரிக்க வில்லை. பதிமூன்றாவது அத்யாயத்தில் க்ஷேத்ரஜ்ஞனைப்பற்றிச்சொல்ல வேண்டியதெல்லாம் அந்த அத்யாயத்திலேயே சொல்லப்பட்டது. [1] 'யதுருதக்ஷ' என்கிற பாடம் ப்ரஸித்தமல்லாதது. அப்படிப்பாடமிருந்தபோதிலும் 'தக்ஷ' என்னும் பதம் ஜ்ஞானத்தைச் சொல்லுகிறதென்பது ஸ்வாரஸ்யமில்லாதது. க்ஷேத்ரம் நித்யமாகையினாலே ஒரு காரணத்தினால் உண்டானதல்லவாகையினால் அதற்குக் காரணம் சொல்லப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறதே என்னில் அப்படிச் சொல்லியிருப்பது உண்மையே. ஆனால் அப்படிச் சொல்லுவதுஉசிதமல்ல, [2] 'மஹாபூதான்யஹங்கார:' என்றாரம்பித்து மேலே சொல்லப்படுகிற க்ஷேத்ரம் முழுமையும் அவ்யக்தம்

1 பகவத்கீதை-13-3 ஸ்லோகத்தின் பாடாந்தரம்.

2 பகவத்கீதை-13-5.

ஷ்கரிக்கப்பட்டிருக்கிறது. 1 'விரஜந வராஹூதீ விசுறா ஸுபு ஸெரஸ்ஸீகாः' என்கிறபடியே அவைகளைப் பரிஷ்கரிப்பதற்குத் தம்முடைய புத்தியேகாரணமாகிறது. ஆகையினால் தமக்கு வேதாந்தாசாரியரென்று, பெரியபெருமாளருளிச்செய்த திருநாமம் ஸார்த்தகமென்று திருவுள்ளம். தம்முடைய ப்ரஜ்ஞையின் ஸம்பந்தமில்லாவிடில் வேதாந்தங்கள் அலங்காரங்களில்லாமலும் அதினால் ஒருவருக்கும் அனுபவிக்கயோக்யதை இல்லாமலுமாய் விடும் என்றும் திருவுள்ளம். ஒஜஜா – புதிதுபுதிதான மலர்ச்சியையுடைய புத்தியாகிற, தலு - படுக்கையினால், வரிஷ்க்ருத - அலங்கரிக்கப்பட்ட, ஶ்ருதிஶிரஃ - வேதாந்தமாகிற, ஒதாஸாதந-மெத்தையை ஆவெஸஷ்ய - அடைந்திருக்கிற படுக்கை முதலியவைகளினால் அலங்கரிக்கப்பட்ட பெரிய மெத்தையில் தானிருந்துகொண்டு தன்னுடைய நாயகன் வரவை எதிர்பார்த்திருக்கிறாள் என்பதேற்படுகிறது. இப்படிப்பட்ட மெ - என்னுடைய, உநீஷா - புத்தி, நித்யாநந்த - எப்பொழுதும் ஆனந்தமயமாகிய, விஹூதி - இரண்டுவிதமான விபூதிகளினுடைய, ஸந்நிதி - ஸமீபத்திலிருப்பதினால், அதாவது ஆனந்தமயமாகிய இரண்டுவித விபூதிகளும் தனக்கு எப்பொழுதும் இருப்பதினால். அதுவுமன்றிக்கே நித்யமாயும், ஆனந்தமயமாயுமிருக்கிற நித்ய விபூதி தன்னுடன் பிரிவில்லாமல் எப்பொழுதும் இருப்பதினால், அதுவுமன்றிக்கே ஆநந்த ரூபியாகிய லக்ஷ்மீ, இவ்விடத்தில் விஹூதி என்பது ஸம்பத்து என்னும் அர்த்தத்தைச் சொல்லி அதற்கு அதிஷ்டான தேவதையாகிய லக்ஷ்மியைச் சொல்லுகிறது. ஸ்ரீ பாகவதத்தில் 2 'ஷாணாஜஉவாஸெஷ்யஸ்ய ஹூதிः' என்றும், இன்னும் அநேக இடங்களில் இந்தப்பதம் லக்ஷ்மீயினிடத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் அப்படிப்பட்ட லக்ஷ்மீ 3 'நிமெத்யெஷா' என்கிறபடியே எப்பொழுதும் தன்னோடு கூட இருப்பதினால், ஸதா – எப்பொழுதும், ஸாநொஷ - ஸந்தோஷத்தோடு கூடிக்கொண்டிருக்கிற 4 'வண்டார் பூமாமலர் மங்கைமணநோக்க முண்டானே' என்கிறபடியே பிராட்டியின் கடாக்ஷங்களினால் எப்பொழுதும் வாட்டமில்லாமல், 5 'அல்லிமலர்மகள் போகமயக்குகள்' என்கிறபடியே தனித்தெதாரு ஆதாரம் இது என்று நிர்தேசிக்க முடியாதபடி ஆநந்தபரிதனாக இருக்கிற, அன்றிக்கே தம்முடைய புத்தியாகிற ஸ்திரீயுடன் ஸம்ஸ்லேஷிக்க வரும்பொழுது 'ஸவைரமணः' என்று சொல்லப்படுகிற ஸ்வாபாவிக

1 யதிராஜ ஸப்ததி. 2 பாகவதம்-10-47-15.
3 விஷ்ணுபுராணம் 4 பெரிய திருமொழி-8-10-1
5 திருவாய்மொழி-3-10-7.

மான தன் திருமேனியின் ஸௌகந்த்யத்தில் திருப்தியில்லாமல் 1 ‘[illegible] வாஸிதானி’ என்றும், 2 ‘வாசம் செய்பூங்குழலாள்’ என்றும், சொல்லு கிறபடியே அபூர்வமான வாஸனையை ஸம்பாதித்துக்கொண்டு வருகிறான் என்றதாகவுமாம். ஆகில் இப்படிப்பட்ட லக்ஷ்மீ எப்பொழுதும் தன்னை விட்டுப் பிரியாமலிருக்கிறவன் உம்முடைய புத்தியாகிய ஸ்திரீயுடன் ஸம்ஶ்லேஷிக்க வருவனோ என்று சங்கியாமைக்காக அவனுடைய ஸௌலப்யத்தின் எல்லை நிலமாய்கூடஸ்தர்கள் இதை அநுஸந்தித்தவாறே மயங்கிக் கிடக்கும்படியான தாமோதரத்வத்தை அநுஸந்திக்கிறார். ஓர் அபலை கட்டவும் அடிக்கவும் தன்னை அமைத்துக் கொடுத்தவன் தானோர் அபலையைக் கட்ட ஸம்மதியானோ என்று திருவுள்ளம். [illegible]-வயிற்றில் கயிறினால் கட்டப்பட்டவனாகிய ஸ்ரீக்ருஷ்ணனுடைய என்றபடி. இப்பொழுது வயிற்றில் கயிறு இல்லையேயாகிலும் 3 ‘அறியுமுலகெல்லாம் யானேயுமல்லேன் பொறிகொள் சிறையுவணமூர்ந்தாயை வெறிகமழும் காம்பேய் மென்றோளி கடைவெண்ணெயுண்டாயைத்தாம்பே கொண்டார்த்த தழும்பு’ என்கிறபடியே தோடிட்ட காது தோடில்லாமல் இருந்தபோதிலும் காய்ப்பு முதலிய அடையாளங்களினால் தோடிட்டகாதென்றறியப்படுமாப்போலே அன்றொரு நாள் ஆய்ச்சிகட்டினது உலக ப்ரஸித்தமாம்படி அதினாலுண்டான தழும்பு 4 ‘[illegible]’ என்னும்படி ஆஶ்ரித ஸௌலப்யத்தை ப்ரகாசப்படுத்துகிறது என்று திருவுள்ளம். [illegible]-அப்படிப்பட்ட பகவானுடைய இரண்டு மூன்று தடவை ஆலிங்கனமாகிற, [illegible]-தூர்த்தர்களின் வ்யாபாரத்தினால், இத்தால் 5 ‘[illegible]’ என்கிறபடியே ஒருக்கால் அணைத்துவிடுதலன்றிக்கே பலகாலும் அடுத்தடுத்தணைக்கிறான் என்று திருவுள்ளம். அதினால் [illegible]-அழகான, [illegible] வ்ருத்தியை யுடையதாக, [illegible]-இருக்கட்டும். இத்தால் உபயவிபூதிகளையும் உடையவனாய் ஸ்ரீயஃபதியாய் பரத்வஸௌலப்யங்களுக்கு உபயுக்தங்களான குணவர்க்கங்களோடு கூடினவனான பகவான் தானே தம்முடைய புத்திக்கு விஷயமாவதினால் தம்முடைய புத்தியைக் கட்டிக்கொள்ளுவதினால் இந்தப் புத்திக்கு அதிகமான விகாஸமுண்டாக வேண்டும் என்று ப்ரார்த்தித்தபடி. ஆக இத்தால் எப்பொழுதும்

---

1 கோதாஸ்துதி 2 திருவாய்மொழி-10-10-2
3 இயற்பா-முதல் திருவந்தாதி-22. 4 ஸ்ரீரங்க ராஜஸ்தவம்
5 ராமாயணம்-அயோத்யாகாண்டம்

தம்முடைய புத்தி பகவானுடைய ஸ்வரூப குண விபூதிகளை அனுபவித்துக்கொண்டு அதினால் 1 'அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே' என்கிற படியே புதிது புதிதான விகாஸங்களையுடையதாக, அதாவது அந்தக் குணாதிகளைப் பற்றிய விகாஸத்தை யுடையதாக இருக்கவேண்டும் என்றதாகவுமாம். அன்றிக்கே பரிபூர்ண ப்ரம்மானுபவத்தினால் உண்டாகிய ஒரே விகாஸத்தோடு கூடியதாக இருக்கவேண்டும் என்று பரம புருஷார்த்தத்தை ப்ரார்த்தித்தபடியாகவுமாம்.

தத்த்வம் யத் ப்ரணவே தநஞ்ஜயரதே சாதௌ ச த்ருஶ்யதே புவி
தந்ந்யஸ்ததீர் பக்தோ வேங்கடேஶ்வரகவிர் ஸதாமநுகம்ப்ய: |
தாத்ருக்குருவர்யகடாக்ஷோதிதமஹிம்நா யச்சேதஸா
ஶ்ரீகீதா விஷ்ணுபதீ யதீஶ்வரவசஸ்தீர்த்தே அவகாஹ்யதே || 5

ப - ரை] யத் - எந்த, தத்த்வம் - தத்துவமானது, ப்ரணவே - ப்ரணவத்திலும், தநஞ்ஜயரதே - அர்ஜுனனுடைய தேரிலும், ஆதௌ - முதலில், த்ருஶ்யதே - காணப்படுகிறதோ, புவி - இந்தப் பூமியில், தந்ந்யஸ்ததீ: - அந்தத் தத்துவத்தினிடத்தில் செலுத்தப்பட்ட மனதையுடைய, பக்த: - பக்தனாகிய, வேங்கடேஶ்வரகவி: - வேங்கடேஸ்வரன் என்று பேருடைய கவி. ஸதாம்-பெரியோர்களுக்கு, அநுகம்ப்ய: - தயைசெய்யத் தகுந்தவர், தாத்ருக்குருவர்யகடாக்ஷோதிதமஹிம்நா - அப்படிப்பட்ட ஆசார்யர்களினுடைய கடாக்ஷம் விழுந்ததினால் உண்டாகிய மஹிமையினால் அடையப்பட்டிருக்கிற, யச்சேதஸா—எந்த வேங்கடேஸ்வர கவியின் மனதினால், ஶ்ரீகீதாவிஷ்ணுபதீ - கீதையாகிய கங்கை, யதீஶ்வரவசஸ்தீர்த்தே - பாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகளாகிற துறையினால், அவகாஹ்யதே - இறங்கப்பட்டதோ, அல்லது ஸ்நானம் செய்யப்பட்டதோ.

தத்த்வம் - இத்யாதி—இத்தால் 2 'பண்ணில மூலவெழுத்திலும் பாண்டவர் தேர்தன்னிலும் முன்னிலை கொண்டபிரான்' என்றும், 3 'ப்ரணவேபார்த்தரதே ச ஸம்ஸ்தித:', 4 'சிலைவிசயன் தேரினையச் சிறுவேதத்தே' என்றும், 5 'பார்த்தம் ரதிநம் ஆத்மாநம் ச ஸாரதிம் ஸர்வலோகஸாக்ஷிகம் சகார' என்றும் சொல்லுகிறபடியேபார்க்கும்பொழுது ஜீவாத்மா ப்ரதானமாயும் தான் அப்ரதானமாயும்

1 திருவாய்மொழி-2-5.
2 சரமச்லோகச் சுருக்கு-3.
3
4 அம்ருதாஸ்வாதினி.
5 கீதாபாஷ்யம்.

தோற்றினபோதிலும் தாத்பர்யத்தில் தானே ப்ரதானமாக நிற்கும் படிக்கு இவை இரண்டும் ஸமானம் என்று திருவுள்ளம். அர்ஜுநன் ரதிகனாக இருந்தபோதிலும், 1 'கரிஷ்யே வசநம் தவ' என்று இவன் சொற்படி நடந்தான் என்று ப்ரஸித்தமிறே. ஆகையினாலேயே நம் ப்ரபன்னஜன ஸந்தானகூடஸ்தரும் 2 'கொல்லாமாக்கோல்கொலைசெய்து பாரதப்போர் எல்லாச் சேனையு மிருநிலத்தவித்த வெந்தாய்" என்று இவனையே ப்ரதான கர்த்தாவாக திருவுள்ளம் பற்றி அருளிச் செய்திருக்கிறது. 'த்ருதி:' என்பதினால் அந்தப் பகவானுடைய ரூபத்திலும் அவனுடைய வார்த்தைகளிலும் தம்முடைய நெஞ்சம் ஸ்திரமாய் ஊன்றியிருந்தபடி சொல்லப்படுகிறது. இத்தால் 3 'போர்ப்பாகு தான் செய்து அன்றைவரை வெல்வித்தமாயப் போர்த்தேர்ப்பாகனார்க்கிவள் சிந்தைதுழாய் திசைக்கின்றதே' என்கிற நம்மாழ்வாருடைய தசையைத்தானடைந்தார் என்று திருவுள்ளம் 4 'தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய' என்கிறபடியே ஸஞ்ஜயனுக்குங்கூட இந்தத் தசை உண்டாகியிருக்குமாகில் ஜ்ஞாநவைராக்யபூஷணராகிய இவருக்கு இந்தத் தசையுண்டாகத் தட்டில்லையிறே. 'புவி' என்பதினால் 5 'இருள் தருமா ஞால மாகிற' இந்தப் பூலோகத்தில் இப்படி இவரிடத்தில் மனதைச் செலுத்தியவர் இப்பொழுது இவர் ஒருவருமே என்பது திருவுள்ளம். 'வேங்கடேசகவி:' திருவேங்கடமுடையானுடைய அவதாரமாகிய இந்தக் கவி. 6 'வேங்கடேசாவதாரோயம்' இத்யாதிகள் இங்கே அநுஸந்தேயம். அன்றிக்கே வேங்கடேச்வரர் என்று திருநாமங்கொண்ட கவி என்றாகவுமாம். அதுவுமன்றிக்கே வேங்கடேச்வரனுடைய கவி என்றர்த்தமாகவுமாம். இத்தால் 7 'ஒன்றி ஒன்றி உலகம் படைத்தான் கவியாயினேர்க்கு என்று மொன்று மினி மற்றொருவ கவியேற்குமோ' என்கிறபடியே பகவானைப்பற்றிக் கவி சொல்லக்கூடியவராகிய இவருக்கு மற்றொரு நரஸ்துதியோக்யமல்ல என்றும், 8 'தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்' என்றும்சொல்லுகிறபடியே கேவலம் பாகவதர்களினுடைய ப்ரீத்யர்த்தமாக பகவத்குணங்களை நிரூபித்தேன், அத்தனைபோக்கி அந்தப் பகவானுடைய ப்ரீதியையும் இதற்குப் பலமாக உத்தேசிக்கவில்லை என்று நம்மாழ்வார் அருளிச்செய்த நிஷ்டை

---

1 பகவத்கீதை-18-73.
2 திருவாய்மொழி-3-2-2.
3 திருவாய்மொழி-4-6-1.
4 பகவத்கீதை-18-77.
5 திருவாய்மொழி.
6 ஸ்ரீதேசிகன் மங்களாசாஸநம்.
7 திருவாய்மொழி-5.
8 திருவாய்மொழி 9-4-9.

யுடையவர் என்று திருவுள்ளம். இது 1 'நாதேந ஸத்வநிஷ்டேந ந்ருஷ்டி விவா' என்கிற ஶ்லோகத்தில் காணலாம். இவ்விடத்திலும் 'ஹ்ருத்தா நந்தகம்வ்ருத்ஸதாம்' என்பதினாலும் இது வ்யக்தமாக ஏற்படுகிறது. 1 'ஸம்ஸ்க்ருத்ய ஸதாம் வ்யஸநம்' என்றிறே இவர் க்ரந்தம் அருளிச் செய்ததற்குக் காரணம் குறிக்கப்பட்டிருக்கிறது. 'ஸதாம்' என்பது ஸம்பந்தஸாமான்யே ஷஷ்டியாய் 'ஹ்ருத:' என்பதோடும் அந்வயிக்கிறது. இத்தால் மனது பகவானிடத்தில் செலுத்தப்பட்டிருக்கிறது, இவருக்கு வாஸ்தவமான பக்தியோவெனில் பாகவதர்களிடத்திலேயே என்று தாத்பர்யமாகவுமாம். மேலும் 'தத்த்வஜ்ஞ:' என்பதினால் 'தீர்ப்பாரையாமினியில்' அருளிச்செய்த தசையையுடையவர் என்றேற்படுகிறபடியினால் அதற்குப் பரிஹாரமாகச் செய்யவேண்டிய ஸாராம்ஶமாகிய 2 'வணங்கீர்கள் மாயப்பிரான்றமர்வேதம் வல்லாரையே', 3 'மணியிலணி நிறமாயன் றமரடி நீறுகொண்டு', 4 'வேதம் வல்லார்களைக்கொண்டு' இத்யாதிகளின் ஸாரார்த்தத்தை 'ஹ்ருத்தா நந்தகம்வ்ருத்ஸதாம்' என்றருளிச்செய்தாராகவுமாம். இத்தால் நம்முடையமனதை அவன் கவர்ந்தானேயாகிலும் தமக்குப் பக்தியுள்ளது பாகவதர்களிடத்திலேயே. 5 'கரியகோலத் திருவுருக் காண்பன் நான் பெரியவண் குருகூர்நகர்நம்பிக்காளுரியனாய்' என்கிறபடியே பாகவதர்களினுடைய க்ருபையை உத்தேசித்தவனாயும் அவர்களிடத்தில் பக்திசெய்துகொண்டிருப்பவனாகையினால் அவர்களுகந்த தெய்வம் என்று பகவானிடத்தில் மனதைச் செலுத்துவேன் என்று திருவுள்ளமாகவுமாம். 'ஹம்விவம்ஶ கவிபுங்கவ கவி:' என்பதினால் 6 'ஸ கவி: கத்யதே ஸ்ரஷ்டா ரமதே யத்ர பாரதீ' என்று ப்ரம்மாவே தம்மால் கவியாக அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் இந்தப் பூலோகத்திற்குத்தான் அவரைப்போலக் கவி என்றர்த்தமாகவுமாம் 7 'ஶுத்தஸத்த்வா தத்த்வஜ்ஞா:' என்று அநேகம் நித்யஸூரிகள் தத்த்வஜ்ஞர்களாக நித்ய விபூதியில் ப்ரஸித்தர்கள். இந்தப் பூலோகத்தில் தத்த்வஜ்ஞர் இவர் ஒருவருமே என்றர்த்தமாகவுமாம். 'ஸதாநந்தகம்வ்ரு' என்பதினால் 'யதீஶ்வரஸரஸ்வதீ' என்பதின் அர்த்தமும் 'ஸதாம்' என்பதினால் 'தந்த்ரிதே' என்பதின் அர்த்தமும் ஸூசிதம். 'தத்வார்த்தஶ்ரு ரார்த்தவிஷ்காரதேஹிதேஶ்ரேஷ்ட' என்பதினால் 8 'ஶ்ரூரார்த்தவ்ருஸ

1 ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்.
2 திருவாய்மொழி-4-6-7.
3 திருவாய்மொழி-4-6-6.
4 திருவாய்மொழி-4-6-8.
5 கண்ணிநுண்சிறுத்தாம்பு.
6 யாதவாப்யுதயம்- 1.
7 ஸங்கல்பஸூர்யோதயம் 2-அங்கம்.
8 அதிகரணஸாராவளி-2.

[illegible] என்கிறபடியே ஒருவராலும் தாக்கவொண்ணாத நிஶ்சயம் ஆசார்ய கடாக்ஷத்தினால் தமக்குண்டானது என்று திருவுள்ளம். 'தத்த்வத:' என்பது குருக்களுக்கு விஶேஷணமாகவுமாம். 1 'வெள்ளைப் பரிமுகர தேசிகராய்' என்கிறபடியே ஸாக்ஷாத் பகவதவதாரமென்று சொல்லக்கூடியவர்களாகிய ஆசார்யர்கள் என்று தாத்பர்யம். 2 [illegible] என்பதிங்கே அநுஸந்தேயம். அன்றிக்கே த்ருஷ்டிக்கு விஶேஷணமாகவுமாம். அப்பொழுது 3 [illegible] என்கிறபடியே பகவத் கடாக்ஷத்திற்கும் தான் மூலகாரணமாய் இதற்கு முன் 'க்ஷிபாமி' க்கு இலக்கானவர்களையும் தன் ஸம்பந்த மாத்திரத்தினால் 'மோக்ஷயிஷ்யாமி' க்கு இலக்காக்கக் கூடிய ஶக்தியுடையதாய் மற்றொருவர்களினுடைய கடாக்ஷங்களினாலும் கொடுக்கமுடியாத பலத்தைக் கொடுக்கக்கூடியதாயுமிருக்கிற ஆசார்ய கடாக்ஷத்தின் மஹிமை சொல்லப்படுகிறது. அதுவுமன்றிக்கே '[illegible]'த்திற்கு விஶேஷணமாகவுமாம். மற்றெல்லாரையும் போலன்றிக்கே 'ராமாநுஜதயாபாத்ரம்' என்பதில் சொல்லப்படுகிறபடியே ப்ரதம குருவாகிய பகவான் முதல் ஸ்வாசார்யனை அப்புள்ளார் வரையிலுள்ள ஸர்வாசார்யர்களும் நம் தேசிகனால் அவரவர்களினுடைய மத ப்ரவசனம், அபிப்ராய விஶேஷ நிரூபணம், க்ரந்தவ்யாக்யானம், பரத்வ விபுத்வாதி ஸமர்த்தனம், முதலிய உபகாரங்களை யடைந்து அதற்குத்தங்களால் செய்யக்கூடிய வேறொரு ப்ரத்யுபகாரமில்லாமல் 4 '[illegible]' என்றும், 5 '[illegible]' என்றும் சொல்லுகிறபடியே தங்கள் தங்கள் கடாக்ஷங்களுக்குப் பூர்ணபாத்திரராக்கினபடி சொல்லப்படுகிறது. அதுவுமன்றிக்கே '[illegible]' என்பதற்கு விஶேஷணமாகவுமாம். அப்பொழுது தம்முடைய புத்திக்குண்டான மஹிமை இவ்வளவுதானே, அல்ல. அது அபரிச்சின்னம். இதற்கு எதிரிகள் பாத்திரமில்லாமையினாலும் ஶிஷ்யர்களுக்குப் புத்திவைசத்யமில்லாமையினாலும் இவ்வளவுடன் நிறுத்தப்பட்டதத்தனை போக்கி நம்மு

1 அதிகாரஸங்க்ரஹம் - 56
2 அதிகரணஸாராவளி
3 ஸங்கல்ப ஸூர்யோதயம்.
4 ராமாயணம்-யுத்தகாண்டம்.
6 பாகவதம்-10.

டைய புத்தி அளவுபட்டிருப்பதினால் இவ்வளவுடன் நிறுத்தப்படவில்லை. இவ்விடத்தில் 'ஐஷ்வர்யாநிவ்ருத்தயே' என்பதை மாற்றி வைத்துக் கொள்ளவேண்டியது. 1 'யத்பாதம்போருஹத்யாநம்' 'ஸ்வாமின்காருண்யநிதயே' இத்யாதிகளை இங்கு அநுஸந்திக்கவும். 'ஸ்ரீதாவிஷ்ணுபதீ' என்பதினால் 2 'கங்காஜலலவ கணிகாபீதா முராரி ஸமர்ச்சா' என்று இரண்டும் ஸமமாகவல்லவோ எடுக்கப்பட்டது. அன்றிக்கே அந்தக் கங்கையை விட இதற்கு மேன்மை சொல்லப்பட்டதாகவும். அந்தக் கங்கை வெளியிலிருக்கிற அழுக்குகளையும் சில பாபங்களையும் போக்குகிறது. இந்தக் கங்கை ஸர்வபாபங்களையும் போக்கி 3 'மோக்ஷயிஷ்யாமி' என்னும்படி பண்ணுகிறது. 'யதீஸ்வரவச்வஸ்தேஷு:' என்பதினால மற்றவர்கள் துறைதப்பி இறங்கினபடியினால் சேற்றில் ஆழ்ந்து முடிந்துவிட்டார்கள். நாம் பெரியோர்கள் போய்த் தேய்ந்தவழியை அடைந்ததினால் 4 'முன்னடிபார்த்து முயலுதலாலவர் சாயையெனப் பின்னடி பார்த்து நடந்து பெரும்பதமேறுவமே' என்கிறபடியே பரமபுருஷார்த்தத்தை அடையப்பெறுவோம் என்று திருவுள்ளம். மேலும் 'யதீஸ்வரவச்வஸ்தேஷு:' என்பதினால் புண்ணிய நதியாக இருந்தபோதிலும் அதில் பெரியோர்கள் இறங்கி நீராடின துறையில் 5 'தீர்த்தகாரிய்ஷ்யந்தி தீர்த்தானி ஸ்வாந்தஸ்தேந கதாப்ருதா' என்கிறபடியே விசேஷம் உண்டாகையினால் அந்தத் தீர்த்தங்களிலிறங்கி ஸ்நானம் செய்யப் பெற்றோம் என்பது திருவுள்ளம். இங்கு 'யதீஸ்வர' என்பது பாஷ்யகாரரைமாத்திரம் சொல்லுகிறதாகவுமாம். அவயவ வ்யுத்பத்தியினால் ஆளவந்தாரையும் பாஷ்யகாரரையும்சேர்த்து 'யதீஸ்வரயோர்வாசம்' என்று கீதார்த்தஸங்க்ரஹத்தையும் பாஷ்யத்தையும்அருளிச்செய்ததாகவுமாம். 'அவகாஹ்ய' என்பதினால் மேலெழுந்தபடி ஒரு கை தீர்த்தம் ஆசமனீயம் செய்துபோகாமல் தலஸ்பர்சியாக அதின ஆழம் உள்ளவரையிலும் முழுகினோம், அதாவது அந்த ஸ்ரீ ஸூக்திகளின் தாத்பர்யார்த்தங்கள் எல்லாவற்றையும் முழுமையும் கண்டுபிடித்தோம் என்று திருவுள்ளம். 5

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக

னருளிச் செய்த தாத்பர்ய சந்த்ரிகையில்

பத்னெட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகை முற்றிற்று.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாய நம:.

மூன்றும் ஷட்கம் முற்றிற்று.

1 யதிராஜஸப்ததி. 2 பஜகோவிந்தம். 3 பகவத்கீதை-18-71.
4 பரமதபங்கம் 51. 5 பாசவதம்.

ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்த ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்

ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

ஈஶ்வரே கர்த்ருதா புத்திஸ் ஸத்வோபாதேயதாந்திமே |
ஸ்வகர்மபரிணாமஶ்ச ஶாஸ்த்ரஸாரார்த்த உச்யதே 22

ப-ரை] அந்திமே - கடைசி அத்யாயத்தில், ஈஶ்வரே-பகவானிடத்திலே, கர்த்ருதா புத்தி:-இவனே கர்த்தா என்கிற புத்தியும், ஸத்வோபாதேயதா-ஸத்வகுணமே அங்கீகரிக்கத்தகுந்தது என்பதும், ஸ்வகர்மபரிணாமஶ்ச-தன் வர்ணாஶ்ரம தர்மங்களின் பரிபாகமும், ஶாஸ்த்ரஸாரார்த்த:-ஶாஸ்த்ரத்தின் ஸாரமாகிய அர்த்தமும், உச்யதே-சொல்லப்படுகிறது. 22

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனருளிச் செய்த

ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை.

இந்த ஶ்லோகத்தை முன் அத்யாயத்தோடு ஸங்கதியைத் தெரிவித்துக்கொண்டு பாஷ்யத்தில் வ்யாக்யானம் செய்கிறார்—'கீழ் இரண்டத்யாயங்களினால் மோக்ஷம், இதர புருஷார்த்தங்கள், இவைகளுக்குக்காரணமாகியது வேதத்தில் சொல்லப்பட்ட யஜ்ஞம் தபஸ்ஸு தானம் முதலிய கர்மங்களே ஒழிய வேறல்ல. வேதத்தில் சொல்லப்படுகிற கர்மத்திற்கும் பொதுவாகிய லக்ஷணம் ப்ரணவத்தோடு சேர்ந்திருப்பது. அதில் மோக்ஷம், இதர புருஷார்த்தங்கள், இவைகளுக்கு ஸாதனமான கர்மங்களுக்கு ஒன்றுக்கொன்று வ்யத்யாஸம் 'தத்,' 'ஸத்' என்னும் பதங்களினால் சொல்லப்படுகிறபடியினால்; மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய கர்மம் பலத்தில் ஆசையில்லாத யஜ்ஞம் முதலியவை. அவைகளை ஆரம்பிப்பதும் ஸத்வகுணம் வ்ருத்தியடைவதினால் உண்டாகிறது. ஸத்வம் வ்ருத்தியடைவதும் ஸத்வகுணமுடைய ஆஹாரங்களை புசிப்பதினால் என்று சொல்லப்பட்டது. பிறகு மோக்ஷத்திற்குக்காரணமாகச் சொல்லப்படுகிற த்யாகம் ஸந்யாஸம் இவையிரண்டும் ஒன்றென்பதும் த்யாகத்தின் ஸ்வரூபமும், எல்லாவற்றிற்கு மீஶ்வரனாகிய பகவானிடத்தில் எல்லாக் கர்மங்களுக்கும் கர்த்தாவா யிருக்கிறான் என்பதை அனுஸந்திப்பதும், ஸத்வ குணம், ரஜோகுணம், தமோகுணம், இவைகளின் கார்யங்களை நிரூபிப்பதினால் ஸத்வகுணமே அவஶ்யம் அங்கீகரிக்கத்தகுந்தது என்பதும், தன்னுடைய வர்ணாஶ்ரம தர்மங்களுக்குத்தகுந்த கர்மங்கள் பரமாத்மாவிற்கு ஆராதனங்களாக

இருந்து பரமாத்மாவை அடைவதை உண்டாக்கும் விதமும் ஶாஸ்த்ரம் முழுமைக்கும் ஸாரமான அர்த்தமாகிய பக்தியோகமும் என்கிற இவைகள் சொல்லப்படுகின்றன' என்று. இவ்விடத்தில் 'ஜ்ஞாநம்', 'ஸஜ்ஞாநம்' என்னும் பதங்கள் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்பது பகவானால் சொல்லப்பட்டதினாலேயே பாஷ்யத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பரமாத்மாவினிடத்தில் இவனை கர்த்தா என்கிற அநுஸந்தாநமும் 'தைவம் சைவாத்ர பஞ்சமம்' என்கிற இடத்திலேயே 'அத்ர-இந்தக்கர்மங்களின் காரணங்களினுடைய தொகுதியில் தைவம் பஞ்சமம் - அந்தர்யாமியாகிய பரமாத்மா கர்மங்களை உண்டு பண்ணுவதில் முக்கியமான காரணம் என்றர்த்தம். இதுவும் மேலே 1 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச' என்று சொல்லப்பட்டதல்லவா. மேலேயும் 2 'ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி। ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா॥' என்று சொல்லப்போகிறார்-ஜீவாத்மாவினுடைய கர்த்ருத்வமும்பரமாத்மாவிற்கு வசபட்டதென்பது 3'பராத்து தச்ச்ருதே:' என்கிற ஸூத்திரத்தில் நிரூபிக்கப்பட்டது. இப்படி ஜீவாத்மாவிற்குக் கர்த்ருத்வம் பரமாத்மாவிற்கு வசப்பட்டதாயிருந்தால் ஜீவாத்மா கர்மங்களில் ஏவத்தகாதவனாகிறான். ஆகையினால் இதைச் செய்யாதே இதைச் செய் என்று சொல்லுகிற ஶாஸ்த்ரங்கள் வ்யர்த்தங்களாய்விடுமே என்கிறஇந்த ஆக்ஷேபமும் ஸூத்ரகாரரால் 4 'க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்தாவையர்த்யாதிப்ய:' என்றுபரிஹரிக்கப்பட்டது. இத்தால் சொல்லப்பட்டதாவது—பரமாத்மாவினால் கொடுக்கப் பட்டது, அவனையே ஆதாரமாகவுடையதும், அவனால்கொடுக்கப்பட்ட ஶக்தியையுடையதுகளுமாகிய இந்த்ரியம், ஶரீரம், முதலியவைகளினால் ஜீவாத்மா தானும், அவனையே ஆதாரமாகவுடையவனும், அவனால் கொடுக்கப்பட்ட ஶக்தியையுடையவனும் இருந்துகொண்டு கர்மங்கள் முடிவு பெறுவதற்காகத் தன்னுடைய இச்சையினால் இந்த்ரியம் முதலியவைகளை அதிஷ்டானம் செய்வதாகிய ப்ரயத்தினத்தை ஆரம்பிக்கிறான். அவனுக்குள்ளிருக்கிற பரமாத்மா தானனுமதி கொடுப்பதினால் அந்த ஜீவாத்மாவை ப்ரவ்ருத்திக்கும்படி செய்கிறான். ஜீவாத்மாவிற்கும் தன்னுடைய புத்தியினாலேயே ப்ரவ்ருத்திசெய்யக் காரணமாயிருக்கும் தன்மை இருக்கிறது. மிகவும் பெரிதாகிய பாறை, மரம் முதலியவை

1 பகவத்கீதை-15-15 2 பகவத்கீதை - 13-63
3 ஶாரீரக ஸூத்ரம்-2-3-40 4 ஶாரீரக ஸூத்ரம்-2-3-41

கள் சலிப்பதை ப்ரயோஜனமாகவுடைய அனேகம் புருஷர்களினால் செய்யப்படுகிற வ்யாபாரங்களில் அனேகப்பேருக்குக் காரணமாக இருக்கும் தன்மையும் விதிப்பது மறுப்பது இவைகளுக்குப் பாத்ரமாயிருக்கும் தன்மையும் எப்படி உண்டாகிறதோ அதைப்போல' என்று நிருபிக்கப்பட்டது. இவ்விடத்தில் ஶாஸ்த்ர ஸாரார்த்தம் 1 ‘𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂’ என்றாரம்பித்து மிகவும் ப்ரீதியுடன் அர்ஜுநனை ஸாவதானமாய் இருக்கும்படிசெய்து 2 ‘𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃’, 3 ‘𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯’ என்கிற இரண்டு ஶ்லோகங்களினால் சொல்லப்பட்டது. சரம ஶ்லோகத்தின் அர்த்தமும் தாத்பர்ய சந்த்ரிகையிலும், நிக்ஷேபரக்ஷையிலும் நம்மால் பாஷ்யத்தை அனுஸரித்தும் ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்தும் எதிரிகளின் பக்ஷங்களெல்லாவற்றையும் நிராகரித்துக் கொண்டும் நிருபிக்கப்பட்டது. அவ்விடத்தில் நம்மால் சொல்லப்பட்ட ஸங்க்ரஹம் 4 ‘[illegible] ।[illegible] ॥’ என்பது. ஸாரார்த்தமாவது பக்தியோகமென்று பாஷ்யத்தில் சொல்லியிருப்பதோவெனில் அங்க ப்ரபத்தியாகச் சொல்லும் பக்ஷத்தில் ப்ரபத்தியைக் குறித்தும் பக்தி அங்கியாகையினாலே ப்ரதானமாகையினால்.

ஸீராத்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

1 பகவத்கீதை-18-64 2 பகவத்கீதை-18-65 3 பகவத்கீதை-18-66
4 537-ம் பக்கம், 1-ம் புட்நோட்டைப் பார்க்க.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக னருளிச்செய்த

ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

சத்துவ வீடுடை நற்கருமந்தானு கந்தமையும்
சத்துவமுள்ளது தான்குறிக் கொள்வகை செய்தனவும்
சத்துவ நற்கிரிசைப் பயனுஞ் சரணாகதியும்
சத்துவமே தருவானுரைத்தான் றனிப் பார்த்தனுக்கே. 19

ப — ரை] சத்துவ வீடுடை - ஸாத்விகத்யாகத்தோடு கூடிய, நற்கருமம்-ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களை, தான—தான், உகந்தமையும்-ப்ரீதி செய்துகொண்டிருக்கும் ப்ரகாரத்தையும், சத்துவமுள்ளதுதான்-ஸத்வகுணமுடைய வஸ்துக்களையே, (இவ்விடத்தில் தான் என்பது 'ஏவ' என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது), குறிக்கொள்வகை-ஸாவதானமாக அங்கீகரிக்கும்படி, செய்தனவும்-செய்ததையும், சத்துவ நற்கிரிசைப் பயனும்-சத்துவ குணத்தினால் செய்யப்படுகிற வைதிக கர்மங்களின் ப்ரயோஜனத்தையும், சரணாகதியும்-ப்ரபத்தியையும், சத்துவமே தருவான் - ஸத்வ குணத்தையே கொடுக்கும் ஸ்வபாவத்தையுடைய பகவான், தனிப்பார்த்தனுக்கு-தனக்கொப்பில்லாதவனாகிய அர்ஜுநனுக்கு, உரைத்தான் - சொன்னான். 19

'சத்துவ வீடுடை நற்கருமம்' என்கிற இடத்தில் ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் 'ஶமஸ்வைக கர்த்ருதாவாஞ்சி:' என்று கர்த்ருத்வத்யாகத்தைமாத்திரம் சொல்லியிருந்தபோதிலும் அது பல ஸங்கத்யாகங்களுக்கும் உபலக்ஷணம் என்று திருவுள்ளம். 'நற்கருமம்' என்பதற்கு வைதிகங்களான கர்மங்கள் என்றர்த்தம் அன்றிக்கே; 'தத்கர்ம யந்ந பந்தாய', 'ஆயாஸாயாபரம் கர்ம'[1], என்றும் சொல்லுகிறபடியே ஒரேகர்மம் தானேபலம் முதலியவைகளில் ஆசையுடன் செய்தால் அது அழியக்கூடியதாகையினாலும் ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமாகிறபடியினாலும் இவனுக்கு நன்மையைக்கொடுக்காது, அதே கர்மத்தையே ஸாத்விகத்யாகத்துடன் செய்தால் அது க்ரமமாய் மோக்ஷ பர்யந்தமாகிற படியினாலே நன்மையைத்தருகிறது, என்பது சொல்லப்படுகிறது. 'தானுகந்தமையும்' என்பதினால் [2]'நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம' என்றருளிச்செய்தபடியே அதுவே தனக்கு ப்ரீதியையுண்டாக்கக்கூடியது என்று சொல்லப்படுகிறது. 'தான' என்பதற்குக் கர்மங்களினால் ஆராதிக்கப்படுகிறவனும், அதின்பலங்களைக்கொடுக்கிறவனுமிருக்கிற தனக்கு அது

---

1 விஷ்ணுபுராணம். 2 பகவத்கீதை - 18 - 4

மிகவும் ப்ரீதிகரம் என்று தாத்பர்யம். 'சத்துவமுள்ளது தான்' என்பதினுல் ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் 'ஸத்வோத்ரேகதோ' என்கிற இடத்தில் ஸத்துவகுணத்தை அங்கீகரிக்கவேண்டும் என்றுசொல்லிஇருந்தபோதிலும்ஸத்வகுணம் நம்மிந்த்ரியங்களுக்குப் புலப்படாதாகையிலைல் அதை அங்கீகரிப்பது எப்படி என்னில் ஸத்துவகுணம் மேலிட்டதாகச் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிற ஆஹாரம், புத்தி, ஶ்ரத்தை, முதலியவைகளை அங்கீகரிப்பதுதான் ஸத்வகுணத்தை அங்கீகரிப்பது என்று தாத்பர்யம்சொல்லவேண்டும் என்று திருவுள்ளம். 'சத்துவமுள்ளது தான்' என்பதினுல் ஸத்துவகுணம் மேலிட்ட வஸ்துக்களையே நாமங்கீகரிக்கவேண்டுமேயொழிய மற்றக்குணங்களையுடைய வஸ்துக்களைக் கொஞ்சமேனும் அங்கீகரிக்கக்கூடாது. ஸங்க்ரஹ ஶ்லோகத்திலும் 'ஸத்வோத்ரேகதோ' என்கிற இடத்திலும் 'ஸத்வ' என்கிற பதத்தின் மேல் 'ஸஹ' என்று சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று திருவுள்ளம். இங்கு 'தான்' என்பதற்குக் கர்த்தாவாகிய தான் என்றர்த்தம் சொல்லில் கீழ்ப்பாதத்தில் 'தான்' என்று பகவானைச்சொல்லி இருப்பதிலும் இந்தப்பாட்டில் கர்த்தா (எழுவாய்) 'சத்துவமே தருவான்' ஆகையிலைல், தான் என்கிற பதம் அந்தப்பகவானையே குறிக்கும். 'குறிக்கொள்வகை செய்தனவும்' என்பதினுல் நேரில் ஸத்துவகுணத்தை அங்கீகரிக்க வேண்டுமென்பது இந்த ஸந்தர்ப்பத்தில் சொல்லப்படவில்லையாகிலும் ஸத்வரஜஸ்தமோ குணங்களினுடைய கார்யங்களை நிரூபித்ததினுல் ஸத்துவகுணமே அங்கீகரிக்கத்தக்கதென்பது தாத்பர்யத்தினுலேற்படுகிறது. எப்படி இரண்டுவித வழிகளைக் குறித்து இந்த வழியில் முள் முதலியவைகளிருக்கும் நிழலில்லை என்று ஒருவழிக்குத் தோஷங்களைச் சொல்லி மற்றொருவழிக்குக் குணங்களைச்சொல்லுவதினுல் அந்தக் குணமுள்ள வழியிலே போகவேண்டுமென்பது தாத்பர்யத்திலேற்படுகிறதோ அதைப்போல என்று சொல்லப்பட்டது. 'சத்துவ நற்கிரிசைப் பயனும்' என்பதற்கு ஸத்துவகுணத்தினுலுண்டாகிற வர்ணாஶ்ரம தர்மங்களின் ப்ரயோஜனமும் என்று திருவுள்ளம். அன்றிக்கே 'சத்துவ' என்னும் பதம் ஸாத்விக த்யாகத்தைச் சொல்லி அப்படிப்பட்ட ஸாத்விக த்யாகத்தோடு செய்யப்படுகிற கர்மங்கள் என்றர்த்தமாகவுமாம் 'நற்கிரிசை' என்பதினுல் வர்ணாஶ்ரம தர்மங்களும் அனுஜ்ஞா கைங்கர்யங்களும் காம்யங்களும் சொல்லப்படுகின்றன. 1 'ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:' என்றல்லவோ சொல்லப்பட்டது. ஆகையிலைல்

1 பகவத்கீதை-18-56

ஶாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்ட கர்மங்களைத் தவிர மற்றெல்லாக் கர்மங்களும் சொல்லப்படுகின்றன. 'பபனும்' என்பதினால் 'ஸ்வகர்மபரிணாமஜ:' என்கிற இடத்திலிருக்கும் 'பரிணாம:' என்னும் பதம் கர்மங்களின் 'ப்ரக்ருதிபரிணாம:' என்கிற இடத்திலே போல உத்பத்தி மாறுதல் அழிவு முதலிய மாறுதல்களைச் சொல்லுகிறதல்ல அவைகளினால் உண்டாகும் ப்ரயோஜனத்தைச் சொல்லுகிறது. 1 'ஸ்வகர்மநிரத: ஸித்3தி4ம் யதா2 விந்த3தி தச்ச்2ருணு' என்றாரம்பித்துக் கர்மங்களினாலுண்டாகும் பலஸித்தியைப் பற்றியல்லவோ சொல்லப்படுகிறது. ஆகையினால் 'பரிணாம:' என்பது ஔபசாரிகமாய்ப் பலத்தைச் சொல்லுகிறது, என்று திருவுள்ளம். 'சரணாகதியும்' என்பதற்கு இவ்விடத்தில் 'ஸாத்4யஸாத4நாய:' என்று ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் சொல்லியிருப்பதின் முக்கிய தாத்பர்யம் ப்ரபத்தியே என்று திருவுள்ளம். பாஷ்யகாரர் கீதாபாஷ்யத்தில் பதினெட்டாம் அத்யாய அவதாரிகையில் 'ஸாத்4யஸாத4நாய: ஶக்திபோத:' என்று அர்த்தம் செய்திருக்க ஶரணாகதி என்றருளிச்செய்திருப்பது எப்படிப் பொருந்தும்? அதற்குவிரோதமாகாதோ? என்னில்! இதற்கு ஸமாதானம்—நிக்ஷேபரக்ஷையில் 'பாஷ்யத்தில் 'ஸர்வத4ர்மாந் பரித்யஜ்ய' என்கிற ஶ்லோகத்திற்கு இரண்டுவித அர்த்தங்கள் அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் அந்த அர்த்தங்களில் சிலவற்றில் பாஷ்யகாரருக்கு அநாதரவு இருக்கிறதென்பதேற்படுகிறது. அதில் இரண்டாவது யோஜனையிலும் 'ஸர்வத4ர்மாந்' என்கிற இடத்திலிருக்கும் 'ஸர்வ' ஶப்தத்திற்கும், ஸர்வபாபேப்4ய:' என்கிற இடத்தில் 'ஸர்வ' ஶப்தத்திற்கும், 'மா ஶுச:' என்கிற பதத்திற்கும், அவ்வளவு ஸ்வாரஸ்யமில்லையாகையினால் ஸ்வதந்த்ர ப்ரபத்திபரமான யோஜனை அருளிச்செய்வதிலும் பாஷ்யகாரருக்குத் திருவுள்ளம் தான். ஆனால் பரம ரஹஸ்யதமமான அர்த்தமாகையினால் அது ஸ்பஷ்டமாக அங்கு அருளிச்செய்யப்படாவிட்டாலும் மேல் சொல்லிய பதங்களின் ஸ்வாரஸ்யத்தை யோசித்துப்பார்க்கும்பொழுது ப்ரபத்தி மோக்ஷத்திற்கு ஸாதனமென்பது தானே ப்ரகாசமாகிறதென்று ஸம்ப்ரதாய பரம்பரையாகத் தெரிந்துகொள்ளுகிறோம். அது எப்படி என்னில், ப்ரபத்தி மோக்ஷத்திற்கு ஸாதனமென்பது 'ப்ரஹ்ம காலேகாலேந ஸாத்4ய:ஸாத4நாந்யபி க்ஷணாவகாஶோ வா ந யோகே ந ப்ரபத்தித: | தேநைதேநாப்யதே தத் த்ரைகாலிகம் ஸாமாந்யம் வர்ணாதி தத்3வர்ணநாத் ப்ரபத்யதே ||' 'ஶரணம் வ்ரஜ

1 பகவத்கீதை-18-45

ப்ரபந்நாய ஸ்நாநயோக விவர்ஜிதாய । தேஹாந்தே த்வத்பதப்ராப்தி யாதிதம் ஜந்மஸாகாத் ॥' இத்யாதி அநேக வசனங்களினால் ஸித்தமாயிருக்கிறது. பாஷ்யகாரர்தாமே சரணாகதிகத்யத்தில் 'நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதநஸ்ய சரணாரவிந்த சரணார்த்தி:' என்றருளிச்செய்திருக்கிறார். அவ்விடத்திலும் கீழே 'பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேக' என்று பரபக்த்யாதிகளைப் ப்ரார்த்தித்திருக்கிறபடியினால் அங்கப்ரபத்தியைச் சொல்லுவதாகவே அர்த்தம் சொல்லலாமே என்னில் அது உசிதமல்ல, மேல் பகவான் பதில் சொல்லுகிற வாக்யத்தில் இந்தப் பரபக்தி பரஜ்ஞானம் பலதசையில் வரக்கூடியதாகிய ப்ரீதி விசேஷங்களைச்சொல்லுகிறதென்பது 'ஜீர்ணமிவ வஸ்த்ரம் ஸுகேநேமாம் ப்ரக்ருதிம் ஸ்தூலஸூக்ஷ்மரூபாம் விஸ்ருஜ்ய ததாநீமேவ மத்ப்ரஸாதலப்த மச்சரணாரவிந்த யுகளைகாந்திகாத்யந்திக பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திக்ருத'என்கிற வாக்யத்தில் ப்ரக்ருதிஸம்பந்தம்விட்ட பிறகு பரபக்தி முதலானது உண்டாவதாக அனுக்ரஹம் செய்யப்பட்டதாக அருளிச்செய்யப்பட்டிருப்பதினால். மேலும் 'அத்ர த்வயம்' என்று அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் த்வயத்திற்குவ்யாக்யானம் செய்வதாக பாஷ்யகாரர் திருவுள்ளமாகையினால் த்வயம் ஸ்வதந்த்ரமானப்ரபத்தியைச்சொல்லுகிறது என்பது 'ஸக்ருதேவ ப்ரபந்நஸ்ய க்ருத்யம் நைவாந்யதிஷ்யதே । யாவச்சரீரபாதம் அத்ர த்வயம் ஸக்ருத் க்ருதக்ருத்யோ பவிஷ்யதி ॥'என்று பகவத்வாக்யம் இருப்பதினாலும், 'ஸ்ரீரங்கே ஸுகமாஸ்ஸ்வ கேவலம் சரீரபாதபர்யந்தம் ப்ரபந்ந:'என்றருளிச்செய்யப்பட்டிருப்பதினால் பக்தியோக நிஷ்டனுக்கு அந்திமப்ரத்யயம் பகவானைப் பற்றிவருவதற்காக 'ஆப்ரயாணாத் தத்ரைவ நித்யஸ:' என்கிற ஸ்லோகத்தின் பாஷ்யத்தில் அருளிச்செய்திருக்கிறபடியே ஆரம்பதசை முதற்கொண்டு எப்பொழுதும் பகவானையே நினைத்துக்கொண்டிருக்கவேண்டும், அதாவது அந்திம ப்ரத்யயம் வருவதற்காக அப்யாஸம் செய்யவேண்டும். அதைப்போல அல்லாமல் 'ஸ்ரீரங்கே ஸுகமாஸ்ஸ்வ' என்கிற இடத்தில் 'ஸ்வ' என்பதினால் பக்தியோக நிஷ்டனைவிட வ்யத்யாஸம் தெரிவிக்கப்பட்டிருப்பதினாலும், 'கேவலம்' என்பதிற்கு ஆரம்பம் முதல் அப்யாஸம் செய்வது முதலிய உன்னுடையப்ரயத்னங்களை எதிர்பாராமல் என்றர்த்தமாகையினால் ஸ்ரீவராஹசரம ஸ்லோகத்தில் 'ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாணஸந்நிபம் । அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ॥' என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிற அர்த்தம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறபடியினாலும்

ஸ்வதந்த்ர ப்ரபத்தியே பெரிய கத்யத்தில் அருளிச் செய்யப்பட்டதென்று கத்ய பாஷ்யாதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் பகவானுடைய ப்ரதி வசனத்தில் 'இது கேவலம் உனக்கு ப்ரீதிக்காக மாத்திரம் பொய்யாகச் சொன்னதல்ல என்பதற்காக 'மாதே பூதத்ர ஸம்ஶய:' என்றாரம்பித்துச் சில வாக்யங்களை அருளிச்செய்து பிறகு 'ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே। அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம॥', 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ। அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:॥' இதி மயைவ ஹ்யுக்தம்। அதஸ்த்வம் தவ தத்த்வதோ மஜ்ஜ்ஞாநதர்ஶநப்ராப்திஷு நிஸ்ஸம்ஶயஸ்ஸுகமாஸ்வ' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்த 'ஸர்வதர்மாந்' என்கிற ஶ்லோகம் ஸ்வதந்த்ர ப்ரபத்தியைச் சொல்லுவதென்பது பாஷ்யகாரருக்குத் திருவுள்ளமென்று ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. மேலும் ஸ்ரீரங்க கத்யத்திலும் 'நித்யகைங்கர்யப்ராப்த்யுபாயபூத பக்தி தது பாய ஸம்யக்ஜ்ஞாந தது பாய ஸமீசீநக்ரியா தது அநுகுண ஸாத்த்விகதாஸ்திக்யாதி ஸமஸ்தாத்மகுணவிஹீந:' என்றாரம்பித்து, 'அநாகதாநந்தகாலஸமீக்ஷயாப்யத்ருஷ்டஸந்தாரோபாய: த்வச்சரணாரவிந்தயுகளம் ஶரணமஹம் ப்ரபத்யே। ஏவமவஸ்திதஸ்யாப்யர்த்தித்வமாத்ரேண பரமகாருணிகோ பகவாந்' இத்யாதி வாக்யங்களும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வாக்யங்களினால் பக்தியோகம் அதற்குபாயங்களான ஜ்ஞான யோகம் கர்ம யோகங்கள் தனக்கில்லை என்பதும் இந்தச் ஶரணாகதியைத் தவிர வேறுபாயம் இனிவரப்போகிற எந்தக் காலத்திலும் தனக்கு நேரிடப்போகிறதில்லை யென்பதும், ஆகையினால் பகவானைச் ஶரணமாக அடைகிறேன் என்பதும், இப்படி ப்ரார்த்தித்த மாத்திரத்தினால் பகவான் பரம புருஷார்த்தத்தைத் தனக்குக் கொடுக்கப்போகிறான் என்கிற மஹாவிஶ்வாஸத்தை முன்னிட்டு ப்ரார்த்திக்கிறேன் என்பதும் அருளிச்செய்யப்படுகிறபடியினால் ஸ்வதந்த்ரப்ரபத்தியே ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீ வைகுண்டகத்யத்திலும் 'தத்ப்ராப்தயே ச தத்பாதாம்புஜத்வயப்ரபத்தே: அந்யந்ந மே கல்பகோடிஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந:' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் அந்தப் பகவானுடைய கைங்கர்யமாகிற புருஷார்த்தத்தை அடைவதற்கு அவனுடைய திருவடிகளில் ஶரணாகதியை விட வேறுபாயம் எனக்கு அநேக கல்பகாலங்கள் பொறுத்தும் ஸம்பவிக்கக்கூடியதல்லஎன்று நினைத்துக்கொண்டவாய்' என்றருளிச் செய்

யப்பட்டிருக்கிறது இப்படியே ஸ்ரீஸ்தோத்ர ரத்னத்திலும் ‘நதர்மநிஷ்டோஸ்மி’ என்கிற ஶ்லோகத்திலும், ‘அபராதஸஹஸ்ரபாஜநம்’ என்கிற ஶ்லோகத்திலும் பக்தியோகத்தை இடையிடாமலே ஶரணாகதி, மோக்ஷத்தைக் கொடுக்குமென்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இப்படியே ‘அகலகில்லேன்’ என்கிற பாட்டின் வ்யாக்யானத்தில் இவர் தம்மாலே நியமிக்கப்பட்டு இவர் ப்ரதம ஶிஷ்யராகிய திருக்குருகைப் பிரான்பிள்ளானால் செய்யப்பட்டதாயும் இவரால் அங்கீகரிக்கப்பட்டதாயுமிருக்கிற ஆறாயிரப்படியில் ‘அநந்யஶரணனடியேன் அநந்யப்ரயோஜனனாய்க்கொண்டு பெரியபிராட்டியாரைப்புருஷகாரமாகச்ஶரணம் புகுந்தேன். இப்போதே நிரஸ்தஸமஸ்தப்ரதிபந்தகனாய் உன் திருவடிகளிலே ஸர்வாகாரமும் ஸர்வ கைங்கர்யமும் அடியேன் பண்ணப்பெறவேணுமென்கிறார்’ என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இந்தப் பாஷ்யகாரருடைய ப்ரார்த்தனையினால் தேவப்பெருமாளிடத்தில் விண்ணப்பம்செய்த ஆறுவிதக்கேழ்விகளுக்குப்பகவானருளிச்செய்த ஆறுவார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு திருக்கச்சி நம்பிகள் இவருக்கு அருளிச்செய்ய அவைகளையே ப்ரமாணமாக வைத்துக்கொண்டு ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்யத்தொடங்கினார். அவைகளுக்குள் ஒன்று ‘ப்ரபத்தியே உபாயம்’ என்பது. ஆக இப்படிப் பாஞ்சராத்திரம் முதலிய ப்ரமாணங்களும், ஆளவந்தார் முதலிய பூர்வாசார்யர்கள் ஸம்ப்ரதாயங்களும் இந்தப் பாஷ்யகாரருடைய திருவுள்ளமும், அதை அனுஸரித்த பிள்ளான் முதலிய இதர ஆசார்யர்களினுடைய அபிப்ராயமும், இவைகளெல்லாவற்றிற்கும் மூலமான பகவானுடைய திருவுள்ளமும், ப்ரபத்தி மோக்ஷத்திற்கு நேரில் உபாயம் என்கிற விஷயத்தில் ஏககண்டமாயிருக்க இக்கீதா பாஷ்யத்தில் ஏதோ ஒரு அபிப்ராய விஶேஷத்தினால் ஸ்பஷ்டமாக அருளிச் செய்யாததைக் கொண்டு இவைகளை அந்யதாகரிப்பது யுக்தமல்ல. மேலும் இந்தக் கீதாபாஷ்யத்தில் முதல் யோஜனை ஸாத்விக த்யாகத்தைச் சொல்லுவதாக அருளிச் செய்யப்பட்டது. அதில் சில அஸ்வாரஸ்யங்கள் தோன்ற ‘அதவா’ என்றாரம்பித்து அங்க ப்ரபத்திபரமாக இரண்டாவது யோஜனை அருளிச் செய்யப்பட்டது. அதிலும் ‘ஸர்வதர்மாந்’ என்கிற இடத்தில் ‘தர்ம’ என்னும் பதத்திற்குப் பக்தியோகத்திற்குத் தடங்கலான பாபங்களை நிவ்ருத்தி செய்யக்கூடிய சாந்த்ராயணம் முதலிய சிலவற்றைச் சொல்லுவதாகச் சுருக்கி அர்த்தம் சொல்லவேண்டி யிருக்கிறது. மேலும் பக்திக்கு ஸாதனங்களாகிய கீதா பாஷ்யத்திலருளிச் செய்யப்பட்ட அனேக தர்மங்களின் ஸ்தானத்தில்

நிற்கக்கூடிய ப்ரபத்தி அந்தப் பக்தி செய்ய அஶக்தன் விஷயத்தில் அதின் ஸ்தானத்தில் நிற்குமென்பதும் அந்த இடத்திலேயே தாத்பர்யத்தினாலேற்பட்டது. மேலும் 'ஏகம்' என்பதற்கு வேறொரு ஒத்தாசை ஒன்றும் வேண்டியதில்லை என்றர்த்தமாகையினால் பக்தியோகத்தைச் செய்யவேண்டியதாயிருந்தால் அஸ்வாரஸ்யம் உண்டாகிறது. 'ஸர்வபாபேப்ய:' என்கிற இடத்தில் 'ஸர்வ' என்னும் பதத்திற்கும் பக்தியோகத்திற்குத் தடங்கல்களான பாபங்களை மாத்திரம்சொல்லுவதாகச் சுருக்கிச் சொல்லவேண்டியிருப்பதினாலும் அஸ்வாரஸ்யம் உண்டாகிறது. இப்படியே 'மா ஶுச:' என்கிறதற்கும் அஸ்வாரஸ்யம் வருகிறது. அர்ஜுநனுக்கு எந்தெந்த விதமாகத் துக்கங்கள் ஸம்பவிக்குமோ அவைகளையெல்லாம் நிவ்ருத்தி செய்தாலல்லவோ 'மா ஶுச:' என்பது பயன்படும். மேலும் இந்தக்கீதாஶாஸ்த்ரத்தை அர்ஜுநனை வ்யாஜமாக வைத்துக்கொண்டு ஸர்வலோகத்திற்கும் ஹிதமான ஶாஸ்த்ரார்த்தத்தை ப்ரகாசப்படுத்தினானென்பது கீதாபாஷ்யத்தில் 'பாண்டுதநயயுத்தப்ரோத்ஸாஹந வ்யாஜேந' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அதில் சேதனர்களுக்கு ப்ராரப்தத்தை அனுபவிக்க வேண்டியதினால் உண்டானதும் அதிக நாள் செய்யவேண்டிய பக்தியோகத்தைச் செய்யவேண்டியதினா லுண்டாகியதுமாகிய துக்கத்தை நிவ்ருத்திசெய்யாவிடில் 'மா ஶுச:' என்பதற்கும் அர்த்தம் சுருக்கிச் சொல்லவேண்டிவருகிறது. ஆனால் இந்த இடத்திலேயே அந்த ஸ்வதந்த்ர ப்ரபத்தியைச் சொல்லுவதாக யோஜநாந்தரமருளிச் செய்யாதது அது மிகவும் ரஹஸ்யமாகையினாலும் அர்ஜுநனுக்கு யுத்தம் அவஶ்யம் செய்யவேண்டுமென்று சொல்லுவதற்காக இந்த ஸந்தர்ப்பமேற்பட்டபடியினால் அதின் ஸ்வாரஸ்யத்தை அனுஸரித்தும். ஆனால் ப்ரபன்னனுக்கும் வர்ணாஶ்ரம தர்மங்கள் விடக்கூடாதென்பது ஸ்பஷ்டமாக ஏற்பட்டிருப்பதினால் ஸ்வதந்த்ர ப்ரபத்தி பரயாக அர்த்தம்செய்தபோதிலும் யுத்தம் செய்யவேண்டியதற்கு விரோதமில்லையே என்னில் ப்ரபன்னனுக்கு வர்ணாஶ்ரம தர்மங்கள் அனுஷ்டிக்காவிடில் மோக்ஷம் கிடைக்காது என்பதில்லை. ஆனால் பகவானுடைய நிக்ரஹம் உண்டாகும். அப்படி உண்டானால் அதற்கு உசிதமான ப்ராயஶ்சித்தங்களைச்செய்து பரிஹரித்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிடில் இவன்குறித்த காலத்திற்குள்ளேயே சில சிக்ஷைகள் உண்டாகும் என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டிருப்பதினால் அர்ஜுநன் பந்து ஸ்நேஹத்தினால் வருகிற விஶேஷத்தைப் பார்க்கிலும் தனக்கு மோக்ஷத்திற்கு விரோதமில்லாத அநிஷ்டங்கள் வரில் ஸம்மதித்திருக்கிறானென்பது

1 '𑌗𑍁𑌰𑍂𑌨𑌹𑌤𑍍𑌵𑌾 𑌹𑌿 𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌭𑍈𑌕𑍍𑌷𑌮𑌪𑍀𑌹 𑌲𑍋𑌕𑍇' என்பதினாலும், 2 '𑌅𑌪𑌿 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍋𑌃 𑌕𑌿𑌂 𑌨𑍁 𑌮𑌹𑍀𑌕𑍃𑌤𑍇' என்றும் சொல்லப்பட்டிருக்கிறபடியினால் ஏற்படுகிறது. ஆகையினால் யுத்தாதிகளைச் செய்யாவிடில் மோக்ஷம் உனக்குக் கிடைக்காது என்று உபதேசித்தால் தான் இவன் யுத்தத்தில் ப்ரவ்ருத்திப்பான் என்று பகவானுக்குத் திருவுள்ளமிருக்கக் கூடும் என்று திருவுள்ளம் பற்றி அங்கப்ரபத்திபரமான யோஜனையுடன் நிருத்தப்பட்டது. அங்க ப்ரபத்தியிலும் இச்சங்கை உண்டாகாதோ வெனில் தன்னால் செய்யமுடியாத அந்தக் கர்மங்களின் ஸ்தானத்திலே மாத்திரம் ப்ரபத்தி வருமாகையினால் யுத்தம் செய்யவேண்டியதில்லை என்று உதிப்பதற்கு ந்யாயமில்லை. ஆகையினாலேயே தாமருளிச்செய்த அங்க ப்ரபத்திபரமான யோஜனையில் ப்ரபத்திக்கும் பக்தி யோகம் அங்கியாகையினாலே முக்யமாகையினால் ஶாஸ்த்ர ஸாரார்த்தம் பக்தியோகமென்று அந்த யோஜனையை அனுஸரித்து வ்யாக்யானம் செய்யப்பட்டது. இதினாலேயே மோக்ஷார்த்தமான ப்ரபத்தி இல்லை என்று திருவுள்ளமில்லை. கீழ்ச்சொல்லிய அங்க ப்ரபத்தி யோஜனையிலுள்ள அஸ்வாரஸ்யங்களை யோசிக்கும் ஸமயத்தில் ஸ்வதந்த்ர ப்ரபத்தி பரமான யோஜனை இந்த ஶ்லோகத்திற்குத் தாத்பர்யமாக அருளிச் செய்யப்பட்டது. இந்தக் கீதையிலேயே முதலில் ஶாஸ்த்ரார்த்த உபதேசத்திற்காக ப்ரபத்தி செய்தானென்றருளிச் செய்யப்பட்டது நடுவிலும் அபசாரங்களை க்ஷமிப்பதற்காக ஒரு ப்ரபத்தி அர்ஜுனனால் செய்யப்பட்டது. ஆகையினால் அங்க ப்ரபத்தி தவிர மற்ற ப்ரயோஜனங்களுக்காகவும் ஶரணாகதி பண்ணலாமென்று ஸ்பஷ்டமாக யேற்படுகிறது. இப்படி ஸ்வதந்த்ர ப்ரபத்தி இந்த ஶ்லோகத்திற்கு அர்த்தமாக இல்லாமல்போனால் ப்ரபத்தியுபாயத்தை அருளிச் செய்யாத ஒரு குறைவு கீதைக்கு உண்டாகுமாகையினால் 3 'அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத் தவரறிய நெறியெல்லா மெடுத்துரைத்த நிறைஞானத்தொரு மூர்த்தி' என்கிற ப்ரபன்னஜன ஸந்தான கூடஸ்தருடைய வாக்யத்திற்கு விரோதம் வரும். மேலும் இந்தக் கீதையில் உபக்ரமாதிகளை யோசித்துப் பார்க்கும்பொழுதும் ஶரணாகதியிலேயே தாத்பர்யம் என்றேற்படுகிறது. அது எப்படி என்னில் முதலில் ஆரம்பத்தில் 4 '𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌽𑌹𑌂 𑌶𑌾𑌧𑌿 𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌮𑍍' என்று அருளிச் செய்யப்பட்டது. முடிவில் 5 '𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯' என்று

1 பகவத்கீதை-2-5 2 பகவத்கீதை-1-35
3 திருவாய்மொழி-4-8-6 4 பகவத்கீதை-2-7 5 பகவத்கீதை-18-66

ப்ரபத்தி அருளிச்செய்யப்பட்டது. நடுவிலும் 1 'தஸ்மாத்ப்ரணம்ய ப்ரணிதாய காயம் ப்ரஸாதயே த்வாம்', 2 'மாமேவ யே ப்ரபத்யந்தே' 3 'தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே' என்றும், அனேக இடங்களில் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு ந்யாயங்களும் 'யதஃ ப்ரவ்ருத்திஃ' என்பதினும், 'யதஃ ப்ரவ்ருத்திஃ' என்கிற பாடத்தில் அவர்களுடைய அநுஷ்டானம் காண்பிக்கப் படுகிறபடியினாலும் 'தைவீஹ்யேஷா' என்பதினாலும், 'தஸ்மாத்' என்பதினாலும் காரணங்கள் நிரூபிக்கப்படுகின்றன. அதற்கு ப்ரயோஜனமும் அதைப்பற்றிய ஸ்தோத்திரங்களும் ஆங்காங்கு அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையினால் தாத்பர்யத்தை நிர்ணயம் செய்வதற்குக்காரணங்களாகிய 'உபக்ரமோபஸம்ஹாராவப்யாஸோ அபூர்வதா பலம்। அர்த்தவாதோபபத்தீ ச லிங்கம் தாத்பர்யநிர்ணயே' என்று சொல்லப்பட்ட ஹேதுக்கள் ஆறும் சரணாகதியைப்பற்றியே முக்கியமாயிருக்கின்றன. ஆகையினால் இவ்விடத்தில் 'சரணாகதி' என்றருளிச்செய்தது பூர்வர்களினுடையவும், பாஷ்யகாரருடைய திருவுள்ளத்தை அநுஸரித்ததாயும், உசிதமாயுமிருக்கிறது—என்பது. 'சத்வமே தருவான்' என்பதினால் 4 'ஜாயமானம் ஹி புருஷம் யம் பச்யேன் மதுஸூதனஃ। ஸாத்த்விகஸ் ஸ து விஜ்ஞேயஃ' என்றும், 5 'ஸோஹா ப்ரஹ்மணே வை பராஷஸத்த்வேஷ்வேஷ ப்ரவர்த்தகஃ' என்றும் சொல்லுகிறபடியே ஸத்வகுணத்தை வ்ருத்திசெய்பக்கூடிய கடாக்ஷங்களையுடைய பகவான் என்று திருவுள்ளம். இதனால் எவனுடைய கடாக்ஷம் பட்டமாத்திரத்தில் ஸத்வம் தலையெடுத்து மோக்ஷத்தை யடைய யோக்யனாகிறானோ அப்படிப்பட்ட பகவான் தானே நேரில் உபதேசிக்கப்பெற்றான் அர்ஜுநன் என்று அர்ஜுநனுடைய பாக்யம் கொண்டாடப் படுகிறது 'தனிப்பார்த்தனுக்கே' என்பதினால் இப்படிப்பட்ட பாக்யத்தைப்பெற்றமற்றொருவன் இல்லாமையினால் தனக்குஒப்பில்லாத அர்ஜுநனுக்கு என்று திருவுள்ளம். அன்றிக்கே முன்னிருந்ததாகிய 6 'விஸ்ருஜ்ய ஸசரம் சாபம் சோகஸம்விக்நமாநஸஃ' என்று வில்லைப்போகட்டுக்க விழ்தலை இட்டுக்கிடந்த அவஸ்த்தையை நீக்கி 7 'கரிஷ்யே வசநம் தவ'

1 பகவத்கீதை-11-44
2 பகவத்கீதை-7-14.
3 பகவத்கீதை-15-4
4 259-ம் பக்கம், 3-ம் புட்நோட்டைப்பார்க்க.
5 பாஞ்சராத்ர ஸம்ஹிதை
6 பகவத்கீதை-1-47
7 பகவத்கீதை-18-73

என்றும், 1 'யத்ர பார்த்தோ தநுர்தர:' என்றும் சொல்லுகிறபடி யே கையில் காண்டீபத்தை ஏந்திக்கொண்டு யுத்தோன்முகனாய் நின்ற தசையையுடைய பார்த்தன் என்று திருவுள்ளமாகவுமாம். 19

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

1 பகவத்கீதை-18-78

ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்த ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்.

ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥 𑌦𑌾𑌨 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑌿 𑌸𑍇𑌵𑌨𑌮𑍍 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍋𑌜𑌿𑌤𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑍈𑌃 𑌪𑌰𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥ 23

ப - ரை] 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 - கர்மயோகமாவது, 𑌤𑌪𑌃 - தபஸ்ஸு, 𑌤𑍀𑌰𑍍𑌥 - புண்ணிய தீர்த்தங்கள், 𑌦𑌾𑌨 - தானங்கொடுத்தல், 𑌯𑌜𑍍𑌞 - யாகம் செய்தல், 𑌆𑌦𑌿 - இவை முதலியவைகளை, 𑌸𑍇𑌵𑌨𑌂 - இடைவிடாமல் அனுஷ்டித்தல், 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌃 - ஜ்ஞானயோகமாவது, 𑌜𑌿𑌤𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑍈𑌃 - 𑌜𑌿𑌤𑌃 - ஜயிக்கப்பட்ட, 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑍈𑌃 - மனத்தையுடையவர்களினால், 𑌪𑌰𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 - பரிசுத்தமான ஜீவாத்மாவினிடத்தில் 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 - நிஷ்டையுடையவனாயிருத்தல். 23

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனருளிச்செய்த

ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை

பிறகு பத்து ஶ்லோகங்களினால் எளிதில் தெரிந்துகொள்ள வேண்டியதற்காக கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம், இவைகளின் ஸ்வரூபம் முதலியவைகளைப் பிரித்து நிரூபிக்கிறார். அவைகளில் கர்மயோகத்தின் லக்ஷணம் முன்னமே நிரூபிக்கப்பட்டதென்று எண்ணிக்கொண்டு அந்தந்த அதிகாரிகளுடைய ஜ்ஞானம், ஶக்தி, யோக்யதை, இவைகளை யனுஸரித்து அவரவர்கள் அதிகாரத்திற்குத்தக்கபடி அனுஷ்டிப்பதற்காக நான்காம் அத்யாயத்தில் சொல்லப்பட்டவைகளும் அவ்விடத்தில் சொல்லப்படாதவைகளுமாகிய கர்மயோகத்தினுட்பிரிவுகள் எல்லாவற்றையும் '𑌆𑌦𑌿 (முதலிய)' என்னும் பதத்தினால் சுருக்கிச்சொல்லுகிறார். ப்ரயோஜன முண்டாகும் வரையில் இடைவிடாமல் ப்ரீதியுடன் அனுஷ்டிப்பது இவ்விடத்தில் '𑌸𑍇𑌵𑌨𑌂' என்னப்படுகிறது. பிறகு அந்தக் கர்மயோகத்தினாலுண்டாக்கப்படுகிற ஜ்ஞானயோகத்திற் கதிகாரியைக் காட்டிக்கொண்டு அதன் லக்ஷணத்தையும் சொல்லுகிறார். நிஷ்டையுடையவனாயிருத்தல் என்கிற இடத்தில் இடைவிடாமல் த்யானம் செய்துகொண்டிருப்பதினால் என்று சேர்த்துக்கொள்ளவும். இத்தால் அந்த ஜ்ஞானயோகத்தின் ப்ரயோஜனமாகிய யோகத்தைவிடவும் அதின் உபாயமாகிய கர்மயோகத்திற்குள்ளடங்கிய ஜ்ஞானத்தைவிடவும் வ்யத்யாஸம் தெரிவிக்கப்பட்டது. 23

ஷக்தியோகஃ ஐகாந்திகாத்யந்திக ப்ரீதி த்யானாதிஷு ஸ்திதி: | *

ப - ரை] ஷக்தியோகஃ-பக்தியோகமானது, ஐகாந்திக ப்ரீதி - பரமாத்மாவினிடத்தில் ஒரே நிஸ்சயத்தோடு கூடிய ப்ரீதியினுல், த்யானாதிஷு—(அவனைப்பற்றிய) த்யானம் முதலியவைகளில், ஸ்திதி:—நிஷ்டையுடையவனுயிருத்தல். *

பிறகு அந்தரங்கமான அங்கங்களுடன் பக்தியோகத்தை நிரூபிக்கிறார். பரமாத்மாவினிடத்தில் ஒரே நிஸ்சயத்தினுலுண்டாகிய ப்ரீதி 'ஐகாந்திக ப்ரீதி:' என்னப்படுகிறது. இதனால் 'உபநீபவிஷயே ப்ரீதிஸக்தி:' என்கிற பக்தியின் லக்ஷணம் தெரிவிக்கப்பட்டது. 1 'ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே' என்றிவை முதலிய வசனங்களை அனுஸரித்துப் பக்தியின் ஸ்வரூபம 'த்யாந' என்னும் பதத்தினுல் சொல்லப்பட்டது. 'ஆதி' என்னும் பதத்தினுல் ஆராதனம் செய்தல், நமஸ்காரம் செய்தல், முதலிய அந்தரங்கங்களின் ஸமூகம் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. அப்படியே வேதார்த்த ஸங்க்ரஹத்தில் 'எல்லா லோகங்களுக்கும் நன்மையைத்தெரிவிக்கிற வேதாந்தங்களில் அறியப்பட்ட அர்த்தமாவது ஜீவாத்மா, பரமாத்மா, இவர்களின் உண்மையைப்பற்றிய ஜ்ஞானத்தை முன்னிட்டுச் செய்யப்படுகிறதாயும் வர்ணாஸ்ரம தர்மங்களை அங்கங்களாகவுடையவைகளாயு மிருக்கிற மிகவும் ப்ரியங்களாயுமிருக்கிற பரமாத்மாவினுடைய இரண்டு திருவடிகளையும் த்யானம் செய்வது, ஆராதனம் செய்வது, நமஸ்காரம் செய்வது, முதலியது அவனை அடைவதையே ப்ரயோஜனமாகவுடையது' என்று சொல்லப்பட்டது. ஆகில் கர்மயோகத்திலும் ஜீவாத்மாவைப்பற்றிய ஜ்ஞானமும் அந்தக் கர்மயோகத்தினுலாராதிக்கப்படுகிற பகவானிடத்தில் ப்ரீதியும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஜ்ஞானயோகத்திலும் மனது சுத்தியடைவதற்காக வர்ணாஸ்ரம தர்மங்களை விடக்கூடாது. அதினுல் ஆராதிக்கப்படுகிற பகவானிடத்தில் பக்தியும் செய்யவேண்டும். இப்படியே பக்தியோகத்திலும் மற்ற இரண்டும் (ஜீவாதம ஜ்ஞானமும் நித்ய கர்மானுஷ்டானமும்) தொடர்ந்திருக்கிறதென்பது ஸித்தமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகையினுல் இவைகளைத் தனித்தனியாகப் பிரித்துச் சொல்லி இருப்பது உசிதமல்ல என்றுமேக்ஷபம் வரில் இதற்கு ஸமாதானம்—ப்ரதானமாகிய ஒரு கர்மத்தில் பால், சர்க்கரை முதலியவைகளைப்போல அங்கமாக மற்றவைகள் கலந்திருந்தபோதிலும் அது பிரித்துச் சொல்லுவதற்கு விரோதமில்லை என்று தாத்பர்யம்—என்பது. *

---

1 லைங்கபுராணம், உத்தரகாண்டம். ஸ்நேகபூர்வம்-ப்ரீதியுடன்கூட, அனுத்யானம்-நினைத்துக்கொண்டிருத்தல், பக்திரிதி-பக்தியென்று, அபிதீயதே-சொல்லப்படுகிறது.

த்ரயாணாமபி யோகா3நாம் த்ரிபி4ரந்யோந்யஸங்க3ம: ॥ 24
நித்யநைமித்திகாநாம் ச பராராத4நரூபிணாம் । *

ப-ரை] த்ரயாணாம் - இந்த மூன்றுவிதமான, யோகா3நாமபி - கர்ம யோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகமாகிய யோகங்களுக்கும், அந்யோந்யஸங்க3ம:-ஒன்றோடொன்று சேர்க்கையும், பராராத4நரூபிணாம் - பகவானுக்கு ஆராதனங்களாகிய, நித்யநைமித்திகாநாம்-நித்ய நைமித்திகங்களாகிய கர்மங்களுக்கும், த்ரிபி4:-இந்த மூன்று விதமான யோகங்களுடனும், ஸங்க3ம:-சேர்க்கை (உண்டு). *

பகவானிடத்தில் ஒரே நிஶ்சயத்துடன் கூடிய ப்ரீதி மூன்று யோகங்களிலும் ஸமானந்தான், 'ஐகாந்த்யம்' என்பதாவது இதரதேவதைகளை உடைத்தாகாமலிருக்கை. அப்படியே மோக்ஷ தர்மத்தில் 1 'ப்3ரஹ்மாணம் ஶிதிகண்ட2ஞ்ச யாஶ்சாந்யா தே3வதா: ஸ்ம்ருதா: । ப்ரபு3த்3த4சர்யா: ஸேவந்தோ மாமேவைஷ்யந்தி யத்பரம் ॥' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆஶ்வமேதிக பர்வத்திலும் 2 'அநந்யதே3வதாப4க்தா யே மத்3ப4க்தஜநப்ரியா: । மாமேவ ஶரணம் ப்ராப்தா மத்3ப4க்தாஸ்தே ப்ரகீர்த்திதா: ॥' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் அக்னி, இந்திரன், முதலிய அனேக தேவதைகளின் ஸம்பந்தத்தையுடைய வர்ணாஶ்ரமதர்மங்கள் ஏகாந்தியாக இருப்பதற்கு விரோதிகளாகையினால் இந்த மூன்றுவித யோகங்களிலும் அவைகளை விட்டுவிட வேண்டுமென்றேற்பட்டது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார். இவ்விடத்தில் முன் பாதியிலிருக்கிற 'அந்யோந்யஸங்க3ம:' என்னும் பதத்தில் 'அந்யோந்ய' என்பதைப் புத்தியினால் பிரித்து 'ஸங்க3ம:' என்பதை 'த்ரிபி4:' என்பதோடு சேர்த்து இங்கு அந்வயித்துக்கொள்ள வேண்டியது. இதன் கருத்தாவது—3 'நியதஸ்ய து', 4 'யத: ப்ரவ்ருத்தி:', 5 'ஆசாரப்ர

---

1 பாரதம் - மோக்ஷதர்மம்-350 36.

2 பாரதம், ஆஶ்வமேதிக பர்வம்-104-91, யே-எவர்கள், அநந்யதேவதா பக்தா:-இதர தேவதைகளிடத்தில் பக்திசெய்யாதவர்களும், மத்பக்த ஜனப்ரியா:-என்னிடத்தில் பக்திசெய்துகொண்டிருக்கிற ஜனங்களிடத்தில் ப்ரீதி செய்துகொண்டிருப்பவர்களும், மாமேவா-என்னையே, சரணம்-சரணமாக, ப்ராப்தா:— - அடைந்தவர்களுமோ, தே-அவர்கள், மத்பக்தா:-என்னுடைய பக்தர்களாக, ப்ரகீர்த்திதா:-சொல்லப்பட்டார்கள்.

3 பகவத்கீதை-18-7　　4 பகவத்கீதை - 18 - 46

5 பாரதம் - ஆனுஶாஸநீகபர்வம்-254-139-தர்மமானது ஆசாரத்தையே காரணமாகவுடையது.

ஹவி:', 1 'வர்ணாச்ரமாசாரவதா' என்றிவைமுதலிய வசனங்களி ளால் வர்ணாச்ரம தர்மங்களை அங்கங்களாகவுடையவைகள் இந்த மூன்று யோகங்களும் என்பது ஏற்பட்டிருக்கிறபடியினால் அக்னி இந்திரன் முதலிய பதங்களும் ப்ரதர்த்தனை வித்யையில் சொல்லியிருக்கிற ந்யாயத்தை யனுஸரித்து அவர்களைச் சரீரமாகவுடைய பரமாத்மாவைச் சொல்லுகின்றன என்று அனுஸந்தானம் செய்வதினாலாவது, 2 'ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமினி:' என்கிற ஸூத்ரத்தில் சொல்லியிருக்கிற ந்யாயத்தினாலாவது, யஜ்ஞாக்ரஹாராத்யாயத்தில் சொல்லியிருக்கும் விதமாயும் நேரிலேயே பகவானைச் சொல்லுகின்றன என்பதினாலாவது அந்தக் கர்மங்களும் பகவானுக்கு ஆராதனமாக இருக்கக்கூடுமாகையினால் அவைகளை அனுஷ்டானம் செய்தவனுக்கு வேறொரு தேவதையை ஆராதனம் செய்யாமலிருப்பதும் ஸித்தித்து விடுகிறபடியினால் ஏகாந்தியாயிருக்கையும் ஸ்தாபிக்கப்பட்டது—என்பது. இத்தால் கர்மயோகத்திலும் நித்யநைமித்திக கர்மங்கள் அங்கங்களாக இருக்கின்றன என்பது தெரிவிக்கப்பட்டது. அப்படியே 3 'ஸர்வேऽப்யேதே யஜ்ஞவித:' என்கிற ஶ்லோகத்திற்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது பாஷ்யத்தில் த்ரவ்யயஜ்ஞம் முதலாக ப்ராணாயாமம் வரையிலுள்ள கர்மயோகத்தின் உட்பிரிவுகளில் தங்களுக்கிஷ்டமானவைகளில் ப்ரவ்ருத்தித்திருக்கிற இந்த அதிகாரிகளெல்லோரும் 4 'ஸஹயஜ்ஞா: ப்ரஜா ஸ்ருஷ்ட்வா' என்கிற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட பஞ்சமஹாயஜ்ஞம் முதலிய நித்யநைமித்திக கர்மங்களாகிய யஜ்ஞங்களைத் தெரிந்து கொண்டவர்களாய், அவைகளில் நிஷ்டையுடையவர்களாய், ஆகையினாலேயே நிவ்ருத்திக்கப்பட்ட பாபங்களையுடையவர்களாய்க் கொண்டு யஜ்ஞத்தில் மிகுதியாகிய ஆஹாரத்தினால் ஶரீரதாரணத்தைச் செய்து கொண்டு கர்மயோகத்தில் ப்ரவ்ருத்தித்துக்கொண்டு அநாதியாகிய பரப்ரம்மத்தை யடைகிறார்கள்' என்று சொல்லப்பட்டது. இப்படியே 'ஏவம் பஹுவிதா யஜ்ஞா:' என்கிற ஶ்லோகத்தின் வ்யாக்யானத்திலும் 'இப்படி அநேகவிதங்களாகிய கர்மயோகங்கள் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை அடைவதற்கு ஸாதனங்களாக இருக்கின்றன கீழ்ச்சொன்ன அடையாளங்களை உடையவைகளாகவும கீழ்ச்சொன்ன உட்பிரிவுகளையுடையவைகளாகவுமிருக்

1 விஷ்ணுபுராணம்-3-7-9. வர்ணங்கள், ஆஶ்ரமங்கள், இவைகளுக்குத் தகுந்த ஆசாரங்களையுடைய புருஷனால் (பகவான் ஆராதிக்கத் தகுந்தவன்).

2 ஶாரீரக ஸூத்ரம்-9 3 பகவத்கீதை-4-30 4 பகவத்கீதை-3-10

கிற அந்த எல்லாக் கர்மயோகங்களையும் தினந்தோறும் அனுஷ்டிக்கப்படுகிற நித்ய நைமித்திக கர்மங்களினால் உண்டானவைகளாகத்தெரிந்து கொள்' என்றும் சொல்லப்பட்டது. 1 'ஸோகாரம் யஜ்ஞதபஸாம்' என்கிற ம்லோகத்தின் அவதாரிகையிலும் 'கீழ்ச்சொல்லப்பட்டதாயும் நித்ய நைமித்திக கர்மங்களை அங்கங்களாக வுடையதாயும் யோகத்தை ப்ரயோஜனமாகவுடையதாகவுமிருக்கிற கர்மயோகம் ஸுலபமாய்ச் செய்யமுடியும் என்பதைச் சொல்லுகிறார்' என்று சொல்லப்பட்டது.

ஆத்மாவலோகநே த்ரயோ யோகமார்கேண ஸாதகா:||

ப - ரை] ஏதே-இந்த, த்ரயோ-மூன்றுவிதமான யோகங்களும், ஆத்மாவலோகநே-ஜீவாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதற்கு, யோகமார்கேண-யோகத்தின் வழியாக, ஸாதகா: - உபாயங்கள். 25

பிறகு இந்த மூன்று விதமான யோகங்களும் பரமபக்தியை யுண்டாக்கும்பொழுது ஜீவாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதாகிய நடுவில் நேரிடக்கூடிய வ்யாபாரத்தைக் காரணத்துடன் சொல்லுகிறார்—இந்த ம்லோகத்தினால். இவ்விடத்தில் யோகமாவது ஸமாதி என்று சொல்லப்படுகிற மனதை ஒரே விஷயத்தில் இடைவிடாமல் செலுத்துதல். அதினால் உண்டாக்கப்படுகிற நேராகப்பார்ப்பது ஸாக்ஷாத்காரமென்னப்படுகிறது. இவ்விடத்தில் கர்மயோகம் ஜ்ஞானயோகத்தை இடையிடாமல் நேரிலும் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமென்பது முன்பே சொல்லப்பட்டது. அப்படி இருந்தபோதிலும் பக்தியோகம் அந்த ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமென்பது யுக்தமல்ல, அது ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்த பிறகு உண்டாகக்கூடியதாகையினால் என்னில் இது உசிதமல்ல. பக்தி நிஷ்டைக்கே அநேகம் விதமான அவஸ்த்தைகளின் வ்யத்யாஸங்கள் உண்டாகையினாலேயே இவையெல்லாம் பொருந்துமாகையினால். அதெப்படி என்னில் பகவானை அறிவது, அவனைப்பார்ப்பது, அவனை அடைவது, இவை எல்லாம பொதுவாகப் பக்தியினாலுண்டாக்கப்படுகிறது என்று கீழே சொல்லப்பட்டது. அது அந்தப் பக்தியோகத்தின் அவஸ்த்தைகளின் வ்யத்யாஸமில்லாமல் பொருந்தாது. ஆகையினாலல்லவோ ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்த பிறகு உண்டாகிற பக்தி 2 'ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந' என்று 'பரா' என்னும் பதத்தினால் விசேஷித்துச் சொல்லப்படுகிறது.

---

1 பகவத்கீதை 5-21.   2 பகவத்கீதை-18-54.

ஆகையினால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் இல்லாதவர்களுக்கும் இப்பொழுதிருக்கும் பக்தர்களைப் போலப் பகவானை ஸ்தோத்திரம் செய்வது, நமஸ்காரம் செய்வது, அவனுடைய திருநாமங்களைச் சொல்லுவது, முதலிய, கைங்கர்யமென்று ப்ரகாசமாய்த் தெரிந்துகொள்ளக்கூடிய, பக்தி என்னும் பதத்தினால் சொல்லக்கூடிய, நிஷ்டையினால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் வருகிறது. இந்த உயர்ந்ததாயும் தாழ்ந்ததாயுமிருக்கிற பக்தியின் பிரிவு வேதார்த்த ஸங்க்ரஹத்தில் 'அப்படிப்பட்ட இந்தப் பரப்ரம்மமாகிய புருஷோத்தமன் அதிகமான புண்ணியங்களின் கூட்டத்தினால் நாசமடைந்த எல்லா ஜன்மங்களிலும் செய்யப்பட்ட பாபங்களின் கூட்டங்களையுடையவனாயும், பரம புருஷனுடைய திருவடிகளில் ஶரணாகதி செய்வதினாலுண்டாக்கப்பட்ட அந்தப் பகவானுடைய அனுக்ரஹத்தையுடையவனாயும், ஸதாசார்யனுடைய உபதேசத்தோடு கூடிய ஶாஸ்த்ரங்களினால் அறியப்பட்ட தத்துவங்களின் உண்மையைப்பற்றிய ஜ்ஞானத்தை முன்னிட்டுத் தினந்தோறும் வ்ருத்தியடைந்து வருகிற ஶாந்தி, தாந்தி, பரிசுத்தி, பொறுமை, கபடமில்லாமை, பயம், பயமில்லாமை, இவைகளின் காரணங்களைப்பற்றிய பகுத்தறிவு, தயை, ஹிம்ஸை செய்யாமை, முதலிய ஆத்ம குணங்களோடு கூடியதாயும் வர்ணாஶ்ரமங்களுக்குத் தகுந்ததாயும் பரமாத்மாவிற் காராதனங்களாயுமிருக்கிற நித்ய நைமித்திக கர்மங்களின் அனுஷ்டானத்துடன் கூடின ஶாஸ்த்ரங்களில் மறுக்கப்படுகிற கர்மங்களைச் செய்யாமையில் நிஷ்டையுடையவனாயும், பரமாத்மாவின் இரண்டு திருவடிகளிலும் ஸமர்ப்பிக்கப்பட்ட தன்னையும் தன்னைச்சேர்ந்த வஸ்துக்களையுடையவனாயும், அவனிடத்தில் பக்தியினால் செய்விக்கப்படுகிற எப்பொழுதும் ஸ்தோத்திரம் செய்வது, நினைத்துக்கொண்டிருப்பது, நமஸ்காரம் செய்வது, அவனுடைய திருநாமங்களைச்சொல்லுவது, அவனுடைய குணங்களைக் கேழ்ப்பது, அவைகளைச்சொல்லுவது, த்யானம்செய்வது, ஆராதனம்செய்வது. இவை முதலியவைகளினால் ப்ரீதியையடைந்தவனாய் மிகுந்த கருணையுடையவனாயிருக்கிற அந்தப் புருஷோத்தமனுடைய அனுக்ரஹத்தினால் போக்கப்பட்ட மனதின் தோஷத்தையுடையவனாயுமிருக்கிற புருஷனுக்கு வேறொரு ப்ரயோஜனத்தையும் ஆசைப்படாமல் எப்பொழுதும் செய்யப்படுகிற எல்லை இல்லாதமேன்மையையுடைய ப்ரியமாகிய மிகவும் விசதமான ப்ரத்யக்ஷம்போலே தோன்றுகிற த்யானமாகிய பக்தி ஒன்றினாலேயே அடையத்தகுந்தவன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது இதுதான் பரமாசார்யனாகிய ஆளவந்தாராலும் 1 'கர்மயோகம் ஜ்ஞானயோகம்,

---

1 ஆகமப்ராமாண்யம்.

இவை இரண்டினாலும் பரிசுத்தம் செய்யப்பட்ட மனதையுடையவனுக்கு ஒரே நிச்சயத்துடன் கூடியதாயும் கடைசிவரையில் செய்யப்பட்டதாயுமிருக்கிற பக்தியோகத்தினால் அடையத்தகுந்தவன்' என்று சொல்லப்பட்டது. 25

நிரஸ்தநிகிலாஜ்ஞாநோ த்ருஷ்ட்வாத்மாநம் பராநுகம் ।
ப்ரதிலப்ய பராம் பக்திம் தயைவாப்நோதி தத்பதம் ॥ 26

ப—ரை] நிரஸ்தநிகிலாஜ்ஞாந: - போக்கடிக்கப்பட்ட எல்லாவிதமான அஜ்ஞானங்களை யுடையவனாய்க் கொண்டு, பராநுகம் - பரமாத்மாவிற்குக் கிங்கரனாகிய, ஆத்மாநம் - ஜீவாத்மாவை, த்ருஷ்ட்வா - பார்த்து, பராம் - மேலான, பக்திம் - பக்தியை, ப்ரதிலப்ய-அடைந்து, தயைவ - அந்தப் பரபக்தியினாலேயே, தத்பதம் - அந்தப் பகவானுடைய திருவடியை, அல்லது பரமபதத்தை, ஆப்நோதி - அடைகிறான். 26

இப்படி அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி அனுஷ்டிக்கப்படுகிற மூன்றுவித யோகங்களினாலும் ஆத்மாவலோகனம் உண்டாகி அதின் வழியாக பரமபக்தி உண்டாகும் விதத்தையும், மிகவும் சிறந்ததாகிய அந்தப் பரமபக்தியே பரமாத்மாவை அடைவதற்கு ஸாதனமென்பதையும் சொல்லுகிறார்—இந்த ச்லோகத்தினால். உபாயத்திற்கு விரோதியான எல்லாவித அஜ்ஞானங்களும் நிவ்ருத்தியடைகிறது என்பது இவ்விடத்தில் ‘நிரஸ்தநிகிலாஜ்ஞாந:’ என்பதினால் சொல்லப்படுகிறது. ‘பராநுகம்’ என்பதற்கு பரமாத்மாவிற்குக் கிங்கரனாகிய அதாவது பரமாத்மாவிற்குச் சேஷமாயிருக்கை ஒன்றையே ஸ்வபாவமாகவுடைய என்றர்த்தம். அப்படியே [1] ‘நாயம் தேவோ ந மர்த்யோ வா ந திர்யக் ஸ்தாவரோபி வா । ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோ ஹி பரமாத்மந:॥’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வஜ்ஞனென்றுபேருடைய ருத்ரனும் மந்த்ரராஜபத ஸ்தோத்ரத்தில் ‘தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: । அதோஹமபி தே தாஸ இதி மத்வா நமாம்யஹம்॥’ என்று சொல்லியிருக்கிறார். ‘ப்ரதிலப்ய’ என்பதற்குப் பரமாத்மாவின் அனுக்ரஹத்தினால் அடைந்து என்றர்த்தம். ‘தயைவ’ என்பதற்குப் பரமபக்தியாகிய பரிபாகத்தை அடைந்திருக்கிற அந்தப் பரபக்தியினாலேயே என்றர்த்தம். ஆகையினால் ‘ஸ

1 முதல் ஷட்கம், 553-ம் பக்கம் புட்நோட்டைப் பார்க்க.

என்பதினால் வேறொன்றையும் எதிர்பார்க்கிறதில்லை என்பதும் வேறொன்றின் வழியாகவல்லாமல் நேரில் ஸாதனமென்பதும் ஏற்படுகிறது. 'तत्पदम्' என்பது அவனுடைய திருவடியாகவுமாம். ஆன்றிக்கே 'पद्यते (அடையப்படுகிறது)' என்கிற வ்யுத்பத்தியினால் 'पदम्' என்பது முக்தர்களால் அடையக்கூடியதாக ப்ரமாணங்களிலேற்பட்டிருக்கிற பரமாத்மாவினுடைய ப்ரக்ருதியின் ஸம்பந்தமில்லாத இடமாகவுமாம். பரமாத்மாவின் ஸ்வரூபமாகவுமாம். இது கீதையில் 1 'ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति। समः सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम्॥ भक्त्या मामभिजानाति यावान्यश्चास्मि तत्त्वतः। ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम्॥' என்று இரண்டு ஶ்லோகங்களினால் சொல்லப்படுகிறது. 26

भक्तियोगस्तदर्थी चेत्समग्रैश्वर्यसाधकः।
आत्मार्थी चेत्त्रयोऽप्येते तत्कैवल्यस्य साधकाः॥

ப-ரை] भक्तियोगः - பக்தியோகம், तदर्थी चेत् - அந்த ஐஶ்வர்யத்தை விரும்பினனேயானால். समग्रैश्वर्यसाधकः - பூர்ணமான ஐஶ்வர்யத்திற்கு ஸாதனமாகிறது, आत्मार्थी चेत् - ஆத்மாவை விரும்பினனேயானால், एते - இந்த, त्रयोऽपि - கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம், இவைகள் மூன்றும், तत्कैवल्यस्य - அந்த ஆத்மாவின் கைவல்யத்திற்கு, அதாவது ப்ரக்ருதி ஸம்பந்தமும் பகவானுடைய அனுபவமும் இல்லாமல் கேவலம் ஜீவாத்மாவை மாத்ரம் அனுபவிப்பதற்கு, साधकाः - ஸாதகங்கள். 27

இப்படிப் பக்தியோகம் மோக்ஷத்திற்கு ஸாதனமென்பது சொல்லப்பட்டது. அதுவே நடுஷட்கத்தில் சொல்லியபடி அசேதனமான வஸ்துக்களின் மாறுதல்களை அனுபவிப்பதாகிய ஐஶ்வர்யத்திற்கும் ஸாதகம் என்று சொல்லுகிறார்—இந்த ஶ்லோகத்தினால். ஒரே பக்தியோகம் ஒன்றுக்கொன்று விருத்தங்களாகிய ஸம்ஸாரபந்தம் மோக்ஷம், இவைகளுக்கு ஸாதனமென்பது எப்படிப்பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'तदर्थी चेत्' என்று சொல்லப்பட்டது. ஒரே கர்மத்திற்கு அந்தந்தப் பலங்களில் ஆசையினால் விசித்திரங்களான பலங்களுக்கு ஸாதகமாயிருக்கும் தன்மை உண்டென்பது 'எல்லா இஷ்டபலங்களைக் குறித்தும் ஜ்யோதிஷ்டோமம் ஸாதனம்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் ப்ரஸித்தமாயிருக்கி

1 பகவத்கீதை-18-54-55.

றது. ப்ரம்மா முதலியவர்களினால் கொடுக்கப்படுகிற ஐஶ்வர்யங்களை விட அதிகமாயிருக்கை இவ்விடத்தில் 'ஸுஹ்ரு' என்பதினால் சொல்லப்படுகிறது. லோகத்திலும் சக்ரவர்த்தியை ஆஶ்ரயிப்பதற்கும், சிற்றரசனை ஆஶ்ரயிப்பதற்கும் பல விஷயத்தில் வ்யத்யாஸமுண்டென்பது காணப்பட்டிருக்கிறது. ப்ரம்மா முதலியவர்கள் ப்ரம்மா முதலியவர்களின் ஸ்தானத்தைக்கொடுக்க ஶக்தியுள்ளவர்களல்லவன்றோ. இது ப்ரம்மாவினாலேயே [1] '𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌯𑌿 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌂' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றோரிடத்திலும் '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍋𑌟𑌿𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌾𑌯𑍁𑌃 [illegible] 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 ॥' என்றிவை முதலியதும் சொல்லப்பட்டிருக்கிறது. ருத்திரனுடையதாகிய ஸ்தானமும் பகவானால் கொடுக்கப்பட்டதென்று 'இந்த தேவன் உதாரனையும், எல்லோராலும் ப்ரார்த்திக்கத்தக்கவனையுமிருக்கிற விஷ்ணுவிற்குக் கிளையாகிய ருத்திரன் அவப்ருதத்தில் ஹவிஸ்ஸுக்களினால் ருத்திரனுடையதாகிய பெருமையை அடைந்தானல்லவா' என்றர்த்தமுள்ள வாக்யத்தில் சொல்லப்படுகிறது. 'இந்த' என்பதற்குத் தன்னைவிட மற்றெல்லா தேவதைகளையும் விட வேறுபட்ட மேன்மையுடையவனாகை, ஶ்ருதி முதலியவைகளில் ப்ரஸித்தனாகிய என்றும், 'தேவன்' என்பதற்கு மற்றொருவர்க்கும் ஸாதாரணமல்லாத மிகவும் ஆஶ்சர்யமான ஒருவராலும் தடுக்கப்படாத விளையாட்டு, ஜயிக்கவேண்டுமென்கிற ஆசை, வார்த்தைகள், காந்தி, ஸ்தோத்திரம், முதலிய அழிவில்லாத, தோஷங்களுடன் ஸம்பந்தப்படாத எல்லையில்லாத மேன்மையுடைய கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாகிய என்றும், 'எல்லோராலும் ப்ரார்த்திக்கத்தக்கவனையும்' என்பதற்கு அவரவர்களின் இஷ்டபலம் கிடைப்பதற்காக யாசிக்கத்தகுந்தவனாயிருக்கிற' என்றும்,—'விஷ்ணுவிற்கு' என்பதற்கு எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்திருப்பதையே ஸ்வபாவமாகவுடையவனாகையினால் எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாகிய நாயணனுக்கு என்றும், 'கிளையாகிய ருத்திரன்' என்பதற்கு அவருடைய ஶரீரமாகையினாலே அவருடைய அவயவமாகிய ருத்ரன் என்றும், '𑌵𑌯𑌾𑌶𑍍𑌶𑌾𑌖𑌾' என்று யாஸ்கர் நிர்வசனம் செய்திருக்கிறார். 'அவப்ருதத்தில் ஹவிஸ்ஸுக்களினால்' என்பதற்கு ஸர்வமேதம் என்றுபேருடைய யாகத்தினால் அந்த விஷ்ணுவிற்கு ஸமர்ப்பிக்கப்பட்ட தன்னுடைய ஆத்மாவரையிலுள்ள ஹவிஸ்ஸுக்களினால் என்றும், 'ருத்திரனுடையதாகிய' என்பதற்கு ருத்திர

---

1 த்வயா - உன்னால், ப்ராஜாபத்யம் - ப்ரம்மாவினுடையதாகிய, கர்ம - கார்யம், ஸர்வம் - எல்லாம், மயி - என்னிடத்தில், நிவேஶிதம் - வைக்கப்பட்டது.

ணாகிய தனக்கு இப்பொழுது கிடைத்திருக்கிற என்றும், அன்றிக்கே ப்ரம்மா, ருத்திரன், இந்திரன், முதலியவர்கள் பரம்பரையாக அநாதியாகையினால் ருத்ரர்களினுடைய தென்று ப்ரஸித்தமான என்றும், 'அடைந்தாரல்லவா' என்பதற்கு இது ப்ரஸித்தம் என்றும் அர்த்தம். இந்த ஶ்ருதியின் அர்த்தத்தை விசதப்படுத்த வேண்டுமென்கிற அபிப்ராயத்தினால் மஹாபாரதத்தில் 1 'ஏஷோ தேவஸ்ஸர்வைஸ்ஸாத்யைஸ்ஸாத்யாநாம் தேவதேவோ ஜநார்த்தந:' என்று சொல்லப்பட்டது. 2 'ஸநத்குமாரப்ரமுகா ப்ரஹ்மாத்யா ருத்ரஸம்ஜ்ஞிதா: | ததாதிஸித்தா ஸாத்யாஸ்தே ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகா: ||' என்றிவை முதலிய வசனங்களினாலும் இந்த அர்த்தம் எல்லா இடங்களிலும் ப்ரஸித்தமாயிருக்கிறது. ஆகையினால் இது விஷயத்தில் விஸ்தாரமாகச் சொன்னதுபோதும். இப்படி அசேதன வஸ்துக்களை அனுபவிப்பதாகிய ஐஸ்வர்யத்திற்கு பக்தி ஸாதனம் என்பது சொல்லப்பட்டது. பிறகு சேதனமாகிய ஆத்மாவின் உண்மையை அனுபவிப்பதாகிய தாழ்ந்ததாகிய கைவல்யத்திற்கும் அந்தப் பக்தி யோகம் ஸாதகம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு ஜ்ஞானயோகம் கர்மயோகம் இவைகளும் வஸ்துவின் ஸ்வபாவத்தினால் பரமாத்மாவிற்கு ப்ரீதியை உண்டுபண்ணி அதின் வழியாக அந்தக் கைவல்யத்திற்கு ஸாதகங்கள் என்பது யுக்தம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஆத்மார்த்தீ சேத்' என்றாரம்பித்து. அசேதனங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் பகவானுடைய அனுபவத்தைப்பார்க்கிலும் வேறுபட்ட ஸ்பாவத்தையுடைய அனுபவம் இவ்விடத்தில் 'கைவல்யம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. இந்த விஷயத்தில் சொல்லவேண்டியதெல்லாம் தாத்பர்ய சந்த்ரிகையில் நம்மால் விவரமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 27

ஐகாந்த்யம் பகவத்யேஷாம் ஸமாநமதிகாரிணாம் |
யாவத்ப்ராப்தி பரார்த்தீ சேத் ததேவாத்யந்தமஶ்நுதே || 28

ப - ரை] ஏஷாம் — இந்த, அதிகாரிணாம் - அதிகாரிகளுக்கு, பகவதி — பகவானிடத்தில், ஐகாந்த்யம் — ஏகாந்தியாக இருக்கை, அதாவது வேறொரு தைவத்தையும் தொழாதவனாக இருக்கை, ஸமாநம் - பொதுவானது, யாவத்ப்ராப்தி - பகவானை அடைகிறவரையில், பரார்த்தீ

1 இரண்டாம் அஷ்டகம் 284-ம் பக்கம் புட்நோட்டைப்பார்க்க. 2 இரண்டாம் அஷ்டகம் 283-ம் பக்கம் புட்நோட்டைப்பார்க்க.

சேத் - பரமாத்மாவை விரும்பிக்கொண்டிருந்தானேயானால், அதாவது நடுவில் வேறு பலத்தில் ஆசைப்படாமலிருந்தானேயானால், ததேவ - அதையே, அத்யந்தம் - அழிவில்லாததாக, அஶ்நுதே - அடைகிறான். 28

இப்படி மேலான ஐஶ்வர்யம், கைவல்யம், பகவானை அடைவது, இவைகளை விரும்புகிறவர்களினால் செய்யவேண்டியதாகிய பக்தியின் ஸாரமாயும் பொதுவாயுமிருக்கிற ரூபத்தை விசதமாக நிரூபிக்கிறார்— இந்த (முன்) பாதி ஶ்லோகத்தினால். இவ்விடத்தில் ஏகாந்தியாயிருக்கையாவது வேறொரு தேவதையையும் தனக்கு உத்தேஶ்யமாக உடைத்தாகாதவனாக இருக்கை.[1] 'சதுர்விதா மம ஜநா: பக்தா ஏவம் ஹி தே ஶ்ருதா:। தேஷாமேகாந்திந: ஶ்ரேஷ்டா: தே சைவாநந்யதேவதா:॥' என்கிற அநுகீதையில் சொல்லப்பட்டிருக்கிற வசனமேமாவென்னில் ஜ்ஞானிகளுக்கு ஏகாந்தியாக இருக்கை எப்பொழுதும் இருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லப்படுகிறது. இவ்விடத்திலேயாவெனில் தங்கள் தங்கள் இஷ்டபலம் கிடைக்கும் வரையில் ஏகாந்தியாக இருக்கை இந்த மூன்றதிகாரிகளுக்கும் பொது என்று சொல்லப்படுகிறது. இத்தால் கர்மயோகம், ஜ்ஞானயோகம், இவைகளைச் செய்து கொண்டிருக்கும் தசையிலும் ஏகாந்தியாயிருக்கை ஏற்பட்டது. எப்படி என்னில் எல்லாத்தசையிலும் பகவானிடத்தில் ப்ரபத்தியை முன்னிட்டுக்கொண்டே செய்யவேண்டிய தவஶ்யமாகையினால். இப்படி அசேதனத்தின் அநுபவத்தை விடவும், தன்னுடைய ஆத்மாவின் அநுபவத்தை விடவும் வேறுபட்டதாகிய பகவானுடைய அநுபவத்தை வேண்டுகிறவனுக்கு மற்ற அதிகாரிகளை விட வேறுபட்டதாகிய எப்பொழுதும் செய்யப்படுகிறதாகிய பக்தியின் மேன்மையினால் வேறொன்றினாலும் நடுவில் தாமதமில்லாமல் அழிவில்லாத பகவானுடைய ப்ராப்தி உண்டாகிறது என்று சொல்லுகிறார் - மேல்பாதி ஶ்லோகத்தினால். வேறு பலங்களில் ஆசையாகிற விக்னங்களினால் கெடுக்கப்படாதவனாக இருந்தால் தாமதமில்லாமல் பகவானை அடைந்து மறுபடியும் ஸம்ஸாரத்தை அடைகிறதில்லை என்றர்த்தம். இந்த அபிப்ராயத்தினால் 'தத் (அது)' என்று நபும்ஸகலிங்கமாய் (ஒன்றன்பாலாய்)ச்சொல்லி இருக்கிறது. 28

ஜ்ஞாநீ து பரமைகாந்தீ ததாயத்தாத்மஜீவந: ।
தத்ஸம்ஶ்லேஷவியோகைகஸுகது:கஸ்ததேகதீ: ॥ 29

ப - ரை; ஜ்ஞாநீ து — ஜ்ஞானியோவெனில், பரமைகாந்தீ - மேற்

---

1 இரண்டாம் ஷட்கம், 54 ம் பக்கம் புட்நோட்டைப்பார்க்க.

சொல்லிய ஏகாந்திகளுக்குள் சிறந்தவன், ததாயத்தஜீவந: - அந்தப்பகவானுக்கு வசப்பட்டதன்னுடைய ஜீவனத்தையுடையவன். தத்ஸம்ஶ்லேஷவியோகைகஸுகது:க: — அந்தப்பகவானோடு சேருகிறது, அவனைவிட்டுப்பிரிவது, இவைகளையே தனக்கு ஸுகமாகவும் துக்கமாகவுமுடையவன், ததேகமதி: - அவனொருவனிடத்திலேயே செலுத்தப்பட்ட புத்தியையுடையவன். 29

பிறகு 1 'யே து ஶிஷ்டாஸ்த்ரயோ ஹ்யேகாந்திநோ ஹ்யேதே ஹி தா:। ஸர்வேஷ்வப்யநபாயிந: ப்ரத்யாஸந்நா மோக்ஷகாங்க்ஷிண:॥' என்று அநுகீதையில் சொல்லப்பட்டவனும், 'யாவத்தாத்விவராஸ்யை பூதஸ்து' என்று கீழ்ச்சொல்லப்பட்டவனுமாகிய, அதிகாரியினுடைய மற்றொருவனுக்கும் ஸாதாரணமல்லாத விஶேஷத்தையும், அநுஷ்டானம் செய்வது, பலத்தையடைவது இவைகளின் விதத்தையும், அதைச் சொல்லுவதிலேயே இந்தச் ஶாஸ்த்ரத்திற்குத் தாத்பர்யமாகையினால் இது மோக்ஷ ஶாஸ்த்ரம் என்பதையும், இது முதல் நாலு ஶ்லோகங்களினால் விவரிக்கிறார். 'ஜ்ஞாநீ து' என்பதனால் 2 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்', 3 'மச்சித்தா மத்கதப்ராணா:' என்றிவை முதலியது ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. சிறந்தவனாகிய ஏகாந்தி, பரமைகாந்தி எனனப்படுகிறான், அதாவது ஏகாந்திகளுக்குள் சிறந்தவன் என்றர்த்தம். மிகவும் சிறந்ததாகிய ஒரேவிதமான நிஶ்சயம், அதாவது வேறொரு தைவத்தையும் உத்தேசிக்காத நிஶ்சயம் இவனுக்கு இருக்கிறது என்பதினாலாவது பரமைகாந்தி யென்னப்படுகிறான். அதாவது வேறொரு தைவத்தையும் உத்தேஶ்யமாகவுடைத்தாகாமை மாத்திரமில்லை, பின்னை எதுவென்னில் வேறொரு ப்ரயோஜனத்தையும் விரும்பாமலிருப்பதும் இவனுக்குண்டென்றர்த்தம். இவ்விடத்தில் 'ஸம்ஶ்லேஷம்' ஆவது மனது, வாக்கு, ஶரீரம், இவைகளினால் செய்யப்படுகிற பகவானுக்கிஷ்டமாகிய ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட ஆராதனங்களைச் செய்வது. 'வியோகம் (பிரிவு)' ஆவது இவைகள் விட்டுப்போவது இப்படியே ருஷிகள் 4 'யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே । ஸா ஹாநிஸ்தந்

---

1 இரண்டாம் ஷட்கம், 157-ம் பக்கம், புட்நோட்டைப்பார்க்க.

2 பகவத்கீதை-7-18. 3 பகவத்கீதை-10-9.

4 முஹூர்த்தம் - ஒரு முஹூர்த்த காலமாவது, க்ஷணம்வாபி - ஒரு க்ஷண காலமாவது, வாஸுதேவ: — பகவான், நசிந்த்யதே - த்யானிக்கப்படவில்லை, இதி யத் - என்கிற எதுவோ, ஸா - அது, ஹாநி: - நஷ்டம், தத் - அது, மஹத்-பெரிய, சித்ரம் - தோஷம், ஸா ச - அதுவே, ப்ராந்தி: - ப்ரமம், ஸா ச - அதுவே, விக்ரியா-

ஸஹிஷ்ணும் ஸாஹஸாஷ்டி ஸாவலிக்ரியா ॥ ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே । தஸ்யுபிர்முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ப்ருசம் ॥' என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவன் ஒருவனிடத்திலேயே செலுத்தப்பட்ட சிந்தையையுடையவன் 'தமேகசித்த:' என்னப்படுகிறான். 29

பகவத்த்யாந யோகோக்தி வந்தநஸ்துதி கீர்த்தநை: ।
லப்தாத்மா தத்கதப்ராணமநோபுத்தீந்த்ரியக்ரிய: ॥ 30

ப-ரை] பகவத்த்யாநயோகோக்திவந்தநஸ்துதிகீர்த்தநை:— பகவத் - பகவானைப்பற்றிய, த்யாந - த்யானம் செய்தல், யோக - ஸாக்ஷாத்கரித்தல், அன்றிக்கே அவனுடைய திவ்யதேசங்களுக்குச் செல்லுதல், உக்தி - சொல்லுதல், வந்தந — நமஸ்காரம் செய்தல், ஸ்துதி - ஸ்தோத்திரம்செய்தல், கீர்த்தநை: - திருநாமங்களைச் சொல்லுதல், இவைகளினால், லப்தாத்மா - அடையப்பட்ட தன்னுடைய ஆத்மாவையுடையவனாயும், தத்கத - அந்தப் பகவானை யடைந்திருக்கிற, ப்ராண - ப்ராணவாயு, மந: — மனது, புத்தி - புத்தி, இந்த்ரிய - இந்த்ரியங்கள், இவைகளின், க்ரிய: - கார்யங்களை யுடையவன் (மேற்கூறிய ஜ்ஞானி). 30

'த்யாநம்' ஆவது இவ்விடத்தில் எப்பொழுதும் இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருத்தல். 'யோகம்' ஆவது அதினாலுண்டாகிய ஸாக்ஷாத்காரம், அன்றிக்கே உயர்ந்த க்ஷேத்திரம் முதலியவைகளில் இருக்கிற பகவானிடத்தில் செல்லுதலாகவுமாம். அப்படியே 1 'பாதௌ ந்ருணாம் தௌ த்ருமஜந்மபாஜௌ க்ஷேத்ராணி நாநுவ்ரஜதோ ஹரேர்யௌ' என்றும், 2 'யோகஸ்து த்விவித: ப்ரோக்தோ பாஹ்யாப்யந்த

- விகாரம், அதாவது ஒரு க்ஷணகாலமாவது பகவானை த்யானம் செய்யாமை இவ்வளவு விதமான ஆபத்திற்குக் காரணம் என்று தாத்பர்யம். ஏகஸ்மிந்நபி - ஒரு, முஹூர்த்தே - முஹூர்த்தமும், த்யானவர்ஜிதே - பகவானைப்பற்றிய த்யானமில்லாமல், அதிக்ராந்தே - தாண்டிப்போயிருக்கும் பொழுது, தஸ்யுபி: - திருடர்களினால், முஷிதேநேவ - அபஹரிக்கப்பட்டவன் போல, ப்ருசம் - மிகவும், ஆக்ரந்திதும் - அழுவதற்கு, யுக்தம் - உசிதம்.

1 யௌ - எந்த, ந்ருணாம் - மனிதர்களினுடைய, பாதௌ-கால்கள், ஹரே:- பகவானுடைய, க்ஷேத்ராணி - திவ்யக்ஷேத்திரங்களைக் குறித்து, நாநுவ்ரஜத: - போகவில்லையோ, தௌ - அவைகள், த்ருமஜந்மபாஜௌ - மரத்தின்ஜன்மத்தை அடைந்தவைகள்.

2 யோக: - யோகமானது, பாஹ்யம்-பாஹ்யம் என்றும், ததா - அப்படியே, ஆப்யந்தரம் - ஆப்யந்தரம் என்றும், த்விவித:-இரண்டுவிதமாக, ப்ரோக்த: - சொ

ரம் ததா। பாஹ்யம் பஹி꞉ க்ரியாபேக்ஷமாந்தரம் த்யானமுச்யதே॥ என்றும் சொல்லி இருக்கிருர்கள். 'உக்தி' ஆவது கேட்கவேண்டுமென்கிற ஶ்ரத்தையுடைய அதிகாரிகளுக்குச்சொல்லுதல். 'வந்தநம்' ஆவது மூன்று கரணங்களினுலும்நமஸ்காரம் செய்தல். 'ஸ்துதி꞉' ஆவது குணங்களைச் சொல்லுதல் 'கீர்த்தநம்' ஆவது அந்தந்தக் குணங்கள், அந்தந்தவிபவங்கள், அந்தந்த வ்யாபாரங்கள், இவைகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிற அவனுக்கே அஸாதாரணமான திருநாமங்களைச்சொல்லுதல். இவைகளினுல் 'ஆத்மா (அடையப்பட்ட தன்னுடைய ஆத்மாவை யுடையவனும்)', அப்படி அவைகளைச் செய்யாவிடில் தன்னை வஸ்துவல்லாததாக எண்ணிக்கொண்டிருப்பவன் என்று தாத்பர்யம். அன்றிக்கே இவைகளைச்செய்யாவிடில் தன்னுடைய ஶரீரம், இந்த்ரியம், இவைகளெல்லாம் நைந்துபோய் விடும் என்று தாத்பர்யமாகவுமாம். ப்ராணன் முதலியவைகளின் கார்யங்கள் அந்தப் பகவானை யடைந்திருப்பதாவது அந்தப்பகவானுடைய அனுபவம் இல்லாவிடில் சிதறிப்போய்விடுகிறபடியினுல் என்று நினைக்கவேண்டியது. அன்றிக்கே 1 'யத்கரோஷி யதஶ்நாஸி' என்று சொல்லி இருக்கிற ந்யாயத்திலுல் ஸ்வபாவத்திலேற்பட்டது, ஒரு ப்ரயோஜனத்திற்காக ஏற்பட்டது, ஶாஸ்த்ரங்களிலுலேற்பட்டது, ஆகிய கர்மங்களைப் பகவானிடத்தில் ஸமர்ப்பணம் செய்தலாகவுமாம். மனதாவது ஸங்கல்பம் என்கிற வ்யாபாரத்தையுடையமனது. அதுவே நிஶ்சயமாகிற வ்யாபாரம் புத்தி என்னப்படுகிறதாகவுமாம் அப்படியே ஶாரீரக பாஷ்யத்தில் 'நிஶ்சயம், அபிமானம், சிந்தை, முதலிய வ்யாபாரங்களின் வ்பத்யாஸங்களினுல் மனமே புத்தி, அஹங்காரம், சித்தம், என்னும் பதங்களினுல் சொல்லப்படுகிறது' என்று சொல்லப்பட்டது. 'இந்த்ரிய' என்னும் பதம் இவ்விடத்தில் கோபலீவர்த்த ந்யாயத்திலுல் வெளிஇந்த்ரியங்களைச் சொல்லுகிறது. 30

நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித꞉।
உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத்தேவே து தாமபீ꞉ ॥ 31

ப - ரை] நிஜகர்மாதி - தன்னுடைய வர்ணாஶ்ரம தர்மங்கள் முதல், பக்த்யந்தம் - பக்திவரையிலுமுள்ள கர்மத்தை, ப்ரீத்யைவ - ப்ரீதியினுலேயே, காரித꞉ - செய்விக்கப்பட்டவனுய்க்கொண்டு, குர்யாத் -

---

ல்லப்பட்டது, பாஹ்யம் - பாஹ்யயோகம், பஹி꞉க்ரியாபேக்ஷம்-வெளிஇந்த்ரியங்களின் வ்யாபாரங்களை அபேக்ஷிக்கிறது, ஆந்தரம்-ஆப்யந்தரமானது, த்யானம்-த்யானமாக, உச்யதே - சொல்லப்படுகிறது. 1 பகவத்கீதை-9-27.

செய்யவேண்டும், உபாயதாம் - உபாயமாக இருக்கையை, பரித்யஜ்ய - விட்டுவிட்டு, அதாவது இவைகள் உபாயங்கள் என்கிற புத்தியைக் கீழ்ச் சொல்லிய தர்மங்களில் விட்டுவிட்டு, தாம் - அந்த உபாயமாக இருக்கையை, மயி - பகவானிடத்தில், நிர்பய: - பயமில்லாதவனாய்க்கொண்டு, ந்யஸ்யேத் - வைக்கவேண்டும். 31

இப்படிப்பட்ட அதிகாரிக்கு 1 'ஸததம் கீர்த்தயந்தோ மாம்' என்று சொல்லி இருக்கிறவிதமாக வர்ணாஶ்ரம தர்மங்களுக்கு லோபம் வரவேண்டியதாகுமே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—இந்த ஶ்லோகத்தினால் எப்பொழுதும் பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதொன்றையே ஸ்வபாவமாகவுடைய முக்தனுக்குப்போல இந்த அதிகாரிக்கும் பகவானுக்குக் கைங்கர்யம் செய்வது அவனுடைய ஆஜ்ஞையை அநுஸரித்து நடப்பதில் உண்டாகிய ப்ரீதியினாலேயே ஶாஸ்த்ரங்களுக்குத் தக்கபடியும் அதிகாரங்களுக்குத் தக்கபடியும், காலங்களுக்குத்தக்கபடியும் எல்லாம் பொருந்தும். அப்படிக்கில்லாவிடில் 2 'ஸந்த்யாஹீநோஶுசிர்நித்யமநர்ஹ: ஸர்வகர்மஸு' என்றிவை முதலிய வசனங்களிருக்கிறபடியினால் பகவானை ஆராதனம் செய்வது, முதலிய கார்யங்களிலும் அதிகாரமில்லாமல் போகவேண்டி வரும். ஆகையினாலே யோக்யதை உண்டாவதற்காகவும், கிடைத்தபாகம் தவறிப்போகாமலிருப்பதற்காகவும், மேல்மேல் வ்ருத்தியடைவதற்காகவும், நன்றாக உறுதியாய் உபாயம் முடிவுபெற்றவனுக்கும் தன்னுடைய அநுஷ்டானத்தினால் அபலரையும் ப்ரவ்ருத்திக்கும்படி செய்வதாகிய பகவானுடைய உத்திரவுக்குக் கீழ்படிந்து நடப்பதற்காகவும், அவஶ்யமாகச் செய்யவேண்டியவைகளாகிய கர்மங்களைப்பற்றியும் ஶாஸ்த்ரவிதியை யோசிக்காமல் மிகவும் ப்ரியமான பர்த்தா, ஸ்நேகிதன், பிள்ளை முதலியவர்களுக்கு உபசாரம் செய்வதைப்போல ப்ரீதியே ஜ்ஞானியை ஏவுகிறது என்று தாத்பர்யம். அப்படியே ஶாஸ்த்ரங்களிலும் 3 'யதா யுவாநம் ராஜாநம் யதா வா மதஹஸ்திநம்। யதா வா [illegible] ததைவோபசரேத்தரிம் ॥' என்றும், மற்றொரு ஸம்ஹிதையில் 4 'யதா ப்ராப்தம் ப்ரியாதிதிம் [illegible] ததா—

1 பகவத்கீதை-9-14. 2 இரண்டாம் ஷட்கம்-86-ம் பக்கம், புட்நோட்டைப்பார்க்க.

3 பாஞ்சராத்திரம். யுவாநம்-யுவாவாகிய, ராஜாநம்-ராஜாவை, யதா - எப்படியோ, மதஹஸ்திநம் - மதம்பிடித்த யானையை, யதா - எப்படியோ, ததைவ - அப்படியே, ஹரிம் - பகவானை, உபசரேத் - உபசாரம் செய்யவேண்டும்.

4 ப்ராப்தம் - தன்வீட்டிற்கு வந்திருக்கிற, ப்ரியாதிதிம் - இஷ்டமான விருந்தாடியை, யதா - எப்படியோ, ததா - அப்படி, பகவந்தம்-பகவானை, அர்ச்சயேத்-ஆராதனம் செய்யவேண்டும்.

யெக' என்றும் சொல்லப்படுகிறது 'வஜ' என்பதினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட மற்றொரு அர்த்தத்தையும் விவரிக்கிறார்—'உபாயதா' என்றாரம்பித்து. முக்தர்களின் வ்யாபாரங்களைப்போல இவைகளே ஸ்வயமே ஸாதகமாயிருப்பதினாலும் க்ஷணகாலத்தில் செய்துமுடிந்து விடுகிற கர்மம் காலாந்தரத்தில வரப்போகிற பலத்திற்கு ஸாதனம் என்பதில் தோஷங்களை அறிவதினாலும், இவனுக்குத் தன்னுடைய வ்யாபாரத்தில் மோக்ஷத்திற்கு இதுவே உபாயம் என்கிற புத்தி உண்டாகாது என்று தாத்பர்யம். ஆகையினால் அந்தந்தக் கர்மங்களினால் ஆராதிக்கப்பட்ட பகவானை யல்லவோ எல்லாவிடத்திலும் உபாயம். க்ஷணகாலத்தில் செய்து முடிக்கப்படுகிற அந்தந்தக் கர்மங்களின் ஸ்வரூபமாவது அவைகளினால் உண்டாக்கப்பட்ட அந்தப் பகவானுடைய ப்ரீதியைத் தவிர வேறொரு ப்ரமாணங்களிலேற்படாத அபூர்வம் முதலியதாவது உபாயமல்ல. ஆகையினால் 1 'மாமேகம் ஶர ணம் வ்ரஜ' என்று சொல்லுகிற அந்தப் பகவானிடத்திலேயே உபாயம் என்கிற புத்திசெய்யத்தக்கது என்று சொல்லுகிறார்—'ந்யெவ்யஸ'என்றாரம்பித்து. தன்னை ஆஶ்ரயிக்காதவர்களை ஸம்ஸாரத்தில் கட்டுவதும் ஆஶ்ரயித்தவர்களை அதிலிருந்து விடுவிப்பதும் பகவானுடைய தன் மஹிமைக்குத் தகுந்ததாகிய விளையாட்டு என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தெவெ' என்று. 2 'அப்படிப்பட்டவனாகிய தேவனை' என்றர்த்தமுள்ள ஶரணமாக அடையப்படுகிற பகவானைப் பற்றிய ஶ்ருதிவாக்யத்தைக்குறிப்பதற்காக இவ்விடத்தில் 'தெவ' என்னும் பதம் சொல்லப்பட்டிருக்கிறது. கடைபுரண்ட கருணை, ஸௌஶீல்யம், வாத்ஸல்யம், ஔதார்யம் முதலிய குணங்களுக்கு இருப்பிடமாயும், 3 'ஶரணாகதவத்ஸல:', 4 'ஸக்ருதேவ ப்ரபந்நாய', 5 'அபிசேத் ஸுதுராசார:' 6 'மாமேவைஷ்யஸி', 7 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று சொல்லுகிறவனாயும், வேறொரு கதியுமில்லாதவர்களுக்கு ஶரண்யனாயும் தானே உபாயமாகவும் இருக்கிற அந்தப் பகவானிடத்தில் என்றர்த்தம். தன்னுடைய அபராதங்கள் அவனுடைய ஸ்வதந்த்ரனாயிருக்கும் தன்மை, அவனுடைய ஸங்கல்பத்திற்குவசப்பட்டு நடக்கிற ப்ரம்மா, ருத்திரன், இந்திரன், முதலிய தாழ்ந்ததேவதைகள் இவைகளைப்பற்றியபயம் ஒன்றும் அடையத்தக்கதல்ல என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'கஶ:' என்று. 31

1 பகவத்கீதை-18-66. 2 ஶ்வேதாஶ்வதரம்.
3 ராமாயணம் - யுத்தகாண்டம்-18-1. 4 ராமாயணம் - யுத்தகாண்டம்-18.
5 பகவத்கீதை-9-30 6 பகவத்கீதை-18-65. 7 பகவத்கீதை-18-66.

ஏகாந்தாத்யந்ததாஸ்யைக ரதிஸ் தத்பதமாப்நுயாத் ।
தத்ப்ரதாநமிதம் ஶாஸ்த்ரமிதி கீதார்த்தஸங்க்ரஹ: ॥ 32

ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்த
ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹம் முற்றிற்று.

நீளவந்தின்று விதிவகையால் நினைவொன்றிய நாம்
மீளவந்தின்னம் வினை யுடம்பொன்றி விழுந்துழலாது
ஆளவந்தாரெனவென் றருள்தந்து விளங்கியசீர்
ஆளவந்தா ரடியோம் படியோமினி அல்வழக்கே.

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே ஶரணம்.

ப - ரை] ஏகாந்த - ஒரே நிஶ்சயத்துடன் கூடிய, அத்யந்த - அழிவில்லாத, தாஸ்யைக - கைங்கர்யம் ஒன்றிலேயே, ரதி: - ஆசையுடையவனுயிருந்து, தத்பதம் - அந்தப் பகவானுடைய திருவடியை, ஆப்நுயாத் - அடைவான், இதம் - இந்த, ஶாஸ்த்ரம் - கீதாஶாஸ்த்ரம், தத்ப்ரதாநம் - இந்த அர்த்தத்தை முக்கியமாகவுடையது, இதி - என்று, கீதார்த்தஸங்க்ரஹ: - கீதையின் அர்த்தத்தைப்பற்றிய சுருக்கம். 32

இப்படி இருந்துகொண்டு வேறொரு தடங்கலினால் கெடுக்கப்படாதவனுக்குத் தன்னுடைய இஷ்டப்படி பலம் கிடைக்கிறதென்றுசொல்லுகிறார்—இந்த ஶ்லோகத்தினால். பரமைகாந்திகளின் கைங்கர்யகளைச் சொல்ல ஆரம்பித்து அது தடங்கலில்லாமல் நிறைவேறுமென்பது ஸ்ரீ பௌஷ்கரஸம்ஹிதையில் 1 'ப்ரவ்ருத்திகாலாதாரப்ய ஆத்மலாபாவஸாநிகம் । யத்ராவகாஶோ விக்நாநாம் வித்யதே ந கதாசந ॥' என்று சொல்லப்பட்டது. இதையே அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு ஸ்ரீஸாத்வதஸம்ஹிதையில் 2 'ஸங்கல்பாதேவ பகவாந் தத்வதோ பாவி

1 பௌஷ்கர ஸம்ஹிதை. ப்ரவ்ருத்தி காலாதாரப்ய - ஆரம்பிக்கும் காலம் முதல்கொண்டு, ஆத்மலாபாவ ஸாநிகம்-தன்னை அடைவது வரையிலும், யத்ர-எந்த-தர்மத்தில், விக்நாநாம் - தடங்கல்களுக்கு, அவகாஶ: - இடமானது, கதாசந - எப்பொழுதும், நவித்யதே - இல்லையோ.

2 பகவாந் - பகவானவர், தத்வத: - உண்மையாக, பாவிதாத்மநாம் - த்யானம் செய்யப்பட்டதன் ஸ்வரூபத்தை யுடையவர்களுக்கு, ஸங்கல்பாதேவ - தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே, வ்ரதாந்தம் - அவனால் குறிக்கப்பட்ட முடிவையுடைய, அகிலம் - எல்லா, காலம் - காலத்தையும், அம்ருதேந - அம்ருதத்தினால், ஶேஷயதி - நினைக்கிறார்.

தாதநாம் । ப்ராதாந்யேநைவம் காமம் ஸேவ்யதே தேந தே॥', 1 'ஜ்ஞாத்வைவ பந்தம் மர்த்யேந பவிதவ்யம் ஸதைவ ஹி। ப்ராப்தயே ஸர்வகாமாநாம் ஸம்ஸாரபயபீருணா॥' என்று சொல்லப்பட்டது. ஆகையினால் 2 'ஶ்ரூயதே பக்திமுத்வஹதாம் நிருணாம்॥ ஸம்ஸாரந்யூநதாபீதாஸ்த்ரிதஶா: பரிபந்திந: । ஸத்யம் விக்நாநாம் ஸஹஸ்ரேண ததா தப:। விக்நாயுதேந கோவிந்தே ந்ருணாம் பக்திர் நிவார்யதே।' என்றிவை முதலிய வசனம் பரமபக்தி என்னும் அவஸ்த்தை உண்டாவதற்கு முந்திய தசையைப்பற்றியது என்று நினைக்கவேண்டும். இவ்விடத்தில் பூமவித்யையிலே போல ஐஶ்வர்யம் முதலிய தாழ்ந்த புருஷார்த்தங்களை நிரூபித்திருப்பது பரமாத்மாவை அடைவதாகிய ப்ரதானமான ப்ரயோஜனத்தின் மேன்மையை நிரூபிப்பதற்காக. இப்படியே ஸாத்வத ஸம்ஹிதையிலும் 3 'ப்ரத்யயார்த்தம் மோக்ஷஸ்ய ஸித்தயஸ் ஸம்ப்ரகீர்த்திதா:' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்தச் ஶாஸ்த்ரம் மோக்ஷத்தையே முக்யமான ப்ரயோஜனமாகவுடையது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தஸ்ய பாத' என்றாரம்பித்து இவ்விடத்தில் அவரவர் அதிகாரத்திற்குத்தக்கபடி ஶரணாகதி, பக்தியோகம், இவைகளாகிய உபாயங்களில் நிஷ்டையினால் பகவானை அடை

---

1 மர்த்யேன - மனிதனால், ஸர்வகாமானாம் - காம்ய பலங்கள் எல்லாவற்றினுடையவும், ப்ராப்தயே - அடைவதின் பொருட்டு, ஸம்ஸார பயபீருணா - ஸம்ஸாரதிலுண்டாகிய பயத்தையுடையவனாகவே, பந்தம் - ஸம்ஸார பந்தத்தை, ஜ்ஞாத்வா - தெரிந்துகொண்டு, ஸதைவ—எப்பொழுதும், பவிதவ்யம் - இருக்க வேண்டும், அதாவது காம்யபலங்களை அடைவதைப் பற்றித் தனக்கு ஸம்ஸார பந்தத்தை உண்டாக்கக் கூடியது இதென்று தெரிந்துகொண்டு அப்படி ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவனாகவே இருக்கவேண்டும்.

2 கோவிந்தே - பகவானிடத்தில், பக்திம் - பக்தியை, உத்வஹதாம் - செய்துகொண்டிருக்கிற, ந்ருணாம்-ஜனங்களுக்கு, ஸம்ஸார ந்யூநதாபீதா:-தங்கள் ஸம்ஸாரங்கள் குறைந்துவிடுகிறார்கள் என்று பயந்திருக்கிற, த்ரிதசா:-தேவதைகள், பரிபந்தின:—தடை செய்கிறவர்கள், என்று ஶ்ரூயதே கலு - கேழ்க்கப்படுகிறதல்லவா. ஸத்யம்-மெய்வார்த்தையானது, விக்நானாம் - தடைகளினுடைய, ஶதேந-நூறினாலும், ததா-அப்படியே, தப:-தபஸ்ஸு, ஸஹஸ்ரேண-ஆயிரத்தினாலும், ந்ருணாம் - மனிதர்களுக்கு, கோவிந்தே - பகவானிடத்தில், பக்தி:-பக்தியானது, விக்நாயுதேந-பதினாயிரம் விக்னங்களினாலும், நிவார்யதே - தடுக்கப்படுகிறது.

3 ஸாத்வத ஸம்ஹிதை. மோக்ஷஸ்ய - மோக்ஷத்திற்கு அதாவது மோக்ஷத்தைப்பற்றி, ப்ரத்யயார்த்தம் - நம்பிக்கை உண்டாவதற்காக, ஸித்தய:-மற்ற ஸித்திகள், ஸம்ப்ர கீர்த்திதா:-சொல்லப்பட்டதுகள்.

கிறவர்களாக நிரூபிக்கப்பட்ட பரமைகாந்தியாவது அவனால் அடையப்படுகிற பரமாத்மாவாவது 'தஸ்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. பிறகு இவ்விடத்தில் பௌத்தர்கள், ஜைனர்கள் இவர்களுக்கு ஸமமான சங்கராசார்யர் முதலியவர்களின் க்ரந்தங்கள் பகவானுடைய அபிப்ராயத்திற்கு விருத்தமானவைகள் என்று தெரிவிப்பதற்காகவும், கீழ்ச்சொல்லிய ஸங்க்ரஹத்தில் சொல்லிய விதமாகத் தம்முடைய சிஷ்யர்களுக்கு உள்ளபடியான கீதையின் எல்லா அர்த்தங்களின் விஸ்தாரத்தைத் தெரிவிப்பதற்காகவும் நிகமனம் செய்கிறார்—'இதி' என்றாரம்பித்து. ஸத்வகுணத்தில் நிஷ்டையுடைய பூர்வாசார்யர்களின் பரம்பரையால் கிடைத்த உத்தமமான கீதையின் அர்த்தமே இப்படியே ஒழிய குத்ருஷ்டிகளினால் தங்களிஷ்டப்படி ஊஹிக்கப்பட்டதல்ல அப்படிப்பட்ட இந்த அர்த்தம் தன்னுடைய யோக ப்ரபாவத்தினால் உள்ளங்கைக்குள்ளடக்கிப் பார்க்கப்பட்ட பரமாத்மாவினுடைய இரண்டுவித விபூதிகளையுமுடைய பகவானாகிய நாதமுனிகள் நியமனத்திற்குக் கீழ்படிந்தவராகிய ஸ்ரீமத் ராமமிஶ்ரர் (மணக்கால் நம்பி) இடத்திலிருந்து அநேக ஶாஸ்த்ரங்களை அறிந்தவராகிய நம்மால் அநேகம் தடவை கேழ்க்கப்பட்ட பகவத்கீதையின் அர்த்தங்களின் விஸ்தாரத்திற்குச் சுருக்கம் இது என்று நினைத்து மோக்ஷத்திலாசையுடையவர்களினால் க்ரஹிக்கத்தக்கது என்று தாத்பர்யம். 32

ஸாரம் அர்ஜுநஸாரதீய வசஸாம்
ஶ்ரீயாமுநேயோத்₃த்₄ருதம்
விஸ்பஷ்டைரிதி வேங்கடேஶகவிர்
வ்யாசஷ்ட பா₄ஷ்யாக்ஷரை: |
யசாஶேஷ கஜ்ஜுவிபாஷ
கஹநாகொஞா ஹஞா ஸுக்ருதிபி:
ஜம்வாரெஜெஜயவொஷணாவண
வணெணா: விஜ்ஞாண நிஜ்ஞாஷிஶ: ||

ப - ரை] ஶ்ரீயாமுநேயோத்₃த்₄ருதம் - ஸ்ரீ ஆளவந்தாரினால் எடுத்துரைக்கப்பட்ட, அர்ஜுநஸாரதீயவசஸாம் - அர்ஜுநனுக்கு ஸாரதியாயிருக்கிற பகவானுடைய வார்த்தையாகிய கீதையின், ஸாரம் - ஸாரார்த்தத்தை, வேங்கடேஶகவி: - ஸ்ரீ வேங்கிடநாதனென்கிற கவி, இதி -இவ்விதமாக, விஸ்பஷ்டை: - மிகவும் ஸ்பஷ்டங்களாயிருக்கிற, பா₄ஷ்யாக்ஷரை: - பாஷ்யத்திலிருக்கும் வார்த்தைகளைக்கொண்டு, வ்யாசஷ்ட-வ்யா

க்யானம் செய்தார், யத்வாதேஷு யஸ்ய - எந்த வேங்கடநாதனென்கிற கவியினுடைய, வாதேஷு - வாதங்களில், அன்றிக்கே, எந்த வ்யாக்யானங்களினுடைய வாக்யங்களில். அன்றிக்கே எந்தப் பாஷ்யத்தினுடைய வாதங்களில், குத்ருஷ்டி வேதபாஹ்ய கோலாஹல ஶமன க்ஷமை: - குத்ருஷ்டிகள், வேதபாஹ்யர்கள், இவர்களின் வஞ்சனையினுலுண்டாகிய கோலாஹலங்களை அடக்கக்கூடிய, ஜவாதிஶயை: - மிகவும் வேகமாகப் பரவுகிற, ஜயகோஷணாவஶப்தை: - ஜயத்தைத் தெரிவிக்கக்கூடிய ஶப்தங்களின் கணகணவென்னும் ஓசையினுல், திஶ: - திக்குக்கள், வித்ராண நித்ரா: – போக்கடிக்கப்பட்ட தூக்கத்தை உடையதுகளோ

கவிதார்க்கிக ஸிம்ஹமாயும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராயும்

வேதாந்தாசார்யருமாகிய ஸ்ரீமந்நிகமாந்தமஹா தேஶிகனருளிச்செய்த

ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணஶாலிநே ।
ஶ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்த குரவே நம: ॥



ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக னருளிச்செய்த

ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

வன்பற்றறுக்கு மருந்தென்று மாயவன் றானுரைத்த
இன்பக்கடலமு தாமென நின்றவிக் கீதைதன்னை
அன்பர்க் குரைப்பவர் கேட்பவரா தரித்தோதுமவர்
துன்பக்கடலில் துளங்குகை நீங்கித் துலங்குவரே. 20

ப - ரை] வன் - உறுதியான, பற்று – ஸம்ஸாரபந்தத்தை. அறுக்கும் - அறுக்கக்கூடியதாகிய, மருந்து - மருந்து, என்று - இப்படி நினைத்து, மாயவன் - ஆஸ்சர்யமான குணங்களையுடைய பகவான், தானுரைத்த - தானே சொன்ன, இன்பக்கடல் - இன்பத்தைத் தரக்கூடிய ஸமுத்திரத்திற்கு, அமுதாமென நின்ற - அம்ருதமாகும் இது என்று சொல்லும்படி நிற்கிற, இக்கீதை தன்னை - இந்தக் கீதையை, அன்பர்க்கு - பக்தியுடையவர்களுக்கு, உரைப்பவர் - உபதேசம் செய்பவர்கள், கேட்பவர் - இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறவர்கள, ஆதரித்து - இதனிடத்தில் மிகுந்த ப்ரீதியைச்செய்து, ஓதுமவர் - அத்யயனம் செய்பவர்கள், துன்பக்கடலில் - துக்கஸமுத்திரத்தில், துக்கஸமுத்திரமாகிய ஸம்ஸாரத்தில் என்றர்த்தம், துளங்குகை – ஸஞ்சரித்துக்கொண்டிருக்கை, இதிலேயே உழன்றுகொண்டிருக்கை என்றர்த்தம், நீங்கி - நிவ்ருத்தியாகி, துலங்குவரே - ப்ரகாசிப்பார்கள். 20

இப்படிக் கீதையின் பதினெட்டு அத்யாயங்களின் அர்த்தங்களில் 1 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்கிற வரையிலுள்ள ஶ்லோகங்களின் அர்த்தங்களை ஸங்க்ரஹமாக அருளிச்செய்து இனி இதை உபதேசம் செய்யக்கூடிய பாத்ராபாத்ரங்களையும் இதை அத்யயனம் செய்வதின் பலத்தையும் சொல்லுகிற 2 'இதம் தே நாதபஸ்காய' என்பது முதலிய ப்ரகரணத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்— இந்தப்பாட்டினால். 'வன்' என்பதினால் 3 'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா' என்கிறபடியே ஒருகுருவி பிணைத்தபிணை நம்மால் அவிழ்க்க முடியாதென்றால் ஸர்வ. ஶக்தியான ஒருவன் கர்மாநு ரூபமாகக் கட்டின கட்டு அவன் கால்கட்டியே அவிழ்த்

1 பகவத்கீதை-18-66   2 பகவத்கீதை-18-67.   3 பகவத்கீதை-7-14

துக்கொள்ள வேண்டும் என்பது சொல்லவேண்டுமோ. ஆகையினால் அந்த ஸர்வேச்வரனைத் தவிர மற்றவர்களினால் அவிழ்க்கமுடியாது. 1 'எருத்துக் கொடியுடையானும் பிரமனும் இந்திரனும்மற்று மொருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்தறிவாரு மில்லை' என்கிறபடியே இப்படிப்பட்ட ஸம்ஸாரமாகிற பந்தத்தைப்போக்க மற்றொருவராலும் முடியாதென்ப தேறபட்டது. 'அறுக்கும்மருந்து' என்பதற்கு இந்தக் கீதையை அத்யயனம் செய்ய ஸம்ஸாரபந்தம் தன்னடையே கழியும் என்று தாத்பர்யம். அன்றிக்கே வன்-த்ருடமான. பற்று - பற்றுதல், அதாவது ஸ்நேகம், அர்ஜுநனுக்கு அஸ்தானத்தில் உண்டான ஸ்நேகம் மற்றொன்றினாலும் போக்க முடியாதாகையினால் அப்படிப்பட்ட ஸ்நேகத்தை அறுப்பதற்கு இதுமருந்து என நினைத்து என்றாகவுமாம். இது கீதாபாஷ்யத்தில் அவதாரிகையில் 'பாஞ்சஸ்ய மஹாவிஸ்பூர்திதஸ்ய க்ருஷ்ணஸ்யாத்மஸ்வரூபாயதா ஜ்ஞாநேந விநா சஸ்ய வசோஹாநஸ்யாதீதி சேஷ:' என்றருளிச்செய்யப்பட்டது 'மாயவன்' என்பதினால் ஆச்சர்யமான குணங்களையும் சேஷ்டைகளையும், வ்யாபாரங்களையுமுடையவன் என்றர்த்தமாகையினால் 2 'ஸம்வாதமிமமத்புதம்', 3 'விஸ்மயோ மே மஹாந்ராஜந் தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே:', என்றும்சொல்லுகிறபடியேஇந்த ஸம்வாதம் ஆச்சர்யமென்பதும் விச்வரூபம் ஆச்சர்யமென்பதும் சொல்லப்படுகிறது. அன்றிக்கே 'மாயவன்' என்பதினால்தான் ஸாரத்யமாகிற தாழ்ந்ததொழிலைச்செய்து கொண்டிருக்கும்பொழுதே வேதாந்த சாஸ்த்ரரஹஸ்யார்த்தத்தை உபதேசம் செய்வதாகிய நிலைவரம்பில்லாத செய்கைகளை நினைக்கிறதாகவுமாம். அதுவுமன்றிக்கே சாஸ்த்ரார்த்தத்தை உபதேசஞ்செய் என்று கேட்டதற்கு அப்படியே உபதேசம் செய்ய ஆரம்பித்ததும், கேட்டபடி காட்டவேண்டுமென்று ப்ரார்த்தித்ததற்கு அப்படியே விச்வரூபத்தைக்காட்டினதும், மறுபடியும் 4 'ததேவ மே தர்சய தேவ ரூபம்' என்று முன்ரூபத்தை மறுபடியும் காட்டவேண்டும் என்று ப்ரார்த்தித்தற்கு அப்படியே காட்டினதுமாகிய அவன் சொல்லிற்றெல்லாம் செய்யும் தன்மையாகிய ஆச்ரிதவாத்ஸல்யத்தின் பெருமையை நினைத்து 'மாயவன்' என்கிறார். அதாவது ஒருவருக்கும் வாக்குக்கும் மனதிற்கும் எட்டாததாகையினாலே 5 'எத்திறம்' என்று மோஹித்துக்கிடக்கக்கூடியதான ஆச்ரிதஸௌலப்யத்தின் ஆச்சர்யத்

---

1 பெரியாழ்வார்-திருமொழி 2 பகவத்கீதை-18-74 3 பகவத்கீதை 18-77.
4 பகவத்கீதை-11-45 5 திருவாய்மொழி-1-3-1

த்தை நினைக்கிறாராகவுமாம். இந்த ஆஶ்ரிதவாத்ஸல்யம் 'ஆஶ்ரித வாத்ஸல்ய விவஶ: வாயுஃம் ரவிநம் சுக்ராதநு ஸாரயிம் ஸவ்யஸோதமோக்ஷ ஹ்ருகாஶ' என்றருளிச்செய்யப்பட்டது. 'தானுரைத்த' என்பதினால் ஆசார்யமுகமாகவுமன்றிக்கே ஒரு க்ரந்த முதலியவைகள் மூலமாகவுமன்றிக்கே 1 'ஶ்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா' என்று ஓலைப்புறத்தில் கேட்டுப் போருமதுவுமன்றிக்கே, நித்ய ஸூரிகளுக்குப்போல 'ஸம்கல்பாதேவ' என்று சொல்லுகிறபடியே தன்னெஞ்சில் பட்டதொன்று மன்றிக்கே, 'தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய்' என்று நமக்கு மிகவும் ஹிதபரர்களாகிய தந்தைதாயாகிய பகவான் தானே நேரில் சொன்ன என்றர்த்தம். 'தானுரைத்த' என்பதினால் அர்ஜுநன் 2 'யச்ச்ரேயஸ்ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே' என்று நானிப்பொழுது யுத்தம் செய்வது நல்லதா அப்படிச்செய்யாமலிருப்பது நல்லதா என்கிறவபிப்ராயத்தினால்கேட்டதற்கு யுத்தம் செய், அல்லது செய்யாதே என்றிரண்டித்திலொன்று சொல்ல வேண்டியிருக்க, அப்படிச் சொல்லாமல் அந்த அர்ஜுநன் கேட்ட கேள்வியை வ்யாஜமாக வைத்துக்கொண்டு 3 'அகல் ஞாலத்தவரறிய நெறியெல்லா மெடுத்துரைத்த நிறை ஞானத்தொருமூர்த்தி' என்று சொல்லுகிறபடியே ஸகல சேதனர்களும் உஜ்ஜீவிப்பதற்குத் திருவுள்ளம்பற்றி மோக்ஷஸாதனத்தைப்பற்றி ஸந்தேஹம் அவனபிப்ராயத்திலில்லாமலிருக்கத் தனக்குள்ளே அடங்காத கருணை கரைபுரண்டு 4 'வேதாந்தம் ஸவிஷயம் ஸாரயி உபாஸம்ஸேத' என்கிறபடியே இந்தக்கீதா ஶாஸ்த்ரரூபமாக வெளிப்பட்டது. லோகஹிதார்த்தமாக ப்ரவ்ருத்தித ஶாஸ்த்ரங்களெல்லாம் இப்படியே ஒன்றின் மாறுதலாக இருக்கவேண்டும்போலும். ஒருவருக்கு 5 'ஶோக: ஶ்லோகத்வமாகத:'—உள்ளிருந்தசோகத்தில் மிகுதிகரைபுரண்டு ஶ்லோகரூபமாய் புறப்பட அதின்மூலமாக லோகஹிதார்த்தமான ஸ்ரீமத் ராமாயணம் லோகத்தில் ப்ரவ்ருத்தித்தது. மற்றொருவருக்கு 6 'ஐதத்வநிஷ்டாத்மநோவர்ண்யஶ்லோகாநுஜநிவாஸஸ்தோ: வலிணதி:' என்கிறபடியே உள்ளே அடங்காத பரபக்தி கரைபுரண்டு திருவாய்மொழியாகப் புறப்பட்டது. அதைப்போலவே இவருக்குத்தயை கரைபுரண்டுகீதாஶாஸ்த்ரமாகப்புறப்பட்டது என்றும்திருவுள்

1 299ம் பக்கம் புட்நோட்டைப்பார்க்க. 2 பகவத்கீதை-27
3 திருவாய்மொழி-4-8　　4 ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்
5 த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி-120　　6 த்ரமிடோபநிஷத்ஸாரம்

ளம். 'மாயவன் தானுரைத்த' என்பதினால் ஆஶ்ரிதர்களினிடத்தில் உண்டான வாத்ஸல்யத்திற்கு வசப்பட்டவனாகிய தான் சொன்ன என்று பொருளேற்படுகிறது. இத்தால் ஆஶ்ரித வாத்ஸல்யம் பேசுவிக்கத்தான் பேசினான் என்பது கருத்து. 'இன்பக் கடல்' ஸுகத்திற்கு ஸமுத்திரமாகிய மஹாபாரதம். அதாவது நான்குவித ப்புருஷார்த்தங்களையும் அதற்குபாயங்களையும் அவரவர்கள் அதிகாரத்திற்குத்தக்கபடி நிரூபிக்கிறபடியினாலே 'பாரத: பஞ்சமோ வேத:' என்கிறபடியே ஐந்தாவது வேதமாகச்சொல்லப்படுகிற அவரவர்களுக்கும் ஸுகத்தைக்கொடுக்கக்கூடிய மஹாபாரதம். 'அதற்கு அமுதம்' என்பதினால் அந்த மஹாபாரதமாகிய க்ஷீரஸமுத்திரத்திற்கு இந்தக் கீதை ஸாரம்ஸமாகிய அம்ருதம். அந்த அம்ருதத்தை கடைந்தெடுத்துத் தேவர்களுக்கு அளித்தவனாகிய பகவானை இந்த அம்ருதத்தையும் தேவ ப்ரக்ருதிகளானவர்களுக்களித்தான் என்று திருவுள்ளம். 'பாரதெஸமுத்ருதா' என்றல்லவோ சொல்லப்படுகிறது. 'மருந்து, அமுதம்,' என்கிற பதங்களினால் எப்படிப் பகவான் 1 'மருந்தும் பொருளுமமுதமும் தானே', 2 'நச்சுமாமருந்தமென்கோ நலங்கடலமுதமென்கோ' என்றும் சொல்லுகிறபடியே பகவான் தன்னை ஆஶ்ரயித்தவர்களுக்கு மருந்தாகவும், அநுபவிக்கக்கூடிய அம்ருதமாகவும் சொல்லப்படுகிறானோ அப்படியே அவனருளிச்செய்த பகவத்கீதையும 3 'பெதூ யஶ்ருணாம்ருதம்' என்கிறபடியே மருந்தாயும் அம்ருதமாயும் இருக்கிறதென்று திருவுள்ளம். 'இக்கீதைதன்னை' என்று தம்புத்தியில் எப்பொழுதும் அநுஸந்தானம் செய்யப்படுகிற கீதையின் போக்யதாதிஶயத்தைக் குறித்துக்காட்டுகிறார். 4 'இச்சுவை தவிர யான் போய்' என்பதைப்போல ஸம்ஸாரத்தைத் தீர்க்கக்கூடிய மருந்தாக இல்லாமல் போனபோதிலும் அபத்யமாயும் மதுரமுமான ஆஹாரங்களில் தத்காலத்திலுண்டாகும் ஸுகத்திலாசையினால் லோகத்தில் ப்ரவ்ருத்திப்பது காணப் படுகிறதைப்போல இதின் ஸுகத்தைத் தெரிந்தவர்கள் இதின் அநுஸந்தானத்தைவிடமாட்டார்கள். ஆகவே 'விடாய்தீரகங்காஸ்நானம் செய்தால் பாபம் தன்னடையே கழியுமாப்போலே' என்றும், 5 'மதுவார்துழாய் முடிமாயப்பிரான் கழல் வாழ்த்தினால் அதுவே இவளுற்ற நோய்க்குமரு மருந்தாகுமே' என்றும் சொல்லுகிறபடியே போக்யதாதிசயத்தால் அநுஸந்தானம் செய்ய ஸம்ஸாரரோகம் தன்னடையே கழியும் என்றும் திருவுள்ளம். 'மருந்தொன்று' என்றும்

1 மூன்றாம் திருவந்தாதி 2 திருவாய்மொழி-3-3
3 பகவத்கீதை-10 4 திருமாலை - 2 5 திருவாய்மொழி-4-5

பாடமுண்டு. அப்பொழுது 'ஒன்று' என்பதற்கு அத்விதீயமானது என்றர்த்தம். இதைப்போல ஸ்வயம்போக்யமாயும் மருந்தாயுமிருப்பது மற்றொன்றுகிடையாது என்று திருவுள்ளம். பாலையும் மருந்தென்று பேரிட்டுக்கொடுக்குமாகில் கைக்குமிறே. அன்றிக்கே 1 'ஔஷதம் [illegible]', 2 'வெற்புடனொன்றி அயிந்தையில் வெவ்வினை தீர்மருந்தொன்று அற்புதமாகவமர்ந்தமை' என்றும் சொல்லுகிறபடியே மற்ற மருந்துகளைப்போல மாஸம், பக்ஷம், வருஷம், முதலிய தீர்க்ககாலங்களில் அனேகம் தடவைகளில் ஸாப்பிட வேண்டியதும், மேனிக்குப்பூச வேண்டியதுமாக அல்லாமல் மருந்தை மனதினால் ஒருதடவை நினைக்க ஸர்வ வ்யாதிகளும் ஶமிக்கும்படியாகயிருக்கை அத்விதீயமென்னப்படுகிறதாகவுமாம். 'அன்பர்க்கு' என்பதினால் பக்திபுடையவர்களுக்கென்று சொல்லப்படுகிறது. இத்தால் 3 'ய இமம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபிதாஸ்யதி' என்கிற ஶ்லோகத்தின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. அவ்விடத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் 'மத்பக்தேஷு' என்பதினாலேயே தபஸ்ஸு செய்யாமை முதலிய தோஷங்கள் அவர்களுக்கில்லை என்று நிராகரிக்கப்பட்டன' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால் 4 'இதம் தே நாதபஸ்காய' என்று கீழ் ஶ்லோகத்தில் ப்ரஸ்தாவிக்கப்படுகிற தபஸ்ஸு செய்யாமை, ஶ்ரத்தை இல்லாமை, பக்தி இல்லாமை, பகவானிடத்தில் பொறாமை யுடையவனாக இருக்கை, முதலிய தோஷங்களில்லாதவர்களுக்கு என்று திருவுள்ளம். மேலும் பக்தியின் லக்ஷணம் சொல்லுமிடத்தில் 5 'தத்கதாஶ்ரவணே ஹர்ஷ: ஸ்வரநேத்ராங்கவிக்ரியா। ஸ்வயமாராதநே யத்ந:' என்றிவை முதலியவைகள் 'ஹ்ருஷ்டவியா' என்று பக்தியின் உட்பிரிவுகள் எட்டுவிதமென்று சொல்லப்படுகிறபடியினால் பகவானுடைய கல்யாணகுணங்களைக்கேழ்ப்பதில் ஶ்ரத்தையும், கேழ்க்கும்பொழுது மயிர்க்கூச்சம், ஆநந்த பாஷ்பம், முதலிய ஶரீரத்தின் வேறுபாடுகளும், பகவானை ஆராதனம் செய்வதில் ப்ரயத்தினம் செய்வதும், முதலிய குணங்கள் பக்தியின் உட்பிரிவாகஏற்படுகிறபடியினால் மேல்சொல்லிய தோஷங்கள்உடையவர்களுக்குஇந்தக்குணங்கள் ஸம்பவிக்காது. ஆகையினால் அவைகள் இல்லைஎன்று தானாகவே ஏற்படுகிறது. 'உரைப்பவர்' என்பது அர்த்தத்துடன் உபதேசம் செய்வதைச்சொல்லுகிறது. 'கேட்பவர்' என்

1 விரோத பரிஹார ரஹஸ்யம்
2 மும்மணிக்கோவை-9 3 பகவத்கீதை-18-68
4 பகவத்கீதை-18-67 5 விஷ்ணுபுராணம்

பது அந்த அர்த்தத்துடன் கேட்பவர்களைச் சொல்லுகிறது. 'ஆதரித்தோதுமவர்' என்பது 1 'ஸ்ரத்தாவாநநஸூயஸ்ச ஸ்ருணுயாதபி யோநர:' என்கிற ஸ்லோகத்தில் சொல்லுகிறபடி கேவலம் ஸப்தத்தை மாத்திரம் அத்யயனம் செய்பவர்களைச் சொல்லுகிறது. அன்றிக்கே 'கேட்பவர்' என்பது அபலார் உபதேசம் செய்துகொள்ளும் பொழுது கேட்டுக்கொண்டிருப்பவரைச் சொல்லுகிறது. 'ஆதரித்தோதுமவர்' என்பது 2 'அத்யேஷ்யதே ச ய இமம்' என்கிற ஸ்லோகத்தில் சொல்லப்படுகிற ஸ்ரத்தாபூர்வகமான அத்யயனத்தைச்சொல்லுகிறது. 'துன்பக்கடலுள் துளங்குகை நீங்கி என்பதினால் பரமபுருஷார்த்தமாகிய மோக்ஷம் கிடைத்தாலும் கிடைக்கட்டும் கிடைக்காமல்போனாலும் போகட்டும், இந்தத் துக்கஸாகரத்திலிருந்து நீங்குவதே பெரிய புருஷார்த்தம் என்று தெரிவிப்பதாக அநிஷ்ட நிவ்ருத்தியை முதலில் அருளிச்செய்தபடி அன்றிக்கே 'துன்பக்கடலில் துளங்குகை நீங்கி' என்பது இஹலோகத்திலேயே கிடைக்கக்கூடிய புருஷார்த்தத்தை அருளிச் செய்தபடியாகவுமாம். 3 'சீர்கலந்தசொல் நினைந்துபோக்காரேல் சூழ்வினையின் ஆழ்துயரை என்னினைந்துபோக்குவரிப்போது' என்று ஸம்ஸாரதசையிலேயே பகவத்குணானுபவத்தினால் உண்டாகிய ப்ரீதி வ்ருத்தியடைந்து ஸம்ஸாரதுக்கானுபவம் கொஞ்சம் கொஞ்சமாக நிவ்ருத்தித்துவிடும் என்று தாத்பர்யம். 'துலங்குவரே' என்பதினால் பரமபுருஷார்த்தத்தை அருளிச்செய்தபடியாகவுமாம். 4 'யதாநக்நிருத்ததோஜ்வாலோ' என்றும், 5 'அழுக்கடைந்து கழுவியநற்றரளம் போல' என்றும் சொல்லுகிறபடியே மண்பற்றுக் கழறறவேண்டியது போக்கி ஸ்வாபாவிகமான ஜ்ஞானத்தின் விகாஸமும் ஸ்வரூப ப்ராப்த கைங்கர்யமாகிய புருஷார்த்தமும் தன்னடையே ஸித்திக்கிறது என்று திருவுள்ளம். அன்றிக்கே 'துலங்குவரே' என்பது நித்யஸூரிகளினுடைய அழகோலக்கத்திலே சென்று அந்த எண்ணிறந்த நித்யஸூரிகளுக்குள் ஒருவனாகமாத்திரமிராமல் 6 'தேவர் வைகல் தீர்த்தங்களே என்று பூசித்து நல்கி உரைப்பர் தந்தேவியர்க்கே' என்றும், 7 'வஹ்நௌ வஸ்த்ரமிவோத்தஹாணம்' என்றும்சொல்லுகிறபடியே அபூர்வமான ஒரு நாயகரத்தினம் இழைத்தது போல அந்தநித்யஸூரிகளின் திருவோலக்கத்திற்கு இவர்களினால் பூர்த்தி என்று சொல்ல

1 பகவத்கீதை-18-71
2 பகவத்கீதை-18-70
3 பெரிய திருவந்தாதி-76
4 விஷ்ணுபுராணம்
5 பரமபதஸோபாநம்
6 திருவாய்மொழி-7-10-11
7 அச்யுதசதகம்

லாம்படி ப்ரகாசித்துக்கொண்டிருப்பார்கள் என்று திருவுள்ளமாகவுமாம். அப்பொழுதுவந்தவரான ஸ்ரீ விபீஷணாழ்வாரைப் பற்றி 1 'தஸ்மாத்க்ஷிப்ரம் ஸஹாஸ்மாபிஸ்துல்யோ பவது ராகவ' என்றல்லவோ மஹாராஜர் பிரார்த்தித்தார். அவ்விடத்தில் 'இவனொருவனுமே ஒருதலையும் நாங்களெல்லாரும் ஒருதலையுமாக விஷயீகரித்தருளவேண்டுமென்று ஏகவசனத்திற்கும் பஹுவசனத்திற்கும் தாத்பர்யம்' என்று தம்மாலேயே வ்யாக்யானம் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

தீதற்ற நற்குணப்பாற் கடற்றாமரைச் செம்மலர்மேன்
மாதுற்ற மாயன்மருவ விக்கீதையின் வண்பொருளைக்
கோதற்ற நான்மறை மௌலியினாசிரியன் குறித்தான்
காதற்றுணி வுடையார் கற்றும் வண்ணங் கருத்துடனே. 21

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக னருளிச் செய்த
ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு முற்றிற்று.
ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

சீரார் தூப்புல் திருவேங்கட முடையான் திருவடிகளே சரணம்.

சீரொன்று தூப்புற்றிருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

ப - ரை] தீது - தோஷம், அற்ற - இல்லாததான, நல் - நல்லதாகிய, குண - குணங்களையுடைய, பாற்கடல் - க்ஷீரஸமுத்திரத்திலுதித்தவளான, அன்றிக்கே நல்லகுணங்களுக்குப் பாற்கடலாகிய, தாமரைச் செம்மலர்மேல் - தாமரையினுடைய சிவந்த புஷ்பத்தின்மேல் வஸிக்கிற, மாது - மஹாலக்ஷ்மியினால், உற்ற - அடையப்பட்ட, மாயன் - ஆச்சர்யமான குணம் முதலியவைகளையுடைய ஸ்ரீ க்ருஷ்ணன், மருவ - ப்ரீதி செய்யும்படி, அவன் திருவுள்ளமுகக்கும்படி என்றர்த்தம், இக்கீதையின்- இந்தக்கீதையினுடைய, இன்கீதையின் என்று பாடாந்தரம், அப்பொழுது இன் – இனியதான அதாவது அர்த்த ஜ்ஞானமின்றிக்கே சப்தமாத்திரத்திலும் போக்யமான என்றர்த்தம், வண்பொருளை – விலக்ஷணமான அர்த்தத்தை, அல்லது வண்பொருளை - அழகிய அர்த்தத்தை, கோது - தோஷம், அற்ற - இல்லாததான, நான்மறை - நாலுவேதங்களினுடைய, மௌலியன் - உபநிஷத்பாகங்களின், ஆசிரியன்- ஆசார்யனாகிய அதாவது

---

1 ராமாயணம்-யுத்தகாண்டம்

வேதாந்தாசாரியன் என்றர்த்தம், காதற்றுணிவுடையார் - காதல் - ப்ரீதி, அதாவது பக்தி. துணிவு - விஶ்வாஸம் அதாவது விஶ்வாஸத்தை அங்கமாகவுடைய ப்ரபத்தி, இவைகளையுடையவர்கள், அதாவது பக்தப்ரபன்னர்களாகிய இரண்டதிகாரிகளும், கற்கும் வண்ணம்-அப்யஸிக்கும்படி, கருத்துடனே - ஸாவதானத்துடன், அன்றிக்கே இவ்விருவர்களும் கருத்துடனே கற்கும் வண்ணம் என்றந்வயிக்கவுமாம், அதாவது தங்கள் தங்கள் அதிகாரத்திற்குத் தகுந்தபடி அனுஷ்டிக்கவேண்டிய பாகங்களை இந்தக்கீதா ஶாஸ்த்ரம் சொல்லுகிறபடியினால் இவ்விருவரும் ஸாவதானமாய்க்கற்கும்படி, குறித்தான் - ஸங்க்ரஹித்தான். 21

இவ்விதமாகக்கீதா ஶாஸ்த்ரத்தில் பதினெட்டு அத்யாயங்களின் அர்த்தங்களையும், மேல் அதிகாரிகளைக் குறிக்கிற பாகத்தின் அர்த்தத்தையும், அப்படி அப்யஸிக்கிறவர்களின் பலத்தைச்சொல்லுகிற பாகத்தையும் ஸங்க்ரஹித்த பிறகு ஆளவந்தார் இவ்விதமாக கீதார்த்த ஸங்க்ரஹமருளிச் செய்திருக்க தாமொரு கீதார்த்த ஸங்க்ரஹமருளிச் செய்ததற்கு ப்ரயோஜனத்தையும் அப்படித்தாமருளிச்செய்த அர்த்தம் பகவானுடைய திருவுள்ளத்திற்கு ஒத்தது என்பதையும் தெரிவித்துக்கொண்டு இப்படித் தாமருளிச்செய்த அர்த்தத்திற்கு கர்த்ரு வைலக்ஷண்யத்தையும் தெரிவித்துக்கொண்டு இப்படித் தாமருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹம் பகவத் ப்ரீத்யர்த்தமென்று ஸாத்விகத்யாகம் செய்துகொண்டு நிகமனம் செய்கிறார்— இந்தப்பாட்டினால். இங்கு 'தீதற்ற' என்பது குணங்களிலும், தாமரை செம்மலர்மேல் மாது இடத்திலும், மாயனிடத்திலும் அந்வயிக்கிறது. குணங்களுக்குத் தீதில்லாமையாவது தோஷங்களோடு சலந்திருக்கை, அளவுபட்டிருக்கை முதலியவைகளில்லாமை. அன்றிக்கே 1 'வ்ருஷகிரிக்ருஹமேதி குணா: போதபலைஶ்வர்யவீர்யஶக்திமுகா:। தோஷா பவேயுரேதே யதி நாம தயே த்வயா விநாபூதா:॥' என்கிறபடியே தயை இல்லாமையினால் தோஷரூபமாக பர்யவஸானத்தை அடையாமல் க்ருபையை அநுஸரித்திருக்கையாகவுமாம். 'குணங்களுக்குப் பாற்கடலாகிய' என்கிற யோஜனையில் 2 'பாற்கடல் தன்னில் பன்மணிபன்ன சீர்க்கணம் சேர்ந்த சீலமெல்லை இலே', 3 'யதா ரத்நாநி ஜலதேரஸங்க்யேயாநி புத்ரக। ததா குணா ஹ்யநந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மந:॥' என்றும் சொல்லுகிறபடியே ஓரோர் குணங்களை ஆஶ்ரிதர்களை ரக்ஷிப்பதற்குப் போதுமானது.

1 *தயாசதகம்-* 2 *மும்மணிக்கோவை-6*

3 ***விஷ்ணுபுராணம்***

இப்படிப்பட்ட குணங்கள் எண்ணிறந்தவைகள் அவனுக்கு இருக்கின்றன என்பது திருவுள்ளம். 'பாற்கடலுள் வந்துதித்தவளாகிய' என்னும் யோஜனையில் 1 'யதஙுதுஸொயிராஹஸ்ருயஸீவ' என்கிறபடியே 'அமுதில் வரும் பெண்ணமுது' உண்டவருக்கும் தெரிவிக்கப்படுகிறது. இத்தாலும் 'மாதுறைமாயன்' என்பதாலும், 'மாயன்' என்கிற இடத்தில் மார்பன் என்றும் பாடாந்தரமுண்டு. அப்பொழுது 'வக்ஷஸ்ஸ்தலஸ்தநம்ஸமுஜாதஸம்' என்பதினர்த்தம் அருளிச்செய்யப்பட்டது. ஆக இரண்டினாலும் எம்பெருமானுக்குப் பிராட்டியினிடத்திலிருக்கும் வ்யாமோஹாதிசயம் தெரிவிக்கப்பட்டது. 'தாமரைச் செம்மலர்மேல் மாது' என்பதினால் தாமரை பஷ்பத்தில் குடியிருப்பு அஸஹ்யமாய் பகவானுடைய திருமார்பில் வந்தடைந்தமை சொல்லப்படுகிறது 'பாற்கடலினுதித்தவளாகிய' என்பதினால் க்ஷீராப்திமதன காலத்தில் ஸர்வதேவதைகளும் திரளாகவிருக்க 2 'பஶ்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:' என்கிறபடியே அவர்களை அநாதரித்துவிட்டுப் பகவானுடைய திருமார்பை ஆஶ்ரயித்ததாகிய ப்ராட்டியின் வ்யாமோஹாதிசயம் சொல்லப்படுகிறது. இப்படி 3 'ஸ்வஸ்ரேஷ்டோவஸ்ஸ்ரேஷ்ட ஸ்வதேஹஸ்ய வாஸ்த்ரம் ப்ரதிஷ்டிதம்', 4 'நஜீவேயம் க்ஷணமபி', 5 'அகலகில்லேனிறையும்', என்கிறபடியே ஒருக்ஷணகாலவிப்லேஷமும் பொறுக்காததான பரஸ்பர வ்யாமோஹாதிசயம் அருளிச்செய்யப்பட்டது. 'தீதற்ற நற்குண' என்பது மாதுக்குவிசேஷணமாக இருக்கும் யோஜனையில் பகவானைப்போல தண்டதரத்வம், நிக்ரஹம், முதலியவைகளோடு கலக்காமல் 'அநுக்ரஹைகஸ்வபாவம்' என்கிறபடியே கேவலம் அனுக்ரஹமாத்திரத்திற்கு இருப்பிடம் என்று தாத்பர்யம். ஆக இத்தால் 6 'பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம। கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி', 7 'விதிதஸ் ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல:' இத்யாதிகளாலே ஶரணாகதர்களை ரக்ஷிப்பதில் 8 'மாதர்மைதிலி ராக்ஷஸீஸ்த்வயி ததைவார்த்ராபராதாஸ்த்வயா ரக்ஷந்த்யா பவநாத்மஜால் லகுதரா ராமஸ்ய கோஷ்டீக்ருதா' என்கிறபடியே பெருமானைவிட முற்பட்டவளாகிய லக்ஷ்மியோடு ஐகரஸ்யம் எம்பெருமானுக்குண்டென்று 9 'ஸௌகர்யஸ்ய ஜா

1 ஸ்தோத்திரரத்னம் 2 விஷ்ணுபுராணம்
3 ராமாயணம்-பாலகாண்டம்
4 ராமாயணம்-ஸுந்தரகாண்டம் 5 திருவாய்மொழி-6-10
6 ராமாயணம்-யுத்தகாண்டம் 7 ராமாயணம்-யுத்தகாண்டம்
8 ஸ்ரீகுணரத்னகோசம் 9 ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்

ஷாஸ்த்ரஸித்தம்ஸ்ரீதேவிஸ்வாதந்த்ர்யம்' என்றும், 1 'யஸ்யாவீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோவிதத்தேகிலம்' என்றும் அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் இந்தக்கீதையில் ஸர்வஸகரமாய்ஸர்வாதிகாரமான ஸ்வதந்த்ர ப்ரபத்தியை எம்பெருமானருளிச் செய்யாவிடில் மேற்கூறிய பிராட்டியுடன்ஐகரஸ்யம் எம்பெருமானுக்கு ஸித்திக்காதுஎன்று திருவுள்ளம். இந்தப் பெரியபிராட்டியாரின் அவயவபூதையாய் ஸ்தனபாஹ க்ருஷ்டிகல்பையான பூமிபிராட்டியாரும் 2 'கதம் த்வாம் தேவ தேவேசம் ப்ராப்நுவந்தி' என்று கேழ்க்க 'ஸ்திதே மநஸி' இத்யாதியால் இவனும் உபதேசித்தானிறே. 'தீதற்ற நற்குண' என்பது மாயனுக்கு விசேஷணமாகும் பக்ஷத்திலும் விப்ரலம்பம், வைஷம்யம்,நைர்க்ருண்யம் முதலியதோஷங்கள் இவனுக்கும் ஸம்பவிக்குமென்று திருவுள்ளம். எப்படி என்னில் ஸ்ரீவராஹப்பெருமாளாயவதரித்திருக்குமதசையில் பூமிப்பிராட்டிகேழ்க்க அந்திம ப்ரத்யயம் தன்னுடைய ப்ரயத்நத்தினாலே ஸாத்யமில்லாதபடியினாலே ஸுலபமாய்ஸக்ருத்கர்த்தவ்யமான உபாய விசேஷத்தை 3 'ஸ்திதே மநஸி' என்கிற இரண்டு ச்லோகங்களினாலருளிச்செய்தான். ஸ்ரீ ராமாவதாரத்திலும் 'ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்றும், 'ஸ்வயம் ஸம்ப்ராப்தமாத்ரேண' என்றும், 'பத்தாஞ்ஜலிபுடம் தீநம் யாசந்தம் சரணாகதம்। ந ஹந்யாதாந்ருசம்ஸ்யார்த்தம் அபி சத்ரும் பரந்தப॥' இத்யாதிகளான மஹருஷிவாக்யங்களை உதாஹரித்துசரணாகதர்களைத்தன்னுடைய சக்திக்கு அனுகுணமாக ரக்ஷிக்கவேண்டுமென்றும் அப்படிச் செய்யாவிட்டால் பாபம் என்றும் அருளிச்செய்தான். அஹிர்புத்நீய ஸம்ஹிதாதிகளிலும் 'ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே। அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம॥' இத்யாதிகளில் ப்ரபத்தி மோக்ஷஸாதனமென்று தானே பலவிடங்களில் அருளிச்செய்திருக்கிறான். அப்படி இருக்க இவ்விடத்தில் அங்கப்ரபத்தியைமாத்திரம் அருளிச்செய்ததாக இருந்தால் இது அர்ஜுனனை மாத்திரம்பற்றி இருந்தபோதிலும் எல்லா ஜீவர்களையும்பற்றி இருந்தபோதிலும் விப்ரலம்பகத்வம், வைஷம்யம், முதலிய தோஷங்கள் எம்பெருமானுக்கு ஸம்பவிக்கும்.ஏனெனில் ஸுலபமாயும்ஸர்வாதிகாரமுமான உபாயமிருக்க அதை அருளிச்செய்யாமையினால். ஆகையினால் ஸ்ரிய:பதித்வம், ஹேயப்ரத்யநீககல்யாணைகதாநத்வம் முதலியவைகள் எம்பெருமானுக்கு ஸித்திப்பதற்காக இந்த ச்லோகத்தில் ஸ்வதந்த்ரப்ர

---

1 ஸ்ரீகுணரத்நகோசம் 2 வராஹபுராணம்

3 வராஹசரமச்லோகம்

பத்தியும் விவக்ஷிதம் என்றவர்ப்யம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்பது திருவுள்ளம். 'மருவ' என்பதற்கு அவன் திருவுள்ளமுகக்க என்றர்த்தமாகையினால் 1 'நவாஞ்சாநவிஸம்வஷிஷ்டாஸ' இத்யாதிகளில் படியே இல்வான ப்ரயோஜனங்களைப்பற்றியாவது தன்னுடைய ஸாமர்த்தியாதிகளை ப்ரகாசம்செய்யவாவது இந்தக்க்ரந்தம் அருளிச்செய்யப்படவில்லை. 'தர்க்கபாண்டித்யத்தினாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச்செய்தேயிறே நாம் ப்ரமாணசரணராய்ப் போருகிறது' என்றருளிச்செய்தபடியே ப்ரமாணஸரணியை அநுஸரித்துப் பகவானுடைய திருவுள்ளமுகப்பதற்காகச்செய்தோம் என்று தாம் க்ரந்தம் அருளிச்செய்ததற்குப் பகவத்ப்ரீதியே ப்ரயோஜனமாக அநுஸந்தித்து ஸாத்விகத்யாகம் செய்தபடி. மற்ற கர்த்ருத்வ ஸங்கத்யாகங்களும் இதினால் அர்த்தஸித்தங்களாகவுமாம். அவனுடைய ப்ரீதியாகிற பலத்திற்குக் காரணமாகையினாலே இது பகவானுக்குச் சேஷமென்னும் இரண்டினாலும் கர்த்ருத்வம் அவனுடையதென்பது மேற்பட்டது. மேலும் 'மாயன் மருவ (எம்பெருமான் திருவுள்ள முகக்க)' என்பதினால் தனக்குவைஷம்யம் முதலிய தோஷங்கள் வராதபடிக்கும், பெரிய பிராட்டியோடு ஐகரஸ்யம் உண்டாகும்படிக்கும் தன்னுடைய குணங்கள் கோஷபர்யவஸாநமாகாதபடிக்கும் சாமஸ்லோகத்தின் அர்த்தத்தை இவ்வாசாரியனருளிச் செய்தபடியினால் இவ்விடத்தில் பகவானுடைய திருவுள்ளம்உகந்தது என்று தாத்பர்யம். ஆகையினால் இப்படியே 'ராமாநுஜஸ்யாவாஸ்தாம்' என்கிற தனியன் வ்யாக்யானத்தில் பலராமனுக்கு அநுஜனாகிய கண்ணனுடைய தயைக்குப் பாத்திரம் என்று அபியுக்தர்களினால் வ்யாக்யானம்செய்யப்பட்டு அதற்குக் காரணம் இவ்விதமாகவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 'வண்பொருளை' என்பதினால் இது விலக்ஷணமான அர்த்தம். கீதையின் உபக்ரமோப ஸம்ஹாராதிகளாலே கீதா ஸாஸ்தரத்திற்கே பரம தாத்பர்யமாக நிஸ்சயிக்கப்பட்ட விலக்ஷணமான அர்த்தத்தை என்றர்த்தம். இதற்கு வைலக்ஷண்யமாவது 'ஐதிஹ்ரதாயபூஸம்ஹ்ருஹ:' என்கிற இடத்தில் தாமருளிச்செய்திருக்கிறபடியே யோகதசையில் நாதமுனிகளினால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டு அந்தப் பரம்பராப்ராப்தமான அர்த்தத்தை என்றபடி. 'கோதற்ற' என்பது நான்மறைமௌளிக்கும், ஆசிரியனுக்கும் விசேஷணமாகவுமாம். வேதாந்தத்திற்கு விசேஷணமாகும் பொழுது 'ஆகையினால் பரந்யாஸத்தை கீழ்ச்சொல்லிய எல்லாவிதத் தபஸ்ஸுக்களைவிட மேல்பட்டதாகச் சொல்லுகிறார்கள்' என்றும், 'அப்படிப்பட்ட தேவனை மோக்ஷத்திலாசையுடைய நான் ஸரணமாக அடைகிறேன்' என்று மர்த்தமுள்ள உபநிஷத் வாக்யங்கள் வேறொருவிதமாக அர்த்தம் சொல்ல முடியாதாகையினால் ப்ரபலங்கள் என்பதும் திருவுள்ளம். 'ஆசிரியன்' என்பதற்கு விசேஷணமாகும் பொழுது

1 ராமாயணம்-யுத்தகாண்டம்

Accn. No. 13079

1 'ஸ்வப்நேऽபி விப்ரலம்பஸம்பவரஹிதா தேவதேஶிகதேஶிகா:' என்கிறபடியே விப்ரலம்பம் முதலிய தோஷங்களொன்றுமில்லாதவர் என்றர்த்தம். இதுவும் ஸப்தரத்நமாலிகையில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணாவினால் 2 'ஸ்வாபாவ்யகேவலகாருண்யநிக்நதயா ஶ்ரிததேஶிகேந்த்ரா: ஸ்வநேதாக்ஷக்காஸ்ஸேவ்யஸ்ய ஸமாதாயணாஸ்ஸ்யாஸ்ஸாஹித விஸ்வாஸ்யஸ்ய ஸம்ஶ்ருதம் ஶ்ருதம்' இத்யாதி 'ஆப்ததமஸ்ய ஶ்ருஷ்டா:' இத்யந்தம் அருளிச்செய்யப்பட்டது. காதலித்யாதி—3 'ஒண்டொடியாள் திருமகளும் தானுமாக ஒருநினைவாயீன்றவுயிரெல்லாமுய்ய' என்றும், 4 'ஶாரணை வேதாந்தஸ்த்ராய கௌஶாஜ்ஞப்ய ந:' என்றும் தாமருளிச் செய்தபடியே இப்படித் தாம் அர்த்தம் அருளிச் செய்தபடியினால் இந்தக்கீதாஶாஸ்த்ரம் ஸர்வஜநோபஜீவ்யமானது என்று திருவுள்ளம். 21

இத்தம் ஶ்ரீவாஸராமாநுஜமஹார்ய
காருண்யாவாப்தவேதாந்தயுக்ம:
ஜ்ஞாதாஶேஷாந்யஶாஸ்த்ரஸ்ஸவித
ரஸமத ஶ்ரீரஹஸ்யத்ரயஸார: |
வேதாந்தாசார்யக்லுப்தாயா விவரணமிதி
கீதார்த்தஸங்க்ஷேபமாயா
வ்யாக்யாம் சக்ரே ந்ருஸிம்ஹாஹ்வயஜஹ
நிகமாஜ்ஞாயதாஸ்யைகவ்ருத்தி: ||
ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸராமாநுஜாய நம:

ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகன் கருணையினால் அறியப்பட்ட உபய வேதாந்தார்த்தங்களை உடையவராயும், தன் தகப்பனாரிடத்திலிருந்து அறியப்பட்ட மற்றெல்லா ஶாஸ்த்ரங்களை யுடையவராயும், ரஹஸ்யத்ரயங்களின் ஸாரார்த்தங்களைத் தெரிந்து கொண்டவராயுமிருக்கிற திருவஹீந்த்ரபுரம் சேட்லூர் – வித்வான் பகவத் விஷயம் நரஸிம்மாசார்யரால் செய்யப்பட்ட கீதார்த்த ஸங்க்ரஹப்பாட்டின் வ்யாக்யானம் முற்றிற்று.

1 ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் 2 ஸப்தரத்னமாலிகை
3 திருவாய்மொழி 4 தாத்பர்ய சந்த்ரிகை.